வரலாற்று நோக்கில் சொல்லிலக்கண மரபுகள்

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்குப் பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

கா.சுபா

(பதிவு எண் : 0653)

நெறியாளர்

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை

தமிழ்ப் பண்பாட்டு மையம்

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் 'A+' (CGPA.3.64) தகுதி மற்றும் மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல்தர பல்கலைக்கழகத் தகுதி மற்றும் தன்னாட்சித் தகுதி பெற்றது)

காரைக்குடி.

தமிழ்நாடு - இந்தியா

மார்ச்சு - 2022

முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை, எம்.ஏ.,எம்.ஃ.பில்,பி.எட்,பி.எச்.டி.,
பேராசிரியர் & இயக்குநர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630003.

நாள் :

நெறியாளர் சான்றிதழ்

'வரலாற்று நோக்கில் சொல்லிலக்கண மரபுகள்' என்னும் தலைப்பில் **கா.சுபா** அவர்கள் முனைவர் (பி.எச்.டி.,) பட்டத்திற்காகச் செய்த இவ்வாய்வு அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப்பண்பாட்டு மையத்தில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப் பெற்றது என்றும், இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

நெறியாளர்

(முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை)

கா.சுபா, (பதிவு எண்.0653),
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630003.

நாள் :

ஆய்வாளர் உறுதிமொழி

'வரலாற்று நோக்கில் சொல்லிலக்கண மரபுகள்' என்னும் தலைப்பில் முனைவர் (பி.எச்.டி.,) பட்டத்திற்காக எழுதப் பெற்ற இவ்வாய்வு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்

(கா.சுபா)

உறுதிக் கையொப்பம்

முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை, எம்.ஏ.,எம்.ஃ.பில்.,பி.எட்,பி.எச்.டி.,
பேராசிரியர் & இயக்குநர்,
தமிழ்ப் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 630003.

நன்றியுரை

“வரலாற்று நோக்கில் சொல்லிலக்கண மரபுகள்” என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள அனுமதி அளித்த அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆய்வுக் காலத்தில் அன்னையைப் போல அன்பு காட்டியும் பல்லாற்றானும் உதவிகள் செய்தும் நெறிப்படுத்திய எனது நெறியாளர் பேராசிரியர் சே.செந்தமிழ்ப்பாவை அம்மா அவர்களுக்கு என்றென்றும் நன்றி கூறக் கடப்பாடுடையேன்.

ஆய்வுக்கு வேண்டிய நூல்கள் தந்து உதவிய பேராசிரியர் சு.இராசாராம் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையேன். தமிழ்ப்பண்பாட்டுமையப் பேராசிரியர்கள் முனைவர் வெ.திருவேணி, முனைவர் கா.கணநாதன், முனைவர் ம.தமிழரசன் உள்ளிட்ட பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் நன்றி என்றும் உரியது.

ஆய்வுக்கு வேண்டிய நூல்கள் அளித்து உதவிய அழகப்பா பல்கலைக்கழக நூலகத்திற்கும் காரைக்குடி மாவட்டக் கிளை நூலகத்திற்கும் நன்றி கூறி மகிழ்கிறேன்.

மழைக்குக் குடை, பசி நேரத்து உணவு என்று பாரதியார் குறிப்பிடுவது போல எனக்குற்ற தோழமைகள் செ.கோபாலகிருஷ்ணன், முனைவர் சே.முனியசாமி, முனைவர் ச.அன்னபூரணி, சு.லாவண்யா, முனைவர் வ.மீனாட்சி, முனைவர் மு.இராணி, வெ. ஞானசௌந்தரி, ஆகியோருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் பல.

ஆய்வுக்காலத்தில் வேண்டிய உதவிகள் பல புரிந்த உடன் பயின்ற முனைவர் பட்ட ஆய்வாளர்கள் மு.செண்பகவள்ளி, ஆ.சகுந்தலா, வே.ஜெயமாலா, மு.சிவசுப்பிரமணியன், தே.தீபா, ஜ.ரெஜினாபேகம், க.கலைச்செல்வி ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நன்னிலை பெற்று உயர அயராது பாடுபட்ட என் தாய் கா.பெரியநாயகி அவர்கள் இன்று இல்லையெனினும் அவருக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். என் வளர்ச்சியில் பெரிதுவக்கும் தந்தை இரா.காளிமுத்து, சித்தி கா.கிருஷ்ணவேணி, மாமியார் இரா.பானுமதி, கணவர் இரா.கணேசன், சகோதரன் கா.சண்முகராஜ், வெ.ரெங்கப்பிரியா, என் மழலைச் செல்வங்கள் க.கவின்மதி, க.தமிழ்மதி ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முனைவர் பட்ட ஆய்வில் சேருவதற்குப் பல்லாற்றானும் உதவிய மா.முத்துச்சாமி அவர்களையும் எனக்கு எப்போதும் ஊக்கமும் உத்வேகமும் அளித்து

வரும் அண்ணி சீதாலெட்சுமி சோமசுந்தரம் அவர்களையும் இந்நேரத்தில் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

என் ஆய்வேட்டை வடிவமைக்கப் பல்லாற்றானும் உதவிய சகோதரன் முனைவர் பெ.குபேந்திரனுக்கு என் நன்றி என்றும் உரியது. ஆய்விற்குப் பெரிதும் உதவிய சகோதரிகள் சே.கார்த்திகா, அ.ஐஸ்வர்யா, சே.விஜயாள் ஆகியோர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேட்டைச் சிறந்த முறையில் அச்சாக்கம் செய்து தந்த தோழா அச்சகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(கா.சுபா)

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அ.வி.	-	அவிநயம்
அ.இ.	-	அறுவகை இலக்கணம்
இ.கொ.	-	இலக்கணக்கொத்து
இ.த.இ.	-	இனிய தமிழ் இலக்கணம்
இ.த.ஐந்.	-	இலகு தமிழ் ஐந்திலக்கணம்
இ.வி.	-	இலக்கண விளக்கம்
இளம்.	-	இளம்பூரணர்
எழுத்து.	-	எழுத்ததிகாரம்
ஒழி.	-	ஒழிபியல்
சு.நா.	-	சுவாமிநாதம்
சேனா.	-	சேனாவரையர்
சொல்.	-	சொல்லதிகாரம்
த.கா.இ.	-	தமிழ்க்காப்பு இயம்
த.நூ.	-	தமிழ் நூல்
தெய்வச்.	-	தெய்வச்சிலையார்
தென்.	-	தென்னூல்
தென்.சொற்.	-	தென்னூல் சொற்படலம்
தொல்.	-	தொல்காப்பியம்
தொ.வி.	-	தொன்னூல் விளக்கம்
நச்.	-	நச்சினார்க்கினியர்
நன்.	-	நன்னூல்
நூ.	-	நூற்பா

நேமி.	- நேமிநாதம்
பெயர்.	- பெயரியல்
பொருள்.	- பொருளதிகாரம்
மு.வீ.	- முத்துவீரியம்
வினை.	- வினையியல்

முன்னுரை

உயர்தனிச் செம்மொழியாம் நம் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பது அதன் சொல் வளமாகும். சொற்களின் இலக்கணத்தைத் தமிழிலக்கணங்கள் உலக வழக்கு, செய்யுள் வழக்கு என இரண்டாகப் பாகுபடுத்துகின்றன. அவ்விரண்டையும் போற்றி இலக்கணம் கண்ட நூல்களுள் மிகச் சிறந்ததும் தொன்மை வாய்ந்ததுமாய்த் திகழ்வது தொல்காப்பியம். அத்தகைய சிறப்புடைய தமிழின் முதல் இலக்கண நூலாகிய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. தொல்காப்பியம் தந்த அறிவாலும் உந்துதலாலும் பிற்காலத்தில் தமிழில் பலப்பல இலக்கண நூல்கள் தோன்றின. எனவே தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள சொல்லிலக்கண மரபுகள் பிற்றை இலக்கண நூல்களில் இடம்பெறும் தன்மையை ஆராயும் முயற்சியாக இவ்வாய்வு அமைகிறது. பிற்றை நூல்களில் இடம்பெறும் சொல்லிலக்கண மரபுகளைத் தொல்காப்பியத்தோடு ஒப்பிட்டு ஒத்தமரபு, மரபுமாற்றம், மரபுவளர்ச்சி, மரபுவீழ்ச்சி, புதுமரபு என்னும் அடிப்படையில் பகுத்தாய்வதன் வழி சொல்லிலக்கண மரபுகள் காலம்தோறும் அடைந்துள்ள பரிணாமங்களைப் பதிவு செய்வது ஆய்வுலகிற்குப் பெரும் பயன் நல்கும்.

ஆய்வுத் தலைப்பு

தொல்காப்பியம் தொடங்கி இருபத்தோராம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் காப்பு இயம் ஈறாக அமைந்த பதினைந்து நூல்களில் காணலாகும் சொல்லிலக்கண மரபுகளை ஒப்பிட்டு ஆராயும் முகத்தான் **“வரலாற்று நோக்கில் சொல்லிலக்கண மரபுகள்”** என்பது ஆய்வுத் தலைப்பாக அமைகிறது.

ஆய்வு நோக்கம்

வரலாற்று நோக்கில் ஆய்வு மேற்கொள்வதில் இரு விதமுண்டு. ஒன்று ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நூல்களுள் இடம்பெற்றுள்ள வரலாற்றுக் கூறுகளை ஆராய்வது. இரண்டு கால அடிப்படையில் ஆய்விற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் குறிப்பிட்ட பொருண்மையில் ஆராய்வது. இதில் இவ்வாய்வு இரண்டாவது வகையைச் சார்ந்தது. அந்த அடிப்படையில் தொல்காப்பியம் தொடங்கி இருபத்தோராம் நூற்றாண்டு வரை தோன்றியுள்ள இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள சொல்லிலக்கண மரபுகளில் காலம் தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், வளர்ச்சி நிலைகளையும், வீழ்ச்சியையும், புது மரபுகள் தோற்றம் பெற்றுள்ளமையையும் அதற்குரிய காரணிகளையும் பதிவு செய்வது இவ்வாய்வின் நோக்கமாகும். இதில் தொல்காப்பியக் கருத்தோடு பிற்றைய இலக்கண நூல்களின் கருத்து ஒத்திருப்பின்

அவை ஒத்த மரபாகக் கொள்ளப்படும். தொல்காப்பியக் கருத்திலிருந்து மாறுபட்ட கருத்தைக் கொண்டவை மரபு மாற்றமாகக் குறிக்கப்பெறும். தொல்காப்பியத்தின் ஒரு குறிப்பிட்ட இலக்கண மரபோடு மேலும் அது தொடர்பான கருத்துகள் வளர்ச்சி அடைந்தமை மரபு வளர்ச்சியாகக் கொள்ளப்படும். தொல்காப்பியத்தில் இடம்பெற்ற ஒரு இலக்கண மரபு பிற்றை இலக்கண நூல்களில் இடம் பெறாமை மரபு வீழ்ச்சியாகச் சுட்டப்பெறும். தொல்காப்பியத்தில் இடம் பெறாத சில புதிய கருத்துகள் பிற்றை இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ளமை புதுமரபாகக் கொள்ளப்பெறும்.

ஆய்வு எல்லை

தொல்காப்பியம், அவிநயம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தென்னூல், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் ஆகிய பதினைந்து நூல்களும் இவ்வாய்வின் எல்லைகளாக அமைகின்றன.

ஆய்வு முன்னோடிகள்

சொல்லிலக்கணத்தை முழுமையாக அல்லது சிலபகுதிகளை மட்டும் ஆராய்தல் என்னும் அடிப்படையில் செ.வை.சண்முகம் அவர்களின் **சொல்லிலக்கணக் கோட்பாடு** (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,1984) என்னும் நூலும், பெ.சுயம்பு அவர்களின் **“இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி” (**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004) என்ற நூலும் சு. அழகேசன் & த.வேல்மயில் அவர்களின் **“இலக்கணத் தேடல்கள்”** (காவ்யா, சென்னை, 2009) என்னும் நூலும், ச.இராஜேஸ்வரி அவர்களின் **“தமிழில் வினைச்சொற்கள்”** என்னும் முனைவர் பட்ட ஆய்வேடும் (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி,2018) இவ்வாய்வின் முன்னோடிகளாகும்.

ஆய்வின் கருதுகோள்

சொல்லிலக்கணத்தைப் பொறுத்தவரையில் ஆதிநூலாம் தொல்காப்பியத்தின் இலக்கண மரபே பிற்றைய இலக்கண நூல்களில் பெரும்பாலும் பின்பற்றப்பட்டுள்ளன. எனினும் காலத்திற்கேற்ப சிற்சில மாற்றங்களும் வளர்ச்சியும் பெற்றுள்ளன என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு மூலங்கள்

இலக்கண நூல்களுள் முதன்மையான தொல்காப்பியம் தொடங்கி இருபத்தோறாம் நூற்றாண்டு இலக்கண நூலாகிய தமிழ்க்காப்பு இயம் ஈறாக அமைந்த

பதினைந்து நூல்களும் இவ்வாய்வின் முதன்மை மூலங்களாகும். சொல்லிலக்கணம் தொடர்பாக வெளிவந்துள்ள திறனாய்வு நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை துணைமை மூலங்களாகும்.

ஆய்வு அணுகுமுறை

காலம் தோறும் தோன்றிய சொல்லிலக்கண நூல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதால் அவற்றைத் தொகுத்தும் பகுத்தும் விளக்கும் நிலையில் **விளக்கவியல் அணுகுமுறையும்** தொல்காப்பியச் சொல்லிலக்கண மரபுகளைப் பிற்றைய இலக்கண மரபுகளோடு ஒப்பிட்டு ஆராயும் நிலையில் **ஒப்பியல் அணுகுமுறையும்** இவ்வாய்வில் அணுகுமுறைகளாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

இயல்பகுப்பு

“வரலாற்று நோக்கில் சொல்லிலக்கண மரபுகள்” என்னும் தலைப்பிலான இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது. அவை,

இயல் ஒன்று - சொல்லாக்க மரபுகள்

இயல் இரண்டு - வேற்றுமை மரபுகள்

இயல் மூன்று - பெயர்,வினை மரபுகள்

இயல் நான்கு - இடை ,உரி மரபுகள்

இயல் ஐந்து - பிற மரபுகள் என்பனவாகும்.

இயல் ஒன்று

“சொல்லாக்க மரபுகள்” என்னும் முதல் இயலில் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் முதல் இயலாகிய கிளவியாக்கத்துள் கூறப்பட்ட இலக்கண மரபுகளாகிய சொல், திணை, பால், வழு, வழுவமைதி, வினா, விடை, வண்ணச் சினைச் சொல் உள்ளிட்ட பல்வேறு இலக்கண மரபுகள் பிற்றைய இலக்கண நூல்களுள் இடம்பெறும் தன்மை ஆராயப்பெற்றுள்ளது.

இயல் இரண்டு

“வேற்றுமை மரபுகள்” என்னும் இரண்டாம் இயலில் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூவியல்களில் இடம்பெறும் இலக்கண மரபுகளாகிய வேற்றுமை மற்றும் அதன் வகைகள், வேற்றுமை உருபுகள், வேற்றுமைப்

பொருள்கள், வேற்றுமை மயக்கம், விளி ஏற்கும் போது பெயர் அடையும் மாற்றங்கள் உள்ளிட்ட இலக்கண மரபுகள் தொல்காப்பியத்திலும் பிற்றைய இலக்கண நூல்களிலும் இடம் பெற்றுள்ள தன்மை ஆராயப்பெற்றுளது.

இயல் மூன்று

"பெயர், வினை மரபுகள்" என்னும் மூன்றாம் இயலில் பெயரியல், வினையியலில் கூறப்பட்டுள்ள பெயர் மற்றும் வினைச்சொற்களின் இலக்கணம், வகைகள், காலம், பெயரெச்சங்கள், வினையெச்சங்கள் உள்ளிட்ட பல்வேறு இலக்கண மரபுகள் பிற்றைய இலக்கண நூல்களோடு ஒப்பிட்டு ஆராயப்பெற்றுளது.

இயல் நான்கு

"இடை, உரி மரபுகள்" என்னும் நான்காம் இயலில் தொல்காப்பிய இடையியல் மற்றும் உரியியலில் கூறப்பட்ட இலக்கண மரபுகளாகிய இடை, உரிச் சொற்களின் இலக்கணம், வகைகள், அவை உணர்த்தும் பொருண்மைகள் போன்றவை பிற்றைய இலக்கண நூல்களில் இடம்பெறும் விதம் குறித்து ஒப்பிட்டு ஆராயப் பெற்றுள்ளது.

இயல் ஐந்து

"பிற மரபுகள்" என்னும் ஐந்தாம் இயலில் எச்சவியலில் கூறப்பட்டுள்ள செய்யுள் ஈட்டச் சொற்கள், தொகைமொழிகள், பொருள்கோள், பத்து வகை எச்சங்கள், இரப்போர் கூற்று உள்ளிட்ட பல்வேறு இலக்கண மரபுகள் பிற்றைய இலக்கண நூல்களில் இடம்பெறும் தன்மை ஆராயப்பெற்றுள்ளது. மேலும், தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் கூறப்படாத பல்வேறு புது மரபுகள் பிற்றைய நூல்களில் இடம்பெற்றுள்ள தன்மையையும் ஆராய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது.

ஐந்து இயல்களிலும் ஆராய்ந்து அறியப் பெற்ற கருத்துகள் ஆய்வின் முடிவில் முடிவுரையாக இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட முதன்மை, துணைமை ஆதாரங்கள் துணை நூற்பட்டியலில் சுட்டப்பெற்றுள்ளன.

பொருளடக்கம்

சொல்லாக்க மரபுகள்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் முதல் இயலாக அமைவது கிளவியாக்கம். இது சொற்களை ஆக்கிக் கொள்ளும் முறைமையை விளக்குவது. இவ்வியல் திணை, பால்பகுப்புகள், பால் காட்டும் ஈறுகள், மூவிடங்களுக்குரிய சொற்கள், வண்ணச் சினைச்சொல், இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள், இயற்பெயர், சுட்டுப்பெயர், சிறப்புப்பெயர், செப்பு, வினா, வழு, வழுவமைதிகள், ஒரு பெயர்ப் பொதுச்சொல், ஒன்றொழிப் பொதுச் சொல், வினை வேறுபடும், வினை வேறுபடா பல பொருள் ஒரு சொல், அ∴றிணை, பால் பெயர்கள் உயர்திணை முடிவு பெறல், பன்மை சுட்டிய சினை நிலைக்கிளவி பெறும் முடிவு போன்ற பலவற்றின் இலக்கணங்களை எடுத்துரைக்கின்றது. தொல்காப்பியம் சுட்டும் இத்தகு சொல்லாக்க மரபுகள் ஒத்த மரபு, மரபு மாற்றம், மரபு வளர்ச்சி, மரபு வீழ்ச்சி, புது மரபு என்னும் அடிப்படையில் பிற்றை இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ள முறைமையினை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

ஒத்த மரபு

சொல் - வரையறையும் விளக்கமும்

தொல்காப்பியர் சொல்லுக்கான வரையறையை நேரடியாகக் கூறவில்லை. கிளவியாக்கத்தின் முதல் நூற்பா,

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அ∴றிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் யிசைக்குமன் சொல்லே (தொல். சொல்.1)

என்பதாகும். மக்களென்று கருதப்படும் பொருள் உயர்திணை என்றும் மக்களல்லாத பிற பொருள் அ∴றிணை என்றும் இவ்விரு திணை மேலும் சொற்கள் நிகழும் என்பது நூற்பாவின் கருத்தாகும்.

தொல்காப்பியர் ‘சொல்’ பற்றிய வரையறையை முதலில் கூறாமல் உயர்திணைச் சொல், அ∴றிணைச்சொல் எனப் பாகுபடுத்துகிறார். இதன்மூலம் அவர் திணைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளமையை உணர இயலும். இவ்வாறு திணையை முதன்மைப்படுத்தி தொல்காப்பியர் முதல் சூத்திரத்தை அமைத்ததன் காரணமாக முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள், “தமிழ்மொழியில் காணக்கிடக்கும் உயர்திணை, அ∴றிணைப் பகுப்பும் அவற்றையொட்டி வரும் ஒருமை, பன்மைப்

பகுப்பும் பின்னா் ஆண், பெண், பலா் என்ற பகுப்பும், ஒன்றன்பால், பலவின்பால் பகுப்பும் தமிழ் மொழிக்கே உரியது. ஆனால் இப்பகுப்புகள் சமஸ்கிருத மொழியில் இல்லாதவை. ஆனால் ‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’ போன்றவை எல்லாமொழிகளுக்கும் உரியது. இந்த நிலையில் தமிழ்மொழிக்கே உரிய திணைப் பகுப்பினை முதல் சூத்திரமாகக் கொண்டு வந்து தமிழ்மொழியின் அமைப்பு வேறு, சமஸ்கிருத மொழியின் அமைப்பு வேறு என்பதை மிக நுட்பமாகக் காட்டியுள்ளார் தொல்காப்பியா் எனக் கருதலாம்”[1] என்பர்.இது தொல்காப்பியரின் சொல்லாக்க மரபின் தனித்தன்மையைப் புலப்படுத்தும்.

இவ்வாறு தொல்காப்பியா் திணையை முதன்மைப்படுத்தி சொல்லை வரையறை செய்து, பின்னா் பால், எண், இடம், செப்பு, வினா முதலியவற்றை விளக்குகிறார். பிற்றை இலக்கண நூல்களும் தொல்காப்பியக் கருத்துகளை ஒட்டியே சொல்லை விளக்குகின்றன.

திணை

தொல்காப்பியத்தில் திணைப் பகுப்பு

தொல்காப்பியம் திணையை உயா்திணை, அஃறிணை என இரு பிரிவாகப் பிரிக்கிறது. இதில் மக்கட்சுட்டு உயா்திணை என்றும் மக்களல்லாத பிற பொருள் அஃறிணை என்றும் தொல்காப்பியம் பகா்கிறது. இப்பகுப்புக் குறித்து ச.வே.சு. அவா்கள், “திணை என்ற சொல் ஒழுக்கம் என்ற பொருளையுடையது. உயா்ந்த ஒழுக்கமுடையது மனிதப்பிறவி. உயா்ந்த ஒழுக்கமல்லாதது மனிதப்பிறவி அல்லாதவை, அதனை உயா்வு – தாழ்வு என எதிா்மறையில் கூறாமல் அல்லாத ஒழுக்கமுடையது அல்திணை – அஃறிணை என்று கூறுவது தொல்காப்பியரின் பண்பாட்டை உணா்த்தும்”[2] என்பா். இதனை “ஈண்டு மக்கள் என்றது மக்கள் என்னும் உணா்வை”[3] என்னும் சேனாவரையா் கூற்றும் நன்கு விளக்கும்.

மக்களாகப் பிறந்திருந்தாலும் அதற்குரிய ஒழுக்கம் இல்லாதவா் மக்களாகக் கருதப்பட மாட்டார் என்பதை வ.சுப.மாணிக்கனார், “உயா்திணை, அஃறிணை என்ற பொருட்பிரிவு தமிழ்மொழிக்கே சிறப்பாக அமைந்தது; காரணத்தோடு கூடியது. கால்டுவெல் முதலாய மொழி நூலறிஞா்கள் இப்பகுத்தறிவுப் பகுப்பை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளனா். உயா்திணை என்மனார் (தொல். 484) என்பது தொல்காப்பியச் சொல்லதிகார முதற் நூற்பா. மனிதவுடம்பெடுத்தும் அதற்கேற்ற ஒழுக்கமில்லாதவா்

மக்களாக மதிக்கப்படார் என்பது குறிப்பு. தமிழ்ப் பெருமக்கள் புறத்தோற்றத்துக்கு நிலையான மதிப்பு நல்குவதில்லை"[4] என்று கூறுவது இங்கு சுட்டத்தக்கது.

திணை இருவகைப்படும் என்ற தொல்காப்பியரின் பகுப்பு முறையைப் பிற்றை இலக்கண நூல்கள் அனைத்தும் ஏற்றுள்ளன. மக்கள் உயர்திணை, மக்களல்லாத பிற பொருள் அஃறிணை என்னும் கருத்தை இலக்கண விளக்கம் (இ.வி.162), சுவாமிநாதம் (சு.நா.34), தென்னூல் (தென்.சொற்.6), தமிழ்நூல் (த.நூ.49), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.146) ஆகிய நூல்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

பால் பகுப்பு

தொல்காப்பியத்தில் பால் பகுப்பு முறை

ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்றும் உயர்திணைக்குரிய பால்கள் என்பதை,

ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே (தொல்.சொல்.2)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் விளக்குகிறார். அதே போல் ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்குரிய பால்கள் என்பதை,

ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று
ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே (தொல்.சொல்.3)

என்னும் நூற்பா விளக்குகிறது.

தொல்காப்பியரின் இவ் ஐம்பாற் மரபை இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் அனைத்தும் ஏற்றுக்கொண்டுள்ளன (அவி.26,27), (நேமி.28), (நன்.262,263), (இ.வி.165), ((மு.வீ.பெயர்.11,12), (சு.நா.34), (இ.த.இ.94:2-7), (இ.த.ஐந்.195), (தென். சொற்.7,8), (த.நூ.52), (த.கா.இ.148,149).

இவற்றுள் இலக்கண விளக்கம், முத்து வீரியம், தமிழ்க்காப்பு இயம் ஆகியவை நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவியும் தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும்

இயற்கையின் அமைப்பிலிருந்து மாறுபட்டு ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்தோ, பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுந்தோ விளங்குபவர்களையும், தெய்வம் சுட்டிய பெயர்ப்பொருளையும் அம்மிகுந்த தன்மையால் ஆண் பாலாகவோ, பெண் பாலாகவோ, பலர் பாலாகவோ அமைத்தல் வேண்டும் எனத் தொல்காப்பியம் நவில்கிறது. (தொல். சொல்.4)

ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி உயர்திணை முப்பால்களிலும் வரும் என்று கூறும் தொல்காப்பியம், மற்றொரு நூற்பாவில் அது ஆண்பால் ஈறு பெற்று வராது என்றும் குறிப்பிடுகிறது. இதனை,

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை யறிசொற்கு ஆகிடன் இன்றே (தொல். சொல்.12)

என்னும் நூற்பா விளக்குகிறது. உயர்திணை முப்பால் ஈறு பெற்று இசைக்கும் என்று முன்பு கூறியமையால் சிறுபான்மை ஆண்பால் ஈறு பெற்று வரும் என்பது உரையாசிரியர்களின் கருத்தாகும்.

தெய்வம் சுட்டிய பெயர், உயர்திணையில் வழங்கப்படுதல் குறித்து கி.வா.ஜகந்நாதன் அவர்கள், “தெய்வத்துக்குச் சாதி, திணை, பால் என்ற பிரிவு இல்லாவிட்டாலும் மனிதன் தன் மனத்துள் தியானிப்பதற்கும், உரு அமைத்து வழிபடுவதற்கும் சில சம்பிரதாயம் வேண்டும். தனக்குத் தெரிந்த உருவத்தை எண்ணுவதுதான் மனிதன் இயல்பு. ஆகவே தெய்வத்தைச் சிந்தனைக்குக் கொண்டு வந்து வியவகரிக்கும் போதும் தான் அறிந்த திணையுள்ளும், பாலுள்ளும் வைத்து வணங்கினான்; தேவன் வந்தான், தேவி வந்தாள் என்று பேசினான். இப்படிப் பேசின மாத்திரத்தில் தெய்வங்களுக்கும் இத்தகைய பிரிவு உண்டு என்று நிர்த்தாரணம் செய்வார் சிலர். தமிழன் அப்படிச் செய்யவில்லை. உருவமும் திணையும் பாலும் வகுப்பது வழக்கு நிலையில்; அவற்றைச் சொல்லுலகத்தில் வழங்கும் போதுதான். தெய்வம் அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்ற உண்மையைத் தமிழன் அறிந்திருந்தான்”[5] என்று குறிப்பிடும் கருத்து இங்குக் கருதத்தக்கது.

அவிநயம், பேடு பெறும் பால் முடிபு குறித்து,

அழிதூஉ வகையும் அவற்றின் பாலே (அவி.25) என்று கூறுகிறது.

இலக்கண விளக்கம், தெய்வமும், பேடும் இதுவென அறியும் முடிபை உடையன அல்ல, அவை உயர்திணை மருங்கிற் அதற்குரிய பாலாய் இசைக்கும் என்று தொல்காப்பியக் கூற்றை வழி மொழிகிறது (இ.வி.165). தென்னூல், ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி ஆண்பால் ஈறு பெற்று வராது (தொல். சொல்.12) என்னும் தொல்காப்பியரின் கருத்தை ஏற்று, ஆண்மை, பெண்மை நிறையாமல் குறைந்து திரிந்த பொருள் ஆடூஉ ஒழிந்த ஏனை இருபாலாலும் இசைக்கப்படும் (தென். சொற். 11) என்று கூறுகிறது. எனவே ஆண்மை, பெண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவியைப் பெண்பாலிலும் பலர்பாலிலும் சுட்ட வேண்டும் என்பது தென்னூல் கூறும் கருத்தாகும்.

பால் காட்டும் ஈறுகள்

தொல்காப்பியம் பால் காட்டும் ஈறுகளாக, ன.்.கான் ஒற்று ஆடூஉ அறிசொல், ள.்.கான் ஒற்று மகடூஉ அறிசொல், ர.்.கான் ஒற்று, பகர இறுதி, மார் என்னும் இடைச்சொல் ஆகிய மூன்றும் பலரறிசொல் என்றும், ஒன்றறி சொல்லாவது த,ற,ட என்னும் ஒற்றை ஊர்ந்த குற்றியலுகரத்தை இறுதியாக உடைய சொல் என்றும் பலவறி சொல்லாவது அ,ஆ,வ என வரும் இறுதியை உடையது என்றும் குறிப்பிடுகிறது (தொல். சொல். 5-9).

தமிழ்மொழியில் இவ்வீறுகள் ஒருமை, பன்மை மற்றும் பாலையும் காட்டி நிற்கின்றன. ஆனால் வடமொழியில் விகுதியானது ஒருமை பன்மையை மட்டுமே காட்டும். பால் காட்டுதல் இல்லை. இது குறித்து ச.அகத்தியலிங்கம் அவர்கள், “ன.்.கான் ஒற்றே ஆடூஉ அறிசொல் என்றும், ள.்.கான் ஒற்றே மகடூஉ அறிசொல் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறுவது அவை ஒருமையையும் இணைந்து குறிக்கும் எனக் கூறாது, பாலுக்கு மட்டுமே உரியது போன்று கூறுவதும் உணரத்தக்கது. வடமொழியில் விகுதி ஒருமை பன்மையையே குறிக்கும். பாலைக் காட்டாது. ஆனால் தமிழ் மொழியில் அது பாலையும் காட்டும் என்று அடித்துக் கூறுவது சமஸ்கிருத மொழியமைப்பு வேறு, தமிழ்மொழியமைப்பு இதிலும் வேறு என்பதைக் காட்டுவதற்காகவே என எண்ணலாம்”[6] என்று குறிப்பிடுகிறார். இக்கருத்து தமிழ்மொழியில் உள்ள பால் காட்டும் ஈறுகளின் சிறப்புத் தன்மையைப் புலப்படுத்துகிறது.

நேமிநாதம் ஒன்றன் பால், பலவின்பால் ஈறுகளில் தொல்காப்பியத்தை ஒத்துள்ளது (நேமி.29). அறுவகை இலக்கணம் உயர்திணை ஆண்பால் மற்றும் பெண்பால் ஈறுகளைச் சுட்டுமிடத்து தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது. (அ.இ.196–197). பலர்பால் ஈறுகளில் ரகர ஒற்றை மட்டும்

குறிப்பிடுகிறது. (அ.இ.198). இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஒன்றன்பால் விகுதியாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் 'து' விகுதியை மட்டுமே குறித்துள்ளது (இ.த.ஐந்.199). தமிழ்க்காப்பு இயம், தொல்காப்பியம் பலர்பாலுக்குரியதாகக் கூறும் ஈறுகளில் பகர இறுதியையும், மார் என்னும் இறுதியையும் எடுத்தாள்கிறது. மேலும், ஒன்றன் பால் (து, று, டு) பலவின்பால் (அ, ஆ, வ) ஈறுகளிலும் தொல்காப்பியர் கருத்தை ஏற்று நடக்கிறது. (த.கா.இ.164-166). தென்னூல் ஒன்றன்பால் (து, று, டு), பலவின் பால் (அ, ஆ, வ) ஈறுகளில் தொல்காப்பியத்தை அடியொற்றுகிறது (தென். சொற். 17). தமிழ்நூல் ஆண்பால், பெண்பால் ஈறுகளில் தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளது (த.நூ. 88,89).

செப்பும் வினாவும்

விடையையும், வினாவையும் வழுவாமல் போற்ற வேண்டும் என்பதை,

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் (தொல். சொல். 13)

என்னும் நூற்பா விளக்குகிறது.

இக்கருத்தையே தென்னூல்,

கருத்து வெளிப்பாடு செப்பும் வினாவுமாய்
உருப்பெற் றியல்தலின் இருவகை வழக்கினும்
வழாமல் அவற்றை ஓம்புக என்மனார் (தென்.சொற். 237)

என்று உரைக்கின்றது. தமிழ்நூல் வினாவிலும், விடையிலும் வழு வராமல் காக்க வேண்டும் என்பதுடன் அவற்றுள் அயற்சொல் வராமலும் காக்க வேண்டும் என இயம்புகிறது (த.நூ.265).

வினாவே விடையாதல்

வினா ஒன்றுக்கு மறுமொழியாக ஒரு வினாவைத் தொடுப்பதும் விடையாகக் கொள்ளப்படும் என்பதைத் தொல்காப்பியர்,

வினாவும் செப்பே வினாஎதிர் வரினே (தொல். சொல். 14)

என்று உரைக்கிறார். இக்கருத்தைத் தமிழ்நூல் மட்டுமே பின்பற்றியுள்ளது (த.நூ.266).

செப்பு, வினாக்களில் சினை முதற் சொற்கள்

செப்பு, வினா ஆகிய இரண்டிலும் ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்புமைப்படுத்திக் கூறும் பொழுதும் மாறுபடக் கூறும் பொழுதும் சினைச் சொல்லுக்குச் சினைச் சொல்லும் முதற்சொல்லுக்கு முதற்சொல்லும் வருமாறு கூற வேண்டும் (தொல். சொல்.16) என்கிறது தொல்காப்பியம்.

இலக்கியங்களில் சினைக்கு முதலும், முதலுக்குச் சினையும் என மாறி ஒப்புமைப்படுத்துவது குறித்துச் சேனாவரையர், "அவன் கோலினும் தண்ணிய தடமென் தோளே (பட்டினப். 300-1) எனவும், 'துளிதலைத் தலைஇய தளிர் அன்னோளே' (குறுந்.222) எனவும் மயங்கி வந்தன வழுவாம் பிற எனின், அவை செய்யுள் பற்றி வரும் உவம வழு ஆகலின் ஈண்டைக்கு எய்தா, அணி இயலுள் பெறப்படும். இம்மகள் கண் நல்லவோ கயல் நல்லவோஎன வழக்கின் கண்ணும் மயங்கி வருமால் எனின், உண்மை உணர்தற்கு வினாயதன்றி, ஐய உவமை வாய்பாட்டான் கண்ணைப் புனைந்துரைத்தல் கருத்தாகலின், அன்னவை எல்லாம் உரை என்னும் செய்யுளாம் என்பது."[7] என்று விளக்குவர்.

மேலும், கண்ணுக்கு (சினை) கயலை (முதல்) ஒப்புமைப்படுத்தும் போது அவை ஒத்த பண்பைக் கொண்டுள்ளமையால் வழுவன்று என்பதும் 'இவள் கண்ணின் இவள் முலை நல்ல' என்ற விடத்து சினையும் சினையும் ஒப்புமைப்படுத்தினும் ஒத்த பண்பு இல்லாமையால் வழு என்பதும் பெறப்படும். தொல்காப்பியரே பொருளதிகாரத்தில்,

> **முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்**
> **நுதலிய மரபின் உரியவை உரிய (தொல்.பொருள். 28)**

என்று குறிப்பிடுகிறார். எனவே ஒத்த பண்பைக் கொண்டுள்ள முதலும், சினையும் ஒப்புமைப்படுத்தப்படுவது வழுவன்று என அறியலாம்.

தொல்காப்பியத்தைப் பின்பற்றி நன்னூலும் வினவும் போதும் விடை கூறும் போதும் சினையும், முதலும் ஒன்றென வைத்து முதலொடு சினையும், சினையொடு முதலும் மயங்கும்படிச் சொல்லப்படா என்கிறது (நன்.387).

வழக்கு – ஒத்த மரபு

ஒரு பொருளைப் பற்றி எடுத்துரைக்கும் முறை வழக்கு எனப்படும்.

தகுதி பற்றியும், வழக்கு பற்றியும் நடக்கும் இலக்கணத்தில் உரிய சொல்லுக்குச் சார்பாக வேறொரு சொல் பயன்படுத்தப்படும். அச்சொல் நீக்கப்படாது ஏற்றுக் கொள்ளப்படும். இக்கருத்தை,

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்

பகுதிக் கிளவி வரைநிலை யிலவே (தொல்.சொல்.17)

என்னும் நூற்பா வாயிலாகத் தொல்காப்பியம் விளக்குகிறது. சொல்லிலக்கணம் பேசுமிடத்திலும் மனித வாழ்க்கைக்குரிய பண்பாட்டைப் போதிப்பதாக இந்நூற்பா அமைந்துள்ளது.

தகுதி, வழக்கு ஆகியவை குறித்து சேனாவரையர், ‘‘தகுதி என்பது அப்பொருளுக்குரிய சொல்லால் சொல்லுதல் நீர்மை அன்று என்று அது களைந்து தக்கதோர் வாய்ப்பாட்டால் கூறுதல். செத்தாரைத் துஞ்சினார் என்றல்.

வழக்கு என்பது காரணமின்றி வழங்கற்பாடே பற்றி வருவது. வெள்ளாடு (கருப்பாடு) வெண்களமர் (உழவர்) போன்றன’’[8] என்று விளக்கம் தருகிறார்.

வழக்கினாலும், தகுதியாலும் நடக்கும் சொற்கள் வழுவல்ல; அவை முன்னை இயல்பாகும். அதாவது தொன்றுதொட்டு வருவதாகும் என்று நேமிநாதம் தொல்காப்பியர் கருத்திற்கு வலுச்சேர்க்கிறது.

இயல்பும் தகுதியும் என வழக்கு இருமைய (மு.வீ.பெயர்.14)

என்று கூறும் முத்துவீரியம் தொல்காப்பியர் கருத்தை அடியொற்றி,

‘‘தகுதியும் வழக்கையுந் தக்கோர் வரையார்’’ (மு.வீ.ஒழி.55)

என்னும் நூற்பாவை அமைத்துள்ளது.

அடைமொழி

இனம் சுட்டாமல் வரும் பெயரடைகள் குறித்துத் தொல்காப்பியம் விளக்குகிறது. அவை வழக்கில் வருவதில்லை. செய்யுளில் மட்டுமே வரும் என்பதை,

இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை

வழக்கா றல்ல செய்யுளாறே. (தொல்.சொல்.18)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பண்பு கொள் பெயர்க்கொடை என்றதனால் பண்பு அடியாக அமையும் பெயரடைகளை மட்டுமே தொல்காப்பியம் குறித்துள்ளமை புலனாகும்.

நேமிநாதம் (நேமி.39), தென்னூல் (தென்.சொற்.252), தமிழ்நூல் (த.நூ.303) ஆகியவை தொல்காப்பியர் கருத்தை ஏற்று இனச்சுட்டில்லாப் பண்பு கொள் பெயர் செய்யுளில் மட்டுமே வரும் எனக் குறிப்பிடுகின்றன.

இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும்

இவ்வுலகில் உள்ள பொருள்களை இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என இருவகையாகப் பகுப்பர். இவற்றைக் கூறும் முறை குறித்துத் தொல்காப்பியம் இயற்கைப் பொருளைக் கூறும் பொழுது அவற்றின் இயல்பினை இத்தகையது என உள்ளது உள்ளபடி கூற வேண்டும் என்கிறது (தொல்.சொல்.19).

மேலும் ஒரு காரணத்தால் தன்மை திரிந்த செயற்கைப் பொருளைக் கூறுகின்ற பொழுது ஆக்கம் கொடுத்துச் சொல்லுதல் வேண்டும் (தொல்.சொல்.20) என்றும், அவ்வாறு ஆக்கம் கொடுத்துச் சொல்லுகின்ற பொழுது அதற்குரிய காரணத்தை முதலில் கூறிப் பின்னர் ஆக்கத்தைக் கூற வேண்டும் (தொல்.சொல்.21) என்றும் செயற்கைப் பொருளைக் கூறும் முறை குறித்துத் தொல்காப்பியம் விளக்குகிறது. மேலும், வழக்கில் வரும் போது ஆக்கச்சொல் காரணமின்றியும் வரும் என்பதை,

ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின்று என்ப வழக்கி னுள்ளே (தொல்.சொல்.22)

என்னும் நூற்பா விளக்குகிறது. எனவே, உலக வழக்கில் ஆக்கச்சொல் காரணமின்றி வரும். ஆனால் செய்யுள் வழக்கில் காரணம் பெற்றே வர வேண்டும் என்பது புலப்படும்.

நன்னூல் இயற்கைப் பொருள் குறித்த தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (நன்.396). இலக்கண விளக்கமும் (இ.வி.313), முத்து வீரியமும் (மு.வீ.ஒழி.56 - 59) இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் குறித்த தொல்காப்பியக் கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளன. சுவாமிநாதமும் தொல்காப்பியர் கருத்தைப் பின்பற்றியுள்ளது (சு.நா.61). எனினும் தொல்காப்பியர், காரணமின்றி ஆக்கக்கிளவி வருதல் வழக்கிடத்தது என்று மட்டும் கூறி காரணத்தோடு ஆக்கக்கிளவி வருதல் செய்யுளுக்குரியது என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறார். சுவாமிநாத ஆசிரியர், காரணம் முன்னும் ஆக்கம் பின்னும் வருதல் செய்யுளுக்குரித்து என்றும்,

காரணமின்றி வருதல் வழக்கிடத்தது என்றும் வெளிப்படையாகக் கூறியுள்ளார் (சு.நா.61). இனிய தமிழ் இலக்கணமும், தென்னூலும் இயற்கைப் பொருள் அப்பொருளின் இயல்பைக் குறிப்பதாக வழங்கும்; செயற்கைப் பொருள் காரணமும், ஆக்கமும் பெற்று வரும் என்றுரைக்கின்றன. (இ.த.இ.173), (தென்.சொற்.246). தமிழ்நூல் காரணம் முன்னும், ஆக்கம் பின்னும் வரும் என்ற செயற்கைப் பொருள் குறித்த கருத்தை மட்டும் பின்பற்றியுள்ளது (த.நூ.312).

திணை, பால் ஐயம்

திணை தெரிந்து பால் தெரியாத ஐயப் பொருள்களை அவ்வத்திணைக்குரிய பன்மைச் சொல்லால் கூற வேண்டும் (தொல். சொல்.23) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் இதனை உயர்திணைப் பால் ஐயம் எனக் கொள்வர். சேனாவரையர் உயர்திணை, அஃறிணை என்ற இரு திணையிடத்தும் தோன்றும் பால் ஐயம் எனக் கொள்வார்.

மேலும் திணை ஐயம் தோன்றிய வழி அப்பொருளுக்கு ஓர் உருவம் சொல்லக் கருதுதல், அஃறிணையில் ஒன்றோ பலவோ எனப் பால் கூறக் கருதுதல் ஆகிய இரண்டு இடங்களிலும் ஐயம் தோன்றிய வழி அதற்குரிய பொதுச் சொல்லால் குறிப்பிட வேண்டும் என்பதை,

உருவு என மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை (தொல். சொல்.24)

என்று தொல்காப்பியம் கூறுகிறது. இதில் ‘உருவு’ என்பதை ‘உருபு’ எனப் பாடம் கொள்வார் சேனாவரையர். ‘உருவு’ என்பது வடிவத்தைக் குறித்தலின் இளம்பூரணர் கொண்ட பாடமே பொருத்தமானதாக அமைகிறது. மேலும், திணை பால்களில் ஐயம் நீங்கிப் பால் இன்னதெனத் தெளிவடைதல் உண்டு. அவ்விடங்களில் அன்மைக்கிளவி (இல்லாமைச்சொல்) மறுக்கப்பட்ட மற்றொரு பொருளின் மீது வைத்துக் கூறப்படும். (தொல். சொல்.25) என்னும் கருத்தையும் தொல்காப்பியம் முன்வைக்கிறது.

நேமிநாதம், ‘உயர்திணையோ? அஃறிணையோ? என்று ஐயந்தோன்றியவிடத்தும், ஒருவனோ? ஒருத்தியோ? என்று ஐயம் தோன்றியவிடத்தும் ஐயப்பட்ட பொருள் இரண்டிற்கும் உரித்தாகச் சொல்லுக. இவ்வையந் தீர்ந்த வழிப் பிறக்கும் அன்மைச் சொல்லைத் துணிந்த பொருள் மேல் ஏற்றிச் சொல்லுக’ (நேமி. 32) என்று கூறும்

கருத்துகளில் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது. நன்னூல், நேமிநாதத்தைப் பின்பற்றி,

ஐயம் திணைபால் அவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள்மேல் அன்மையும் விளம்புப. (நன். 376)

என்று நவில்கிறது. தொன்னூல் விளக்கம் (தொ.வி.128), சுவாமிநாதம் (சு.நா. 58) ஆகியவை நன்னூலைப் பின்பற்றியுள்ளன. இலக்கண விளக்கம் (இ.வி. 296), முத்துவீரியம் (மு.வீ.ஒழி. 60, 61, 62), தென்னூல் (தென்.சொற்.241) ஆகியவை திணை, பால் ஐயம் குறித்த தொல்காப்பியக் கருத்துகளோடு (தொல். சொல். 23-25) ஒத்து மொழிகின்றன.

வண்ணச் சினைச் சொல்

ஓர் அடையும் (பண்பும்) ஒரு சினையும் ஒரு முதலும் என ஒன்றையொன்று சிறப்பித்து வருவது வண்ணச்சினைச் சொல்லாகும். அச்சொல் அடை, சினை, முதல் என ஒன்றையடுத்து ஒன்று மாறாமல் உலக வழக்கில் வருதல் வேண்டும் என்பதை,

அடை சினை முதல் என முறை மூன்றும் மயங்காமை
நடைபெற்று இயலும் வண்ணச் சினைச்சொல் (தொல். சொல். 26)

என்னும் நூற்பா வழித் தொல்காப்பியம் விளக்குகிறது. இளம்பூரணர் ‘‘அடை என்பது ஒரு பொருளது குணம்’’[9] என்பர். இதன்வழி ‘அடை’ என்பது வண்ணத்தை மட்டுமல்லாது பல்வேறு பண்புகளையும் உணர்த்தும் என்கிறார்.

‘‘வடிவு முதலாய பிற பண்பும் உளவேனும், வண்ணப்பண்பினது வழக்குப் பயிற்சி நோக்கி ‘வண்ணச் சினைச் சொல் என்றார்’’[10] என்று சேனாவரையர் வழக்கில் வண்ணப்பண்பு அதிகம் பயன்படுத்தப்படுவதன் காரணமாக இப்பெயர் பெற்றது என்பதை விளக்குகிறார்.

இவ்வாறு பல பண்புகளையும் அடையாகப் பெற்று வரும் சொல்லை ‘வண்ணச்சினைச்சொல்’ என்று தொல்காப்பியம் குறிப்பிடுவது குறித்து செ.வை.சண்முகம், ‘‘இளம்பூரணர் ‘அடை என்பது ஒரு பொருளது குணம்’ என்று கூறிய விளக்கம் வண்ணச் (நிறச்) சொற்களை மட்டும் அல்லாமல் எல்லாப் பண்புகளையும் குறிக்கும் சொற்களை உள்ளடக்கியுள்ளதாகக் கொள்வதற்குச் சூத்திரத்திலேயே ஆதாரம் இருப்பதாக அமையும். மேலும் அடை என்பது இலக்கணப்

பயன்பாட்டைக் (Grammatical Function) குறிக்கும் சொல். வண்ணம் என்பது ஒரு பொருட்களனைக் (Semantic Field) குறிக்கும் சொல். அடை வண்ணத்தை விடச் செயல்பாடு அதிகம் உடையது. பல குணங்களைக் குறிக்கும் சொற்கள் அதே வரிசை முறையில் வருவதால் ‘வண்ணச் சினைச் சொல்’ என்று தொல்காப்பியர் பொதுமைப்படுத்தியது குன்றக் கூறலாக ஆகி விடுகிறது. ஆனால் நச்சினார்க்கினியர் ‘அச்சொற்குப் பெயர் கூறியது’ என்று விளக்கியது, அது கலைச்சொல்லாய் அமைந்து வண்ணம் என்ற நேர் பொருளை இழந்து விடுகிறது. இளம்பூரணர் உரையைக் கவனிக்காததால் ‘வடிவு முதலாகிய பிற பண்பும் உளவேனும் வண்ணப்பண்பினது வழக்குப் பயிற்சி நோக்கி வண்ணச் சினைச் சொல்’ என்று சேனாவரையரும்; ‘வண்ணம்’ என்பது நிறம் என்று பொருள்படும். ஆனால் சினைக்கு முன்னால் வேறு பண்புகளைக் குறிக்கும் சொற்கள் அதே வரிசை முறையில் வருவதற்கு இலக்கியத்திலும் வழக்கிலும் பல உதாரணங்கள் இருப்பதால் ஆசிரியர் (ச.அகத்தியலங்கம்) எல்லாப் பண்புகளைக் குறிக்கும் அடைச்சொற்களும் வரும் எனக் கொள்ளுதலே பொருத்தம்’ என்று சமாதானம் கூற வேண்டிய நிலை ஏற்பட்டது என்பர்”[11]

தெய்வச்சிலையார், “வண்ணச் சினைச் சொல் மயங்காமை நடைபெற்று இயலும் எனவே வண்ண முதற் சொல் மயங்கியல்லது நடவாது”[12] என்கிறார். இதற்கு உதாரணமாக அவர் ‘கருங்கோட்டு யானை’ என்பதைக் குறிப்பிடுவார். இதில் கருமை யானையின் மேல் செல்லாது கோட்டின் மேல் சென்று பொருத்தமின்மையைத் தரும் என்கிறார்.

மேலும்,‘செவி செஞ் சேவல்’ (புறம்.238) எனச் சினையும், நிறமும் மாறி வந்தமை குறித்து “ஆண்டுச் செஞ்செவி என்பது மொழி மாறி நின்றது என்க”[13] என விளக்கம் அளிக்கிறார்.

இவ்வாறு மொழி மாறி வருதல் குறித்து செ.வை.சண்முகம்,“முதல் அடியில் உள்ள ‘கவி செந்தாழி’ (புறம்.238) என்பது கவித்த செந்நிறம் உடைய தாழி என்று பொருள்பட்டு அது இயல்பான அமைப்பு உடையது. வினையடை + வண்ணம் + முதல் என்னும் தொடரியல் அமைப்பு உடையது. அதாவது அது வண்ணச்சினைச்சொல் அல்ல. இருந்தாலும் அந்த அடியே, அடி எதுகை அமையவே மொழிமாற்று செய்யப்பெற்றிருக்கிறது என்று நாம் ஊகிக்க இடம் கொடுக்கிறது. மொழி மாறி

வருவது தொடை ஆக்கத்துக்காகவோ கருத்து அழுத்தத்துக்காகவோ இருக்கலாம் என்பதும் சுட்டிக்காட்டத் தகுந்தது''[14] என்று குறிப்பிடுகிறார்.

நேமிநாதமும், முத்துவீரியமும் வண்ணச் சினைச் சொல்லை விளக்க தொல்காப்பியத்தையே பின்பற்றியுள்ளன. (நேமி.39), ((மு.வீ.ஒழி.63).

வழுவமைதி

திணை, பால் வழுவமைதி

உயர்திணையில் ஒருவனையோ, ஒருத்தியையோ பன்மைச் சொல்லால் கூறுதலும், அஃறிணை ஒன்றனைப் பன்மையாகக் கூறுதலும் வழக்கின் கண் உயர்த்துச் சொல்லும் சொல்லாகும். இலக்கண முறைமையான் சொல்லும் நெறி அல்ல என்று திணை, பால் வழுவமைதி குறித்துத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல்.27). இக்கருத்தை முத்துவீரியம் ஏற்றுக் கொண்டுள்ளது (மு.வீ.ஒழி. 64). இது குறித்து தமிழண்ணல் அவர்கள், ''ஒருவரைப் பன்மையால் 'மருதப்பர் வந்தார்' என்பது உயர்வுப் பன்மை. 'நரியார் வந்தார்' என ஒன்றனைப் பன்மையாற் கூறுவதும் உயர்வுப் பன்மையே. இவை 'வழக்கினாகிய உயர்சொற் கிளவி, இலக்கண மருங்கில் சொல்லாறல்ல' என்பார் தொல்காப்பியர். அதாவது பேச்சு வழக்கிலுள்ள இது எழுத்து வழக்கிற்குப் பொருந்தாது என்பதாம்''[15] என்று விளக்குகிறார்.

மூவிடங்களுக்கும் உரிய சொற்கள்

செலவு, வரவு, தரவு, கொடை ஆகிய நான்கு சொற்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களுக்கும் உரியது என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 28). எனினும் சிறப்பு விதியாக, தரல், வரல் ஆகிய சொற்கள் தன்மை, முன்னிலை ஆகிய இரண்டு இடங்களுக்கும் உரியது (தொல்.சொல். 29) என்றும், ஏனை இரண்டாகிய செலவு, கொடை ஆகிய இரண்டும் படர்க்கைக்கு உரியது (தொல். சொல். 30) என்றும் உரைக்கின்றது.

இக்கருத்தை நேமிநாதம், இலக்கண விளக்கம், தென்னூல் ஆகியவை ஏற்றுள்ளன. நேமிநாதம் மூவிடங்களுக்குரிய சொற்கள் குறித்து நூற்பாவில் குறிப்பிடவில்லை எனினும் வண்ணச்சினைச் சொல் குறித்த நூற்பாவிற்கு உரை எழுதுமிடத்து நேமிநாத உரையாசிரியர் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார். ''திண்ணம்'' என்று மிகுத்துச் சொல்லியவதனால் செல்லும், கொடுக்கும், வரும், தரும் என்பன படர்க்கைக்கு உரியன. வரும், தரும் என்பன

தன்மைக்கும், முன்னிலைக்கும் உரியன; ஆயினும் விரவி வரவும் பெறும்'' (நேமி. 39 உரை) என விளக்குகிறார். இலக்கண விளக்கமும் (இ.வி.301), தென்னூலும் (தென்.சொற்.232) தொல்காப்பியத்தை அடியொற்றியுள்ளன.

யாது, எவன் என்னும் சொற்கள்

யாது, எவன் என்னும் இரண்டு சொற்களும் அறியாத பொருளிடத்து வினாவாய்ப் பொருந்தும்படி தோன்றும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல்.31).

மேலும், 'யாது' என்னும் வினாச்சொல் அறியாத பொருளை வினாதலேயன்றி அறிந்த பொருளின் கண் ஐயம் நீக்குதற்குரிய சொல்லாகவும் வரும் என்றும் தொல்காப்பியம் விளக்குகிறது (தொல். சொல்.32).

இலக்கண விளக்கமும், முத்துவீரியமும் இக்கருத்துகள் குறித்த தொல்காப்பிய நூற்பாக்களை அப்படியே எடுத்தாண்டுள்ளன (இ. வி. 306,307), (மு.வீ.ஒழி.66,67).

சினை முதற் சொற்களும், மன்னாப் பொருளும் உம்மை பெறுதல்

கேட்போரால் இத்துணையென்று அறியப்பட்ட சினைச் சொல்லுக்கும், முதற்சொல்லுக்கும் அவற்றை முடிக்கும் சொல்லாகிய வினைச் சொல்லோடு சேர்த்துச் சொல்லும் போது உம்மை கொடுத்துக் கூற வேண்டும் (தொல். சொல். 33) என்றும், இவ்வுலகத்தில் எங்கும் எப்போதும் இல்லாத பொருள்களும் உண்டு. அவற்றைக் கூறுகின்ற போதும் உம்மை கொடுத்துக் கூற வேண்டும் (தொல். சொல்.34) என்றும் தொல்காப்பியம் கூறுகிறது. சேனாவரையர், ''இவ்வளவு என்று வரையறுத்துக் கூறும் சினை முதற் கிளவிக்குக் கூறும் உம்மை முற்றும்மை என்றும் இல்லாப்பொருளுக்குக் கூறும் உம்மை எச்ச உம்மை என்றும் குறிப்பிடுவர்''[16]

சினை முதற் சொற்களும், மன்னாப் பொருளும் உம்மை பெறும் எனும் தொல்காப்பியக் கருத்தோடு நேமிநாதம் (நேமி.36), நன்னூல் (நன்.399), இலக்கண விளக்கம் (இ.வி.315), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.68,69), சுவாமிநாதம் (சு.நா.62), தென்னூல் (தென்.சொற்.242,243) ஆகிய நூல்கள் உடன்படுகின்றன.

'இல்லை' என்னும் சொல் அமையும் முறை

ஒருவன் யாதானும் ஒரு பொருளைக் கேட்கும்பொழுது அப்பொருள் இல்லையென்றால் அப்பொருள் அல்லாது இருக்கின்ற பிற பொருள் மேல் வைத்துக்

கூற வேண்டும். ‘இதுவன்றியில்லை’ என்னும் வாய்ப்பாட்டால் கூற வேண்டும் எனும் கருத்தைத் தொல்காப்பியம்,

எப்பொருளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல் (தொல். சொல். 35)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது. இது வினாவிற்கு நேரிடையான விடையாகாமல் உய்த்து உணருமாறு இருத்தலின் ‘சொல் தொகுத்து இறுத்தல்’ என்ற செப்பு வழுவமைதி ஆயிற்று.

மேலும், ‘அல்லது இல்’ என்பான் பிறிது பொருள் கூறாது அப்பொருள் தன்னையே கூறுமாயின், ‘இப்பயறு அல்லது இல்லை’ எனச் சுட்டிக் கூற வேண்டும் என்பதை,

அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல் (தொல். சொல். 36)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது. இக்கருத்தை நன்னூல் (நன்.406), இலக்கண விளக்கம் (இ.வி.310), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.69), இனிய தமிழ் இலக்கணம் (இ.த.இ.174), தென்னூல் (தென்.சொற்.244) ஆகிய நூல்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இயற்பெயரும், சுட்டுப்பெயரும் அமையும் முறை

இயற்பெயரும், சுட்டுப்பெயரும் அமையும் முறை குறித்துத் தொல்காப்பியம், ஒரு பொருளைக் குறித்து இயற்பெயரும், சுட்டுப்பெயரும் வரும் பொழுது அவ்விரு பெயரும் வேறு வேறு வினைகளைக் கொள்வதற்கு உரிய காலம் ஒருங்கே தோன்றுமானால் அப்போது இயற்பெயரை முன்னும் சுட்டுப்பெயரைப் பின்னும் கூற வேண்டும் (தொல். சொல்.38) என்று குறிப்பிடுகிறது.

இக்கருத்தை நன்னூல் (நன்.394), இலக்கண விளக்கம் (இ.வி.326), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.72), தென்னூல் (தென்.சொற்.247), தமிழ்நூல் (த.நூ.294) ஆகிய நூல்கள் ஏற்கின்றன. இலக்கண விளக்கம் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

மேலும், இயற்பெயரின் முன்னர் சுட்டுப்பெயர் வருதல் செய்யுளுக்கு மட்டுமே உரியதாகும் (தொல். சொல்.39) என்னும் தொல்காப்பியக் கருத்தோடு முத்துவீரியம் (மு.வீ.ஒழி.72), தென்னூல் (தென்.சொற்.247) ஆகியன ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

சுட்டு முதற் காரணச்சொல் அமையும் முறை

சுட்டெழுத்தை முதலாகக் கொண்டு காரணப்பொருளை உணர்த்தும் சொற்கள் உள்ளன. அப்பெயர்கள் சுட்டுப்பெயரைப் போலத் தன்னால் சுட்டப்படும் பொருளை உணர்த்தும் சொல்லுக்குப் பின்னால் வரும் என்னும் கருத்தை,

சுட்டு முதலாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெயர் இயற்கையின் செறியத் தோன்றும் (தொல். சொல்.40)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது. இக்கருத்தை முத்துவீரியமும் (மு.வீ.ஒழி.73), தென்னூலும் (தென்.சொற்.247) ஏற்றுக் கொண்டுள்ளன.

இயற்பெயரும், சிறப்புப்பெயரும் அமையும் முறை

ஒருவருக்குச் சிறப்பாக அமைந்த பெயரும், இயற்பெயரும் சேர்ந்து வரும்போது உலகத்தவர் இயற்பெயருக்குப் பின்னர்ச் சிறப்புப் பெயரைக் கூற மாட்டார். சிறப்புப் பெயரையே முதலில் கூறுவர் என்பர் தொல்காப்பியர் (தொல். சொல்.41).

நேமிநாதம்,

சாதி முதலாஞ் சிறப்புப்பேர் தன்முன்னர்
ஓதார் இயற்பெயரை உய்த்து (நேமி.38:3-4)

என்றுரைக்கின்றது. நன்னூல் சிறப்புப்பெயருக்கு விளக்கம் தருகிறது. ஐந்திணையும், நாடும், குலமும், குடியும், உடைமையும், பண்பும், தொழிலும், கல்வியும் முதலியன பற்றி வரும் சிறப்புப் பெயரோடு இயற்பெயரும் ஒருங்கு வருமானால் அத்தொடரில் இயற்பெயர் பின் வருதலே சிறந்த மரபு ஆகும் என்று விளக்குகிறது (நன்.393). இலக்கண விளக்கம் நன்னூல் கூறும் திணை முதலானவற்றோடு தவம், சினை ஆகிய இரண்டனையும் சேர்த்து, இவற்றின் காரணமாக வரும் சிறப்புப் பெயரோடு இயற்பெயர் பின் வரல் இயல்பாகும் என நவில்கிறது (இ.வி.317). முத்துவீரியமும் முன்னையோர் கருத்தைப் பின்பற்றி வினைகோடற்கு ஒருங்கியலும் வழி சிறப்பாலாகிய பெயர்க்கும் இயற்பெயரை முற்படக் கூறல் வழுவாகும் என இயம்புகிறது (மு.வீ.ஒழி.74). சுவாமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி,

---------------------------- குடி, சாதி, நிலம், பண்பு
உடைமை, தவம், தொழில், சிறப்பு, கல்வி, சினைபழி,ஈய்

வுரிமை; திணைப்போ்ப் பின் இயற்பெயா் உரைப்பா் பொருட்கே

(சு.நா.62:6-8)

என்கிறது. தென்னூல், முன்னைய இலக்கணிகளின் கருத்துகளைப் பின்பற்றி,

சிறப்புப் பெயரியற் பெயா்க்குமுன் வரல் முறை (தென். சொற்.248)

என்று மொழிகிறது.

ஒரு பொருள் பல பெயா் வினையேற்றல்

ஒரு பொருளைக் குறித்துப் பல பெயா்கள் வரும், அவ்வாறு வரும் பெயா்களுக்கு ஒரு தொழிலையே முடிபாகக் கூற வேண்டும். பெயா்தோறும் வேறு வேறு வினை முடிபு கொடுப்பின் அவை ஒரு பொருளைக் குறிக்கும் பல பெயா்கள் ஆவதில்லை. இக்கருத்தை,

ஒருபொருள் குறித்த வேறுபெயா்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே. (தொல். சொல்.42)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இக்கருத்தை அடியொற்றி நேமிநாதம், ஒரு பொருட்குப் பல பெயா் உண்டானவிடத்துத் தொழில் கொடுக்கும் பொழுது, அப்பெயா்களை எல்லாம் எண்ணி ஒரு தொழிலாற் சொல்ல வேண்டும் என்கிறது (நேமி.37). இக்கருத்தையே நன்னூல் ஒரு பொருளின் மேல் பல பெயா்கள் வருமானால் பொருள் ஒன்றே என்பது தோன்ற அவற்றின் இறுதியில் ஒரு முடிக்கும் சொல்லைப் பயனிலையாகக் கொடுத்துக் கூறுவா் என்கிறது (நன்.392). மேலும்

ஒருபொருட் பல்பெயா் பிரிவில் வரையாா் (நன்.397)

என்றும் உரைக்கின்றது.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ.வி.318). சுவாமிநாதம் முன்னையோா் கருத்தைப் பின்பற்றி,

பொருள் தோன்றிற் பலபெயா்க்கோா் வினைமுடித்தல் கடனாம் (சு.நா.63:1)

என்று நவில்கிறது. தென்னூல், தொல்காப்பியா் எதிா்மறையாக உணா்த்தும் கருத்தை உடன்பாட்டு முறையில்,

ஒருபொருள் குறித்த பலபெய ராயின்
பெயர்தொறும் ஒத்தவினை பெய்தல் வேண்டும் (தென். சொற். 251)

என்றுரைக்கின்றது.

தன்மைச்சொல்லும், அஃறிணைக் கிளவியும் சேர்ந்து வருதல்

தன்மை இடத்திற்குரிய உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல் ஆகியவை எண்ணுகின்றவிடத்துச் சேர்ந்து வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அதாவது அவை தன்மைச் சொல்லாலேயே முடிக்கப்பெறும் (தொல். சொல்.43) என்பதாகும். இக்கருத்தை நேமிநாதம் (நேமி.34), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.76) ஆகியவை பின்பற்றியுள்ளன.

ஒருமைக்குரிய பால் உணர்த்தும் சொல்

ஆண், பெண் என்னும் ஒருமை எண்ணினை உயர்த்திச் சொல்லும் சொல் ஒருவர் என்னும் பொதுச் சொல்லாகும். அது ஒருவன், ஒருத்தி என ஒருமைக்கண் பிரிந்து நின்று பால் உணர்த்தும். ஆயினும் இருவன், இருத்தி, மூவன், முத்தி எனப் பிரிந்து நின்று பால் உணர்த்துவதில்லை என்னும் கருத்தைத் தொல்காப்பியம்,

ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக்கு அல்லது எண்ணுமுறை நில்லாது (தொல். சொல். 44)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது. இக்கருத்தை நேமிநாதம் (நேமி.37), நன்னூல் (நன்.288), இலக்கண விளக்கம் (இ.வி.190), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.77) ஆகிய நூல்கள் பின்பற்றியுள்ளன.

வியங்கோளுடன் திணை விரவி வருதல்

வியங்கோள் வினைமுற்றோடு தொடர்ந்து வரும் எண்ணுப்பெயர் இரு திணைகளுடன் விரவி வரும். அவ்வாறு வருதலை நீக்காமல் ஏற்றுக் கொள்வர் (தொல். சொல்.45) என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதம் (நேமி.34), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.78) ஆகிய நூல்கள் ஏற்றுப் போற்றியுள்ளன.

வேறுவினைச்சொல் பொதுவினை பெறுதல்

வேறுபட்ட வினைகளை உடைய பல பொருள்கள் உள்ளன. அவற்றை உலகோர் ஒன்றற்குரிய சிறப்பு வினையால் கூற மாட்டார். பலவற்றையும் உள்ளடக்கிய

பொது வினையால் சொல்லுவர் (தொல். சொல். 46) என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதம் (நேமி.37), நன்னூல் (நன்.389), இலக்கண விளக்கம் (இ.வி.319), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.79), சுவாமிநாதம் (சு.நா.63), இனிய தமிழ் இலக்கணம் (இ.த.இ.165), தென்னூல் (தென்.சொற்.256), தமிழ்நூல் (த.நூ.298) ஆகிய இலக்கண நூல்கள் பின்பற்றியுள்ளன.

மேலும், வேறுபட்ட வினைகளை உடைய பொதுச்சொற்களை சிறப்பு வினையால் கூறாமல் பொது வினையால் கூறுவதே முறையாகும் (தொல். சொல்.47) என்று தொல்காப்பியம் கூறுவதை நன்னூல் (நன்.389), இலக்கண விளக்கம் (இ.வி.319), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.80), சுவாமிநாதம் (சு.நா.63), தென்னூல் (தென்.சொற்.256) ஆகியவை பின்பற்றியுள்ளன.

இரட்டைக் கிளவி

பிரிவின்றி இரு சொற்களாய் நிற்பது இரட்டைக்கிளவி. அது பிரிந்து நின்று பொருள் உணர்த்தாது என்பதை,

இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந்து இசையா (தொல். சொல்.48)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது. பிற்றை இலக்கணிகள் இத்தொல்காப்பியக் கருத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளனர். (நன்.396), (இ.வி.323), (மு.வீ.ஒழி.81), (சு.நா.64), (இ.த.இ.171), (த.நூ.302), (தென்.சொற்.260), (த.கா.இ.441).

இவற்றுள் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் போன்றவை தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

ஒரு பெயர்ப் பொதுச்சொல்

ஒரு பெயர்ப் பொதுச்சொல் குறித்துத் தொல்காப்பியம், ஓர் இடத்தில் தொகுதியாய் அமைந்த பல பொருள்களைத் தனித்தனியே சுட்டிக் கூறுவதில்லை. அவற்றை அப்பொதுமையிலிருந்து நீக்கி ஒரு பொருளுக்குரிய சிறப்புப்பெயரால் கூறுவர். அப்பெயர் தலைமைத் தன்மை பற்றியோ, மிகுந்திருக்கும் எண்ணிக்கை பற்றியோ அமையும். இவ்வாறு பெயரிடும் முறை உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டு திணைகளுக்கும் பொருந்தி வரும் என்று குறிப்பிடுகிறது (தொல். சொல்.49).

இக்கருத்தோடு நேமிநாதம் (நேமி.32), இலக்கண விளக்கம் (இ.வி.323), சுவாமிநாதம் (சு.நா.63), தென்னூல் (தென்.சொற்.258) ஆகியவை ஒத்த மரபைக் கொண்டுள்ளன. இவற்றுள் இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே

எடுத்தாண்டுள்ளது. முத்துவீரியம், அஃறிணைக் கண்ணும், உயர்திணைக் கண்ணும் ஒரு பெயராய்ப் பல பொருட்குப் பொதுவாகிய சொல்லைப் பொதுமையின் வேறாகக் கூறுவர் (மு.வீ.ஒழி.82) என்று குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் போல ஒரு பெயர்ப் பொதுச்சொல் தலைமையாலும் பன்மையாலும் பெயர்பெறும் என்பதை முத்துவீரியம் சுட்டிக் காட்டவில்லை.

ஒன்றொழி பொதுச்சொல்

உயர்திணையிலும் அஃறிணையிலும் பொதுவாக வரும் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் குறிப்பினால் ஆண், பெண் என்னும் இரண்டு பால்களுள் ஒரு பாலினை நீக்கும். வழக்கில் மரபாக வந்துவிட்ட அவற்றை வழுவாகாது என ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒன்றொழி பொதுச்சொல் குறித்துத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.50).

இக்கருத்தை நேமிநாதம் (நேமி.36), நன்னூல் (நன்.352), இலக்கண விளக்கம் (இ.வி.324), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.83), சுவாமிநாதம் (சு.நா.63), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ.த.ஐந்.204), தமிழ்நூல் (த.நூ.291) ஆகிய நூல்கள் பின்பற்றியுள்ளன. இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

எண்ணுத்திணை விரவுப்பெயர் பெறும் திணை முடிபு

உயர்திணையும், அஃறிணையுமாய்க் கலந்து எண்ணப்பட்ட பெயர்கள் செய்யுளில் வரும் பொழுது அவை பெரும்பாலும் அஃறிணைச் சொல்லைக் கொண்டே முடிக்கப்பெறும் என்னும் தொல்காப்பியக் கருத்தை (தொல். சொல்.51) நேமிநாதமும் (நேமி.34), முத்துவீரியமும் (மு.வீ.ஒழி.84) பின்பற்றியுள்ளன.

பல பொருள் ஒரு சொல்

பல பொருள் ஒரு சொல்லின் வகைகள்

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருவது பல பொருள் ஒரு சொல்லாகும். அது 1. வினையால் வேறுபடுகின்ற பல பொருள் ஒரு சொல் 2. வினையால் வேறுபடாத பல பொருள் ஒரு சொல் என இருவகைப்படும் (தொல். சொல்.52) முத்துவீரியம் தொல்காப்பியத்தைப் பின்பற்றி பல பொருள் ஒரு சொல்லை வகைப்படுத்தியுள்ளது (மு.வீ.ஒழி.85).

வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல்

வினையால் வேறுபடுகின்ற பல பொருள் ஒரு சொல் பொருளுக்கே உரியதாகிய சிறந்த வினை, இனம், சார்பு என்னும் மூன்றனுள் ஒன்றால் பிற பொருளைத் தெளிவு படுத்தும் (தொல். சொல்.53) எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இக்கருத்தை நேமிநாதமும் (நேமி.38), முத்துவீரியமும் (மு.வீ.ஒழி.86) பின்பற்றியுள்ளன.

வினை வேறுபடாஅப் பலபொருள் ஒரு சொல்

வினையால் வேறுபடுத்திப் பொருள் உணர முடியாத பல பொருள் ஒரு சொற்கள் உள்ளன. அவற்றை ஆராய்ந்து பார்த்து இதுவென வெளிப்படையாகச் சுட்டி, சிறப்பு அடையாளங்களைக் கொடுத்துக் கூற வேண்டும் என்பதை,

ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒரு சொல்
நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும் (தொல். சொல்.54)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது.

நன்னூல், தொல்காப்பியத்தைப் பின்பற்றி வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல்லைச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுவர் என்கிறது (நன்.390).

இலக்கண விளக்கமும் (இ.வி.320) முத்துவீரியமும் (மு.வீ.ஒழி.87) இக்கருத்தையே பின்பற்றியுள்ளன. தென்னூல் வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் குறித்து,

பொருள்வேறு படுத்தா வினைமுத லியவரின்
இதுபொருள் என்றெடுத் தியம்புதல் வேண்டும். (தென். சொற்.254)

என்று குறிப்பிடுகிறது.

குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி

ஒருவன் ஒரு பொருளின் வேறுபாட்டைச் சொல்லக் கருதினால் அச்சொல்லானது ஆற்றல் முதலியவற்றால் பொருளைத் தெளிவுற விளக்க வேண்டும். அவ்வாறு அமையாதவிடத்துப் பொருளின் வேறுபாட்டைப் பிறர் தெளிவடையும் படி எடுத்துச் சொல்லுதல் வேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல்.55).

இக்கருத்தை இலக்கண விளக்கம் (321), முத்துவீரியம் (88), அறுவகை இலக்கணம் (92) ஆகியவை ஏற்றுக்கொண்டுள்ளன.

அஃறிணையில் முடியும் உயர்திணைப்பெயர்கள்

குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள்

1.குடிமை, 2.ஆண்மை, 3.இளமை, 4.மூப்பு, 5.அடிமை, 6.வன்மை, 7.விருந்து, 8.குழு, 9.பெண்மை, 10.அரசு, 11.மக, 12.குழவி, 13.தன்மை திரி பெயர், 14.உறுப்பின் கிளவி, 15.காதல், 16.சிறப்பு, 17.செறற்சொல், 18.விறற்சொல் ஆகிய பதினெட்டும் அவை போல்வன பிறவும் குறிப்பால் பொருளுணர்த்தும் சொற்கள் ஆகும். இவை அனைத்தும் உயர்திணைப் பொருள்களுக்கே உரியன. ஆயினும் உயர்திணைக்குரிய முடிவுகளைக் கொள்ளாமல் அஃறிணை முடிவுகளையே கொண்டு முடியும் (தொல். சொல்.56) என்பர் தொல்காப்பியர்.

தொல்காப்பியத்தை அடியொற்றி நேமிநாதம் குழு, அடிமை, வேந்து, குழவி, விருந்து, வழுஉறுப்பு, திங்கள், மக, உயர்திணைப் பண்பு, உயிர், உறுப்பு, மெய் ஆகிய பன்னிரண்டும் உயர்திணைப் பெயராயினும் அஃறிணையாக வரும் என்று பகர்கிறது (நேமி.33). இவற்றுள் தொல்காப்பியம் குறிப்பிடும் உறுப்பின் கிளவி, தன்மை திரிபெயர் ஆகிய இரண்டையும் வழுவுறுப்பு என்ற ஒன்றனுள் அடக்குகிறது நேமிநாதம். தொல்காப்பியம் குறிப்பிடும் செறற்சொல், காதல் போன்றவற்றை நேமிநாதம் சுட்டிக் கூறவில்லை. மேலும் தொல்காப்பியர் குறிப்பிட்டுச் சொல்லாத திங்கள் என்பதை நேமிநாதம் கூறியுள்ளது. இதைத் தொல்காப்பியர் குறிப்பிடும் 'பிறவும்' என்பதனுள் அடக்கி ஒத்த மரபாகக் கொள்ளலாம்.

முத்துவீரியம் தொல்காப்பியத்தை அடியொற்றி,

ஆண்மை குடிமை யடிமை மூப்பே
விருந்தே இளமை வெண்மை உறுப்பே
குழுவே வன்மை குருடே மகவே
அரசே காதல் அஃறிணை முடிபின (மு.வீ.ஒழி.89)

என்று கூறுகிறது. 'பிறவும் அன்ன' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதால் தொல்காப்பியர் கூறாத 'வெண்மை' என்பதும் ஏற்றுக்கொள்ளப்படும்.

உயர்திணைப்பால்கள் அ∴றிணை முடிவு பெறுதல்

1.காலம், 2.உலகம், 3.உயிர், 4.உடம்பு, 5.பால் வரை தெய்வம், 6.வினை, 7.பூதம், 8.ஞாயிறு, 9.திங்கள், 10.சொல் ஆகிய பத்தும் அவற்றைப் போன்ற பிறவும் உயர்திணைக்குரிய ஆண், பெண், பலர்பால் ஈறுகளைக் கொண்டு முடிவதில்லை. அ∴றிணைப் பாலாகவே கூறப்பெறும் (தொல்.சொல்.57). மேலும் காலம் முதலாகக் கூறப்பட்ட சொற்கள் ஈறு திரியாமல் நின்று உயர்திணையாகக் கூறப்படும் இயல்பினைக் கொண்டவை அல்ல என்றும் (தொல். சொல்.58), அவை ஈறு திரிந்து உயர்திணையாகக் கூறப்பெறும் (தொல். சொல்.59) என்றும் தொல்காப்பியம் பகர்கிறது. முத்துவீரியம் தொல்காப்பியத்தை அடியொற்றியுள்ளது (மு.வீ.ஒழி.90).

குறிப்பால் இனம் உணர்த்தல்

இனமாகிய பல பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பித்துக் கூறுவர். அவ்வாறு சிறப்பிக்கும் சொல் தான் உணர்த்தும் பொருளுக்கு இனமான பல பொருள்களைக் குறிப்பால் உணர்த்துவதற்கும் உரியதாகும் என்னும் கருத்தைத் தொல்காப்பியம்,

எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்தே. (தொல். சொல்.60)

என்றுரைக்கின்றது.

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் 'இனம் செப்பாமையும் உரித்து'[17] என்றும், சேனாவரையர் இனத்தைச் சார்ந்து எதிர்மறைப் பொருளையும் உணர்த்தி வரும்[18] என்றும் கூறுகின்றனர்.

எடுத்த மொழி தன் இனத்தைக் காட்டலும் உரித்து என்பதைப் பிற்றை இலக்கணிகள் பலரும் ஏற்கின்றனர். (நேமி.34), (நன்.358), (இ.வி.322), (மு.வீ.ஒழி.92), (சு.நா.63), (இ.த.ஐந்.383), (தென். சொற்.257).

பன்மை சுட்டிய பெயர்கள் முடிவு பெறுதல்

கண், தோள், மார்பு என்னும் உறுப்புப் பெயர்களும், இவற்றைப் போன்ற பிற உறுப்புப் பெயர்களும் பன்மை குறித்து நிற்கின்ற சினைச் சொற்களாகும். அவை இயல்புக்கு ஏற்பப் பன்மையாகவே உணர்த்தப்பட வேண்டும் என்ற வரையறை இல்லை. முதல் ஒருமையாயின் ஒருமையாகவும், பலவாயின் பன்மையாகவும் முடிக்கப் பெறுதல் வேண்டும் (தொல்.சொல்.61) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் ஏற்றுக் கொண்டுள்ளது (மு.வீ.ஒழி.93).

மரபு மாற்றம்

சொல் - வரையறையும் விளக்கமும்

தொல்காப்பியம் திணையை முதன்மைப்படுத்தி சொற்களை வரையறை செய்கிறது. பிற்றை இலக்கண நூல்கள் இம்முறையைப் பின்பற்றவில்லையெனினும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் விளக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில் சொல்லை வரையறை செய்கின்றன. அந்த அடிப்படையில் சொல் குறித்து அவிநயம், திணை, பால், மரபு, வினா, செப்பு, இடம், சொல், வழு, தொகை, எச்சம், வேற்றுமை, காலம், மயக்கம் ஆகிய பதின்மூன்றால் ஆராயப்படுவது சொல் என்று கூறுகிறது (அவி.19).

நேமிநாதம் எண்வகைகளால் சொல் ஆராயப்படும் தன்மை குறித்து,

ஏற்ற திணையிரண்டும் பாலைந்தும் ஏழ் வழுவும்
வேற்றுமை எட்டும் தொகையாறும் - மாற்றரிய
மூன்றிடமும் காலங்கண் மூன்றும் இரண்டிடத்தாற்
தோன்ற உரைப்பதாஞ் சொல். (நேமி.26)

என்றுரைக்கின்றது. அவிநயத்தில் இடம்பெற்ற மரபு, வினா, செப்பு, சொல், எச்சம், மயக்கம் போன்றவற்றைச் சொல்லின் பொது இலக்கணத்தில் நேமிநாதம் சுட்டவில்லை. மாறாக, இரண்டிடம் என வழக்கு, செய்யுள் ஆகியவற்றை இணைத்துள்ளது. நன்னூல் சொல்லின் பொது இலக்கணமாக , இரு திணைகளையும் அவற்றுள் அடங்கிய ஐந்து பால்களையும் உணர்த்தும்; அவ் ஐம்பாற் பொருள்களையும் தன்னையும் உணர்த்தும்; மூவகை இடங்களிலும் வரும்; வழக்கிலும் செய்யுளிலும் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் பொருளை விளக்கும் (நன்.259) என்று குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம் நன்னூலை அடியொற்றி சொல்லின் பொது இலக்கணத்தை விளக்கியுள்ளது. (இ.வி.160) முத்துவீரியம் நன்னூலைப் பின்பற்றியுள்ளது எனினும் சற்று மாறுபட்டு வழக்கை மட்டுமே சுட்டியுள்ளது (மு.வீ.சொல்.பெயர்.6). சுவாமிநாதம் நன்னூலைப் பின்பற்றியுள்ளது (சு.நா.34). தொன்னூல் விளக்கம் சொல்லின் பொதுத்தகுதிகளாக 1)இயற்சொல் 2)திரிசொல் 3)ஒரு மொழி 4)தொடர் மொழி 5)பொது மொழி 6)பகாப்பதம் 7)பகுபதம் 8)ஆகுபெயர் 9)இருதிணை 10)ஐம்பால் 11)மூவிடம் 12)சாரியை எனப் பன்னிரண்டனைக் குறிப்பிடுகிறது (தொ.வி.42). அறுவகை இலக்கணம், நன்னூல் பதவியலில் கூறும் (நன்.128) கருத்தைப் பின்பற்றி எழுத்து தனித்தும், சிற்சில எழுத்துகள் புணர்ந்தும் வருவன சொல் என்று வரையறுக்கிறது (அ.இ.167). இலகு

தமிழ் ஐந்திலக்கணமும் (இ.த.ஐந்.147) தமிழ்க்காப்பு இயமும் (த.கா.இ.144) இக்கருத்தைப் பின்பற்றியுள்ளன. இலகு தமிழ் ஐந்திலக்கணம் முன்னைய இலக்கணிகளைப் பின்பற்றி,

சொல்வகை திணை பால் எண் இடம் வேற்றுமை

பல்வகை முடிபும் சொல் இலக்கணமாம் (இ.த.ஐந்.380)

என்று விளக்குகிறது. தென்னூல், மாந்தா்தம் எண்ணத்தின் உருவாய் எழுத்தான் ஆக்கமுறுவது சொல் என்று விளக்கம் தந்து, பின்னா் நன்னூலைப் பின்பற்றி சொல்லின் பொது இலக்கணத்தைக் கூறுகிறது (தென். சொற்.4). எழுத்துகள் சோ்ந்து பொருள் தருவது சொல் என்னும் கருத்தைத் தமிழ்நூல்,

சொல்லெனப் படுவது உள்ளத் தெழுந்த

கருத்தைப் பிறா்க்குத் தெரிவிக்கும் மொழியாம்

முழுவுருவத்தின் வலு வெலும்பாகிடத்

தன்னை உணா்த்தும் எழுத்துகள் சோ்ந்து

நன்னா் பொருளை நவில் வதாமே. (த.நூ.46)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது. மேலும், சொல் வினை, பெயா் என்று இரண்டு பிரிவாய் ஐந்தொகை என்று இலக்கணத்துச் சிறப்பிக்கத்தக்க திணை, பால், எண், இடம், காலம் இவற்றைக் காட்டும் (த.நூ.48) என்று இயம்புகிறது.

சொல் வகைப்பாடு

தொல்காப்பியா் எழுத்ததிகாரத்தில் சொல்லை ஒரு மொழி, இருமொழி, தொடா்மொழி என மூவகைப்படுத்துகிறாா் (தொல்.எழுத்து.44) சேனாவரையா் தனிமொழி, தொடா்மொழி ஆகிய இரண்டை மட்டுமே கூறுகிறாா். இருமொழியும் தொடா்மொழியில் அடங்கிவிடும் என்பது அவா் கருத்து.

நன்னூல் தனிமொழி, தொடா்மொழி ஆகிய இரண்டோடு பொது மொழியையும் சோ்த்து மூவகை மொழிகளைக் குறிப்பிடுகிறது (நன்.259). முத்துவீரியமும் (மு.வீ.பெயா்.6) இலகு தமிழ் ஐந்திலக்கணமும் நன்னூலைப் பின்பற்றியுள்ளன (இ.த.ஐந்.149,150,151).

நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டும் சொல்லின் வகைகள் குறித்துக் கூறும் கருத்துகளில் முரண்பாடு காணப்படுகிறது. நன்னூல்,‘‘எழுத்தே தனித்தும்

தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்'' (நன்.128) என்று எழுத்ததிகாரத்தில் கூறுகிறது. சொல்லதிகாரத்தில் தனிமொழி, தொடர்மொழியோடு பொதுமொழியை இணைத்து மூவகைகளாகக் கூறுகிறது. இலக்கணவிளக்கம் பதவியலில் ''எழுத்தே, தனித்தும், இணைந்தும், தொடர்ந்தும் பதமாம் பொருள் தரின்'' (இ.வி.38) என்று தொல்காப்பியத்தைப் பின்பற்றுகிறது. ஆனால் சொல்லதிகாரத்தில் சேனாவரையர் உரையை அடிப்படையாகக் கொண்டு தனிமொழி, தொடர்மொழி ஆகிய இரண்டனை மட்டும் சுட்டுகிறது (இ.வி.160).

தமிணூல்,

ஓரெழுத் தேபொருள் உணர்த்தினும் சொல்லாம் (த.நூ.47)

என்னும் நூற்பா வழி, ஓரெழுத்தே என ஏகாரம் புணர்த்துக் கூறியமையால் தொடர்மொழியையும் குறிப்பாக உணர்த்துகிறது. இதன்வழி மூலநூல்களை மட்டுமன்றி உரையாசிரியர்களின் கருத்துகளையும் பிற்கால இலக்கணிகள் பின்பற்றியுள்ளமை புலனாகும்.

திணைப்பகுப்பு – மரபு மாற்றம்

தொல்காப்பியம், மக்கள் உயர்திணை, மக்களல்லாத பிற அஃறிணை என்று குறிப்பிடுகிறது. நேமிநாதம் மக்கள், நரகர், வானோர் உயர்திணை. இவை ஒழிந்த உயிருள்ளனவும், இல்லனவும் அஃறிணை எனக் குறிப்பிடுகிறது. (நேமி.27) தொல்காப்பியம் வானோரையும், நரகரையும் உயர்திணை எனச் சுட்டவில்லை. எனினும், தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி உயர்திணை ஈறு பெறும் எனக் கூறுவதால் தெய்வத்தையும் உயர்திணையில் அடக்குகிறார் தொல்காப்பியர். நேமிநாதத்தைப் பின்பற்றி நன்னூல்,

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை (நன்.261)

என்று குறிப்பிடுகிறது. நேமிநாதம் நரகர், வானோர் எனக் குறிக்க, நன்னூல் தேவர் நரகர் என முறை மாற்றுகிறது.

தொல்காப்பியர் காலத்தில் வானோர், நரகர் என்ற சமயக் கோட்பாடுகள் இல்லாமல் இருந்து தெய்வ வழிபாடு மட்டுமே இருந்திருக்க வேண்டும். நேமிநாதம், நன்னூல் காலத்தில் சமூகத்தில் சமயக் கோட்பாடுகள் நிலவியமையால் இலக்கண நூலார் அதைத் தம் நூல்களில் பதிவு செய்துள்ளனர் எனக் கருத இடமுண்டு. இது

குறித்து, சோ.ந.கந்தசாமி, "தொல்காப்பியர் காலத்தில் மக்கட்பிறப்பேயன்றித் தெய்வம் சுட்டிய பெயர்களையும் உயர்திணையாகக் கூறும் வழக்கு நிலவியது. எனினும் நரகர் பற்றிய குறிப்பே இடம்பெறவில்லை. எனவேதான் பின்னூலார் மக்கள் கதி, தேவர்கதி, நரகர் கதி, விலங்கு கதி என்ற சமணப் பாகுபாட்டினை இலக்கணத்தில் புகுத்தியுள்ளார்"[19] என்று குறிப்பிடுகிறார்.

தொன்னூல் விளக்கமும் (தொ.வி.50) முத்துவீரியமும் (மு.வீ.பெயர்.10) நன்னூலை அடியொற்றி மக்கள், தேவர், நரகர் உயர்திணை மற்றவை அ∴றிணை எனக் குறிக்கின்றன. முத்துவீரியம் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது. இனிய தமிழ் இலக்கணம் மக்களும், தேவரும் அறிவால் உயர்ந்தவர்கள் ஆதலால் உயர்திணை எனவும், மற்றவை அறிவால் இழிந்தவை ஆதலால் அ∴றிணை எனவும் இயம்புகிறது (இ.த.இ.92). நன்னூல் குறிப்பிடுவது போல நரகரை உயர்திணை எனச் சுட்டவில்லை. மக்களையும், தேவரையும் மட்டுமே உயர்திணை எனச் சுட்டுகிறது இனிய தமிழ் இலக்கணம். இனிய தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றி இலகு தமிழ் ஐந்திலக்கணம் உயிருடைய மக்களும், தேவரும் உயர்திணை எனவும், அவை தவிர்ந்த உயிர் உள்ளனவும், இல்லாதனவும் அ∴றிணை எனவும் குறிப்பிடுகிறது. நன்னூலார் நரகரை உயர்திணையில் கூறுவார். ஆனால் இலகு தமிழ் ஐந்திலக்கணம் மாக்களை ஒத்துக் கயவராயுள்ளதால் நரகர் அ∴றிணை எனக் கூறுகிறது. மேலும், கடவுள் உயர்திணையாக இருப்பினும் வழக்கில் அ∴றிணை முடிவே வழங்கப்படும் என்றும், கயவரும் உள்ளம் திருந்திடில் உயர்திணையாவர் என்றும் குறிப்பிடுகிறது (இ.த.ஐந்.194). காலத்திற்கேற்ப இலக்கணிகளின் கருத்தில் மாற்றம் ஏற்பட்டதை மேலைச் செய்தி விளக்குகிறது. இலக்கண நூல்களிலும் சமூகவியல் கருத்தாக்கம் உண்டு என்பதற்கு இலகு தமிழ் ஐந்திலக்கணம் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது.

ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி – மரபு மாற்றம்

ஆண்மை சுட்டிய பெயர்நிலைக்கிளவியும் தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும் உயர்திணை முடிபு பெறும் எனத் தொல்காப்பியம் குறிப்பிட நன்னூல், மூன்றாம் பாலினம் பெறும் பால் முடிபு குறித்துக் கூறுமிடத்து தொல்காப்பியத்திலிருந்து சற்றே மாறுபடுகிறது. பெண் தன்மையை விட்டு ஆண் தன்மையை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணை ஆண் பாலாகும். ஆண் தன்மையை விட்டுப் பெண் தன்மையை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணைப் பெண் பாலாகும் என்று விளக்கும் நன்னூல் இவை இரண்டும் உயர்திணை ஆவதன்றி அ∴றிணையை ஒத்தும் நடக்கும் என்கிறது

(நன்.264). ஆனால் தொல்காப்பியம் உயர்திணையில் வரும் என்று மட்டுமே கூறுகிறது. பேடுகளாக விளங்குபவர்களும் மனிதர்களே என்று அவர்களையும் உயர்திணையில் வைத்து உரைக்கும் தொல்காப்பியரின் சமூகவியல் நோக்கு சுட்டுதற்குரியது.

சுவாமிநாதம், நன்னூலைப் பின்பற்றி தெய்வம், பேடு என்பனவற்றை ஐம்பாலுள் அடக்கி வினைமுற்று விகுதியால் அவை அறியப் பெறும் என்கிறது (சு.நா.35). இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

“உயர்திணை யாமே என்றும் கடவுள்

எனினும் அஃறிணை முடிவே வழக்கினில்”   (இ.த.ஐந்.194:5-6)

என்று குறிப்பிடுகிறது.

தென்னூல், தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவி உயர்திணை முப்பால் ஈறு பெற்று வரும் எனத் தொல்காப்பியக் கருத்தை ஏற்றுக் கொண்டாலும் அருள் தன்மை கருதி மெய்ப்பொருளுணர்வோடு கூறுமிடத்து அஃறிணைக்குரிய ஈறுகளாலும் வழங்கப்பெறும் என்று கூறுகிறது (தென்.சொற்.10). தொல்காப்பியம் அஃறிணையில் வரும் எனச் சுட்டவில்லை.

அடைமொழி - மரபு மாற்றம்

தொல்காப்பியம் பண்பு அடியாக அமையும் பெயரடைகளை மட்டுமே குறிக்கின்றது. ஆனால் நன்னூல் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு நிலைகளிலும் பெயரடைகள் இனம் உள்ளனவற்றிற்கும், இனம் இல்லாதனவற்றிற்கும் வருவதோடு செய்யுளிலும், வழக்கிலும் அமையலாம் எனக் கூறுகின்றது (நன்.401). தொல்காப்பியம் பெயரடைகள் செய்யுளில் இனம் சுட்டாமல் வரும் என்று கூறுகிறது. ஆனால் நன்னூல் இனம் உள்ளன, இனம் இல்லாதன ஆகிய இரண்டிலும் பெயரடைகள் வரும் என்றும் அவை செய்யுளிலும், வழக்கிலும் வரும் என்றுரைக்கின்றது.

நன்னூல் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறது இலக்கண விளக்கம் (இ.வி.312). சுவாமிநாதம் நன்னூலை அடியொற்றி,

.... பொருள் முதல் ஆ றினையும்

என்றடைசேர் மொழிஇனம்உள் ளதால் குறித்து இல்லதற்கும்

ஏற்புடைத்து, ஒரோவழியே ஈரிடத்தும் இசைப்பார் (சு.நா.61:2-4)

என்றுரைக்கின்றது.

அறுவகைப் பெயர்களும் அடைமொழி பெற்று வரும் என்னும் நன்னூலாரின் கருத்தை இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஏற்றுக் கொண்டுள்ளது (இ.த.ஐந்.315).

இனமுள்ள அடை, இனமில்லா அடை என்பவற்றோடு இயற்கை அடை என்னும் அடைமொழியைப் புதிதாகச் சேர்க்கிறது இனிய தமிழ் இலக்கணம் (இ.த.இ.172). ஆனால் இலகு தமிழ் ஐந்திலக்கணம் இனமில்லா அடைமொழி இயற்கை அடைமொழி என்றும் வழங்கப்பெறும் என்று இரண்டையும் ஒரே அடைமொழியாகக் கொள்கிறது (இ.த.ஐந்.317).

மேலும், இனமுள்ள அடைமொழி குறித்து,

ஐயம் நீங்கப் பல இனம் தன்னில்
ஒரு இனம் குறிக்கின் இனஅடை மொழியாம் (இ.த.ஐந்.316:1-2)

என்றும், இனமில்லா அடைமொழி குறித்து,

ஐயம் திரிபற இயல்பாய் அமையும்
அடைமொழி இனமிலா அடைமொழி யாகும் (இ.த.ஐந்.317:1-2)

என்றும் விளக்கம் தருகிறது.

இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் - மரபு மாற்றம்

நன்னூல், செயற்கைப் பொருளைக் கூறுமிடத்து காரணச்சொல் முன்வர ஆக்கச் சொல் பின்வரப் பெற்றும், காரணச் சொல் மறைந்து நிற்க ஆக்கச் சொல் வரப்பெற்றும், ஆக்கம், காரணம் இருவகைச்சொல்லும் மறைந்து வரப் பெறும் என்றும் கூறுகிறது (நன்.405). ஆனால் தொல்காப்பியர் காரணச்சொல் முன்வர ஆக்கச்சொல் பின்வரும் என்று மட்டுமே கூறுகிறார். ஆக்கச்சொல்லும், காரணச்சொல்லும் மறைந்து வருதல் குறித்துத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. நன்னூல் அதனைக் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நூல், செயற்கைப் பொருள் காரணம், ஆக்கம் இவை இரண்டில் ஒன்றைத் தவிராது பெற்று வரும் என்கிறது (த.நூ.312).

ஆக்கச்சொல் காரணமின்றி வருதல் வழக்கிடத்தது என்பது தொல்காப்பியர் கருத்து. ஆனால் தென்னூல், செய்யுளில் ஒரோ வழி காரணம் குறியாது ஆக்கச்சொல் வருதலும் மரபாகும் என்று கூறுகிறது (தென்.சொற்.246).

மூவிடங்களுக்கும் உரிய சொற்கள் - மரபு மாற்றம்

தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே (நன்.266)

என்று மூவிடங்களை வகைப்படுத்துகிறது நன்னூல்.

தொல்காப்பியம் செல்லும், வரும், தரும், கொடுக்கும் என நான்கு சொல்லும் மூவிடத்திற்கும் உரியது என்றும், அவற்றுள் தரும், வரும் என்னும் சொற்கள் தன்மை, முன்னிலைக்கு உரியது என்றும், செலவு, கொடை என்பன படர்க்கைக்கு உரியது என்றும் விளக்குகிறார். ஆனால் நன்னூல் தரல், வரல், கொடை செலல் ஆகிய நான்கும் படர்க்கையில் வரும் என்றும், தரல், வரல் என்னும் இரண்டையும் தன்மை முன்னிலைகள் ஏற்கும் என்றும் கூறுகிறது. இதனை,

தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை
எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும் (நன்.381)

என்னும் சூத்திரம் விளக்குகிறது.

எழுவாய் இரண்டாகிய தரலும், வரலும் தன்மை, முன்னிலைக்கு உரியன என்று கூறியமையால் கொடை, செலல் இரண்டும் சிறப்பாகப் படர்க்கைக்கே உரியன என்பது புலப்படும்.

தொல்காப்பியம், நன்னூலிலிருந்து சற்றே மாறுபடுகிறது தொன்னூல் விளக்கம். வரல், தரல் என்னும் சொற்கள் மூவிடத்திற்கும் உரியது என்றும், செலல், கொடை ஆகிய இரண்டும் படர்க்கைக்கு மட்டுமே உரியது என்றும் தொன்னூல் விளக்கம் இயம்புகிறது (தொ.வி.122). முத்துவீரியம் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (மு.வீ.ஒழி.65). தமிழ்நூல், செல்வது குறித்த வினைச் சொற்கள் படர்க்கையை மட்டும் சாரும் என்றும் வருதல் பற்றிய வினைச்சொற்கள் தன்மைக்கும், முன்னிலைக்கும் ஆகும் என்றும் கூறுகிறது (த.நூ.295).

சிறப்புப்பெயரும், இயற்பெயரும் அமையும் முறை - மரபு மாற்றம்

தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் சிறப்புப்பெயர் முன்வர இயற்பெயர் பின்வரும் என்று கூற, தமிழ்நூல், இயற்பெயரோடு கல்வி

முதலியவற்றினாம் சிறப்புப்பெயர் வருங்கால் முன்னோ, பின்னோ வழக்கிற்கேற்ப இயைந்து வரும் என்று நவில்கிறது. தற்போதைய வழக்கை நோக்க தமிழ் நூல் கூறுவதே பொருத்தப்பாடுடையதாகத் திகழ்கிறது (த.நூ.293).

ஒரு பொருள் பல பெயர் வினையேற்றல்

ஒரு பொருளின் மேல் பல பெயர்கள் வருமானால் ஒரு தொழிலையே முடிபாகக் கூறவேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து. ஆனால் முத்துவீரியம், ஒரு பொருளைக் குறித்து வந்த பல பெயர்ச் சொற்கள் ஒரு தொழிலே முடிபாகக் கூறாது பெயர்தொறும் வேறாகிய தொழில்களைக் கொடுத்துரைப்பின் ஒரு பொருளனவாம் என்று கூறுகிறது. இதனை,

ஒருபொருள் குறித்த பலபெயர்க் கிளவி
ஒருவினை முடிபறையாது அப்பெயர்தொறும்
வேறொரு வினைதந் துரைப்பது விதியே (மு.வீ.ஒழி.75)

என்னும் நூற்பா விளக்குகிறது. இதன் மூலம் தொல்காப்பிய மரபை முத்துவீரியம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது புலப்படும்.

எண்ணுத்திணை விரவுப்பெயர் பெறும் திணை முடிபு

எண்ணுத்திணை விரவுப்பெயர் அஃறிணை முடிபு பெறும் என்பது தொல்காப்பியர் கருத்து (தொல்.சொல்.51). ஆனால் நன்னூல், திணைகளும், பால்களும் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்களும் ஒன்றோடொன்று கலந்து ஒரு தொடராக வருமாயின், அவை சிறப்பின் காரணமாகவும் மிகுதி காரணமாகவும் இழிவு காரணமாகவும் ஒரு முடிவைப் பெறும் என்கிறது (நன்.378). தொல்காப்பியத்தைப் போல் அஃறிணையில் முடியும் என்று கூறாமல் சிறப்பு, மிகுதி, இழிவு காரணமாக ஒரு முடிவைப் பெறும் எனப் பொதுவாகக் கூறுவதனால் இது மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது. இக்கருத்தை இலக்கணவிளக்கம் மட்டுமே பின்பற்றியுள்ளது (இ.வி.298).

பல பொருள் ஒரு சொல் - மரபு மாற்றம்

தொல்காப்பியம் பல பொருள் ஒரு சொல்லை வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல், வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் என இரு பிரிவாகப் பாகுபடுத்தி விளக்குகிறது. நன்னூல் இவ்வாறு இரு வகையாகப் பாகுபடுத்தவில்லை எனினும் வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் குறித்து,

வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப்

பலபொருள் ஒரு சொல் பணிப்பர் சிறப்பு எடுத்தே (நன்.390)

என்று கூறுவதன் மூலம் குறித்த பொருளை விளக்குவதற்கு வேண்டிய வினையும், சார்பும், இனமும், இடமும் பொருந்திப் பொருள் விளங்காத பல பொருள் ஒரு சொல்லைச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுவர் என விளக்குகிறது. எனவே, வினை, சார்பு, இனம், இடம் ஆகியவற்றுடன் பொருந்திப் பொருள் விளங்குவது வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல்லாகும் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறது.

மேலும், தொல்காப்பியர் கூறும் வினை, சார்பு, இனம் ஆகிய மூன்றனோடு இடம் என்பதையும் சேர்க்கிறது நன்னூல்.

இலக்கண விளக்கம் வினை, பெயர், இனம், சார்பு காரணமாகப் பல பொருள் ஒரு சொல் பொருள் விளக்கும் என்கிறது (இ.வி.320). நன்னூல் குறிப்பிடும் ‘இடம்’ என்பதை நீக்கி, பெயர் என்பதைச் சேர்க்கிறது இலக்கண விளக்கம்.

சுவாமிநாதம், நன்னூல் குறிப்பிடும் வினை, இனம், சார்பு, இடம் ஆகியவற்றுடன் பெயர் என்பதனையும் இணைத்து இவற்றின் காரணமாகப் பல பொருள் ஒரு சொல் பொருள் விளக்கும் என்று இயம்புகிறது (சு.நா.63). தென்னூல், நன்னூலைப் பின்பற்றியுள்ளது (தென். சொற்.253). தமிழ்நூல், பல பொருள் தரும் ஒரு சொல் தன்னைச் சாரும் வினையாலும், பெயராலும் தக்க தனி அடை தருதலானும் பொருளை விளக்கும் என்று கூறுகிறது (த.நூ.290).

மரபு வளர்ச்சி

பால் பகுப்பு

தொல்காப்பியரின் ஐம்பாற் பகுப்பைப் பின்வந்த இலக்கணிகள் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனினும் டாக்டர்.பொன் கோதண்டராமன் பால்களை அறுவகைப் படுத்துகிறார். இது இலக்கணிகளால் குறிக்கப்படவில்லை. பொற்கோ அவர்கள் பேச்சு வழக்கில் உள்ள சொற்களைக் கொண்டு ஒரு புதிய பாலை (ஆறாம்பால்) உயர்பால் என்னும் பெயரால் சுட்டுகின்றார். இதனைக் கீழ்வரும் பகுதி விளக்கும். “நன்னூலார் காலத்திலும், தொல்காப்பியர் காலத்திலும் ஐந்து பால்கள் தமிழில் உள்ளன என்று குறிப்பிட்டிருந்தனர். ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இந்த ஐந்து பால்களைப் பற்றிய குறிப்பை தொல்காப்பியத்திலும், நன்னூலிலும் காண்கிறோம். ஆனால் இன்றைய தமிழில் ஆறாவதாக ஒரு பால் தோன்றிவிட்டது. ‘அவர் இங்கு வந்தார்’ என்றால் தொல்காப்பியர் காலத்தில் இது பலர்பாலுக்குரிய

தொடர். அவர் என்பது பலர்பால். சில வேளைகளில் சிறப்புக் கருதி அதை ஒருமைக்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்றாலும் அவர் என்பது பலர்பாலுக்குரிய சொல். நன்னூலார் காலத்திலும் கூட அவர் என்பது பலர்பாலுக்குப் பயன்பட்டிருக்கிறது. இன்று பலர்பாலுக்குரியதாய் விளங்குவது அவர்கள் என்பது. இதற்கு ஏற்ற வினை ‘வந்தார்கள்’ என்பது. ‘அவர்கள் இங்கு வந்தார்கள்’ என்று சொல்லும் பொழுது தான் அவர்கள் என்பதும், வந்தார்கள் என்பதும் பலர்பால் என்று கொள்ளத்தகும். அவர் இங்கு வந்தார் என்று சொன்னால் அது ஒருமைதான். இதற்கு நாம் ஒரு பெயரிட வேண்டும். இப்போதைக்கு இதற்கு நாம் உயர்பால் என்று பெயரிடலாம். ஆகவே, இன்றைய தமிழில் ஆண்பால், பெண்பால், உயர்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்று பால்களை ஆறாக வகைப்படுத்தலாம்”[20] என விளக்குகிறார். இக்கருத்து மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

பால் காட்டும் ஈறுகள்

நேமிநாதம் தொல்காப்பியக் கருத்தை அடியொற்றிப் பால் காட்டும் ஈறுகளைச் சுட்டினாலும் சிறிதளவு வேறுபடுகின்றது. தொல்காப்பியர் ஆண்பால் ஈறாக னகர ஒற்றையும், பெண்பால் ஈறாக ளகர ஒற்றையும் குறிப்பிட, நேமிநாதம் அன், ஆன் இறுதியாய் வருவன ஆடூஉ அறிசொல், அள், ஆள் இறுதியாய் வருவன மகடூஉ அறிசொல் எனக் குறிக்கிறது (நேமி.29). பலர்பால் ஈறுகளாகத் தொல்காப்பியம் ரகர ஒற்று, ப, மார் என்பவற்றைக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் குறிப்பிடும் ‘மார்’ விகுதி நேமிநாதத்தில் இடம்பெறவில்லை. அறுவகை இலக்கணம் அஃறிணைக்குரிய பால் காட்டும் ஈறுகளாக இ, உ, ஐ ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (வாரிதி, முத்து, மஞ்ஞை). (அ.வி.199). இனிய தமிழ் இலக்கணம் நேமிநாதம் குறிப்பிடும் ஆண்பால் ஈறுகளோடு மன், மான் என்பவற்றையும், பெண்பால் ஈறுகளோடு ‘இ’ விகுதியையும், பலர்பால் ஈறுகளோடு இர், கள் போன்றவற்றையும், உ, ம், ஐ, இ, ள், அர் போன்றவற்றை ஒன்றன்பால் ஈறுகளாகவும், வை, கள் போன்றவற்றைப் பலவின்பால் ஈறுகளாகவும் குறிப்பிடுகிறது (இ.த.இ.95).

இலகு தமிழ் ஐந்திலக்கணம், தொல்காப்பியர் குறிப்பிடும் ‘ன்’ விகுதியோடு இனிய தமிழ் இலக்கணம் கூறும் விகுதிகளையும் சேர்த்து ஆண்பால் ஈறுகளை அமைத்துள்ளது (இ,த.ஐந்.196). மேலும் இனிய தமிழ் இலக்கணத்தை அடியொற்றி ‘இ’ விகுதியைப் பெண்பால் விகுதியாகவும் (இ.த.ஐந்.197), அறுவகை இலக்கணத்தைப் பின்பற்றி ஒன்றன்பால் ஈறுகளையும் (இ.த.ஐந்.196), இனிய தமிழ்

இலக்கணம் குறிப்பிடும் வை, கள் விகுதிகளைப் பலர்பால் ஈறுகளாகவும் அமைத்துள்ளது (இ.த.ஐந்.200).

தமிழ்நூல் பலர்பால் ஈறுகளாக ர, கள் ஆகியவற்றைச் சுட்டுகிறது. மேலும் ப, மார் எனும் இறுதிகள் பண்டைய பலர்பால் ஈறுகள் எனவும் கூறுகிறது (த.நூ.90). மேலும், பலவின்பால் ஈறுகளாக அ, வை, கள் ஆகியவற்றைக் கூறுகிறது (த.நூ.91).

தமிழ்க் காப்பு இயம் பெண்பால் ஈறுகளாக இனிய தமிழ் இலக்கணம் சுட்டும் 'இ' விகுதியோடு 'ஐ' என்னும் விகுதியையும் இணைக்கிறது (த.கா.இ.167). மேலும் 'கள்' விகுதி பலர்பால் பெயர்ச்சொல்லிலும், வினைச்சொல்லிலும் வரும். பலவின்பாலாய் பெயர்ச்சொல்லில் வருமேயன்றி வினைச்சொல்லில் வராது எனவும் தமிழ்க் காப்பு இயம் பதிவு செய்துள்ளது (த.கா.இ.சொல்.26).

பால் காட்டும் ஈறுகளின் மொத்த எண்ணிக்கை

தொல்காப்பியம் பால் காட்டும் ஈறுகளாகப் பதினோரு ஈறுகளைக் குறிப்பிடுகிறது. இக்கருத்தை,

> **இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய**
> **ஈற்றில் நின்றிசைக்கும் பதினோ ரெழுத்தும்**
> **தோற்றம் தாமே வினையொடு வருமே (தொல்.சொல்.10)**

என்னும் நூற்பா விளக்குகிறது.

தமிழ்க் காப்பு இயம் பால் காட்டும் ஈறுகளாகப் பதினாறு ஈறுகளைக் குறிப்பிடுகிறது. அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், து, று, டு, அ, ஆ, வ, கள் உம் ஆகியவை படர்க்கை வினையில் தெளிவாகப் புலப்படும் என்று தமிழ்க்காப்பு இயம் இயம்புகிறது (த.கா.இ.179).

வழு - வளர்ச்சி நிலை

தொல்காப்பியத்தில் வழு

பெயரில் உள்ள பால் உணர்த்தும் சொல்லும், அப்பெயருக்குரிய வினையாக அமையும் வினைச்சொல்லில் அமையும் பாலுணர்த்தும் சொல்லும் ஒத்த நிலையில் அமைதல் வேண்டும். இவ்விரண்டும் மயங்குதல் கூடாது (தொல்.சொல்.11) என்று வழு குறித்துத் தொல்காப்பியம் கூறுகிறது.

தொல்காப்பியம் வழு குறித்துக் கூறுகிறதே தவிர வழுக்கள் இத்துணைத்து என்று வகைப்படுத்தவில்லை. தொல்காப்பியக் கிளவியாக்கத்தில் இடம்பெறும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நேமிநாதமே வழுக்களின் வகைகளைப் பட்டியலிடுகிறது. பால் மயக்கம், திணை மயக்கம், வினா மயக்கம், மரபு மயக்கம், கால மயக்கம், செப்பு மயக்கம், இட மயக்கம் என்று சொல்லப்பட்ட ஏழு மயக்கமும் இல்லாமல் கூற வேண்டும். மயங்கில் வழுவாம் என்று கூறுகிறது (நேமி. 30). நன்னூல் நேமிநாதத்தை அடியொற்றி,

திணையே பாலிடம் பொழுது வினாவிடை
மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே (நன்.375)

என்னும் சூத்திரத்தை அமைத்துள்ளது. இலக்கண விளக்கம் (இ.வி.295), தொன்னூல் விளக்கம் (தொ.வி.127), சுவாமிநாதம் (சு.நா.58:1-2) ஆகியவை நன்னூலைப் பின்பற்றியுள்ளன. இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

வழுயெனல் பிழையாம்; வழா பிழையாமை (இ.த.ஐந்.384)

என்று கூறுகிறது. மேலும், வழுவின் வகைகள் குறித்து முன்னையோர் கூறும் எழு வகைகளுடன் எண் வழுவையும் இணைத்து எண்வகை வழுக்களைக் கூறுகிறது (இ.த.ஐந்.385). தமிழ்நூல், இலகு தமிழ் ஐந்திலக்கணத்தைப் பின்பற்றி எண்வகை வழுக்களைக் கூறியுள்ளது (த.நூ.264 - 265). தென்னூல் பத்துவகை வழுக்களை,

வினைமுதல் பயனிலை யொடுதொடர்ந் திறுவழித்
திணை பால் இடம் பொழுது எச்சம் வேற்றுமை
சுட்டு வினாவிடை உம்மைமுத லாயவை
பொருந்த நடத்தல் வழாநிலை தம்முள்
தழுவா நடையின வழுவாம் (தென்.சொற்.226:1-5)

என்னும் நூற்பாவில் எடுத்துரைக்கிறது.

செப்பு, வினா - வளர்ச்சி நிலைகள்

தொல்காப்பியம் செப்பையும், வினாவையும் இத்துணை வகைப்படும் என்று வகைப்படுத்திக் கூறவில்லை. பின்வந்த நேமிநாதம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களே செப்பையும் வினாவையும் வகைப்படுத்துகின்றன.

விடை வகைகள்

நேமிநாதம் செப்பின் வகைகளை உற்றது உரைத்தல், உறுவது கூறல், ஏவுதல், வினா எதிர் வினாதல் ஆகிய நான்கு வகைகளாகக் கூறுகிறது. இவை நான்கும் உடன்படுதலும், மறுத்தலுமே ஆயினும் வினாவிற்கு இறைபட வருதலால் வழு அன்று என நேமிநாதம் பகர்கிறது. இக்கருத்தை,

> **ஓதும் எதிர்வினா உற்ற துரைத்தலும்**
> **ஏவல் உறுவதுகூற் றிந்நான்கும் - பேதாய்**
> **மறுத்தல் உடன்படுதல் அன்றெனினும் மன்ற**
> **இறுத்தலே போலும் இவை (நேமி.31)**

என்னும் சூத்திரம் நன்கு விளக்கும்.

நன்னூல், நேமிநாதம் குறிப்பிடும் நான்கு வகை விடைகளோடு சுட்டு, மறை, நேர், இனமொழி ஆகிய நான்கினையும் சேர்த்து எண்வகையாக விடைகளைச் சுட்டுகிறது (நன்.386). எண்வகை விடைகளுள் முதல் மூன்றும் வெளிப்படையாக விடை தருவன. இறுதி ஐந்தும் குறிப்பாகப் பொருள் தருவன என்று நன்னூல் விளக்குகிறது.

இளம்பூரணர் விடை கூறும் முறை குறித்து ஏவல், வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல் எனும் நான்கினோடு மறுத்தல், உடம்படுதல் ஆகிய இரண்டையும் இணைத்து அறுவகையாகக் கூறுகிறார்[21]. இத்தகைய இளம்பூரணர் கருத்தையே நன்னூலார் சூத்திரமாக ஆக்கியுள்ளமை குறிக்கத்தக்கது. இது 11-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மொழி வளர்ச்சியாகும்.

சேனாவரையர் செப்பை, செவ்வன் இறை, இறை பயப்பது என்று இருவகைப்படுத்துகிறார். உயிர் எத்தன்மைத்து என்ற வழி உணர்தல் தன்மைத்து என்று கூறுவது இளம்பூரணர் கூறும் அறுவகை செப்பிலும் அடங்காது என்பது சேனாவரையர் தம் கருத்து[22]. நச்சினார்க்கினியர் சேனாவரையரைப் பின்பற்றியுள்ளார்[23].

தெய்வச் சிலையார் நான்கு வகைச் செப்பைக் கூறுகிறார். துணிந்து கூறல், கூறு இட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாமை என்பன[24].

கல்லாடனார் செப்பை மறுத்தலும், உடன்படுதலும் என இருவகைப்படுத்துகிறார்[25].

இவ்வாறு செப்பின் வகைகளைக் கூறுவதில் உரையாசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகிறது.

வினவிய பொருளை அறிவுறுப்பது செப்பு என விளக்கும் இலக்கண விளக்கம் சேனாவரையரைப் பின்பற்றி செப்பை செவ்வன் இறை, இறை பயப்பது என இருவகைப்படுத்துகிறது. மேலும், வினா எதிர் வினாதல், ஏவல், மறுத்தல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், நேர்தல், சொற்றொகுத்து இறுத்தல் என இறை பயப்பது ஏழு திறனுடைத்து என விளக்கம் அளிக்கிறது (இ.வி.308).

நன்னூல் போன்று செவ்வன் இறையில் அடங்கும் விடை வகைகளை இலக்கண விளக்கம் தனியாகக் குறிப்பிடவில்லை.

சுவாமிநாதம் செப்பின் வகைகளைக் கூறுவதில் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றியுள்ளமையை,

செறிவினாப்பொரு ளை அறிவுறுப் பதுசெப்பு; அதுவே
செவ்வன் இறை இறைபயப்பாம்; அவற்றின் இறைபயப்பே
உறுவது, (உ)ற் றீரவினா, ஏவல், மறுத் திடலே
உடன்படல், சொற்றொகுத்து இறுத்தல் ஏழெனச் சான்றெனவே

(சு.நா.60:5-8)

என்னும் நூற்பா விளக்கும்.

இனிய தமிழ் இலக்கணம் விடை வகைகளை நூற்பா வடிவில் கூறவில்லை எனினும் வழுவமைதி பற்றிப் பேசுமிடத்து உரையில் எண்வகை விடைகளைச் சுட்டுகிறது. இந்த விடைகள் நன்னூல் குறிப்பிடும் எண்வகை விடைகளாகும் (இ.த.இ.176). இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

விடையெனல் வினவப் பதிலுரை கூறலாம் (இ.த.ஐந்.691)

என்று விடைக்கு விளக்கம் தருவதுடன் நன்னூலைப் பின்பற்றி எண்வகை விடைகளைக் கூறுகிறது. எண்வகை விடைகளுக்கும் தனித்தனி நூற்பாக்களில் விளக்கம் அளித்துள்ளமை இலகு தமிழ் ஐந்திலக்கணத்தின் சிறப்பாகும் (இ.த.ஐந்.692-699). சான்றாக சுட்டு விடையை விளக்க,

சுட்டிக் காட்டிப் பகர்வினை யெல்லாம்
சுட்டுவினை யெனச் சொலப்படும் தமிழில்

‘இதுவா? அதுவா எனக்கு?’ எனல் விளக்கம் (இ.த.ஐந்.693)

என்று கூறுகிறது. மேலும், செவ்வன் இறை குறித்து,

செவ்வன் இறையெனல் நேரிய விடையே (இ.த.ஐந்.700:3)

என்றும், இறை பயப்பன குறித்து,

வினாவின் குறிப்பு விடையெலாம் இவையே (இ.த.ஐந்.701:4)

என்றும் விளக்கம் தருகிறது.

தென்னூல் செப்பு, வினா குறித்து,‘மொழி வடிவாக வெளிப்படும் மக்களின் கருத்து செப்பும், வினாவுமாகவே வெளிப்படுதலின் இருவகை வழக்கின் கண்ணும் அவற்றை வழுவாமல் பேணிக் கொள்க என்று கூறுவர் புலவர்’ என்று விளக்குகிறது (தென்.சொற்.237). மேலும் செப்பின் வகைகளாக சேனாவரையரின் செவ்வன் இறை, இறை பயப்பது ஆகிய இரு வகைகளைச் சுட்டுகிறது தென்னூல் (தென்.சொற்.239).

வினா வகைகள்

அவிநயம் வினா வகைகள் குறித்து,

அறியான் வினாதல் அறிவொப்புக் காண்டல்
ஐயமறுத்தல் அவனறிவு தான் கோடல்
மெய்யவற்குக் காட்டலொடு ஐவகை வினாவே (அவி.38)

என்று குறிப்பிடுகிறது. நேமிநாதம் அவிநய நூற்பாவை மேற்கோளாகக் காட்டியுள்ளது. மற்றபடி நேமிநாதத்தில் வினா குறித்த நூற்பா தனியாக இடம்பெறவில்லை.

நன்னூல் அறுவகை வினாக்களைச் சுட்டுகிறது. அவை அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்பனவாகும் (நன்.385).

இளம்பூரணர் நேமிநாதம் குறிப்பிடும் ஐவகை வினாக்களையே சுட்டுகிறார்[26].

சேனாவரையர் இளம்பூரணர் கூறும் அறியான் வினா, ஐயவினா ஆகியவற்றோடு அறிபொருள் வினா என்ற ஒன்றைச் சேர்த்து மூவகை வினாக்களைச் சுட்டுகிறார். ‘‘உரையாசிரியர் அறிபொருள் வினாவை அறிவு ஒப்புக் காண்டலும், அவன் அறிவு தான் காண்டலும், மெய் அவற்குக் காட்டலும் என விரித்து ஏனைய கூட்டி ஐந்து

என்றார்''[27] என்பதன் மூலம் இளம்பூரணர் கூறும் அறிவு ஒப்புக் காண்டல், அவனறிவு தான் கோடல், மெய்யவற்குக் காட்டல் என்பவற்றை அறிபொருள் வினாவில் அடக்கி விடுகிறார் சேனாவரையர் என்பது புலப்படும்.

நச்சினார்க்கினியர் சேனாவரையரையும், கல்லாடனார் இளம்பூரணரையும் பின்பற்றி வினாக்களை வகைப்படுத்தியுள்ளனர். தெய்வச் சிலையார் வினாவகைகளைக் கூறவில்லை. ஒருவர் உரை என அழைக்கப்படும் பெயர் தெரியாத ஒருவரது உரையில் வினா ஐவகைப்படும் என்ற இளம்பூரணரின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இலக்கண விளக்கம் நன்னூல் கூறும் அறுவகை வினாக்களை வழி மொழிகிறது. வினா என்பது அறியல் உறவு வெளிப்படுப்பது. அது அறியாமை, ஐயம், அறிவு, கொடை, கொளல், ஏவல் என வரும் இருமூன்றாகும் என்கிறது இலக்கண விளக்கம் (இ.வி.305).

சுவாமிநாதம், அறியாத பொருளைத் தெரிவிப்பது வினா. அது அறியாமையாலும், ஐயத்தாலும் எழும். அது அறிபொருள் வினா, கொடை வினா, கொளல் வினா, ஏவுதல் வினா என நான்கு வகைப்படும் என இயம்புகிறது (சு.நா.60). இந்நான்கு வினாக்களும் அறியாமையாலும், ஐயத்தாலும் எழும் எனச் சுட்டுவதால் நன்னூல் குறிப்பிடும் அறியா வினா, ஐய வினா ஆகியவற்றைச் சுவாமிநாதம் குறிப்பிடவில்லை.

இனிய தமிழ் இலக்கண ஆசிரியர் தம் உரையில் நன்னூல் குறிப்பிடும் அறுவகை வினாக்களையே குறிப்பிட்டுள்ளார் (இ.த.இ.ப.234).

இலகு தமிழ் ஐந்திலக்கணம் வினா-விடை இயல் என்று தனி இயல் அமைத்து வினா விடைகளைச் சுட்டுகிறது. நன்னூல் குறிப்பிடும் அறுவகை வினாக்களைப் பின்பற்றியுள்ளது (இ.த.ஐந்.684). ஒவ்வொரு வினாவையும் தனித்தனி நூற்பாவில் விளக்கியுள்ளது (இ.த.ஐந்.685 - 690). அறிவினா குறித்து,

தானறியொரு பொருள் பிறர் அறிவராவெனத்
தானறிந்திடத்தான் தொடுவினா அறிவினா (இ.த.ஐந்.685)

என்று விளக்குகிறது. இதே போன்று ஒவ்வொரு வினா வகைக்கும் உரிய விளக்கத்தை நூற்பாவில் தந்துள்ளது.

தென்னூல் ஐவகை வினாக்களைக் கூறுகிறது. ஐயம், அறியாமை ஆகியவை காரணமாக எழும் வினா பிறருக்கு இது தெரியுமோ என அறிதற்கும், தெரிவிப்பதற்கும்,

ஒரு பொருளைப் பெறுதற்கும், கொடுத்தற்கும் வரும் என்று கூறுகிறது. மேலும், சினத்தின் கண் எழும் வினாவும் அதுவே என்று தென்னூல் இயம்புகிறது (தென்.சொற்.238).

செப்பு, வினாக்களில் சினை, முதற் சொற்கள்

தென்னூல், முதலும் சினையும் பற்றி ஒப்பிட்டும், உறழ்ந்தும் கூறும் வினா விடைக் கண் உயர்வு நவிற்சி, உருவகம் முதலாய அணிநயம் பொருந்தப் பேசும் செய்யுள் வழக்கின் கண் முதலும், சினையும் பிறழப் பேசுதலும், திணை, பால் பிறழப் பேசுதலும் வழா நிலையாம். உரை வழக்கின் கண் அங்ஙனம் பேசுதல் வழுவமைதியாம் என்று கூறுகிறது (தென்.சொற்.240).

தொல்காப்பியம் செய்யுளில் வினா விடைக்கண் முதலும் சினையும் பிறழ வரும் எனச் சுட்டவில்லை. தென்னூல் அவ்வாறு சுட்டுவதன் மூலம் தொல்காப்பியத்தோடு மாறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளமை புலனாகும். எனினும் சேனாவரையர் அணிஇயலுள் இவ்வாறு பிறழ வரும் என்று கூறிய கருத்தையே தென்னூல் பதிவு செய்துள்ளது.

தமிழ்நூல் தென்னூலைப் பின்பற்றி,

உருவகம் உவமையில் முதல் சினை திணைபால் முரண் (த.நூ.275)

என்று குறிப்பிடுகிறது.

வழக்கு - மரபு வளர்ச்சி

தொல்காப்பியம் தகுதி பற்றியும், வழக்கு பற்றியும் நடக்கும் இலக்கணத்தில் உரிய சொல்லுக்குச் சார்பாக வேறொரு சொல் பயன்படுத்தப்படும். அச்சொல் நீக்கப்படாது ஏற்றுக்கொள்ளப்படும் என உரைக்கிறது (தொல்.சொல்.17). இயல்பு வழக்கு, தகுதி வழக்கின் வகைகளைத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. நன்னூலே வழக்கின் வகைகளைப் பாகுபடுத்தியுள்ளது.

தகுதி வழக்கு இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்பன. இயல்பு வழக்கு இலக்கண முடையது, இலக்கணப் போலி, மரூஉ என்பன (நன்.267) என்று இயல்பு வழக்கு, தகுதி வழக்கு இரண்டும் மும்மூன்று வகைப்படும் என நன்னூல் பாகுபடுத்துகிறது.

இலக்கண விளக்கம் (இ.வி.168), முத்துவீரியம் (மு.வீ.பெயர்.15-17) சுவாமிநாதம் (சு.நா.36), இனிய தமிழ் இலக்கணம் (இ.த.இ.177), தமிழ்நூல் (த.நூ.262), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.308), ஆகியன நன்னூலைப் பின்பற்றி இயல்பு வழக்கு, தகுதி வழக்கின் வகைகளைப் பாகுபடுத்தியுள்ளன. இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது. அறுவகை இலக்கணம் மரூஉ குறித்து மட்டும் விளக்கியுள்ளது (அ.இ.251). இனிய தமிழ் இலக்கணம் நன்னூலை அடியொற்றி வழக்கின் வகைகளைப் பாகுபடுத்திய போதும் இவையெல்லாம் உலக வழக்கு மட்டுமே. செய்யுளில் செஞ்சொற்கள் மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதை,

> **இவையெல்லாம் உலக வழக்கென் றறிக;**
> **கவிஞர் செஞ்சொல் செய்யுள் வழக்காம் (இ.த.இ.177:6-7)**

என்று கூறுகிறது.

தமிழ்க் காப்பு இயம் இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்பதனோடு தமிழோடு பொருந்தி வரும் திசைச்சொற்களும் தமிழ் மொழிக்கண் பொருள் தர வருதல் ஏற்றுக் கொள்ளப்படும் என்கிறது (த.கா.இ.308).

வழக்கை வகைப்படுத்துவதில் முன்னைய இலக்கணிகளின் கருத்துகளிலிருந்து சற்றே மாறுபடுகிறது தென்னூல். இயல்பு வழக்கு, தகுதி வழக்கு எனும் பகுப்பு முறைகள் தென்னூலில் காணப்படவில்லை. மாறாக, ஐவகைக் குறிப்பு மொழிகளைக் குறிப்பிடுகிறது தென்னூல். அவை, i) ஒன்றனை மறைத்து மங்கல மரபான் கூறப்படும் சொற்களும், ii) வட்டார வழக்காக நிகழும் குழூஉக் குறிச்சொற்களும், iii) பழமொழிப் பாங்கில் பிசி போல உருவகமாகி வரும் கிளவிகளும், iv) சொற்பொருளின் இணைப்பான் உணர்த்தி வரும் சொற்களும், v) மந்திரப் பொருள் மயக்காக வரும் சொற்களும் ஆகியவை அணி இலக்கண முறைமையான் துணியப்படும் பொருளுணர்த்தும் குறிப்பு மொழிகளாம் என்று தென்னூல் விளக்குகிறது (தென். சொற்.265).

திணை, பால் ஐயம் - மரபு வளர்ச்சி

திணை ஐயம் தோன்றிய வழி அப்பொருளுக்கு ஓர் உருவம் சொல்லக் கருதுதல், அ∴றிணையில் ஒன்றோ, பலவோ எனப் பால் கூறக் கருதுதல் ஆகிய இரண்டு இடங்களிலும் ஐயம் தோன்றிய வழி அதற்குரிய பொதுச்சொல்லால் குறிப்பிட வேண்டும் என்கிறது தொல்காப்பியம் (தொல்.சொல்.24). திணை, பால் ஐயம் தோன்றிய பொருளை உருவு என்ற சொல்லால் குறிக்க வேண்டும் எனத் தொல்காப்பியம்

குறிப்பிடுகிறது. உயர்திணை, அ.்.றிணை ஆகிய இரண்டிலுமே ஐயம் தோன்றிய வழி ‘உருவு’ எனக் குறிப்பிட வேண்டும் என்பதே தொல்காப்பியர் கருத்து. தமிழ்நூலோ அ.்.றிணையிடத்து ‘உரு’ என்பதும் உயர்திணையிடத்து ‘ஆர்’ என்னும் இறுதியும் ஒட்டி வரும் என்கிறது. (த.நூ.272). (அங்கு தெரிவார் ஆணா? பெண்ணா?) இது மரபு வளர்ச்சியாகும்.

வண்ணச் சினைச்சொல் - மரபு வளர்ச்சி

அடை, சினை, முதல் மூன்றும் மயங்காமல் வருவது வண்ணச் சினைச்சொல் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அவிநயம், முதலோடு குணம் இரண்டு அடுக்கி வருவது வழக்கியல் என்றும், சினையோடு குணம் இரண்டு அடுக்குதல் செய்யுளில் வரும் என்றும் கூறுகிறது. (அவி.23)

நேமிநாத உரையாசிரியரும் இவ்அவிநய நூற்பாவைத் தம் உரையில் மேற்கோள் காட்டியுள்ளார் (நேமி.12.உரை). நன்னூல் தொல்காப்பியர் கருத்தையும், அவிநயத்தின் கருத்தையும் இணைத்துக் கூறியுள்ளது.

அடை சினை முதன் முறை அடைதலும் ஈரடை
முதலோடு ஆதலும் வழக்கியல் ஈரடை
சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே (நன்.403)

என்று கூறுவதன் மூலம் அடை, சினை, முதல் மாறி வருவதையும் நன்னூல் பதிவு செய்துள்ளமை புலனாகும். இலக்கண விளக்கம் (இ.வி.314), தொன்னூல் விளக்கம் (தொ.வி.93) ஆகியன நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன. சுவாமிநாதமும் நன்னூலைப் பின்பற்றியுள்ளது (சு.நா.62).

இலகு தமிழ் ஐந்திலக்கணம், வண்ணச் சினைச்சொல் என்று தனியாகக் குறிப்பிடவில்லை. ஓர் அடைமொழி சினையொடு வரின் ஓரடைமொழி சினையொடு வருதல் எனவாம் என்றும், இரண்டு அடை மொழிகள் முதலோடு வரின் ஈரடை மொழி முதலொடு வருதல் எனவாம் என்றும் கூறுகிறது (இ.த.ஐந்.318,319).

தென்னூல், முன்னைய இலக்கணிகளின் கருத்துகளின் அடிப்படையில் அடை, சினை, முதல் ஆகிய மூன்றும் ஒருங்கு வருமிடத்து முதலுக்குரிய அடை சினையொடு மயங்கி வாரா என்றும் செய்யுட்கண் பொருள்கோள் நெறியான் மயங்கியும் வரும் என்றும் பகர்கிறது (தென்.249). மேலும், அடையும் சினையும் பலவாக அடுக்கி வரின் அவை ஒவ்வொன்றும் இறுதி நிற்கும் அவற்றின் முதலொடு சென்று முடியும் என்ற

கருத்தையும் தென்னூல் பதிவு செய்துள்ளது (தென்.சொற்.250). தமிழ்நூல் சினைக்கும், முதலுக்கும் ஓரடை செறிதல் வழக்கு என்றும், அவற்றிற்கு இரண்டு அடை பொருந்துதல் செய்யுளுக்கு உரியது எனவும் கூறுகிறது (த.நூ.304).

வழுவமைதி

திணை, பால் வழுவமைதி - வளர்ச்சி நிலை

தொல்காப்பியம், உயர்வின் காரணமாகப் பாலும், திணையும் மயங்கும் என்று குறிப்பிடுகிறது (தொல்.சொல்.27). அவிநயம் உவப்பு, உயர்வு, இழிவு, சிறப்பு ஆகிய நான்கின் காரணமாகவும் பாலும், திணையும் மயங்கும் என்று கூறுகிறது (அவி.22). இது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத் தக்கது.

நேமிநாதம் அவிநயத்தைப் பின்பற்றியுள்ளது (நேமி.35).

நன்னூல், நேமிநாதம் கூறுவனவற்றோடு செறல் என்பதையும் சேர்த்து ஐவகைக் காரணங்களால் திணை, பால் மயங்கும் என்று கூறுவதை,

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே. (நன்.379)

என்னும் சூத்திரம் விளக்கும்.

இலக்கண விளக்கம், நன்னூல் கூறும் ஐவகைக் காரணங்களோடு 'சொன்னோக்கு' என்பதையும் சேர்த்து அறுவகைக் காரணங்களால் திணை, பால் மயங்கும் என்று கூறுகிறது (இ.வி.299).

சுவாமிநாதம் இலக்கண விளக்கத்தையும் (சு.நா.58), இனிய தமிழ் இலக்கணம் நன்னூலையும் (இ.த.இ.176) பின்பற்றியுள்ளன.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஒவ்வொரு வழுவமைதிகளையும் தனித்தனி நூற்பாவில் விளக்கியுள்ளது. திணை வழுவமைதி குறித்து உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டில் ஒன்றினில் இணைந்து சிறப்பு, மிகுதி, இழிவு, உவகை, உயர்வு, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைவது திணை வழுவமைதி என்கிறது (இ.த.ஐந்.388). பால் வழுவமைதி குறித்து சிறப்பு, மகிழ்ச்சி, உயர்வு, அழிவு, சினம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைகின்ற வழு பால் வழுவமைதியாகும் எனக் குறிப்பிடுகின்றது. (இ.த.ஐந்.389)

தென்னூல், நன்னூல் கூறும் உவப்பு, இகழ்வு, சிறப்பு, வெகுளி ஆகிய நான்கினோடு ‘எண்ணுதல்’ என்ற ஒன்றைச் சேர்த்து ஐவகைக் காரணங்களால் திணை, பால் வழு அமையும் என்று கூறுகிறது (தென்.சொற்.228). முன்னையோர் கூறும் உயர்வு தென்னூலில் இடம்பெறவில்லை.

தமிழ்நூல் திணை, பால் வழுக்களுக்கான காரணங்களைத் தனித்தனியே கூறவில்லை. எனினும் மிகுந்தெழும் மாந்தரின் உணர்வெழுச்சியால் திணையும், பாலும் மயங்கும் என்று கூறுகிறது (த.நூ.276).

திணை, பால் வழுவமைதி குறித்த பிற மரபு வளர்ச்சிகள்

உயர்திணை, அ.்.றிணை இணைந்து வரும் போது பெறும் முடிபு

நன்னூல் திணை வழுவமைதி குறித்துப் பேசுமிடத்து, உயர்திணை எழுவாயைச் சார்ந்து வருகின்ற அ.்.றிணைப் பொருளாதி ஆறும் அவ்வுயர்திணையோடு சார்த்திக் கூறின் அவ்வுயர்திணை முடிபைப் பெறும் என்னும் கருத்தைப் பதிவு செய்துள்ளது (நன்.377). இக்கருத்தைத் தமிழ்நூல் ஏற்றுக் கொண்டுள்ளது (த.நூ.278).

திணைகளும், பால்களும் ஒரு தொடரில் விரவி வருதல்

திணை, பால் வழுவமைதி குறித்து மேலும் ஒரு கருத்தாக நன்னூல், திணைகளும், பால்களும் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்களும் ஒன்றோடொன்று கலந்து ஒரு தொடராக வருமாயின் அவை சிறப்பின் காரணமாகவும், இழிவு காரணமாகவும் ஒரு முடிவைப் பெறும் என்று கூறுகிறது (நன்.378).

இக்கருத்தைச் சுவாமிநாதம் (சு.நா.58), தமிழ்நூல் (த.நூ.274) ஆகியவை பின்பற்றியுள்ளன.

வழுவமைதி - விளக்கம்

இனிய தமிழ் இலக்கணம் வழுவமைதிக்கு விளக்கம் தருகிறது. புலவர்களால் ஒப்புக் கொள்ளப்படும் வழு வழுவமைதியாகும் என்றும், அவை திணை, பால், எண், இடம், காலம், வினா, விடை, இனங்கினம் என எண் வகைப்படும் என்று கூறுகிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணமும் வழுவமைதிக்கான விளக்கத்தைக் கூறுவதுடன் அதனை அறுவகைப்படுத்துகிறது. இதனை,

வழுவமைந் திட்டும் வழுவிலா தேற்றல்

வழுவமைதியாய் நாம் கொள்வோம்; அவையோ

திணை பால் எண், இடம் காலம் மரபு ஆம். (இ.த.ஐந்.387)

என்னும் நூற்பா உணர்த்துகிறது.

தென்னூலும் முன்னையோர் கருத்தைப் பின்பற்றி வழுவமைதிக்கு விளக்கம் தந்துள்ளது. வழக்கிலும், மரபினும் பயின்று சான்றோர் வழக்காக வருவன வழுவமைதியாகும் (தென்.சொற்.226) என்றும், இலக்கண முறைமையான் வரையறைப் படாதனவும், அயல்மொழி வழக்குப் பற்றி நடப்பனவும் வழுவென நீக்கார் மொழியது பண்பினை உணர்வோர் என்றும் வழுவமைதிக்கு மற்றுமொரு விளக்கத்தையும் தந்துள்ளது தென்னூல் (தென்.சொற்.227).

தொன்னூல் விளக்கம் அணியின் கண் திணையும், சினை முதல்களும் மயங்கி வரினும் வழுவமைதியாக ஏற்றுக் கொள்வர் என்னும் கருத்தைப் பதிவு செய்துள்ளது (தொ.வி.129). இதே கருத்தைத் தமிழ்நூல் இலக்கியத்தில் அணிநயம் நோக்கி அஃறிணைப் பொருளையும் உயர்திணை போலக் கருதுவர் என்று கூறியுள்ளது (த.நூ.273).

எண், இட, கால, மரபு வழுவமைதிகள்

எண், இட, கால வழுவமைதிகள் குறித்துத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. நன்னூல் அவற்றிற்கான சூத்திரங்களை அமைத்துள்ளது.

எண் இட வழுவமைதி

ஒருமைப்பாலில் பன்மைப்பாற் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், மூவிடங்களில் ஒன்றற்குரிய சொல்லில் பிற இடங்களுக்குரிய சொற்களையும் தழுவிக் கூறுதலும் உண்டு. அவை வழுவமைதியாகக் கொள்ளப்படும் என்று எண், இட வழுவமைதி குறித்து நன்னூல் கூறுகிறது (நன்.380).

தொன்னூல் விளக்கம் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (தொ.வி.81). சுவாமிநாதம் நன்னூலைப் பின்பற்றி,

ஒருமைபன்மை யாய் பன்மை ஒருமையாய் உழற்வாம்
ஓரிடமே பலவிடமுந் தழுவல்வழு விலவாந் (சு.நா.59:1-2)

என்று கூறுகிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் எண், இட வழுவமைதி குறித்து நன்னூலைப் பின்பற்றியுள்ளது. எனினும் இவற்றிற்கான நூற்பாக்களைத் தனித்தனியே அமைத்துள்ளது. எண் வழுவமைதி குறித்து,

சிலசொற் பன்மையில் ஒருமை ஏற்றிடும்
சிலஒருமைச் சொல் உயர்வினைக் கருதி
பன்மையில் இயங்கிடும். (இ.த.ஐந்.390:1-3)

என்றும்,

இட வழுவமைதி குறித்து,

மூவிடம் தன்னில் ஓரிடம் பிறஇட
முடிவை ஏற்றிடின் இடவழு வமைதியாம். (இ.த.ஐந்.391:1-2)

என்றும் விளக்குகிறது.

தமிணூல் எண், இட வழுவமைதி குறித்து,

எண்ணும் இடமும் வழுவலும் ஆகும் (த.நூ.277)

என்று குறிப்பிடுகிறது.

கால வழுவமைதி

இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் காலம் மூவகைப்படும் என்று கூறும் நன்னூல், கால வழுவமைதி குறித்து,

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே (நன்.383)

என்கிறது. மூன்று காலங்களிலும் தமது தொழில் இடையறாது ஒரு தன்மையாய் நிகழும் பொருள்களை நிகழ்காலத்தால் கூறுவர் என்று குறிப்பிடுகிறது.

மேலும் விரைவு காரணமாகவும், மிகுதி காரணமாகவும், தெளிவு காரணமாகவும் இயல்பாகவும் மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாகக் கூறப்படுதலும் உண்டு. (நன்.384) என்னும் கருத்தையும் பதிவு செய்துள்ளது.

நன்னூலைப் பின்பற்றி இலக்கண விளக்கமும் காலம் மூவகைப்படும் என்றும் (இ.வி.302), முக்காலத்திலும் ஒத்து இயங்கும் பொருள்களை நிகழ்காலத்தில் கூறுவர்

என்றும் (இ.வி.303), மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாகக் கூறப்படும் பொழுது விரைவு, மிகுதி இயல்பு, தெளிவு ஆகிய காரணங்களால் கூறப்படும் என்றும் (இ.வி.304) இயம்புகிறது.

சுவாமிநாதம் கால வழுவமைதி குறித்து நன்னூல் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு பின்வரும் கருத்துக்களைக் கூறியுள்ளது. இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் காலங்கள் மூன்று; மூன்று காலத்திலும் ஒரே தன்மையவாகத் தழுவிச் செல்லும் பொருள்களை நிகழ்காலத்தினால் சொல்லுவர்; பொருளினது புடைப்பெயர்ச்சி நிகழ்காலம் என்று கூறுவர். விரைவினாலும், இயல்பினாலும், மிகுதியினாலும், பிற காரணங்களாலும் மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாகச் சொல்லப் பெறும் (சு.நா.59) என்று விளக்குகிறது.

முன்னைய இலக்கணிகளின் கருத்துக்களைப் பின்பற்றி இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

எக்காலத்திலும் இலங்கிடு பொருளை
இக்காலத்தினில் துலக்கிடின் கால
வழுவமைதியென வழங்குவம்; இ∴தோ
விரைவு மிகுதி தெளிவியற் படியே (இ.த.ஐந்.392:1-4)

என்று செப்புகிறது.

தென்னூல் கால வழுவமைதி குறித்து விரைவுணர்வு காரணமாகச் செப்பு நிகழ்த்துமிடத்தும், இயற்கையும் தெளிவும் கருதிய விடத்தும், எதிர்கால நிகழ்காலத் தொழில்களை இறந்த காலச் சொல்லால் சொல்லுதல் வழுவமைதியாகும் என்று கூறுகிறது. கால வழு ஏற்படக் காரணங்களாக விரைவு, இயற்கை, தெளிவு ஆகிய மூன்றைக் குறிப்பிடுகிறது தென்னூல். நன்னூல் குறிப்பிடும் மிகுதி இதில் இடம்பெறவில்லை (தென்.சொற்.233).

தமிணூல், ஒரு செயல் உற்ற கால அளவை எல்லையிட்டுக் காட்டுகின்ற நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் எனக் காலம் மூன்று வகையாகும் என்று தமிணூல் குறிப்பிடுகிறது (த.நூ.56). மேலும் கால வழுவமைதி குறித்த நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த.நூ.281). மேலும், கால வழு ஏற்படக் காரணமாக,

விரைவு பற்றிக் காலம் தவறும் (த.நூ.280)

என்று உரைக்கிறது. நன்னூல் குறிப்பிடும் தெளிவு, இயல்பு போன்றவற்றைத் தமிழ்நூல் சுட்டவில்லை.

மரபு வழுவமைதி

மரபு வழுவமைதி குறித்து இலகு தமிழ் ஐந்திலக்கணமும் தென்னூலும் விளக்கியுள்ளன. இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

பினர் உரு மரபோ வழுவமைதியெனவாம் (இ.த.ஐந்.398:4)

என்று குறிக்கிறது.

தென்னூல், ஆண் பாலுக்கே உரியவாகவும், பெண் பாலுக்கே உரியவாகவும் வரும் பெயரும், தொழிலும் மயங்கி வரின் வழுவாம். சிறப்புக் காரணமாக ஒரோ வழி அவை திரியின் மரபு வழுவமைதியாகும் (தென்.சொற்.230) என்று குறிப்பிடுகிறது.

இயற்பெயரும், சுட்டுப்பெயரும் அமையும் முறை - மரபு வளர்ச்சி

முடிக்கும் சொல் வினைச்சொல்லாக இருப்பின் இயற்பெயருக்குப் பின் சுட்டுப்பெயர் வர வேண்டும் என்னும் தொல்காப்பியக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் நன்னூல் அதனோடு மற்றொரு கருத்தையும் பதிவு செய்துள்ளது. அதாவது, முடிக்கும் சொல் வினைச்சொல் இல்லையென்றால் சுட்டுப் பெயர் மூவகை பெயர்க்கு முன்னும் பின்னும் வரும். இம்மரபு உலக வழக்கிற்கு உரியது என்று நன்னூல் கூறுகிறது (நன்.394). தமிணூலும் இக்கருத்தைப் பதிவு செய்துள்ளது (த.நூ.294). மேலும், செய்யுளில் சுட்டுப்பெயர் இயற்பெயர்க்கு முன் வரும் என்பது தொல்காப்பியர் கருத்து. ஆனால் நன்னூல், செய்யுளில் சுட்டுப்பெயர் முன்வரும் என்று கூறாமல் ஏற்ற இடத்தில் வரும் என்று கூறுகிறது (நன்.394). இதனால் செய்யுளில் சுட்டுப்பெயர் இயற்பெயருக்கு முன்னும் வரும், பின்னும் வரும் என்பது நன்னூல் கருத்தாகும். இலக்கண விளக்கம் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ.வி.316).

உயர்திணை, பால்கள் அ·றிணை முடிபு பெறல்

தொல்காப்பியம், குடிமை, ஆண்மை எனத் தொடங்கி பதினெட்டு சொற்களைக் கூறி அவை உயர்திணைக்கே உரியன ஆயினும் அ·றிணை முடிபு பெறும் என்கிறது (தொல்.சொல்.56). அதே போல், காலம், உலகம் எனத் தொடங்கி பத்து சொற்களைக் கூறி அவை உயர்திணைப் பால்களுக்குரியவை எனினும் அ·றிணைப் பாலாகவே கூறப்பெறும் என்கிறது (தொல்.சொல்.57).

நன்னூல் இவ்வாறு உயர்திணை, பால் சொற்கள் அ:்றிணை முடிபு பெறுவதை பட்டியலிடவில்லை. எனினும், இவ்வாறு உயர்திணைக்குரிய திணையும், பாலும் மயங்கி வருவதற்கான காரணங்களைக் கூறியுள்ளது. அவ்வகையில் மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, செறல், இழிப்பு ஆகிய ஐந்தின் காரணமாகப் பாலும், திணையும் மயங்கி வரும் என்று உரைக்கிறது (நன்.379). இலக்கண விளக்கம் நன்னூல் கூறும் ஐந்தனோடு சொல்நோக்கு என்பதனையும் இணைத்து இவற்றின் காரணமாகத் திணையும், பாலும் மயங்கும் என்கிறது (இ.வி.299). தென்னூல், நன்னூலைப் பின்பற்றியுள்ளது (தென். சொற்.228).

பன்மை சுட்டிய பெயர்கள் முடிவு பெறுதல் - மரபு வளர்ச்சி

தொல்காப்பியம் பன்மை சுட்டிய சினை நிலைக் கிளவியை மட்டுமே ஒருமையிலோ, பன்மையிலோ முடியும் எனக் கூறுகிறது. தென்னூல் அவற்றோடு ஐம்பூதங்களின் பெயர்கள், தெய்வம் சுட்டிய பெயர், தொகுதிப் பெயர் ஆகியவையும் ஒருமையாலும், பன்மையாலும் முடியும் (தென். சொற்.229) எனக் கூறுவது மரபு வளர்ச்சியாகும்.

மரபு வீழ்ச்சி

திணையை முதன்மைப்படுத்தி சொல்லை விளக்கும் தொல்காப்பிய முறையை வேறெந்த இலக்கண நூலும் பின்பற்றவில்லை. அவிநயத்திலும், அறுவகை இலக்கணத்திலும் திணைப்பகுப்பு இடம்பெறவில்லை.

தொன்னூல் விளக்கத்தில் பால்பகுப்பு கூறப்படவில்லை.அறுவகை இலக்கணத்தில் பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய பால்பகுப்பு முறைகள் பேசப்படவில்லை. நேமிநாதம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவியும், தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும் பெறும் பால் முடிபு பேசப்படவில்லை.நன்னூலில் தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவி பெறும் பால் முடிபு சுட்டப்படவில்லை.இலகு தமிழ் ஐந்திலக்கணத்தில் ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி குறித்துக் கூறப்படவில்லை.

நேமிநாதத்தில் தொல்காப்பியம் பலர்பாலுக்குக் குறிப்பிடும் ‘மார்’ விகுதி இடம் பெறவில்லை. இலகு தமிழ் ஐந்திலக்கணத்தில் தொல்காப்பியம் குறிப்பிடும் று, டு விகுதிகள் இடம்பெறவில்லை. தமிழ்நூலில் தொல்காப்பியம் குறிப்பிடும் ‘டு’ இடம்பெறவில்லை. அவிநயம், நன்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து,

தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியவற்றில் பால் காட்டும் ஈறுகள் குறிக்கப் பெறவில்லை. தொல்காப்பியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் பால் காட்டும் ஈறுகளின் மொத்த எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை.

இலக்கணக்கொத்து ஆசிரியர் வழு குறித்துப் பிற இலக்கண நூலார் கூறியுள்ளமையால் தான் கூறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் (இ.கொ.110). அவிநயம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், தமிழ்க் காப்பு இயம் ஆகிய நூல்களில் வழு பற்றிய செய்திகள் கூறப்படவில்லை.

அவிநயத்தில் விடை குறித்த நூற்பா கிடைக்கப் பெற்றில. செப்பையும், வினாவையும் வழுவாமல் போற்ற வேண்டும் என்னும் தொல்காப்பியக் கருத்து தென்னூல், தமிழ்நூல் தவிர்ந்த பிற நூல்களில் இடம்பெறவில்லை. தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் போன்றவற்றில் செப்பு, வினா வகைகள் கூறப்பெறவில்லை.வினாவே விடையாகவும் வரும் என்னும் கருத்தைத் தமிழ்நூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் பதிவு செய்யவில்லை. வினவிய ஒன்றற்கு நேரே விடை கூறாமல் வழுவி வரும் விடையும் நீக்கப்படுவதில்லை (தொல்.சொல்.15) என்னும் கருத்தை தொல்காப்பியம் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் குறிப்பிடவில்லை. ஆயினும் அவ்வாறு குறிப்பாக வரும் விடையை இறை பயப்பனவாகக் கருதி ஏற்றுக் கொள்கின்றன. வினா, விடைக் கண் முதலும், சினையும் வரும் முறை குறித்து நன்னூல், தென்னூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் குறிப்பிடவில்லை.

அவிநயம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகிய நூல்களில் வழக்கு பற்றிய செய்திகள் காணப்படவில்லை. சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் போன்றவை இனமில் அடைமொழி வழக்கில் வருமா, செய்யுளில் வருமா? என்பதைக் கூறவில்லை. அவிநயம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம், தமிழ்க் காப்பு இயம் போன்றவற்றில் அடைமொழி குறித்த செய்திகள் இடம் பெற்றில.

இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் குறித்து அவிநயம், நேமிநாதம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் பற்றிய கருத்துகள் இடம்பெறவில்லை.இயற்கைப் பொருள்

குறித்துத் தமிழ்நூல் குறிப்பிடவில்லை. வழக்கில் ஆக்கச்சொல் காரணமின்றியும் வரும் எனும் தொல்காப்பியர் கருத்தை நன்னூல், இனிய தமிழ் இலக்கணம், தமிழ்நூல் போன்றவை குறிப்பிடவில்லை.

திணை தெரிந்து பால் தெரியாத ஐயக்கிளவியைப் பன்மை வினைமுற்றால் கூற வேண்டும் என்ற தொல்காப்பியக் கருத்து நேமிநாதம், நன்னூல், சுவாமிநாதம் போன்ற நூல்களில் இடம்பெறவில்லை. அவை திணை, பால் ஐயம் தோன்றியவிடத்து இரண்டிற்குமுரிய பொதுச்சொல்லால் குறிப்பிட வேண்டும் என்று பொதுவாகக் கூறியுள்ளன.

தொன்னூல் விளக்கத்திலும், தமிழ்நூலிலும் அன்மைக்கிளவி அன்மைச்சொல்லில் ஏற்றிக் கூறப்பட வேண்டும் என்ற கருத்து இடம்பெறவில்லை. அவிநயம், இலக்கணக்கொத்து, அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் போன்றவற்றில் திணை, பால் ஐயக் கிளவிகள் பெறும் முடிபு குறித்துக் கூறப்படவில்லை.

வண்ணச் சினைச்சொல் குறித்து இலக்கணக் கொத்து, இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் கூறப்படவில்லை.

வழுவமைதி குறித்த செய்திகள் அறுவகை இலக்கணம், இலக்கணக் கொத்து, தமிழ்க் காப்பு இயம் முதலிய நூல்களில் கூறப்படவில்லை.திணையும், பாலும் மயங்கி வரும் வழுக்கள் வழக்கில் மட்டுமே வழுவமைதியாகக் கொள்ளப்படும். இலக்கணத்தில் அவ்வாறு வராது என்ற தொல்காப்பியரின் கருத்து முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த மற்ற இலக்கண நூல்களில் கூறப்படவில்லை.

மூவிடங்களுக்குரிய சொற்கள் குறித்து அவிநயம், இலக்கணக் கொத்து, சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகிய நூல்களில் கூறப்படவில்லை.கொடை, தரல் போன்ற சொற்கள் குறித்துத் தமிழ்நூலில் இடம்பெறவில்லை. தமிழ்க் காப்பு இயம் மூவிடங்கள் குறித்த நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.150). எனினும் தரல், வரல், செலல், கொடை ஆகிய சொற்கள் அடையும் இடங்கள் குறித்து யாதும் கூறவில்லை.

யாது, எவன் என்னும் வினாச்சொற்கள் குறித்த தொல்காப்பியக் கருத்துகள் இலக்கண விளக்கம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

இனைத்தென அறிந்த சினை முதற் பொருள், மன்னாப்பொருள், ஆகியன உம்மை பெறும் எனும் தொல்காப்பியக் கருத்து அவிநயம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் போன்ற நூல்களில் இல்லை.

ஒரு பொருள் இல்லையாயின் 'இல்லை' என்று கூறாது வேறொரு பொருள் இருக்கிறது என்று கூற வேண்டும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக்காட்டவில்லை.

பொருளோடு புணராச் சுட்டுப்பெயர் குறித்து தொல்காப்பியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. அவிநயம், நேமிநாதம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் இயற்பெயரும், சுட்டுப்பெயரும் அமையும் முறை குறித்துக் கூறப்படவில்லை.செய்யுளில் சுட்டுப்பெயர் வருமிடம் குறித்துத் தமிழ்நூல் கூறவில்லை. சுட்டு முதலாகிய காரணக்கிளவி அமையும் முறை குறித்த தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் பின்பற்றவில்லை. இயற்பெயரும், சிறப்புப்பெயரும் அமையும் முறை குறித்து அவிநயம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் பேசப்படவில்லை.

ஒரு பொருள் பல பெயர் வினையேற்கும் முறை குறித்து நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் பேசப்படவில்லை.

உயர்திணை தன்மைச்சொல்லும், அஃறிணைக்கிளவியும் எண்ணுகின்றவிடத்து தன்மைச்சொல்லாலேயே முடிக்கப்பெறும் என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் பின்பற்றவில்லை.

ஒருமை எண் ஒருமைக்கு அல்லது இரண்டு முதலிய எண்களின் அடியாகத் தோன்றாது என்ற செய்தி நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் இல்லை.

வியங்கோள் எண்ணுப்பெயர் திணை விரவி வரும் என்னும் கருத்து நேமிநாதம் முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்களில் கூறப்படவில்லை.

அவிநயம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் வேறு வினைப் பொதுச்சொல் பற்றிய கருத்து இடம்பெறவில்லை.நேமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், தமிழ் நூல் ஆகியவற்றில் வேறு வினைப் பொதுச்சொல் எண்ணுங்காலும் பொது வினையால் முடிக்கப்பெறும் என்ற கருத்து கூறப்பெறவில்லை.

அவிநயம், நேமிநாதம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் போன்றவற்றில் இரட்டைக் கிளவி பற்றிக் கூறப்படவில்லை.

ஒரு பெயர்ப்பொதுச்சொல் குறித்து நேமிநாதம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல், முத்துவீரியம் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் கூறப்படவில்லை.ஒரு பெயர்ப் பொதுச்சொல் தலைமையாலும், பன்மையாலும் பெயர் பெறும் என்னும் கருத்து முத்துவீரியத்தில் இடம்பெறவில்லை.

ஒன்றொழி பொதுச்சொல் குறித்து அவிநயம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் கூறப்படவில்லை.

எண்ணுத்திணை விரவுப்பெயர் பெறும் திணை முடிவு குறித்து நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் தவிர பிற நூல்களில் குறிப்பிடப்படவில்லை.

வினை வேறுபடும், வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் குறித்து அவிநயம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் இல்லை.

குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி குறித்து முத்துவீரியம், இலக்கண விளக்கம், அறுவகை இலக்கணம் போன்ற நூல்கள் தவிர்த்து பிற நூல்களில் கூறப்படவில்லை.

உயர்திணைப் பெயர்களும், பால்களும் அஃறிணை முடிவு பெறும். அவ்வாறு முடியும் சொற்களுள் சிலவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல், இலக்கண விளக்கம், தென்னூல் போன்றவை அவ்வாறு முடிவு பெறுவதற்கான காரணங்களைக் கூறியுள்ளன. நேமிநாதம் அஃறிணை முடிவு பெறும் உயர்திணைச் சொற்களை மட்டுமே கூறியுள்ளது. அஃறிணை முடிவு பெறும் உயர்திணைப் பாற் சொற்களைக் கூறவில்லை.

முத்துவீரியம் மட்டுமே தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளது. பிற இலக்கணிகள் இக்கருத்துகளைப் பதிவு செய்யவில்லை.

எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்து என்னும் கருத்து அவிநயம், தொன்னூல் விளக்கம், இலக்கணக்கொத்து, அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் போன்ற நூல்களில் இடம்பெறவில்லை.

பன்மை சுட்டிய பெயர்கள் ஒருமையாலும், பன்மையாலும் கூறப்படும் என்னும் கருத்து முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

புது மரபு

திணை – விளக்கம்

இலகு தமிழ் ஐந்திலக்கணம் திணை என்பதற்கு விளக்கம் தருகிறது. திணை எனப்படுவது வகுப்பு, குலம் ஆகி உயர்வு தாழ்வினைக் குறித்திடும் என விளக்கம் அளிக்கிறது. (இ.த.ஐந்.193). பிற இலக்கண நூல்கள் திணை என்பதற்குரிய விளக்கத்தைக் கூறவில்லை.

சொல்லிலக்கணத்தின் பயன்

சொல்லிலக்கணத்தின் பயனாக ஒரு நூற்பாவை அமைத்துள்ளது தென்னூல்.

இருதிணைப் பொருள்பொருட் டன்மையோடு இயக்கம்
அறிதலும் எழுத்தான் ஆம்அடிப் படைவேர்ச்
சொல்லின் அமைவும், அவைதாம் இணைந்து
சொற்றொ டராகத் துலங்கும் விளைவை
உணர்தலொடு சொற்களொடு சொற்றொடர் களையும்
படைக்கும் முறையைப் பாங்குறத் தெரிதலும்
சொல்லிலக் கணத்தின் பயனாம் என்ப. (தென். சொற்.3)

என்று கூறுகிறது. வேறெந்த இலக்கண நூலும் சொல்லிலக்கணத்தின் பயனைக் கூறவில்லை.

அஃறிணைப் பெயர் உயர்திணை வினை முடிபு பெறுதல்

மாந்தர் போன்று அறிவுடைப் பொருளாக நூல்களில் உயர்த்திக் கூறப்படுவோர் பெயராலும், வினையாலும் உயர்திணையாவர் என்று தமிழ்நூல் குறிப்பிடுகிறது (எ.கா.நரியார் வந்தார்) (த.நூ.50). மற்ற இலக்கண நூல்களில் இக்கருத்து இடம் பெறவில்லை.

புதிய சொல்லாட்சிகள்

சுவாமிநாதம், உயர்திணையை உயர்பால் என்ற சொல்லாலும், அஃறிணையை இழிபால் என்ற சொல்லாலும் சுட்டுகிறது. (சு.நா.35)

அறுவகை இலக்கணம் ஆண்பால், பெண்பால், அலிப்பால் ஆகிய மூன்று பால்களை மட்டுமே குறிக்கிறது. அஃறிணைப்பாலை ‘அலிப்பால்’ என்ற சொல்லாட்சியால் அறுவகை இலக்கணம் சுட்டுகிறது. (அ.இ.185) பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் பிரிவு இதில் காணப்படவில்லை. எனினும் பலர்பால் ஈறாக ரகர மெய்யைச் சுட்டியுள்ளது.

“பாலெனப்படுவது இலிங்கப் பகுப்பு” என இனிய தமிழ் இலக்கணம் உரைக்கிறது. (இ.த.இ.94)

அஃறிணையில் பால்பகுப்பு

‘ஆண்’ என்பது உயர்திணை, அஃறிணை பொதுப்பெயர் (இ.த.ஐந்.194) என்றும், அஃறிணை காளை, பசுவினை ஆண், பெண் பாலாய்ப் பிரித்தலும் இயல்பே என்னும் கருத்தையும் (இ.த.ஐந்.195) இலகு தமிழ் ஐந்திக்கணம் பதிவு செய்துள்ளது.

தென்னூல், ஆண், பெண் என்பவை இருதிணைப் பொதுபெயர் என்றும் தன்மை கருதியவிடத்து ஒரோ வழி உயர்திணையைக் கருதியும் வரும் என்றும் குறிப்பிடுகிறது (தென். சொற்.9).

பால் காட்டும் ஈறுகள்

அறுவகை இலக்கணம் அஃறிணையை அலிப்பால் என்ற சொல்லாட்சியால் குறிக்கிறது. அவற்றுக்குரிய ஈறுகளாக இ, உ, ஐ ஆகியவும், பிறவும் எனக் குறிப்பிடுகிறது. இதனை,

இகரமும் உகரமும் ஐமுதல் பிறவும்
அலிப்பால் பெயர்ஈற்று அணுகுதல் அமைவாம்;
வாரிதி முத்து மஞ்ஞை என்பவும்
மரம் கல் ஆதியும் ஆம் எனல் வழக்கே (அ.இ.199)

என்று குறிப்பிடுகிறது.

மேலும் அஃறிணை போலும் உயர்திணைப் பெயர்கள் சிவை, திரு, கணபதி, மால் எனப் பல உண்டு (அ.இ.200) என்றும், உம்பர், செக்கர், இடங்கள் போன்ற அஃறிணைப் பெயர்கள் (ரகர மெய்யை ஈறாகப் பெற்று) உயர்திணைப் பன்மைப் பெயர் போன்று விளங்கும் (அ.இ.201) என்றும், மூர்த்தி போன்ற சில பெயர்கள் ஆண், பெண், அலி ஆகிய மூன்று பால்களிலும் பொதுவாக வழங்கப்படும் (அ.இ.202) என்றும், ஆண்பால் ஒருமையைப் போன்று னகர மெய்யால் முடியும் கலன், புலன் முதலிய எண்ணற்ற சொற்கள் வழக்கில் உள்ளன (அ.இ.203) என்றும் பல கருத்துகளைப் பதிவு செய்துள்ளது. மேலும், இவ்வாறு ஒரு பாலுக்குரிய பெயர்ச்சொல் (தன் ஈற்றெழுத்தால்) வேறொரு பாலுக்குரியதாகக் காட்சியளிக்கும். இவ்வேறுபாடுகளை எல்லாம் கல்வியில் தம்மினும் பெரியவர்களை அணுகி அறிந்து பயன்படுத்த வேண்டும் (அ.இ.204) என்பன போன்ற பல செய்திகளைக் கூறியுள்ளது.

அடைகொளி

இலகு தமிழ் ஐந்திலக்கணம், அடைமொழி குறித்து விளக்குவதோடு அவ்வடைமொழியை ஏற்று வரும் பெயர், வினைகளை ‘அடைகொளி’ என்னும் சொல்லாட்சியால் சுட்டுவது புதுமரபாகக் கொள்ளத் தக்கது (இ.த.ஐந்.314). பெயர், வினைகள் அடையைக் கொள்ளுவதால் அடைகொளி எனக் காரணப் பெயர் சூட்டுகிறது இலகு தமிழ் ஐந்திலக்கணம்.

தொகுப்புரை

- தொல்காப்பியம் சொல்லுக்கான வரையறையை நேரடியாகக் கூறவில்லை. திணையை முதன்மைப்படுத்தியே சொற்களை விளக்குகிறது.
- மக்கட்சுட்டு உயர்திணை, மக்களல்லாத சுட்டு அஃறிணை என்னும் தொல்காப்பியக் கருத்தை இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் ஆகிய நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.
- தொல்காப்பியரின் ஐம்பால்மரபை அறுவகை இலக்கணம் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் அனைத்தும் ஏற்றுள்ளன.
- பேடும், தெய்வமும் உயர்திணைப் பாலாய் இசைக்கும் எனும் தொல்காப்பியக் கருத்தை அவிநயம், இலக்கண விளக்கம், தென்னூல் ஆகியவை ஏற்கின்றன.
- இனச்சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை செய்யுளில் மட்டுமே வரும் என்னும் கருத்தை நேமிநாதம், தென்னூல், தமிழ்நூல் ஆகியவை ஏற்றுக்கொண்டுள்ளன.
- இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் குறித்த தொல்காப்பியரின் கருத்துகளைப் பெரும்பாலான இலக்கணிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.
- வண்ணச் சினைச்சொல் அடை, சினை, முதல் மூன்றும் மயங்காமல் வரும் என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதமும், முத்துவீரியமும் பின்பற்றியுள்ளன.
- செலவு, வரவு, தரவு, கொடை ஆகிய நான்கு சொற்களும் மூவிடங்களுக்கும் உரியது; அவற்றுள் தரல், வரல் ஆகியவை தன்மை, முன்னிலைக்கும் செலவு, கொடை ஆகியவை படர்க்கைக்கும் உரியது என்பதை நேமிநாதம், இலக்கண விளக்கம், தென்னூல் ஆகியவை ஏற்றுக் கொண்டுள்ளன.
- யாது, எவன் என்னும் வினாச் சொற்கள் அறியாத பொருளிடத்து வினாவாய் வருவதுடன் அறிந்த பொருளின் கண் ஐயம் நீக்கவும் வரும் என்பதை இலக்கண விளக்கமும் முத்துவீரியமும் பின்பற்றியுள்ளன.
- கேட்போரால் இத்துனையென்று அறியப்பட்ட சினை, முதற் சொற்களும், மன்னாப் பொருளும் உம்மை பெற வேண்டும் என்பதை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல், தமிழ்நூல் ஆகியவை ஏற்றுக் கொண்டுள்ளன.

- ‘இல்லை’ என்னும் சொல் அமையும் முறை குறித்த தொல்காப்பியர் கருத்தோடு பிற்றை இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.
- சிறப்புப்பெயரை முன்னும், இயற்பெயரைப் பின்னும் கூற வேண்டும் என்னும் கருத்தை நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் ஆகியவை பின்பற்றியுள்ளன.
- இயற்பெயரை முன்னும் சுட்டுப்பெயரைப் பின்னும் கூறவேண்டும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியவை ஏற்கின்றன.
- ஒருமை எண்ணின் பொதுப் பிரிபாற் சொல், வியங்கோள் எண்ணுப்பெயர் திணை விரவி வருதல், வேறு வினைச்சொல் பொது வினை வருதல், இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா, ஒரு பெயர்ப்பொதுச்சொல், ஒன்றொழி பொதுச்சொல் ஆகியவை குறித்த தொல்காப்பியக் கருத்துகளோடு பிற்றை இலக்கணிகள் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.
- அஃறிணையில் முடியும் உயர்திணைப் பெயர்கள் குறித்து நேமிநாதமும், முத்துவீரியமும் தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளன.
- உயர்திணைப் பால்கள் அஃறிணை முடிவு பெறுவதை முத்துவீரியம் மட்டுமே பின்பற்றியுள்ளது.
- எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்து எனும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தென்னூல் ஆகிய நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.
- திணையை முதன்மைப்படுத்தி சொல்லை விளக்கும் தொல்காப்பிய முறையைப் பிற்றை இலக்கணிகள் பின்பற்றவில்லை. அவர்கள் இருதிணை, ஐம்பால், ஏழ் வழு, எண் வேற்றுமை, மூவிடம், முக்காலம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பெறும் தன்மையது சொல் என விளக்குகின்றனர். இது மரபு மாற்றமாகும்.
- தொல்காப்பியம் மக்களை மட்டும் உயர்திணை எனக் குறிக்கிறது, நேமிநாதமும், நன்னூலும் மக்கள், தேவர், நரகர் உயர்திணை என்கிறது. இலகு தமிழ் ஐந்திலக்கணம் நரகரை அஃறிணையில் அடக்குகிறது. இது மரபு மாற்றமாகக் கொள்ளத் தக்கது.

- தொல்காப்பியரின் ஐம்பாற்பகுப்பை இலக்கணிகள் அனைவரும் ஏற்க, அறுவகை இலக்கணம் மட்டும் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்ற மூன்றனை மட்டும் குறிப்பிடுவது மரபு மாற்றமாகக் கொள்ளத் தக்கது.
- ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவி உயர்திணை முப்பால் ஈறு பெறும் என்று தொல்காப்பியம் கூற, நன்னூல் அஃறிணையிலும் வரும் என்கிறது.
- பால் காட்டும் ஈறுகளைக் குறிப்பிடுவதில் இலக்கணிகளிடையே சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொல்காப்பியம் பதினோரு பால்காட்டும் ஈறுகளைக் கூற, தமிழ்க் காப்பு இயம் பதினாறு ஈறுகளைக் குறிப்பிடுவது வளர்ச்சி நிலையாகக் கொள்ளத் தக்கது.
- தொல்காப்பியம் வழு குறித்துக் கூறினும் அவற்றை வகைப்படுத்தவில்லை, நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், ஆகியவை எழுவகை வழுக்களையும், இலகு தமிழ் ஐந்திலக்கணமும் தமிழ்நூலும் எண்வகை வழுக்களையும், தென்னூல் பத்து வகை வழுக்களையும் கூறுகிறது. இது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.
- செப்பு, வினா குறித்துக் கூறும் தொல்காப்பியம் அவற்றின் வகைகளைக் கூறவில்லை. பிற்றை இலக்கணிகளே செப்பையும், வினாவையும் வகைப்படுத்தியுள்ளனர்.
- செப்பின் வகைகளை நேமிநாதம் நான்காகவும் நன்னூல் எண்வகையாகவும், வகைப்படுத்தியுள்ளன.
- இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் சேனாவரையரைப் பின்பற்றி செப்பை செவ்வன் இறை, இறைபயப்பது எனப் பிரித்து, இறை பயப்பனவாக ஏழு வகைகளைக் குறிப்பிடுகின்றன.
- இனிய தமிழ் இலக்கணமும், இலகு தமிழ் ஐந்திலக்கணமும் நன்னூலைப் பின்பற்றி செப்பின் வகைகளை விளக்க, தென்னூல் சேனாவரையரைப் பின்பற்றியுள்ளது.
- வினா வகைகளை அவிநயம் ஐந்தாகவும், நன்னூல், இலக்கண விளக்கம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியவை ஆறாகவும், சுவாமிநாதம் நான்காகவும், தென்னூல் ஐவகையாகவும் வகைப்படுத்தியுள்ளன.
- இயல்பு வழக்கு, தகுதி வழக்கின் வகைகளை நன்னூலே முதலில் விளக்குகிறது. இரு வகை வழக்குகளையும் மும்மூன்றாகப் பாகுபடுத்துகிறது.

தென்னூல் இவ்வாறு இயல்பு தகுதி எனப் பிரிக்காமல் ஐவகைக் குறிப்பு மொழிகளைக் குறிப்பிடுகிறது.

- தொல்காப்பியம் பண்பு அடியாக அமையும் பெயரடைகளை மட்டுமே கூற, நன்னூல் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு நிலைகளிலும் பெயரடைகள் இனம் உள்ளனவற்றிற்கும், இனம் இல்லாதனவற்றிற்கும் வருவதோடு செய்யுளிலும், வழக்கிலும் அமையலாம் என்கிறது. இலக்கண விளக்கமும், சுவாமிநாதமும் நன்னூலைப் பின்பற்ற, இனிய தமிழ் இலக்கணம் இவற்றோடு இயற்கை அடை எனப் புதிதாக ஒன்றைச் சேர்க்கிறது. இலகு தமிழ் ஐந்திலக்கணம் இனமில்லா அடைமொழியையே இயற்கை அடைமொழி எனக் குறிக்கிறது.
- அடை, சினை, முதல் மூன்றும் மயங்காமல் வருவது வண்ணச் சினைச்சொல் என்று தொல்காப்பியம் குறிப்பிட, அவிநயம் முதலோடு குணம் இரண்டு அடுக்கி வருதல் வழக்கியல், சினையோடு குணம் இரண்டு அடுக்குதல் செய்யுளில் வரும் என்று கூற, நன்னூல் இவ்விரு கருத்துகளையும் ஏற்றுக் கொண்டு நூற்பாவை அமைத்துள்ளது. இது மரபு வளர்ச்சியாகும்.
- திணை, பால் வழுவமைதி குறித்துக் கூறியுள்ள தொல்காப்பியம் எண், இட கால வழுவமைதிகளை விளக்கவில்லை. நன்னூலே அவற்றை விளக்கியுள்ளது. பிற இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றியுள்ளனர். தென்னூல் மரபு வழுவமைதி குறித்துக் கூறியுள்ளது. இவை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கன.
- மூவிடங்களுக்கும் உரிய சொற்களாக செலல், வரல், தரல், கொடை ஆகியவற்றைக் கூறும் தொல்காப்பியம் அவற்றுள் தரும், வரும் என்பன தன்மை, முன்னிலைக்கும், செலவு, கொடை என்பன படர்க்கைக்கும் உரியது என்று கூறுகிறது. ஆனால் நன்னூல், தரல், வரல், கொடை, செலல் நான்கும் படர்க்கையில் வரும் என்றும், தரல், வரல் என்னும் இரண்டையும் தன்மை, முன்னிலைகள் ஏற்கும் என்றும் கூறுகிறது.
- முடிக்கும் சொல் வினைச்சொல்லாக இருப்பின் இயற்பெயருக்குப் பின் சுட்டுப்பெயர் வர வேண்டும் என்னும் தொல்காப்பியக் கருத்தை ஏற்கும் நன்னூல், முடிக்கும் சொல் வினைச்சொல் இல்லையென்றால் சுட்டுப்பெயர் மூவகைப் பெயர்க்கு முன்னும், பின்னும் வரும் என்ற கருத்தையும் பதிவு செய்துள்ளது.

- சிறப்புப்பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வரும் என்னும் தொல்காப்பியக் கருத்திற்கு மாற்றாக தமிழ்நூல், கல்வி முதலியவற்றினாகிய சிறப்புப்பெயர் வருங்கால் இயற்பெயருக்கு முன்னோ, பின்னோ வரும் என்கிறது.
- எண்ணுத்திணை விரவுப்பெயர் அஃறிணை முடிவுபெறும் என்று தொல்காப்பியம் சுட்ட, நன்னூல் அவை சிறப்பு, மிகுதி, இழிவு காரணமாக ஒரு முடிவைப் பெறும் என்கிறது.
- உயர்திணைச் சொற்கள் அஃறிணை முடிவு பெறுவதையும், உயர்திணைப் பாற் சொற்கள் அஃறிணை முடிவு பெறுவதையும் தொல்காப்பியம் பட்டியலிடுகிறது. நன்னூல் அவ்வாறு முடிவதற்கான காரணங்களைக் கூறியுள்ளது.
- பன்மை சுட்டிய சினை நிலைக்கிளவி ஒருமையிலோ, பன்மையிலோ முடியும் எனத் தொல்காப்பியம் கூற, தென்னூல் அவற்றோடு ஐம்பூதங்களின் பெயர்கள், தெய்வம் சுட்டிய பெயர்கள், தொகுதிப்பெயர்கள் ஆகியவற்றையும் இணைக்கிறது.
- நேமிநாதத்தில் தொல்காப்பியம் பலர்பாலுக்குக் குறிப்பிடும் ‘மார்’ விகுதி இடம்பெறவில்லை. இலகு தமிழ் ஐந்திலக்கணத்தில் தொல்காப்பியம் குறிப்பிடும் று, டு விகுதிகள் இடம்பெறவில்லை. தமிழ்நூலில் ‘டு’ விகுதி இடம்பெறவில்லை. இவை மரபு வீழ்ச்சியாகும்.
- சொல்லிலக்கணத்தின் பயனாக ஒரு நூற்பாவைத் தென்னூல் அமைத்துள்ளமை புது மரபாகக் கொள்ளத்தக்கது.
- இலகு தமிழ் ஐந்திலக்கணம் ‘திணை’ என்பதற்கு, வகுப்பு, குலம் ஆகி உயர்வு தாழ்வினைக் குறித்திடும் எனக் குறிப்பிடுவது புது மரபாகும்
- மாந்தர் போன்று அறிவுடைப் பொருளாக நூல்களில் உயர்த்திக் கூறப்படுவோர் பெயராலும், வினையாலும் உயர்திணையாவர் எனத் தமிழ்நூல் சுட்டுவது புதுமரபாகக் கொள்ளத்தக்கது.
- சுவாமிநாதம், உயர்திணையை உயர்பால் என்ற சொல்லாலும், அஃறிணையை இழிபால் என்ற சொல்லாலும் சுட்டுவது புது மரபாகக் கொள்ளத்தக்கது.
- அறுவகை இலக்கணம், அஃறிணை ஒன்றன்பாலை ‘அலிப்பால்’ என்ற சொல்லாட்சியால் சுட்டுவது புது மரபாகக் கொள்ளத்தக்கது.

- இலகு தமிழ் ஐந்திலக்கணம், அடைமொழியை ஏற்று வரும் பெயர், வினைகளை ‘அடைகொளி’ என்ற பெயரால் சுட்டுவது புது மரபாகக் கொள்ளத்தக்கது.

சான்றெண் விளக்கம்

1. ச.அகத்தியலிங்கம், தொல்காப்பிய உருவாக்கம், ப. 116.
2. ச.வே.சுப்பிரமணியன் (கட்.,), தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள், ப. 125.
3. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, கிளவியாக்கம், ப. 12.
4. வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியப் புதுமை, பக். 6 – 7.
5. கி.வா.ஜகந்நாதன், வாழும் தமிழ் தொல்காப்பியம், பக். 14 – 15.
6. ச.அகத்தியலிங்கம், தொல்காப்பிய உருவாக்கம், ப. 120.
7. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, கிளவியாக்கம், ப. 216.
8. மேலது., பக்.229-230.
9. மேலது., ப. 314.
10. மேலது., ப. 316.
11. செ.வை.சண்முகம், தொல்காப்பிய ஆய்வு, ப. 226.
12. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, கிளவியாக்கம், ப. 321.
13. மேலது., ப. 322.
14. செ.வை.சண்முகம், தொல்காப்பிய ஆய்வு, ப. 228
15. தமிழண்ணல், தொல்காப்பியர், ப. 51.
16. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, கிளவியாக்கம், ப. 391.
17. மேலது., ப. 643.
18. மேலது., ப. 644.
19. சோ.ந.கந்தசாமி, தொல்காப்பியமும், தெய்வச் சிலையாரும் (கட்.,), தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள், ப. 245.
20. பொன்.கோதண்டராமன், இலக்கண உலகில் புதிய பார்வை தொகுதி–3, பக்.8–9.
21. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, கிளவியாக்கம், ப. 185.
22. மேலது., ப. 187.

23. மேலது., ப. 190.

24. மேலது., ப. 194.

25. மேலது., ப. 196.

26. மேலது., ப. 186.

27. மேலது., ப. 188.

வேற்றுமை மரபுகள்

தொல்காப்பியத்தில் வேற்றுமை குறித்த செய்திகள் சொல்லதிகாரத்தின் இரண்டாம், மூன்றாம், நான்காம் இயல்களாகிய வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு ஆகிய மூன்று இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. இவ்வியற் கருத்துகள் பிற்றை இலக்கண நூல்களில் இடம் பெற்றுள்ள முறைமையினை ஒத்தமரபு, மரபுமாற்றம், மரபுவளர்ச்சி, மரபுவீழ்ச்சி, புது மரபு என்னும் அடிப்படையில் பகுத்து ஆராயுமுகமாக இவ்வியல் அமைகிறது.

வேற்றுமை விளக்கமும் வரையறையும்

தொல்காப்பியர் வேற்றுமைக்கான விளக்கத்தை வரையறுத்துக் கூறவில்லை. உரையாசிரியர்களே வேற்றுமை குறித்து விளக்குகின்றனர். சேனாவரையர், ‘‘செயப்படுபொருள் முதலியனவாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத்தலின், வேற்றுமையாயின’’[1] என்று கூறுகிறார்.

தெய்வச்சிலையார், ‘‘வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர் என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளையொரு கால்வினை முதலாக்கியும், ஒரு காற்செயப்படு பொருளாக்கியும், ஒரு காற்கருவியாக்கியும், ஒரு கால்ஏற்பது ஆக்கியும், ஒரு கால்நீங்க நிற்பது ஆக்கியும், ஒரு கால் உடையது ஆக்கியும், ஒரு கால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க’’[2] என்றார்.

கல்லாடனார், ‘‘வேற்றுமை என்பன சில பொருளை உணர்த்தினமையான் காரணப்பெயர் ஆயிற்று. பொருள்களை வேற்றுமை செய்தலின் பெயர் முதலிய எட்டற்கும் வேற்றுமை என்னும் பெயர் ஆயிற்று.

யாதோ வேற்றுமை செய்தவாறு எனின், ஒரு பொருளை ஒருவழி ஒன்றனைச் செய்யும் வினைமுதல் ஆகியும், ஒருவழி ஒன்று செய்தற்குச் செயப்படுபொருள் ஆகியும், ஒருவழி ஒன்று நிகழ்வதற்கு ஏது ஆகியும், ஒருவழி ஒன்று செய்தற்குக் கருவி ஆகியும், ஒருவழி ஒன்று கொடுப்பதனை ஏற்பது ஆகியும், ஒருவழி ஒன்றற்கு உவமம் ஆகியும், ஒருவழி ஒன்று நீங்குவதற்கு இடம் ஆகியும், ஒருவழி ஒன்றற்கு எல்லை ஆகியும், ஒருவழி ஒன்றற்கு உடைமை ஆகியும், ஒருவழி ஒன்று செய்தற்கு இடம் ஆகியும், ஒருவழி முன்னிலை ஆதல் பொருட்டு விளிக்கப்படுவது ஆகியும் இன்னோரன்ன பிறவும் ஆகிய பொதுப்படநிற்றல் உடைத்து’’[3] என்கிறார்.

பாலசுந்தரனார், ‘‘வேற்றுமையாவது யாதானும் ஒருநிலையை இயல்பாகக் கொண்டு அந்நிலையினின்று திரிபு உறுதலாகும். ஒருதொடரின் கண் அமைந்துள்ள

சொற்பொருள் வேறுபடாதநிலை இது என்றும், வேறுபடுத்துவது இது என்றும் விளக்குதலின் இவ்வியல் வேற்றுமையியல் எனப்பட்டது.''[4] என்கிறார்.

சிலர் வேற்றுமை என்பதும், வேற்றுமை உருபும் ஒன்றே எனக் கொள்வர். ஆ.சிவலிங்கனார், ''வேற்றுமையுருபு என்பது வேற்றுமையாகிய உருபு என விரியும். உருபுக்கு வேற்றுமை என்ற சிறப்புப் பெயர் உண்டு. வேறுபடுத்துவது எதுவோ அது வேற்றுமை எனப்படும். உருபு தான் சாரும் பெயர்ப்பொருளை வேறுபடுத்தலின் வேற்றுமை எனப்படும்.''[5] என்பார்.

இக்கருத்தை மறுத்து வேற்றுமை, வேற்றுமை உருபு இரண்டும் வேறுவேறு என்பதை சாத்திரியார்,

''வேற்றுமை என்பது பெயர்ப்பொருளைச் செயப்படுபொருள் முதலியவாக வேறுபடுத்து உணர்த்துவது. அவ்வாறு வேறுபடுத்துவன ஐ, ஒடு, கு, இன், கண், அது என்ற ஆறே. இவற்றை ஆசிரியர் வேற்றுமை உருபு என்றே கூறினார். ஆதலின் வேற்றுமை உருபு என்பதனை வேற்றுமை ஆகிய உருபு என்றே விரித்தல் வேண்டும். ஆயின் அவ்வவ்வேற்றுமை உருபை இறுதியில் கொண்ட பெயரை அவ்வவ் வேற்றுமை என்று உபசாரத்தால் உலகில் வழங்குகின்றனர். இவ்வாறு வேற்றுமையும், வேற்றுமை உருபும் ஒன்றே என்று கொள்ளின் எழுத்ததிகாரத்தில் ஆசிரியர் அவ்வாறு என்ப வேற்றுமை உருபே (எ-113) என்று கூறி, இங்கு 'வேற்றுமை தாமே ஏழ் என மொழிப' 'விளிகொள்வதன் கண் விளியோடு எட்டே' (சொல்.62,63) என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் எனின், எழுத்ததிகாரத்தில் வேற்றுமை உருபு ஆறு என்றும் இங்கு வேற்றுமைப் பொருள் எட்டு என்றும் கூறினார் என்க''

இக்கருத்தை நோக்க சாத்திரியாரின் கருத்தே ஏற்புடையதாக உள்ளது. மேலும், ''ச.அகத்தியலிங்கம் பெயர்ச்சொல்லுக்கும், வினைச் சொல்லுக்கும் இடையேயுள்ள பொருள் தொடர்பே வேற்றுமை எனவும், இத்தொடர்பினைப் புலப்படுத்தும் உருபுகள் வேற்றுமை உருபுகள் எனவும் குறிப்பிட்டுள்ளார்''[7]. என்று ஏ.ஆதித்தன் கூறுவது சாத்திரியாரின் கருத்திற்கு வலுசேர்ப்பதாக அமைந்துள்ளது.

மேலும், பொருளை வேறுபடுத்துதல் என்பது சொற் பொருளையா அல்லது தொடரியல் பொருளையா என்பதனை உரையாசிரியர்களின் கருத்துகளைக் கொண்டு தொடரியல் பொருளையே என ஏ.ஆதித்தன் தெளிவுபடுத்துகிறார். இதனை, ''தொல்காப்பியர் வேற்றுமைக்கு வெளிப்படையாக இலக்கணம் கூறவில்லையெனினும் அவர் வேற்றுமைக்குரிய பண்புகளாகச் சுட்டுவதினின்றும் வேற்றுமையின் இலக்கணத்தினைத் தெரிந்து கொள்ளுதல் இயலும். தெய்வச்சிலையார் (தொ.சொ.63) பொருள்களை வேறுபடுத்தலின் வேற்றுமையாயிற்று எனக் குறிப்பிடுகின்றார்.

பொருளை வேறுபடுத்துதல் என்பது சொற்பொருளையா அல்லது தொடரியல் பொருளையா என்பதனைத் தெய்வச்சிலையார் தரும் சான்றுகள் இவர் தொடரியல் பொருள் வேறுபடுதலையே கருத்தில் கொண்டுள்ளார் என்பதனைப் புலப்படுத்துகின்றன''[8] என்னும் கூற்று உணர்த்தும்.

இதுகாறும் கண்ட அறிஞர்களின் கருத்துகள் வழி, ஒரு வாக்கியத்தில் பொருளை வேறுபடுத்துவன வேற்றுமை என்பதும், அவ்வேற்றுமைக்குத் துணைபுரிவன வேற்றுமை உருபுகள் என்பதும், அவை தொடரியல் பொருளையே வேறுபடுத்துகின்றன என்பதும் பெறப்படும்.

ஒத்தமரபுகள்

வேற்றுமையின் வகைகள்

தொல்காப்பியர் வேற்றுமையின் வகைகளை எண்வகைப்படுத்துகிறார்.

வேற்றுமை தாமே ஏழெனெ மொழிப (தொல்.சொல். 62)

என்று பிறர் கருத்தைக் கூறி,

விளிகொள்வதன் கண் விளியொடுஎட்டே (தொல். சொல். 63)

என்று தமது கருத்தை வலியுறுத்துகிறார்.

'ஏழ் என மொழிப' என்னும் கூற்றால் தொல்காப்பியர் காலத்துக்கு முன் தமிழில் ஏழு வேற்றுமைகளே இருந்தன என்பது புலப்படும். இது குறித்து க.வெள்ளைவாரணன், ''வேற்றுமை ஏழெனக் கொள்வோர் விளி வேற்றுமையை எழுவாயுள் அடக்குவர். பிறிதோர் இடைச்சொல்லையேலாது இயல்பாகியும் தானே திரிந்தும் நிற்கும் பெயரின் இறுதி விளியெனப்படும். படர்க்கைச் சொல்லையும், பொருளையும் முன்னிலைச் சொல்லும் பொருளுமாக வேற்றுமை செய்வது விளி வேற்றுமையாதலின் இதனை எழுவாயுள் அடக்காது வேறாகக் கொள்வதே தமது துணிபென்பார்''[9] என்று விளக்கம் தருகிறார்.

சி.இலக்குவனார், ''திராவிடமொழிகளில் எல்லாம் வேற்றுமைகள் எட்டெனவே கொள்ளப்பட்டுள்ளன. வேற்றுமைகளைஅறிவிக்கும் உருபுகள் பெயர்க்குப் பின்னால் பெயருடன் சேர்ந்து வருகின்றன. இவ்வுருபுகள் தொடக்கத்தில் பின் இணைத்துணைப் பெயர்ச் சொற்களாக இருந்து நாளடைவில் தனித்தியங்கும் இயல்பு கெட்டு இடைச் சொற்கள் நிலையை அடைந்துவிட்டன என்று அறிஞர் கால்டுவெல் கருதுகின்றார். இந்நிலை தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

தொல்காப்பியர் காலத்தில் அவை வேற்றுமையுணர்த்தும் உருபுகளாகவே கருதப்பட்டு இடைச்சொற்களாகவே எண்ணப்பட்டுள்ளன.''[10] என்பர்.

வேற்றுமையின் வகைகள் எட்டு என்பதை நேமிநாதம் (நேமி.40), நன்னூல் (292), இலக்கணவிளக்கம் (193), இலக்கணக்கொத்து (13), தொன்னூல் விளக்கம் (55), முத்துவீரியம் (பெயர். 50), சுவாமிநாதம் (40), இனியதமிழ் இலக்கணம் (100), இலகுதமிழ் ஐந்திலக்கணம் (211), தென்னூல் (சொற். 39), தமிழ்நூல் (68) ஆகிய நூல்கள் ஏற்கின்றன.

இலக்கணக்கொத்து வேற்றுமையின் வகைகள் எட்டு என்பதை ஏற்றுக் கொளினும் அவ்வாறு எண் வகையாகக் கூறுவது வடமொழிமரபு என்றும், தமிழ்நூலார் வேற்றுமையின் வகைகளை ஏழாகவும், ஆறாகவும் வகைப்படுத்துவர் என்று கூறுகிறது (இ.கொ.13). அவ்வாறு ஏழாகவும், ஆறாகவும் பாகுபடுத்துகின்றமை குறித்து இலக்கணக் கொத்து ஆசிரியர், '' 'எழுவாய் வேற்றுமைபெயர் தோன்றுநிலையே' ஆதலின், அதனை விடுத்துப் பெயர்ப் பொருளை வேறுபடுக்கும் ஏனைய ஏழுமே வேற்றுமை என்பர். எழுவாயும் விளியும் பெயரும், பெயரது விகாரமும் ஆதலின், அவைதம் முடிக்குஞ் சொல்லோடு முடியும் வழி அல்வழித் தொடராதலின், அவற்றை விடுத்து ஏனை ஆறுமே வேற்றுமை என்பர். ஏழ், ஆறு என்ற கருத்து, தமிழ் நூலாரிடை நிலவுவது போல, வியாழன் மரபைச் சேர்ந்தவர் வேற்றுமை ஏழ் என்றும், இந்திரன் மரபைச் சேர்ந்தவர் வேற்றுமை எட்டு என்றும் கூறும் மரபு வடமொழியினும் உண்டு என்பது,

''ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை
வேறுஎன விளம்பான் பெயரதுவிகாரம் என்று
ஓதிய புலவனும் உளன் ஒருவகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்'' **- அகத்தியம்**

என்பதனான் உணரப்படும். புலவன் - வியாழன் என்பர் சண்முகனார்; பாணினி என்பார் ஏனையார்''[11] என்று விளக்குகிறார்.

இக்கருத்து தொல்காப்பியருக்கு முன் தமிழில் வேற்றுமைகள் ஆறாகவும், ஏழாகவும் இருந்தமையையும், தொல்காப்பியரே முதலில் வேற்றுமைகளை எட்டாகப் பாகுபடுத்தியவர் என்பதையும் புலப்படுத்துகிறது.

வேற்றுமைகளின் பெயர்கள்

தொல்காப்பியர் எண்வகை வேற்றுமைகளின் பெயர்களை உருபு அடிப்படையிலும், எண் அடிப்படையிலும் கூறியுள்ளார். உருபு அடிப்படையில் கூறும்பொழுது,

> **அவைதாம்**
>
> **பெயர் ஐ ஒடு கு**
>
> **இன் அதுகண் விளிஎன்னும் ஈற்ற - (தொல். சொல். 64)**

என்று பெயரிடுகிறார். எண் அடிப்படையில் இரண்டாகுவதே, மூன்றாகுவதே என்றும் சுட்டுகிறார். இவ்வாறு எண் அடிப்படையில் பெயர் சுட்டுவது குறித்து ரா.சீனிவாசன், ‘‘வேற்றுமைக்கு முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என எண்ணால் பெயர் கொடுப்பதும் அதன் ஏனைய அமைப்பு முறையும் வடமொழி மரபை ஒட்டியதே என்பது கால்டுவெல்லின் கருத்தாகும்’’[12] என்கிறார். இவ்வாறு எண் அடிப்படையில் பெயரிடுவது குறித்து சு.இன்னாசி, ‘‘ஐ முதல் கண் ஈறாக உள்ள வேற்றுமைகளை இரண்டாகுவதே, மூன்றாகுவதே எனக் குறித்து 2, 3, 4, 5, 6, 7 என்ற எண்களாலும் தொல்காப்பியர் சுட்டுகிறார். வேற்றுமை மயங்கியலில் ஒரே சூழ்நிலையில் இரு உருபுகள் பயன்படுத்த நேருங்கால், மூன்றனும் ஐந்தனும் (நூற்பா 576),ஐந்துமிரண்டும் (நூற்பா 584) எனப் பயன்படுத்திச் சுருக்கி விளக்க எளிதாம் பொருட்டே எண்களைச் சுட்டிக் கூறியுள்ளார் என்பர் டாக்டர் செ.வை.சண்முகனார். அது பொருந்துமாறில்லை, ஒடுவும் இன்னும், இன்னும் ஐயும் எனக் கூறுவதினின்று எண்களைக் குறித்தல் எளிதாகாது. உருபுகளைச் சுட்டிப் பெயர் கூறுதல் முன்னோர் மரபென்றும், எண் சுட்டிக் கூறுதல் ஆசிரியர் மரபென்றும் மட்டுமே கூற இயலும். விளிவேற்றுமையை நன்னூலார் எட்டாம் வேற்றுமை என்றனர். பெயர் வேற்றுமையை, எழுவாய் வேற்றுமையெனத் தொல்காப்பியர் கூறத் தற்காலத்தார் முதல் வேற்றுமை என்கின்றனர். நன்னூலார் எழுவாய் என்பதனை முதல் என்னும் பொருளில் கையாண்டிருப்பது அதற்கு வழி காட்டியிருக்கலாம்’’[13] என்று கூறுகிறார்.

இவ்வாறு எண் அடிப்படையில் பெயரிடுவதைவிட உருபு அடிப்படையிலோ, பொருள் அடிப்படையிலோ, பெயரிடுவதே பொருத்தமானது என்பதை முத்துச் சண்முகம், ‘‘வேற்றுமை என்பது வாக்கியத்தில் பெயர்கள் செயற்படுகின்ற திறனைக் குறிக்கிறது. அதற்கு அறிகுறியே வேற்றுமை உருபு. இவ்வாறு செயற்படுகின்ற திறனையும், உருபுகளையும் அடிப்படையாகக் கொண்டே தமிழில் வேற்றுமைகளைப் பிரித்துக் காணுதல் வேண்டும். இதனால் வேற்றுமைகளை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என எண்களால் பெயரிடுவதை விட, எழுவாய் வேற்றுமை, செயப்படு பொருள் வேற்றுமை எனச் செயற்படும் முறையாலோ அல்லது

தொல்காப்பியர் கூறுவது போல் ஐயெனப் பெயரிய வேற்றுமை, ஒடு எனப் பெயரிய வேற்றுமை என உருபுகளாலோ பெயரிடுதல் பொருந்தும்.''[14] என்கிறார்.

நேமிநாதம், முத்துவீரியம் ஆகியவை தொல்காப்பியத்தைப் பின்பற்றி பேர்(பெயர்), ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என உருபு அடிப்படையில் பெயரிடுகின்றன (நேமி. 40) (மு. வீ.பெயர். 51).

இனிய தமிழ் இலக்கணமும், இலகு தமிழ் ஐந்திலக்கணமும் வேற்றுமையின் பெயர்களை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என்று எண் அடிப்படையிலேயே சுட்டுகின்றன (இ. த. இ. 100) (இ. த. ஐந் - 211).

முதல் வேற்றுமை

தொல்காப்பியருக்கு முன் எழுவாய் வேற்றுமை புறக்கணிக்கப்பட்டமையையும், தொல்காப்பியரே எழுவாய் வேற்றுமைக்கு முக்கியத்துவம் தந்துள்ளார் என்பதையும் தே.ஆண்டியப்பன், ''பில்மோர் என்பவர் தமது case of case என்னும் கட்டுரையில் சில செய்திகளைத் தருகிறார்.

அவற்றில் இரண்டு பின்வருமாறு,

1. பெயர் வேற்றுமை முன்பு புறக்கணிக்கப்பட்டது. (Nominative was ignored)
2. எழுவாய் என்னும் நிலையில் தான் பெயரைப் பற்றி ஒருவன் சரியாகப் பேசமுடியும். (Nominative was the only case where one could speak properly of a noun).

பெயரைப் புறக்கணித்த காரணமென்ன? வெளிப்படத் தோன்றாத் தன்மை பெயருக்கு இருப்பதால், வினையே சிறப்புடையது என்றும், இரண்டாம் தரம் என்னும் நிலையே பெயருக்கு உண்டு என்றும் கருதினர். ஆனால் தொல்காப்பியரோ பெயர்நிலைக்குச் சிறந்ததோர் இடத்தை அளிக்கிறார்''[15] என்றுகுறிப்பிடுகிறார்.

தொல்காப்பியம் எழுவாய் வேற்றுமை குறித்த கருத்துகளை ஆறு நூற்பாக்களில் விளக்குகிறது. எழுவாய் வேற்றுமையாகப் பெயர் மட்டும் வெளிப்பட்டு நிற்கும். அதற்குத் தனி உருபுகள் இல்லை. இதனை,

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே (தொல். சொல். 65)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சிலர் உருபில்லாததால் எழுவாய் வேற்றுமையை ஒரு வேற்றுமையாகக் கொள்ளாதது சரியன்று என்பதை ஏ. ஆதித்தன், ''உருபின்மை காரணமாக எழுவாய்

வேற்றுமை ஒரு வேற்றுமை இல்லை என்பாரும் உண்டு. வேற்றுமை உறவு நிலையினை வெளிப்படுத்திக்காட்டும் வடிவுதான் வேற்றுமை உருபேயொழிய, உருபுதான் வேற்றுமை என்பதும் உருபின்மையால் இது ஒரு வேற்றுமை அன்று என்பதும் ஏற்கத்தக்கதன்று.

இலக்குவனார் (1957:22), கமில் சுவலபில் (1963:15) போன்றோர் இன்மை வடிவத்தினை (Zero morph) எழுவாய் வேற்றுமையின் உருபாகச் சுட்டியுள்ளனர்”[16] என்று கூறுகிறார்.

தொல்காப்பியக் கருத்தைப் பிற்றை இலக்கணிகள் அனைவரும் ஏற்கின்றனர்.

பெயர் எழுவாய் வேற்றுமையாம் (நேமி. 41 :1)

என்று நேமிநாதமும்,

எழுவாய் உருபுதிரிபு இல் பெயரே (நன். 295)

என்று நன்னூலும் குறிக்கின்றன.

இலக்கண விளக்கம் (இ.வி.197), தொன்னூல் விளக்கம் (தொ.வி.56), தமிழ்க் காப்பு இயம்(த.கா.இ.250) ஆகியவையும் நன்னூலைப் பின்பற்றி எழுவாயுருபு திரிபில் பெயரே என்று விளக்குகின்றன.

இலக்கணக்கொத்து எழுவாய் வேற்றுமையின் இலக்கணத்தை,

எழுவாய் வேற்றுமைக்குஉருபே இன்று;
பெயரே, பயனிலை கொள்ளும் தன்மையே
பயனிலை தன்னைக் கொண்ட தன்மையே
வினைமுதல் ஆதலே, விகாரப் பெயரே
பெயர்ப்பின் விகுதி பெறுதலே, ஆயவன்
ஆனவன் ஆவான் ஆகின்றவன் முதல்
ஐம்பால் சொல்லும் பெயர்ப்பின் அடைதலே
உருபு என வெவ்வேறு உரைத்தார் பலரே

என்று விரிவாக விளக்குகிறது (இ. கொ. 25).

முத்துவீரியம்,

எழுவா யுருபு பெயர்தோன்று நிலையே (மு.வீ.பெயர்.54)

என்கிறது.

சுவாமிநாதம், இலக்கணக் கொத்தைப் பின்பற்றி,

-----------எழுவாய்க்கு உருபின்று என்பார்
ஊற்றுபெயர் தோன்றல், வினை முதலாதல், பயனை
யுறுதல்வினை யுறுதல்,விகா ரப்பெயர்பின் விகுதி
ஏற்றல் உருபு என்பர்; - (சு.நா.41: 4-7)

என்கிறது.

இனிய தமிழ் இலக்கணம் முன்னைய இலக்கணிகளைப் பின்பற்றி, முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை, பெயர் வேற்றுமை எனப்படும். செய்பவன் வினைமுதல், கருத்தா எனப்படும். இதற்குத் தனியாக உருபு கிடையாது என உரைக்கிறது. (இ.த.இ. 103). மேலும், இருவகை கருத்தா குறித்து,

தானே செய்வோன் இயற்றுங் கருத்தா;
ஏவி முடிப்போன் ஏவுங் கருத்தா (இ.த.இ.104)

என்று விளக்குகிறது.

இக்கருத்தையே இலகுதமிழ் ஐந்திலக்கணமும்,

"ஒன்றன் வேற்றுமைக் குருபிலை இயல்பாம்" (இ.த.ஐந்.211:3)

எனவும்,

கருத்தாப் பொருளில் வரும் முதல் வேற்றுமை,
உருபினைத் தனியே ஏலாதென்றும்.
கருத்தா இருவகை இயற்றுதல் ஏவுதல் (இ.த.ஐந்.216:1-3)

எனவும் கூறுகிறது. தென்னூல், பெயரே முதல் வேற்றுமைக்கு உருபாம் (தென். சொற். 41) எனவும், எழுவாய் வேற்றுமை, வினைமுதல் வேற்றுமை, பெயர் வேற்றுமை ஆகிய மூன்றும் முதல் வேற்றுமையைச் சுட்டும் பெயர்க் குறியீடுகளாகும் என நவில்கிறது (தென். சொற். 43). தமிழ்நூல்,முன்னையோரை அடியொற்றி,

முதல் வேற்றுமை முழுப்பெயர்மட் டுருபே. (த.நூ.70) என்றும்,

வினைமுதல் தானேஎழுவாய் ஆகும் (த.நூ.71)

என்றும் குறிப்பிடுகிறது.

தே. ஆண்டியப்பன், "பெயர் வேற்றுமை மற்றொரு வகையிலும் சிறப்படைதல் உண்டு. அது வினையை அவாவியும், பண்பினை உணர்த்தியும் நிற்கும். வினை

ஏற்கும் போது தனது பொருண்மைக்கேற்ற வினையை எதிர்கொள்ளும்''[17] என்று கூறுவது பெயர் வேற்றுமையின் சிறப்பைப் புலப்படுத்தும்.

எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகள்

எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகளாகத் தொல்காப்பியம்,

1. பொருண்மை சுட்டல்
2. வியங்கொள வருதல்
3. வினைநிலை உரைத்தல்
4. வினாவிற்கு ஏற்றல்
5. பண்புகொள வருதல்
6. பெயர் கொள வருதல்

என்னும் ஆறு பயனிலைகளைக் குறிப்பிடுகிறது (தொல். சொல். 66) நேமிநாதமும் இவ்வாறு பயனிலைகளையே சுட்டுகிறது (நேமி. 41).

தொகைச்சொல் எழுவாய் ஆதல்

எழுவாய் வேற்றுமை தனியொரு பெயராக வருவதோடல்லாமல் பெயரும், பெயரும் சேர்ந்த பெயர்த்தொகைகளும் எழுவாயாக வருவதுண்டு (தொல். சொல். 67) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தென்னூல் இக்கருத்தை வழிமொழிந்துள்ளது (தென். சொற். 47).

எழுவாய் வெளிப்பட்டுப் பயனிலைகொள்ளுதல்

தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடப்பெயர்களும் வெளிப்படையாகத் தோன்றிப் பயனிலை கொள்ளுதலே சிறந்தது என்பதை,

எவ்வயின் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்விது என்ப (தொல்.சொல்.68)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது. இலக்கண விளக்கம் இந்நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ.வி.198).

பெயரில் உருபு நிற்குமிடம்

''வேற்றுமை உருபுகளைக் கொள்ளும் முறையில் திராவிட மொழிகள் அனைத்தும் ஒரே வழியைப் பின்பற்றுகின்றன. ஒருமைக்கும், பன்மைக்கும் கொள்ளப்படும் உருபுகளில் வேறுபாடு இன்று. ஒருமை எண்ணைக் குறிக்குங்கால் வேற்றுமை உருபு பெயருடன் சேர்க்கப்படுகின்றது. பன்மை எண்ணைக் குறிக்குங்கால்

பன்மை அறிவிக்கும் விகுதிகளுடன் வேற்றுமை உருபு சேர்க்கப்படுகின்றது"[18] என்று பெயரில் உருபு நிற்கும் இடம் குறித்து சி.இலக்குவனார் கூறுகிறார்.

தொல்காப்பியம் ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்று கூறப்பட்ட முறைமையினையுடைய வேற்றுமை உருபுகள் தம் நிலையில் திரியாமல் பெயரின் இறுதியிலேயே வரும் என்று கூறுகிறது (தொல். சொல். 69).

இடைச்சொற்களின் இலக்கணங்களில் ஒன்று தம் ஈறு திரிதல் (தொல். சொல். 251). வேற்றுமை உருபுகளும் இடைச்சொற்களே. அவ்வாறிருக்கத் தொல்காப்பியர் உருபுகள் தம் நிலையில் திரியாமல் வரும் என்று கூறியமைக்கு, சேனாவரையர், "வினைச்சொல் இறுதி நிற்கும் இடைச்சொல் தாம் என வேறு உணரப்படாது அச்சொற்கு உறுப்பாய் நிற்கும் அன்றே, இவை (வேற்றுமை உருபுகள்) அவ்வாறு பெயர்க்கு உறுப்பு ஆகாது தாம் என வேறு உணரப்பட்டு இறுதி நிற்கும் என்பார் நிலை திரியாது என்றார்"[19] என்று விளக்கம் தருகிறார்.

இவ்வாறு பெயர்க்கு இறுதியில் உருபுகள் நிற்பது குறித்து ரா. சீனிவாசன், "திராவிட மொழிகளில் வேற்றுமை உருபுகள் பின் நிலைகளாக (post positions) அமைந்துள்ளன. வேற்றுமை உருபுகள் தனிச்சொற்களின் திரிபுகள் என்பது அறிஞர் கால்டுவெல்லின் கருத்தாகும். எல்லா வேற்றுமை உருபுகளையும் இவ்வாறு கொள்ளுதற்கில்லை. பண்டைக்காலத்து இவை சில சொற்களின் ஈறுகளாக இருந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுள்ளது.

இந்தோ, ஐரோப்பிய மொழிகளைப் போல பன்மைக்கு ஒருவகை வேற்றுமை உருபு, ஒருமைக்கு ஒருவகை உருபு என்ற நியதி திராவிட மொழிகளில் இல்லை. பன்மை உருபு சேர்ந்த பிறகே வேற்றுமை உருபு இடம் கொள்ளும்"[20] என்று கூறுவது கருதற்பாலது.

தொல்காப்பியத்தைப் பின்பற்றி பெயர் ஈற்றில் உருபாறும் வரும் என நேமிநாதம் கூறுகிறது (நேமி. 41). நன்னூல்,

ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே (நன். 293)

என்று குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கமும் (இ. வி. 195), முத்துவீரியமும் (மு. வீ.பெயர். 52) நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன. மேலும், நன்னூல் இவ்வுருபுகள் பெயர்க்கு ஈறாய் வரும் என்பதை,

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை (நன்.291)

என்னும் சூத்திரம் வழி விளக்குகிறது.

தென்னூல் இக்கருத்தைப் பின்பற்றி,

> **ஐ ஒடு கு இன் அது கண் என்னும்**
> **சிறப்புருபு ஆறுமப் பெயர்ப்பின் இணைந்து**
> **தம் பொருள் விளக்கும் தகைமைய வாகும். (தென். சொற். 44)**

என்கிறது. பெயர்க்கு ஈறாய் உருபுகள் வரும் என்பது குறித்து முத்துச்சண்முகனார் கள், ஆ, தான், ஓ முதலியவையும் பெயர்க்கு ஈறாய் வருவதைச் சுட்டிக்காட்டி அவ்வாறு வருவன அனைத்தும் உருபுகள் அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறார். ‘‘பெயர்க்கும் ஈறாய் என்பதைப் பெயர்க்கே ஈறாய் என்று கொள்ளுதல் வேண்டும். தான், ஆ, ஓ, கள் முதலிய உருபுகள் பெயர்களோடு மட்டுமன்றி வினைகளோடும் வரும். வந்தானா? காட்டித்தான்; வந்தார்கள்; ஆனால் ஐ, கு முதலிய உருபுகள் பெயர்க்கே உரிய உருபுகளாய் வரும். பெயர் ஒழிந்த மற்றவைகளோடு இவை வாரா’’[21] என்று விளக்குவார்.

பெயர் காலம் காட்டாது

எழுவாய் வேற்றுமையாய் அமையும் பெயர்கள் அனைத்தும் காலத்தைக் காட்டுவதில்லை. ஆயினும் தொழில்நிலை ஒட்டாகிய வினையாலணையும் பெயர் காலத்தைக் காட்டும் (தொல்.சொல்.70) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பெயர் காலம் தோற்றாது என்பதை நேமிநாதமும் (நேமி.41), வினையாலணையும் பெயர் தவிர்ந்த பிற எழுவாய்ப் பெயர் காலம் தோற்றாது எனத் தென்னூலும் (தென். சொற். 49) பதிவுசெய்துள்ளன. இது குறித்து தே. ஆண்டியப்பன், ‘‘தொழில்நிலை ஒட்டு என்னும் ஒன்றைத் தவிர எஞ்சிய பெயர் யாவும் காலம் தோன்றவருவதில்லை. தொழில்நிலை ஒட்டு என்பதிலும் காலம் முக்கியமன்று. புடைப்பெயர்ச்சி அல்லது தொழிலே முக்கியம் என்பர். இவற்றால் பெயர்க்கு இலக்கணம் பயனிலைகோடலும், உருபேற்றலும், காலம் தோன்றாமையும் ஆம் என்று அறிகிறோம்.’’[22] என்று விளக்குகிறார்.

இரண்டாம் வேற்றுமையின் இலக்கணம்

தொல்காப்பியம் இரண்டாம் வேற்றுமை குறித்து,

> **இரண்டா குவதே**
> **ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
> **எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு**
> **அவ்விரு முதலில் தோன்றும் அதுவே.** (தொல். சொல். 71)

என்று குறிப்பிடுகிறது.

சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார் ஆகியோர் இவ்வேற்றுமை செயப்படுபொருளில் வரும் என்று கூறுகின்றனர்.

சேனாவரையர், ''வினையே, வினைக்குறிப்பு என்றாராயினும் அவற்றின் செயப்படுபொருளே கொள்ளப்படும்''[23] என்கிறார். நச்சினார்க்கினியர், ''வினை, வினைக்குறிப்பு என்பன ஈண்டு ஆகுபெயர்''[24] என்பார்.

தெய்வச்சிலையார் இவர்களிலிருந்து மாறுபட்டு ''வினையென்பது செயல். வினைக்குறிப்பு என்பது அவ்வினையினாற் குறிக்கப்பட்ட பொருள். அ∴தாவது செயப்படுபொருள்''[25] என்பார்.

உரையாசிரியர்களே இவ்வாறு செயப்படு பொருளில் வருவதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமை செயப்படு பொருளில் வரும் என்பதை நேரடியாகக் கூறவில்லை. தெரிநிலை வினை, குறிப்புவினை இரண்டின் அடிப்படையில் தோன்றும் என பொதுவாகவே கூறியுள்ளார். மேலும் இரண்டாம் வேற்றுமையின் பொருட் பாகுபாடுகளாக இருபத்தெட்டனைக் குறிப்பிடுகிறார். காப்பு, ஒப்பு, ஊர்தி, இழை, ஓப்பு, புகழ், பழி, பெறல், இழவு, காதல், வெகுளி, செறல், உவத்தல், கற்பின் (கற்றல்), அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், நிறுத்தல், அளவு, எண், ஆக்கல், சார்தல், செலவு, கன்றல், நோக்கல், அஞ்சல், சிதைப்பின் என 28 பொருட்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவற்றைச் சேனாவரையர்

1.) இயற்றப்படுவது 2.) எய்தப்படுவது 3.) வேறுபடுத்தப்படுவது என்ற மூன்று பிரிவுகளுள் அடக்குகிறார்[26].

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' என்பதில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளனர். நேமிநாதம் மட்டுமே அது வினையும், வினைக்குறிப்பும் பற்றி வரும் என்பதைக் குறிப்பிட்டுள்ளது (நேமி. 42).

மூன்றாம் வேற்றுமையின் இலக்கணம்

தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமை உருபாக 'ஒடு' என்பதைக் குறிப்பிடுகிறது. இது 1. வினைமுதல் 2. கருவி ஆகிய இரண்டையும் பொருளாக உடையது (தொல். சொல். 73) என்று குறிப்பிடுகிறது. தென்னூல், 'ஒடு' உருபைக் குறிப்பிடுவதில் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது (தென். சொற். 51). தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பியத்தை அடியொற்றி 'ஒடு' உருபைக் குறிப்பிடுவதுடன் அது வினைமுதல், கருவி ஆகிய பொருள்களில் வரும் என்பதையும் ஏற்கிறது. (த.கா.இ.253).

மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருட்பாகுபாடுகள்

தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருட்பாகுபாடுகளாக ஒன்பதைக் குறிப்பிடுகிறது. இதனை,

அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனின் கோடல் அதனொடு மயங்கல்
அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி
அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி
அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை
இன் ஆன் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார். (தொல். சொல். 74)

என்னும் நூற்பா புலப்படுத்தும். தமிழ்க் காப்பு இயம் இந்நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த. கா. இ.256).

நான்காம் வேற்றுமையின் இலக்கணம்

நான்காம் வேற்றுமைக்குரிய உருபு ‘கு’ என்பதாகும். அது எந்த ஒரு பொருளாயினும் அதனை ஏற்று வரும் பொருண்மையினை உடையதாகும். இதனை,

நான்கா குவதே
கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொருள் ஆயினும் கொள்ளும் அதுவே. (தொல். சொல். 75)

என்னும் நூற்பா விளக்கும். மேலும் அதன் பொருட்பாகுபாடுகளாக அதற்கு வினையுடைமை, அதற்கு உடம்படுதல், அதற்குப் படுபொருள், அதுவாகு கிளவி, அதற்கு யாப்புடைமை, அதன் பொருட்டாதல், நட்பு, பகை, காதல், சிறப்பு ஆகிய பத்தனைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 76).

தமிழில் பெருமளவில் பயன்படுத்தப் பெறும் வேற்றுமை உருபாக நான்காம் வேற்றுமை உருபு திகழ்கிறது. இது குறித்து அருச்சுன. தட்சிணாமூர்த்தி, ‘‘திசைப்பெயர்கள் ஆகிய வடக்கு, தெற்கு என்பவற்றின் ஈற்றிலுள்ள ‘கு’ வும், நான்காம் வேற்றுமை உருபாகிய ‘கு’ வும் தொடர்புடையனவாதல் வேண்டும் என்று கால்டுவெல் கருதுகிறார்.

எனக்குத் தெரியும்

எனக்குப் பசிக்கிறது

எனக்குப் புரிகிறது

எனக்குத் தலைவலிக்கிறது.

என்பன போன்ற நூற்றுக்கணக்கான சொற்றொடர்களில் குகரம் வருகிறது. இவ்வாறு தமிழில் மிகப் பெருவாரியான குகர வேற்றுமைச் சொற்கள் உணர்வுப் பண்பைக் (Experience) காட்டுவனவாக உள்ளன. பில்மோர் (Filemore) என்பார் இதனை உணர்வாளர் வேற்றுமை (Experiencer Case) என்று கூறுகிறார் என ச.அகத்தியலிங்கம் சுட்டிக்காட்டுகிறார்”[27] என எடுத்தியம்புகிறார்.

நேமிநாதம் தொல்காப்பியத்தை அடியொற்றி குகர உருபு நான்காம் வேற்றுமை; அஃது எவ்விடத்தும் ஈபொருளை ஏற்று நிற்கும் என விளம்புகிறது (நேமி. 43) சுவாமிநாதம் இக்கருத்தைப் பின்பற்றி, நான்காம் வேற்றுமை உருபு ‘கு’ ஆகும். அது வினை முதல் கொள்வோனாய்க் கொடைப்பொருளின் வினைச்சொல்லும் பெயர்ச் சொல்லும் பயனிலையாகக் கொண்டு முடியும் என்று விளக்குகிறது (சு. நா. 42). தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த. கா. இ. 257, 259).

ஐந்தாம் வேற்றுமையின் இலக்கணம்

தொல்காப்பியம் ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபாக ‘இன்’ உருபைச் சுட்டுகிறது. மேலும் அவ்வுருபு இப்பொருளை நோக்க இப்பொருள் இத்தன்மையினை உடையது என்று உணர்த்துவதாய் அமையும் என்றும் குறிப்பிடுகிறது. (தொல்.சொல்.77)

‘இன்’ உருபை ஐந்தாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடுவதில் நேமிநாதம் (43), தென்னூல் (சொற்.58) ஆகியவை தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன. தமிழ்க் காப்பு இயம், தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த.கா.இ. 260).

ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமை, தான் சுட்டும் பொருளின் அடிப்படையில் உடைமைப் பொருள் வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது. உருபின் காரணமாக இவ்வேற்றுமை அது வேற்றுமை எனவும் சுட்டப்பெறும். இதனைக் கிழமை வேற்றுமை என்றும் கூறுவர். தன்னோடு பிரிக்க முடியாததாய் நிற்கும் தற்கிழமை, தன்னின் வேறாகிய பிறிதின்

கிழமை என்னும் இருவகைக் கிழமைப் பொருள்களிலும் இவ் ஆறாம் வேற்றுமை வரும். ஆறாம் வேற்றுமை குறித்துத் தொல்காப்பியம்,

ஆறா குவதே

அதுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

தன்னினும் பிறிதினும் இதனது இது எனும்

அன்ன கிளவிக் கிழமைத்து அதுவே (தொல். சொல். 79)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது.

தற்கிழமை, பிறிதின் கிழமையின் வகைகளை,

தற்கிழமையின் வகைகள்

1. ஒன்று பல குழீஇய தற்கிழமை - எள்ளது குப்பை
2. வேறு பல குழீஇய தற்கிழமை – படையது குழாம்
3. ஒன்றியற் கிழமை - சாத்தனது இயற்கை
4. உறுப்பின் கிழமை – யானையது கோடு
5. மெய் திரிந்தாய தற்கிழமை - சாத்தனது தொழில்

பிறிதின் கிழமை

1. பொருளின் கிழமை - காட்டது யானை
2. நிலத்தின் கிழமை – யானையது காடு
3. காலத்தின் கிழமை - வெள்ளியது ஆட்சி

என்று சேனாவரையர் பட்டியலிடுகிறார்.[28]

நேமிநாதம் தொல்காப்பியத்தைப் பின்பற்றி அது என்பது ஆறாம் வேற்றுமை. அதுதான் தற்கிழமையினும், பிறிதின் கிழமையினும் இதனது இது என்று நிற்கும் என்று குறிப்பிடுகிறது (நேமி. 44).

ஏழாம் வேற்றுமை

கண் எனப் பெயர் பெற்ற ஏழாம் வேற்றுமை தொழில் நிகழ்கின்ற 1. இடம் 2. நிலம் 3. காலம் ஆகிய மூவகைக் குறிப்புப் பொருளிலும் வரும் என்பதை,

ஏழா குவதே

கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்

அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே (தொல். சொல். 81)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது.

நேமிநாதம் (நேமி.44), இலக்கணவிளக்கம் (இ.வி.204), ஆகியன இக்கருத்தைப் பின்பற்றியுள்ளன.

வேற்றுமைத்தொகையைப் பிரித்துப் பொருள் காணும் முறை

வேற்றுமைப் பொருள் மறைந்து நிற்றலுண்டு. அதனை விரித்து, வெளிப்படுத்திச் சொல்லும் பொழுது உருபுகள் பெயரீற்றில் நின்று நடக்கும் தொகையிடத்தே இருந்து பிரியும். அவ்வாறு பிரிந்து பல முறைகளின் படிபொருள் தந்து இசைக்கும் அனைத்துச் சொற்களும் அங்ஙனம் விரித்தற்குரியவாம் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 83).

இலக்கணவிளக்கமும் (இ.வி.225) முத்துவீரியமும் (மு.வீ.பெயர்.69) தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

வேற்றுமை மயங்கியல் - ஒத்தமரபு

ஒரு வேற்றுமை உருபு மற்றொரு வேற்றுமை உருபுடன் மயங்கி வருவதும் ஒரு வேற்றுமைக்குரிய பொருள் மற்றொரு வேற்றுமைக்குரிய பொருளாக மயங்கி வருவதும் வேற்றுமை மயக்கம் எனப்படும். தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியலில் 1 முதல் 17 ஆம் நூற்பா வரை பொருள் மயக்கத்தை விளக்கி, 18 ஆம் நூற்பாவில் பொருள் மயக்கத்திற்குப் புறனடை கூறி, 19 முதல் 28 ஆம் நூற்பா வரை உருபு மயக்கத்தை விளக்குகிறார்.

தொல்காப்பியர் வேற்றுமை மயக்கத்திற்கான விளக்கத்தைக் கூறவில்லை. நேரடியாக எவ்வெவ் வேற்றுமை எவ்வெவ் வேற்றுமையுடன் மயங்கும் என்பதை விளக்குகிறார்.

சினைப்பெயரில் ஐ, கண் உருபுகள் வருதல்

உறுப்பைச் சுட்டிக் கூறும் சொல்லுக்கு ஐ உருபும், கண் உருபும் வினை முடிபை ஏற்றற் கண் ஒத்து வரும் (தொல். சொல். 85) என்னும் தொல்காப்பியக் கருத்தைப் பின்பற்றி முத்துவீரியம்,

சினைநிலைக் கிளவிக்கு இரண்டு மேழும்
வினைநிலை யொக்கு மென்மனார் புலவர் (மு.வீ.பெயர். 70)

என உரைக்கிறது. தென்னூலும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளது (தென்.சொற்.75).

கன்றல், செலவுப் பொருளில் மயங்குதல்

கன்றல், செலவு ஆகிய பொருள்களில் வருபவை இரண்டாம் வேற்றுமைக்குரியவை. இவற்றிற்கு ஏழாம் வேற்றுமையும் பொருந்தி வரும் (தொல். சொல். 86) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் மட்டுமே பதிவு செய்துள்ளது (மு.வீ.பெயர். 71)

முதல், சினைப் பொருள்களில் உருபு மயங்குதல்

முதற்சொல்லும், சினைச்சொல்லும் தொடர்ந்து வந்த வாக்கியத்தில் முதல் சொல்லுக்கு அது வேற்றுமைவரின், சினைச் சொல்லுக்கு ஐ வேற்றுமைவரும் (தொல். சொல். 87) என்றும், முதல் சொல்லுக்கு ஐ வரின் சினைச் சொல்லுக்குக் கண் உருபுவரும் (தொல். சொல். 88) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இக்கருத்துகளைப் பின்பற்றி நன்னூல்,

முதலை ஐயுறின் சினையைக் கண்உறும்
அதுமுதற் காயின் சினைக்கு ஐ ஆகும் (நன். 315)

என்று கூறுகிறது.

இலக்கணவிளக்கம் (இ. வி. 221), சுவாமிநாதம் (சு.நா. 46), தென்னூல் (தென். சொற். 76) ஆகியவை இக்கருத்தைப் பின்பற்றியுள்ளன.

தமிழ்நூல் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த.நூ.305).

முத்துவீரியம் முதலுக்கு ஆறாம் வேற்றுமைவருமாயிற் சினைக்கு இரண்டாம் வேற்றுமை வரும் என்னும் ஒரு கருத்தை மட்டும் ஏற்கிறது (மு.வீ.பெயர்.72).

முதலும்,சினையும் இடம் நோக்கிஉணரப்படும்

முதல் என்பதும், சினை என்பதும் வெவ்வேறல்ல. எது முதல் எது சினை என்பதைச் சொல்லுமிடத்து, அவ்வாறு சொல்லப்படும் சொல்லை வைத்துக் குறிப்பால் உணரப்படும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (தொல்.சொல்.89) மரம் முதலாகும் போது கிளை சினையாகும்; கிளை முதலாகின் கொம்பு அதன் சினையாகும்.

மேலும் பலபொருட் தொகுதியாகிய பிண்டப்பெயரும் முற்கூறிய அவ்வியல்பில் மாறாது. பிண்டமும், அதன் உறுப்பும் முதலும் சினையும் போல் உருபேற்கும் (தொல். சொல். 90) என்கிறது தொல்காப்பியம். நன்னூல் இக்கருத்துகளைப் பின்பற்றி,

முதலிவை சினைஇவை எனவேறு உளவில;
உரைப்போர் குறிப்பின; அற்றேபிண்டமும் (நன். 316)

என்னும் சூத்திரம் வழி விளக்குகிறது.

இலக்கண விளக்கமும், முத்துவீரியமும் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளன (இ.வி. 222, மு.வீ. பெயர். 73). சுவாமிநாதம் இக்கருத்தைப் பின்பற்றி,

-------------------------உரைப்போர் குறிப்பாஞ்

சினைமுதல்கள்; பிண்டமும்அற் றாம்வினவும் பொழுதே (சு. நா.46:7- 8)

என்கிறது. தென்னூலும் இக்கருத்தை ஏற்கிறது (தென். சொற். 77).

ஒருவினை ஒடுச்சொல் உயர்பொருளுடன் வருதல்

மூன்றாம் வேற்றுமையில், 'அதனொடு இயைந்த ஒரு வினைக் கிளவி' எனப்பட்ட ஒரு வினை ஒடுச்சொல், உயர்பொருளில் வரும் பெயரை அடுத்து வரும் என்பதைத் தொல்காப்பியம்,

ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே (தொல். சொல். 91)

என்கிறது. இக்கருத்தை முத்துவீரியம் மட்டுமே பதிவு செய்துள்ளது (மு. வீ.பெயர். 74). இது குறித்து சோ.ந.கந்தசாமி, ''உலக வழக்கில் நாயொடு நம்பி வந்தான் என்ற தொடர் காணப்படுகிறது. நாய், நம்பி இருவரும் வருதல் என்ற ஒருவினை புரியினும், ஒடு உருபினை நம்பிக்குச் சேர்க்காமல் நாய்க்குத் தந்து தொடர் அமைத்தல் வழுவன்றோ என்ற வினாவினை இளம்பூரணர் முதலில் எழுப்பினார். மற்றையோரும் அதே எடுத்துக் காட்டினையே கூறி அவர் வழி விளக்கம் காண முற்பட்டனர். இளம்பூரணர் உயர்வு பலவகைப்படும் என்றும், குலம், தவம், நிலை, உபகாரம் என்பனவற்றில் ஒன்றானும் பலவானும் உயர்வு தோன்றும் என்றும் கருதினார். இவற்றுடன் கல்வி, வினை என்பவற்றையும் சேர்த்துக் கூறினார் நச்சினார்க்கினியர். ஆதலின், நாயொடு என்று இழிந்த பொருட்கு ஒடு கொடுத்துச் சொல்லியது அந்நிலைக்கண் அது சிறப்புடைத்தாகலின் என்று நாயின் உயர்வினைக் குறித்தனர். சேனாவரையர், யாதானும் ஓராற்றான் அதற்கு உயர்வு உண்டாயின் அல்லது அவ்வாறு கூறார் என்று ஒருவாறு நாயும் உயர்வுடையது என்ற கருத்தில் எழுதினார். நாயினை இழிபிறப்பாக இகழினும், நன்றியுணர்வும் தலைவன்பால் காட்டும் பேரன்பும் காரணமாக மிகப்பெரிய யானையினும் உயர்புடையதாகவே நாலடியார் போற்றுகிறது.

யானை அனையவர் நண்(பு) ஒரீஇ நாய்அனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்: எறிந்தவேல்

மெய்யதா வால்குழைக்கும் நாய் (நாலடி.213)

எனவே, நாய் ஓராற்றான் உயர்புடையதாகவே எண்ணப்பெறுதலின், நாயொடு நம்பி வந்தான் என்ற தொடர் வழுவற்றதாகவே கொள்ளப் பெறுதல் வேண்டும் என்பது உரையாசிரியர் நால்வரின் உள்ளம் ஆகும்.''[29] என்று குறிப்பிடுகிறார்.

மூன்றும், ஐந்தும் ஏதுப்பொருளில் மயங்குதல்

இதனால் இது ஆயிற்று என்பதைக் கூறுவது ஆக்கத்தோடு கூடிய காரணச் சொல்லாகும். இதற்கு மூன்றாம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை ஆகிய இரண்டு உருபுகளும் பொருள் நோக்கில் ஒத்த தன்மையைப் பெற்று வரும் (தொல். சொல். 92) என்னும் கருத்தை முத்துவீரியம் மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளது (மு.வீ.பெயர்.75).

நோக்கல் பொருளில் மயங்குதல்

ஒரு பொருளைக் கண்ணால் நோக்காமல் மனத்தால் நோக்குவது நோக்கல் நோக்கமாகும். இரண்டாம் வேற்றுமைக்குரிய இப்பொருள் மூன்றாவதற்கும், ஐந்தாவதற்கும் உரிய காரணப் பொருளிலும் வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.93). இக்கருத்தை முத்துவீரியம் மட்டுமே குறிப்பிட்டுள்ளது (மு.வீ.பெயர்.76).

ஆறாம் வேற்றுமை உயர்திணைத் தொகையை விரித்தல்

உயர்திணைப் பொருண்மையில் ஆறாம் வேற்றுமை உருபு மறைந்து வருகின்ற தொகைச்சொற்கள் உள்ளன. அவற்றை விரித்துக் கூறுகின்றபோது ஆறாம் வேற்றுமைக்குரிய 'அது' என்பதை விடுத்துக் 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபால் கூற வேண்டும் என்பதைத் தொல்காப்பியம்,

அதுஎன் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுஎன் உருபுகெடக் குகரம் வருமே. (தொல். சொல். 94)

என்று குறிப்பிடுகிறது.

தமிழண்ணல், ''உயர்திணை முறைப் பெயரில் இவ்விரு உருபுகளும் ஒத்துவரும்''[30] என்பார்.

முத்துவீரியம் தொல்காப்பியத்தைப் பின்பற்றி உயர்திணைக்கண் நான்காம் வேற்றுமையுருபும், ஆறாம் வேற்றுமையுருபும் ஒரு தன்மையவாம் என்கிறது (மு. வீ.பெயர். 77). தென்னூல்,

உரிமைப் பொருட்கண் உயர்திணைத் தொகைவயின்

அதுஉருபு விரியாது குவ்வுருபு தொடரும் (தென். சொற். 74)

என்று குறிப்பிடுகிறது.

‘அது’ உருபு அ.ஃறிணைக்குரியது ஆதலால் உயர்திணையில் ‘கு’ உருபைப் பயன்படுத்துவது தமிழ் நாகரிகம் என்பர் வ. சுப. மா.[31] எனினும் இது பல இடங்களில் பொருள் மயக்கத்தைத் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்த தே.ஆண்டியப்பன்,

“அண்ணலது மகள் வந்தாள் - அண்ணலுக்கு மகள் வந்தாள்

அண்ணலது மகள் கொடுத்தாள் - அண்ணலுக்கு மகள் கொடுத்தாள்.

இவற்றில் அண்ணலுக்கு மகள் கொடுத்தாள் என்பது பொருள் மயக்கத்தை அளிக்கும். அண்ணலது மகள் என்னும் போது மயக்கமில்லை. எனவே உருபோடு வினைச் சொல்லையும் நினைத்துப் பார்ப்பது நன்று. நம்பியது மகன் என்று எழுதிவிட்டால் ஏதோ பெருந்தவறு நிகழ்ந்து விட்டதாக நினைக்கிறார்கள். அது என்பது அ.ஃறிணைவடிவம்; அதனால் உயர்திணையோடு வருதல் ஆகாது என்பது அவர்களின் வாதம். வந்தது, சென்றது, இருந்தது என்று வினையிறுதியாக வரும் ‘அது’ அ.ஃறிணை ஆகலாம். ஆனால் வேற்றுமை உருபு எவ்வாறு அ.ஃறிணை ஆகும். ஐ, ஆல், கு, இன், கண் போன்ற பிற வேற்றுமைகளுக்குத் திணைகாட்டும் பண்பில்லையே அதற்கு மாத்திரம் திணையை ஏற்றிப் பேசுவது ஏன்? அவனுடைய மகன் என்பதில், உடைய எனும் சொல் திணைகாட்டுகிறதா? அது எனும் ஆறன் உருபு திணைபால் விகுதி போல் ஒத்த வடிவம் பெறுவது தவறில்லையே. He runs, gives, sleeps என்னும் போது S ஒருமை வினைக்குரிய நிகழ்கால உருபு. Pencils, Books, Ladies என்னும் போது S பன்மை காட்டும் உருபு. இரண்டையும் வேறுபடுத்தியன்றோ உணர்கிறோம். ஆறன் உருபினை அவ்வாறு கருதலாமே”[32] என்று கூறி உயர்திணையிலும் ஆறன் உருபு வருவதே பொருத்தமுடையது என்று நிறுவுகிறார்.

தடுமாறு தொழிற்பெயரில் மயங்குதல்

பொருள் கொள்வதில் தடுமாற்றத்தைத் தருவதாய்த் தொழிலோடு தொடர்ந்து வரும் பெயர் தடுமாறு தொழிற்பெயர் ஆகும். இவ்வாறு வரும் தொடரில் இரண்டாம் வேற்றுமையும், மூன்றாம் வேற்றுமையும் ஒத்தநிலையில் வரும் (தொல். சொல். 95) (எ.கா. புலி கொல் யானை) என்னும் கருத்தை முத்துவீரியமும், தென்னூலும் ஏற்கின்றன. (மு. வீ.பெயர். 78, தென். சொற். 71).

மேலும், அவ்வாறு வரும் தடுமாறு தொழிற்பெயரின் இறுதியிலுள்ள பெயருக்குப் பிறகு, ஐயத்தை நீக்குமாறு வரும் சொற்களைக் கொண்டு, குறிப்பால் பொருளைத் தெளிவாக உணர்வர் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 96).

ஓம்படைக் கிளவியில் மயங்குதல்

பாதுகாத்தல் என்னும் பொருளைத் தருகின்ற சொல் வேற்றுமைத் தொகையாய் நிற்கும். அத்தொகைச்சொல் இரண்டாம் வேற்றுமை உருபைக் கொண்டும் (ஐ) மூன்றாம் வேற்றுமை உருபைக் கொண்டும் (ஆன்) பொருள் விரிக்கப்பெறும் (தொல். சொல். 97) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

முத்துவீரியம் இக்கருத்தை,

இரண்டும் மூன்றும் ஓம்படைக் கொக்கும் (மு. வீ.பெயர். 80)

என்றும், தென்னூல்,

ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனுமாம் (தென். சொற். 70)

என்றும் குறிப்பிடுகின்றன.

வாழ்ச்சிக் கிழமையில் மயங்குதல்

ஆறாம் வேற்றுமைக்குரியது வாழ்ச்சிக் கிழமையாகும். அக்கிழமைப் பொருள் வாழும் நிலத்தின் உரிமை காரணமாக ஏழாம் வேற்றுமை உருபையும் பெற்று வரும் (தொல். சொல். 98) என்னும் கருத்தை ஏற்று முத்துவீரியம்,

ஆறும் ஏழும் வாழ்ச்சியொடு சிவணும் (மு. வீ.பெயர். 79)

என்கிறது.

கொடைப்பொருளில் மயங்குதல்

கொடைப்பொருளை உணர்த்தும் தொகைச்சொல் (நான்காம் வேற்றுமைஉருபாகிய ‘கு’ மறைந்து வருவது) குத்தொக வரும் கொடை எதிர் கிளவியாகும். இத்தொகைச்சொல் நான்காம் வேற்றுமை உருபே அன்றி ஆறாம் வேற்றுமை உருபைக் கொண்டு விரிப்பதற்கும் உரிமை உடையதாகும் (தொல். சொல். 99)என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இக்கருத்தை முத்துவீரியம்,

நான்கும் ஆறும் கொடையெதிர்க் காக்கும் (மு.வீ.பெயர்.81)

என்றும், தென்னூல்,

கொடைஎதிர் கிளவிக்கு நான்கும் ஆறுமாம் (தென். சொற். 72)

என்றும் ஒத்தமரபைக் கொண்டுள்ளன.

அச்சப்பொருளில் மயங்குதல்

அச்சக்கிளவி என்பது அச்சப்பொருள் தரும் வேற்றுமைத்தொடர். இது இரண்டாம் வேற்றுமையில் 'அஞ்சலின்' என்றும் (தொல். சொல். 78) ஐந்தாம் வேற்றுமையில் 'அச்சம்' (தொல்.சொல்.72) என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே அவ்வச்சம் பற்றிய தொகைநிலைத் தொடரை ஐந்தாம் வேற்றுமையைக் கொண்டும், இரண்டாம் வேற்றுமையைக் கொண்டும் விரிக்கலாம். இவை இரண்டும் ஒத்த உரிமையுடையன (தொல். சொல். 100) என்னும் கருத்தை முத்துவீரியமும் (மு. வீ.பெயர். 82) தென்னூலும் (தென்.சொற்.73) ஏற்றுக்கொண்டுள்ளன.

வேற்றுமை மயக்கத்திற்குப் புறனடை

உருபாலும், பொருளாலும் ஒன்று நிற்க வேண்டிய இடத்து மற்றொன்று சென்று தன் பொருளில் நீங்காமல் பிறிதொன்றன் பொருளாகிய இரண்டு இடங்களிலும் நிலைபெறும். அவை இலக்கணநெறி அறிந்தவர்க்கு மாறுபாடு உடைதாய்த் தோன்றுவதில்லை (தொல். சொல். 101) என்று தொல்காப்பியம் வேற்றுமை மயக்கத்திற்குப் புறனடை கூறுகிறது.

நேமிநாதம் இக்கருத்தை அடியொற்றி ஒரு வேற்றுமைக்கு உரிய இடத்தே பிறிதொரு வேற்றுமை தோற்றவும் பெறும் என்கிறது (நேமி. 45). தென்னூலும் தொல்காப்பியக் கருத்தைப் பதிவுசெய்துள்ளது. (தென். சொற். 85)

உருபுகள் அடுக்கி வருதல்

உருபுகள் பல அடுக்கி வந்த சொற்கள் தொடராக அமையும். அவ்வேற்றுமைத் தொடர்கள் பொருளுணர்த்தும் பாங்கில் ஒரு முடிக்குஞ் சொல்லினால் முற்றுப்பெறும் (தொல். சொல். 102) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நன்னூல் இக்கருத்தை,

உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுற முடியும் (நன். 355)

என்னும் சூத்திர வழி புலப்படுத்துகிறது. இலக்கண விளக்கம் இக்கருத்தை,

உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக்கிளவி

பொருள்சென் மருங்கின் ஒருசொல்லான் முடிதலும் (இ. வி. 328: 1 - 2)

என்று விளக்குகிறது.

தொடர்களில் உருபு நிற்கும் இடங்கள்

ஐ முதல் கண் ஈறாகக் கூறப்பட்ட உருபுகள் அனைத்தும் வேற்றுமைத் தொடரின் இறுதியிலும், இடையிலும் தமக்குக் கூறிய பொருளில் வரும் (தொல். சொல். 103) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நன்னூல் இக்கருத்தையே,

எச்சப் பெயர் வினைஎய்தும் ஈற்றினும் (நன். 357)

என்னும் சூத்திர வழி புலப்படுத்துகிறது. முத்துவீரியம் இக்கருத்தை,

வேற்றுமை யீற்றினு நிற்பினும் வரையார் (மு. வீ.பெயர். 83)

என்கிறது.

பிறிதோர் உருபு ஏற்றலும், உருபு மறைந்து வருதலும்

ஓர் உருபு பிறிதோர் உருபை ஏற்று வருதலும் (சாத்தனதனை - ஆறாம் வேற்றுமை உருபு 'அது' ஐ உருபை ஏற்றது) உருபுகள் மறைந்து வருதலும் வழக்கைச் சார்ந்தவை என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 104). நேமிநாதம் இக்கருத்தை, உருபு தொகவருதல், வந்து ஒன்றின் ஒன்று ஏற்றல் மெய்ந்நூல் துணிபு (நேமி.45) என்றும், தேறவரு உருபு தான் தொக்க இடத்துடனே தொக்கும் (நேமி. 46) என்றும் நவில்கிறது. நன்னூல்,

ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே (நன். 293)

என்னும் சூத்திரம் வழி ஓருருபு பிற உருபை ஏற்று வருமென்பதைப் புலப்படுத்துகிறது. இலக்கண விளக்கமும் இச்சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ. வி. 195). முத்துவீரியம் தொல்காப்பியக் கருத்தைப் பின்பற்றியுள்ளது (மு.வீ. பெயர். 85).

ஈற்றில் மறைந்துநிற்கும் உருபுகள்

ஐயும்,கண்ணும் மட்டுமே தொடர் மொழிக்கண் ஈற்றில் மறைந்துவரும். அல்லாத பிற உருபுகள் தொடர்மொழிகளின் ஈற்றில் மறைந்து வருவதில்லை (தொல். சொல். 105) என்னும் கருத்தைப் பின்பற்றி நேமிநாதம்,

இருசொல் இறுதி இரண்டேழ் அலாத

உருபு தொகாதென் றுரைப்ப (நேமி. 46 : 1-2)

என்கிறது. இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ.வி.331). தென்னூல் இக்கருத்தைப் பின்பற்றி,

எல்லா உருபும் இடைக்கண் தொகும் மற்று

ஐயும் கண்ணும் ஈற்றினும் தொகுமே. (தென். சொற். 78)

என்று சுட்டுகிறது.

பொருள் வழியேதான் உருபு செல்லும்

எந்த ஓர் உருபினாற் கூறப்பட்டதாயினும் அவ்வுருபின் பொருளே வேண்டுமென்பதில்லை; அத்தொடரால் எப்பொருள் உணரப்படுகிறதோ அப்பொருளையே அவ்வேற்றுமையுருபு உணர்த்தும். பொருள் போகும் வழியிலேயே உருபுபோகுமே தவிர, உருபுக்குரியதிப் பொருள் என, உருபுவழியில் பொருள் செல்லாது என்பதாகும். இக்கருத்தைத் தொல்காப்பியம்,

யாதன் உருபின் கூறிற்று ஆயினும்

பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும் (தொல். சொல். 106)

என்று குறிப்பிடுகிறது. நன்னூல் (317),முத்துவீரியம் (பெயர். 84),தென்னூல் (சொற்.81) ஆகியன இந்நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன. இலக்கணக் கொத்து,

ஓர்உரு பிற்குஓர் பொருளே உரிமை

வேறு பொருளையும் விளம்பும் என்க. (இ. கொ. 51)

என்று கூறுகிறது. மேலும், ஒவ்வொரு வேற்றுமையும் அது உணர்த்தும் பொருளோடு வேறு பொருளையும் உணர்த்திவரும் என்று இயம்புகிறது (இ.கொ. 52-58).

எதிர்மறையிலும் உருபுகள் பொருள் மாறாமை

வேற்றுமைத் தொடர்களை உடன்பாட்டில் கூறாமல் எதிர்மறையாலும் கூறுவர். அந்நிலையில் அவ்வேற்றுமை உருபுகள் தத்தமக்குக் கூறப்பட்ட பொருள்களிலிருந்து மாறுபடாமல் நிற்கும் (தொல். சொல். 107) என்னும் தொல்காப்பியக் கருத்தை நன்னூல் (நன். 354), இலக்கண விளக்கம் (இ.வி. 327), முத்துவீரியம் (பெயர். 86), தென்னூல் (தென். சொற். 83) ஆகியன பின்பற்றியுள்ளன.

செய்யுளில் கு, ஐ, ஆன் உருபு இறுதிஅகரம் பெறுதல்

பெயரின் பின்வரும் கு, ஐ, ஆன் என்ற வேற்றுமை உருபுகளின் இறுதி செய்யுளுள் வரும் போது, அகரத்தொடும் பொருந்தும் (தொல். சொல். 108) என்றும், அவற்றுள் கு, ஐ ஆகிய இரு உருபுகளும் அ்.றிணைக்கண் ஈறாக நின்று அகரம்

பெறுதல் இல்லை என்பர். உயர்திணையில் மட்டும் அகரம் பெறும். எனவே ஆன் உருபு மட்டுமே உயர்திணையிலும், அஃறிணையிலும் அகரம் பெறும் என்றும் (தொல். சொல். 109) தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இவ்விரு நூற்பாக் கருத்துகளையும் நன்னூல் ஒரே சூத்திரத்தில் தந்துள்ளது.

ஐ ஆன் குச் செய்யுட்கு அவ்வும் ஆகும்
ஆகா அஃறிணைக்கு ஆன்அல் லாதன (நன். 318)

என்று நவில்கிறது.

இலக்கண விளக்கமும் (இ. வி. 223), தொன்னூல் விளக்கமும் (தொ.வி. 64) நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளன. மேலும், முத்துவீரியமும், தென்னூலும் இக்கருத்தை ஏற்கின்றன. (மு.வீ.பெயர்.87,88), தென்னூல் (தென். சொற். 84).

நான்காம் வேற்றுமை பிற பொருள்களோடு மயங்குதல்

பல்வேறு வேற்றுமைப் பொருள்களையும் நான்காம் வேற்றுமையாகக் கூறும் மரபு காணப்படுவதைத் தொல்காப்பியம்,

இதனது இதுஇற்று என்னும் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற்கு ஒத்த கிளவியும்
முறைக் கொண்டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்,
பால்வரை கிளவியும், பண்பின் ஆக்கமும்,
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும், தீர்ந்து மொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்கன் உருபில்
தொன்னெறி மரபின தோன்றலாறே (தொல். சொல். 110)

என்னும் நூற்பா வழி புலப்படுத்துகிறது. இக்கருத்தை இலக்கணக்கொத்து,

எல்லா உருபொடும் கொள்வோன் எழுமே (இ.கொ.47)

என்று எடுத்துரைக்கின்றது.

முத்துவீரியம், நான்கனுருபு வேறு உருபுகளோடு கூடி வருவதைத் தனித்தனி நூற்பாவில் விளக்கினாலும் தொல்காப்பியத்தோடு ஒத்த கருத்துகளையே கொண்டுள்ளது. (மு.வீ.பெயர்.89-97).

தென்னூல் இக்கருத்தை,

உறுப்பும் உறவும் கருவியும் எல்லையும்
உறழ்ச்சியும் நீக்கமும் காலமும் இடனும்
அன்னபிறவும் நான்கன் உருபான்
தொன்னெறி மரபிற் தோன்ற லாறே. (தென். சொற். 79)

என்று விளக்குகிறது.

நான்கனுருபு போலவே ஏனைய உருபுகளும் பிற வேற்றுமைப் பொருள்களைக் குறிக்கும் மரபுடையன (தொல். சொல். 111) என்னும் தொல்காப்பியக் கருத்தின் அடிப்படையில் இலக்கணக் கொத்து மற்ற வேற்றுமை உருபுகள் குறிக்கும் பிற பொருள்களைச் சுட்டிக் காட்டியுள்ளது. அந்த அடிப்படையில் முதல் வேற்றுமைக்கண் பல உருபு வருதலை,

ஒன்று மூன்று-நான்கு ஆறுஎனும் உருபொடு
வருமே வினைமுதல் எனவகுத் தனரே. (இ.கொ.44)

என்றும், செயப்படுபொருட்கண் பல உருபு வருதலை,

எல்லா உருபொடும் செயப்படுபொருள் எழும் (இ. கொ. 45)

என்றும், கருவிக்கண் பல உருபு வருதலை,

ஒன்று மூன்றுநான்கு ஐந்துஆறு உருபொடு
கருவி வரும்எனக் கருதினர் புலவர் (இ. கொ. 46)

என்றும், நீக்கத்தின்கண் பல உருபு வருதலை,

இரண்டு - நான்குஐந்தொடும் எழுமே நீக்கம் (இ. கொ. 48)

என்றும், குறையின் கண் பல உருபு வருதலை,

நான்குஐந்து ஆறுஏ ழொடுகுறை நடக்கும் (இ. கொ. 49)

என்றும், இடத்தின் கண் பல உருபு வருதலை,

ஒன்றுஇ ரண்டுநான்கு ஏழொடு இடம் எழும் (இ. கொ. 50)

என்றும் இலக்கணக் கொத்து குறிப்பிடுகிறது. மேலும், ஓர் உருபிற்கு ஒரு பொருளே உரிமையெனினும் வேறுபொருளையும் விளம்பும் என்ற கருத்தையும் பதிவுசெய்துள்ளது (இ. கொ. 51). சுவாமிநாதம் இக்கருத்தை ஓர் உருபு பல உருபையும் ஏற்கும் என்கிறது (சு. நா. 45).

தொழில் முதல் நிலைகள்

ஒரு தொழில் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணிகளாகத் தொல்காப்பியர் எட்டனைக் குறிப்பிடுவதை,

வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற்கு இதுபய னாக என்னும்
அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
ஆயெட்டு என்ப தொழில்முதல் நிலையே (தொல். சொல். 112)

என்னும் நூற்பா உணர்த்தும். மேலும், அவை அனைத்தும் எல்லா வினையிலும் பொருந்தி வருவதில்லை. அவற்றுள் உலக வழக்கின்கண் சில குறைந்தும் வரும் என்பதையும் பதிவு செய்துள்ளது (தொல். சொல். 113).

இலக்கண விளக்கம் இவ்விரு நூற்பாக்களையும் எடுத்தாண்டு ஒரே நூற்பாவாகத் தந்துள்ளது (இ.வி.226).

விளி வேற்றுமை - ஒத்தமரபு

தொல்காப்பியர்,

வேற்றுமை தாமே ஏழென மொழிப (தொல்.சொல்.62)

என்று முன்னையோர் கருத்தைக் கூறி

விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே (தொல். சொல்.63)

என்று தன் கருத்தை நிலைநாட்டுகிறார். விளி வேற்றுமையின் சிறப்புக் கருதியே தொல்காப்பியர் அதனைத் தனி இயல் வகுத்து விளக்கியுள்ளமையை சூ. இன்னாசி, “தொல்காப்பியர் தனித்துக் கூறப்பட வேண்டியவற்றைச் சிறப்பு நோக்கித் தனியாகக் கூறுவதை சார்ந்து வரல் மரபான குற்றியலுகரத்திற்கு எழுத்ததிகாரப் புணரியல்களில் தனியியல் வகுத்திருப்பதே காட்டும். விளிமரபு என்னும் தனியதோர் இயல் வகுத்தமையான் விளி மரபின் சிறப்புப் புலப்படும். எனவே விளி வேற்றுமையைத் தனித்துக் கூறினாரேயொழியவேறன்று.”[33] என்று கூறும் கருத்து தெளிவுறுத்தும்.

சிலர் விளி வேற்றுமையை வேற்றுமை வகைகளுள் ஒன்றாகக் கொள்ள மறுப்பர். ஏ. ஆதித்தன், “பெயருக்கும், வினைக்கும் இடையே காணப்பெறும் இலக்கண உறவே வேற்றுமை எனில் பெயரின் திரிபாம் விளியினை ஒரு வேற்றுமையாகக் கருதுதல் ஏற்புடைத்தன்று”[34] என்று கூறுவார்.

ஆனால் பெயருக்கும், விளிக்கும் உள்ள வேறுபாட்டை நோக்க, பெயர் வேற்றுமை உருபை ஏற்று வரும்.

தமிழரசியைக் கண்டேன்

தமிழரசிக்குக் கொடுத்தேன்

என்பது போல வரும். இதையே விளி வேற்றுமையில் கூறும் பொழுது தமிழரசி என்னும் பெயர் விளிக்கும் போது இகரம் ஈகாரம் ஆகும் என்னும் விதிப்படி தமிழரசீ என வரும். அவ்வாறு வரும் போது அப்பெயர் வேற்றுமை உருபை ஏற்காது. தமிழரசீயைப் பார்த்தேன் என்று வருவதில்லை. இவ்வேறுபாடு கருதியே தொல்காப்பியர் விளி வேற்றுமையைத் தனியொரு வேற்றுமையாக அமைத்து விளக்கியுள்ளார் என்பதே பொருத்தப்பாடுடையதாகும். மேலும், க.வெள்ளைவாரணன், “வேற்றுமை ஏழெனக் கொள்வோர் விளி வேற்றுமையை எழுவாயுள் அடக்குவர். பிறிதோர் இடைச்சொல்லையேலாது இயல்பாகியும் தானே திரிந்தும் நிற்கும் பெயரின் இறுதி விளியெனப்படும். படர்க்கைச் சொல்லையும், பொருளையும் முன்னிலைச் சொல்லும் பொருளுமாக வேற்றுமை செய்வது விளிவேற்றுமையாதலின் இதனை எழுவாயுள் அடக்காது வேறாகக் கொள்வதே தமது துணிபென்பார்”[35] என்று கூறும் கருத்து இங்குக் கருதத்தக்கது.

விளிவேற்றுமையின் இலக்கணம்

விளி வேற்றுமை எனப்படுபவை, அவ்விளியை ஏற்கும் பெயர்களோடு தெளிவுறத் தோன்றும் இயல்பை உடையனவாகும் என்பதை,

விளிஎனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப. (தொல். சொல். 118)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அங்ஙனம் விளி கொள்ளும் பெயர்களை அவை இவை என அறியுமாறு வழக்கின் கண் வைத்து விளக்கிக் கூறுவர் (தொல். சொல். 119) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

முத்துவீரியம் தொல்காப்பியத்தை அடியொற்றி, விளியென்று கூறப்படுவன தம்மை ஏற்கும் பெயரோடு விளங்கத் தோன்றும் இயல்புடையன (மு. வீ. பெயர். 99) என்று விளக்குகிறது. மேலும் அவை விளிகொள்ளும் பெயர், விளிகொள்ளாப் பெயர்

என இரு திறத்தவாம் (மு. வீ.பெயர், 100) என்று குறிப்பிடுகிறது. தமிழ்க்காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது. (த. கா. இ. 273)

விளியேற்கும் உயர்திணைப் பெயர்கள்

விளியேற்கும் உயிரீறுகள்

தொல்காப்பியம் இ, உ, ஐ, ஓ ஆகிய எழுத்துகளை ஈறாக உடைய உயிரீற்றுப் பெயர்களை விளிகொள்ளும் உயர்திணைப் பெயர்களாகக் குறிப்பிடுகிறது (தொல். சொல். 120).

இக்கருத்தை நேமிநாதம் (நேமி. 49), முத்துவீரியம் (மு. வீ.பெயர். 101), தென்னூல் (தென். சொற். 63), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 133) ஆகியன ஏற்றுக் கொண்டுள்ளன.

இ, ஐ ஈறுகள் விளியேற்றல்

விளியேற்கும் உயிரீறுகளுள் இகர இறுதி ஈகாரமாகும். ஐகார இறுதி ஆய் ஆகும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 121). முத்துவீரியம் இ, ஈயாகும் என்பதை ஏற்கிறது (மு. வீ. 102). தென்னூல் தொல்காப்பியத்தை அடியொற்றி இ, ஈயாதலும் ஐ, ஆய் ஆதலும் நெறி என்கிறது (தென். சொற். 64). தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது. (த. கா. இ. 276).

ஓ, உ ஈறுகள் விளியேற்றல்

ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும் (தொல். சொல். 122)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதனை நேமிநாதம் (நேமி. 49), முத்துவீரியம் (மு. வீ.பெயர். 102) ஆகியன ஏற்கின்றன.

மேலும் இங்குக் குறிப்பிடும் உகரம் குற்றியலுகரம் (தொல். சொல். 123) என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதை முத்துவீரியம் மட்டுமே சுட்டியுள்ளது (மு. வீ.பெயர். 104).

விளியேற்காத உயிரீறுகள்

இ, உ, ஐ, ஓ தவிர்ந்த பிற உயிர் எழுத்துகள் உயர்திணையிடத்து விளிகொள்வதில்லை (தொல். சொல். 124) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் மட்டுமே சுட்டிக்காட்டியுள்ளது (மு. வீ.பெயர். 105).

இகர ஈற்று அளபெடைப் பெயர்கள்

இகர ஈற்று அளபெடைப் பெயர்கள் ஈகாரமாகத் திரியாது இயல்பாய் நின்று விளிகொள்ளும் (தொல். சொல். 125) என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதமும் (நேமி. 49), முத்துவீரியமும் (மு. வீ.பெயர், 106) சுட்டிக் காட்டியுள்ளன.

ஐகார ஈற்று முறைப்பெயர் விளியேற்கும் முறை

முறைப்பெயரில் வரும் ஐகாரஈறு விளியேற்கும் போது 'ஆய்' எனத் திரியாது 'ஆ' எனத் திரிந்து வருவதற்கும் உரியதாகும் (தொல். சொல். 126) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் பின்பற்றியுள்ளது. (மு. வீ.பெயர். 107).

உயிரீறுகள் அண்மைவிளி பெறுதல்

இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிரீற்றுச் சொற்களும் அண்மை விளி ஏற்கும்போது இயல்பாகப் புணரும் (தொல். சொல். 127) என்னும் கருத்தை நேமிநாதம் (நேமி. 49), முத்துவீரியம் (மு. வீ.பெயர். 108) ஆகியன பின்பற்ற, தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது. (த. கா. இ. 279)

விளியேற்கும் புள்ளிஈறுகள்

> **னரலள என்னும் அந்நான்கு என்ப**
> **புள்ளி இறுதி விளிகொள் பெயரே (தொல். சொல். 128)**

என்னும் நூற்பா வழி, உயர்திணைப் பெயர்களுள் ன், ர், ல், ள் என்னும் நான்கு மெய்யெழுத்துகளை ஈறாக உடைய மெய்யீற்றுப் பெயர்கள் விளி கொள்ளும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 128).

நேமிநாதம் ன, ர, ல, ள ஆகிய மெய்யீறுகள் விளி கொள்ளும் முறைபற்றி விளக்குவதன் மூலம் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளமை புலனாகும் (நேமி. 50-52). முத்துவீரியமும் இக்கருத்தை ஏற்கிறது (மு. வீ.பெயர். 109). மேலும் ன, ர, ல, ள தவிர்ந்த பிறபுள்ளி ஈறுகள் விளி கொள்ளாது (தொல். சொல். 129) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் மட்டுமே பதிவு செய்துள்ளது (மு.வீ.பெயர்.110).

னகர ஈற்றுப் பெயர்கள்

'அன்' ஈறு விளிஏற்கும் முறை

'அன்' என்னும் இறுதியையுடைய னகர ஈற்று உயர்திணைப் பெயர் விளி ஏற்கும் போது 'ஆ' எனத் திரியும் (தொல்.சொல்.130) என்னும் தொல்காப்பியக்

கருத்தை நேமிநாதம் (நேமி. 50), முத்துவீரியம் (மு.வீ.பெயர்.111), தமிழ்க்காப்பு இயம் (த.கா.இ.280) ஆகியன ஏற்கின்றன.

மேலும், அன் ஈறு அண்மைவிளியில் னகரம் கெட்டு அகரமாகத் திரிபடையும் (தொல்.சொல்.131) என்னும் கருத்தை நேமிநாதம் (நேமி.50), முத்துவீரியம் (மு.வீ.பெயர்.112), தமிழ்க்காப்பு இயம் (த.கா.இ.281) ஆகியன பின்பற்றியுள்ளன.

விளியில் 'ஆன்' ஈறு இயல்பாதல்

உயர்திணைப்பெயரில்

ஆன் என் இறுதி இயற்கை ஆகும் (தொல்.சொல்.132)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதை நேமிநாதம் ஏற்கிறது (நேமி. 50).

முத்துவீரியமும், தமிழ்க் காப்பு இயமும் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளன (மு.வீ.பெயர். 113), (த.கா. இ. 282).

னகர ஈற்று வினையாலணையும் பெயரும், பண்புப்பெயரும் விளியேற்றல்

'ஆன்' ஈற்றுத் தொழிற்பெயரும், பண்புப்பெயரும் விளியேற்கும் போது 'ஆன்' என்பது 'ஆய்' ஆகத் திரியும் (தொல்.சொல்.133,134) என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதமும் (நேமி. 50), முத்துவீரியமும் (மு.வீ.பெயர்.114,115) ஏற்கின்றன.

னகர ஈற்று அளபெடைப் பெயர் விளியேற்றல்

ஆன் ஈற்று அளபெடைப் பெயர்களும் இகர ஈற்று அளபெடைப் பெயரைப் போல (நூ. 125) மூன்று மாத்திரையின் நீண்டு இயல்பாய் விளியேற்கும் என்பதை

அளபெடைப் பெயரே அளபெடை இயல (தொல். சொல். 135)

என்று கூறுகிறது. நேமிநாதமும் அளபெடைப் பெயர் அளபெடுத்தபடியே இயல்பாய் விளியேற்கும் (நேமி. 50) என்று கூறுகிறது. முத்துவீரியம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (மு.வீ. பெயர். 116).

னகர ஈற்று முறைப்பெயர் விளியேற்றல்

னகரத்தை ஈறாகக் கொண்ட உறவுப்பெயர்கள் விளியேற்கும் போது ஏகாரத்தோடு பொருந்தி நிற்கும் (தொல். சொல். 136) எனும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதம் (நேமி. 50), முத்துவீரியம் (மு. வீ.பெயர். 117), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 287) ஆகியன ஏற்றுக் கொண்டுள்ளன.

ரகர ஈற்றுப் பெயர்கள்

ஆர், அர் ஈறுகள் விளியேற்கும் முறை

ஆர், அர் என்பவற்றை விகுதிகளாகக் கொண்ட ரகர ஈற்றுப் பெயர்கள் 'ஈர்' எனத் திரிந்து விளியேற்பதை,

ஆரும் அருவும் ஈரொடு சிவணும் (தொல். சொல். 138)

என்னும் நூற்பா வழித் தொல்காப்பியம் புலப்படுத்துகிறது.

இக்கருத்தை நேமிநாதம் (நேமி. 51), முத்துவீரியம் (மு. வீ.பெயர், 120), தென்னூல் (தென். சொற்.64), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 285) ஆகியன பின்பற்றியுள்ளன. முத்துவீரியமும், தமிழ்க் காப்பு இயமும் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளன.

ரகர ஈற்று வினையாலணையும் பெயர் விளியேற்றல்

அர், ஆர் ஈற்றுப் பெயர்கள் தொழிற்பெயராக வரும் பொழுது ஈர் என்னும் ஈற்றுடன் ஏகாரத்தையும் பெற்று வரும் என்பதை,

தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின்று என்மனார் வயங்கி யோரே (தொல். சொல். 139)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது தொல்காப்பியம்.

நேமிநாதம் தொழிற்பெயர் ஏகாரம் பெறும் எனக் குறிப்பிடாமல், அர் ஆர் என்னும் பெயர்கள் ஈராய் விளியேற்கும். அவற்றுள் சில ஈரோடு ஏகாரம் பெறும் என்று சுட்டுகிறது (நேமி. 51).

தமிழ்க் காப்பு இயமும் தொழிற்பெயர் எனக் குறிப்பிடாது,

லளர இறுதி ஏயும் ஏற்கும் (த. கா. இ. 286)

என்கிறது.

முத்துவீரியம் தொல்காப்பியத்தை அடியொற்றி,

தொழிற்பெயர்க் கிளவி யேயொடு சிவணும் (தொல். சொல். 121)

என்கிறது.

ரகர ஈற்றுப் பண்புப்பெயர் விளியேற்றல்

அர், ஆர் என்னும் ஈறுகளையுடைய பண்புப்பெயர்களும், ரகார ஈற்றுத் தொழிற் பெயர்களைப் போல ஈர் எனத் திரிந்தும், ஈரொடு ஏகாரம் பெற்றும் விளியேற்கும் (தொல். சொல். 140) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் மட்டுமே பின்பற்றியுள்ளது (மு.வீ.பெயர். 122).

ரகர ஈற்று அளபெடைப் பெயர்கள் விளியேற்றல்

ரகர ஈற்று அளபெடைப் பெயர்களும் னகர ஈற்று அளபெடைப் பெயரைப் போல மூன்று மாத்திரையில் மிகுந்து இயல்பாய் விளியேற்கும் என்பதை,

அளபெடைப் பெயரே அளபெடை இயல. (தொல். சொல். 141)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நேமிநாதமும் இக்கருத்தைப் பதிவு செய்துள்ளது (நேமி. 51). முத்துவீரியம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (மு. வீ.பெயர். 123).

விளியேற்காத ரகார ஈற்றுப் பெயர்கள்

சுட்டெழுத்துகளை முதலாக உடைய அவர், இவர், உவர் முதலான ரகார ஈற்றுப் பெயர்கள் விளியேற்காது (தொல். சொல். 142) என்றும், நும் என்பதன் திரிபாகிய நீயிர், வினாவின் பெயர் யாவர் ஆகிய ரகார ஈற்றுப் பெயர்கள் விளிகொள்ளாது என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (தொல். சொல். 143)

முத்துவீரியம் மட்டுமே இக்கருத்தைப் பதிவு செய்துள்ளது (மு.வீ.பெயர்.124,125).

லகர, ளகர ஈற்றுப் பெயர்கள்

லகார, ளகார ஈற்றுப் புள்ளியீறுகளை உடைய உயர்திணைப் பெயர்கள் விளிகொள்ளும் போது ஈற்றெழுத்துக்கு அயல் நின்ற எழுத்து நீண்டொலிக்கும் (தொல். சொல். 144) என்றும் அயல் நெடிலாக இருந்தால் இயல்பாய் விளிகொள்ளும் (தொல். சொல். 145) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இக்கருத்துகளை நேமிநாதம் (நேமி. 52), முத்துவீரியம் (மு. வீ.பெயர். 124, 127) தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 283, 284) ஆகியன பின்பற்றியுள்ளன.

ளகர ஈற்று வினை, பண்புப் பெயர்கள் விளியேற்றல்

வினைபற்றியும், பண்புபற்றியும் வரும் ஆள் ஈற்றுப் பெயர்கள் 'ஆய்' எனத் திரிந்து விளிகொள்ளும் (தொல்.சொல்.29) என்பதை முத்துவீரியம் ஏற்றுக்கொள்கிறது (மு. வீ.பெயர். 128).

தென்னூல் வினையினும், பண்பினும் என்றெல்லாம் குறிப்பிடாது பொதுவாக

ஆள்ஆன் இறுதி ஆய்ஆ தலும் நெறி (தென். சொற். 64)

என்று கூறுகிறது.

ளகர ஈற்று முறைப்பெயர்கள் விளியேற்றல்

ளகார ஈற்று முறைப்பெயர்களும் னகார ஈற்று முறைப்பெயர்களைப் போல ஏகாரம் பெற்று விளி ஏற்கும் (தொல்.சொல்.147) என்னும் கருத்தை நேமிநாதம் (நேமி.52), முத்துவீரியம் (மு.வீ.பெயர்.129), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.287) ஆகிய நூல்கள் ஏற்கின்றன.

விளியேற்காத ளகர ஈற்றுப் பெயர்கள்

சுட்டெழுத்தை முதலாக உடைய ளகார ஈற்றுப் பெயர்களும், யாவள் என்னும் வினாவின் பெயரும் விளியேலாது என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (தொல். சொல். 148)

முத்துவீரியம் இக்கருத்தைப் பின்பற்றி,

யாவள் அவள் இவள் உவள் விளி யாவே (மு.வீ.பெயர்.130)

என்கிறது.

ல, ள ஈற்று அளபெடைப் பெயர்கள் விளியேற்றல்

லகார, ளகார ஈற்று அளபெடைப் பெயர்களும் னகார ரகார ஈற்று அளபெடைப் பெயர்களைப் போல மூன்று மாத்திரையின் நீண்டு இயல்பாய் விளியேற்கும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 150).

இக்கருத்தை நேமிநாதம் ஏற்றுக் கொண்டுள்ளது (நேமி.52). முத்துவீரியம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (மு. வீ.பெயர். 131).

விரவுப்பெயர்கள் விளியேற்றல்

உயர்திணைக்குரிய பெயர்கள் அஃறிணையில் விரவி வரும் போது உயர்திணைக்குக் கூறப்பட்ட விதிகளின் படியே விளியேற்கும் என்பதை,

கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்

விளம்பிய நெறிய விளிக்கும் காலை (தொல். சொல். 150)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது. நேமிநாதம், தொல்காப்பியத்தை அடியொற்றி,

விரவுப்பேர் எல்லாம் விளிக்கும் கால் முன்னை

மரபிற்றாம் ------------------------------------ (நேமி. 53: 1-2)

என்கிறது. முத்துவீரியமும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி, மெய்யையும், உயிரையும் ஈறாகிய பொதுப்பெயர் முற்கூறிய உயர்திணை நெறியான் விளியேற்கும் (மு. வீ.பெயர். 132) என்று குறிப்பிடுகிறது.

அஃறிணைப் பெயர்கள் விளியேற்கும் முறை

புள்ளியையும், உயிரையும் இறுதியாக உடைய அஃறிணைப் பெயர்கள் விளிகொள்ளும் போது ஏகாரம் பெற்று வரும் (தொல். சொல். 151) என்னும் கருத்தை நேமிநாதம் (நேமி. 53), முத்துவீரியம் (மு.வீ. பெயர். 133) ஆகியன பின்பற்றியுள்ளன. தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.288).

சேய்மை விளியின் இயல்பு

உயர்திணையிலும், அஃறிணையிலும் விளியேற்பனவாகச் சொல்லப்பட்ட பெயர்கள் அனைத்தும் சேய்மையில் உள்ளவற்றை விளிக்குமிடத்து அளபிறந்து இசைக்கும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இக்கருத்தை நேமிநாதம் (நேமி.53), நன்னூல் (நன்.313), இலக்கணவிளக்கம் (இ.வி. 215), முத்துவீரியம் (மு.வீ.பெயர்.135), ஆகிய நூல்கள் ஏற்கின்றன.

தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.289).

விளிவேற்றுமையின் மற்றுமொரு வகைப்பாடு குறித்து முத்துச்சண்முகம், ‘‘பரமசிவம் இதனை மேலும் மதிப்புடை விளி, மதிப்பிலா விளி என ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரிப்பர். நெருங்கிய நண்பர், இளையவர் இவர்களை விளிப்பது மதிப்பிலாவிளி. மற்றவர்களை விளிப்பது மதிப்புடை விளி. மதிப்புடை விளியில் பெயர்கள் மாறுவதில்லை. இராஜேந்திரன். மதிப்பிலா விளிகளில் பெயர்கள் வடிவம் மாறும் - இராஜேந்திரா’’[36] என்று கூறுவது விளிவேற்றுமையின் வளர்ச்சி நிலையைச் சுட்டுகிறது.

‘அம்ம’ என்னும் அசைச்சொல் விளியேற்றல்

‘அம்ம’ என்பது தன் முகமாக அழைக்கும் குறிப்புள்ள உரையசைச்சொல், ‘அம்ம கொற்றா!’ என்றால் ‘கொற்றா’ இதைக் கேள்’ என்பதாம். இவ் ‘அம்ம’ என்னும் உரையசைச்சொல் நீண்டு ‘அம்மா’ என ஆவதுண்டு. ‘அம்மா’ என்னும் முறைப்பெயரோடு இது பொருந்தாதாயினும், இதனையும் விளியேற்ற பெயராகக் கொள்வர் (தொல். சொல். 153) என்னும் தொல்காப்பியக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் முத்துவீரியம்,

அம்ம அசைச்சொல் நீட்டமும் விளிக்கும் (மு.வீ.பெயர்.134)

என்று குறிப்பிடுகிறது. தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (த. கா. இ. 290).

மரபுமாற்றம்

வேற்றுமையின் பெயர்கள்

நன்னூல் உருபு அடிப்படையில் வேற்றுமையின் பெயர்களைக் கூறுகிறது எனினும் மூன்றாம் வேற்றுமையாக ஆல் உருபை முதன்மைப்படுத்துகிறது. இதனை,

பெயரே ஐ ஆல் கு இன் அதுகண்
விளிஎன் றாகும் அவற்றின் பெயர்முறை (நன். 292)

என்னும் சூத்திரம் உணர்த்தும்.

இலக்கண விளக்கம் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ.வி.194).

தொன்னூல் விளக்கமும், சுவாமிநாதமும் நன்னூலைப் பின்பற்றி, வேற்றுமையின் பெயர், முறைகளைக் கூறுகின்றன (தொ.வி.55, சு.நா.41:1-2).

தமிழ்நூல் மூன்றாம் வேற்றுமையின் பெயராக ‘ஆன்’ உருபை முதன்மைப்படுத்துவதை,

பெயரோடு ஐ ஆன் கு இன் அதுகண்
விளியெனும் அவையே வேற்றுமை வகையே (த.நூ.69)

என்பதால் அறிய இயலும்.

இலக்கணக் கொத்து வேற்றுமைகள் உணர்த்தும் பொருளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் பெயர்களைச் சுட்டுகிறது.

வினைமுதல்	-	முதல் வேற்றுமை
விளி	-	எட்டாம் வேற்றுமை
செயப்படுபொருள்	-	இரண்டாம் வேற்றுமை
கருவி	-	மூன்றாம் வேற்றுமை
கொள்வோன்	-	நான்காம் வேற்றுமை
நீக்கம்	-	ஐந்தாம் வேற்றுமை
குறை	-	ஆறாம் வேற்றுமை
இடம்	-	ஏழாம் வேற்றுமை

இவ்வாறு வேற்றுமைகளின் பெயர்களைப் பட்டியலிடுகிறது இலக்கணக் கொத்து (இ.கொ.13).

தென்னூல் வேற்றுமையின் பெயர், முறை குறித்துக் கூறுமிடத்து மூன்று முறைகளால் கூறுகிறது. ஐகார வேற்றுமை, ஒடு வேற்றுமை என உருபுகளானும், இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை என நிரல் நிறையாகிய எண்ணுப் பெயரானும், செயப்படுபொருள் வேற்றுமை, கருவி வேற்றுமை எனப் பொருள் நிலையானும் பெயர் பெறும் என்று கூறுகிறது (தென். சொற். 40).

எழுவாய் உருபு

தொல்காப்பியம் எழுவாயை ‘உருபு’ எனச் சுட்டவில்லை.

ஐ ஒடு கு இன் அது கண் என்னும்
அவ்வா றென்ப வேற்றுமை உருபே (தொல். எழுத்து. 113)

என்றமையால் முதல் வேற்றுமைக்கும், எட்டாம் வேற்றுமைக்கும் உருபில்லை என்பதே அவர்தம் கருத்தாகும். ஆனால் நன்னூல் எழுவாயை உருபுஎனக் குறிப்பிடுகின்றமை,

எழுவா யுருபு திரிபில் பெயரே (நன். 295)

என்பதனால் புலப்படும். மேலும்,

ஒருவன் ஒருத்திபலர் ஒன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதாம் உருபே. (நன். 239)

என பெயர் முதல் இரு நான்கு உருபு எனக் குறிப்பிடுவதன் வழி நன்னூல் பெயரையும் உருபாகக் கருதும் கொள்கையது என்பது புலப்படும்.

நன்னூலை அடியொற்றி இலக்கண விளக்கம் (இ.வி.197), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 56), முத்துவீரியம் (மு.வீ. பெயர். 54), தென்னூல் (சொற். 41), தமிழ்நூல் (த. நூ. 70), தமிழ்க்காப்பு இயம் (த. கா. இ. 250) ஆகியவை பெயரை முதல் வேற்றுமையின் உருபாகக் கொள்கின்றன.

எழுவாய் வேற்றுமையின் சொல்லுருபுகள்

இலக்கணக் கொத்து எழுவாய் வேற்றுமையின் சொல்லுருபுகளாக ஆயவன், ஆனவன், ஆவான், ஆகின்றவன் முதல் ஐம்பாற் சொல்லும் வரும் என உரைத்தனர் பலர் எனக் குறிப்பிடுகிறது. (இ.கொ.25). ஆனால் இவற்றை உருபுகள் எனக் கொள்வது பொருந்தாது என்பதற்கு ஆ.சிவலிங்கனார்,

“ ‘வேலன் வந்தான்’ என ஒருவன் ஒருவனிடம் கூறின் அவ்வேலன் இருவர்க்கும் முன்னர்த் தெரிந்தவனாவான். ‘வேலன் என்பவன் வந்தான்’ என ஒருவன் ஒருவனிடம் கூறின், வந்தவன் பெயர் வேலன் என்பதைத் தெரிவிப்பதாக அமையும். ‘வேலன் ஆனவன் வந்தான்’ எனின், தெரிந்த பலருள் வேலன் என்ற பெயருடையவன் வந்தான் எனப் பெறப்படும். எனவே ஆளவன் என்பவன் போலும். சொற்கள் பொருட் சிறப்புக்காக வருவன என்பது அறியலாம். ஆதலின் உருபுகள் ஆகா. உருபுகள் எல்லாம் இடைச்சொற்கள். அதனால் அவற்றைச் சொல்லுருபுகள் என்பதும் பொருந்தாது. ஏன் எனின் அவை வினைப்பொருள் உடையன”[37] என்று விளக்கம் தருகிறார். இலக்கணக்கொத்தை அடியொற்றி பின் வந்த தொன்னூல் விளக்கம் (தொ.வி.81), சுவாமிநாதம் (சு.நா.41), இனிய தமிழ் இலக்கணம் (103) ஆகியனவும் ஆனவன் முதலான ஐம்பாற்சொற்களை எழுவாய் வேற்றுமையின் சொல்லுருபுகளாகக் கொள்கின்றன. தென்னூல் இவற்றைச் சுட்டிக் காட்டினாலும் அவ்வாறு சொல்லுருபுகள் எனக் கொள்வது வடமொழி வழக்கு என்பதையும் பதிவு செய்துள்ளது (தென்.சொற்.2).

எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகள்

தொல்காப்பியம் எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகளாக ஆறனைக் குறிப்பிட, (தொல்.சொல்.66) நன்னூல் அவ்வாறனையும் வினை, பெயர், பண்புகொள வருதலில் அடக்குவதை,

எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே:
வினை பெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே. (நன். 295)

என்னும் சூத்திரம் வழி அறிய இயலும். இது குறித்து பெ. சுயம்பு, “தொல்காப்பியம் கூறும் ஆறு பயனிலைகளையும் நன்னூல் வினை, பெயர், வினா என்னும் மூன்றனுள் அடக்கியுள்ளது. இப்பகுப்பு முறை அகத்தியத்திலிருந்து தழுவப்பட்டிருக்கலாம் என்பது மயிலைநாதர் கருத்து. இதனை அவரது, பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலையுரைத்தல், வினாவிற்கேற்றல், பண்பு கொள வருதல், பெயர் கொள வருதலென்றன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே என்னுமிவ்வாறும் இம்மூன்றனுளடங்குமெனக் கொள்க.

வினைநிலை யுரைத்தலும் வினாவிற் கேற்றலும்

பெயர்கொள வருதலும் பெயர்ப்பய னிலையே”

என்றார் அகத்தியனாருமென்க. என்னும் உரைப்பகுதியில் உணரலாம்”[38] என்று எடுத்துக்காட்டி விளக்குகிறார். இலக்கண விளக்கம் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ. வி. 197).

தொன்னூல் விளக்கம் பயனிலையை எழுவாயின் பொருளாகக் கூறுகிறது. நன்னூலைப் பின்பற்றி வினை, பெயர், வினா ஆகியவை எழுவாய் ஏற்கும் பொருள்களாகும் என நவில்கிறது (தொ. வி. 56).

இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. 103), தமிழ்நூல் (த. நூ. 73), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 250) ஆகியவையும் நன்னூல் கூறும் பயனிலைகளையே சுட்டுகின்றன.

முத்துவீரியம், தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றுள் பொருண்மை சுட்டல் என்பதனைத் தவிர்த்து வியங்கோள், வினைநிலை, வினா, பெயர், பண்பு ஆகிய ஐவகைப் பயனிலைகளை எழுவாய் ஏற்கும் பயனிலைகளாகக் குறிப்பிடுகிறது (மு.வீ. பெயர். 55).

சுவாமிநாதம், எழுவாய் உருபு வினை முதலாகி வினையையும், பெயரையும் பயனிலையாக ஏற்று வரும் எனக் குறிக்கிறது (சு.நா.42). நன்னூல் குறிப்பிடும் வினாக்கொளல் சுவாமிநாதத்தில் இடம் பெறவில்லை.

தென்னூல் எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகளாக தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றையே சுட்டுகிறது. எனினும் வியங்கொள வருதலை நீக்கி விளி கொள நிற்றலைச் சேர்த்துள்ளது (தென். சொற். 48).

இரண்டாம் வேற்றுமை – மரபு மாற்றம்

தொல்காப்பியர் ஒவ்வொரு வேற்றமைக்கும் ஒரு உருபைக் கூறி அதன் முதன்மைப் பொருளைக் கூறுகிறார். பின்னர் அவ்வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளை அடுத்த நூற்பாவில் தருகிறார். ஆனால் பிற்றை இலக்கண நூல்களில் தமிழ்க்காப்பு இயம் மட்டுமே இம்முறையைப் பின்பற்றி உள்ளது. பிற இலக்கண நூல்களில் இம்முறை காணப்படவில்லை. ஒவ்வொரு வேற்றுமையின் இலக்கணம் மற்றும் உணர்த்தும் பொருள் மட்டுமே கூறப்பட்டுள்ளது. பொருட்பாகுபாடுகள் எனத் தனியாகக் கூறும் வழக்கம் பிற்றை நூல்களில் இல்லை. அந்த வகையில் நன்னூல் இரண்டாம் வேற்றுமை உருபு ‘ஐ’ என்பதை ஏற்றுக் கொண்டு அதன் பொருள்களாக ஆறனை மட்டுமே குறிப்பிடுவதனை,

> **இரண்டாவதன் உருபு ஐயே, அதன் பொருள்**
> **ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்**
> **ஒத்தல் உடைமை ஆதி ஆகும். (நன். 296)**

என்னும் சூத்திரம் புலப்படுத்தும்.

தொன்னூல் விளக்கம் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (தொ. வி. 57).

இனிய தமிழ் இலக்கணம் இரண்டாம் வேற்றுமை இலக்கணமாக நன்னூல் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளது (இ.த.இ.105).

இலக்கண விளக்கம் தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்து அடிப்படையில் இரண்டாம் வேற்றுமையை விளக்குகிறது. இரண்டாவதன் உருபு ‘ஐ’ . அதன் பொருள் இயற்றல், திரித்தல், எய்தல் இது போன்ற பிறவுமாக வரும் செயப்படுபொருளே என இயம்புகிறது (இ. வி. 199). இக்கருத்து சேனாவரையரைத் தழுவி அமைந்ததாகும். இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி பின்வந்த இலக்கணிகள் பலரும் இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமையாகக் குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது.

இலக்கணக் கொத்து இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என்ற பெயராலேயே குறிப்பிடுகிறது. அதன் விரியாக,

1. கருத்துண்டாதல்
2. கருத்தின்றாதல்
3. இருமையும் ஆதல்

4. ஈருருபு இணைதல்

5. கருத்தா ஆதல்

6. அகநிலை ஆதல்

7. தெரிநிலை

ஆகிய ஏழனைக் குறிப்பிடுகிறது (இ.கொ.31). இயற்றப்படுதல், எய்தப்படுதல், வேறுபடுத்தப்படுதல் ஆகியன இவ்வெழு வகையுள் அடங்கும் என்பது இவ்வாசிரியரின் கருத்தாகும்.

முத்துவீரியம் இரண்டாவதன் உருபு ஐ (மு.வீ.பெயர்.57) என்றும் அதன் பயனிலைகளாக காப்பு, ஒப்பு, ஆக்கல், அழித்தல், அடைதல், அஞ்சல், உடைமை ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (மு.வீ.பெயர்.57).

அறுவகை இலக்கணம், ஒரு சொல்லின் இறுதியில் ‘ஐ’ சேருமாகில் அது அச்சொல்லைச் செயப்படுபொருளாகக் காட்டும் என்கிறது (அ.இ.265). இலகு தமிழ் ஐந்திலக்கணம் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி இரண்டாம் வேற்றுமையின் பொருள் செயப்படுபொருள் என்றும், செயப்படு பொருளின் பல வகைகளாக நன்னூல் குறிப்பிடும் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்பனவற்றையும் குறிப்பிடுகிறது (இ. த. ஐந். 217). தென்னூல், நன்னூல் கூறும் பொருள்களில் ஒத்தல், உடைமை ஆகிய இரண்டையும் நீக்கி திரிபுறல் என்பதைச் சேர்க்கிறது (தென். சொற். 50). தமிழ்நூல்,

இரண்டாம் உருபு ஐ; பொருள் செயப்படுபொருள் (த. நூ. 74)

என்கிறது. தமிழ்க்காப்பு இயம் தொல்காப்பியத்தையும், தொல்காப்பிய உரையாசிரியர்களையும் பின்பற்றி,

இரண்டா குவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினையே வினைக்குறிப்பு அவ்விரு முதலிற்
செயப்படு பொருளாய்த் தோன்றும் அதுவே (த.கா.இ.251)

என்று குறிப்பிடுகிறது.

மேலும் இரண்டாம் வேற்றுமையின் பொருட் பாகுபாடுகளாக எய்தல், பொருத்துதல், நோக்குதல், நீத்தல், இயற்றல், காதலித்தல், வேறுபடுதல், அளத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (த. கா. இ. 252).

மூன்றாம் வேற்றுமை பொருட்பாகுபாடுகள் - மரபு மாற்றம்

தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளாக ஒன்பது வகைகளைக் குறிப்பிடுகிறது (தொல். சொல். 74). தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் இப்பாகுபாடுகள் கூறப்பெறவில்லை. எனினும் பெ. சுயம்பு, ‘‘தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமைத் தொடர்களை விவரிக்குமிடத்து அதனொடு மயங்குதல், அதனொடியைந்த ஒரு வினைக்கிளவி, அதனொடியைந்த வேறு வினைக் கிளவி, அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை என்பவற்றையும் குறிப்பிடுகிறது. இவை உடனிகழ்ச்சிப் பொருளுடன் தொடர்புடையனவாகும். ஆனால் தொல்காப்பியம் இப் பொருளை வினைமுதல், கருவியுடன் அடங்கியதாகக் கருதுகிறது’’[39] என்று கூறுவதை நோக்க, இக்காரணம் பற்றியே நன்னூல் உடனிகழ்ச்சிப் பொருளை மூன்றாம் வேற்றுமைப் பொருளாகச் சேர்த்தமை புலப்படும். இக்கருத்தின் அடிப்படையிலேயே தென்னூலும், உடனிகழ்ச்சியாய் வரும் ஒரு வினைக்கிளவியும், வேறு வினைக்கிளவியும், ஒப்பல் ஒப்புரையும் அவை போல்வனவும் ஒடுவாகிய உருபொடு கூடிக் காரணப் பொருள் தருமாயின் மூன்றாம் வேற்றுமைக்குரியதாகும் (தென். சொற். 55) என்று கூறுகிறது.

ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்கள்

தொல்காப்பியம் ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருட் பாகுபாடுகளாக வண்ணம், வடிவு, அளவு, சுவை, தண்மை, வெம்மை, அச்சம், நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை, மென்மை, கடுமை, முதுமை, இளமை, சிறத்தல், இழித்தல், புதுமை, பழமை, ஆக்கம், இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல், பன்மை, சின்மை, பற்றுவிடுதல் ஆகிய இருபத்தெட்டனைக் குறிப்பிடுகிறது.

இவற்றை உரையாசிரியர்கள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது ஆகிய நான்கு பொருண்மைகளுள் அடக்குகின்றனர். தெய்வச்சிலையார் நீங்கல், ஒப்பு ஏது ஆகிய மூன்றை மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

அவிநயமும்,

உவம நீக்கம் எல்லை ஏது என்று
அவை நான் கென்ப ஐந்தாம் உருபே (அவி. 30)

என்று குறிப்பிடுகிறது.

நேமிநாதம் (43), நன்னூல் (299), இலக்கண விளக்கம் (202), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 60), சுவாமிநாதம் (சு. நா. 43), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. 109), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ. த. ஐந். 221), ஆகியவை இந்நான்கு

பொருள்களையே பின்பற்றியுள்ளன. எனினும் இப்பொருண்மைகள் குறித்து ஆராய்வது அவசியமாகிறது.

இது குறித்து, பாலசுந்தரனார், ''ஐந்தாம் வேற்றுமை ஏற்ற சொல் ஓர் அளவையான் எல்லையாக நிற்றல் இதன் வேற்றுமை நிலையாகும்''[40] என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தை, ''உறையூரின் பெரிது வஞ்சி என்பது உறையூரை அளவையாக வைத்துக் கூறுதலாம். உறையூரின் மேற்கு வஞ்சி என்புழி உறையூர் எல்லையாக நின்றது. சோழன் உறையூரின் நீங்கி வஞ்சி சென்றான் என்புழி பிறிது ஒருவகை எல்லையாக நின்றது. எனவே உறழ்ச்சி, எல்லை, நீக்கம் ஆகியவற்றிற்கு ஓர் அளவையாகக் கொண்டு நிற்கும் இவ்வேற்றுமையை அவற்றுள் ஒன்றன் பால்படுத்துக் கூறுதல் குன்றக் கூறலாம் ஆகலின் அவையாவும் அடங்க ''இதனின் இற்று இது' என்றார். இற்று - இந்நிலைமைத்து என்பதாம்''[41] என்று விளக்குகிறார்.

தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ''தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் 'இன்' என்பது ஒப்புமைப்பொருள் தரும் வேற்றுமை உருபாக விளங்குகிறது. பின்னர் ஐந்தாம் வேற்றுமையை 'நீங்கற் பொருளைக்' குறிக்கும் வண்ணம் தனியே விடுத்து, 'ஒப்புமைப் பொருள் தரும்' வேற்றுமை உருபாக இருந்தது. பின்னர் தரப்பொருண்மை கொண்ட ஒப்புமையாக்க வளர்ச்சியுற்றது. இதை வேறோரு நோக்கில் பார்க்கையில் வரையறை, எல்லை, புடை பெயரும் நிகழ்ச்சிக்கான தொடக்க இயக்கம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். இவ்வாறாக இவ்வுருபு 'நீங்கற் பொருளோடும்' தவறாக வைத்தெண்ணப்பட்டது.''[42] என்று குறிப்பிடுகிறார்.

இலக்கணக்கொத்து ஐந்தாம் வேற்றுமைப் பொருளாக நீக்கப் பொருண்மையை மட்டுமே சுட்டுகிறது. அந்நீக்கப் பொருண்மை நிலைத்திணை, இயங்கு திணை, பண்பு என்பனவற்றை நிலைக்களமாகக் கொண்டு தோன்றும் எனக் கூறுகிறது (இ. கொ. 38).

தமிழ்நூலும் நீங்கற் பொருளை மட்டுமே குறித்துள்ளது (த. நூ. 77).

முத்துவீரியம் ஐந்தாம் வேற்றுமைப் பொருள் நிலைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றுள் அச்சம், ஆக்கம், தீர்தல், பற்றுவிடல் ஆகிய நான்கினையும் நேமிநாதம், நன்னூல் குறிப்பிடும் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது ஆகியவற்றையும் குறிப்பிடுகிறது (மு. வீ. பெயர். 63).

தென்னூல், ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள் நிலைகளாக ஐவகைகளைக் குறிப்பிடுகிறது. ஒன்றனை ஒன்றனோடு ஒப்பிட்டும், உறழ்ந்தும், நீக்கியும், எல்லையும், அளவையுமாக இப்பொருளின் இப்பொருள் இந்நிலையினது என்னும் பொருள் பட வரும் என்கிறது (தென். சொற். 58).

தமிழ்க் காப்பு இயம் ஐந்தாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகளாக வண்ணம், வடிவு, அளவு, சுவை, தன்மை ஆகியவற்றைக் கொண்டு இதனின் இது இத்தன்மைத்து என்று ஒப்புமை காட்டலும், நீங்கல், எல்லை இவற்றின் அகற்சியை இதனின் இது இத்தன்மைத்து என்று காட்டலும் இவை போன்ற பிறவும் வரும் என்று குறிப்பிடுகிறது (த. கா. இ. 262).

ஆறாம் வேற்றுமைப் பொருள்

தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமையை கிழமைப்பொருள் வேற்றுமை என்று கூறி, அதன் பாகுபாடுகளாக இயற்கை, உடைமை, முறைமை, கிழமை, செயற்கை, முதுமை, வினை, கருவி, துணை, கலம், முதல், ஒரு வழி உறுப்பு, குழு, தெரிந்து மொழிச் செய்தி, நிலை, வாழ்ச்சி, திரிந்து வேறு படுதல் இவை போன்ற பிற என்று குறிப்பிடுகிறது (தொல். சொல். 80).

நன்னூல் ஆறாம் வேற்றுமைப் பொருளாக குணமும் தொழிலுமாகிய பண்பு, உறுப்பு, ஒரு பொருள் கூட்டம், பல பொருள் கூட்டம், ஒன்று திரிந்து மற்றொன்றாதல் என்னும் ஐந்து தற்கிழமைப் பொருள்களையும், அவையல்லாத பிறிதின் கிழமைப் பொருள்களையும் உடையனவாக வரும் என்கிறது (நன். 300).

இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றி ஆறாம் வேற்றுமைப் பொருள்களை விளக்குகிறது. மேலும் சேனாவரையரைப் பின்பற்றி பொருள், இடம், காலம் ஆகிய பிறிதின் கிழமை எனச் சுட்டுகிறது (இ. வி. 203).

தொன்னூல் விளக்கம் (தொ. வி. 61), முத்துவீரியம் (மு. வீ. பெயர். 65), ஆகியன நன்னூலையும், இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. 110), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ. த. ஐந். 225) ஆகியன இலக்கண விளக்கத்தையும் பின்பற்றியுள்ளன.

இலக்கணக்கொத்து, ஆறாம் வேற்றுமைப் பொருளாகக் ‘குறை’ என்பதைச் சுட்டுகிறது. ஒற்றுமைக்குறை, வேற்றுமைக்குறை என ஆறாவது இரு பெரிய பகுப்புகளை உடையது. ஒற்றுமைக் குறைக்கண் உட்பகுப்புகள் இல்லை. வேற்றுமைக்குறை ஒன்றாய்த் தோன்றல், உரிமையாய்த் தோன்றல், வேறாய்த் தோன்றல் என்ற மூன்று பிரிவுகளை உடையது. அவற்றுள் ஒன்றாய்த் தோன்றல் ஒன்றன் கூட்டத் தற்கிழமை, பலவின் ஈட்டத் தற்கிழமை, திரிபின் ஆக்கத் தற்கிழமை, சினைத்தற் கிழமை, குணத்தற் கிழமை, தொழில் தற்கிழமை என ஆறுவகைப்படும். உரிமையாய்த் தோன்றல் பிறிதின் கிழமை பொருட் பிறிதின் கிழமை, இடப் பிறிதின் கிழமை, காலப் பிறிதின் கிழமை, ஒருவர் இயற்றிய நூல் பற்றிய பிறிதின் கிழமை, ஒருவரைப் பற்றி இயற்றிய நூல் பற்றிய பிறிதின் கிழமை என ஐவகைப்படும்.

வேறாய்த் தோன்றும் பிறிதின் கிழமை கைமாறும் பொருள்கள் பலவும் பற்றிப் பல வகைப்படும் என்று விளக்குகிறது (இ. கொ. 40).

சுவாமிநாதம், ஆறாம் வேற்றுமை உருபுகள் தற்கிழமையாகச் சினை, குணம், தொழில் ஆகியன கொண்டும் பிறிதின் கிழமையாகப் பொருள், இடம், காலம் ஆகியன கொண்டும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் என நவில்கிறது (சு. நா. 43).

தென்னூல், ஆறாவதாகிய வேற்றுமை பண்பு, உறுப்பு, குழு, பலவின் கூட்டம், வாழ்ச்சி, செய்யுளுரிமை, திரிபின் ஆக்கம் என்பவையும் இன்னபிறவுமாகத் தற்கிழமையும், பிறிதின் கிழமையுமாக இப்பொருளினது இப்பொருள் என்னும் கிழமைப் பொருளுடையதாகும் என விளக்குகிறது (தென். சொற். 58). தமிழ்நூல் ஆறாம் வேற்றுமைப் பொருள் ‘உடைமை’ என்று மட்டும் குறிப்பிடுகிறது (த. நூ. 78).

தமிழ்க் காப்பு இயம், தொல்காப்பியம் சுட்டும் பொருட்பாகுபாடுகளுள் இயல்பு, உடைமை, முறைமை, நிலம், வினை, உறுப்பு, கருவி, கலம், துணை, குழு, திரிபு ஆகிய பதினொன்றனைக் குறிப்பிடுகிறது (த. கா. இ. 266).

ஏழாம் வேற்றுமை – மரபு மாற்றம்

தொல்காப்பியம், ஏழாம் வேற்றுமை உருபாகிய கண் உருபு, தொழில் செய்கின்ற இடம், நிலம், காலம் ஆகிய மூன்றனையும் பற்றி வரும் என்று கூறுகிறது. நன்னூல் ஏழாம் வேற்றுமை உருபு கண் முதலாகிய பலவாம். இதன் பொருளாவது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் இரண்டிற்கும் இடமாக நிற்றலாம். எனவே ஏழாம் வேற்றுமையின் பொருள் இடப்பொருள் ஆகும் என்கிறது (நன். 301).

தொன்னூல் விளக்கம் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (தொ.வி. 62). முத்துவீரியம் (மு. வீ. பெயர். 67), சுவாமிநாதம் (சு. நா. 43) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

இலக்கணக்கொத்து, ஏழாம் வேற்றுமைப் பொருளான இடத்தின் வகைகளாக உரிமை, ஒற்றுமையிடம், கூட்ட இடம், எங்கும் பரத்தல் என இடம் நான்கு வகைப்படும். இடம், காலம், திக்கு, ஆகாயம், வெயில், இருள், நிலம், அரு, உரு முதலியன நிலைக்களமாகும் இடங்களாம். இடமல்லா இடம் - கூட்டிப் பிரித்தல், பிரித்துக் கூட்டல், இருவரின் முடியும் ஒரு வினையின் தொழிற்பெயர் என மூவகைப்படும். இடத்தில் நிகழும் பொருள் உருவுடையதாகவும், உருவற்றதாகவும் இருக்கும் என்று கூறுகிறது (இ. கொ. 42).

தென்னூல் கண் என்னும் பெயரை உடைய ஏழாம் வேற்றுமை நிலம், வினை நிகழ்ச்சி, இருவகைக் காலம் ஆகியவற்றை இடமாகக் கொண்டு வரும் என நவில்கிறது (தென். சொற். 60).

இனிய தமிழ் இலக்கணம், இல், இடத்தில், கண் ஆகிய உருபுகளையும், (இ. த. இ. ப. 123-125), இலகு தமிழ் ஐந்திலக்கணம் கண், இல் ஆகியவற்றையும் ஏழன் உருபுகளாகக் குறிக்கின்றன (இ. த. ஐந். 277). மேலும், பொருள் முதல் ஆறினும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் இரண்டிற்கும் இடமாக வரும் என்னும் நன்னூலின் கருத்தை ஏற்கின்றன. (இ. த. இ. 111, இ. த. ஐந். 277)

தமிழ்நூல், ஏழாம் வேற்றுமைக்குப் பொருள் இடங்குறித்தல். உருபுகள் தனித்து வரும் இல், கண், இடம், பால் முதலிய இடக்குறியீடுகள் என விளக்கும் (த.நூ.79).

தமிழ்க் காப்பு இயம், ஏழாம் வேற்றுமை உருபாக 'இல்' உருபை முதன்மைப்படுத்துவதை,

ஏழாகுவதே
இல்லெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
பொருண்முத லாறினும் பல்வகைக் குறிப்பினும்
தொழிற்படு இடத்துத் தோன்றும் அதுவே. (த. கா. இ. 267)

என்னும் நூற்பா உணர்த்துகிறது.

தொல்காப்பியம் முதலான இலக்கண ஆசிரியர்கள் ஏழாம் வேற்றுமையின் முதன்மை உருபாகக் கண் என்பதைச் சுட்ட காசுமான் இக்கால வழக்கு நோக்கி 'இல்' உருபைச் சுட்டுகிறார். மேலும்,

கண்கால் முதலா கிளவிகள் பல்லவும்
இடப்பெய ராக வழங்கல் மரபே. (த. கா. இ. 418)

என்று கூறி முன்னையோர் மரபையும் போற்றுகிறார்.

ஆல் உருபு – எட்டாம் வேற்றுமை

நன்னூல் முதலான நூல்கள் 'ஆல்' உருபை மூன்றாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிட, தமிழ்க் காப்பு இயம் எட்டாம் வேற்றுமையாகச் சுட்டுகிறது. அது ஏதுப் பொருளில் வரும் எனவும் குறிப்பிடுகிறது. இதனை,

எட்டாகுவதே
ஆலெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யாரால் எதனால் என்னும் வினாவின்
ஏதுப் பொருளைத் தோற்றும் அதுவே. (த.கா.இ.270)

என்னும் நூற்பா விளக்கும். மேலும் ஆல் வேற்றுமையில் 'கொண்டு' எனும் சொல்லுருபும் சிறுபான்மை வரும் என நவில்கிறது (த. கா. இ.271).

ஆல் உருபைத் தனியொரு வேற்றுமையாகவும் அது ஏதுப் பொருளைத் தருவதாகவும் கொண்டமைக்குக் காரணமாக காசுமான், "வேற்றுமை மயங்கியலில், 'நான்கன் உருபின் தொன்னெறி மரபில் மயங்குதல்' (தொல். சொல். 110) பற்றிக் கூறுமிடத்து, அதனாற் செயற்படற்கொத்த கிளவியும் என ஆல் உருபு கொடுத்துக் கூறியுள்ளாரால் எனின், இதனது......... பொருள் வயினானும் அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்... எனத் தொடங்கி வந்த நூற்பாவில் வந்துள்ள 'அதனால்' என்னும் கிளவியைத் தொல்காப்பியர், 'சுட்டு முதலாகிய காரணக் கிளவி' (சொல். 40) என்று கூறியுள்ளார். எனவே 'ஆல்' தொல்காப்பியர் கருத்துப்படிக் காரணக் கிளவியாகும்.

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு (குறள் 129)

'கொல் களிற்றால் காப்புடைய எழுமுருக்கி' (புறம் - 14) எனச் சங்க இலக்கியங்களிலும், சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே (தொல். பொரு. 5) எனத் தொல்காப்பியத்திலும் 'ஆல்' உருபு ஏதுப் பொருளில் வருகிறது. ஒடு உருபும் ஆல் உருபும் சில தொடர்களில் பொருந்தி வரினும், 'அமுதன் தம்பியொடு வந்தான்', 'அமுதன் தம்பியால் வந்தான்' என வரும்போது 'ஒடு' உருபு உடனிகழ்ச்சிப் பொருளை மையமாக வைத்தும் 'ஆல்' உருபு ஏதுப்பொருளை மையமாக வைத்தும் வருகின்றன."[43] என்று விளக்கம் தருகிறார்.

இவ்வாறு ஆல் உருபு ஏதுப் பொருளில் வருவதைச் சுட்டிக் காட்டி அதை எட்டாம் வேற்றுமையாகத் தனியொரு வேற்றுமையாக அமைத்துள்ளமை குறிப்பிடத்தகுந்த மரபு மாற்றமாகும்.

வேற்றுமை மயங்கியல் - மரபு மாற்றம்

ஓர் உருபு பிறிதோர் உருபை ஏற்று வரும் என்று தொல்காப்பியம் பொதுவாகக் குறிப்பிட (தொல். சொல். 104), தொன்னூல் விளக்கம்,

அதனோடு ஐம் முதல் ஆறும் ஏற்கும் (தொ. வி. 63)

என்று கூறுகிறது. ஆறாம் வேற்றுமை வேற்றுமை உருபு பிற உருபுகளையும் ஏற்கும் என்கிறது தொன்னூல் விளக்கம். மேலும், உருபு தொக வருதல் பற்றித் தொன்னூல் விளக்கம் குறிப்பிடவில்லை.

தொல்காப்பியம் ஓர் உருபு பிற உருபையும் ஏற்று வரும் என்று குறிப்பிட, தென்னூல், ஓர் உருபு இருக்க வேண்டிய இடத்து வேறு உருபு தொடரினும், (தென். சொற். 83) என்கிறது. மேலும், உருபு தொக வருதல் குறித்துத் தென்னூல் பேசவில்லை. இவை மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கன.

தொழில் முதல் நிலைகள்

தொழில் முதல்நிலைகளாகத் தொல்காப்பியம் எட்டனைக் குறிப்பிட, (தொல். சொல். 112) நன்னூல் ஆறனைக் குறிப்பிடுகிறது. வினையியலில்

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே. (நன். 320)

என்கிறது. தொல்காப்பியம் கூறும் இன்னதற்கு, இது பயனாக என்னும் இரண்டும் நன்னூலில் இடம் பெறவில்லை. இது மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது.

ஆகுபெயர் - மரபு மாற்றம்

அறுவகை இலக்கணம் ஆகுபெயரை விளக்குவதில் பிற இலக்கணிகளின் கருத்துகளிலிருந்து மாறுபடுகிறது.

கப்பணம் உம்மணி ஒருபணம் இருமணி
ஆதல் போல் திரிவன ஆகுபெயரே (அ. இ. 254)

என்பதன் மூலம் பொருள் திரிந்து வருவன ஆகுபெயர் என்று உரைக்கிறது அறுவகை இலக்கணம். இது மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது.

விளிமரபில் மரபு மாற்றங்கள்

தொல்காப்பியம் உயர்திணைப் பெயர்களுள் இகர இறுதி ஈகாரமாகும் எனவும், ஐகாரம் ஆய் ஆகும் எனவும் (தொல். சொல். 121), முறைப்பெயரில் ஆ வாகும்

(தொல். சொல். 126) என்றும் குறிப்பிட, நன்னூல் இவற்றைத் தனித்தனியே குறிப்பிடாது பொதுவாக, பொதுப்பெயரில் (விரவுப் பெயர்) ஐகாரம் இறுதி ஆய், ஆ ஆகியவற்றை உருபுகளாகப் பெற்று வரும் என்கிறது. இதனை,

ஐஇறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்
உருபுஆம் அல்லவற்று ஆயும் ஆகும். (நன். 306)

என்னும் சூத்திரம் உணர்த்தும். இலக்கண விளக்கமும், தொன்னூல் விளக்கமும் இச்சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளன (இ. வி. 208, தொ. வி. 71).

மேலும் இகர இறுதி ஈகாரம் ஆகும் என்னும் கருத்து நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், இனிய தமிழ் இலக்கணத்தில் இடம்பெறவில்லை. இனிய தமிழ் இலக்கணம் இருதிணை ஈற்று ஐ, ஆய் ஆகும் எனக் குறிக்கிறது. (இ. த. இ. ப. 128)

ஓ, உ ஈறுகள் விளியேற்றல் - மரபு மாற்றம்

உயர்திணைப் பெயர்களுள் ஓவும், உவ்வும் விளியேற்கும் போது ஏகாரமாகும் என்று கூறும் தொல்காப்பியம் அவ்வுகரம் குற்றியலுகரம் என்று குறிப்பிடுகிறது (தொல். சொல். 121, 122)

தமிழ்க்காப்பு இயம்,

ஓவும் உவ்வும் குற்றிய லுகரமும்
ஏகாரம் ஏற்கும் விளிவயி னான (த. கா. இ. 278)

என்று குறிப்பிடுகிறது.

தொல்காப்பியர் உகரம் தானே குற்றியலுகரம் (தொல். சொல். 103) என்பதன் மூலம் குற்றியலுகரம் மட்டுமே விளியேற்கும் போது ஏகாரமாகும் என்ற கருத்துடையவர். ஆனால் தமிழ்க்காப்பு இயம் உகரம், குற்றியலுகரம் இரண்டுமே விளியின்போது ஏகாரமாகும் என்ற கருத்துடையது.

பிற ஈறுகளும் விளியேற்றல்

உயர்திணை, அஃறிணை, விரவுப் பெயர் ஆகிய மூன்றிலும் விளியேற்கும் பெயரீறுகளைச் சுட்டும் தொல்காப்பியம் இவை தவிர பிற ஈறுகள் விளி கொள்ளாது என்றும் குறிப்பிடுகிறது. ஆனால் நன்னூல் முதலான பிற்றை இலக்கண நூல்களில் சிற்சில மாறுதல்கள் காணப்படுகின்றன. அதாவது விளியேற்கும் ஈறுகளாகப் புதிய ஈற்றெழுத்துகள் தோற்றம் பெற்றுள்ளன. தென்னூலும் மற்றைய ஈறுகளையுடைய பெயர்களும் மரபொடு பொருந்தி விளி கொள்ளும் முறைமையினவாகும் என்கிறது.

(தென். சொற். 66). இ, உ, ஐ, ஓ தவிர்ந்த பிற உயிரீறுகளை உடைய பல உயர்திணைப் பெயர்களை இன்று காண இயலுகிறது. (சான்று: கவிதா) அதேபோல் மெய்யீறுகளை உடைய பெயர்களிலும் ன், ர், ல், ள் தவிர்ந்த பிற ஈறுகளையுடைய பெயர்கள் இன்று வழங்கி வருகின்றன (சான்று : பிரசாத், தமிழ் என்பன போன்று வருவன) எனவே தென்னூலின் கருத்தே இக்காலச் சூழலுக்குப் பொருத்தப்பாடுடையதாக அமைகிறது. தமிழ்க் காப்பு இயமும் இக்கருத்தைப் பின்பற்றி,

சொல்லப் பட்ட ஈறுகள் ஒழிய
பிறவீற்றுப் பெயர்களும் விளியைக் கொள்ளின்
காலச் சூழல்போல் தோற்றம் பெறுமே (த. கா. இ. 292)

என்று குறிப்பிடுவது கருதத் தக்கது.

அண்மைச்சொல் விளியேற்றல்

தொல்காப்பியம், உயிரீறுகளை உடைய உயர்திணைப் பெயர்கள் அண்மை விளியேற்கும் போது இயல்பாய் விளியேற்கும் என்றும், 'அன்' ஈறு அண்மை விளியில் அகரம் ஆகும் என்றும் கூறுகிறது. நன்னூல் பொதுவாக அண்மை விளி இயல்பும், ஈறுகெட்டும் வரும் என்கிறது (நன். 313). தென்னூல், நன்னூல் கருத்தைப் பின்பற்றியுள்ளது (தென். சொற். 65).

'ஆன்' ஈறு விளியேற்றல்

தொல்காப்பியம் 'ஆன்' ஈற்றை உடைய உயர்திணைப் பெயர் விளியேற்கும்போது இயற்கையாகும் (தொல். சொல். 132) எனக் குறிப்பிட, தென்னூல் ஆன் இறுதி 'ஆய்' ஆகும் (தென். சொற். 64) என்று கூறுவது மரபு மாற்றமாகும்.

விளியேற்காத னகர ஈற்றுப் பெயர்கள்

விளியேற்காத னகர ஈற்றுப் பெயர்களாகத் தொல்காப்பியம்,

1. தான் என் பெயர்
2. சுட்டு முதற் பெயர்
3. யான் என் பெயர்
4. வினாவின் பெயர்

ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. (தொல். சொல். 137).

முத்துவீரியம் யான், அவன், இவன், உவன் விளியேலாவாம் (மு. வீ. பெயர். 118) என்றும், யாவன் என்னும் வினாப்பெயரும் விளியேலாது (மு. வீ. பெயர். 119) என்றும் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் குறிப்பிடும் னகர ஈற்று விளியேலாப் பெயர்களுள் ‘தான்’ என்பதை மட்டும் முத்துவீரியம் குறிப்பிடவில்லை.

னகர இறுதி உயர்திணைப்பெயர் விளியேற்கும் முறை – மரபு மாற்றம்

நன்னூல் தொல்காப்பியத்தைப் போல் னகர ஈற்று உயர்திணைப்பெயர் அளபெடையாக, முறைப்பெயராக, தொழிற்பெயராக, இப்படி ஒவ்வொரு நிலையிலும் விளியேற்கும் போது அடையும் மாற்றங்களைத் தனித்தனியே கூறாமல் பொதுவாக னகர ஈற்று உயர்திணைப்பெயர் விளியேற்கும் போது அடையும் மாற்றங்களைக் கூறியுள்ளது. னகர மெய்யை ஈறாகவுடைய சில உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும். சில ஈறு கெடும். சில ஈற்றயல் நீளும்; சில ஈற்றயல் நீண்டு ஈறு கெடும்; சில ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரம் மிகும் ; சில ஈறு கெட்டு ஓகாரம் மிகும்; சில இறுதி னகர மெய் யகர மெய் ஆகும் ; சில ஈற்று னகர மெய் யகர மெய்யாகத் திரிந்து, அயலில் உள்ள ஆகாரம் ஓகாரமாகி ‘ஏ’ மிகும் ; சில ஈறு கெட்டு அயலில் உள்ள அகரம் ஏகாரமாகும். இவை விளியுருபுகளாம் என்று நன்னூல் விளக்குகிறது (நன். 307).

இலக்கண விளக்கமும், தொன்னூல் விளக்கமும் நன்னூல் சூத்திரத்தை எடுத்தாண்டுள்ளன (இ.வி. 209, தொ. வி. 72). இனிய தமிழ் இலக்கணம், நன்னூல் கருத்தின் அடிப்படையில்,

> **ஈறியல் பாகியும் குன்றியும் மிகுந்தும்**
> **அளபெ டுத்தும் அயல் திரிந்தும்**
> **ஐ,ய, ர, ல, ள, ன அழைக்கு மென்பர்** **(இ. த. இ. 113)**

என உரைக்கிறது.

ரகர ஈற்றுப் பெயர்கள் விளியேற்றல்

நன்னூல் னகர ஈற்றுப் பெயர் விளி கொள்வதனை பொதுவாக விளக்கியது போலவே ரகர ஈற்றுப் பெயர் விளி கொள்ளும் போது அடையும் மாற்றங்களை விளக்கியுள்ளது. இதனை,

> **ரவ்வீற்று உயர்பெயர்க்கு அளபுஎழல், ஈற்று அயல்**
> **அகரம் இ ஈ ஆதல், அண்டை ஆ**
> **ஈ ஆதல், அதனோடு ஏ உறல், ஈற்று ஏ**

மிக்கு அயல் யாக்கெட்டு அதன் அயல் நீடல்,

ஈற்றின் ஈ உறல் இவையும் ஈண்டு உருபே (நன். 309)

என்னும் சூத்திரம் விளக்கும்.

இலக்கண விளக்கம் நன்னூல் சூத்திரத்தை எடுத்தாண்டுள்ளது. எனினும் இறுதி வரியில் ஈற்றின் ஈயுறல் என்பதை ஈற்றின் ஓவுறல் என மாற்றியுள்ளது இலக்கண விளக்கம் (இ. வி. 211). தொன்னூல் விளக்கம் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளது (தொ. வி. 74). இனிய தமிழ் இலக்கணம் விளியேற்கும் ஈறுகள் அடையும் மாற்றங்களை விரிவாக விளக்கவில்லை. பொதுவாக அடையும் மாற்றங்களை மட்டுமே சுட்டியுள்ளது (இ. த. இ. 113).

ளகர இறுதிப்பெயர் விளியேற்கும் முறை

னகர, ரகர புள்ளியீற்றுப்பெயர்கள் விளியேற்கும் தன்மையை விளக்கிய முறையிலேயே ளகர இறுதிப் பெயர் விளிகொள்வதனையும் விளக்கியுள்ளது நன்னூல். ளகர மெய்யை இறுதியாக உடைய உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும்; சில ஈறு கெடும்; சில ஈற்று அயல் நீளும்; சில இறுதி ளவ்வொற்று யவ்வொற்று ஆகும்; சில ஈற்றயல் அகரம் ஏகாரமாகும் இவை விளியுருபுகளாம் என நன்னூல் நவில்கிறது (நன். 308). இலக்கண விளக்கமும், இனிய தமிழ் இலக்கணமும் நன்னூலைப் பின்பற்றியுள்ளன (இ. வி. 210, இ. த. இ. 113). தொன்னூல் விளக்கம் நன்னூல் சூத்திரத்தை எடுத்தாண்டுள்ளது (தொ. வி. 73).

லகர, யகர ஈற்றுப்பெயர்கள் விளியேற்கும் முறை

நன்னூல், லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும் ; சில ஈற்றயல் நீளும்; யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும். இவை விளியுருபுகளாம் என்று குறிப்பிடுகிறது (நன். 310).

இலக்கண விளக்கம் லகர ஈற்று உயர்திணைப் பெயர்க்கு அயல் நீளும் என்றும், யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும் என்றும் கூறுகிறது. லகர ஈற்று உயர்திணைப்பெயர் ஈற்றயல் நீளும் என்று நன்னூல் சுட்டுவதை இலக்கண விளக்கம் குறிப்பிடவில்லை (இ. வி. 212). தொன்னூல் விளக்கம் நன்னூல் சூத்திரத்தை எடுத்தாண்டுள்ளது (தொ. வி. 75).

விரவுப்பெயர் ஏற்கும் விளியீறுகள்

நன்னூல் இ, உ, ஊ, ஐ என்னும் உயிர்களையும், ன, ள, ல, ய என்னும் மெய்களையும் அவற்றோடு ண, ஆ என்னும் இரண்டும் சேரப் பத்து எழுத்துகளையும்

ஈற்றில் உடையனவாக இருதிணைப் பொதுப் பெயர்கள் வரும் என்கிறது (நன். 304). தொல்காப்பியம் உயர்திணைப் பெயர்களுக்குக் கூறப்பட்ட விளியீறுகள் அ∴றிணையில் விரவி வரும்போது உயர்திணை மரபிலேயே விளியேற்கும் என்று கூற, நன்னூல் இருதிணைப் பொதுப்பெயருக்குரிய விளி ஈறுகளை மட்டுமே சுட்டியுள்ளது. இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றியுள்ளது (இ. வி. 206).

அ∴றிணைப் பெயருக்குரிய விளியீறுகள்

இருதிணைப் பொதுப்பெயருக்குக் கூறப்பட்டதைப் போலவே அ∴றிணைப் பெயரில் விளியேற்கும் ஈறுகளை நன்னூல் சுட்டியுள்ளது. மொழி ஈற்றில் வரும் இருபத்து நான்கு எழுத்துகளுள் ஞ, ந அல்லாத மற்றைய எழுத்துகளை ஈற்றில் உடைய அ∴றிணைப் பெயர்கள் விளி ஏற்கும் பெயர்களாகும் என்று கூறுகிறது (நன். 304).

இலக்கணவிளக்கம் மொழி ஈற்றில் வரும் எழுத்துகள் அனைத்தும் அ∴றிணைப் பெயருக்குரிய விளி ஈறுகளாகும் என்கிறது (இ.வி. 206).

விளியேற்காத உயர்திணைப் பெயர்கள் - மரபு மாற்றம்

தொல்காப்பியம் விளியேற்காத உயர்திணைப் பெயர்கள் குறித்து,

த ந நு எ என அவைமுத லாகித்
தன்மை குறித்த னரள என் இறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியோடு கொளலே. (தொல். சொல். 154)

என்று கூறுவதன் வழி தமன், தமர், தமள், நமன், நமர், நமள், நுமன், நுமர், நுமள், எமன், எமர், எமள் ஆகியனவும் அவை போன்று வருவன பிறவும் விளி கொள்ளாது என்பதைப் புலப்படுத்துகிறது.

நேமிநாதம் விளியேலாப் பெயர்களை இன்னின்ன என்று சுட்டாமல் சொல்லப்பட்ட எவ்வீற்றுப் பெயர்களினும் விளியேலாதனவும் உள்ளன (நேமி. 51) என்று மட்டும் கூறுகிறது.

தொல்காப்பியம் உயர்திணையுள் விளியேலாப் பெயர்களை மட்டும் குறிப்பிட, நன்னூல் முப்பெயரிலும் விளியேலாதனவற்றைச் சுட்டுகிறது. நுவ்வுடன் மூன்று முதல் வினா எழுத்துகளையும், மூன்று சுட்டெழுத்துகளையும் முறையே பொருந்திய ன, ள, ர என்னும் மூன்றீற்று உயர்திணைப்பெயர்களும் வை, து என்னும் இரண்டு ஈற்றினை உடைய அ∴றிணைப்பெயர்களும், தாம் என்னும் அசைநிலையும், தான் என்னும்

பொதுப்பெயரும் இவை போல்வன பிறவும் விளி ஏலாப் பெயர்களாம் (நன். 314) என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம், தொல்காப்பியத்தையும், நன்னூலையும் பின்பற்றி விளியேலாப் பெயர்களைக் குறிப்பிடுவதனை,

தநநு எஎன னவைமுத லாகித்
தன்மை குறித்த னளரவெ னிறுதியும்
வினாச்சுட் டெனுமவை முதலவாகி
ஐம்பால் குறித்த ஐவகை இறுதியும்
அன்ன பிறவுந் தாமுந் தானும்
மின்மை வேண்டும் விளியொடு கொளலே. (இ. வி. 216)

என்னும் நூற்பா விளக்கும்.

முத்துவீரியம் தமர், நுமர், தமன், நுமன், தமள், நமள், நமர், விளியேலாது என்று குறிப்பிடுகிறது (மு. வீ. பெயர். 136).

சுவாமிநாதம், முன்னையோர் கருத்துகளின் அடிப்படையில் த, ந, நு, எ என்பவற்றை உறுப்பாக உடைய ன, ள, ர இறுதியில் உடைய சொற்களும், தாம், தான், சுட்டுப்பெயர், வினாப்பெயர்களும் விளி ஏற்று வராது எனக் கூறுவதுடன் இப்பெயர்கள் ‘கள்’ விகுதி பெற்று வந்தால் சில சொற்கள் விளி கொள்ளுதலும் உண்டு என்று கூறுகிறது. (சு. நா. 46)

இலகு தமிழ் ஐந்திலக்கணம், விளி ஏலாப் பெயர்கள் குறித்து,

தன்மை முன்னிலை சுட்டுப் பெயருடன்
வினவும் பெயர்களும் தான் தாம் எல்லாம்
யெனும் பொதுப் பெயரெலாம் ஏற்கா விளியை (இ. த. ஐந். 230)

என்கிறது.

தென்னூல், யான், யாம் முதலிய தன்மைப்பெயர்களும் நீ, நீயிர் முதலிய முன்னிலைப் பெயர்களும், தமன், தமள், தமர், நமன், நமள், நமர், நுமன், நுமள், எமன், எமள், எமர் என்பவையும், தம்மான், தம்மாள், தம்மார் என நெடில் விகுதியாக வருவன, பால் காட்டி வரும் மற்றையான், மற்றையாள், பிறன், பிறள், பிறர் என்பவையும் விளி கொள்ளாது (தென். சொற். 67) என்று குறிப்பிடுவதுடன்,

கிளைப்பெயர் ஒரோவழித் திரிந்துவிளி ஏற்கும் (தென். சொற். 68)

என்னும் கருத்தையும் பதிவு செய்துள்ளது.

தமிழ்நூல், வினாச்சுட்டடியாகத் தோன்றும் படர்க்கைப் பெயர்களும், பிற இரண்டிடப் பெயராம் தன்மை முன்னிலையும், தாம், தான் என்னும் பொதுப்பெயரும், பிற மேலமையும் ஐம்பால் இறுதியும் விளிக்கப்படா (த. நூ. 83) என்று கூறுகிறது.

தமிழ்க்காப்பு இயமும் முன்னையோரைப் பின்பற்றி சுட்டுப்பெயர்களும், வினாப் பெயர்களும், தமன், நமன், நுமன், எமன், தமள், நமள், நுமள், எமள், தமர், நுமர், நமர், எமர் ஆகிய கிளை முதல் பெயர்களும் அவை போன்றனவும் தன்மை, முன்னிலைப் பெயர்களும் விளியோடு கூடி வருதல் இல்லை என்று குறிப்பிடுகிறது (த. கா. இ. 149).

மரபு வளர்ச்சி

வேற்றுமையின் வகைகள்

தமிழ்க் காப்பு இயம் வேற்றுமையின் வகைகளை ஒன்பதாகப் பாகுபடுத்துகிறது. எழுவாய் வேற்றுமை, ஐ வேற்றுமை, ஒடு வேற்றுமை, கு வேற்றுமை, இன் வேற்றுமை, அது வேற்றுமை, இல் வேற்றுமை, ஆல் வேற்றுமை எனப் பெயர் பெறும் வேற்றுமை எட்டாகும் என்றும் அதனோடு விளி வேற்றுமையினையும் சேர்த்து வேற்றுமை ஒன்ப.்.து ஆகும் என வேற்றுமையின் பெயர், முறைகளைச் சுட்டுகிறது (த. கா. இ. 248-249). இது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

மூன்றாம் வேற்றுமை – வளர்ச்சி நிலை

தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமை உருபாக ‘ஒடு’ என்பதனையும், அதன் பொருள்களாக வினைமுதல், கருவி ஆகிய இரண்டையும் குறிப்பிடுகிறது (தொல். சொல். 73).

அவிநயம் மூன்றனது உருபாக ஆல், ஆன் என்பனவற்றைச் சுட்டுகிறது. (அவி.29)

நேமிநாதம் ஆன், ஒடு என்பவற்றை மூன்றாம் வேற்றுமை உருபுகளாகக் குறிப்பிடுகிறது. மேலும் தொல்காப்பியர் குறிப்பிடும் வினைமுதல், கருவி என்பவற்றையே மூன்றாம் வேற்றுமைப் பொருளாகக் குறிக்கிறது (நேமி. 42).

நன்னூல், மூன்றாம் வேற்றுமை குறித்து,

மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு

கருவி கருத்தா உடன்நிகழ்வு அதன் பொருள் (நன். 297)

என்பதன் வழி, மூன்றாம் வேற்றுமை உருபுகளாக ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகிய நான்கனையும், அதன் பொருளாக தொல்காப்பியம் குறிப்பிடும் கருவி, கருத்தா என்பவற்றோடு உடனிகழ்வு என்பதையும் சேர்க்கிறது.

ஒடு உருபின் நீட்சியே ஓடு உருபாக தோற்றம் பெற்றது. ஆன் உருபு தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள சூழல் குறித்து, ''தொல்காப்பியம் (சொல். 97, 108) வேற்றுமை மயங்கியலில் ஆன் உருபினைக் கூறிய போதிலும் அவ்வுருபு இன்ன வேற்றுமைக்கு உரியது எனக் குறிப்பிடவில்லை. எனினும் தொல்காப்பிய மொழியில் ஆன் என்பது மூன்றாம் வேற்றுமைக் காரணப் பொருளிலும், ஏழாம் வேற்றுமை இடப் பொருளிலும் இடம் பெற்றுள்ளது. ஆன் உருபு தன் கால மொழியில் வெவ்வேறு வேற்றுமைப் பொருட்களில் வழங்கியதால் தொல்காப்பியர் அதனை இன்ன வேற்றுமைக்கு உரியது எனக் கூறவில்லையோ என்று கருத இடமுள்ளது''[44] என பெ.சுயம்பு குறிப்பிடுகிறார். ஆல் உருபு தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை. அவிநயமும், நன்னூலுமே 'ஆல்' உருபைக் கூறியுள்ளன.

தொல்காப்பியர் ஒரு வேற்றுமைக்கு ஓருருபு என்னும் நோக்கில் வேற்றுமை உருபுகளைக் கூறுகின்றமையால் பெரு வழக்காக உள்ள ஒடு உருபைக் கூறி ஆன் உருபுக்கு முக்கியத்துவம் அளிக்காது விடுத்திருக்கலாம்.

அருச்சுன. தட்சிணா மூர்த்தி, '''ஆன்' என்ற சாரியை வழக்குப் பெறப், பொருள் மயக்கத்தை விலக்க 'ஆன்' என்னும் வேற்றுமை உருபு வழக்கிழந்து அதனிடத்தில் 'ஆல்' என்னும் உருபு வழக்கு மிகுந்தது''[45] என்கிறார்.

தற்காலத்தில் ஒடு, ஆல் ஆகிய இரண்டுமே பெருவழக்காக உள்ளது.

மூன்றாம் வேற்றுமை உணர்த்தும் பொருள்களாக தொல்காப்பியம் குறிப்பிடும் கருவி, கருத்தா என்பவற்றோடு உடனிகழ்ச்சிப் பொருளையும் புதிதாக இணைக்கிறது நன்னூல். ''சங்க இலக்கியத்தில் ஒடு, ஆன் இரண்டும் உடனிகழ்வு, கருவி ஆகிய பொருட்களிலும், ஓடு உடனிகழ்வுப் பொருளிலும் ஆல் கருவிப் பொருளிலும் இடம் பெற்றுள்ளன. ஆனால் பிற்கால இலக்கியங்களில் ஒடு, ஓடு என்பன உடனிகழ்வுப் பொருளிலும் ஆல், ஆன் என்பன கருவி, கருத்தா ஆகிய பொருட்களிலும் இடம் பெற்றுள்ளன.''[46] என்று பெ. சுயம்பு சுட்டிக்காட்டுகிறார்.

இலக்கண விளக்கமும் (இ. வி. 200) தொன்னூல் விளக்கமும் (தொ. வி. 58) நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

இலக்கணக் கொத்து மூன்றாம் வேற்றுமைப் பொருளாகக் கருவிப்பொருளை மட்டுமே சுட்டுகிறது. கருவியை அகக்கருவி, புறக்கருவி, ஒற்றுமைக்கருவி என மூவகைப்படுத்துகிறது (இ. கொ. 33).

மேலும் மூன்றாம் வேற்றுமை கருவிக்கண் அடங்குவனவாக முதற் காரணம், துணைக்காரணம், ஞாபக ஏது, காரக ஏது, வினைக் காரணம், நிமித்தக் காரணம், வேற்றுமைக்காரணம், வினை முதல் காரணம், காலக் காரணம் முதலியனவற்றைக் குறிப்பிடுகிறது (இ.கொ.34).

முத்துவீரியம் (மு.வீ.பெயர்.58,59), சுவாமிநாதம் (சு.நா.42), இனிய தமிழ் இலக்கணம் (இ.த.இ.106), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ.த.ஐந்.218), தமிழ்நூல் (த.நூ.75) ஆகியவை நன்னூலைப் பின்பற்றி மூன்றாம் வேற்றுமை உருபுகளையும், பொருள்களையும் விளக்கியுள்ளன. அதோடு மேலும் சில கருத்துகளையும் பின் வந்த இலக்கணிகள் பதிவு செய்துள்ளனர். அவை வருமாறு,

சுவாமிநாதம் ‘கொண்டு’ என்னும் சொல்லுருபைச் சேர்த்துள்ளது (சு.நா.42). இனிய தமிழ் இலக்கணம் ஆல், ஆன், கொண்டு என்னும் உருபுகள் கருவி, கருத்தாப் பொருளிலும், ஒடு, ஓடு என்பன உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் எனவும் கூறுகிறது. ‘உடன்’ என்பதைச் சொல்லுருபாகக் குறிப்பிடுகிறது (இ.த.இ.ப.117-118).

மேலும் முதல் வேற்றுமையிலும் கருத்தாப் பொருள் வருவதனால் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை,

முதல் வேற்றுமையின் கருத்தா செய்வினைப்
பயனிலை கொண்டு முடிவ தாமே;
மூன்றாம் வேற்றுமைக் கருத்தா முறையிற்
செயப்பாட்டு வினையால் முடிவு பெறுமே. (இ.த.இ-107)

என்று விளக்குகிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் இனிய தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றி ஆல், ஆன், ஒடு, ஒடு, கொண்டு, உடன் ஆகியவற்றை மூன்றாம் வேற்றுமை உருபுகளாகக் குறிக்கிறது (இ. த. ஐந். 218). மேலும் கருவியை முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படுத்துகிறது. (மண்ணால் செய்குடம் - மண் முதற் கருவி; உளியா லாம் பொருள் - உளி துணைக்கருவி) (இ. த. ஐந். 219). கருத்தா, உடனிகழ்வு ஆகிய பொருண்மைகள் இலகு தமிழ் ஐந்திலக்கணத்தில் இடம்பெறவில்லை.

தென்னூல் மூன்றாம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் ஒடு உருபைக் கூறினாலும் அதன் பொருளாகக் கருவியை மட்டுமே கூறியுள்ளது (தென். சொற். 51) வினைமுதல், உடனிகழ்ச்சி ஆகிய பொருண்மைகள் தென்னூலில் இடம்பெறவில்லை.

மேலும் கருவி, காரணம், ஏது, முதல், மூலம் (அடிப்படை) ஆகியவை அதனிடத்து ஒரு பொருட் கிளவியாய் வரும் (தென். சொற். 52)என்றும், முதற்கருவி, துணைக்கருவி, நிமித்தக் கருவி என கருவியாகிய காரணம் முத்திறப்படும் (தென். சொற். 54) என்றும் கூறுகிறது.

தமிழ்நூல், மூன்றாம் வேற்றுமை உருபுகளில் ஒடு, ஓடு, உடனே ஆகிய மூன்றையும் உடனிகழ்ச்சிப் பொருள் தருவனவாகவும், ஆன், ஆல் உருபுகள் கருவிப் பொருளைத் தருவனவாகவும் குறிப்பிடுகிறது (த. நூ. 75). வினைமுதல் பொருளைத் தமிழ்நூல் குறிப்பிடவில்லை.

தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பியம் குறிப்பிடும் 'ஒடு' உருபை மூன்றாம் வேற்றுமை உருபாக ஏற்றுக் கொள்கிறது. மேலும், ஓடு என்பது ஒடு என்பதன் பதிலி உருபன் (த. கா. இ. 254) எனவும் 'உடன்' என்பது மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபு எனவும் (த. கா. இ. 255) என்றும் குறிப்பிடுகிறது.

நான்காம் வேற்றுமை – மரபு வளர்ச்சி

நான்காம் வேற்றுமை – பொருண்மைகள்

நன்னூல் நான்காம் வேற்றுமை குறித்து,

> **நான்கா வதற்கு உருபு ஆகும் குவ்வே;**
> **கொடை பகை நேர்ச்சி தகவுஅது வாதல்**
> **பொருட்டு முறை ஆதியின் 'இதற்கு இது' எனல் பொருளே (நன். 298)**

என்னும் சூத்திரம் வழி விளக்குகிறது. நான்காம் வேற்றுமை உருபாகக் 'கு' என்பதை ஏற்றுக்கொளினும் அதன் பொருளாக தொல்காப்பியம் சுட்டியவற்றுள் கொடை, பகை, நேர்ச்சி (நட்பு), அதுவாதல், பொருட்டு ஆகியவற்றை ஒத்துள்ளது. மேலும் தகவு (தகுதி), முறை ஆகிய பொருள்களைப் புதிதாகச் சேர்த்துள்ளது (நன். 298).

இலக்கண விளக்கமும், தொன்னூல் விளக்கமும் நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்தாண்டுள்ளன (இ. வி. 201), (தொ. வி. 59).

முத்துவீரியம்,

குவ்வே நான்கன துருபா கும்மே (மு. வீ. பெயர். 60)

என்றும், அதன் பொருள் நிலைகளாக கொடை, பகை, சிறப்பு, காதல், தகுதி, அதுவாதல், முறை, பொருட்டு ஆகியவற்றைச் சுட்டுகிறது (மு. வீ. பெயர். 61).

இனிய தமிழ் இலக்கணம் நன்னூல் கூறும் நான்காம் வேற்றுமைப் பொருண்மைகளோடு 'எல்லை' என்பதையும் சேர்த்து எண்வகைப் பொருள்களைச் சுட்டுகிறது (இ. த. இ. 108).

இலகு தமிழ் ஐந்திலக்கணம், இப்பொருள்களொடு 'ஏற்றுக் கோடல்' என்பதையும் குறிப்பிடுகிறது (இ. த. ஐந்.220).

தென்னூல், நன்னூலைப் பின்பற்றி நான்காம் வேற்றுமையை விளக்குகிறது (தென்.சொற்.57).

தமிழ்நூல்,

நான்காம் வேற்றுமை உருபு – கு- கொடைப் பொருள் (த. நூ. 76)

என்றும், இதனை விரிவுபடுத்தி பகை, நட்பு, தகுதி, முதற்கருவியாதல், பொருட்டு (முறை), எல்லை முதலவாய்க் கூறுவர் என விளக்குகிறது. (த. நூ. 76 உரை).

"மோ - இசரயேல் (இலக்கண ஆய்வு – பெயர்ச்சொல், பக்கம் 110) தொல்காப்பியம் கூறுகிற நான்காம் வேற்றுமைப் பொருட்கள் யாவற்றையும் நோக்கு, கொடை, எல்லை, முறை ஆகிய நான்கு வகையுள் அடக்கி விளக்குகிறார்"[47] என்று பெ. சுயம்பு சுட்டிக் காட்டுகிறார்.

கொள்வோனின் வகைகள்

இலக்கணக்கொத்து நான்காம் வேற்றுமைப் பொருளாகிய கொடைப் பொருளின் வகைகளாக,

கேளாது ஏற்றல் கேட்டே ஏற்றல்
ஏலாது ஏற்றல் ஈவோன் ஏற்றல்
உயர்ந்தோன் ஏற்றல் இழிந்தோன் ஏற்றல்
ஒப்போன் ஏற்றல் உணர்வு இன்று ஏற்றல்
விருப்பாய் ஏற்றல் வெறுப்பாய் ஏற்றல்
ஆதியாப் பலவும் அறைந்தனர் கொள்வோன் (இ. கொ. 36)

என்னும் நூற்பா வழி பத்து வகைகளைக் குறிப்பிடுகிறது. இது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

சொல்லுருபுகள்

இனிய தமிழ் இலக்கணம் நான்காம் வேற்றுமை உருபாகக் 'கு' வைக் குறிப்பிடுவதுடன் அதன் சொல்லுருபுகளாக 'ஆக', 'பொருட்டு', 'நிமித்தம்' ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. (இ. த. இ. ப. 119) இலகு தமிழ் ஐந்திலக்கணமும் இவ்வுருபுகளைக் கூறியுள்ளது (இ. த. ஐந். 220). தமிழ்க் காப்பு இயம் 'பொருட்டு' எனும் சொல்லுருபை மட்டுமே குறித்துள்ளது (த. கா. இ. 258).

ஐந்தாம் வேற்றுமை – மரபு வளர்ச்சி

ஐந்தாம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் 'இன்' உருபோடு 'இல்' உருபையும் புதிதாகச் சேர்த்துள்ளது நன்னூல் (நன்.299). "ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' என்பதாகும். பின்னர் இது 'இல்' என்பதோடு மயங்கியது."[48] எனத் தெ. பொ.மீ கூறுவதினின்று இன் உருபே இல் உருபாக மாறியமை புலனாகும்.

நன்னூலைப் பின்பற்றி பின்வந்த இலக்கணிகள் இன், இல் ஆகிய இரு உருபுகளையும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகக் குறிப்பிடுகின்றனர். (இ.வி. 202, தொ. வி. 60, மு.வீ. பெயர். 62, சு. நா. 43, இ. த. இ.109, இ. த. ஐந். 221, த. நூ. 77) 'இல்' உருபு இடப்பொருளிலும் வருகின்றமை குறித்து மு. வரதராசனார், "வேற்றுமைப் பொருள் வேறு; அப்பொருளை யுணர்த்த வரும் உருபு வேறு. இந்த வேறுபாட்டை யுணர்தல் இன்றியமையாதது. திராவிட மொழிகளில் கருவிப் பொருளை மூன்றாம் வேற்றுமையென்றும், இடப்பொருளை ஏழாம் வேற்றுமையென்றும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இடத்தில் இருத்தலையே ஏழாம் வேற்றுமை குறிக்கின்றது. இடத்திலிருந்து நீங்குதலை (நீங்கற் பொருளை) ஐந்தாம் வேற்றுமை குறிக்கின்றது. இதுவே இலக்கண நூலார் ஐந்தாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் கூறும் வேறுபாடாகும். ஆனால் ஏழாம் வேற்றுமைக்குரிய 'இல்' உருபே இங்கும் வருகின்றது என்பதையும், நீங்கற் பொருளைக் குறிக்க வேறு வினைச்சொற்கள் வேண்டியிருக்கின்றன என்பதையும் மறுப்பார் இல்லை. எனவே ஐந்தாம் வேற்றுமையில் நீங்கல் பொருளுக்கென ஓர் உருபு இல்லை என்பது வெளிப்படை. 'இல்' உருபையே யன்றி மற்ற ஏழாம் வேற்றுமை உருபுகளையும் இவ்வாறு நீங்கற் பொருள் தரும் வினைச் சொற்களைச் சேர்த்து ஐந்தாம் வேற்றுமையாக்கலாம். எனவே இவ்விரு வேற்றுமைகளும் வேறு வேறு எனக் கொள்வது பயனற்றுப் போகின்றது"[49] என்கிறார்.

சொல்லுருபுகள்

இனிய தமிழ் இலக்கணம், ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக நின்று, இருந்து ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. (இ.த.இ.109). இலகு தமிழ் ஐந்திலக்கணமும் இச்சொல்லுருபுகளைப் பின்பற்றியுள்ளது (இ.த.ஐந்.221). தமிழ்நூல் இன்னோடு ‘நின்று’ என்பதும், இல்லோடு ‘இருந்து’ என்பதும் இணைந்து நிற்கும் எனச் சுட்டுகிறது (த.நூ.77).

தமிழ்க்காப்பு இயம், இருந்து, நின்று, ஆக என்னும் கிளவிகள் (வினை எச்சங்கள்) வேற்றுமை உருபு போலச் செயல்படும் என்று கூறுகிறது (த.கா.இ.419) மேலும், அவற்றுள் இருந்து, நின்று என்னும் சொற்கள் ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபு போல நின்று நீக்கப்பொருளைக் காட்டும் என்று குறிப்பிடுகிறது (த.கா.இ.420). மேலும் இவ்வுருபுகள் மறைந்து வருதலும் உண்டு என்று குறிப்பிடுகிறது (த.கா.இ.421).

ஆறாம் வேற்றுமை உருபு – வளர்ச்சி நிலை

தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமை உருபாக ‘அது’ உருபை மட்டும் குறிப்பிட, நன்னூல், ஆறாம் வேற்றுமையின் ஒருமைப் பொருண்மைக்கு அது, ஆது என்பன உருபுகளாகும். பன்மைகளாகிய வருமொழியை உடைய ஆறாம் வேற்றுமைக்கு ‘அ’ என்பது உருபு ஆகும் என்று கூறுகிறது (நன்.300). இது குறித்து பெ. சுயம்பு, “அது, அ என்பன தொல்காப்பிய மொழியிலும் அது, ஆது, அ மூன்றும் சங்க இலக்கியங்களிலும் ஆறன் உருபுகளாக வருகின்றன.

தோலது பெருக்கமும் (தொல். பொருள். 68)

அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும் (தொல். பொருள். 194)

பாரியது பறம்பே (புறநா. 109)

தனாது செங்கதிர்ச் செல்வன் (நற். 164)

நின்ன கண்ணியும் (புறநா.. 45)

ஆது உருபு அது என்பதன் ஒலி நீட்சியாக வருகின்றது. அகர உருபு ஒருமை, பன்மை என்னும் வேறுபாடின்றி வருகிறது. தொல்காப்பியம் தன் கால மொழி வழக்கை விடவும் முந்தைய இலக்கண மரபைப் போற்றி இலக்கணம் கூறுதலை அணுகுமுறையாகக் கொண்டது. எனவே அகர உருபை அது குறிப்பிடவில்லை”[50] என்று விளக்குகிறார்.

நன்னூலைப் பின்பற்றி பிற்றை இலக்கணிகள் பலரும் ஆறாம் வேற்றுமையின் உருபுகளாக அது, ஆது, அ ஆகிய மூன்றனையும் குறிப்பிடுகின்றனர் (இ. வி. 203, தொ. வி. 61, மு. வீ. பெயர். 64, சு. நா. 43, இ. த. ஐந். 222, தென். சொற். 58, 59). தமிழ்க்காப்பு இயம் அது, அ ஆகிய இரு உருபுகளை மட்டுமே குறித்துள்ளது (த. கா. இ. 263, 264).

சொல்லுருபுகள்

ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக ‘உடைய’ என்பதை சுவாமிநாதம் (சு.நா. 43), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ. த. ஐந். 222), தென்னூல் (சொற். 59), தமிழ்நூல் (த. நூ. 78), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 265) ஆகிய இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன. இனிய தமிழ் இலக்கணம் ‘இன்’ உருபை ஆறாம் வேற்றுமைக்குரியதாகக் கூறுகிறது (இ. த. இ. 110) (நெல்லினது உமி).

ஏழாம் வேற்றுமைப் பெயர்கள் அல்லது பாகுபாடுகள்

தொல்காப்பியம் ஏழாம் வேற்றுமையின் பொருட் பாகுபாடுகளாக,

கண் கால் புறம் அகம் உள் உழை கீழ் மேல்
பின் சார் அயல் புடை தேவகை எனாஅ
முன் இடை கடை தலை வலம் இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார் (தொல்.சொல்.82)

என்று கூறுகிறது. இவற்றை இளம்பூரணர் உருபு என்றும், இவற்றால் பொருள் வேறுபாடில்லை என்றும் கூறுகிறார். கண் முதலிய பத்தொன்பதும் உருபின் வேறுபாடே என்பது அவரது எண்ணம். ஆனால் சேனாவரையர் அவற்றைப் பொருளின் பாகுபாடாகக் கருதுவதை, “கண் முதலாயினவெல்லாம் உருபு என்றாரால் உரையாசிரியர் எனின், உருபாயின், ஏழாவதற்குக் கண் என்பது உருபாதல் மேலே பெறப்பட்டமையாற் பெயர்த்துங் கண் கால் என்றல் கூறியது கூறிற்றாம் ஆகலானும், ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கை வலத்துள்ளது கொடுக்கும் எனப் புறம் அகம் வலம் என்பனவற்றுழி அத்துச் சாரியை கொடுத்து உதாரணம் காட்டினமையானும் அவர்க்கு அது கருத்தன்றென்க.

உருபு அல்லவேல், என்னுழை, என்முன் என நிலைமொழி உருபிற் கோதிய செய்கை பெற்றவாறு என்னையெனின் ‘அதற் பொருட்டாகலின்’ (சொல். 76) எனவும், ‘தம்முடைய தண்ணளியும் தாமும்’ எனவும் உருபின் பொருள்பட வரும் பிறமொழி வந்துழியும் நிலைமொழி அச்செய்கை பெற்று நிற்றலின் அச்செய்கை உருபு புணர்ச்சிக்கேயென்னும் யாப்புறவின் றென்க”[51] என்னும் உரைப்பகுதி விளக்கும்.

மேலும் இது குறித்து பெ. சுயம்பு, ''தெ. பொ. மீனாட்சி சுந்தரன் (தமிழ்மொழி வரலாறு, பக்கம் 143), ஆண்டீரி எ.ஃ.ப் ஜோபர்கு (Evidence for a locative case in Telugu, page 59) ஆகியோர் கண், கால் போன்றவற்றைப் பெயர்கள் எனக் கருதுகின்றனர்.

தொல்காப்பியம் ஒவ்வொரு வேற்றுமையினையும் விளக்குமிடத்து முதல் நூற்பாவில் வேற்றுமையின் உருபு, அதன் பொருள் ஆகியவற்றையும், இரண்டாவது நூற்பாவில் அவ்வேற்றுமை அமைதற்கு உரிய பல்வேறு தொடரமைப்புக்களின் பொருட்களையும் கூறுதலை விவரிப்பு நெறியாகக் கொண்டுள்ளது. எனவே ஏழாம் வேற்றுமையை விளக்கும் இரண்டாவது நூற்பாவில் கூறியுள்ள கண், கால் முதலியவற்றை அவ்வேற்றுமை அமைதற்கு உரிய பல்வேறு பொருட்களை உணர்த்தும் பெயர்ச்சொற்கள் எனக் கொள்ளலாம். இவற்றுள் பெரும்பாலானவை ஏழாம் வேற்றுமை உருபுகளாகவும் செயலாற்றுகின்றன.''[52] என விளக்குகிறார்.

இவ்விளக்கத்தை நோக்க, கண், கால் முதலியவற்றை ஏழாம் வேற்றுமை உருபுகள் எனக் கொள்வதை விடவும் இடப் பொருளை உணர்த்த வரும் பெயர்கள் எனக் கருதுவதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

நன்னூல் இவற்றை உருபுகள் என்றே குறிக்கிறது. தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றோடு மேலும் சிலவற்றைச் சேர்த்து 28 உருபுகளைக் குறிப்பிடுகிறது. இதனை,

கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பாடு அளைதேம் உடைவழி உழிஉளி
உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே (நன். 302)

என்னும் நூற்பா விளக்கும்.

முத்துவீரியம் ஏழாம் வேற்றுமை உருபின் பொருள் பட வந்த பிற சொற்களாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றுள் 'தலை' என்பதை நீக்கி நூல் என்பதைச் சேர்க்கிறது (மு. வீ. பெயர். 68).

இனிய தமிழ் இலக்கணம் இவற்றைச் சொல்லுருபுகள் எனக் குறிக்கிறது. 36 வகை சொல்லுருபுகளைக் கூறியுள்ளது (இ. த. இ. ப. 123-125).

தென்னூல், இடவகை சுட்டும் சொற்பொருளுருபுகளாக கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், முன், பின், அயல், புடை, கடை, யிடை, தலை,

வாய், வலம், இடம், முதல், சார், தேளம், திசை, உழை, வழி, உளி, இல், வயின் ஆகியவற்றைச் சுட்டுகிறது (தென். சொற். 61).

தமிழ்க் காப்பு இயம் கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், முன், பின், அயல், புடை, வலம், இடம், மிசை, சார், வழி, வயின், வாய், தலை, இடை, கடை, பாடு, அளை, உழி, திசை, பால் ஆகியவற்றைக் கூறுகிறது (த. கா. இ. 268). மிசை, பால் ஆகியவற்றைப் புதிதாகச் சேர்த்துள்ளது.

துணை வேற்றுமை உருபுகள்

இக்காலத்தில் சொல்லுருபுகளின் வளர்ச்சி நிலையாகத் துணை வேற்றுமை உருபுகள் தோற்றம் பெற்றுள்ளன. பற்றி, தவிர, விட, போல, ஒட்டி, குறித்து, கொண்டு, வைத்து, மேலே, கீழே, முன்னே, பின், உள்ளே, வெளியே, எதிரே, இருந்தது போன்ற துணை வேற்றுமை உருபுகளை முத்துச் சண்முகம் குறிப்பிடுகிறார். சொல்லுருபுகளுக்கும், துணை வேற்றுமை உருபுகளுக்கும் உள்ள வேறுபாட்டை அவர் “நாம் துணை வேற்றுமை உருபுகள் என்று கருதியவற்றில் பலவற்றை நமது இலக்கண ஆசிரியர்கள் சொல்லுருபுகள் எனக் கூறுகின்றனர். ஒரு வேற்றுமை உருபு வரும் இடத்தில் அதற்குப்பதில் அது வர வேண்டிய இடத்தில் வந்து அதே பொருள் கொடுக்கும் தனிச்சொற்களைச் சொல்லுருபுகள் என்று கூறுதல் நலம், இராமனது என்பதற்குப் பதில் இராமனுடைய என்று வரும்பொழுது உடைய என்பது உடைமை வேற்றுமையின் சொல்லுருபு.

துணை வேற்றுமை உருபுகள் வேற்றுமை உருபுகளின் மேல் அவற்றிற்குத் துணையாக வருவன. துணை வேற்றுமை உருபுகள் வரும் இடங்களில் அவற்றிற்குரிய அடிப்படை வேற்றுமை உருபுகள் அவற்றின் முன் வருதல் வேண்டும். எனவே சொல்லுருபுகள் வேறு; துணை வேற்றுமை உருபுகள் வேறு”[53] என்று விளக்குகிறார்.

வேற்றுமை மயங்கியல் - மரபு வளர்ச்சி

ஆகுபெயர் வகைகள் - வளர்ச்சி நிலைகள்

தொல்காப்பியர் ஆகுபெயரை வரையறை செய்யவில்லை. அதன் வகைகளை மட்டுமே குறிப்பிடுகிறார்.

முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்

வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகை இ

அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி. (தொல். சொல். 113)

என்னும் நூற்பா வழி,

1. முதலாகுபெயர்
2. சினையாகுபெயர்
3. இடவாகுபெயர்
4. பண்பாகுபெயர்
5. காரண ஆகுபெயர்
6. இருபெயரொட்டு ஆகுபெயர்
7. கருத்தா ஆகுபெயர்

என்ற எழுவகை ஆகுபெயர்களையும் அவற்றோடு முகத்தல் அளவை ஆகுபெயர், நிறுத்தல் அளவை ஆகுபெயர் ஆகியவையும் ஆகுபெயராகக் கொள்ளத்தக்கன என்பதை,

அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி

உளவென மொழிப உணர்ந்திசி னோரே (தொல். சொல். 116)

என்னும் நூற்பா வழித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. எனவே ஆகுபெயரின் வகைகளை ஒன்பதாகப் பாகுபடுத்துகிறது தொல்காப்பியம். மேலும் இவையன்றி பிறவும் ஆகுபெயராக வருதலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று புறனடை கூறுகிறார் தொல்காப்பியர் (தொல். சொல். 117). ஆகுபெயரை வேற்றுமை மயங்கியலில் கூறியமைக்கு நச்சினார்க்கினியர், ‘‘இவ் ஆகுபெயர்கள் எழுவாய் வேற்றுமை மயக்கம் என்று உணர்க’’[54] என்று விளக்கம் தருகிறார்.

தெய்வச்சிலையார், ‘‘முதலில் கூறும் சினை அறி கிளவியும், சினையின் கூறும் முதல் அறி கிளவியும், பண்பு கொள் பெயரும் இரு பெயர் ஒட்டும் ஆறாம் வேற்றுமைப் பொருள் மயக்கம், பிறந்த வழிக் கூறல் ஏழாம் வேற்றுமைப் பொருள் மயக்கம். இயன்றது மொழிதலும், வினை முதல் உரைக்கும் கிளவியும் மூன்றாம் வேற்றுமைப் பொருள் மயக்கம்’’[55] என்று கூறி ஆகுபெயரை வேற்றுமை மயங்கியலில் கூறியமை பொருத்தமுடையதே என்பதை உணர்த்துகிறார்.

ஆகுபெயரின் வகைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் இருபெயரொட்டாகுபெயர் குறித்து பல்வேறு குழப்பங்கள் அறிஞர்களிடையே நிலவுகிறது.

இளம்பூரணர் இருபெயரொட்டாகு பெயருக்குப் பொற்றொடி என்பதை உதாரணம் காட்டுகிறார்[56]. பொற்றொடி என்பது அன்மொழித் தொகை என்பதை உணர்ந்த சேனாவரையர், 'அன்மொழித் தொகை மேல் வரும் இருபெயரொட்டு' என்கிறார்[57]. எனில், தொல்காப்பியர் இவ்விரண்டையும் தனித்தனியே கூறியிருக்க மாட்டார். வேற்றுமை மயங்கியலில் இருபெயரொட்டு ஆகுபெயரையும், எச்சவியலில் அன்மொழித் தொகையையும் தொல்காப்பியர் விளக்குகிறார். நச்சினார்க்கினியர், அன்மொழிப் பொருள்மேல் நில்லாத இருபெயரொட்டு என்கிறார். "பொற்றொடி என்பது அன்மொழித்தொகை; ஆகுபெயர் அன்மை உணர்க"[58] என்று கூறி முன்னைய உரையாசிரியர்களின் கருத்தை மறுக்கிறார்.

தெய்வச்சிலையார், "ஆகுபெயராவது ஒட்டுப்பட்ட பெயரோடு ஒற்றுமைப்பட்டு வரும், அன்மொழித் தொகையாவது அப்பொருளின் வேறுபட்டு வரும்"[59] என்று விளக்கி துடியிடை என்பதைச் சான்று காட்டுகிறார். பொற்றொடி என்னும் போது பொன்னாலாகிய தொடி என்று ஒற்றுமைப்பட்டும், துடியிடை என்னும் போது துடி போன்ற இடை என்று இருபெயர்களும் இயைபில்லாது வேறுபட்டும் நிற்பதை நோக்கத் தெய்வச்சிலையார் கருத்தே பொருத்தமுடையதாய் அமைகிறது.

இருபெயரொட்டாகு பெயருக்கும், அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்க சூ. இன்னாசி, "ஆகுபெயரை வேற்றுமை மயங்கியலிற் கூறி, எச்சவியலில் அன்மொழித் தொகையினைத் தொல்காப்பியர் கூறுவர். அன்மொழித் தொகைக்கும் ஆகுபெயருக்கும் உள்ள தொடர்பினைத் தெளிவுறுத்தவில்லை. அவை இரண்டனையும் வேறுபடுத்தற்காகவே, நன்னூலார் ஆகுபெயருக்கு வரையறை கூற முயன்றிருக்கிறார் என்பர் டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை. சிவஞான முனிவர் விளக்குகையில் 'ஆகுபெயரும், அன்மொழித் தொகையும் தம் பொருள் உணர்த்தாது, பிறிது பொருள் உணர்த்துதலால் ஒக்குமாகலின் அவை தம்முள் வேற்றுமை யாதோ எனின், ஆகுபெயர் ஒன்றன் பெயரான் அதனோடியைபு பற்றிய பிறிதொன்றனையுணர்த்தி ஒரு மொழிக் கண்ணதாம் ; அன்மொழித்தொகை இயைபு வேண்டாது இருமொழியுந் தொக்க தொகையாற்றலால் பிறிது பொருளுணர்த்தி இரு மொழிக் கண்ணதாம்'. இவை தம்முள் வேற்றுமையென்க' என்பர்"[60] என்று விளக்கம் தருகிறார். இது ஆகுபெயரையும், அன்மொழியையும் வேறுபடுத்த துணைபுரிகின்றது.

எனவே, ஒன்றோடு ஒன்று இயைபுடைய இரு பெயர்கள் இணைந்து தன்னைக் குறிக்காமல் பிறிதொன்றனைக் குறிப்பது ஆகுபெயர் என்றும், ஒன்றோடு ஒன்று இயைபில்லாத இரு சொற்கள் இணைந்து வந்து வேறு பொருளைக் குறிப்பது அன்மொழித்தொகை என்பதும் பெறப்படும்.

நன்னூல் ஆகுபெயரின் வகைகளாக பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகு பெயர், சினையாகுபெயர், குணவாகுபெயர், தொழிலாகுபெயர், அளவையாகுபெயர், சொல்லாகுபெயர், தானியாகு பெயர், கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கருத்தாவாகு பெயர் எனப் பன்னிரு ஆகுபெயர்களைக் குறிப்பிடுகிறது.

தொல்காப்பியர் குறிப்பிடும் இருபெயரொட்டாகு பெயர் நன்னூலில் இடம்பெறவில்லை. சினை, தொழில், சொல், தானி, காரியம், கருத்தா ஆகிய ஆகுபெயர்களை நன்னூல் புதிதாகச் சேர்க்கிறது.

நன்னூல் குறிப்பிடும் அளவை ஆகுபெயரை நால்வகையாகக் குறிப்பிடுகின்றனர் உரையாசிரியர்கள். முகத்தல், நிறுத்தல், நீட்டல், எண்ணல் ஆகியன. எனினும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் 'அளவும், நிறையும் என்பதற்கு முகத்தல் அளவை, நிறுத்தல் அளவை ஆகிய இரண்டனை மட்டும் குறிப்பிடுகின்றனர். மேலும் இவை தவிர உவமையாகுபெயர், விடாதவாகு பெயர், விட்டவாகு பெயர், இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர் போன்றவற்றையும் நன்னூல் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றி ஆகுபெயரின் வகைகளைக் கூறுகிறது. கருவி, காரியம் என நன்னூல் குறிப்பதை காரணம், காரியம் எனக் கூறுகிறது இலக்கண விளக்கம் (இ. வி. 192).

தொன்னூல் விளக்கம் முதலாகு பெயர், சினையாகு பெயர், கருவியாகு பெயர், காரியவாகு பெயர், பண்பாகு பெயர் ஆகிய ஐவகை ஆகுபெயர்களையே சுட்டுகிறது (தொ. வி. 49).

சுவாமிநாதம் ஆகுபெயரின் வகைகளாக இருபெயரொட்டு, உவமை, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், அளவை, காரணம், காரியம், சொல், கருவி, தானி, வினைமுதல் ஆகிய பதினைந்தனைக் குறிப்பிடுகிறது (சு. நா. 40).

தொல்காப்பியம் குறிப்பிடும் இருபெயரொட்டாகு பெயரைப் பிற்றை இலக்கண நூல்களில் சுவாமிநாதம் மட்டுமே குறிப்பிட்டுள்ளது. மேலும் நன்னூல் கருவி என்பதைக் கூற, இலக்கண விளக்கம் அதனைக் காரணம் என்று குறிப்பிட, சுவாமிநாதமோ இவை இரண்டையும் வெவ்வேறாகக் குறிப்பிடுகிறது.

இனிய தமிழ் இலக்கணம் ஆகுபெயரைப் பதினாறு வகைப்படுத்துகிறது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலுடன்,
எணல், எடுத்தல், முகத்தல், நீட்டலளவை
தானி, சொல், கருவி, கருத்தா, காரியம்

உவமை யுடன்பதி னாறாம் அதுவே. (இ.த.இ.122)

என்கிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணம், இனிய தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றி ஆகுபெயரின் வகைகளைச் சுட்டுகிறது. ஒவ்வொரு ஆகுபெயரையும் தனித்தனி நூற்பாக்களில் விளக்கியுள்ளது (இ. த. ஐந். 172-189).

தென்னூல் ஆகுபெயரை பதினான்கு வகைப்படுத்துகிறது. அவை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், கருவி, காரியம், வினைமுதல், உறைவிடம், அளவை, சொல், இருபெயரொட்டு, பொரூஉப் பொருள் ஆகியன (தென். சொற். 220).

உறைவிடம், பொரூஉப் பொருள் என்பன தென்னூல் குறிப்பிடும் புதுவகை ஆகுபெயர்களாகும்.

தொல்காப்பியம் குறிப்பிடும் இருபெயரொட்டு ஆகுபெயரைச் சுவாமிநாதமும், தென்னூலும் மட்டுமே பின்பற்றியுள்ளன.

தமிழ்நூல் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், இடம்படு பொருள் (தானி), உவமை ஆகிய எண்வகை ஆகுபெயர்களைக் குறிப்பிடுகிறது (த. நூ. 65).

மேலும், நன்னூல் உரையாசிரியர்கள் கருத்தின் அடிப்படையில்,

மடி பெறும் ஆகுபெயரும் உண்டே(த. நூ. 66)

என்பதன் வழி இருமடியாகுபெயர், மும்மடியாகு பெயர் என்பவற்றையும் ஏற்கிறது. தமிழ்க்காப்பு இயம் தொல்காப்பியத்தையும், நன்னூலையும் பின்பற்றி ஆகுபெயரின் வகைகளை விளக்குவதை,

முதற்பெயர் சினைக்கும் சினைப்பெயர் முதற்கும்
கருவியின் பெயரதன் காரியத் திற்கும்
காரியத் தின்பெயர் கருவி தனக்கும்
தொழிலோடு பண்புப் பெயரதன் பொருட்கும்
காலம் இடப்பெயர் தோன்றும் பொருட்கும்
அளவைப் பெயர்கள் அவைகொள் பொருட்கும்
வினைமுதல் கிளவி அதுசெய் பொருட்கும்
ஆகி வருதல் தொன்முறை வழக்கே. (த. கா. இ. 244)

என்னும் நூற்பா புலப்படுத்தும்.

மேலும் தமிழ்க்காப்பு இயம் தொல்காப்பியத்தைப் போன்றே இயற்பெயருக்கும் ஆகுபெயருக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்தி நூற்பாவை அமைத்துள்ளது. டாக்டர் பொன். கோதண்டராமன், ''இயற்பெயர்ப் பொருளுக்கும் ஆகுபெயர்ப் பொருளுக்கும் உள்ள தொடர்பு தொல்காப்பியத்தில் நன்கு விளக்கப்பெற்றுள்ளது. நன்னூலார் ஆகுபெயரை வகைப்படுத்தியுள்ளார். ஆனால் தொல்காப்பியரைப் போல இயற்பெயர்ப் பொருளுக்கும், ஆகுபெயர்ப் பொருளுக்கும் உள்ள தொடர்பினை நன்னூலார் தெளிவாக வழங்கவில்லை. முதற்பெயர் சினைக்கும், சினைப்பெயர் முதற்கும், பொருள் பிறந்த இடத்தின் பெயர் பொருளுக்கும், பண்பின் பெயர் பண்புக்கும், பொருளின் பெயர் அப்பொருளாற் செய்யப்பட்ட பிறிதொரு பொருளுக்கும், வினைமுதலின் பெயர் வினைமுதலாற் செய்யப்பட்ட பொருளுக்கும் ஆகிவரும் என்பதைத் தொல்காப்பியர் தெளிவாகக் கூறுகிறார்''[61] என்று குறிப்பிடுகிறார். அந்த அடிப்படையிலேயே தமிழ்க் காப்பு இயமும் ஆகுபெயரின் வகைகளை விளக்குவது சிறப்புக்குரியது.

ஆகுபெயரின் வகைகளை விளக்குவதில் இலக்கணிகள் ஒவ்வொருவரும் எண்ணிக்கையில் மாறுபடுகின்றனர். இம்மாற்றம் மரபு வளர்ச்சி கருதி ஏற்றுக் கொள்ளத்தக்கது.

விளி வேற்றுமையின் இலக்கணம் - மரபு வளர்ச்சி

விளி வேற்றுமை எனப்படுபவை அவ்விளியை ஏற்கும் பெயர்களோடு தெளிவுறத் தோன்றும் இயல்பை உடையன என்று தொல்காப்பியம் கூற (தொல். சொல். 118), நேமிநாதம் விளி வேற்றுமையில் பெயர் அடையும் வேறுபாடுகளை விளக்குகிறது. உயிர் இறுதியும், ஒற்று இறுதியும் ஆகிய உயர்திணைப் பெயரும், அஃறிணைப் பெயரும், விரவுப்பெயரும் முன்னிலைக்கண் விளியேற்குமிடத்து ஈறு திரிதலும், ஈற்றயல் நீடலும், பிறிது வந்தடைதலும், இயல்பாதலும் என நான்கு வகைப்படும் என்று குறிப்பிடுகிறது (நேமி. 48).

நன்னூல், விளி ஏற்கும் பெயர் அடையும் மாறுபாடுகளாக ஐந்தனைக் குறிப்பிடுவதுடன், விளி வேற்றுமையின் பொருளையும் கூறுவதனை,

எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரிபும் ஆம்; பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.(நன். 303)

என்னும் சூத்திரம் விளக்கும்.

இலக்கண விளக்கமும் (இ. வி. 205), தொன்னூல் விளக்கமும் (தொ. வி. 69) நன்னூல் சூத்திரத்தை எடுத்தாண்டுள்ளன.

சுவாமிநாதம், விளியேற்கும் பெயரின்

1. ஈற்று அயல் எழுத்து மாத்திரை நீளுதல்
2. ஈறு கெடுதல்
3. ஈறு நீளுதல்
4. ஈற்று விகுதி கெட்டு 'ஆ' விகுதி சேர்தல்
5. ஆ, ஓ, ஏ ஆகிய விகுதிகளைப் பெற்று வரல்.
6. ஈற்றயல் அ, ஆ, இ, ஈ பெற்று வருதல்.
7. ஈறு அளபெடுத்து வேறு ஒன்று மிகுதல்
8. ஈறு மிகுதல்

ஆகியன அவற்றின் உருபாம் எனக் குறிப்பிடுகிறது. மேலும் படர்க்கைப் பெயர் விளி உருபு ஏற்கும்போது முன்னிலையாகும் என்றும் விடை, ஏவல், வினைப்பயன் ஆகிய மூன்று பொருளில் எட்டாம் வேற்றுமை வரும் என்றும் குறிப்பிடுகிறது (சு. நா. 44).

தொல்காப்பியம் முதலான நூல்கள் விளி பெறும் உயிரீறுகள், மெய்யீறுகள், விளியேற்கும் போது அவை அடையும் மாற்றங்கள் குறித்து விரிவாக விளக்க, சுவாமிநாதம் அவற்றைத் தனித்தனியே விளக்காமல் பொதுவாக அடையும் மாற்றங்களை மட்டுமே கூறியுள்ளது. இனிய தமிழ் இலக்கணம்,

பெயர்முன் ஆ, ஏ, ஓ, டே சேர்த்தும்
பின்னே ஆ, ஈ, ஏ, ஓ சேர்த்தும்
கூவி யழைக்கும் குரலி னாலுமே
விளிவேற் றுமையை எளிதாக் குவமே. (இ. த. இ. 112)

என்று கூறுகிறது. இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

எட்டாம் வேற்றுமை விளிவேற் றுமையாம்;
ஈறு திரிதல் குன்றல் மிகுதல்
இயல்பா தலுடன் ஈற்றயல் திரிதல்
ஈறுகெட்டிடல் திரிதலும் திரிந்தபின்
ஏ ஓ மிகுதலும் இதன் உருபாமே. (இ. த. ஐந். 228: 1-5)

என்று குறிப்பிடுகிறது. மேலும் விளியின் வகைகளாக அண்மை விளி, சேய்மை விளி என இருவகைப்படுத்துகிறது (இ. த. ஐந். 229).

தென்னூல் முன்னையோர் கருத்தைப் பின்பற்றி விளி என்னும் பெயருடைய எட்டாம் வேற்றுமை எய்தும் பெயர் இறுதி குன்றல், மிகுதல், திரிதல், இயல்பு, ஈற்றயல் திரிதல், நீளுதல், அளபெடுத்தல், ஏகாரமுறல் அன்ன பிறவாகப் பெயர் வடிவு வேறுபடுதல் அதன் மரபாகும். அதன் பொருள்நிலை படர்க்கையை முன்னிலைப்படுத்தி அழைப்பதாகும் என நவில்கிறது (தென். சொற். 62).

தமிழ்நூல் நன்னூலைப் பின்பற்றியுள்ளது. நன்னூல் எய்துபெயர் எனச் சுட்டுவதை இயற்பெயர் எனக் குறிப்பிடுகிறது தமிழ்நூல் (த. நூ. 81).

தமிழ்க்காப்பு இயம், நன்னூலைப் பின்பற்றி விளி ஏற்கும் போது அடையும் மாற்றத்தை விளக்குகிறது (த. கா. இ. 274).

விளியேற்கும் உயர்திணைப்பெயர்கள் - மரபு வளர்ச்சி

விளியேற்கும் உயிரீறுகள்

தொல்காப்பியம் இ, உ, ஐ, ஓ ஆகிய நான்கினை உயர்திணைப் பெயர்களில் விளியேற்கும் உயிரீறுகளாகச் சுட்டுகிறது. நன்னூல் இந்நான்குடன் ஊ என்பதையும் சேர்த்து ஐந்து உயிரீறுகளைக் குறிப்பிடுவதை,

> **இஉ ஊவோடு ஐஓனளரல**
> **யவ்வீற்று உயர்திணை (நன். 304.:1-2)**

என்னும் சூத்திரம் உணர்த்தும். இவ்வடிகளை இலக்கண விளக்கம் எடுத்தாண்டுள்ளது (இ. வி. 206)

இனிய தமிழ் இலக்கணமும் நன்னூலைப் பின்பற்றி இ, உ, ஊ, ஐ, ஓ ஆகிய ஐந்தனையும் உயர்திணைப் பெயர்களில் விளியேற்கும் உயிரீறுகளாகச் சுட்டுகிறது (இ. த. இ. ப. 127).

ஐகார ஈற்று முறைப்பெயர் விளியேற்றல்

தொல்காப்பியம், ஐகார ஈறு முறைப் பெயரில் விளியேற்கும்போது ஆகாரமாகும் (தொல். சொல். 126) என்று குறிப்பிட, தமிழ்க்காப்பு இயம் ஆகாரமாகவும், ஏகாரத்தோடு பொருந்தியும் விளியினை ஏற்று வரும் (த. கா. இ. 277) என்று கூறுவது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

உயிரீறுகள் அண்மை விளி பெறுதல்

> **அண்மைச் சொல்லே இயற்கை ஆகும் (தொல். சொல். 127)**

என்ற தொல்காப்பியம் சுட்ட, நன்னூல் அண்மை விளிக்கு இயல்பும், ஈறு கெடுதலும் உருபாக வரும் என்கிறது (நன். 313).

இலக்கண விளக்கமும், தொன்னூல் விளக்கமும் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளன (இ.வி. 215) (தொ. வி. 78). தென்னூலும் நன்னூலைப் பின்பற்றி விளிக்கப்படும் பொருள் இயல்பாயும், ஈறழிந்தும் வரும் என்கிறது (தென். சொற். 65).

விளியேற்கும் புள்ளி ஈறுகள்

தொல்காப்பியம் உயர்திணைப்பெயர்களில் விளியேற்பனவாக ன, ர, ல, ள ஆகிய நான்கு மெய்யீறுகளைச் சுட்ட, நன்னூல் அவற்றோடு 'ய' வையும் இணைக்கிறது (நன். 304).

இலக்கண விளக்கம் (இ. வி. 206), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ.113), தென்னூல் (தென். சொற். 63) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

தமிழ்க்காப்பு இயம், நன்னூல் கூறும் ன, ர, ல, ள, ய வுடன் 'ம' வையும் இணைக்கிறது (த. கா. இ. 275).

அம் ஈறு விளியேற்றல்

தமிழ்க்காப்பு இயம் மகர மெய்யையும் விளியேற்கும் ஈறுகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. அந்தவகையில் 'அன்' ஈறைப் போலவே 'அம்' ஈறும் விளியேற்கும் போது ஆவாகும் என்றும், அண்மை விளியில் புள்ளி நீங்கி இயல்பாய் ஒலிக்கும் என்பதையும் தமிழ்க் காப்பு இயம் பதிவு செய்துள்ளது (த. கா. இ. 280, 281).

பொதுவாகிய விளி உருபுகள்

நன்னூல், உயர்திணை, அ.்.றிணை, பொது என்னும் மூவகைப் பெயர்களிடத்தில் இயல்பாதல், 'ஏ' மிகுதல், இ. ஈ ஆதல் இவை பெரும்பாலும் விளி உருபுகளாக வரும் என்று கூறுகிறது (நன். 305).

இலக்கண விளக்கம் இக்கருத்தமைந்த நன்னூல் சூத்திரத்தை எடுத்தாண்டுள்ளது (இ. வி. 207).

சேய்மை விளியின் இயல்பு

எல்லாப் பெயரும் சேய்மை விளியில் விளியேற்கும் போது அளபிறந்து இசைக்கும் என்று தொல்காப்பியம் முதலான நூல்கள் குறிப்பிட, தென்னூல், சேய்மை விளிக்கண் பெயர் அளபெடுத்தலும், ஏகாரம் உறுதலும் ஆகும் என்கிறது (தென். சொற். 65).

புலம்பலில் ஓகாரம் வருதல்

அண்மைவிளி, சேய்மை விளி குறித்துக் கூறுவதுடன் நன்னூல் புலம்பலுக்கு ஓகாரம் வரும் (நன். 313) என்ற கருத்தையும் பதிவு செய்துள்ளமை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

இலக்கண விளக்கமும் (இ. வி. 215) தொன்னூல் விளக்கமும் (தொ. வி. 78) நன்னூல் சூத்திரத்தை எடுத்தாண்டுள்ளன. தென்னூலும் இக்கருத்தைக் குறிப்பிட்டுள்ளது (தென். சொற். 65).

மரபு வீழ்ச்சி

அறுவகை இலக்கணத்தில் இரண்டாம் மற்றும் நான்காம் வேற்றுமை தவிர பிற வேற்றுமை மரபுகள் பேசப்படவில்லை. அவிநயத்தில் மூன்றாம், ஐந்தாம் வேற்றுமை உருபுகள் தவிரப் பிற வேற்றுமைகள் பற்றிய செய்திகள் கிடைத்தில.

தொகைச்சொல்லும் எழுவாய் ஆகும் என்னும் தொல்காப்பியக் கருத்தைத் தென்னூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் குறிப்பிடவில்லை. பெயர் வெளிப்படத் தோன்றி பயனிலை கொள்ளுதலே சிறப்புடையது என்பதை இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை. பெயருக்கு இறுதியில் உருபு நிற்கும் என்னும் கருத்து நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியவை தவிர்ந்த பிற நூல்களில் இடம்பெறவில்லை. பெயர் காலம் காட்டாது எனும் கருத்து நேமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை. இரண்டாம் வேற்றுமைப் பொருண்மைகள் நேமிநாதம், சுவாமிநாதம், தமிழ்நூல் ஆகியவற்றில் கூறப்பெறவில்லை.

இலகு தமிழ் ஐந்திலக்கணம், தென்னூல், தமிழ்நூல் ஆகியன மூன்றாம் வேற்றுமைப் பொருளாக வினைமுதல் பொருண்மையைக் குறிப்பிடவில்லை. அது முதல் வேற்றுமைக்கும் வருதல் காரணமாக இருக்கலாம். ‘‘வினைமுதல் கருவி அனை முதற்றதுவே’’ (தொல். சொல்.73) என்பதற்கு தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலரும் மூன்றாம் வேற்றுமையின் பொருண்மைகளாக வினை முதல், கருவி ஆகிய இரண்டனையும் குறிப்பிடுகின்றனர். பாலசுந்தரனார், ‘‘வினை நிகழ்தற்கு அடிப்படைக் கருவியாகிய அத்தகைய காரணத்தை உடையதாய் வரும்’’[62] என்கிறார். மேலும், ‘‘உரையாசிரியன்மார் வினைமுதலும், கருவியும் மூன்றாவதன் பொருள் என்றனர். வினைமுதல் எழுவாய் வேற்றுமைப் பொருள். கருவி ஒன்றே மூன்றாம் வேற்றுமைப் பொருள் என அறிக’’[63] என்கிறார். எனினும் முதல் வேற்றுமையில் வரும் வினைமுதல் செய்வினையையும், மூன்றாம் வேற்றுமையில் வரும் வினைமுதல் செயப்பாட்டு

வினையையும் பற்றி வந்தது என்னும் இனிய தமிழ் இலக்கணத்தின் (இ. த. இ. 107) விளக்கம் பொருத்தமுடையதாக அமைகிறது.

நேமிநாதத்தில் வேற்றுமைப் பொருட் பாகுபாடுகள் கூறப்பெறவில்லை. தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் ஆகியவற்றில் ஏழாம் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் பிற பெயர்கள் கூறப்பெறவில்லை.

ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை சார்தல் பொருளிலும் வரும் (தொல். சொல்.72) அ∴து இருவகைப்படும். கருமச் சார்பு, கருமமல்லாச் சார்பு. தூணைச் சார்ந்தான் என்பது கருமச் சார்பு. அங்கு செயல் நேரே நிகழ்கிறது. அரசரைச் சார்ந்தான் என்பது கருமமல்லாச் சார்பு. அங்கு சார்தல் நேரடியாக நிகழாமல் குறிப்புப் பொருளை உணர்த்துகிறது. இத்தகைய கருமமல்லாச் சார்புக்கு ஐ உருபு மட்டுமன்றி கண் என்னும் வேற்றுமையும் உரிமை உடையது எனத் தொல்காப்பியம் கூறுகிறது. (தொல். சொல். 84). இக்கருத்து பிற்றை இலக்கண நூல்களில் கூறப்படவில்லை. சினைப்பெயரில் ஐயும், கண்ணும் வினை நிலைக்கண் ஒத்து வருவதை முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. முதல், சினைப் பொருளில் உருபுகள் மயங்கி வரும் முறை பற்றிய தொல்காப்பியக் கருத்துகள் (தொல். சொல். 87,88) நன்னூல், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம், தென்னூல், தமிழ்நூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை. முத்துவீரியத்தில் முதல்சொல்லுக்கு ஐ வரின் சினைச் சொல்லுக்குக் கண் உருபு வரும் (தொல். சொல். 88) என்னும் கருத்து இடம்பெறவில்லை

சினை, முதல்களும், பிண்டப் பெயரும் உரைப்போர் குறிப்பால் பொருள் உணரப்படும் என்னும் கருத்து நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

ஒருவினை ஒடுச்சொல் உயர்பொருளில் வரும் பெயரை அடுத்தே வரும் என்பதையும், ஏதுப்பொருளில் வரும் பொழுது மூன்றாம் வேற்றுமையும், ஐந்தாம் வேற்றுமையும் ஒத்த தன்மையைப் பெற்று வரும் என்பதையும் நோக்கல் பொருள் இரண்டாம், ஐந்தாம் வேற்றுமைக்குரிய காரணப் பொருளில் வரும் என்பதையும் முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

உயர்திணைத் தொகையில் ‘அது’ உருபு மறைந்து ‘கு’ உருபு வரும் என்பதை முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

தடுமாறு தொழிற்பெயரில் இரண்டாம், மூன்றாம் வேற்றுமைகள் ஒத்த நிலையில் வரும் என்பதை முத்துவீரியமும், தென்னூலும் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை.

மேலும் அத் தடுமாறு தொழிற்பெயரின் இறுதியிலுள்ள சொற்களைக் கொண்டு குறிப்பால் பொருளைத் தெளிவாக உணரலாம் (தொல். சொல். 96) என்ற கருத்து யாதொரு நூலிலும் கூறப்படவில்லை.

ஓம்படைக் கிளவிக்கு இரண்டாம், மூன்றாம் வேற்றுமைகள் ஒத்து வருவதை முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை.

ஆறாம் வேற்றுமைக்குரிய வாழ்ச்சிக் கிழமை ஏழாம் வேற்றுமை உருபையும் பெற்று வரும் என்னும் கருத்து முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

கொடைப்பொருளில் வரும் தொகைச் சொல் நான்காம் வேற்றுமை உருபன்றி ஆறாம் வேற்றுமையுடனும் பொருந்தி வரும் என்பதை முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

அச்சப் பொருண்மைக்கு இரண்டும், ஐந்துமாகிய வேற்றுமை உருபுகள் ஒத்து நடப்பதை முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் கூறவில்லை.

வேற்றுமை மயக்கத்திற்குப் புறனடை கூறும் தொல்காப்பியக் கருத்து நேமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

உருபு தொடர்ந்து அடுக்கிய வேற்றுமைத்தொடர்கள் பொருளுணர்த்தும் பாங்கில் ஒரு முடிக்கும் சொல்லினால் முற்றுப்பெறும் என்பதை நன்னூல், இலக்கணவிளக்கம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை.

வேற்றுமையுருபுகள் தொடரின் ஈற்றிலும், இடையிலும் வரும் என்னும் கருத்தை நன்னூல், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை.

ஓருருபு பிற உருபையும் ஏற்று வருமென்பதை நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை. உருபு தொக வருதல் குறித்து முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்களில் கூறப்படவில்லை.

ஐயும், கண்ணும் மட்டுமே ஈற்றிலும் தொகுமென்பதை நேமிநாதம், இலக்கண விளக்கம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை.

பொருள் செல்லும் வழியிலேயே உருபு செல்லும் என்பதை நன்னூல், முத்துவீரியம், இலக்கணக் கொத்து, தென்னூல், தமிழ்நூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

வேற்றுமைத்தொடர்களை எதிர்மறையில் கூறினாலும் உருபுகள் பொருள் மாறாமல் வரும் என்பதை நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை.

செய்யுளில் ஐ, ஆன், கு உருபுகள் அகர உருபாகவும் வரும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை.

நான்கனுருபு பல பொருளிலும் வருவதனை இலக்கணக்கொத்து, முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

நேமிநாதம், முத்துவீரியம், ஆகியவற்றில் ஆகுபெயரின் வகைகள் கூறப்படவில்லை.

அவிநயத்தில் விளி மரபுச் செய்திகள் கிடைக்கப் பெற்றில. இலக்கணக்கொத்தும்,

அழைத்தல் என்றுஒன்று அன்றி வேறு இன்மையின்

விளிக்குச் சூத்திரம் விளம்பிலம் என்க. (இ.கொ.30)

என்று கூறி விளிவேற்றுமையை விளக்கவில்லை.

சுவாமிநாதம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் ஆகியவற்றில் விளி வேற்றுமையின் இலக்கணமும், விளியேலாப் பெயர்களும் மட்டுமே கூறப்பட்டுள்ளது. விளியேற்கும் ஈறுகள் பற்றிப் பேசப்படவில்லை.

உயர்திணைப் பெயர்களுள் இகர ஈற்றுப் பெயர் விளியேற்கும்போது ஈகாரமாகும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், இனிய தமிழ் இலக்கணம் ஆகியன குறிப்பிடவில்லை. ஓ, உ ஆகிய ஈறுகள் விளியேற்கும் போது ஏகாரமாகும் என்பதை முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. இ, உ, ஐ, ஓ தவிர்ந்த பிற உயிரீறுகள் உயர்திணையிடத்து விளிகொள்ளாது என்பதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக் காட்டவில்லை.

இகர ஈற்று அளபெடைப் பெயர் ஈகாரமாகத் திரியாது இயல்பாய் விளி ஏற்கும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை. ஐகார ஈற்று முறைப்பெயர் அடையும் மாற்றம் குறித்து முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை.

ன, ர, ல, ள தவிர்ந்த பிற மெய்யீறுகள் விளி கொள்ளாது என்பதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் பின்பற்றவில்லை. அன் இறுதி ஆவாகும் என்னும் கருத்து நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை. அண்மை விளியின் 'அன்' ஈறு அகரம் பெறுவதை நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் மட்டுமே சுட்டியுள்ளன. நன்னூலும், தென்னூலும் 'அன்' ஈறு

எனக் குறிப்பிடாமல் பொதுவாக அண்மை விளி இயல்பாகவும், ஈறுகெட்டும் வரும் என்று குறிப்பிடுகின்றன. பிற நூல்களில் இக்கருத்து இல்லை. ஆன் இறுதி விளியேற்கும் முறை குறித்து நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை. னகர ஈற்றுத் தொழிற்பெயர், பண்புப்பெயர் விளியேற்கும் முறையை நேமிநாதம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை. னகர ஈற்று அளபெடைப் பெயர் குறித்து நேமிநாதம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. னகர ஈற்று முறைப்பெயர் குறித்து நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. னகர ஈற்று விளியேலாப்பெயர்கள் குறித்து முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. நன்னூல் னகர ஈறு விளியேற்கும் போது அடையும் மாற்றங்களைப் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளது. இலக்கணவிளக்கம், இனிய தமிழ் இலக்கணம் ஆகியன நன்னூல் வழியைப் பின்பற்றியுள்ளன.

அர், ஆர் என்னும் ரகர ஈற்றுப்பெயர்கள் விளியேற்கும்போது ஈர் எனத் திரியும் என்பதை நேமிநாதம், முத்து வீரியம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. ரகர ஈற்று வினையாலணையும் பெயர் ஏகாரம் பெற்று விளியேற்கும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. ரகர ஈற்றுப் பண்புப்பெயர் விளியேற்கும் போது ஏகாரம் பெற்று வரும் என்பதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை. ரகர ஈற்று அளபெடைப்பெயர் விளியேற்கும் முறையை நேமிநாதம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. சுட்டெழுத்துகளை முதலாக உடைய ரகார ஈற்றுப் பெயர்கள் விளியேற்பதில்லை என்பதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. நன்னூல் முதலான நூல்கள் விளியேலாப் பெயர்களைக் குறிப்பிடும்போது சுட்டுப்பெயர்களையும் கூறியுள்ளன. விளியேற்காத ரகரவீற்றுப் பெயர்கள் குறித்து முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை.

லகார, ளகார ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளிகொள்ளும் போது ஈற்றயல் நீண்டொலிக்கும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூற்கள் சுட்டவில்லை. அயல் நெடிதாயின் இயற்கையாகும் என்னும் கருத்தையும் இம்மூன்று நூல்களைத் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. வினை பற்றியும், பண்பு பற்றியும் வரும் ஆள் ஈற்றுப் பெயர்கள் ஆய் எனத் திரிந்து விளி கொள்வதை முத்துவீரியமும், தென்னூலும் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. ளகார ஈற்று முறைப்பெயர்கள் ஏகாரம் பெற்று விளியேற்கும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. சுட்டெழுத்துகளை முதலாக உடைய ளகர ஈற்றுப் பெயர்கள் மற்றும் யாவள் என்னும் வினாவின் பெயரும் விளி ஏற்பதில்லை என்ற கருத்தை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக் காட்டவில்லை. லகார, ளகார ஈற்று அளபெடைப் பெயர்களும் மூன்று

மாத்திரைகள் நீண்டு இயல்பாய் விளியேற்கும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை.

அ∴றிணைப் பெயர்கள் விளி கொள்ளும் முறை குறித்து நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன மட்டுமே கூறியுள்ளன. நன்னூலும், இலக்கண விளக்கமும் அ∴றிணையில் விளி ஏற்கும் ஈறுகளை மட்டுமே குறிப்பிட, பிற நூல்களில் இவை பற்றி ஏதும் பேசப்படவில்லை.

சேய்மை விளியின் இயல்பு அறுவகை இலக்கணம், தமிழ்நூல் ஆகியவற்றில் பேசப்படவில்லை.

'அம்ம' என்னும் உரையசைச்சொல் விளியேற்கும் முறை குறித்து முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை.

விளியேற்காத உயர்திணைப் பெயர்கள் குறித்து தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல் முதலான நூல்கள் மூவகைப் பெயரிலும் விளி ஏலாதன பற்றிக் குறிப்பிடுகிறது. நேமிநாதம், விளியேலாப் பெயர்களை இன்னின்ன எனச் சுட்டிக்காட்டவில்லை. தொன்னூல் விளக்கம், இனிய தமிழ் இலக்கணம் ஆகியவற்றில் விளியேலாப் பெயர்கள் கூறப்படவில்லை.

புதுமரபு

வேற்றுமையின் இலக்கணம்

தொல்காப்பியம் வேற்றுமையின் இலக்கணத்தைக் கூறவில்லை. நன்னூலே வேற்றுமைக்கு விளக்கம் தருகிறது. பெயரின் இறுதியில் நின்று அப்பெயர்ப் பொருளை வேற்றுமைப்படுத்துவன வேற்றுமை என்று விளக்கமளிக்கிறது (நன். 291).

நன்னூலைப் பின்பற்றி இலக்கண விளக்கம் 'பொருள் வேற்றுமை செய்வன' (இ. வி. 193) என்றும், தொன்னூல் விளக்கம் "வேற்றுமைப்படுத்தலின் வேற்றுமையாம்" (தொ. வி. 55) என்றும் கூறுகின்றன. இலக்கணக் கொத்து,

உருபுஏற் றதனையும் உருபையும் உருபு
நோக்கிவந் ததனையும் வேற்றுமை என்பர். (இ.கொ.20)

என்றும், முத்துவீரியம்,

"எல்லாப் பெயரும் வேற்றுமை ஏற்கும்" (மு.வீ.பெயர்.49)

என்றும், இனிய தமிழ் இலக்கணம்,

உருபைக் கூட்டிப் பெயரின் பொருளை

வேறுபடுப்பது வேற்றுமை யாமே (இ.த.இ.100:1-2)

என்றும், இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

வேற்றுமை பெயர்க்கடை வேறுபாடு ஆம் (இ. த. ஐந். 211:1)

என்றும், தமிழ்நூல். 'பொருள் வேறாதல் வேற்றுமை' (த.நூ.68) என்றும் தமிழ்க் காப்பு இயம், 'வேற்றுமை செய்யும் உருபுகள் தம்மை ஏற்கும் பெயரின் ஈறாக நின்று பொருளை வேற்றுமைப்படுத்தலின் வேற்றுமை' எனவும் விளக்கம் அளிக்கின்றன (த.கா.இ.247).

உருபு ஏலாப் பெயர்கள்

நன்னூல் உருபு ஏற்காத பெயர்கள் குறித்துக் கூறியுள்ளது.

நீயிர், நீவிர் என்னும் முன்னிலைப் பெயர்களும், நான் என்னும் தன்மைப் பெயரும் எழுவாய் அல்லாத மற்ற வேற்றுமைகளை ஏலாது என நன்னூல் குறிப்பிடுகிறது. (நன். 294)

இலக்கண விளக்கமும் (இ.வி.197), முத்துவீரியமும் ((மு.வீ.பெயர்.53) நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

இலகு தமிழ் ஐந்திலக்கணம், உருபு ஏற்காப் பெயர்கள் குறித்துக் கூறும்பொழுது, 'நான்' என்பது வேற்றுமை உருபினை ஏற்றிடாது எனவும், யான், யாம், நீர், நீ, தான், தாம் ஆகியவை வேற்றுமை உருபை ஏற்கும் பொழுது திரியும் எனவும் விளக்குகிறது. யான் - எனை, யாம் - எமை, நீர் - உமை, நீ – உனை, தான் - தனை, தாம் - தமை எனச் சான்று தந்து விளக்குகிறது (இ. த. ஐந். 212). இக்கருத்தைப் பின்பற்றித் தமிழ்நூல்,

வேற்றுமை உருபுகள் ஏற்றிடுங் காலை
யான்யாம் யாங்கள் மூன்றும் முறையே
என் எம் எங்கள் என்று தன்மையும்
நீ நின் உன்னென, நீம் நும் உம் என
நீங்கள் உங்கள் என முன்னிலையும்
தான் தாம் தன் தம் எனப் பொதுவும் மாறும். (த. நூ. 72)

என்று கூறுகிறது.

முதல் வேற்றுமையின் பொருள்

முதல் வேற்றுமையின் பொருள் நிலையாக ஒரு கருத்தைப் பதிவு செய்துள்ளது தென்னூல். இருதிணைப் பொருள்களின் குறியீடாகக் குழுவாய்க் கிடக்கும் சொற்களுள் ஒன்று அக்குழுவின் நீங்கி ஒன்றை விளக்குவதற்கு வினை முதலாகத் தோன்றும் நிலையே முதல் வேற்றுமையின் பொருள் நிலையாகும் (தென். சொற். 46) என்று குறிப்பிடுகிறது.

இலக்கணக்கொத்து – புதுமரபுகள்

இலக்கணக்கொத்து வேற்றுமை மரபுகள் குறித்துப் பல புது மரபுகளைப் பதிவு செய்துள்ளது. அவை பெரும்பாலும் வடமொழிச் சார்புடையனவாக அமைந்துள்ளன.

காரகம்

காரகம் என்பதன் இலக்கணம் குறித்து, விளி வேற்றுமையும், ஆறாம் வேற்றுமையும் நீங்கலான ஏனைய வேற்றுமைகள், வினையைக் கொண்டு முடிந்து பொருள் முற்றுப் பெறுமாயின், அவை காரகம் என்ற பெயரைப் பெறும் (இ. கொ. 14) என்று விளக்கம் தருகிறது.

உருபின் வகைகள்

வேற்றுமை உருபுகள் மூவகைப்படும். அவை 1) உருபு 2) வேறு உருபு 3) சொல் உருபு என்பன (இ. கொ. 16). சுவாமிநாதம் இதனை சாற்றுருபு, வேறுருபு, சொல்லுருபு எனக் குறிக்கும் (சு. நா. 41).

உருபுகள் நிற்கும் மூவகைநிலை

உரிமையாய் நிற்றல், ஒப்பாய் நிற்றல், மாறுபட நிற்றல் என மூவகை நிலைகளில் உருபுகள் நிற்கும் (இ.கொ.17) என்று இலக்கணக் கொத்து குறிப்பிடுகிறது.

வேற்றுமை உருபுகள் போல் வெளிப்படுவன

> **வேற்றுமை உருபுகள் அல்லா தனவும்**
> **வேற்றுமை உருபுகள் போல்வெளிப் படுமே. (இ. கொ. 19)**

என்பதன் மூலம் (பெண்ணை வளர்த்தான் - பெண்ணை – பனை) வேற்றுமை உருபுகள் அல்லாதனவும் வேற்றுமை உருபுகள் போன்று வருவதனை இலக்கணக்கொத்து பதிவு செய்துள்ளது.

உருபுகள் தோன்றும் இடம்

பகுபதம், பகாப்பதம், இருமொழித்தொடர், பன்மொழித்தொடர், தெரிநிலை வினையாலணையும் பெயர், குறிப்பு வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் என்பனவற்றை அடுத்து எட்டு உருபுகளும் வரும் (இ.கொ.24) என்று உருபுகள் தோன்றும் இடம் குறித்து இலக்கணக்கொத்து பேசுகிறது.

எழுவாய் வேற்றுமை

எழுவாய் வேற்றுமை குறித்த சில கருத்துகளை இலக்கணக்கொத்து பதிவு செய்துள்ளது. வினைமுதல் தோன்றும் இடம் (இ. கொ. 26), சில வினை நிகழ்ச்சிக்கு வினைமுதல் இரண்டு தேவைப்படுதல் (தாய் மகவுக்கு ஊட்டினாள்) (இ. கொ. 27), வினைமுதல் ஏவுதல், இயற்றுதல், இவையின் வேறு ஆதல் என மூவகைப்படும் (இ.கொ. 28) போன்ற கருத்துகளை இலக்கணக்கொத்து கூறியுள்ளது. இவை பிற இலக்கண நூல்களில் கூறப்படவில்லை.

புறனடை நூற்பாக்கள்

இலக்கணக்கொத்து ஒவ்வொரு வேற்றுமைக்கும் தனித்தனியாகப் புறனடை நூற்பாக்களை அமைத்துள்ளது. அவை ஒவ்வொரு வேற்றுமையையும் விளக்கிக் கூறின், இன்னும் பெருகும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன (இ. கொ. 29, 32, 35, 37, 39, 41, 43).

'கு' உருபு வரும் முறை

அறுவகை இலக்கணம் நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' உருபு தனியாகவோ, தனக்கு முன் உகரத்தைப் பெற்றோ, தான் புணரும் நிலைமொழியின் ஈற்றைத் திரித்தோ, திரிக்காமலோ, மெய்யெழுத்து மிகுந்தோ, அத்துச் சாரியையும் பெற்றோ ஒரு சொல்லுடன் புணர்ந்தால் பொருளை முற்றுவிக்க வேறொரு சொல்லை வருவிக்கும் என உரைக்கிறது (அ.இ.272).

தற்கிழமை, பிறிதின் கிழமை – விளக்கம்

இலகு தமிழ் ஐந்திலக்கணம் தற்கிழமை, பிறிதின் கிழமை என்பதற்கான விளக்கத்தை நூற்பாவில் தந்துள்ளமை புது மரபாகும். தற்கிழமை குறித்து,

தற்கிழமை தனை நீங்கா உரிமை
தனதுகை தனதறி வென்னல் விளக்கம் (இ. த. ஐந். 225)

என்றும், பிறிதின் கிழமை குறித்து,

பிறிதின் கிழமை தனைநீங் குரிமை
பொருளிடம் காலம் எனமூ வகையது (இ. த. ஐந். 226:1-2)

என்றும் விளக்கம் தருகிறது.

சாரியைகள் வேற்றுமைப் பொருளில் வருதல்

சாரியைகளுள் சில வேற்றுமைப் பொருளில் வரும் (த.கா. இ. 423) என்றும் வற்றுச் சாரியையும், தம் சாரியையும் படர்க்கையிடத்திலும், நம் சாரியை தன்மையிடத்திலும், நும் சாரியை முன்னிலையிடத்திலும் பன்மைப் பொருளில் வரும் என்றும் (த.கா.இ.424) குறிப்பிடுவது புது மரபாகும்.

'ஆக' – வேற்றுமை உருபு

தமிழ்க் காப்பு இயம் 'ஆக' என்னும் வினை எச்சம் போலி உருபாகச் செயல்படுதலை,

ஆகக் கிளவி நான்கிலும் ஏழிலும்
போலி உருபாய் வருமிடம் உளவே. (த.கா.இ.422)

என்னும் நூற்பா வழி குறிப்பிடுகிறது. நான்காம் வேற்றுமையிலும், ஏழாம் வேற்றுமையிலும் ஆகக் கிளவி வரும் என்கிறது. பொன். கோதண்டராமன் 'ஆக உருபை ஏழாம் வேற்றுமை உருபாகக் கொள்கிறார். இதனை, ''இல் உருபு இடப்பொருளில் வந்ததுபோல் ஆக என்னும் கிளவி நிலைப்பொருளில் வந்தது எனலாம். காலத்தை தமிழிலக்கண அறிஞர்கள் இடத்தில் அடக்கிக் கொண்டனர். காலப் பொருளை இடப்பொருளில் அடக்கிக் கொண்ட மரபினை ஒட்டி ஆக என்னும் கிளவிக்கு உரிய நிலைப்பொருளையும் இடப்பொருளில் அடக்கிக் கொள்வது மிகவும் பொருத்தம் என்று தோன்றுகிறது. இந்தக் கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டால் ஆக என்னும் கிளவியைக் கண், கால்... முதலிய சொல்லுருபுகளோடு சேர்த்துக் கொண்டு இதனை ஏழாம் வேற்றுமை என்றே குறிக்கலாம். இல்லையேல் இதனை ஒரு தனி வேற்றுமையாகக் கொள்ள வேண்டும். ஏழாம் வேற்றுமையாகக் கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது.''[64] என்னும் கூற்று உணர்த்தும்.

வேற்றுமை மயங்கியல் - புது மரபுகள்

வேற்றுமை மயக்கம் - விளக்கம்

தொல்காப்பியர் வேற்றுமை மயக்கத்திற்கான விளக்கத்தைக் கூறவில்லை. நேமிநாதம்,

வேற்றுமை ஒன்றன் உரிமைக்கண் வேறொன்று

தோன்றல்   (நேமி.45:1-2)

என்று குறிப்பிட இலக்கண விளக்கமே முதன்முதலில் வேற்றுமை மயக்கத்திற்கு விரிவான விளக்கம் அளிக்கிறது.

பொருண்மயங் குதலும் உருபுமயங் குதலும்

தெரிநிலை யுடைய வேற்றுமைக் கண்ணே.   (இ. வி. 217)

என்று வேற்றுமை மயக்கத்தை விளக்குகிறது.

மேலும், பொருள் மயக்கமாவது, பிறிதொன்றன் பொருளோடு தன் பொருள் விடாது மயங்குவது என்றும் (இ. வி. 218) உருபு மயக்கமாவது உருபின் பொருளோடு தன் பொருள் விடுத்துத் தலை மயங்குவது என்றும் (இ. வி. 219) குறிப்பிடுகிறது.

இலக்கணக்கொத்து வேற்றுமை இயலுக்குப் புறனடை கூறுவதன் வழி வேற்றுமை மயக்கத்தைப் புலப்படுத்துவதை,

வேற்றுமை பலபலவாகத் தோன்றினும்

வினைமுதல் முதலா விளம்பும்எண் பொருளின்

ஒவ்வொரு பொருளே வெவ்வேறு ஆதலும்

ஒவ்வொரு பொருளின் பலஉருபு வருதலும்

உருபுகள் தமக்குஉரிப் பொருளையும் உதவி

வேறு பொருளையும் சிலவிரும் புதலும்

எனமூன் றுள்ளே எல்லா மடங்கும் (இ. கொ. 64)

என்னும் நூற்பா விளக்கும்.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் உருபு மயக்கம் குறித்துக் கூறுகிறது.

ஒன்றன் உருபு மறு வேற்றுமைப்பொருள்

தந்திடின் மயங்கி உருபு மயக்கமாம்.   (இ.த.ஐந்:247:1-2)

என்கிறது.

தென்னூலும் வேற்றுமை மயக்கம் குறித்து விளக்கியுள்ளது. உருபு தொக்குப் பலவாறாக விரித்தற்கு ஏற்ப நிற்றலும், நிலைக்கேற்ப வேறு வேறு உருபுகளை ஏற்கத்தக்கனவாய் வருதலும், பொருள் தடுமாறலும், பொருள் நிலைக்கு வேறான உருபு நிற்றலும் வேற்றுமை மயக்கம் எனப்படும் என விளக்குகிறது (தென்.சொற்.69).

பெயரைக் கொண்டு முடியும் உருபுகள்

நன்னூல், பெயரைக் கொண்டு முடியும் உருபுகள் எவை, வினையைக் கொண்டு முடியும் உருபுகள் எவைஎவையென்பது குறித்துப் பேசுகிறது.

எல்லைப் பொருளில் வரும் 'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபும், 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபும் பெயரைக் கொண்டு முடியும். ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைகள் அனைத்தும் வினைச்சொல்லைக் கொண்டு முடியும். நான்காம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் பெரும்பாலும் வினையைக் கொண்டு முடிதலேயன்றி வினையொடு பொருந்தும் பெயரையும் கொண்டு முடியும் என்னும் கருத்தை நன்னூல் பதிவு செய்துள்ளமை புதுமரபாகக் கொள்ளத்தக்கது (நன். 319).

இலக்கண விளக்கம் இக்கருத்தமைந்த நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது. (இ.வி.224).

உருபு மயங்கியல் - செய்திகள்

தொன்னூல் விளக்கமும், இலகு தமிழ் ஐந்திலக்கணமும் தொல்காப்பியம் மற்றும் நன்னூல் எழுத்ததிகாரத்தில் (உருபு மயங்கியல்) கூறப்பட்ட சில செய்திகளைச் சொல்லதிகாரத்தில் கூறியுள்ளன (தொ. வி. 65-68), (இ. த. ஐந். 238-246).

உருபு நோக்கிய சொல் - வகைகள்

உருபு நோக்கிய சொல் மூவகையாக வருதலை,

ஒன்றே வந்தும் இரண்டே வந்தும்
ஒன்றும் இரண்டும் உறழ்ந்தே வந்தும்
உருபுநோக் கியசொல் ஒருமூ வகையாம். (இ. கொ. 62)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது.

ஆறாம் உருபு செயப்படுபொருளிலும், கோடற்பொருளிலும் வருதல்

அது என்னும் ஆறாவதன் உருபு சிலவிடத்து செயப்படுபொருளினும், கோடற்பொருளினும் வருவதைத் தென்னூல் பதிவு செய்துள்ளது (தென். சொற். 80).

மேலும், செயப்படுபொருளையும், கருவிப் பொருளையும் வினைமுதல் போல அமைத்துக் கூறலும், செயப்படுபொருள் கருத்தொடு நிகழ்தலும், கருத்தின்றி நிகழ்தலும், எழுவாய் மறைந்து நிற்றலும் உளவாம். செயப்படுபொருள் குன்றி

வருதலும் உண்டு என்னும் கருத்தையும் தென்னூல் பதிவு செய்துள்ளது (தென். சொற். 82).

ஆகுபெயர் - வரையறை

தொல்காப்பியம் ஆகுபெயரை வரையறை செய்யவில்லை. வகைகளை மட்டுமே கூறியுள்ளது. நேமிநாதம் ஆகுபெயர்க்கு விளக்கம் தருகிறது.

ஒன்றன்பேர் ஒன்றற் குரைப்பதாம் ஆகுபெயர் (நேமி. 47:1)

என்கிறது. நன்னூல் இயைபுடைய பிறிதொன்றனை உரைப்பதே ஆகுபெயர் என்னும் கருத்தை,

ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே (நன். 290:3-4)

என்று கூறும் விளக்கமே சிறப்புடையதாகத் திகழ்கிறது.

இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றி ஆகுபெயரை விளக்குகிறது. (இ.வி.192). தொன்னூல் விளக்கம்,

--------------------------ஒன்றன் பெயர்
பிறிது ஒன்றற்கு உரைக்கும் பெற்றி தானே. (தொ. வி. 49:2-3)

என்றும் முத்துவீரியம்,

ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதை
அறைகுவ வாகு பெயரா கும்மே. (மு.வீ.ஒழி.114)

என்றும் கூறுகின்றன. சுவாமிநாதம், ஒரு சொல்லுக்கு இனமான ஒரு பொருளைக் குறித்துச் சொற்பொருளை விட்டுவிடாமல் தொடர்புடைய முறையில் கூறுவது ஆகுபெயர் என்று விளக்குகிறது (சு. நா. 40).

இனிய தமிழ் இலக்கணம்,

ஒன்றின் பெயர்மற் றொருபெய ருக்கும்
ஆக்கப் படுவதே ஆகு பெயராம். (இ.த.இ.122:1-2)

என்றும், இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

ஒரு பொருள் இயற்பெயர் அப்பொருள் குணம்பெறு

மறுபொருட் காகி வந்திடின் ஆகுவாம். (இ.த.ஐந்.172:1-2)

என்றும் குறிப்பிடுகின்றன.

தென்னூல், தெய்வச் சிலையார் கருத்தை அடியொற்றி எழுவாய் வேற்றுமை மயக்கமே ஆகுபெயர் எனக் கூறுகிறது. ‘எழுவாய் வேற்றுமையாகும் ஒரு பொருளினது இயற்பெயர் தற்கிழமையும் பிறிதின் கிழமையுமாகிய தொடர்பான் பொருந்தி வரும் பொருட்கண் வரலாற்று முறைமையானும், காரணம் பற்றியானும் அமைந்து அப்பொருளை உணர்த்துமிடத்து அஃது எழுவாய் வேற்றுமையது மயக்கமாகிய ஆகுபெயராகும் (தென். சொற். 219) என்று விளக்குகிறது.

தமிழ்நூல், நன்னூலைப் பின்பற்றி ஒன்றன் பெயரால் அதனோடு தொடர்புடைய மற்றொன்றைச் சுட்டி உணர்த்துவது ஆகுபெயராகும் என்கிறது (த. நூ. 65).

தமிழ்க் காப்பு இயம் நன்னூல் சூத்திரத்தின் இறுதி இரு வரிகளை எடுத்தாண்டுள்ளது (த. கா. இ. 243).

முறைப்பெயர்கள் விளியேற்றல் - புது மரபு

தொல்காப்பியம் முதலான நூல்கள் விளியேற்கும் ஈறுகள் முறைப்பெயரில் வரும் பொழுது அடையும் மாற்றங்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால் தமிழ்நூல் அவ்வாறு சுட்டாமல், முறைமை சுட்டும் பெயர் பலவும் விளிக்கப்படும் திரிபுருவே நிலையுருவாய், இயல்புப் பெயர் போல் உருபும் ஏற்கும் என்று நவில்கிறது (த. நூ.336). சான்று : அம்மை – அம்மா, அப்பர் - அப்பா.

தொகுப்புரை

- ஒரு வாக்கியத்தில் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. அவ்வேற்றுமைக்குத் துணை புரிவன வேற்றுமை உருபுகள்.
- வேற்றுமைகள் எட்டு என்பதில் தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.
- பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்று உருபு அடிப்படையில் வேற்றுமைகளுக்குப் பெயரிடும் தொல்காப்பிய மரபை நேமிநாதமும், முத்துவீரியமும் ஏற்றுக் கொள்கின்றன.
- முதலாகுவதே, இரண்டாகுவதே என எண் அடிப்படையிலும் தொல்காப்பியர் சுட்டுவதால் இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியன முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என எண் அடிப்படையில் பெயர் கூறுவதும் ஒத்த மரபாகக் கொள்ளத் தக்கதாகும்.
- எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே என்பதைப் பிற்றை இலக்கணிகள் அனைவரும் ஏற்கின்றனர். தொல்காப்பியம் குறிப்பிடும் எழுவாய் வேற்றுமைக்குரிய ஆறு பயனிலைகளை நேமிநாதம் மட்டுமே ஏற்கிறது. தொகைச்சொல்லும் எழுவாய் ஆகும் என்னும் தொல்காப்பியக் கருத்தைத் தென்னூல் வழிமொழிந்துள்ளது. மூவிடப் பெயர்களிலும் எழுவாய் வெளிப்பட்டுப் பயனிலை கொள்வதே சிறந்தது என்னும் தொல்காப்பியக் கருத்தை இலக்கண விளக்கம் மட்டுமே பின்பற்றியுள்ளது.
- வேற்றுமை உருபுகள் பெயரின் இறுதியிலேயே வரும் என்னும் தொல்காப்பியக் கருத்தைப் பிற்றை இலக்கணிகள் பலரும் ஏற்கின்றனர் (நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் தென்னூல் ஆகியன.)
- எழுவாய் வேற்றுமையாய் அமையும் பெயர் காலம் காட்டாது: வினையாலணையும் பெயர் மட்டுமே காலம் காட்டும் என்பதை நேமிநாதமும், தென்னூலும் பதிவு செய்துள்ளன.
- இரண்டாம் வேற்றுமை உருபு ‘ஐ’ என்பதில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர். அது வினையும், வினைக்குறிப்பும் பற்றி வரும் என்பதை நேமிநாதம் ஏற்கிறது.
- மூன்றாம் வேற்றுமையின் உருபாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் ‘ஒடு’ உருபைத் தென்னூலும், தமிழ்க்காப்பு இயமும் சுட்ட, மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருட் பாகுபாடுகளாகத் தொல்காப்பியம் கூறுவனவற்றைத் தமிழ்க்காப்பு இயம் மட்டுமே பின்பற்றியுள்ளது.

- ❖ நான்காம் வேற்றுமை உருபு ‘கு’ அது எந்த ஒரு பொருளாயினும் ஏற்று வரும் பொருண்மையினை உடையது என்பதை நேமிநாதம், சுவாமிநாதம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன பின்பற்றியுள்ளன.
- ❖ ‘இன்’ உருபை ஐந்தாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடுவதில் நேமிநாதம், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியன ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- ❖ ஆறாம் வேற்றுமை உருபு ‘அது’ என்பதையும், அது தற்கிழமையினும், பிறிதின் கிழமையினும் வரும் என்பதை நேமிநாதம் ஏற்றுக்கொள்கிறது.
- ❖ கண் எனப் பெயரிய ஏழாம் வேற்றுமை இடம், நிலம், காலம் ஆகிய மூவகைக் குறிப்புப்பொருளிலும் வரும் என்பதை நேமிநாதம், இலக்கணவிளக்கம், ஆகியன பின்பற்றியுள்ளன.
- ❖ சினைப்பெயரில் ஐ, கண், உருபுகள் வினை முடிபை ஏற்றற்கண் ஒத்து வரும் என்னும் தொல்காப்பியக்கருத்தைத் தென்னூல் பின்பற்றியுள்ளது.
- ❖ இரண்டாம் வேற்றுமைக்குரிய கன்றல், செலவு ஆகிய பொருள்கள் ஏழாம் வேற்றுமையிலும் பொருந்தி வரும் என்பதை முத்துவீரியம் பின்பற்றியுள்ளது.
- ❖ முதல் சொல்லுக்கு அது வேற்றுமைவரின் சினைச்சொல்லுக்கு ஐ வேற்றுமை வரும்; முதல் சொல்லுக்கு ஐ வரின் சினைச்சொல்லுக்குக் கண் வரும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல், தமிழ்நூல், ஆகியன ஏற்கின்றன. முத்துவீரியம் முதல் கருத்தை மட்டும் ஏற்கிறது.
- ❖ ஒருவினைக்கண் வரும் ‘ஒடு’ உருபு உயர்பொருளில் மட்டுமே வரும் என்பதை முத்துவீரியமும் தென்னூலும் பதிவு செய்துள்ளன.
- ❖ மூன்றாம் உருபும், ஐந்தாம் உருபும் ஏதுப்பொருளில் வரும் போது ஒத்த தன்மையைப் பெற்று வரும் என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் மட்டுமே ஏற்கிறது.
- ❖ இரண்டாம் வேற்றுமைக்குரிய நோக்கல் பொருள் மூன்றாவதற்கும், ஐந்தாவதற்கும் உரிய காரணப்பொருளிலும் வரும் என்பதை முத்துவீரியம் பின்பற்றியுள்ளது.
- ❖ உயர்திணையில் தொகைச் சொல்லாக ஆறாம் வேற்றுமை உருபு ‘அது’ வருமானால் அதனை விரிக்கும்பொழுது குகரம் வரும் என்பதை முத்துவீரியம் பின்பற்றியுள்ளது. எனினும் இக்கருத்து எல்லா இடங்களிலும் பொருந்துமாறு இல்லை.

- ❖ தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டாம் வேற்றுமையும், மூன்றாம் வேற்றுமையும் ஒத்த நிலையில் வரும் என்பதை முத்துவீரியமும், தென்னூலும் ஏற்கின்றன.
- ❖ ஓம்படைக்கிளவி தொகைச்சொல்லாக வரும்போது இரண்டாம் வேற்றுமையைக் கொண்டும், மூன்றாம் வேற்றுமை உருபைக் கொண்டும் விரிக்கப் பெறும் என்பதை முத்துவீரியமும், தென்னூலும் பின்பற்றியுள்ளன.
- ❖ ஆறாம் வேற்றுமைக்குரிய வாழ்ச்சிக் கிழமை ஏழாம் வேற்றுமையிலும் வரும் என்பதை முத்துவீரியம் பின்பற்றியுள்ளது.
- ❖ கொடைப் பொருளில் வரும் தொகைச் சொல் நான்காம் வேற்றுமை உருபேயன்றி ஆறாம் வேற்றுமைக்கும் உரியதாகும் என்பதை முத்துவீரியமும், தென்னூலும் ஏற்கின்றன.
- ❖ அச்சப்பொருளை உடைய தொகை நிலைத்தொடரை ஐந்தாம் வேற்றுமை மற்றும் இரண்டாம் வேற்றுமை ஆகியன கொண்டும் விரிக்கலாம் என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியமும் தென்னூலும் பின்பற்றியுள்ளன.
- ❖ ஐ, கண், தவிர்ந்த பிற உருபுகள் தொடர்மொழிகளின் ஈற்றில் மறைந்து வருவதில்லை என்பதை நேமிநாதம், இலக்கணவிளக்கம், தென்னூல் ஆகியன பின்பற்றியுள்ளன.
- ❖ பொருள் வழியே தான் உருபு செல்லும் என்பதை நன்னூல், இலக்கணக்கொத்து, முத்துவீரியம், தென்னூல், தமிழ்நூல் ஆகியன ஏற்றுக் கொண்டுள்ளன.
- ❖ வேற்றுமைத்தொடர்களை எதிர்மறையில் கூறினாலும் உருபுகளின் பொருள் மாறுவதில்லை என்பதை நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியன பின்பற்றியுள்ளன.
- ❖ செய்யுளில் கு, ஐ, ஆன் ஆகிய உருபுகள் பெயரின் இறுதியில் வரும்போது அகரம் பெறும் அவற்றுள் கு, ஐ ஆகிய இரண்டும் அஃறிணைக்கண் ஈறாக நின்று அகரம் பெறுதல் இல்லை என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியன பின்பற்றியுள்ளன.
- ❖ தொழில் முதல்நிலைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் எட்டுக் காரணிகளை இலக்கணவிளக்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.
- ❖ விளி வேற்றுமை எனப்படுபவை அவ்விளியை ஏற்கும் பெயர்களோடு தெளிவுறத் தோன்றும் இயல்பை உடையன என்பதை முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் ஆகியன பின்பற்றியுள்ளன.

❖ விளியேற்கும் உயிரீறுகளாக இ, உ, ஐ, ஓ ஆகியவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதனை நேமிநாதம், முத்துவீரியம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன.

❖ விளியேற்கும்போது இ, ஈ யாகும் என்பதை முத்துவீரியம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியன ஏற்கின்றன. ஐ, ஆய் ஆகும் என்பதைத் தென்னூலும், தமிழ்க்காப்பு இயமும் பின்பற்றியுள்ளன.

❖ இகர ஈற்று அளபெடைப்பெயர்கள் ஈகாரமாகத் திரியாது இயல்பாய் நின்று விளி கொள்ளும் என்பதை நேமிநாதமும், முத்துவீரியமும் சுட்டிக்காட்டியுள்ளன.

❖ முறைப்பெயரில் வரும் ஐகார ஈறு ஆவாகும் என்பதை முத்துவீரியம் பின்பற்றியுள்ளது.

❖ உயிரீறுகள் அண்மை விளி பெறும்போது இயல்பாக வரும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன ஏற்கின்றன.

❖ ன், ர், ல், ள் ஆகியன உயர்திணையிடத்து விளி கொள்ளும் புள்ளியீறுகள் என்பதை நேமிநாதமும், முத்துவீரியமும் பின்பற்றியுள்ளன.

❖ ‘அன்’ ஈற்று உயர்திணைப்பெயர் விளியேற்கும் போது ‘ஆ’ எனத் திரியும் என்பதையும் அண்மை விளியில் னகரம் கெட்டு அகரமாகும் என்பதையும் நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன பின்பற்றியுள்ளன. ‘ஆன்’ ஈறு விளியில் இயல்பாகும் என்பதையும் இம்மூன்று நூல்களும் சுட்டியுள்ளன.

❖ ‘ஆன்’ ஈற்றுத் தொழிற்பெயரும், பண்புப்பெயரும் ‘ஆய்’ ஆகத் திரியும் என்பதையும், ஆன் ஈற்று அளபெடைப் பெயர் இயல்பாய் விளியேற்கும் என்பதையும் நேமிநாதமும், முத்துவீரியமும் ஏற்கின்றன.

❖ னகர ஈற்று முறைப்பெயர் விளியேற்கும் போது ஏகாரத்தோடு பொருந்தி வரும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன ஏற்றுக் கொண்டுள்ளன.

❖ அர், ஆர் எனும் ரகர ஈற்றுப் பெயர்கள் விளி கொள்ளும் போது ஈராகத் திரியும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியன பின்பற்றியுள்ளன.

❖ அர், ஆர் ஈற்றுப் பெயர்கள், தொழிற் பெயராக வரும்போது ஈர் எனும் ஈற்றுடன் ஏகாரத்தையும் பெற்று வரும் என்பதை முத்துவீரியம் ஏற்கிறது. நேமிநாதமும்,

தமிழ்க்காப்பு இயமும் தொழிற்பெயர் எனக் குறிப்பிடாது ஏயும் ஏற்கும் என்று மட்டும் கூறுகின்றன.

❖ அர், ஆர் ஈறுகளையுடைய பண்புப் பெயர்களும் ஏகாரம் பெற்று விளியேற்கும் என்பதை முத்துவீரியம் மட்டுமே பின்பற்றியுள்ளது.

❖ ரகர ஈற்று அளபெடைப் பெயர்கள் இயல்பாய் விளியேற்கும் என்பதை நேமிநாதமும், முத்துவீரியமும் பின்பற்றியுள்ளன.

❖ லகார, ளகார ஈற்றுப் புள்ளியீறுகளை உடைய உயர்திணைப்பெயர்கள் விளியேற்கும்போது ஈற்றயல் எழுத்து நீண்டொலிக்கும் என்பதையும் அயல் நெடிதாக இருந்தால் இயல்பாய் விளி கொள்ளும் என்பதையும் நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன.

❖ வினை பற்றியும், பண்பு பற்றியும் வரும் ஆள் ஈற்றுப் பெயர்கள் ‘ஆய்’ எனத் திரிந்து விளி கொள்ளும் என்பதை முத்துவீரியமும், தென்னூலும் ஏற்கின்றன.

❖ ளகர ஈற்று முறைப்பெயர்கள் ஏகாரம் பெற்று விளியேற்கும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன ஏற்கின்றன.

❖ லகார, ளகார ஈற்று அளபெடைப் பெயர்கள் இயல்பாய் விளியேற்கும் என்பதை நேமிநாதமும், முத்துவீரியமும் ஏற்றுக் கொண்டுள்ளன.

❖ விரவுப்பெயர்களும் உயர்திணைக்குக் கூறப்பட்ட விதிகளின்படியே விளியேற்கும் என்பதை நேமிநாதமும், முத்துவீரியமும் பின்பற்றியுள்ளன.

❖ அ.்.றிணைப்பெயர்கள் விளி கொள்ளும்போது ஏகாரம் பெற்று வரும் என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன பின்பற்றியுள்ளன.

❖ சேய்மையில் உள்ளவற்றை விளிக்கும் போது அப்பெயர்கள் அளபிறந்து இசைக்கும் என்னும் கருத்தை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் ஆகியன குறிப்பிட்டுள்ளன.

❖ அம்ம என்னும் உரையசைச்சொல் விளியேற்கும்போது நீண்டு ஒலிக்கும் என்பதை முத்துவீரியமும், தமிழ்க்காப்பு இயமும் ஏற்றுக்கொண்டுள்ளன.

❖ நன்னூல் மூன்றாம் வேற்றுமைப் பெயராக ‘ஆல்’ உருபை முதன்மைப்படுத்துவது மரபு மாற்றமாகும். இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம் ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன. தமிழ்நூல் ‘ஆன்’ உருபை முதன்மைப்படுத்துகிறது. இலக்கணக்கொத்து வேற்றுமைகள் உணர்த்தும் பொருள் அடிப்படையில் பெயர் கூற, தென்னூல் உருபாலும், எண்ணாலும், பொருளாலும் பெயரிடுகிறது.

- தொல்காப்பியம் எழுவாயை 'உருபு' எனச் சுட்டவில்லை. நன்னூல் எழுவாயுருபு எனக் கூறுகிறது. நன்னூலைப் பின்பற்றி பிற்றை இலக்கணிகள் பலரும் (சுவாமிநாதம் தவிர) பெயரை முதல் வேற்றுமையின் உருபாகக் கொள்கின்றனர்.

- தொல்காப்பியம் எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகளாக ஆறனைக் குறிப்பிட, நன்னூல் அவ்வாறனையும் வினை, பெயர், பண்பு கொள வருதலில் அடக்குகிறது. இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியன நன்னூலைப் பின்பற்ற, முத்துவீரியம் தொல்காப்பியம் குறிப்பிடும் பொருண்மை சுட்டல் என்பதை மட்டும் நீக்கி பிற ஐவகைப் பயனிலைகளைக் கூறுகிறது. சுவாமிநாதத்தில் நன்னூல் குறிப்பிடும் வினாக் கொளல் இடம் பெறவில்லை. தென்னூல் தொல்காப்பியம் குறிப்பிடும் வியங்கொள வருதலை நீக்கி, விளிகொள வருதலைச் சேர்த்துள்ளது.

- தொல்காப்பியர் ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒரு உருபைக் கூறி அதன் முதன்மைப் பொருளைக் கூறுகிறார். பின் அடுத்த நூற்பாவில் அவ்வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளைத் தந்துள்ளார். பிற்றை இலக்கண நூல்களில் தமிழ்க் காப்பு இயம் மட்டுமே இம்முறையைப் பின்பற்றியுள்ளது. பிற இலக்கணிகள் பொருட்பாகுபாடுகளைத் தனியே தரவில்லை. தொல்காப்பியரைப் போல் விரிவாகவும் தரவில்லை. வேற்றுமையின் இலக்கணம் கூறி அவ்வேற்றுமையின் பொருள்களைக் கூறும் முறையே காணப்பெறுகிறது. இப்பொருண்மைகளிலும் இலக்கணிகளிடையே கருத்து மாறுபாடுகள் காணப்பெறுகின்றன.

- இலக்கணக்கொத்து, இரண்டாம் வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை எனக் குறிப்பிட, பிற்றை இலக்கணிகளும் அவ்வாறே குறித்துள்ளனர்.

- தமிழ்க்காப்பு இயம் 'இல்' உருபை ஏழாம் வேற்றுமையின் முதன்மை உருபாக அமைத்ததும், 'ஆல்' வேற்றுமையை எட்டாம் வேற்றுமை உருபாக அமைத்ததும் குறிப்பிடத்தகுந்த மரபு மாற்றமாகும்.

- தொழில் முதல் நிலைகளாகத் தொல்காப்பியம் எட்டனைக் குறிப்பிட, நன்னூல் ஆறனைக் குறிப்பிடுகிறது.

- அறுவகை இலக்கணம் ஆகுபெயரை விளக்குவதில் பிற இலக்கணிகளின் கருத்துகளிலிருந்து மாறுபடுகிறது. பொருள் திரிந்து வருவன ஆகுபெயர் என்கிறது.

❖ விளிமரபைப் பொறுத்தவரை தொல்காப்பியம் உயர்திணை, அ∴றிணை, விரவுத்திணைக்குரிய ஈறுகளைச் சுட்டி அவை விளியேற்கும்போது அடையும் மாற்றங்களை விளக்குகிறது. உயர்திணைப் பெயரில் விளியேற்கும் ஈறுகள் அடையும் மாற்றங்களைத் தனித்தனி நூற்பாவில் விளக்க, நன்னூல் பொதுவாக அடையும் மாற்றங்களை மட்டுமே கூறியுள்ளது. இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், இனிய தமிழ் இலக்கணம் ஆகியன நன்னூல் முறையைப் பின்பற்றி விளி மரபை விளக்கியுள்ளன.

❖ சொல்லப்பட்ட ஈறுகள் தவிரப் பிற விளியேலாது என்று தொல்காப்பியர் குறிப்பிட, தென்னூலும், தமிழ்க் காப்பு இயமும் பிற ஈறுகளையுடைய பெயர்களும் விளி கொள்ளும் என்று கூறுவது காலச்சூழலுக்கு ஏற்ற மரபு மாற்றமாகும்.

❖ தமிழ்க்காப்பு இயம் வேற்றுமையின் வகைகளை ஒன்பதாகப் பாகுபடுத்தியது மரபு வளர்ச்சியாகும்.

❖ மூன்றாம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியர் 'ஒடு' உருபைக் குறிப்பிட, அவிநயம் ஆல், ஆன் என்பவற்றையும் சேர்க்கிறது. நன்னூல் அவற்றோடு ஓடு உருபையும் அதன் பொருண்மைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் கருவி, கருத்தா என்பவற்றுடன் உடனிகழ்வு என்பதையும் சேர்ப்பது மரபு வளர்ச்சியாகும். பிற்றை இலக்கணிகள் பலரும் நன்னூலைப் பின்பற்றியுள்ளனர். சுவாமிநாதம் 'கொண்டு' எனும் சொல்லுருபையும் மூன்றாம் உருபாகச் சேர்க்கிறது. இனிய தமிழ் இலக்கணம் 'உடன்' என்னும் சொல்லுருபைச் சேர்க்கிறது.

❖ இனிய தமிழ் இலக்கணம், நான்காம் வேற்றுமைச் சொல்லுருபுகளாக 'ஆக', 'பொருட்டு', 'நிமித்தம்' ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. இது மரபு வளர்ச்சியாகும்.

❖ ஐந்தாம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் 'இன்' உருபோடு 'இல்' உருபையும் புதிதாகச் சேர்த்துள்ளது நன்னூல். நன்னூலைப் பின்பற்றி பின்வந்த இலக்கணிகள் பலரும் (தமிழ்க் காப்பு இயம் தவிர) இல், இன் இரண்டையும் ஐந்தாம் வேற்றுமை உருபாகக் குறிக்கின்றனர்.

❖ இனிய தமிழ் இலக்கணம், ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக நின்று, இருந்து ஆகியவற்றைக் குறிப்பிட, தமிழ்நூல் இன்னோடு 'நின்று' என்பதும், இல்லோடு 'இருந்து' என்பதும் இணைந்து நிற்கும் எனச் சுட்டுகிறது.

❖ தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமைக்கு ‘அது’ உருபை மட்டும் குறிப்பிட, நன்னூல் ஆறாம் வேற்றுமையின் ஒருமைக்கு அது, ஆது என்பனவும், பன்மைக்கு ‘அ’ வும் உருபுகளாகும் என்று கூறுவது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது. நன்னூலைப் பின்பற்றி பிற்றை இலக்கணிகள் அது, ஆது, அ ஆகிய மூன்றனையும் ஆறன் உருபாகக் குறிப்பிட, தமிழ்க்காப்பு இயம் ‘ஆது’ வை நீக்கி அது, அ ஆகியவற்றை மட்டும் சுட்டியுள்ளது. மேலும் ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக ‘உடைய’ என்பதைச் சுவாமிநாதமும் பின் வந்த நூல்களும் சுட்டுகின்றன.

❖ ஏழாம் வேற்றுமைப் பொருட் பாகுபாடுகளாகத் தொல்காப்பியம் பத்தொன்பதைக் குறிப்பிட, நன்னூல் அவற்றை உருபுகள் எனக் குறித்து இருபத்தெட்டாகக் கூறுகிறது. இனிய தமிழ் இலக்கணம் இவற்றைச் சொல்லுருபுகள் எனக் குறித்து 36 வகை உருபுகளைக் குறிப்பிடுகிறது. பிற இலக்கணிகளும் சிற்சில மாறுபாடுகளுடன் இவ்வுருபுகளைக் கூறியுள்ளனர்.

❖ ஆகுபெயரின் வகைகளைத் தொல்காப்பியம் ஒன்பதாகப் பாகுபடுத்துகிறது. நன்னூல் பன்னிரு ஆகுபெயர்களைத் தருகிறது. இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்ற, சுவாமிநாதம் பதினைந்து வகை ஆகுபெயர்களையும், இனிய தமிழ் இலக்கணமும், இலகுதமிழ் ஐந்திலக்கணமும் பதினாறு வகைகளையும், தென்னூல் பதினான்கு வகைகளையும், தமிழ்நூல் எண்வகைகளையும் தமிழ்க் காப்பு இயம் பத்து வகைகளையும் ஆகுபெயரின் வகைகளாகக் குறித்துள்ளன. இது ஆகுபெயரின் வளர்ச்சி நிலையைக் குறித்து நின்றது.

❖ தொல்காப்பியம், விளி வேற்றுமை குறித்து, அவ்விளியை ஏற்கும் பெயர்களோடு தெளிவுறத் தோன்றும் இயல்புடையவை என்று கூற, நேமிநாதம், நன்னூல் முதலானவை விளி ஏற்கும் பெயர் அடையும் மாற்றங்களையும் விளக்குகின்றன. மேலும் நன்னூல் விளி வேற்றுமையின் பொருளாகப் படர்க்கையோரைத் தன்முகமாக அழைப்பது எனவும் விளக்கம் தருகிறது. பிற்றை இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றி விளி வேற்றுமையை விளக்கியுள்ளனர்.

❖ விளியேற்கும் உயிரீறுகளாகத் தொல்காப்பியம் இ, உ, ஐ, ஓ ஆகியவற்றைக் குறிப்பிட, நன்னூல் அவற்றோடு ‘ஊ’ என்பதை இணைக்கிறது.

❖ விளியேற்கும் புள்ளி ஈறுகளாகத் தொல்காப்பியர் ன, ர, ல, ள ஆகிய நான்கனைச் சுட்ட, நன்னூல் அவற்றோடு ‘ய’ வையும், தமிழ்க்காப்பு இயம் ய, ம வையும் சேர்த்து உரைக்கின்றன.

❖ அறுவகை இலக்கணம் இரண்டாம் வேற்றுமை உருபு ‘ஐ’ செயயப்படுபொருளில் வருவதையும் நான்காம் வேற்றுமை வரும் முறையையும் குறிப்பிடுகிறது. பிற வேற்றுமை மரபுகள் பேசப்படவில்லை. அவிநயத்திலும் மூன்றாம், ஐந்தாம் வேற்றுமை உருபுகள் தவிரப் பிற வேற்றுமைகள் பற்றிய செய்திகள் கிடைத்தில. மேலும் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட வேற்றுமை மரபுகளில் சில பிற்றை இலக்கணங்களில் கூறப்படாது விடப்பட்டுள்ளன. குறிப்பாக, வேற்றுமை மயக்கம் குறித்து நேமிநாதம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் விரிவாகப் பேசவில்லை. இது மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

❖ தொல்காப்பியம் வேற்றுமைக்கு இலக்கணம் கூறவில்லை. நன்னூலே வேற்றுமைக்கு இலக்கணம் கூறுகிறது. இது புதுமரபாகும். பிற்றை இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றி இலக்கணம் கூறுகின்றன.

❖ முதல் வேற்றுமையின் பொருள் நிலையாக, இரு திணைப் பொருள்களின் குறியீடாகக் குழுவாய் கிடக்கும் சொற்களுள் ஒன்று அக்குழுவின் நீங்கி ஒன்றை விளக்குவதற்கு வினை முதலாகத் தோன்றும் நிலையே முதல் வேற்றுமையின் பொருள் நிலையாகும் என்று தென்னூல் குறிப்பிடுவது புது மரபாகக் கொள்ளத் தக்கது.

❖ இலக்கணக்கொத்து வேற்றுமை மரபை விரிவாக விளக்கியுள்ளது. காரகம், உருபின் வகைகள், உருபுகள் நிற்கும் மூவகை நிலைகள், வேற்றுமை உருபுகள் போல் வெளிப்படுதல், உருபுகள் தோன்றும் இடம் வினைமுதலின் வகைகள் எனப் பல புதிய செய்திகளை இலக்கணக்கொத்து பதிவு செய்துள்ளது.

❖ தொல்காப்பியம் முதலான நூல்கள் வேற்றுமை மயக்கத்திற்கு விளக்கம் கூறவில்லை. இலக்கண விளக்கம் வேற்றுமை மயக்கத்திற்கு இலக்கணம் கூறுவது புதுமரபாகக் கொள்ளத்தக்கது.

❖ நன்னூல், பெயரைக் கொண்டு முடியும் உருபுகள் எவை, வினையைக் கொண்டு முடியும் உருபுகள் எவைஎவை என்பது குறித்துக் கூறியுள்ளது.

❖ ‘அது’ என்னும் ஆறாம் வேற்றுமை உருபு செயப்படுபொருளினும், கோடற் பொருளினும் வருவதைத் தென்னூல் பதிவு செய்துள்ளது.

❖ ஆகுபெயருக்குத் தொல்காப்பியம் இலக்கணம் கூறவில்லை. வகைகளை மட்டுமே கூறியுள்ளது. நேமிநாதம், ஒன்றன் பெயர் மற்றொன்றிற்கு வருவது ஆகுபெயர் என்று கூறினாலும் நன்னூல் ஒன்றன் பெயரான் அதற்கு இயை பிறிதைத் தொன்முறை உரைப்பன ஆகுபெயர் என்று அளிக்கும் விளக்கமே சிறப்புடையதாகத் திகழ்கிறது.

சான்றெண் விளக்கம்

1. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரைக்கொத்து, (வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு), ப. 79.
2. மேலது., ப. 371.
3. மேலது., ப. 489.
4. மேலது., ப. 679.
5. ஆ. சிவலிங்கனார் (ப. ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், வேற்றுமையியல், ப. ix.
6. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரைக்கொத்து, (வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு), ப. 679.
7. ஏ. ஆதித்தன், தமிழ் இலக்கணவியல், ப. 99.
8. மேலது., பக். 97-98.
9. க. வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு – தொல்காப்பியம், ப. 215.
10. சி. இலக்குவனார், பழந்தமிழ், ப. 60.
11. சாமிநாத தேசிகர், இலக்கணக்கொத்து, ப. 123.
12. ரா. சீனிவாசன், மொழி ஒப்பியலும், வரலாறும், ப. 81.
13. சூ. இன்னாசி, சொல்லியல், ப. 70.
14. முத்துச்சண்முகம், இக்காலத்தமிழ், ப. 87.
15. தே. ஆண்டியப்பன், காப்பியர் நெறி - சொல்லியல், ப. 30.
16. ஏ. ஆதித்தன், தமிழ் இலக்கணவியல், பக். 100-101.
17. தே. ஆண்டியப்பன், காப்பியர் நெறி - சொல்லியல், ப. 30.
18. சி. இலக்குவனார், பழந்தமிழ், ப. 61.
19. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரைக்கொத்து, (வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு), ப. 86.
20. ரா. சீனிவாசன், மொழி ஒப்பியலும், வரலாறும், ப. 80-81.
21. முத்துச்சண்முகம், இக்காலத்தமிழ், பக். 87-88.
22. தே. ஆண்டியப்பன், காப்பியர் நெறி - சொல்லியல், ப. 30.
23. ஆ.சிவலிங்கனார் (ப. ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், வேற்றுமையியல், ப. 87.
24. மேலது., ப. 94
25. மேலது., ப. 91
26. மேலது., ப. 88.

27. அருச்சுன. தட்சிணாமூர்த்தி, சொல்லியல் கட்டுரைகள், ப. 70.
28. ஆ.சிவலிங்கனார் (ப. ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், வேற்றுமையியல், பக்.175-176.
29. சோ.ந.கந்தசாமி (கட்.,) தொல்காப்பிய இலக்கண, மொழியியல் கோட்பாடுகள், ப.241.
30. தமிழண்ணல் (உ.ஆ.,) தொல்காப்பியம், சொல்லதிகாரம், ப. 68.
31. வ. சுப. மாணிக்கம், தொல்காப்பியப் புதுமை, ப. 7.
32. தே. ஆண்டியப்பன், காப்பியர் நெறி, சொல்லியல், பக். 48-49
33. சூ. இன்னாசி, சொல்லியல், ப. 70
34. ஏ. ஆதித்தன், தமிழ் இலக்கணவியல், ப. 106.
35. க. வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், ப. 215.
36. முத்துச்சண்முகன், இக்காலத் தமிழில் வேற்றுமைகள், ப. 39.
37. ஆ. சிவலிங்கனார் (ப. ஆ.,), தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரைவளம், வேற்றுமையியல், ப. xi.
38. பெ. சுயம்பு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, ப. 82.
39. மேலது., ப. 75
40. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரைக்கொத்து, (வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு), ப. 696.
41. மேலது., ப. 697.
42. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், தமிழ் மொழி வரலாறு. ப. 162.
43. மி. காசுமான், தமிழ்க் காப்பு இயம், ப.161.
44. பெ. சுயம்பு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, ப. 75
45. அருச்சுன. தட்சிணாமூர்த்தி, சொல்லியல் கட்டுரைகள், ப. 67.
46. பெ. சுயம்பு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, பக். 75-76.
47. மேலது., ப. 76.
48. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், தமிழ் மொழி வரலாறு. ப. 161.
49. ஆ. சிவலிங்கனார் (ப. ஆ.,), தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரைவளம், வேற்றுமையியல், பக். 167-168.
50. பெ. சுயம்பு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, ப. 77.
51. ஆ. சிவலிங்கனார் (ப. ஆ.,), தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரைவளம், வேற்றுமையியல், பக். 196-197.
52. பெ. சுயம்பு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, ப. 78.
53. முத்துச் சண்முகம், இக்காலத்தமிழ், ப. 96.

54. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரைக்கொத்து, (வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு), ப.298.

55. மேலது., ப. 437.

56. மேலது., ப. 43.

57. மேலது., ப. 143.

58. மேலது., ப. 295.

59. மேலது., ப. 435.

60. சூ. இன்னாசி, சொல்லியல், ப. 83.

61. பொன். கோதண்டராமன், இலக்கண உலகில் புதிய பார்வை, தொகுதி – 1, ப. 5.

62. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரைக்கொத்து, (வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு), ப. 689.

63. மேலது., ப. 690.

64. பொன். கோதண்டராமன், இலக்கண உலகில் புதிய பார்வை, தொகுதி 1, ப-99.

பெயர், வினை மரபுகள்

கிளவியாக்கத்துள் அல்வழி இலக்கணமும் அடுத்த மூன்று இயல்களில் வேற்றுமை இலக்கணமும் கூறிய தொல்காப்பியர், அடுத்து சொல்லின் வகைகளைத் தனித்தனி இயல்களில் விளக்குகிறார். அந்த வகையில் பெயரியலில் பேசப்படும் பெயரிலக்கணமும் வினையியலில் பேசப்படும் வினையிலக்கணமும் இவ்வியலில் ஆராயப் பெற்றுள்ளன.

ஒத்த மரபு

பெயர் மரபுகள்

தொல்காப்பியர் பெயரியலில் முதலில் சொல்லின் பொது இலக்கணத்தையும், அதன் வகைகளையும் கூறிப் பின்னர் பெயரிலக்கணம் உணர்த்துகிறார்.

எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே (தொல். சொல். 155)

என்னும் நூற்பா வழி, சொற்கள் அனைத்தும் பொருள் குறித்து வருவனவே ஆகும் என்றும் பொருளில்லாத எழுத்துகளின் சேர்க்கை சொல்லாகாது என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

நன்னூல் சொல்லதிகாரத்தில் இக்கருத்து பேசப்படவில்லை. எழுத்ததிகாரத்தில் பதவியலில், ‘‘எழுத்தே தனித்தும், தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம்’’ (நன்:128) என்று கூறுவதன் வழி பொருள் தருவதே சொல்லாகும் என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளது.

இலக்கணவிளக்கமும் நன்னூலைப் பின்பற்றி எழுத்ததிகாரப் பதவியலில் இக்கருத்தைக் கூறியுள்ளது (இ. வி.38). முத்துவீரியம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (மு. வீ. பெயர்.2).

சுவாமிநாதம்,

சொல்வகுக்கிற் தனிமொழியும் தொடர் மொழியும் ஆகிச்
சொற்பொருள் கொண்டு…. (சு. நா. 34: 1-2)

என்பதன் மூலம் முன்னையோர் கருத்தை ஏற்கிறது.

இனிய தமிழ் இலக்கணம்,

பொருள்படச் சொல்வது சொல்லாகும்மே (இ. த. இ. 61)

என்று உரைக்கிறது.

தமிழ்நூல்,

---------------------- எழுத்துகள் சேர்ந்து

நன்னர் பொருளை நவில் வதாமே (த. நூ. 46)

என்றும்,

ஓரெழுத் தேபொருள் உணர்த்தினும் சொல்லாம் (த. நூ. 47)

என்றும் கூறி பொருள் தருவதே 'சொல்' என்னும் கருத்தை வலியுறுத்துகிறது.

தமிழ்க்காப்பு இயமும் நன்னூலைப் பின்பற்றி எழுத்தே தனித்தும், தொடர்ந்தும் பொருள் தரின் சொல்லென்று கூறப்படும் உருபனாய்த் தோன்றும் என்கிறது (த. கா. இ. 144).

சொற்கள் பொருள் உணர்த்தும் முறை

சொற்கள், மனதால் உணரக்கூடிய அகராதிப்பொருளையும், மொழி அமைப்பினால் உணரப்படுகின்ற இலக்கணப்பொருளையும் உணர்த்திவரும் என்பதை,

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்

சொல்லின் ஆகும் என்மனார் புலவர். (தொல். சொல். 156)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் உணர்த்துகிறது.

நன்னூலும், இலக்கண விளக்கமும் இக்கருத்தின் அடிப்படையில் இருதிணை, ஐம்பால் பொருளையும், தன்னையும் விளக்குவது சொல்லாகும் என்று குறிப்பிடுகின்றன (நன். 259), (இ. வி. 160).

முத்துவீரியம், தொல்காப்பியத்தை அடியொற்றி,

சொல்லையும் பொருளையும் சொல்லா னுணர்தல் (மு.வீ.பெயர்.3)

என்கிறது. தென்னூல் நன்னூலை அடியொற்றி இருதிணை, ஐம்பாற் பொருள் அவற்றியல்பையும், தன்னையும் புகல்வது சொல்லாகும் (தென். சொற். 4) என்று கூறுகிறது. மேலும், சொல் தன்னை உணர்த்துதல் குறித்து, இன்னவை, இன்ன அடி (பகுதி), இயக்க நிலை முதலாகத் தன்னுடைய இயல்பினை உணர்த்துதல் சொல் தன்னையுணர்த்தலாம் (தென். சொற். 22) என்றும், பொருள் நிலை உணர்த்தல் குறித்து, கூறப்பட்டதொரு பொருள் இன்ன திணை, இன்ன இன்ன பண்புடையது, இன்ன தொழிலினது எனச் சொல்லைக் கருதாமல் பொருளைக் கருதச் செய்தல் பொருள் உணர்த்துதலாம் (தென். சொற். 23) என்றும் விளக்கம் தருகிறது.

தமிழ்நூல்,

தன்னை உணர்த்தும் எழுத்துகள் சேர்ந்து
நன்னர் பொருளை நவில் வதாமே (த. நூ. 46: 3-4)

என்பதன் மூலம் சொல் தன்னையும், பொருளையும் உணர்த்தி வரும் என்பதை உணர்த்துகிறது.

சொற்கள் பொருள் உணர்த்தலின் வகைகள்

சொற்கள் பொருள் உணர்த்துகின்றபோது வெளிப்படையாகவும், குறிப்பாகவும் பொருளை விளக்கும் என்பதை,

தெரிபுவேறு நிலையலும் குறிப்பில் தோன்றலும்
இருபாற்று என்ப பொருண்மை நிலையே (தொல். சொல். 157)

எனும் நூற்பா வழி தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

நேமிநாதம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி,

சொல்லாற் றெரிதல் குறிப்பினாற் தோன்றுதலென்
றெல்லாப் பொருளும் இரண்டாகும் - மெல்லியலாய்
தொன்மொழியும் மந்திரமும் சொற்பொருள் தோன்றுதலின்
இன்மையும் உண்மையுமாம் ஈங்கு. (நேமி.93)

என்று குறிப்பிடுகிறது.

தமிழ்க்காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த. கா. இ. 145).

சொற்பாகுபாடு

சொற்களின் வகைகளைத் தொல்காப்பியம்,

சொல்எனப் படுப பெயரே வினைஎன்(று)
ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே (தொல். சொல். 158)

என்று பெயருக்கும், வினைக்கும் முதலிடம் தந்து, பின்னர்,

இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப (தொல். சொல். 159)

என்று இடையையும், உரியையும் அடுத்த இடத்தில் வைத்து உரைக்கின்றது.

பெயரும், வினையும் தனித்தியங்கும் ஆற்றல் உடையவை. இடையும், உரியும் மொழியில் தனித்து வருவதில்லை. இவை பெயர், வினைகளைச் சார்ந்தும் அவற்றுக்கு உறுப்பாகவும் வரும் தன்மை உடையவை. எனவேதான் தொல்காப்பியர் பெயர், வினைகளை முதலில் கூறி, பின்னர் இடை, உரிகளைக் கூறியுள்ளார்.

நேமிநாதம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி நால்வகைகளாக சொல்லை வகைப்படுத்துகின்றது (நேமி.54). எனினும் தொல்காப்பியத்தைப் போல் சொற்களுக்குத் தகுதி வேறுபாடு கூறவில்லை. மேலும், பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கினையும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனும் நான்கனோடு உறழ, சொல் பதினாறாகும் என்னும் கருத்தையும் நேமிநாதம் பதிவு செய்துள்ளது.

நன்னூல் சொல்லின் வகைகளாக,

அதுவே
இயற்சொல், திரிசொல் இயற்பிற் பெயர் வினை
என இரண்டு ஆகும்; இடைஉரி அடுத்து
நான்கும் ஆம்; திசை வட சொல்அணு காவழி (நன். 270)

என்பதன் மூலம் தொல்காப்பியத்தைப் போலவே பெயர், வினைகளுக்கு முதலிடம் தந்து, இடை, உரிகளை அடுத்த நிலையில் கூறியுள்ளமை புலப்படும்.

இலக்கண விளக்கம், நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ. வி. 170).

தொன்னூல் விளக்கம்,

எச்சொல்லும் பெயர், வினை, இடை, உரிஎன நான்கு (தொ.வி.42:1)

என்றும், முத்துவீரியம்,

பெயர்வினை யிடையுரி யெனச்சொல் நான்கே (மு.வீ. பெயர். 4)

என்றும் குறிப்பிடுவதன் மூலம் இவை இரண்டும் நால்வகைச் சொற்களையும் சமமாகக் கருதுகின்றன என்பது புலப்படும். எனினும் சொல்வகைகள் நான்கு என்பதிலும் அவற்றைச் சுட்டுவதிலும் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

சுவாமிநாதம் நன்னூலைப் பின்பற்றி சொல்லின் வகைகளை விளக்குகிறது. இயற்சொல், திரிசொல் என்னும் இருவகைச் சொல்லும் இயல்பினால் பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லுமாம். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அதில் சேர்த்துக்கொள்ள

வேண்டும். இவற்றுடன் திசைச்சொல், வடசொல் என்ற இருவகையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சுவாமிநாதம் குறிப்பிடுகிறது (சு. நா. 37).

இனிய தமிழ் இலக்கணம், சொல் வகைகளாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், கலைச்சொல், தனிச்சொல், தொடர்சொல், பொதுச்சொல், வடசொல் என எண்வகைகளைக் கூறுகிறது. (இ.த.இ.66). பின்னர் சொற்கள் நான்கு வகுப்புடையன என்று கூறி,

பெயர்வினை இடைஉரி சொல்வகுப் பாமே (இ.த.இ.81)

என்று தொல்காப்பியக் கருத்தை ஏற்கிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணமும்,

பெயர் வினை இடை உரி யெனச்சொல் நால்வகை (இ. த. ஐந். 148)

என்று சுட்டுகிறது.

தென்னூல், சொல்லை இருதிறப்படுத்துகிறது.

தமைஉணர்த் திப்பின் பொருள்பயக் கும்வழி
நிலபுல வகையான் சொல்இரு திறப்படும். (தென். சொற். 29)

என்றும், நிலம் என்பது இலக்கியத்தையும், புலம் என்பது இலக்கணத்தையும் குறிக்கும் காரணப்பெயர்களாகும் (தென். சொற். 30) என்றும் கூறுகிறது. இலக்கண வகையால் சொல் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும் என்பதை ஏற்கிறது (தென். சொற். 31).

தமிழ்க்காப்பு இயம்,

சொல்லெனப் படுப
தனிமொழி தொகைமொழி பிணைப்பு மொழியெனும்
மூவகை நிலையாய் நிற்றல் வேண்டும் (த.கா.இ.155)

என்று சொல்லுக்கு விளக்கம் தருகிறது. மேலும், அதன் வகைகளாக,

அவைதாம்
பெயர்வினை இடையுரி எனநால் வகைத்தே (த.கா.இ.156)

என முன்னையோரை வழிமொழிகிறது.

மேலும் இவற்றில் பெயர்ச்சொல்லின் கண் தனிமொழி, தொகைமொழி, பிணைப்புமொழி ஆகிய மூன்றும் வரும் (த.கா.இ.157) என்றும், வினைச்சொல் தனிமொழியையும், பிணைப்பு மொழியையும் ஏற்று வரும் (த. கா. இ. 158) என்றும், இடை, உரி இரண்டும் தனி உருபன்களாகிய சொற்களே. அவை பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் அருகிலேயே நின்று அவற்றை விளக்க வரும் (த. கா. இ. 159) என்றும் விளக்கம் தருகிறது.

பெயர்ச்சொல்- இலக்கணமும், வகைகளும்

நால்வகைச்சொற்பாகுபாடுகளுள் முதற்கண்ணதாகிய பெயர்ச்சொல்லின் இலக்கணத்தைப் பெயரியலில் விளக்குகிறார் தொல்காப்பியர். பெயர்ச்சொல் குறித்து, ‘‘திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துகின்ற தன்மை பெயர்கட்கு உண்டு. எனவே தன்மை, முன்னிலை, படர்க்கை என்றும், உயர்திணை, அஃறிணை என்றும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்றும் பிறவகையாகவும் இடத்தை ஒட்டி வேறுபடும் பொருளுடையது பெயர்ச்சொல் என்பர் டாக்டர் மு. வ. எல்லா மொழிகளிலும் சொல்வகைகள் காலத்திற்குத்தகப் பெயருகின்ற சொற்களாகப் பெயர்ச்சொற்கள் மட்டுமே மிகுதியாக அமைவதால் ‘பெயர்தல்’ என்ற வினையடியாகத் தோன்றியதே பெயர் என்னும் சொல் எனக் கருதுவார் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்’’[1] என்று அறிஞர்களின் கருத்தை எடுத்துக்காட்டி விளக்குவார் சூ. இன்னாசி.

பெயர்ச்சொல்லே வேற்றுமைக்கு இடனாய் இருப்பதால் பெயரினது இலக்கணத்தை வேற்றுமையியலிலேயே கூறுகிறார் தொல்காப்பியர். பெயர்ச்சொல் வேற்றுமை உருபை ஏற்று வரும் என்பதை,

கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப (தொல். சொல்.69)

என்பதன் மூலமும், வினையாலணையும் பெயர் தவிர்ந்த பிற பெயர்கள் காலம் காட்டாது என்பதை,

பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே (தொல். சொல். 71)

என்பதன் மூலமும் உணர்த்துகிறார். பெயரியலில் இரு நூற்பாக்களில் பெயர்ச் சொல்லின் இலக்கணம் கூறுகிறார் தொல்காப்பியர். திணை அடிப்படையில் சொல்லை விளக்குவதே தொல்காப்பியரின் தனித்தன்மை எனவே, பெயரியலில் திணை அடிப்படையில் பெயர்ச்சொல்லை விளக்குகிறார்.

பெயர்எனப் படுபவை தெரியுங் காலை

உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்

ஆயிரு திணைக்கும்ஓ ரன்ன உரிமையும்

அம்மூ உருவின தோன்ற லாறே. (தொல். சொல். 160)

என்னும் நூற்பா வழி பெயர்ச்சொற்களை உயர்திணைக்கு உரியன, அஃறிணைக்கு உரியன, உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டிற்கும் பொதுவாகிய விரவுத்திணைக்கு உரியன என வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர்.

தொல்காப்பியரின் திணை அடிப்படையிலான பெயர்ப்பாகுபாடு குறித்து ச.வே.சு., "பெயர் வகைப்பாடு பற்றிப் பேசும்போது அகத்தியலிங்கம் (1979, பக். 76, 172) உயிருள்ளவை (Animate), உயிரல்லாதவை (Inanimate) எனப் பாகுபாடு செய்யும் நிலை பற்றிக் கூறி, ஸ்பானிஷ் மொழியில் புத்தகம், கம்பு போன்றவை ஆண் பாலாகவும், வீடு, மேசை போன்றவை பெண்பாலாகவும் குறிக்கப்பெறுவது உயர்திணை, அஃறிணைப் பிரிப்பின்மையைக் காட்டுகிறது என்பர்.

அதேபோன்று அமெரிக்காவில் பேசப்படும் ஹாஸா (Hasa) மொழியில் மூங்கில், ஞாயிறு, அரண்மனை போன்ற அஃறிணைப்பெயர்கள் பெண்பாலாகவும், கத்தி, சைக்கிள், இயந்திரம் போன்றவை ஆண்பாலாகவும் கருதப்பெறுகின்றன.

ஆங்கில மொழியில் பழைய ஆங்கிலத்தில் Wif (Wife) என்ற சொல் அஃறிணை; Wif man (Woman) என்ற சொல் ஆண்பால்; Mouse, Crow போன்றவை பெண்பால்; Stone, Moon போன்றவை ஆண்பால்; Hand, Sun போன்றவை பெண்பால்; பிற்காலத்தில் Wife, Woman பெண்பாலாகவும், ஏனையவற்றை அஃறிணைச் சொற்களாகவும் கருதுகின்றனர்"[2] என்று விளக்குவதன் மூலம் உயர்திணை, அஃறிணை என்னும் திணைப்பாகுபாடு தமிழுக்கே உரிய சிறப்புத்தன்மை வாய்ந்தமையாலேயே தொல்காப்பியர் திணை அடிப்படையில் சொல்லை விளக்குவதும், அந்த அடிப்படையிலேயே பெயர்ச்சொல் பாகுபாடு அமைந்துள்ளமையையும் ச.வே.சு சுட்டிக் காட்டுகிறார்.

பெயர் ஈறுகள் பால் உணர்த்துதல்

வினை ஈறுகளே பால் உணர்த்துதல் உண்டு எனினும் சில பெயர்ச்சொற்களும் பால் உணர்த்தும் என்பதை,

இருதிணைப் பிரிந்த ஐம்பால் கிளவிக்கும்

உரியவை உரிய பெயர்வயி னான (தொல். சொல். 161)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் புலப்படுத்துகிறது. அனைத்துப் பெயர்களிலும் ஈறுகளைக் கொண்டு பாலை வரையறுக்க முடியாது. சேனாவரையர், “அவன், பெண்மகன், சாத்தன் என னகர ஈறு ஆடுவிற்கும், மகடுவிற்கும், அஃறிணை யாண்பாற்கும் உரித்தாய் வருதலானும், அவள், மக்கள், மகள் என ளகரவீறு மகடுவிற்கும், பல்லோர்க்கும், அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும், பெண்டாட்டி, நம்பி எனவும் ஆடு, மகடு எனவும் இகரவீறும், ஊகாரவீறும் இருபாற்கும் உரியவாய் வருதலானும், வினைச்சொற் போல, இன்னவீறு இன்னபாற்கு உரித்தெனப் பெயர்ச்சொல் ஈறு பற்றி உணர்தலாகாமையின், உரியவை யுரிய என்றார்”[3] என்று சேனாவரையர் விளக்குகிறார். இதுகுறித்து செ.வை.சண்முகம், “தமிழில் ஈற்றில் வரும் போதெல்லாம் ன் என்ற விகுதி மகன், தலைவன் என்ற சொற்களில் ஆண்பால் உணர்த்தும். ஆனால் அலவன் (நண்டு), விரியன் (பாம்பு) போன்றவற்றில் வரும்போது அது ஆண்பாலை உணர்த்துவதில்லை. ஆனால் இவை ஏற்கும் படர்க்கை வினைமுற்றைக் கொண்டு (மகன் வந்தான்; விரியன் வந்தது) அவைகளுடைய சரியான திணை, பாலை அறிந்து கொள்ளலாம்.”[4] என்று விளக்குகிறார்.

மேலும், தொல்காப்பியர் பெயரியலில் செயற்கைப் பெயர்களுக்கே ஆக்கம் கூறியுள்ளார். அதனை உணர்த்தவே இந்நூற்பாவை அமைத்தார் என்று கா.கோ. வேங்கடராமன் கருதுகிறார். இதுகுறித்து அவர், “தொல்காப்பியர் பெயரியலுள் மொழிந்தவை பெரும்பாலும் பெயர்ச்சொல்லாக்கம் பற்றியவையே. இயற்கைப் பெயர்கள் எனத் தொடக்கத்தில் கூறப்பட்டவை ஆக்கப்படாத சொல்லாகலின் செயற்கைப் பெயர்களுக்கே ஆக்கம் கூறவேண்டியதாயிற்று. இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும் உரியவை உரிய பெயர் வயினான என்னும் நூற்பாவில் உரியவை உரிய என்றது இயற்கைப் பெயரை நீக்குதற் பொருட்டேயாம். பெயர்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் என மூன்றாக்கி மொழிந்தவர் அவற்றுள்ளும் செயற்கைப் பெயர்களைத் தேர்ந்து பட்டியலிட்டு மொழிந்தார்.”[5] என்பர் கா.கோ.வேங்கடராமன்.

நேமிநாதம், சொல்லின் வகைகளை உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் என முக்கூறாகக் குறிப்பிடுகிறது (நேமி.54). பெயருக்கு இலக்கணம் கூறவில்லை. முத்துவீரியம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி பெயர் எனப்படுவது உயர்திணைக்குரியவாய் வருவனவும், அஃறிணைக்குரியவாய் வருவனவும், இருதிணைக்கும் ஒத்த உரிமையாய் வருவனவுமாகிய மூன்று வகைகளை உடையது என விளக்குகிறது (மு.வீ.பெயர்.5). தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.193).

பெயர்ச்சொல் வகைகள்

தொல்காப்பியர் சொல்லை திணை அடிப்படையில் விளக்கும் நோக்கமுடையவர் ஆதலின் பெயர்ச்சொல்லின் வகைகளையும் திணை அடிப்படையில் உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் என மூன்றாக வகைப்படுத்துகிறார் (தொல். சொல்.160).

உயர்திணைப்பெயர்கள்

தொல்காப்பியர் உயர்திணைப் பெயர்களை நான்கு நூற்பாக்களில் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். முதற்கண் சுட்டுப்பெயர், வினாப்பெயர், தன்மைப்பெயர் போன்றவை உயர்திணைப்பெயராக வரும் என்பதை,

அவ்வழி
அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும்
அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்
அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்
யான் யாம் நாம் என வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றோ(டு) அப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே (தொல். சொல். 162)

என்னும் நூற்பா வழி குறிப்பிடுகிறார்.

மேலும், சில உயர்திணைப் பெயர்களாக

1. ஆண்மை அடுத்த மகன் என் கிளவி - ஆண்மகன்
2. பெண்மை அடுத்த மகள் என் கிளவி - பெண்மகள்
3. பெண்மை அடுத்த இகர இறுதி – பெண்டாட்டி
4. நம்மூர்ந்து வரும் இகரம் - நம்பி
5. நம்மூர்ந்து வரும் ஐகாரம் - நங்கை
6. உறவு முறைமையின்றி வரும் ஆண்பாற் பெயர் - மகன்
7. உறவு முறைமையின்றி வரும் பெண்பாற் பெயர் - மகள்
8. பன்மை குறித்து அமையும் பெயர் - மாந்தர்
9. பன்மை குறித்து அமையும் பெயர் - மக்கள்
10. ஆண் பாலைக் குறிக்கும் - ஆடூஉ

11. பெண் பாலைக் குறிக்கும் - மகடூஉ

12. சுட்டெழுத்தை முதலாக உடைய அன் ஈற்றுப் பெயர்கள் - அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன்.

13. சுட்டெழுத்தை முதலாக உடைய ஆன் ஈற்றுப் பெயர்கள் - அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான்.

14. அவை முதலாகிய பெண்டு என் கிளவி – அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி, அப்பெண்டு, இப்பெண்டு, உப்பெண்டு

15. ஒப்பொடு வரும் கிளவி-புலியன்னாள், மயிலன்னாள்

ஆகியவையும் பாலறி வந்த உயர்திணைப் பெயர்கள் எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது (தொல். சொல். 163).

இவற்றுள் முறைமை சுட்டா மகன், மகள் என்பது குறித்து தே. ஆண்டியப்பன், "முறைமை சுட்டா மகன் மகள் இரண்டும் ஆணையும், பெண்ணையும் குறிக்கும். இவன் மகனே தோழி எனும்போது ஆண்மகன் என்று அறிகிறோம். தனக்குப் பிறந்த மகன் என்று பொருளில்லை. அதனால் முறைமை சுட்டா மகன் மகள் என்றார். இவள் மகளே என்றுரைப்பினும் முறைமை சுட்டா நிலையே. மகன் எனல் மக்கள் பதடி எனல் என்று திருக்குறளில் வருவதைப் பார்க்கலாம்"[6] என்று விளக்கம் தருகிறார்.

மேற்சுட்டிய பெயர்களோடு மேலும் சில பெயர்களாக எல்லாரும், எல்லீரும், பெண்மகன் போன்றவையும் உயர்திணைப் பெயர்களே என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. (தொல். சொல். 164)

மேலும், காரணத்தால் அமையும் உயர்திணைப்பெயர்கள் குறித்தும் தொல்காப்பியம் பேசுகிறது. 1. அருவாளன், சோழியன் போன்ற நிலம் பற்றி வழங்கும் நிலப்பெயர், 2. சேரன், சோழன், பாண்டியன் என்று ஒருவன் பிறந்த குடி பற்றி வழங்கும் குடிப்பெயர், 3. அவையத்தார், அத்திகோசத்தார் என்றாங்கு ஒருதுறைக் கண் உரிமை பூண்ட பலரையும் குறித்து வழங்கும் குழுவின் பெயர். 4. தச்சன், கொல்லன் என்று தொழில் பற்றி வரும் வினைப்பெயர். 5. அம்பர்கிழான், பேரூர்கிழான் என்று உடைமைப்பொருள் பற்றி வழங்கும் பெயர் உடைப்பெயர். 6. கரியன், செய்யன், நல்லன், தீயன் என்றாற்போல நிறம் முதலிய பண்பு பற்றி வழங்கும் பண்புகொள் பெயர். தந்தையர், தாயர் என அம்முறையுடையார் பலர்க்கும் வழங்கும் பல்லோர்க்குறித்த முறை நிலைப் பெயர். பெருங்காலர், பெருந்தோளர் என்று சினையுடைமை பற்றி வரும் பல்லோர்க் குறித்த சினைநிலைப்பெயர். ஆயர், வேட்டுவர் போன்ற திணை பற்றிப் பலருக்கும் வழங்கும் பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயர். பட்டிபுத்திரர், கங்கை மாத்திரர் என்றார் போல விளையாட்டுக் குறித்து

இளைஞர்கள் பகுதிபடக் கூடித் தமக்குப் படைத்திட்டுக் கொள்ளும் கூடிவரு வழக்கின் ஆடியற்பெயர். ஒருவர், இருவர், மூவர் என எண்ணாகிய அளவு பற்றி வழங்கும் எண்ணியற் பெயர். இவற்றையும் பாலறி வந்த உயர்திணைப் பெயர்களாகத் தொல்காப்பியர் சுட்டுகிறார் (தொல். சொல். 165).

வினைப்பெயருக்கு கொல்லன், தச்சன் என்பவற்றை உரையாசிரியர்கள் உதாரணம் காட்டுவது குறித்து செ.வை.சண்முகம், "கொல்லன், தச்சன் ஆகிய இரண்டு பெயர்களும் வினையடியாகப் பிறந்தாலும் அவை வினையாலணையும் பெயர்கள் அல்ல. அவைகளை அப்பெல்லட்டிவ் நவுன்ஸ் (appellative nouns) என்று கால்டுவெல் (1875:223) குறிப்பிடுகிறார். அதை நாம் தமிழில் குறிப்புப்பெயர் என்று அழைக்கலாம். இவை வினையாலணையும் பெயரிலிருந்து வேறுபட்டவை என்றும், இவை பண்புப்பெயர், அ∴றிணைப்பெயர், பெயரடை ஆகியவற்றிலிருந்து உண்டாகலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், பெஸ்கி (வீரமாமுனிவர்) இவை வினையடியிலிருந்தும் உண்டாகலாம் என்று கூறிய கருத்து தவறு என்றும் கால்டுவெல் (1875:223) சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் அவர் வினையடியிலிருந்து உண்டான பெயர்க்கு ஓதுவான் என்ற உதாரணம் காட்டி, அது வினையாலணையும் பெயர் ஆனதால் வினையிலிருந்து குறிப்புப்பெயர் உண்டாகாது என்று அவர் வாதாடியுள்ளார். ஆனால் கொல்லன், தச்சன், வண்ணான், திருடன், கள்வன் போன்றவைகளை வினையடியாகத் தோன்றிய குறிப்புப்பெயராகக் கருதலாம் என்றும் இவைகளை வினையாலணையும் பெயராக கருத முடியாது என்றும் கூறலாம்"[7] என்று கூறும் கருத்து இங்குக் கருதத்தக்கது.

குடிப்பெயருக்கு இளம்பூரணரும் சேனாவரையரும் மலையமான் சேரமான் என்பவற்றை உதாரணம் காட்ட, நச்சினார்க்கினியர் அவற்றோடு பார்ப்பார், அரசர், அந்தணர், வேளாளர் என்பவற்றையும் குடிப்பெயராகக் குறிப்பிடுகிறார். தெய்வச் சிலையார் குலத்தின் ஆகிய பெயர்களும் கொள்க என்று கூறி அவையாவன அந்தணன், அந்தணி, அந்தணர் என்பன என்கிறார்.

குழுவின் பெயருக்கு அவையத்தார், அத்திகோசத்தார் போன்ற உதாரணங்களை உரையாசிரியர்கள் சுட்டுவர். செ. வை. சண்முகம், "ஆசிரியர், வணிகர் போன்றவை தொழில் அடிப்படையில் அமைந்த பெயராக இருந்தாலும், இவைகளையும் குழுவின் பெயராகக் கருதலாம்"[8] என்று குறிப்பிடுவார்.

கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர் என்பது சிறுவர்கள் விளையாடும் பொழுது வைத்துக்கொள்ளும் பெயர் என்பது சேனாவரையர் உரைவழி புலனாகிறது. அதற்கு உரையாசிரியர்கள் அனைவரும் பட்டிபுத்திரர், கங்கை மாத்திரர் போன்ற உயர்திணைப் பெயர்களையே தர, தெய்வச்சிலையார் அ∴து இருதிணைக்கும் உரிய விரவுப்பெயர்

எனக் குறிப்பிட்டு சாத்தன், சாத்தி ஆகிய உதாரணங்களைத் தந்துள்ளார்.[9] செ. வை. சண்முகம், ''உண்மையில் விளையாட்டுக் குழுவுக்கு உயர்திணைப்பெயர்தான் வைக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை''[10] என்று கூறுவதும் இங்குக் கருதத்தக்கது. இன்றைய காலகட்டத்திலும் அஃறிணைப் பெயர்கள் (பள்ளியின் விளையாட்டுக் குழுவினர்க்கு சிவப்புக் குழு, பச்சைக் குழு, என நிறப்பெயர்கள் வைப்பது) விளையாட்டுக் குழுவுக்கு வைக்கப்படுவது அறிதற்பாலது.

இப்பெயர்கள் தவிர அவை போல்வன பிறவும் உயர்திணையிடத்து, ஒருமையும், பன்மையும் ஆகிய பாலறிய வந்த எல்லாப் பெயர்களும் அவ் உயர்திணை பாற்படும் என்றும் தொல்காப்பியர் உயர்திணைப் பெயர்களுக்குப் புறனடை கூறுகிறார் (தொல். சொல். 166). தென்னூல், உயர்திணைப் பெயர்களை விளக்குவதில் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளமையை,

னளர ஈற்றுச் சுட்டு வினாப்பெயர்
ஒப்பொடு வருபெயர் கிளைநுதற் பெயரே
அவ்வீற் றுக்குடி குழுநிலம் திணைநிலை
வினைபண்பு உடைமை மற்றை பிறவெனும்
இடைச்சொற் பெயரொடு யான்யாம் நாம் எனும்
தன்மைப் பெயரும் முறைமை கருதாத
மகன்மகள் என்பவும் பெண்மை குறித்த
இகர இறுதியும் மாந்தர் மக்கள்
நம்பி நங்கை ஆடூஉ மகடூஉ
ஒருவன் ஒருத்தி எல்லாரும் எல்லீரும்
பல்லோர்க் குறித்த முறைப்பெயர் சினைப்பெயர்
எண்ணுப்பெயர் இன்னன உயர்திணை யவ்வே. (தென். சொற். 86)

என்னும் நூற்பா புலப்படுத்தும். மேலும் மேற்கூறியவற்றுள் னவ்வீற்றுப் பெயர் ஆடூஉ ஒருமையையும், ளவ்வீற்றுப் பெயர், இகர ஈற்றுப்பெயர் மகடூஉ ஒருமையையும், ரவ்வீற்றுப்பெயர் உயர்திணைப் பன்மையையும் உணர்த்தும் என்பதையும் தென்னூல் சுட்டிக்காட்டியுள்ளது (தென். சொற். 87).

விரவுப்பெயர்

உயர்திணைக்கும், அஃறிணைக்கும் பொதுவாய் வரும் பெயர்கள் விரவுப்பெயர் எனப்படும். விரவுப்பெயர் குறித்துத் தொல்காப்பியம்,

இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையும் காலைத் தத்தம் மரபின்
வினையோடு அல்லது பால்தெரி பிலவே (தொல். சொல். 172)

என்று குறிப்பிடுகிறது. இதன்வழி விரவுப்பெயர்கள் தத்தமக்கு ஏற்ற வினைகளோடு பொருந்தி வந்தால் மட்டுமே திணை, பால்களைத் தெளிவாகக் காட்டும் என்பது புலப்படும்.

நேமிநாதம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி விரவுப்பெயர்கள் பெயரையும், வினையையும் கொண்டன்றிப் பால் தோன்றா என்று குறிப்பிடுகிறது (நேமி. 61).

விரவுப்பெயர்களில் நிகழ்கால வினை வருதல்

விரவுப்பெயர்கள், நிகழ்காலத்தை உணர்த்துகின்ற, பால் வேறுபாடு புலப்படுத்தாத, செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்களால் முடியும்போது, அவை பொருந்திய மரபினையுடைய தொழில் பற்றிய வினையுடன் வரும்போது, உயர்திணை ஒருமை வெளிப்பட்டுத் தோன்றலுமுண்டு. சாத்தி புல் மேயும் என்னாது, சாத்தி சாந்தரைக்கும், சாத்தன் இசைபாடும் என்றால் 'அன்ன மரபின் வினை' காரணமாக அவை உயர்திணை என உணரப்படும் (தொல். சொல். 173) என்னும் தொல்காப்பியக் கருத்திற்கு நேமிநாதமும் (நேமி. 62) உடன்படுகிறது.

விரவுப்பெயர்களின் பாகுபாடும், விரியும்

விரவுப்பெயர்களின் பாகுபாடுகள் குறித்துத் தொல்காப்பியம்,

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீ எனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்(கு)
அன்னவை தோன்றின் அவற்றொடும் கொளலே. (தொல். சொல். 174)

என்று குறிப்பிடுகிறது.

1. இயற்பெயர் 2. சினைப்பெயர் 3. சினைமுதற்பெயர் 4. முறைப்பெயர் 5. தாம் 6. தான் 7. எல்லாம் 8. நீயிர் 9. நீ ஆகிய பெயர்களும் இவை போல் உயர்திணை, அ∴றிணை என்ற இரண்டு திணைகளுக்கும் பொதுவாக வரும் அவற்றையும் விரவுப் பெயராகக் கொள்ளுதல் வேண்டும் என்று விரவுப் பெயரின் பாகுபாடுகளைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

அவற்றுள் இயற்பெயர் பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர், பன்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர் என இயற்பெயர் நான்கு வகைப்படும் என்றும் (தொல். சொல். 176) சினைப்பெயர் பெண்மைச் சினைப்பெயர், ஆண்மைச்சினைப்பெயர், பன்மைச்சினைப்பெயர், ஒருமைச்சினைபெயர் என நான்கு வகைப்படும் (தொல். சொல். 177) என்றும், சினை முதற்பெயர் பெண்மை சுட்டிய சினை முதற்பெயர், ஆண்மை சுட்டிய சினை முதற்பெயர், பன்மைச் சுட்டிய சினை முதற் பெயர், ஒருமைச் சுட்டிய சினை முதற் பெயர் என நான்கு வகைப்படும் (தொல். சொல். 178) என்றும் முறைப்பெயர் பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர் என இரண்டு வகைப்படும் என்றும் (தொல். சொல். 179) இவற்றுடன் தாம், தான், எல்லாம், நீயிர், நீர் ஆகிய ஐந்தையும் (தொல்.சொல்.184-188) சேர்த்து விரவுப்பெயர்களின் விரியாக பத்தொன்பதனைத் தொல்காப்பியம் சுட்டுகிறது.

விரவுப்பெயரின் வகை, விரிகளைச் சுட்டுவதில் தென்னூல் மட்டுமே தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது. இருதிணைக்கும் பொதுவான விரவுப்பெயர் குறித்துத் தென்னூல்,

ஆண்மை பெண்மை ஒருமை பன்மை
பால்தெரி பொடுவரும் இயற்பெயர் சினைப்பெயர்
சினைமுதற் பெயர்ஆண் பெண்தெரி முறைப்பெயர்
தான்தாம் எனும்படர்க் கைப்பெயர் நீயிர் நீ
எனும்முன் னிலைப்பெயர் எல்லாம் எனும்பெயர்
அன்ன பிறவும் இருதிணைப் பொதுவே (தென். சொற். 92)

என்பதன் வழி தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளமை புலனாகும்.

இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் ஆகியவற்றின் வகைகளைச் சுட்டுவதில் பிற்றை இலக்கணிகள் பலரும் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளனர் (நன். 283, 284, இ.வி. 184, மு.வீ.பெயர். 30, 31, 32, 33, சு.நா. 39, தென். சொற். 92).

பெண்மை, ஆண்மை குறித்து வரும் விரவுப்பெயர்கள்

பெண்மை குறித்து வரும் விரவுப் பெயர்களாகிய பெண்மை இயற்பெயர், பெண்மை சினைப்பெயர், பெண்மை சினை முதற் பெயர், பெண்மை முறைப்பெயர் ஆகிய நான்கும் அஃறிணைப் பெண் ஒன்றற்கும், உயர்திணைப் பெண் ஒருத்திக்கும் உரியனவாகும் (தொல். சொல். 180) என்றும், ஆண்பாலைப் பற்றி வரும் ஆண்மை இயற்பெயர், ஆண்மைச் சினைப் பெயர், ஆண்மைச் சினைமுதற் பெயர், ஆண்மை முறைப்பெயர் என்னும் நான்கு பெயர்களும் அஃறிணையில் ஆண் ஒன்றற்கும்,

உயர்திணையில் ஆண் ஒருவனுக்கும் பொருந்தி வரும் (தொல். சொல். 181) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

முத்துவீரியம் (மு. வி. பெயர்.35,36), தென்னூல் (தென். சொற். 96) ஆகியன இக்கருத்தைப் பதிவு செய்துள்ளன. இதனையே நன்னூல், பொதுப் பெயர்கள் அனைத்தும் உயர்திணை, அஃறிணை இரண்டனுள்ளும் தன்தன் பாலை ஏற்று வரும் என்கிறது. (நன்.284) இலக்கண விளக்கமும் (இ.வி.185) முத்துவீரியமும் (மு.வீ.பெயர்.34), நன்னூல் கருத்தைப் பதிவு செய்துள்ளன.

பன்மை, ஒருமை குறித்து வரும் விரவுப் பெயர்கள்

பன்மை இயற்பெயர், பன்மைச்சினைப்பெயர், பன்மைச் சினைமுதற் பெயர் ஆகிய மூன்றும் பன்மை சுட்டிய பெயர்களாகும். இவை அஃறிணையில் 1. ஒருமைக்கும் 2. பன்மைக்கும் உயர்திணையில் 3. ஒருவருக்கும் உரியதாகும் (தொல். சொல். 182) என்றும், ஒருமை இயற்பெயர், ஒருமைச் சினைப்பெயர், ஒருமைச் சினைமுதற்பெயர் ஆகிய மூன்றும் ஒருமை சுட்டிய பெயர்களாகும். இவை 1. அஃறிணையில் ஒருமைக்கும் 2. உயர்திணையில் ஒருவருக்கும் பொருந்தி வரும் இயல்பினை உடையதாகும் (தொல்.சொல்.183) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இக்கருத்தை முத்துவீரியம் (பெயர். 37, 38), தென்னூல் (சொற். 96) ஆகியன பின்பற்றியுள்ளன.

இலக்கண விளக்கம் பன்மைப்பெயர் குறித்த தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ. வி. 186). மேலும் தென்னூல், பொதுப்பெயர்களுள் அஃறிணை விரவுப்பெயர் என்பது அஃறிணை இயற்பெயரேயன்றி வேறன்று என்பதைப் பதிவு செய்துள்ளது (தென். சொற். 97).

பதிலிடு பெயர்கள்

தாம், தான், எல்லாம், நீயிர், நீ ஆகிய பதிலிடு பெயர்களை விரவுப்பெயர்களாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அவை அமையும் முறை குறித்து,

தாம்என் கிளவி பன்மைக்(கு) உரித்தே (தொல். சொல். 184)

தான்என் கிளவி ஒருமைக்(கு) உரித்தே (தொல். சொல். 185)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

எல்லாம் என்னும் பெயர்

எல்லாம் என்னும் பெயர் உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டு திணையிலும் பன்மையைக் குறித்து வரும் நிலையினை உடையதாகும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (தொல். சொல். 186)

மேலும் மேற்கூறப்பட்ட எல்லாம் என்னும் படர்க்கைச்சொல் உயர்திணையில் தன்மைப் பன்மைக்கு மட்டுமே வரும். முன்னிலைப்பன்மை, படர்க்கைப்பன்மை ஆகியவற்றிற்கு வருவதில்லை என்பதையும் தொல்காப்பியம் தெளிவுபடுத்தியுள்ளது (தொல். சொல். 187).

'நீயிர்', 'நீ' என்னும் பெயர்கள்

'நீயிர்', 'நீ' என்னும் இரண்டும் இன்ன திணைக்கு உரியது என அறிய முடியாத முன்னிலை விரவுப்பெயர்ச்சொற்களாகும். இவை இரண்டு திணைக்கும் ஒன்று போலப் பொருந்தி வரும் சொற் பொருண்மையினை உடையதாகும் (தொல். சொல். 188) என்று விளக்கும் தொல்காப்பியம் அவற்றுள் நீ என்னும் பெயர் ஒருமைக்குரியது (தொல். சொல். 189), 'நீயிர்' என்பது பன்மைக்குரியது (தொல். சொல். 190) என்றும் சுட்டுகிறது.

இவ்வாறு தான், தாம், எல்லாம், நீயிர், நீ வரும் முறை குறித்துத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதனை முத்துவீரியம் (பெயர். 39, 40, 41, 42, 43, 44), தென்னூல் (சொற். 98), , தமிழ்க் காப்பு இயம் (தான், தாம், எல்லாம் ஆகியவை குறித்து மட்டும்) (228, 229, 230) ஆகியன பின்பற்றியுள்ளன.

நன்னூல், தன்மைப்பெயர்களாக நான்கனையும், முன்னிலைப்பெயர்களாக ஐந்தனையும், எல்லாம் என்பதை மூவிடத்திற்கும் உரிய பொதுப்பெயராகச் (நன். 283) சுட்டுவதால் அதன் அடிப்படையில்,

> **தான்யான் நான்நீ ஒருமை, பன்மை தாம்**
> **யாம் நாம் எலாம் எலீர் நீயிர்நீர் நீவிர் (நன். 287)**

என்று குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம் இந்நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ. வி. 189).

'ஒருவர்' என்னும் உயர்திணைப்பெயர்

ஒருவர் என்னும் உயர்திணைப் பெயர்ச்சொல் ஆண், பெண் ஆகிய இரு பால்களுக்கும் பொதுவாக நிற்கும் (தொல். சொல். 191) என்பதை நன்னூல் (289),

இலக்கண விளக்கம் (191), முத்துவீரியம் (பெயர். 44), தென்னூல் (சொற். 99) ஆகியன சுட்டிக்காட்டியுள்ளன.

குறிப்பினால் திணை, பால், அறிதல்

நீயிர், நீ, ஒருவர் என்னும் பெயர்களைக் கொண்டு அவற்றை இன்னபால், இன்ன திணை என அறிய முடியாது. அச்சொற்களைச் சொல்லுகின்றவனின் குறிப்பைக் கொண்டே முறையாக அறிய முடியும் (தொல். சொல். 193) என்பதை முத்துவீரியம் (மு.வீ. பெயர். 46) மட்டுமே பின்பற்றியுள்ளது.

பால் திரிந்த பெயருக்கு வினைமுடிபு

பெண்பால் பொருண்மைக்கண் பால் திரிந்து வழங்கப்படும் பெண்மகன் என்னும் சொல் வினை கொள்ளுமிடத்துப் பெண்பாலுக்குரிய வினையைக் கொண்டே முடியும் (தொல். சொல். 194) என்பதை முத்துவீரியம் (மு. வீ. பெயர். 47) மட்டுமே பின்பற்றியுள்ளது.

செய்யுளில் பெயர்கள் திரிதல்

செய்யுளில் சில பெயர்களின் ஈற்று அயலில் நிற்கும் ஆகாரம் ஓகாரமாகத் திரியும் (தொல். சொல். 195) என்பதை நேமிநாதம் (62), நன்னூல் (353), இலக்கண விளக்கம் (326), முத்துவீரியம் (பெயர். 48) ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன.

இறைச்சிப் பொருளில் உயர்திணை ஈற்று அ∴றிணைப் பெயர்கள்

இறைச்சிப் பொருளில் வரும் அ∴றிணை இயற்பெயர்கள் உயர்திணை ஈறுகளைப் பெற்று வரினும் அவை அ∴றிணைக்கே உரியதாகும் என்பதைத் தொல்காப்பியம்,

> **இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்**
> **இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா**
> **நிலத்துவழி மருங்கில் தோன்ற லான. (தொல். சொல். 196)**

என்று குறிப்பிடுகிறது. தென்னூல் இக்கருத்திற்கு உடன்படுகிறது (தென். சொற். 100). இது குறித்து தே. ஆண்டியப்பன், “இறைச்சி என்பது கருப்பொருள் உணர்த்தும் பொருள் குறிப்பு. கருப்பொருளில் உயர்திணை அமைவதில்லை. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமாகக் கொள்ளும்போது இறைச்சியும் தெய்வம் என்பதைக் கொள்ளுவதற்கில்லை. எனவே எல்லா வகையிலும் இறைச்சியில் உயர்திணைக்கு இடமில்லை. ஆதலின் கடுவன், மூலன் போன்றவை விரவுப்பெயர் என்னும் தகுதியைப் பெறினும் இறைச்சி என்னும் நிலைக்களத்தில் அ∴றிணைக்கே உரியதாகும்.

இறைச்சி எனும் சூழல் இல்லாதபோது இருதிணைக்கும் உரியதாகலாம்''[11] என்று விளக்குகிறார்.

உயர்திணையை உணர்த்தும் விரவுப்பெயர்கள்

திணையொடு பழகிய பெயரலங் கடையே (தொல். சொல். 197)

என்னும் நூற்பா வழி கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் அவ்வத்திணைக்கு உரிமை கொண்டு பழகிய பெயராய் நிற்குமிடத்து அஃறிணைப் பெயராய்த் தோன்றினும் அவை உயர்திணையைக் குறிக்கும் என்பதைத் தொல்காப்பியர் புலப்படுத்துகிறார்.

திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
செருமிகு மொய்ம்பிற் கூர்வேல் காளை (நற். 184)

காளை, விடலை என்பன உயர்திணையைக் குறித்து வந்த அஃறிணைப் பெயர்களாகும். தென்னூல் இக்கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளது (தென். சொற். 100).

வினை மரபுகள் - ஒத்த மரபு

வினை என்பது செயல் அல்லது தொழிலைக் குறிக்கும். ஒரு பொருளினது இயக்கத்தை வெளிப்படுத்துவது வினையாகும். ''இலக்கணிகட்குத் தொழத்தகு படிவமாக அமைவது வினையேயாம். அதுவே வாக்கியத்தின் உயிரும் ஒளியுமாய் அவர்கட்குத் தோன்றுகிறது என்பர். (S.P. Ballard, Thought and Language, page. 86) வினையைத் தொல்காப்பியர் வினைச்சொல், வினைச்சொற்கிளவி, தொழில், தொழிற்சொல், காலக்கிளவி எனப் பல சொற்களால் குறியீடு செய்வர். இக்குறியீடுகள் தொழிலும், காலமுமே வினையின் செயற்பாட்டுக்கு அடிப்படை என்பதனைப் புலப்படுத்தும்.''[12]

வினைச்சொல்லின் பொது இலக்கணம்

வினைச்சொல்லின் பொது இலக்கணத்தைத் தொல்காப்பியம்,

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (தொல். சொல். 198)

என்கிறது. இதன்வழி, வினைச்சொல் வேற்றுமை கொள்ளாது, காலம் காட்டும் என்பது புலனாகும்.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் தொல்காப்பியத்தைப் பின்பற்றி வினைச்சொல்லின் இலக்கணம் கூறுகிறது. வினையைச் சொல்லும் சொல்லெல்லாம் வினைச்சொல்லாகும். வினைச்சொல் வேற்றுமை ஏற்காது. காலம் காட்டி செயலை உணர்த்தும் என நவில்கிறது (இ. த. ஐந். 248). முத்துவீரியமும் (மு. வீ. வினை. 1), தமிழ்க்காப்பு இயமும் (த.கா. இ. 293) தொல்காப்பியக் கருத்தையே எடுத்தாண்டுள்ளன.

காலம்

வினைச்சொல்லை அறிவதற்குக் காலமே உறுதுணை புரிகிறது. அதனால் காலம் குறித்துத் தொல்காப்பியம் காலம் மூன்று என்றும் (தொல். சொல். 199) அது இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைப்படும் (தொல். சொல்.200) என்றும் குறிப்பிடுகிறது. மோ.இசரயேல் தொல்காப்பியர் காலத்திற்கு முன் காலங்கள் இரண்டாக இருந்தமை குறித்து, ‘‘சிவராச பிள்ளை அவர்கள் காலம் பற்றிக் கூறியுள்ளது கவனித்தற்பாற்று. ‘‘நுணுகி ஆராய்ந்து பார்க்கின், காலம் எல்லாம் இறப்பு, எதிர்வு என்னும் இரு கூறுபாட்டினுள் அமையக் காண்கிறோம். ‘காலம்’ நிலைத்து நில்லாது எஞ்ஞான்றும் ஓர் நதி போலப் பாய்ந்து செல்லுவதாதலின் அதன் நடுவண் நிகழ்வெனும் ஒரு சிறு கோட்டை நீக்கின் அக்கோட்டின் முன்னுள்ளவெல்லாம் இறப்பின் பாலும், பின்னுள்ளவெல்லாம், எதிர்வின் பாலும் சென்று அடங்கி விடும். இறப்பு, எதிர்வுகளால் நெருக்குண்டு நிகழ்வாய காலம் தன் பரிமாணம் அறவே குறுகி மாய்ந்து போகக் காண்கிறோம்.

நிகழ்வு

← இறந்த காலம் | எதிர்காலம் →

இறந்தகாலம் எதிர்காலம் போலத் தமிழில் நிகழ்காலம் வந்து பயிலாமைக்கு இவ்வுண்மையே அடிப்படையாய காரணமாயிருக்கலாம்’’. இக்கூற்று தொல்காப்பியனார் கால வழக்கினையும் மிகத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. எனவே பழங்காலத் தமிழில் இறப்பு, இறப்பன்மை (Past and Nonpast) என இரண்டு கால வேறுபாடுகள் தான் தெளிவாக அமைந்திருந்தன.’’[13] என்று எடுத்துக்காட்டி விளக்குகிறார். எனவே தொல்காப்பியர் காலத்திலிருந்தே மூவகைக் காலங்கள் வழங்கத்தொடங்கியமை புலனாகும். காலங்கள் மூன்று என்பதைப் பிற்றை இலக்கணிகள் அனைவரும் ஏற்கின்றனர். (நேமி. 63, நன். 382, இ. வி. 302, அ. இ. 210-212, இ. த. இ. 134, இ. த. ஐந். 275-278, தென். சொற். 104)

வினைச்சொற்களின் வகைகள்

தொல்காப்பியம் திணை அடிப்படையிலேயே சொற்களை விளக்கும் முறைமைப்படி வினைச்சொற்களை 1. உயர்திணை வினை 2. அஃறிணை வினை 3. விரவு வினை என மூவகைப்படுத்துகிறது.

குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
ஆயிரு திணைக்கும்ஓர் அன்ன உரிமையும்
அம்மூ உருபின தோன்ற லாறே. (தொல். சொல். 201)

என்று குறிப்பிடுகிறது.

இவற்றுள் வினை என்பது தெரிநிலை வினையையும், குறிப்பு என்பது குறிப்பு வினையையும் சுட்டுகிறது. தெரிநிலை வினை என்பது காலத்தை வெளிப்படையாகவும், குறிப்பு வினை என்பது காலத்தைக் குறிப்பாகவும் காட்டும் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

‘‘தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப்படுதலின் குறிப்பு’’ என்பார் சேனாவரையர்[14]. குறிப்பு என்பது காலக்குறிப்பா? தொழிற்குறிப்பா? என்பதற்கு தே. ஆண்டியப்பன், ‘‘குறிப்பில் நெறிப்படத் தோன்றும் போது காலம் மறைந்து நிற்கும். வினையில் நெறிப்படத் தோன்றும்போது காலம் வெளிப்பட நிற்கும்’’[15] என்று கூறுவதன் வழி குறிப்பின்கண் காலமும், தொழிலும் அமைந்துள்ளமை புலப்படும்.

குறிப்பு வினைக்கு விளக்கம் தருமுகமாக சு. அழகேசன், ‘‘பழமை வாய்ந்த இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் ஒவ்வொரு பெயரையும், பெயரடை வடிவங்களையும் அவற்றுடன் வினைமுற்று விகுதிகளை இணைப்பதன் மூலம் வினைகளாக மாற்ற முடியும். இவ்வாறு உருவாகும் வினைகளுக்குத் தமிழ் இலக்கண நூலார் இட்டு வழங்கும் பெயர் வினைக்குறிப்பு என்பதாகும் எனக் கால்டுவெல் விளக்கம் தருவார்’’[16] என்று எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

நேமிநாதமும், முத்துவீரியமும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி வினை வகைகளை உயர்திணை வினை, அஃறிணை வினை, விரவு வினை என மூவகைப்படுத்துகின்றன. (நேமி. 63, மு. வீ. வினை. 4) மூவகை வினை வகைகளின் உட்பாகுபாடுகள் குறித்து, ‘‘அவற்றுள் உயர்திணை வினை தெரிநிலை வினை, குறிப்பு வினை என இருவகைப்படும். அவற்றுள் தெரிநிலை வினை – தன்மை வினை,

முன்னிலை வினை, படர்க்கை வினை என மூன்று வகைப்படும். அவற்றுள் தன்மை வினை – உளப்பாட்டுத்தன்மை, தனித்தன்மை என இருவகைப்படும். முன்னிலை வினை, ஒருமை வினை, பன்மை வினை என இருவகைப்படும். படர்க்கை வினை – ஆடூஉ வினை, மகடூஉ வினை, பன்மை வினை என மூவகைப்படும். குறிப்பு வினையும் அவ்வாறே வரும். அவற்றுள் முன்னிலை வினை விரவுவினைக்கண் கூறப்படும்”[17] என்று தெய்வச்சிலையார் விளக்குகிறார்.

உயர்திணை வினைகள்

உயர்திணை வினைமுற்றுகளாகத் தொல்காப்பியர் தன்மைப் பன்மை வினைமுற்று, தன்மை ஒருமை வினைமுற்று, படர்க்கைப் பன்மை வினைமுற்று, படர்க்கை ஒருமை வினைமுற்று ஆகிய வினைமுற்று விகுதிகளைக் குறிப்பிடுகிறார்.

தன்மைப் பன்மை வினைமுற்று (8)

தொல்காப்பியம் தன்மைப் பன்மை வினைமுற்றுகளாக அம், ஆம், எம், ஏம், உம் ஊர்ந்த க, ட, த, ற (கும், டும், தும், றும்) என்பவற்றைச் சுட்டுகிறது (தொல்.சொல்.202).

நேமிநாதம் (நேமி. 64), முத்துவீரியம் (மு. வீ. வினை. 5), தென்னூல் (தென். சொற். 107) ஆகியன தொல்காப்பியத்தைப் பின்பற்றி தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகளைக் கூறியுள்ளன.

தன்மை ஒருமை வினைமுற்று

தொல்காப்பியம் தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் குறித்து,

கடதற என்னும்
அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமோ (டு)
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே (தொல். சொல். 203)

என்று குறிப்பிடுகிறது.

நேமிநாதம் (நேமி. 64), முத்துவீரியம் (மு. வீ. வினை. 9), தென்னூல் (தென். சொற். 109) ஆகியன இவ்விகுதிகளை ஏற்கின்றன.

செய்கு எனும் வாய்பாட்டு வினைமுற்று

தன்மை ஒருமை வினைமுற்றுகளில் ஒன்றாகிய செய்கு என்னும் வாய்பாட்டு வினைமுற்று பெயரைக் கொண்டு முடியாமல் பிறிதொரு வினையைக் கொண்டு முடியினும் அது முற்றுவினை என்னும் இயல்பிலிருந்து மாறுபடாது (தொல். சொல். 204) என்னும் கருத்தை முத்துவீரியம் ஏற்கிறது (மு. வீ. வினை. 10).

உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று

அன், ஆன், அள், ஆள் ஆகிய நான்கினையும் உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்றுகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 205). இதனைப் பிற்றை இலக்கணிகள் அனைவரும் ஏற்கின்றனர். (நேமி. 65, நன். 325, 326, இ. வி. 232, தொ. வி. 105, மு. வீ. வினை. 11, சு. நா. 50, இ. த. இ. 133, இ. த. ஐந். 200, தென். சொற். 110, த. நூ. 88, 89, த. கா. இ. 304).

உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று

உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதிகளாக அர், ஆர், ப என்பவற்றையும், மார் என்பதனையும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 206, 207).

இதனை நன்னூல் (நன். 327), இலக்கண விளக்கம் (இ. வி. 232), முத்துவீரியம் (மு. வீ. 12, 13), சுவாமி நாதம் (சு. நா. 50), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. 133) ஆகியவை பின்பற்றியுள்ளன.

யார் என்னும் குறிப்பு வினைமுற்று

யார் என்னும் வினாப்பொருளை உணர்த்தும் குறிப்பு வினை முற்றுச்சொல் உயர்திணையில் ஆண், பெண், பலர் என்னும் மூன்று பால்களுக்கும் உரியதாய் வரும் என்னும் தொல்காப்பியக் கருத்தை (தொல். சொல். 210) நேமிநாதம் (நேமி. 65), நன்னூல் (நன். 349), இலக்கண விளக்கம் (இ. வி. 233), முத்துவீரியம் (மு. வீ. வினை. 14) தென்னூல் (தென். சொற். 113), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 340) ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன. தென்னூல், ஏனைய இடம் பால்களுக்கு ஏற்றி உரைத்தலும் வழுவமைதி வழக்காகும் என்கிறது (தென். சொற். 113).

செய்யுளில் உயர்திணை வினைமுற்றின் ஈற்றயல் திரிதல்

உயர்திணையில் பால் விளங்க வரும் இயல்புடைய ஈறுகள் ஆன், ஆள், ஆர் என்பன. இவற்றுள் உள்ள ஆகாரம் செய்யுளில் (ஈற்றயல் எழுத்தாக வரும் போது) ஓகாரமாகத் திரியும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 211).

மேலும், ஆய் என்னும் சொல்லும் செய்யுளுள் வரும்போது ஓகாரமாகத் திரியும் (தொல். சொல். 212) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

நேமிநாதம், ஆ, ஓவாகும்; ஆய் ஓ யாகும் என்கிறது (நேமி. 73). நன்னூல்,

பெயர் வினை யிடத்து னளரய ஈற்றயல்

ஆ ஓ வாகலும் செய்யுளுள் உரித்தே. (நன். 353)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கணவிளக்கம், நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ. வி. 326). முத்துவீரியமும், தென்னூலும் இக்கருத்தைப் பின்பற்றியுள்ளன (மு. வீ வினை. 15, 16) (தென். சொற். 131).

உயர்திணைக் குறிப்பு வினைமுற்று

தொல்காப்பியம் உயர்திணைக் குறிப்பு வினைமுற்று, ஆறாம் வேற்றுமைக்குரிய உடைமைப்பொருள், ஏழாம் வேற்றுமைக்குரிய நிலப் பொருள், ஒப்பு, பண்பு, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரும். இது குறிப்பாகக் காலத்தைக் காட்டுவதாகும் என்கிறது (தொல். சொல். 213). தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (த. கா. இ. 301).

வாய்பாடு பற்றி வரும் குறிப்பு வினைமுற்று

அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் பொருள் பற்றி வரும் சொற்கள் உண்டு. அவையும் அவற்றைப் போன்று குறிப்புப் பொருளில் வரும் எல்லாச் சொற்களும் காலத்தைக் குறிப்பாக உணர்த்துகின்ற குறிப்பு வினைமுற்றுகளாகும் (தொல். சொல். 214) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியமும் (மு.வீ.வினை.17), தமிழ்க்காப்பு இயமும் (த. கா. இ. 302) ஏற்கின்றன.

உயர்திணைக் குறிப்பு வினைமுற்றிற்குரிய ஈறுகள்

உயர்திணைத் தெரிநிலை வினை முற்றுக்கு வந்த ஈறுகளே உயர்திணைக் குறிப்பு வினைமுற்றுக்கும் வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 215). முத்துவீரியம் இக்கருத்தைப் பின்பற்றியுள்ளது (மு. வீ. வினை. 18). நேமிநாதம் இக்கருத்தின் அடிப்படையில்,

நெடியன் உடையன் நிலத்தன் இளைஞன்

கடியன் மகத்தன் கரியன் - தொடியனென

ஒண்ணுதலாய் மற்றையவும் எண்ணி உயர்திணையின்

நண்ணும் வினைக்குறிப்பு நாட்டு (நேமி. 71)

என்று குறிப்பிடுகிறது. எனவே நெடியள், உடையள் என்றும், நெடியர், உடையர் என்றும் வருவனவற்றைக் கொள்ளல் வேண்டும் என்பது புலனாகும்.

அஃறிணை வினைகள்

அ, ஆ, வ என்பனவற்றை அஃறிணைத் தெரிநிலைப் படர்க்கைப் பன்மை வினைமுற்றுகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 216). இதனை நேமிநாதம் (நேமி. 66), தென்னூல் (தென். சொற். 114) ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன.

தெரிநிலைப் படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதிகள்

ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி ஆகும் (தொல். சொல். 217)

என்பதன் வழி து, று, டு என்பவற்றை அஃறிணை ஒருமை வினைக்குரிய ஈறுகளாகக் குறிப்பிடுகிறது தொல்காப்பியம். இதனை இலக்கணிகள் பலரும் ஏற்கின்றனர். (நேமி. 66, நன். 328, இ.வி. 234, மு. வீ. வினை. 20 , சு. நா. 50, இ. த. ஐந்.260, தென். சொற். 115).

'எவன்' என்னும் குறிப்பு வினைமுற்று

'எவன்' (என்ன) என்னும் வினாச் சொல் குறிப்பு வினைமுற்றாகும். அது அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் என்னும் இரண்டு பால்களுக்கும் பொருந்தி வரும் (தொல். சொல். 219) என்பதை நேமிநாதம் (நேமி. 66), நன்னூல் (நன். 350), இலக்கணவிளக்கம் (இ. வி. 235), முத்து வீரியம் (மு. வீ. வினை. 21), தென்னூல் (தென். சொற். 116), தமிழ்நூல் (த. நூ. 107), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 341) ஆகியவை ஏற்றுக்கொண்டுள்ளன.

தமிழ்நூல் 'எவன்' என்பதை 'என்னை' என்ற சொல்லால் குறிக்கிறது. தமிழ்க்காப்பு இயம் 'என்' என்று வழங்குகிறது.

அஃறிணைக் குறிப்பு வினைமுற்று உருவாகி வரும் முறை

இன்று 2. இல 3. உடைய 4. அன்று 5. உடைத்து 6. அல்ல 7. பண்பினை உணர்த்தும் சொல் 8. உள என்னும் சொல் 9. பண்பினால் ஆகிய சினைமுதலை உணர்த்தும் சொல் 10. ஒப்புப்பொருளில் வருகின்ற சொல் ஆகிய பத்தும் குறிப்பாகக் காலத்தைக் காட்டும் அஃறிணைக் குறிப்பு வினைமுற்றுக்களாகும்

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 220) நேமிநாதம் அ∴றிணைக் குறிப்பு வினைமுற்றுக்கள் குறித்து,

கரிதரிது தீது கடிது நெடிது

பெரிதுடைத்து வெய்து பிறிது – பரிதென்ப

ஆயிழாய் பன்மையினுஞ் செல்ல அ∴றிணையின்

மேய வினைக்குறிப்பா மிக்கு (நேமி. 72)

என்று குறிப்பிடுகிறது. முத்துவீரியமும், தமிழ்க்காப்பு இயமும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி அ∴றிணைக் குறிப்பு வினைச்சொற்களை விளக்கியுள்ளன (மு. வீ. வினை. 22) (த. கா. இ. 303).

விரவு வினைகள்

உயர்திணைக்கும், அ∴றிணைக்கும் பொதுவானவையான விரவு வினைகளை, முன்னிலை, வியங்கோள், வினையெஞ்சு கிளவி, இன்மை செப்பல், வேறு என் கிளவி, செய்ம்மன, செய்யும், செய்த, என்று எண்வகைப்படுத்துகிறது தொல்காப்பியம். இவை உயர்திணை, அ∴றிணை இரண்டையும் ஒரே சமயத்தில் குறிக்காது. ஒருகால் உயர்திணையைக் குறித்தால் அதே சொல் பிறிதோரிடத்தில் அ∴றிணையைக் குறிக்கும் (தொல். சொல். 222) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. முத்துவீரியம் தொல்காப்பியத்தைப் பின்பற்றி விரவு வினைகளைக் குறிப்பிடுகிறது (மு.வீ.வினை. 13).

முன்னிலை ஒருமை வினைமுற்று

முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளாகத் தொல்காப்பியம்,

அவற்றுள்

முன்னிலைக் கிளவி

இ ஐ ஆய் என வருஉம் மூன்றும்

ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும். (தொல். சொல். 223)

என்று குறிப்பிடுகிறது.

தொன்னூல் விளக்கம் (தொ. வி. 105), முத்துவீரியம் (மு. வீ. வினை. 24, 25), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. 133) தென்னூல் (தென். சொற். 121), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 310) ஆகியன இ, ஐ, ஆய் என்னும் விகுதிகளை முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளாக ஏற்கின்றன.

முன்னிலைப் பன்மை வினைமுற்று.

முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகளாக இர், ஈர், மின் ஆகிய மூன்றனைக் குறிக்கிறது தொல்காப்பியம் (தொல். சொல். 224). தொன்னூல் விளக்கம், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற இலக்கணிகள் இம்மூன்று விகுதிகளையும் முன்னிலைப் பன்மைக்குரியனவாகக் கொள்கின்றனர். (நேமி. 67, நன். 334, மு. வீ. வினை. 26, இ. த. இ. 133) தொன்னூல் விளக்கம் இர், ஈர் என்பவற்றை முன்னிலை எனக் குறிக்கிறது (தொ. வி. 105).

முன்னிலை ஒழிந்த விரவு வினைகள்

முன்னிலை ஒழிந்த பிற வியங்கோள் முதலான ஏழு இருதிணைப் பொதுவினைச் சொற்களும் அவை தோன்றும் நெறிக்கண் மூன்று இடத்தோடும் பொருந்தி, இருதிணை ஐம்பாலையும் உணர்த்தற் குரியனவாய் வரும் (தொல். சொல். 225) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் மட்டுமே ஏற்கிறது (மு. வீ. வினை. 27).

வியங்கோள் வினை வாரா இடங்கள்

வியங்கோள் வினை குறித்து,

> **முன்னிலை தன்மை ஆயீர் இடத்தொடும்**
>
> **மன்னா தாகும் வியங்கோள் கிளவி (தொல். சொல். 226)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. முத்துவீரியம் மட்டுமே இக்கருத்தை ஏற்கிறது (மு.வீ.வினை.28)

செய்யும் என்னும் முற்று பொருந்தாத இடம்

நிகழ்காலத்தை உணர்த்துவது செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்றாகும். அம்முற்றுச்சொல் பல்லோர் படர்க்கை, தன்மை, முன்னிலை ஆகிய மூன்றிடங்களுக்கும் பொருந்தி வருவதில்லை (தொல். சொல். 227). எனவே படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்குடன் மட்டும் பொருந்தி வரும்.

இக்கருத்தை நன்னூல் (நன். 348) இலக்கண விளக்கம் (இ. வி. 241), முத்துவீரியம் (மு. வீ. வினை. 29), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 107), (இ. த. ஐந். 269), தென்னூல் (தென். சொற். 126) ஆகியன ஏற்கின்றன.

வினைமுதல் கொண்டு முடியும் எச்சங்கள்

வினையெச்ச வாய்பாடுகளுள் செய்து, செய்யூ, செய்பு ஆகிய மூன்றும் தம் வினைமுதலின் (கருத்தாவின்) வினையைக் கொண்டு முடியும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 230). இதனை முத்துவீரியம் பின்பற்றியுள்ளது (மு.வீ.வினை. 32)

சினைவினை, முதல் வினை கொண்டு முடிதல்

வினைமுதல் வினையைக் கொண்டு முடியும் என்று கூறப்பட்ட மூன்று வினையெச்சங்களும் சினைவினையாக நின்று சினைவினையோடு முடிய வேண்டும். அவ்வாறு முடியாமல் முதல் வினையோடும் முடிதல் ஒரு தன்மையது என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (தொல். சொல். 231). இக்கருத்தை நேமிநாதம் (நேமி. 73), நன்னூல் (நன். 345), இலக்கண விளக்கம் (இ. வி. 248), முத்துவீரியம் (மு. வீ. வினை. 33), சுவாமிநாதம் (சு. நா. 53), தென்னூல் (தென். சொற். 136) ஆகியன பின்பற்றியுள்ளன.

தன்வினை, பிறவினைகளைக் கொண்டு முடியும் எச்சங்கள்

முற்கூறப்பட்ட செய்து, செய்பு, செய்யூ தவிர்ந்த பிற 12 வினையெச்சங்களும் அவை தம் வினைமுதல் வினையைக் கொண்டு முடியும் அல்லது அவ்விடத்திற்குப் பொருந்துகிற பிற வினைக்குரிய வினையைக் கொண்டும் முடியும் (தொல். சொல்.232) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நன்னூல் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, வான், பான், பாக்கு தவிர்ந்த பிற வினையெச்சங்கள் செய்பவனைக் கொண்டு முடிதலேயன்றி பிறவற்றையும் கொண்டு முடியும் (நன். 344) என்கிறது. இலக்கண விளக்கம், பிறவும் ஏற்கும் பிற (இ. வி. 247:3) என்கிறது. முத்துவீரியமும் இனிய தமிழ் இலக்கணமும் செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு இவை பிறவினையோடும், முதல் வினையோடும் பொருந்தும் என்கிறது (மு. வீ. வினை. 34), (இ. த. இ. ப. 157). இலகு தமிழ் ஐந்திலக்கணம் முதல், சினை கொண்டு முடிதல் குறித்து,

வினையெச்சம் முதல்பெயர் சினைப்பெயரினை
முடிவில் ஏற்கும் முறை இலக்கணம்தனில்
வினையெச்சம் முதல் சினை கொடு முடிதலாம் (இ.த.ஐந்.284:1-3)

என்று குறிப்பிடுகிறது. தென்னூல், முற்கூறப்பட்ட நான்கனைத் (செய்து, செய்பு, செய்யூ, செய்யா) தவிர பிற தம் வினை முதல்வினையொடும் முடியும் என்கிறது (தென். சொற். 135). தமிழ்நூல், செய்ய, செயின் ஆகிய இரண்டும் தன் முதல் வினையையும், அயல் முதல் வினையையும் கொள்ளும் (த.நூ.111) என்கிறது.

இலக்கணிகள் கூறும் வாய்பாடுகள் வேறுபடினும் அவை தம் வினைமுதல் வினையோடும், பிறவற்றோடும் முடியும் என்பதில் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளமை புலப்படும்.

வினையெச்சம் அடுக்கி நின்று ஒரு பயனிலை கொள்ளல்

வினையெச்சங்கள் பல அடுக்கி வந்து இறுதியில் ஒரு வினையைக் கொண்டு முடியும் என்பதை,

> **பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி**
> **சொல்முறை முடியா(து) அடுக்குந வரினும்**
> **முன்னது முடிய முடியுமன் பொருளே (தொல். சொல். 233)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இதனை, நேமிநாதம் (நேமி. 70), நன்னூல் (நன். 353), (இ. வி. 328) ஆகியன பின்பற்றியுள்ளன.

எச்சங்கள் எதிர்மறை வினை கொண்டு முடிதல்

பெயரெச்சச்சொல்லும், வினையெச்சச் சொல்லும் எதிர்மறையாகச் சொல்லப்பட்டாலும் தம் பொருள் நிலையிலிருந்து மாறுபடாது (தொல். சொல். 236) என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதம் (நேமி. 70), முத்துவீரியம் (மு. வீ. வினை. 38), தென்னூல் (தென். சொற். 142) ஆகியன பின்பற்றியுள்ளன.

இடையில் பிறசொற்கள் வரல்

பெயரெச்ச, வினையெச்சச் சொற்களுக்கும் அவை கொண்டு முடியும் பயனிலையாகிய பெயர், வினைகளுக்கும் இடையே பிற சொற்கள் வந்தாலும் நீக்க மாட்டார் (தொல். சொல். 237) என்பதை நேமிநாதம் (நேமி. 70), நன்னூல் (நன். 356), இலக்கண விளக்கம் (இ. வி. 329), முத்துவீரியம் (மு. வீ. வினை. 37), தென்னூல் (தென். சொற். 144) ஆகியன ஏற்றுக் கொண்டுள்ளன.

கால வழுவமைதி

இறந்தகாலச் சொல் எதிர்காலச் சொல்லுடன் மயங்குதல்

செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் இறந்தகாலத்திற்கு உரியது. அது எதிர்காலத்தை உணர்த்தும் வினைச் சொல்லுடன் பொருந்தி வருதலும் உண்டு (தொல். சொல். 239) என்பதை முத்துவீரியம் (மு. வீ. வினை. 40) பின்பற்றியுள்ளது.

நிகழ்காலச்சொல் பிற காலங்களையும் உணர்த்துதல்

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூவகைக்காலத்தும் மாறுபாடின்றி உளதாகும் இயல்புடைய பொருளை உணர்த்தும் சொல்லை நிகழ்காலத்தைக் குறிக்கும் தன்மையுடைய பொதுச்சொல்லால் வினைமுடிபு கூறவேண்டும் (தொல். சொல். 240) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. முக்காலத்திற்கும் பொதுவாய் நிற்கும் வினைச்சொல் ‘செய்யும்’ என்னும் வாய்பாட்டு வினைமுற்றாகும். நன்னூல் இக்கருத்தை,

> **முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்**
> **செப்புவர் நிகழும் காலத் தானே. (நன். 383)**

என்னும் சூத்திரம் வழி புலப்படுத்துகிறது.

இலக்கண விளக்கமும் (இ.வி.303), முத்துவீரியமும் (வினை.41), தமிழ்நூலும் (த.நூ.281) நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளன. இனிய தமிழ் இலக்கணமும் (இ.த.இ.ப.233), தென்னூலும் (தென்.சொற்.235) இக் கருத்தைப் பின்பற்றியுள்ளன.

விரைவுப் பொருளில் காலம் மயங்குதல்

விரைவுப்பொருளில் வரும்பொழுது எதிர்காலமும், நிகழ்காலமும் இறந்த காலத்தோடு மயங்கிவரும் என்பதை,

> **வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்**
> **ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி**
> **இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்**
> **விரைந்த பொருள என்மனார் புலவர் (தொல். சொல். 241)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

முத்துவீரியம் இக்கருத்தைப் பின்பற்றியுள்ளது (மு. வீ. வினை. 42). விரைவின் காரணமாக காலம் மயங்கும் என்று நன்னூல் (384), (இ. வி. 304) (இ. த. இ. ப. 233), தென்னூல் (தென். சொற். 233) தமிழ்நூல் (த. நூ. 280) ஆகியவை உரைக்கின்றன.

சிறப்புப் பொருளில் காலம் மயங்குதல்

உலகத்தவரால் நன்கு மதிக்கப்படுகின்ற சிறந்தவொரு வினைக்குப் பயன் உண்டு. அப்பயனை அவ்வினையைச் செய்பவரின் பெயரோடு (வினை முதலோடு) சுட்டிச் சொல்லாதவிடத்து நிகழ்காலச் சொல்லால் சொல்லுதலே முறையாகும் (தொல்.

சொல். 242) என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் மட்டுமே பின்பற்றியுள்ளது (மு. வீ. வினை. 43).

இது செயல் வேண்டும்

'இது செயல் வேண்டும்' எனும் வாய்பாட்டு வினைகள் தன்பாலும், பிறன்பாலும் பொருந்தி வரும் என்னும் தொல்காப்பியக் கருத்தை (தொல். சொல். 243) முத்துவீரியம் மட்டுமே பின்பற்றியுள்ளது (மு. வீ. வினை. 44).

வற்புறுத்தலில் வரும் வினா எதிர்மறைப் பொருளைத் தருதல்

வற்புறுத்திக் கூறுவதற்காக வருவதும், ஈற்றிலே வினாவினைக் கொண்டு நிற்பதுமாகிய வினாவுடை வினைச்சொல் உடன்பாட்டை உணர்த்தாது எதிர்மறைப் பொருளை உணர்த்துதற்கும் உரிமை உடையது (தொல். சொல். 244) என்னும் தொல்காப்பியக்கருத்தை முத்துவீரியம் மட்டுமே பின்பற்றியுள்ளது (மு.வீ.வினை. 45).

இயல்பையும் தெளிவையும் சுட்டக் காலம் மயங்குதல்

எதிர்காலத்து வினைச்சொல் இயல்பையும் தெளிவையும் குறிக்கும் போது இறந்த காலத்தாலும், நிகழ்காலத்தாலும் குறிக்கப்படும் என்னும் தொல்காப்பியக் கருத்தை (தொல். சொல். 245) முத்துவீரியம் பின்பற்றியுள்ளது (மு. வீ. வினை. 46).

நன்னூல் (384), இலக்கணவிளக்கம் (இ. வி. 304), இனிய தமிழ் இலக்கணம், (இ. த. இ. ப. 233), தென்னூல் (தென். சொற். 233) ஆகியவை இயல்பினும், தெளிவினும் காலம் மயங்கும் என்பதைச் சுட்டியுள்ளன.

செயப்படுபொருளை வினைமுதல் போலக் கூறுதல்

ஒரு செயல் நடைபெறுவதற்கு அடிப்படையாக இருப்பது செயப்படுபொருளாகும். செயப்படுபொருளைச் செய்யப்பட்டது எனக் கூறாமல் அதுவே செய்தது போலக் (வினைமுதல் போல) கூறுதல் உலக வழக்காற்றில் காணப்படுவதாகும் (தொல். சொல். 246) என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதம் (நேமி. 90), நன்னூல் (நன். 400), இலக்கணவிளக்கம் (இ. வி. 357), முத்துவீரியம் (மு. வீ. வினை. 47) ஆகியன பின்பற்றியுள்ளன. இலக்கணக்கொத்து செயப்பாட்டு வினையின் வகைகளைப் பேசுகிறது (இ. கொ. 78).

இறந்தகாலமும், எதிர்காலமும் மயங்கி வருதல்

காலம் மயங்கி வரும் மயங்குமொழித் தொடர்களில் இறந்தகாலமும், எதிர்காலமும் எவ்விதக் காரணமும் இன்றி இயல்பாக மயங்கி வரும் என்பதை தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 247). மேலும் ஏனைக் காலமும்

மயங்கி வரும் என்பதையும் குறிப்பிடுகிறது (தொல். சொல். 248). நேமிநாதம் இக்கருத்தைப் பின்பற்றி,

முந்துரைத்த காலங்கண் மூன்று மயங்கிடினும்

சான்றோர் வழக்கினையும் செய்யுளையும் சார்த்தியலின்

ஆன்ற மரபாம் அது (நேமி. 94)

என்று குறிப்பிடுகிறது.

நன்னூல்,

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்

பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி (நன். 384)

என்று கூறுகிறது. இலக்கண விளக்கம் (இ.வி.304), இனிய தமிழ் இலக்கணம் (இ.த.இ.ப.233), தென்னூல் (தென். சொற். 233) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன. முத்துவீரியம்,

இறப்பும் எதிர்வும் மயங்கியும் இயலும் (மு. வீ. வினை. 48)

நிகழ்வும் அவற்றோடு நிலவுதல் வரையார் (மு. வீ. வினை. 49)

என்று குறிப்பிடுகிறது.

பெயரியல் - மரபு மாற்றம்

சொல்வகைகள்

தொல்காப்பியம் தொடங்கி எல்லா இலக்கண நூல்களும் சொல்லின் வகைகளை பெயர், வினை, இடை, உரி என்று நால்வகையாகக் குறிப்பிட, தமிழ்நூல் பெயர், வினை இரண்டை மட்டும் குறிப்பிட்டுள்ளது. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ‘‘தொல்காப்பியம் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என இரண்டாகப் பிரிக்கின்றது. உரிச்சொல், இடைச்சொல் என்ற பிறிதொரு பாகுபாடும் உண்டு. இச்சொற்களைத் தொல்காப்பியம் பயன்படுத்துவதை ஆராயும்பொழுது, ‘உரிச்சொல்’ என்பதால் வேர் உருபன்களையும், இடைச்சொல் என்பதால் பிற உருபன்களையும் அது குறிப்பதாகவே முடிவுக்கு வரவேண்டியதிருக்கிறது.’’[18] என்று குறிப்பிடுவதன் மூலம் அவரும் சொல் வகைகளை பெயர், வினை என இரண்டாகக் கருதுகின்றமை புலனாகும். மேலும்,

அதுவே

வினைபெயர் இரண்டாய் ஐந்தொகையாய

திணைபால் எண் இடம் காலம் காட்டும் (து. நூ. 48)

என்று கூறுவதன் மூலம் பெயரினும் வினைக்கு முதலிடம் தந்துள்ளது. இவ்வாறு வினை முற்கூறப்பட்டமைக்கு முற்றுவினை திணை, பால், எண், இடம், காலம் ஆகிய ஐந்தையும் காட்டும் என்பதால் முற்கூறி பெயர் வினையாலணையும் பெயர் தவிர பிற பெயர் காலந் தவிர்ந்தனவே காட்டும் ஆதலின் பிற்கூறப்பட்டது என நூலாசிரியர் விளக்கம் தருகிறார்.

பெயர்ச்சொல் வகைகள் - மரபு மாற்றம்

தொல்காப்பியர் பெயர்ச்சொல்லை திணை அடிப்படையில் உயர்திணைப்பெயர், அ∴றிணைப் பெயர், விரவுத்திணைப்பெயர் என மூன்றாக வகைப்படுத்துகிறார்.

அவற்றுள், உயர்திணைப் பெயர்களைக் குறிப்பிடுகையில் சிலவற்றைத் தனிப்பெயராகவும், சிலவற்றைப் பொதுப்பெயராகவும் கூறியுள்ளார். நேமிநாதம் பொதுப்பெயராக உயர்திணைப் பெயர்களைச் சுட்டுகிறது. அந்தவகையில் சுட்டுப்பெயர்களும், வினாப்பெயர்களும் உவமைப்பெயர்களும், பண்பின் பெயர்களும் என்று இச்சொல்லப்பட்ட ன, ள, ர ஈறாகிய பெயர்களும் எண்ணியற் பெயர்களும், நிலப்பெயர்களும், கூடியற்பெயர்களும், காலப்பெயர்களும், குலப்பெயர்களும், தொழிற்பெயர்களும், ஆடூஉ, மகடூஉ என்னும் பெயர்களும் உயர்திணைப் பெயர்களாகும் என்று குறிப்பிடுகிறது (நேமி. 55).

மேலும், பல்லோரைக் குறித்து வரும் முறைப்பெயரும், சினைப்பெயரும், நம்மூர்ந்து வரும் இகர, ஐகார ஈற்றுப் பெயரும், இகர ஈற்று சாதிப் பெண் பெயரும், மாந்தர், மக்கள் என்னும் பெயரும், தன்மைப்பெயரும் உயர்திணைப் பெயராம் என்கிறது (நேமி. 56).

தொல்காப்பியம் குறிப்பிடும் உயர்திணைப் பெயர்களுள் எல்லாரும், எல்லீரும், பெண்மகன் போன்ற சில பெயர்கள் நேமிநாதத்தில் இடம் பெறவில்லை.

கள் விகுதி அ∴றிணைப்பன்மைக்கு உரியது எனத் தொல்காப்பியம் கூற நேமிநாதம் இருதிணைக்கும் வரும் எனச் சுட்டுகிறது இதனை,

கள்ளொடு வந்தால் இருதிணைக்கும் பன்மைப்பால்

ஒள்ளிழையாய் தோன்றலும் உண்டு. (நேமி. 61: 3-4)

என்னும் நூற்பா புலப்படுத்தும்.

நன்னூல் பால் அடிப்படையில் பெயர்களை வகைப்படுத்துகிறது. உயர்திணைப் பெயர்களாக ஆண்பால், பெண்பால், பலர்பால் பெயர்களைச் சுட்டுகிறது. இப்பெயர்களை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையிலும், பிறவற்றின் அடிப்படையிலும் பாகுபடுத்தியிருப்பது குறிப்பிடத் தகுந்த மரபு மாற்றமாகும். நன்னூலின் இப்பாகுபாட்டினையே பிற்றை இலக்கணிகள் பின்பற்றியுள்ளனர். உயர்திணை ஆண்பால் பெயர்கள் குறித்து நன்னூல்,

அவற்றுள்
கிளைஎண் குழூஉ முதல் பல்பொருள் திணைதேம்
ஊர்வான் அகம்புறம் முதல்நிலன் யாண்டு
இருது மதிநாள் ஆதிக் காலம்
தோள்குழல் மார்புகண் காதுமுதல் உறுப்பு
அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி
சாதி குடி சிறப்பு ஆதிப் பல்குணம்
ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை
இவை அடை சுட்டு வினாப்பிற மற்றோடு
உற்ற னவ்வீறு நம்பி ஆடூஉ
விடலை கோவேள் குரிசில் தோன்றல்
இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப (நன். 276)

என்று குறிப்பிடுகிறது.

பெண்பாற் பெயர்கள் குறித்து நன்னூல், ஆண்பால் உயர்திணைப் பெயர்களுக்குக் கூறப்பட்ட கிளை முதலான அறுவகைப் பொருள்களுள்ளும், இடைச்சொற்களுள்ளும் ஒன்றின் அடியாகத் தோன்றி 'ள்' என்ற மெய்யும் 'இ' என்ற உயிரும் பொருந்துவதற்கு ஏற்ற அவ்விரண்டு ஈற்றுப் பெயர்களும் தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல் என்னும் பெயர்களும் இவை போல்வன பிறவும் உயர்திணைப் பெண்பால் பெயர்கள் ஆகும் என்று குறிப்பிடுகிறது (நன். 277).

மேலும் உயர்திணை பலர்பாற்பெயர் குறித்து, கிளை முதலாகக் கூறப்பட்ட அறுவகைப் பொருள்களையும், இடைச்சொற்களையும் அடியாகக் கொண்டு தோன்றிய 'ர்' என்ற மெய்யீற்றுப் பெயர்களும், 'கள்' என்னும் விகுதியை ஈறாக உடைய பெயர்களுள் பலர்பாலுக்குப் பொருந்தி வருவனவும் இவை போல்வன பிறவும் உயர்திணைப் பலர்பாற்பெயர்கள் ஆகும் (நன். 278) என்று விளக்குகிறது.

தொல்காப்பியம் ‘கள்’ விகுதியை உயர்திணைப்பெயருக்கு வரும் எனச் சுட்டவில்லை. ஆனால் நேமிநாதமும், நன்னூலும் ‘கள்’ விகுதியை உயர்திணைப் பலர்பாலுக்கும் உரியதாகக் குறிப்பிட்டுள்ளன. இதன்வழி, தொல்காப்பியர் காலத்தில் ‘கள்’ விகுதி அஃறிணைக்கு மட்டுமே வழங்கி வந்து பிற் காலத்தில் உயர்திணைக்கும் வழங்கியிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இது குறித்து ரா. சீனிவாசன் “தொல்காப்பியர் காலத்தில் ‘கள்’ என்னும் பன்மை உருபு அஃறிணைக்கு மட்டும் வந்தது. நன்னூலார் காலத்தில் ‘கள்’ உயர்திணைக்கும் கொள்ளப்பட்டது.

ரகர ஈற்றுச்சொல் உயர்திணையில் பன்மையையும், மரியாதை ஒருமையையும் உணர்த்தத் தொடங்கிப் பிறகு இவற்றிடையே வேறுபாடு அமைக்க வேண்டி ‘கள்’ இடம் பெற்றிருக்க வேண்டும்.

அரசர் - அரசர்கள், பிறகு மரியாதை ஒருமையிலும் இந்தக் ‘கள்’ வழக்குப் பெற்றுவிட்டது. ‘தலைவர் அவர்கள் வந்தார்’.

‘ர்கள்’ என்பது இப்பொழுது பேச்சுத்தமிழில் மரியாதை ஒருமையிலும் மிகுதியாக வழக்குப்பெற்றுவிட்டது. ‘ங்க’ என்பது ‘ர்கள்’ என்பதன் திரிபாகும்.

‘அவங்க வருவாங்க’”[19] என்று விளக்குகிறார்.

சி. இலக்குவனாரும், “கள் விகுதி தொல்காப்பியர் காலத்தில் அஃறிணைப் பன்மைக்கு உரியதாக இருந்தது. திருவள்ளுவர் காலத்தில் உயர்திணைப் பன்மைக்கும் உரியதாகிவிட்டது”[20] என்று சுட்டிக்காட்டுகிறார்.

பிற்றை இலக்கணிகளும் நன்னூலைப் பின்பற்றி ‘கள்’ விகுதி உயர்திணைப் பலர்பாலுக்கும் வரும் என்பதைப் பதிவு செய்துள்ளனர்.

இலக்கண விளக்கம் உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் பெயர்கள் குறித்த நன்னூல் நூற்பாக்களை எடுத்துக் காட்டுகிறது. (இ.வி.177,178,179).

முத்துவீரியம் நன்னூலைப் பின்பற்றி பால் அடிப்படையில் பெயர்களைப் பாகுபடுத்தியுள்ளது. உயர்திணை ஆண்பாற் பெயர்கள் குறித்து னகர மெய்யீறாகிய குடிப்பெயரும், நிலப்பெயரும், குழுவின் பெயரும், வினைப்பெயரும், திணைநிலைப்பெயரும், சினைநிலைப் பெயரும், குணப்பெயரும், எண்ணுப்பெயரும், சுட்டுப்பெயரும், வினாப் பெயரும் உயர்திணை ஆண்பாற் படர்க்கைப் பெயரே என்று கூறுவதுடன்.

கோவேள் விடலை குரிசில் தோன்றல்

ஆடூஉ நம்பியும் அதன்பால என்மனார் (மு.வீ.பெயர்.21)

என்றும் குறிப்பிடுகிறது.

பெண்பாற்பெயர்கள் குறித்து, ஆண்பாற் பெயருள் கூறிய குடிப்பெயர் முதலிய பத்துப் பெயர்களின் இறுதி ளகரவொற்றுப் பெயரும், இகரவிறுதிப் பெயரும் உயர்திணை பெண்பாற் படர்க்கைப் பெயராம் (மு. வீ. பெயர். 22) என்றும், பலர்பால் பெயர்கள் குறித்து, குடி முதலாகக் கருதிய பெயர்களின் இறுதி ரகரவொற்றுப் பெயரும், மார் விகுதிப் பெயரும், உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயராம் (மு.வீ.பெயர். 24) என்றும் விளக்குகிறது.

சுவாமிநாதம், நன்னூல் கருத்தின் அடிப்படையில் உயர்திணைப் பெயர்கள் குறித்து, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறினோடும் இவற்றை அடையும் சுட்டினாலும், வினாவினாலும், இடைச்சொல்லினாலும், உவமையினாலும் ன், ள், ஐ, இர், கள் முதலிய ஈறுகள் உயர்திணையை உணர்த்தி வரும் என்கிறது (சு. நா. 39).

அறுவகை இலக்கணமும் 'அவர்கள்' என்பதைப் போன்ற சொற்கள் உயர்திணைப் பன்மைச் சுட்டாக வரும் (அ.இ.188) எனக் குறிப்பிடுவதன் மூலம் 'கள்' ஈறு உயர்திணைப் பன்மைக்கும் வருவதைப் பதிவு செய்துள்ளது.

தமிழ்க்காப்பு இயம், உயர்திணைப் பெயர்களாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றுள் சுட்டுப்பெயர்கள் அவன், இவன், உவன், அவள், இவள், உவள், அவர், இவர், உவர் என்பவற்றுடன் அவர்கள், இவர்கள், உவர்கள் ஆகியவற்றையும் குறிப்பிடுகிறது. (த. கா. இ. 231). இதன்வழி 'கள்' விகுதி உயர்திணையில் வரும் வழக்கத்தினை தமிழ்க்காப்பு இயம் பதிவு செய்துள்ளது. மேலும், உயர்திணை வினாப்பெயர்களாக யாவன், யாவள், யாவர் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (த.கா.இ.239).

அ∴றிணைப் பெயர்கள்

தொல்காப்பியம் உயர்திணைப் பெயர்களைக் கூறியது போலவே அ∴றிணைப் பெயர்கள் குறித்தும் சுட்டு, வினாப்பெயர்களை முதலில் கூறி, பின்னர் பல்வகை அ∴றிணைப் பெயர்களையும், அவை பன்மையில் 'கள்' விகுதி பெற்று வருவதனையும் கூறி, பின்னர் புறனடை கூறியுள்ளது. அ∴றிணைப்பெயரில் சுட்டு, வினாப் பெயர் குறித்து,

அது இது உதுஎன வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவை இவை உவை – என வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாது யா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றோடு அப்பதி னைந்தும்
பாலறி வந்த அ∴றிணைப் பெயரே (தொல். சொல். 167)

என்றும், மேலும் பல்வகை அ∴றிணைப் பெயர்களாக 1. பல்ல 2. பல 3. சில 4. உள்ள 5. இல்ல 6. வினைப்பெயர் (வருவது, செல்வது), 7. பண்பு கொள் பெயர் (கரியது, செய்யது) 8. இவ்வளவு என வரையறுத்துக் கூறும் எண்ணுப் பெயர் (ஒன்று, பத்து, நூறு) 9. ஒப்பினாகிய பெயர் (பொன்னன்னது, கண்ணன்னவை) ஆகிய ஒன்பது பெயர்களையும் குறிப்பிடுகிறது. (தொல். சொல். 168)

மேலும் அ∴றிணைப் பன்மையாகிய பலவின்பாற் சொற்கள் ‘கள்’ ஈறு பெறும் என்பதை,

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே. (தொல். சொல். 169)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ‘கொள்வழி உடைய’ என்றமையால் தொல்காப்பியர் காலத்தில் இவ்வாறு ‘கள்’ விகுதி பெறுவது அரிதாகவே இருந்திருக்கக் கூடும். மேலும், ‘கள்’ விகுதி பெறாமல் வரும் அ∴றிணைப் பெயர்களில் அப்பெயர்கள் கொண்டு முடியும் பயனிலையாகிய வினைகளே பால்களைத் தெளிவாகக் காட்டும் என்பதை,

தெரிநிலை உடைய அ∴றிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே (தொல்.சொல்.171)

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது.

இது குறித்து தே. ஆண்டியப்பன், “அ∴றிணைப் பெயர்கள் பன்மை காட்ட கள்ளொடு சிவணும் என்றார். பிற்காலம் உயர்திணைப் பெயர்களும் கள் விகுதி பெற்றன. (எ-டு) ஆண்கள், பெண்கள். இனியர் இசை நிறைத்து வரும் கள் விகுதி என்பார். வேந்தர்கள், மனிதர்கள், மற்றவர்கள் முதலியவற்றில் கள் நீங்கிய பின்னும் வேந்தர், மனிதர், மற்றவர் பன்மை காட்டுகிறதே என்பார். தொல்காப்பியம் மக்கள் என்னும் சொல்லில் கள் விகுதியைப் பயன்படுத்தி விட்டாரே என்பாரும் உண்டு. கள்

விகுதி நீங்கிடின் ஒருமை ஆதல் வேண்டும். மலர்கள் - மலர் ஆகும். மான்கள் - மான் ஆகும். ஆனால் மக்கள் - மக் ஆவதில்லை. எனவே திங்கள் என்னும் சொல்லைப் போல மக்கள் அமைந்துள்ளது எனலாம். அ.்.றிணையில் கள் விகுதி இன்றியும் பன்மை உணர்த்தப்படலாம். அப்போது வினைச் சொல்லே ஒருமை, பன்மை என்பவற்றை வேறுபடுத்தும்”[21] என்று விளக்குகிறார்.

முற்கூறப்பட்ட அ.்.றிணைப் பெயர்கள் தவிர இவை போன்ற பன்மை, ஒருமை எனப் பால் விளங்க வந்த அனைத்துப் பெயர்களும் அ.்.றிணைப் பெயர்களாகும் என்று தொல்காப்பியர் அ.்.றிணைப் பெயர்களுக்குப் புறனடை கூறுகிறார் (தொல். சொல். 170).

நேமிநாதம், அ.்.றிணைப்பெயர்கள் குறித்து சுட்டுமுதலாகிய உகர, ஐகார ஈற்றுப் பெயரும், எண்ணின் பெயரும், உவமைப் பெயரும், சாதிப்பெயரும், வினாப் பெயரும், உறுப்பின் பெயரும் இவை அ.்.றிணைப்பெயர்களாகும் என விளக்குகிறது (நேமி.57). தொல்காப்பியம் குறிப்பிடும் பல்ல, பல, சில உள்ளிட்ட பிற அ.்.றிணைப் பெயர்களை நேமிநாதம் குறிப்பிடவில்லை. நன்னூல் பால் அடிப்படையில் அ.்.றிணை ஒன்றன்பால், பலவின்பால் பெயர்களைக் கூறுகிறது.

அ.்.றிணை ஒன்றன்பால் பெயர்கள் குறித்து, வினாவிலும், சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகியும், வினாவும், சுட்டவும்படாது வேறாகியும் வரும் பொருள் முதலிய ஆறினையும் அடியாகக் கொண்டு தோன்றும் ‘து’ விகுதியீற்றுப் பெயரும், சுட்டோடு கூடிய ஆய்த எழுத்தைப் பெற்று வரும் துவ்வீற்றுப் பெயரும், ஒன்று என்னும் எண்ணாகு பெயரும் இவை போல்வன பிறவும் அ.்.றிணை ஒன்றன்பாற் பெயர்களாம் என்று குறிப்பிடுகிறது (நன். 279).

அ.்.றிணைப் பலவின்பாற் பெயர் குறித்து நன்னூல், வினாச் சுட்டுடனும் அவற்றின் வேறாகியும் வரும் பொருள் முதலிய ஆறனோடும் ஏற்றபடி வரும் ‘வை’ விகுதியீற்றுப் பெயர்களும், வகர மெய்யை, ஈறாக உடைய சுட்டுப்பெயர்களும், கள் என்னும் பகுதிப்பொருள் விகுதியீற்றுப் பெயர்களும், இரண்டு முதலிய எண்ணாகு பெயர்களும், உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில என்னும் எட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயர்களும், இவை போல்வன பிறவும் அ.்.றிணைப் பலவின்பாற் சொற்களாம் என்று குறிப்பிடுகிறது (நன். 280).

இலக்கண விளக்கம், நன்னூல் கருத்தைப் பின்பற்றி ஒன்றன்பால் பெயர்களைக் கூறுகிறது (இ. வி. 180). பலவின்பாற் பெயர் குறித்து நன்னூல் (280) நூற்பாவை எடுத்து விளக்கியுள்ளது. முத்துவீரியம் நன்னூலைப் பின்பற்றி அ.்.றிணை ஒன்றன்பால், பலவின்பால் பெயர்கள் குறித்து விளக்குகிறது. துவ்விகுதிச் சுட்டுப்பெயரும், சுட்டனை ஆய்தப்பெயரும், யாது என்னும் வினாப் பெயரும், ஒன்று என்னும் எண்ணுப்பெயரும்

அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப்பெயராகும் (மு.வீ.பெயர்.25) என்றும், அஃறிணைப் பலவின்பாற் பெயர்கள் குறித்து வகர ஒற்று இறுதியாகிய பெயரும், வை விகுதிப் பெயரும், கள் இறுதிப் பெயரும், எண்ணுப் பெயரும் இவை போல்வனவாகிய பிறவும் அஃறிணைப் பலவின்பால் பெயர்கள் என்றும் (மு.வீ.பெயர்.26), மேலும், பல்ல, பல, சில, உள்ள, வில்ல, உள, வில ஆகியவையும் பலவின் பாற்பெயர்களாகும் என்றும் முத்துவீரியம் சுட்டுகிறது (மு. வீ. பெயர். 27).

சுவாமிநாதம் அஃறிணைப் பெயர்கள் குறித்து விளக்கும்போது தொல்காப்பியத்தைப் பின்பற்றி திணை அடிப்படையில் விளக்கினாலும் நன்னூல் கூறும் பொருள் முதல் ஆறினோடும் இப்பெயர்கள் வரும் என்பதை ஏற்கிறது. பொருள் முதல் ஆறினோடும் இவற்றை அடையும் சுட்டினாலும், வினாவாலும், இடைச் சொல்லினாலும், உவமையினாலும் து, டு, று, வை, அ, கள் முதலிய ஈறுகள் அஃறிணையை உணர்த்தும் என்று குறிப்பிடுகிறது (சு. நா. 39).

தென்னூல், முன்னைய இலக்கணிகளைப் பின்பற்றி அஃறிணைப் பெயர்களை விளக்குவதை,

சுட்டு வினாமுத லாகிய துவ்வீறு
அவை முதலாகிய வகர வையீற்றுப்
பெயர் முச்சுட்டு முதல் வருதுவ்வொடு
அகர இறுதி வினைப்பெயர் ஒப்புப்
பண்புப் பெயரொடு எண்ணுப் பெயர்பல
சிலபிறி தின்னன அஃறிணை யவ்வே. (தென். சொற். 88)

என்னும் நூற்பா புலப்படுத்தும்.

மேலும் அவற்றுள் துவ்வீற்றுப் பெயர் ஒன்றன் ஒருமையையும், வகர, ஐகார வகர ஈற்றுப் பெயர் பலவின் பன்மையையும் உணர்த்தும் என்றும் சுட்டுகிறது (தென். சொற். 89). மேலும், அஃறிணை இயற்பெயர் யாவும் அத்திணை ஒருமைக்கும், பன்மைக்கும் பொதுவாகும் என்றும் கள் விகுதி பெற்றுவரின் அவை அஃறிணைப் பன்மையையே சுட்டும் என்னும் கருத்தையும் தென்னூல் பதிவு செய்துள்ளது. (தென். சொற். 90)

தமிழ்க் காப்பு இயம் அஃறிணைச் சுட்டுப்பெயர்கள் குறித்து அது, இது, உது என வருகின்ற பெயர்களும், அவை, இவை, உவை, என வருகின்ற பெயர்களும், அவைகள், இவைகள், உவைகள் என வருகின்ற பெயர்களும் சுட்டுப்பெயர்களாக வரும் என்றும் (த. கா. இ. 232), அஃறிணை வினாப்பெயர்களாக யாது, யாவை என்பவற்றையும் (த. கா. இ. 239, 240) குறிப்பிடுகிறது.

விரவுப்பெயர்

நன்னூல் விரவுப்பெயரைப் பொதுப் பெயர் என்ற சொல்லால் குறிக்கிறது. அவை சிறப்புப்பெயராலும், வினையாலும் திணை, பால் அறியப்படும் என்பதை

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர் வினை தாமே. (நன். 359)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது. தொல்காப்பியம், விரவுப்பெயர் வினைவழி பாலறியப்படும் என்று கூற நன்னூல் சிறப்புப் பெயர், வினை ஆகியவற்றால் பொதுமை நீங்கும் எனக் கூறுவது மரபு மாற்றமாகும்.

இலக்கண விளக்கம், குறிப்புமொழி பொதுமை நீக்கும் என்னும் கருத்தின் அடிப்படையில்,

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை குறிப்பே (இ.வி.333)

என்று நவில்கிறது.

விரவுப்பெயர் - பாகுபாடுகள்

விரவுப்பெயரை பாகுபடுத்துவதில் தொல்காப்பியத்திலிருந்து சற்றே மாறுபடுகிறது நேமிநாதம். இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் ஆகியவற்றின் வகைகளைக் குறிப்பிடுவதில் தொல்காப்பியத்தோடு நேமிநாதம் (58) ஒத்த மரபைக் கொண்டுள்ளதெனினும் முறைப்பெயரைக் குறிப்பிடுவதில் சற்றே வேறுபடுகிறது. தொல்காப்பியம் முறைப்பெயரின் வகைகளை ஆண்மை முறைப்பெயர், பெண்மை முறைப் பெயர் எனப் பாகுபடுத்த, நேமிநாதம் முறைப்பெயர் எனச் சுட்டாது தந்தை, தாய் என்பனவும், முறைமைக்கண் வந்த மகன், மகள் என்பனவும் விரவுப்பெயராய் வரும் என்கிறது (நேமி 59). மேலும், தொல்காப்பியம் விரவுப்பெயராய்க் குறிப்பிடும் ‘எல்லாம்’ எனும் பெயர் நேமிநாதத்தில் இடம்பெறவில்லை.

நன்னூல் இயற்பெயரை முதற்பெயர் என்ற சொல்லால் குறிக்கிறது. விரவுப்பெயரின் தொகைகளாக ஒன்பதனையும், விரியாக இருபத்தாறனையும் குறிப்பிடுவதை,

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதல் பெயர்ஒரு நான்கும் முறை இரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்

எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர் (நன். 282)

என்னும் சூத்திரம் விளக்கும்.

மேற்சுட்டிய தன்மைப் பெயர்கள் யான், நான், யாம், நாம் என்பன; முன்னிலைப்பெயர்கள் எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்பன; மற்றவை படர்க்கைப் பெயர்கள் ஆகும்; எல்லாம் என்பது பொதுவானது என்றும் நன்னூல் சுட்டுகிறது (நன். 285).

தன்மைப் பெயரைத் தொல்காப்பியம் உயர்திணையில் கூற, நன்னூல் விரவுப் பெயரில் கூறியுள்ளமை குறிப்பிடத்தகுந்த மரபு மாற்றமாகும். இது குறித்து செ. வை. சண்முகம், “தன்மையை உயர்திணையில் சேர்த்த காரணம் அறியத் தகுந்தது. மக்கட்சுட்டு உயர்திணை அந்த மக்களே பேசுவதற்கு உரியவர் பேசுபவர், தன்மை இடத்தில் உரியவர் என்பதால் தன்மைச்சொற்கள் உயர்திணையில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று வாதாடலாம். அது ஒரு வகையில் மானிடவியல் நோக்கு. உண்மையில் மக்களே கேட்பவரும் என்ற முறையில் முன்னிலை சொற்களையும் உயர்திணையில் சேர்க்கலாம் என்ற முறையில் வாதாடலாம். அதற்கு இரண்டு ஆதாரங்கள் உள்ளன. மொழியியலார் (உ.ம், Lyons 1968 : 276) முதல் இரண்டு மூவிடப் பெயர்களும் மனிதர்களையே குறிக்கின்றன என்பார். மொழி அமைப்பு நோக்கில் படர்க்கை உயர்திணைச் சொற்கள் யார் என்ற வினாப்பெயரை ஏற்பது போல (அவன் / அவள் / அவர் / யார்) தன்மை இடப்பெயர்களும் (நான் / நாங்கள் யார்) முன்னிலை இடப்பெயர்களும் (நீ / நீங்கள் யார்) ஏற்பது. எனவே முன்னிலை இடப்பெயர்களையும் உயர்திணையில் சேர்த்திருக்க வேண்டும். சில விலங்குகள் மனிதர்கள் பேச்சைக் கேட்டுச் செயல்படுகிறது என்பது அவைகளின் கேட்டுச் செயல்படுத்தும் செயல்திறன் மிக மிகக் குறைவு. மனிதன் பழக்கும் சில விலங்குகள் அப்படிச் செயல்படுவதால் அந்த வாதத்தை உரையாசிரியர்களும், மொழியியலாரும் ஏற்றுக்கொள்வதில்லை”[22] என்று விளக்கம் தருகிறார்.

மேலும், முன்னிலைப் பெயர்களாக நீயிர், நீ என்னும் இரண்டனைத் தொல்காப்பியம் கூற, நன்னூல் எல்லீர், நீவிர், நீர் என்பவற்றையும் சேர்க்கிறது.

இலக்கண விளக்கம் (183), சுவாமிநாதம் (39) ஆகியன நன்னூலைப் பின்பற்றி விரவுப்பெயர்களைப் பாகுபடுத்தியுள்ளன. முத்துவீரியம் சினைப்பெயரை முதன்மைப்படுத்துகிறது. தன்மை, முன்னிலைப் பெயர்கள் இத்துனைத்து என்று சுட்டவில்லை (மு. வீ. பெயர். 28). தமிழ்க் காப்பு இயம், விரவுப்பெயர் குறித்து,

தன்மை ஆறும் முன்னிலை ஐந்தும்
தந்தை தாயெனும் முறைப்பெயர் இரண்டும்
எல்லாம் தாம்தான் இன்ன பெயரெல்லாம்
உயர்திணைப் பெயராய்த் தோன்றினும் அவைகள்
அ.ஃறிணைக் கண்ணும் வருதலால் பொதுவே (த.கா.இ.55)

என்று விளம்புகிறது. இதன்வழி, முன்னையோர் கூறும் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் ஆகியவற்றைத் தமிழ்க்காப்பு இயம் நீக்கியுள்ளமை புலப்படும்.

தொல்காப்பியம் பெயர்வகைகளை திணை அடிப்படையில் உயர்திணைப்பெயர், அ.ஃறிணைப்பெயர், விரவுப்பெயர் எனப் பாகுபடுத்த, நன்னூல் பால் அடிப்படையில் ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர், பலர்பால் பெயர், ஒன்றன்பாற் பெயர், பலவின்பால் பெயர் என்ற அடிப்படையில் பாகுபடுத்துகிறது. இவை இரண்டு வகையும் அல்லாது வேறு பிற முறைகளிலும் இலக்கணிகள் பெயரைப் பாகுபடுத்தியுள்ளனர்.

தொன்னூல் விளக்கம், பெயர்ச்சொல்லின் வகைகளை மரபு, காரணம், ஆக்கம், இடுகுறி என நால்வகைப்படுத்துகிறது (தொ. வி. 53). மேலும் அப்பெயர் வகைகளை விளக்குமுகமாக,

காரணம் இல்லன மரபு பெயரே
காரணம் காட்டிக் காரணப் பயன் கொளல்
காரணப் பெயரே காரணம் காட்டாது
அதன் பயன் கொள்வது ஆகுபெயரே
காரணம் காட்டினும் காரணப் பயன் கொளா
இடுகுறிப் பெயராம் என்ப கற்றோரே (தொ. வி. 54)

என்று குறிப்பிடுகிறது.

இனிய தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கத்தைப் பின்பற்றி பெயர்வகைகளைக் கூறுவதுடன் அவற்றிற்குரிய உதாரணங்களையும் நூற்பாவில் தந்துள்ளது. இதனை,

மரமெனும் பொதுச்சொல் இடுகுறிப் பொதுவாம்
மாமரம் எனுஞ்சொல் இடுகுறிச் சிறப்பாம்
பறவை என்பது காரணப் பொதுப்பெயர்
காகம் என்பது காரணச் சிறப்பாம்

வழிவழி வருபெயர் மரபுப் பெயராம்

ஆக்கப் பட்டதே ஆக்கப் பெயராம். (இ. த. இ. 89)

என்று விளக்குகிறது. மேலும், நன்னூல் கருத்தின் அடிப்படையில் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், சுட்டு, வினா, கிளை, சாதி, அளவு போன்ற பெயர்வகைகள் பல உள்ளன என்றும் சுட்டிக்காட்டுகிறது (இ. த. இ. 90).

அறுவகை இலக்கணம் பெயர்ச் சொல்லை இடுகுறி, காரணம் என இருவகைப்படுத்துகிறது. இடுகுறிப் பெயருக்கு வேல் என்பதையும், காரணப் பெயருக்கு வேலன் என்பதையும் உதாரணமாகத் தருகிறது (அ. இ. 193).

மேலும், பகுக்கப்பட முடியாத சொற்கள் யாவும் இடுகுறிப்பெயர்கள் என்றும், பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிபடும் பதங்கள் யாவும் காரணப் பெயர்கள் என்றும் பலர் கூறுவார்கள். இடுகுறி என்று கூறுவதனாலேயே அப்பெயரும் ஏதாவது ஒரு குறிப்புப்பற்றியே விளங்கி வருகிறது எனலாம். எந்தக் குறிப்பைக் கொண்டு அப்பெயர் வழங்கப்படுகிறது என்பதைப் பெரும்பலவர்களே அறிவர். எனினும் யாமும் அத்தகைய புலவர்களை வழிபடும் பெரும்பேறுடையோம் ஆதலின் முன் கூறப்பட்ட (வேல் என்ற) இடுகுறியும் காரணம் பற்றியதே எனக் கூறுவாம் என்றவாறு (அ. இ. 194) என்று கூறும் அறுவகை இலக்கண ஆசிரியர் 'வேல்' என்பது இடுகுறியாதல் குறித்து, 'வகரம் சத்தியைக் குறிக்கும் எழுத்தாகும். இல் எனல் உறையுள்; வகரமும் இகரமும் இணைந்தால் வே ஆகும். எனவே வ + இல் வேல் ஆயிற்று. வேல் என்ற சொல் சத்தியின் உறைவிடம் எனப் பொருள் தந்து காரணப்பெயர் ஆயிற்று. பலர் இவ்வாறே கருதுகின்றனர். யாமும் அக்கொள்கையையே ஏற்றுக் கொள்கிறோம் என்கிறார் (அ.இ.195). இவ்வாறு கூறும் இவர் ஏழாமிலக்கணத்தில் வெல் என்ற பகுதியில் இருந்தே வேல் என்ற சொல் காரணப்பெயராயிற்று என்று கூறுவதை அறுவகை இலக்கணத்தின் உரையாசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென்னூலும் அறுவகை இலக்கணத்தின் பெயர்ப்பகுப்பைச் சுட்டியுள்ளது. பெயர்ச் சொல்லின் வகைகளாகக் காரணம், இடுகுறி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. பண்பு, உறுப்பு, பயன், செயற்குறிப்பு முதலியவை பெயர்க்குறியீடுகளின் காரணமாகும். அக்காரணம் வெளிபபடையாய்ப் புலப்படாத பெயர் இடுகுறியாகும் (தென். சொற். 37) என்றும்,

காரணப்பெயர் சில இடுகுறி நிலை பெறும் (தென். சொற். 38)

என்றும் குறிப்பிடுகிறது.

தமிழ்நூலும் இடுகுறி, காரணம் என்ற பெயர்ப்பகுப்பை ஏற்கிறது. பெயர் காரணம் பற்றியே தோன்றும் எனவும், அப்பெயர்களுள் சிலவற்றின் காரணம் சொற்திரிபாகவோ, பொருட் திரிபாகவோ மறைந்துவிடின் இடுகுறி எனப்படலாம். இதனால் காரணம் தெரிந்த பின் இடுகுறிப்பெயர் காரணப்பெயர் ஆம் என்றறிக (த.நூ.59) என்று கூறுவது அறுவகை இலக்கணத்தின் கருத்தை ஒத்துள்ளமையைப் புலப்படுத்துகிறது. மேலும்,

அவையே

பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின (த. நூ. 60)

என்று நன்னூல் பாகுபாட்டையும் ஏற்கிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் பெயர்ச்சொல்லின் வகைகளை இடுகுறிப் பெயர், காரணப்பெயர், பொதுப்பெயர், சிறப்புப்பெயர், பொருட்பெயர், காலப்பெயர், இடப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர், கிளைப்பெயர், சாதிப் பெயர், சுட்டுப் பெயர், வினாப் பெயர், எண் பெயர் என்று பதினைந்து வகைப்படுத்துகிறது (இ.த.ஐந்.152).

தமிழ்க்காப்பு இயம், தொல்காப்பியத்தையும் நன்னூலையும் பின்பற்றி பெயர்வகைகளை விளக்குகிறது. உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் ஆகிய மூன்றும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயராய் வரும் எனத் தமிழ்க் காப்பு இயம் குறிப்பிடுவதுடன் (த.கா.இ.194) பிற்றை இலக்கணிகளைப் பின்பற்றி பொருட்பெயர் முதலாக தொழிற்பெயர் ஈறாகக் கூறப்பட்ட பெயர்களைத் தனித்தனியே விளக்கியுள்ளது (த.கா.இ. 195-216).

இக்காலத்தில் அறிஞர் பலரும் பல்வேறு வகையாகப் பெயர்களைப் பாகுபடுத்துகின்றமை குறித்து சூ. இன்னாசி, "பெயர்களைப் பாகுபாடு செய்யும் முறையில் தற்கால அறிஞரிடையேயும் கருத்து மாறுபாடுண்டு, டாக்டர் வேலுப்பிள்ளை பெயர்ச்சொல்லாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பகுதியாகவே அமைந்த பெயர்ச்சொல், பகுதி விகுதியாகப் பிரிப்பதற்கரிய பெயர்ச் சொல், வினை வடிவிலிருந்து உண்டாகும் பெயர்ச்சொல், பெயரினின்று அமைத்த பெயர்ச்சொல் என ஐவகையாகப் பிரித்துக்காட்டுவார். டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் பொருள் நிலை அடிப்படையில் முப்பத்தெட்டனுக்கு மேற்பகுத்துக் கூறுவார். டாக்டர் இசரயேல் தனிநிலைப்பெயர் (Substantive nouns), மூவிடப்பெயர் (Pronouns), எண்ணுப்பெயர் (Numerals), வினைப்பெயர் (Verbal nouns) குறிப்புப் பெயர் (Prominalised),

பிறவகைப்பெயர் (Other derived nouns) என ஆறாகக் காட்டுவார்.''[23] என்று சுட்டிக்காட்டுகிறார்.

வினையியல் - மரபு மாற்றம்

வினைச்சொல் பொது இலக்கணம் - மரபு மாற்றம்

அறுவகை இலக்கணம் வினைச்சொல் குறித்து,

உண்டல் உறங்கல் போதல் வரல்
அனையன பிறவும் பொதுவினை யாமே. (அ. இ. 206)

என்று குறிப்பிடுகிறது. திணை, பால், இடம், காலம் போன்றவற்றைக் காட்டாமல் தொழிலை மட்டும் உணர்த்தி நிற்றலின் பொதுவினை என்று குறிப்பிடுகிறது. இலக்கணத்தில் இவற்றைத் தொழிற்பெயர் என்றே கூறுவர் ஆதலின் இதனை வினை என்று கூறுவது மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது.

வினைச்சொல் வகைகள் - மரபு மாற்றம்

வினைச்சொல்லின் வகைகளைத் தொல்காப்பியம் உயர்திணை வினை, அ∴றிணை வினை, விரவு வினை என மூவகைப்படுத்த, நன்னூல் தெரிநிலை வினை, குறிப்பு வினை எனப் பாகுபடுத்த, இலக்கணக்கொத்து புதிய முறையில் வினைகளைத் தனிவினை, தொடர்வினை என இரு பிரிவாகப் பிரிக்கிறது.

நட, வா முதலியன முதல்நிலைத் தனிவினை, அவற்றோடு விகுதி முதலானவை கூடிவரின் தொடர் வினையாகும் என விளக்குகிறது (இ. கொ. 65). என்று கூறி, தனிவினை, தொடர்வினை ஆகியவற்றின் பாகுபாடுகளைப் பட்டியலிடுகிறது (இ. கொ. 66, 67). மேலும் வினை வகைகளாக, முதனிலை, தொழிற்பெயர், முற்று, ஈரெச்சமென்ற ஐவகைகளைச் சுட்டுகிறது (இ. கொ. 69). சுவாமி நாதம் இலக்கணக்கொத்தைப் பின்பற்றி வினை வகைகளை விளக்குகிறது (சு. நா. 47, 48). தொன்னூல் விளக்கம் வினைச் சொல்லின் வகைகளை முக்கால முற்றுவினை, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினை முற்று, ஈரெச்சம், வினைக்குறிப்பு என வகைப்படுத்துகிறது (தொ. வி. 105). அறுவகை இலக்கணம் பொதுவினை, தன்வினை, பிறவினை ஆகியவற்றைச் சுட்டுகிறது (அ. இ.205-207).

தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள் - மரபு மாற்றம்

தொல்காப்பியம் தன்மைப்பெயரை குறிப்பிட்டதைப் போலவே தன்மை வினையையும் உயர்திணையில் குறிப்பிடுகிறது. நன்னூல் விரவுத்திணையில் சேர்க்கிறது. தொல்காப்பியம் திணை அடிப்படையில் வினைகளை விளக்க நன்னூல்

பால், எண் அடிப்படையில் விளக்குகிறது. தொல்காப்பியம் தன்மைப் பன்மை வினைமுற்றுகளாக அம், ஆம், எம், ஏம், உம் ஊர் கடதற ஆகியவற்றைக் குறிப்பிட, நன்னூல் இவற்றுடன் ஓம் என்பதையும் சேர்க்கிறது. மேலும் அவை வரும் இடத்தையும் குறிப்பிடுகிறது (நன். 332).

இலக்கண விளக்கம் (இ. வி. 237), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 106), சுவாமிநாதம் (சு. நா. 50), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. 133), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 308) ஆகியன நன்னூலைப் பின்பற்றி தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகளைக் கூறுகின்றன.

முத்துவீரியமும், தென்னூலும் தொல்காப்பியம் கூறும் விகுதிகளைச் சுட்டினாலும் நன்னூல் கூறும் அவ்விகுதிகள் வரும் இடங்களையும் சுட்டுகின்றன (மு.வீ.வினை. 6-8), (தென். சொற். 108). இலகு தமிழ் ஐந்திலக்கணம் அம், ஆம், எம், ஏம், ஓம் என்பவற்றைக் குறிப்பிடுகிறது (இ. த. ஐந். 260) தமிழ்நூல்,

மகர இறுதி தன்மைப் பன்மை (த. நூ. 94)

என்கிறது. மேலும், தன்மைப் பன்மை என்பது தன்னோடு முன்னிலையாரையோ, படர்க்கை யாரையோ குழுப்படுத்தி உரைப்பது என விளக்கம் தருகிறது (த. நூ. 95). மேலும் கும், டும், தும், றும் எனத் தன்மைப் பன்மையைச் சுட்டல் பழமைப் பாங்கின என்று கூறுகிறது (த. நூ. 96). தமிழ்க் காப்பு இயமும் கும், டும், தும், றும் ஆகியவை பழங்கால வழக்கமாக இருந்து தற்போது வழக்கிறந்த நிலையைப் பதிவு செய்துள்ளது (த. கா. இ. 309).

தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்

தொல்காப்பியம் தன்மை ஒருமை வினைமுற்றுகளாக கு, டு, து, று, என், ஏன், அல் என்பவற்றைக் குறிப்பிட, நன்னூல் அவற்றோடு அன் விகுதியைச் சேர்க்கிறது (நன். 331).

இலக்கணவிளக்கம் (இ. வி. 237), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 111), சுவாமிநாதம் (சு. நா. 50), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. 133), ஆகியன நன்னூலைப் பின்பற்றி தன்மை ஒருமை விகுதிகளைக் குறிப்பிடுகின்றன. இலகு தமிழ் ஐந்திலக்கணம் அல் விகுதியை நீக்கி ஆன் விகுதியைச் சேர்க்கிறது (இ. த. ஐந். 260). தமிழ் நூல் ஏன் எனும் இறுதி தன்மையொருமை என்றும், அல், என் என்பன தொன்மையான இறுதிகள் என்றும் அன் இடைக்காலத்து இறுதி என்றும் கூறுகிறது (த. நூ. 93). மேலும் கு, டு, து, று இறுதி தன்மை ஒருமை சுட்டல் பழமைப் பாங்குடைத்து எனக் கூறுகிறது (த. நூ. 96). தமிழ்க் காப்பு இயம், தன்மை ஒருமை வினைமுற்றுகளாக என், ஏன், அன், அல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. மேலும் கு,

டு, து, று கிளவிகள் தன்மை ஒருமைக்கு வருவது பழங்கால வழக்கம் எனக் குறிப்பிடுகிறது (த. கா. இ. 309).

செய்கு, செய்கும் வினைமுற்றுகள்

தன்மை ஒருமையில் செய்கு என்னும் வாய்பாடு வினையுடன் முடிவதைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. நன்னூல் செய்கும் என்னும் பன்மையிலும் வினையொடு முடியும் என்பதைப் பதிவு செய்துள்ளது (நன். 333).

இலக்கண விளக்கம் (இ. வி. 237), சுவாமிநாதம் (சு. நா. 50) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன. தென்னூலும் கு, கும் விகுதிகள் பிறிதொரு வினையொடு முடியினும் முற்றுவினையேயாம் (தென்.சொற். 111) என்று குறிப்பிடுகிறது.

உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று

தொல்காப்பியம் உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதிகளாக அர், ஆர், ப, மார் என்பவற்றைக் குறிப்பிட தொன்னூல் விளக்கம் அர், ஆர் விகுதிகளையும், கள் விகுதியையும் குறிப்பிடுகிறது (தொ. வி. 105). இலகு தமிழ் ஐந்திலக்கணம் அர், ஆர், ப என்பவற்றோடு கள் விகுதியை இணைக்கிறது (இ.த.ஐந்.260) தென்னூலும், தமிழ்க்காப்பு இயமும் அர், ஆர், ப, மார் என்பவற்றோடு கள் விகுதியை இணைக்கின்றன (தென். சொற். 110), (த. கா. இ. 304). மேலும் தென்னூல் மார் ஈற்றுச் சொல் பிறிதொரு வினையொடு முடியினும் முற்றெச்சமாகா. முற்று வினையேயாம் என்கிறது (தென். சொற். 111). தமிழ்நூல்,

ர, கள் இறுதி பலர்பாற் சொல்லே
பம்மார் இறுதிப் பண்டைப் பலர்பால் (த. நூ. 90)

என்கிறது.

இவை மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கன. இன்றைய வழக்கில் ப, மார் ஆகியவை வழக்கொழிந்துள்ளமை கருதத்தக்கது.

குறிப்பு வினைமுற்று – மரபு மாற்றம்

தொல்காப்பியம் குறிப்பு வினைமுற்றையும் உயர்திணைக் குறிப்பு வினைமுற்று, அஃறிணைக் குறிப்பு வினைமுற்று எனத் திணை அடிப்படையில் பிரித்து பொருண்மை அடிப்படையில் விளக்குகிறது. நன்னூல் திணை அடிப்படையில் வினைச்சொல்லை விளக்கவில்லை ஆதலால் பொதுவாகக் குறிப்பு வினைமுற்று குறித்து,

பொருள் முதல் ஆறினும் தோற்றி முன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே (நன். 321)

என்கிறது.

இனிய தமிழ் இலக்கணம் குறிப்பு வினைமுற்று குறித்து,

செய்வோ னுடனே செயலையும் குறிப்பாய்
உணர்த்தும் குறிப்பு வினை அறுபகுப்பினும் (இ. த. இ. 125)

என்கிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் நன்னூலைப் பின்பற்றி குறிப்பு வினையை விளக்குகிறது (இ. த. ஐந். 251). தொன்னூல் விளக்கம், வினைக்குறிப்பு குறித்து, வினைக்குறிப்பு வினை போன்று விகுதி பெற்று இடம், பால் உணர்த்தும். அதன் பகுபதப்பகுதி பெயராக அமையும் என்கிறது (தொ. வி. 123). தென்னூல், தொல்காப்பியம் மற்றும் நன்னூல் கருத்தை இணைத்து குறிப்பு வினையை விளக்கியுள்ளமையை,

குறிப்பு வினையே கூறிய முறையான்
பொருளது பண்பும் உருவும் ஒப்பும்
உடைமைத் தன்மையும் நிலத்தது தொடர்பும்
அன்னவும் மனனொடு பொறிப் புலனாக
அறுவகைப் பெயரடிப் படையில்முக் காலமும்
குறிப்பொடு விளங்க நெறிப்பட வருமவை
காலம் விரிவுழி ஆக்கமொடு சிவணும் (தென். சொற். 106)

என்னும் சூத்திரம் விளக்கும்.

தமிழ்நூல் குறிப்புவினை குறித்து, பெயரினியல்பே போல் ஆறு கூறான பெயர்களின் பின் மூவிடத்திற்கும் உரிய இறுதி நிலைகள் ஏறி வரும் ஒருவகைச் சொற்களைக் குறிப்பாகக் காலம் காட்டுவதாகக் கொண்டு குறிப்புவினை என்று தொன்மைச் சான்றோர் வகுத்துரைப்பர் என்று விளக்குகிறது (த. நூ. 351).

உயர்திணைக் குறிப்பு வினைமுற்றிற்குரிய ஈறுகள்

தெரிநிலை வினைமுற்றுக்கு வரும் ஈறுகள் அனைத்தும் உயர்திணையில் குறிப்பு வினைமுற்றுக்கும் வரும் என்பது தொல்காப்பியர் கருத்து (தொல். சொல்.215). ஆனால் தென்னூல்,

குறிப்பு வினை அவற்றுள் ஏற்பன ஏற்கும் (தென். சொற். 112)

என்கிறது. ப, மார் போன்ற விகுதிகள் குறிப்பு வினைமுற்றில் வருதல் பொருந்தாது என்பதைக் கருத்தில் கொண்டு இந்நூலாசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

இதன் அடிப்படையிலேயே தமிழ்க் காப்பு இயமும் உயர்திணைப் படர்க்கை ஈறுகளுள் ப, மார், கள், உம் போன்றவை குறிப்பு வினையில் வருதலில்லை என்பதைப் புலப்படுத்தியுள்ளது (த. கா. இ. 304).

அஃறிணை வினைகள்

தெரிநிலைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதிகள்

தொல்காப்பியம் அ, ஆ, வ ஆகிய விகுதிகளை அஃறிணையில் தெரிநிலைப் படர்க்கைப் பன்மை விகுதிகளாகக் குறிக்கிறது (தொல். சொல். 216). ஆனால் நன்னூல் 'வ' வை நீக்கி அ, ஆ என்பனவற்றை மட்டும் குறிப்பிட்டுள்ளது. மேலும் 'ஆ' ஈறு எதிர்மறைப்பொருளில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகிறது (நன். 329). இலக்கண விளக்கம் (இ. வி. 234), சுவாமிநாதம் (சு. நா. 50), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. 133), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ. த. ஐந். 260) ஆகியன அ, ஆ ஆகியவற்றை அஃறிணைப் பலவின்பால் வினைமுற்று விகுதிகளாக ஏற்கின்றன. 'ஆ' எதிர்மறைக் கண்ணதாகும் என்பதை இலக்கண விளக்கம் (இ. வி. 234), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ. த. ஐந். 260), தென்னூல் (தென். சொற். 115) ஆகியவை ஏற்றுக் கொண்டுள்ளன. தமிழ்க்காப்பு இயம் பலவின்பால் விகுதிகளைச் சுட்டவில்லை எனினும் இல், அல், ஆ என்னும் கிளவிகள் எதிர்மறைப் பொருளைத் தரும் என்கிறது (த. கா. இ. 322). தமிழ்நூல் அ, வை, கள் என்பவற்றைப் பலவின்பால் விகுதிகளாகக் குறிப்பிடுவது (த. நூ. 91) இக்கால மரபு நோக்கியதாகும்.

அஃறிணை வினைகள்

தெரிநிலைப் படர்க்கை ஒருமை வினைமுற்று

தொல்காப்பியம் து, று, டு ஆகியவற்றைப் படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்றாகக் குறிக்கிறது. தொன்னூல் விளக்கம், ஒன்றன்பால் விகுதி 'து' என்றும் இஃது வலி மிகத் து, று, டு ஆதல் உண்டு என்கிறது (தொ. வி. 124). தமிழ்நூல் து, று ஆகிய இரண்டை மட்டும் சுட்டுகிறது (த. நூ.92).

அஃறிணைக் குறிப்பு வினைமுற்றிற்குரிய ஈறுகள்

அஃறிணைத் தெரிநிலை வினைமுற்றுக்குக் கூறப்பட்ட ஈறுகளே அஃறிணைக் குறிப்பு வினைமுற்றிற்கும் வரும் என்று தொல்காப்பியம் (சொல். 221) குறிப்பிட,

நன்னூல் ‘டு’ விகுதி குறிப்பு வினைமுற்றில் வரும் என்று கூறுவது (நன். 328) மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது. ‘டு’ விகுதி தெரிநிலையில் வராது என்பதை இதன் மூலம் நன்னூல் குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம் (இ.வி.234), தென்னூல் (தென். சொற். 115) ஆகியவை இக்கருத்தை ஏற்கின்றன.

தொன்னூல் விளக்கம், ஒன்றன் பால் விகுதி து என்றும் இ∴து வலி மிகத் து, று, டு ஆதல் உண்டு என்றும் ஐ, ய், ர் ஈற்ற பெயர்கள் வினைக்குறிப்பு ஆகும்போது துகரத்தின் முன்மெய் இரட்டும் (தொ. வி. 124) என விளக்குகிறது.

தமிழ்க் காப்பு இயம் உயர்திணை அ∴றிணைக் குரிய தெரிநிலை, குறிப்பு வினைக்குரிய ஈறுகளைப் பட்டியலிடுகிறது. படர்க்கை அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், து, று, டு, அ, ஆ, வ, கள், உம் என்னும் பதினாறு கிளவிகளுள், டுகரம் ஒழிந்த பதினைந்து கிளவிகளும் படர்க்கையில் தெரிநிலை வினைமுற்றிலும், ப, வ, ஆ, மார், கள், உம் ஒழிந்த பத்து ஈறுகளும் படர்க்கையில் குறிப்பு வினைமுற்றிலும் வரும் என்று கூறுகிறது (த. கா. இ. 304).

விரவு வினைகள்

தொல்காப்பியம் விரவு வினைகளாக, முன்னிலை, வியங்கோள், வினையெஞ்சு கிளவி, இன்மை செப்பல், வேறு என் கிளவி, செய்ம்மன, செய்யும், செய்த ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (தொல். சொல். 222).

நேமிநாதம் அன்று, அல்ல, வேறு, இல்லை, உண்டு, வியங்கோள் என்று சொல்லப்பட்ட ஆறும் தன்மை, முன்னிலை, படர்க்கையென்னும் மூன்றிடத்தும் இருதிணை ஐம்பாலோடும் நடைபெற்றியலும் என்கிறது (நேமி. 69).

நன்னூல், இருதிணைப் பொது வினைகளாக,

தன்மை முன்னிலை வியங்கோள் வேறு இலை
உண்டு ஈர்எச்சம் இருதிணைப் பொதுவினை (நன். 330)

என்கிறது.

தொல்காப்பியம் தன்மையை உயர் திணையில் குறிப்பிட, நன்னூல் விரவுத் திணையில் குறிப்பிடுகிறது. மேலும், உண்டு என்பதையும் சேர்க்கிறது. தொல்காப்பியம் குறிப்பிடும் செய்ம்மன, செய்யும், செய்த ஆகிய மூன்று வாய்பாடுகளை பெயரெச்சம் எனக் குறித்து விரவுவினையாகக் குறிப்பிடுகிறது.

மேலும்,

வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன. (நன். 339)

எனக் குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றி விரவு வினைகளை விளக்குகிறது. (இ. வி. 236, 240)

இலக்கணக்கொத்து விரவுவினைகளாக,

வேறுஇல்லை உண்டுயார் வேண்டும் தகும்படும்
வினைபெயர் எச்சம் வியங்கோள் பத்தும்
திணைபால் இடம்எலாம் செல்லும் என்ப (இ. கொ. 85)

என்று பத்து வகைகளைக் குறிப்பிடுகிறது.

'யார்' என்னும் வினாவினை உயர்திணைப் படர்க்கைக்கு மட்டும் உரியதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அது பொது வினையில் வரும் என்று இலக்கணக்கொத்து குறிப்பிடுகிறது.

" 'நானார் என்உள்ளம் ஞானங்கள் ஆர்
என்னை ஆர் அறிவார்' திருவா. கோத்தும்பி 2

என்றும்,

'ஊதைகூட் டுண்ணும் உகுபனி யாமத்தெம்
கோதைகூட் டுண்ணிய தான்யார்மன் - போதெலாம்
தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்
தூதொடு வாராத வண்டு'

என்றும், இக்காரியம் செய்தற்கு நீ யார் என்றும், அஃறிணை இருபாற்கண்ணும், ஏனை ஈரிடத்தினும் வருதலின், எல்லாவற்றிற்கும் உரித்து என்க"[24] என்று இலக்கணக்கொத்து ஆசிரியர் (சாமிநாத தேசிகர்) விளக்கம் தருகிறார்.

சுவாமிநாதம், உண்டு, இன்மை, அன்மை, தகும், படும், வேண்டும், செயும், யார், வேறு, எவன் ஆகிய குறிப்பு வினை முற்றுகளும், அல், ஆல், உம், மார், ஐ, க, ய, ர ஆகிய எட்டு விகுதிகளை உடைய வியங்கோளும், எச்சமும் இருதிணைப் பொதுவினைகள் என்கிறது (சு. நா. 51).

தென்னூல், விரவு வினை குறித்து,

முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
செய்த செய்கின்ற செய்யுமென் பெயர்க் குறை
வேறிலை உண்டென வருவென திணை யினும்
பாலினும் இடத்தினும் பொதுப்பட வருமே. (தென். சொற். 117)

என விளக்குகிறது. மேலும், விரவு வினைகளின் பொதுமையை முடிக்குஞ் சொல்லாக மேல்வரும் சிறப்புப் பெயர், சிறப்பு வினைகள் போக்கி ஒன்றற்கு உரியதாகச் செய்யும் (தென். சொற். 118) என்கிறது. தமிழ்நூல் இல்லை, வேறு, உண்டு, வேண்டும் என்பன இருதிணை ஐம்பால் மூவிடம் விரவும் என்கிறது (த. நூ. 103). தமிழ்க் காப்பு இயம்,

வேறிலை உண்டு மூன்றும் ஐம்பால்
மூவிடம் வரூஉம் வினைக்குறிப் பாகும் (த. கா. இ.176)

வேண்டும் வேண்டா கிளவிக டாமும்
ஐம்பால் மூவிடம் வேண்டும் மொழியே (த. கா. இ. 177)

என்கிறது. இவ்வாறு விரவு வினைகளை ஒவ்வொரு நூலும் சிற்சில வேறுபாடுகளுடன் குறிப்பிடுகின்றன.

வியங்கோள் வினை வாரா இடங்கள்

வியங்கோள்வினை முன்னிலை, தன்மை இடங்களில் வராது படர்க்கையில் மட்டுமே வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிட, பிற்றை இலக்கணிகள் மூவிடங்களிலும் வரும் எனச் சுட்டுகின்றனர். (நேமி. 69, நன். 338, இ. வி. 239, தொ. வி. 116, இ. த. இ. ப. 157-158, இ. த. ஐந், 260, தென். சொற். 128, த. கா. இ. 316) இது குறிக்கத்தக்க மரபு மாற்றமாகும்.

'செய்யும்' என்னும் முற்று வாரா இடம்

நிகழ்காலத்துக்குரிய செய்யும் என்னும் வினைமுற்று பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை ஆகியவற்றிற்கு வாரா என இலக்கணிகள் சுட்ட, தமிழ்நூல்,

செய்யும் என்னும் முற்று வினைச்சொல்
அஃறிணை இருபாற் கல்லது செல்லா. (த. நூ. 105)

என்று கூறுவது மரபு மாற்றமாகும்.

வினையெச்ச வாய்பாடுகள்

தொல்காப்பியம் வினையெச்ச வாய்பாடுகளாக,

> **செய்து செய்யூச் செய்பு செய்தென**
> **செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கு என**
> **அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி (தொல். சொல். 228)**

என்று குறிப்பிடுகிறது. மேலும், வினையெச்ச ஈறுகளாக,

> **பின்முன் கால்கடை வழி இடத்(து) என்னும்**
> **அன்ன மரபின் காலம் கண்ணிய**
> **என்ன கிளவியும் அவற்றுஇயல் பினவே (தொல். சொல். 229)**

என்று குறிப்பிடுகிறது.

ச.அகத்தியலிங்கம் பின், முன் போன்றவற்றை இடைச்சொற்களாகக் கருதுகிறார். இது குறித்து அவர், ''வினையெச்சங்கள் எல்லாம் வினைச் சொல்லிலிருந்து உருவாவன. இதனால்தான் வினையெச்சங்களை வினையியலில் குறிப்பிட்டுச் செல்வார் தொல்காப்பியர். செய்து, செய்யூ போன்ற வினையெச்ச வாய்பாடுகள் அனைத்தும் வினைச்சொல்லிலிருந்து உருவானவை. ஆனால் பின், முன் போன்றவை இடைச் சொற்களே. அவை தனியாக நின்று வினைச்சொல்லை ஏற்று வரினும் அவை வினையெச்சமாகக் கருதப்பட மாட்டா. ஆனால் காலத்தைக் காட்டக் கூடிய வினைகளோடு ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று வருமானால் அவற்றை வினையெச்சம் போன்று கருதலாம். அவற்றைத்தான் தொல்காப்பியர் இச்சூத்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என எண்ணலாம்''[25] என்று விளக்குகிறார்.

மேலும் அவர் இவ்வினையெச்சங்களை மூவகைகளாகப் பகுக்கிறார். ''வினையெச்சங்களையும் காலவெச்சம் (Verbal participle), குறையெச்சம் (Infinitive), நிபந்தனை எச்சம் (Conditional) என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். தொல்காப்பியர் இப்பிரிவு பற்றிக் குறிப்பிடவில்லை. வினை கொண்டு முடிகின்ற பண்பிலும், பிற பண்புகளிலும் ஒன்றாக வருகின்ற எல்லா வினையெச்சங்களையும் தொகுத்து வாய்பாடுகளாகக் குறிப்பிட்டுச் செல்லுகின்றாரேயன்றி இவற்றைப் பொருள் அடிப்படையிலோ, அல்லது பிற அடிப்படையிலோ பாகுபாடு செய்ததாகத் தெரியவில்லை''[26] என்று குறிப்பிடுகிறார். தொல்காப்பியம் வினையெச்ச வாய்பாடுகளைத் தனியாகவும், வினையெச்ச ஈறுகளைத் தனியாகவும் குறிப்பிட, நேமிநாதம் இரண்டையும் சேர்த்து வினையெச்சங்களாகத் தருகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் செய்யூ, செய்யியர் என்னும் வாய்பாடுகளையும், கால், கடை, வழி, இடத்து

ஆகியவற்றையும் நேமிநாதம் குறிப்பிடவில்லை. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் குறிப்பிடும் செய்யா (எழுத்து 222) எனும் வாய்பாட்டையும் பான், பாக்கு என்பவற்றையும் சேர்த்துள்ளது (நேமி. 68).

நன்னூல், வினையெச்ச வாய்பாடுகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றுள் செயற்கு என்பதை நீக்கி வான், பான், பாக்கு ஆகிய மூன்றையும் இணைத்துள்ளது. மேலும், முன்னர் உள்ள ஐந்தாகிய செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென ஆகிய ஐந்தும் இறந்தகாலம் காட்டும் எனவும், நடு நின்ற ஒன்றாகிய செய நிகழ்காலம் காட்டும் எனவும், பின்னைய ஆறாகிய செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு ஆகியன எதிர்காலம் காட்டும் என்றும் குறிப்பிடுகிறது (நன். 343).

தொல்காப்பியம் குறிப்பிடும் ‘செயற்கு’ என்பது வினையெச்சமா அல்லது செயல் என்னும் வாய்பாட்டுத் தொழிற்பெயருக்குப் பின்னர்க் குகர வேற்றுமை வந்ததால் ஏற்பட்ட வேற்றுமைச் சொல்லா? என்பதில் அறிஞர்களிடையே ஐயப்பாடு நிலவுகிறது. ச.அகத்தியலிங்கம், “உரையாசிரியர்கள் பலரும் இதனை வினையெச்சமாகக் கொள்ளினும் நான்கன் உருபேற்ற தொழிற்பெயராகக் கொள்ளுதலே பொருத்தம் என்று தோன்றுகிறது”[27] என்கிறார்.

இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றி வினையெச்ச வாய்பாடுகளை விளக்குகிறது (இ.வி.246). தொன்னூல் விளக்கம் வினையெச்ச வாய்பாடுகளைக் கூறாது, வினையெச்ச விகுதிகளைக் குறிப்பிடுகிறது. இ, உ, என, ஊ, பு, ஆ என்பன வினையெச்ச விகுதிகளாகும். இரு கருத்தா வந்தால் அகரம் நிகழ்காலத்தையும், ஒரு கருத்தா வரும்போது அகரம் எதிர்காலத்தையும் குறிக்கும் வினையெச்ச விகுதியாம். மேலும், எதிர்கால வினையெச்ச விகுதிகளாக இல், இன், இய, இயர், வான், பான், பாக்கு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. (தொ. வி. 119) மேலும், இ, உ, ஊ, பு, ஆ என்னும் இறந்த கால வினையெச்சங்களும், வான், பான், பாக்கு என்னும் எதிர்கால வினையெச்சங்களும் இன்னொரு வினையைக் கொண்டு முடியும்போது ஒரே கருத்தாவைப்பெறும். பிற விகுதிகள் இரு கருத்தா பெறும் என்று குறிப்பிடுகிறது (தொ. வி. 120). மேலும், எதிர்மறை வினையெச்ச விகுதிகளாக ஆமல், ஆகு, ஆமை, ஆ என்னும் நான்கனைக் குறிப்பிடுகிறது (தொ. வி. 121).

முத்துவீரியம் வினையெச்ச வாய்பாடுகள் குறித்த தொல்காப்பிய (நூ. 228) நூற்பாவை எடுத்தாண்டுள்ளது. அவற்றோடு பின், முன், கால், கடை, வான், பான், இடம் ஆகியவற்றையும் குறிப்பிடுகிறது (மு. வீ. வினை. 21, 22).

சுவாமிநாதம் செய்து, செய்பு, செய்யா, செய்யூ ஆகிய வாய்பாட்டு வினையெச்சங்கள் இறந்தகாலத்தையும், செய்ய, செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு ஆகிய வாய்ப்பாட்டு எச்சங்கள் எதிர் காலத்தையும் காட்டும். வினை கொண்டு

முடிவது வினையெச்சமாகும். அன்றி, இன்றி, ஏல், ஆல் முதலியனவும் வினையெச்சத்தின் தன்மையைப் பெறும் (சு. நா. 53) என்கிறது.

இனிய தமிழ் இலக்கணம் வினையெச்ச விகுதிகளாக,

அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து
குறிப்பு வினையின் எச்ச விகுதிகள் (இ. த. இ. 131)

என்கிறது. இலகு தமிழ் ஐந்திலக்கணம், நன்னூலைப் பின்பற்றி வினையெச்ச வாய்பாடுகளை விளக்குகிறது (இ. த. ஐந். 281).

தென்னூல், வினையெச்ச வாய்பாடுகள் குறித்து தொல்காப்பியம் மற்றும் நன்னூல் கூறும் வாய்பாடுகளை இணைத்துக் கூறியுள்ளது. மேலும், பாக்கு, வழி ஆகியவற்றை நீக்கியுள்ளது (தென். சொற். 133). தமிழ்நூல் செய்து, செய்ய, செய்யின் என்று இறப்பு, நிகழ்வு, எதிர்வு முதலிய மூன்றுகால முறைக்குத்தக வினையெச்சம் மூவகையாம் என்கிறது (த. நூ. 110).

தமிழ்க் காப்பு இயம், வினையெச்ச வாய்பாடுகள் குறித்து,

செய்து செய்யூ செய்தென செயற்கு
செயசெயின் அவ்வகை வினையின் எச்சமும்
மூன்றிரண் டொன்றுமுக் காலமும் முறைதரும் (த. கா. இ. 347)

எனக் குறிப்பிடுகிறது. எனினும் அவற்றுள் முன்னிலை ஐந்தாகிய செய்து, செய்யூ, செய்தென, செயற்கு, செய என்னும் ஐவகை வினை எச்சங்களும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய காலத்தைக் காட்டும் முற்றுக்களைக் கொண்டு முடியினும் தம் இயல்பான காலத்தில் மாறுதல் செய்யாது என்று முடியும் முற்றுக்கு ஏற்பக் காலம் மாறாது எச்சம் தன்னிலையிலேயே நிற்றலை உணர்த்திற்று (த. கா. இ. 348). மேலும், வினை எச்சத்தின் இறுதிக்கண் இகரமும், யகரமும் வருமானாலும் அவை உகர ஈற்று எச்சமான செய்து என்னும் எச்சமாக அடங்கி நிற்கும். ஏனெனில் இகர இறுதியும், யகர இறுதியும் எதிர்மறையில் உகர ஈற்று எச்சத்தையே ஏற்று வருகின்றன (த.கா.இ.349) என்று குறிப்பிடுகிறது.

மேலும் பின் முன் எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவை (தொல். சொல். 229) எடுத்தாண்டுள்ளது (த. கா. இ. 350). அவற்றுள் முன் என்னும் உருபன் செய்யா, செய்யும் கிளவிகளோடு கூடி ஈறாகவும், பின் செய்த கிளவியொடு கூடி ஈறாகவும், ஏனைய கால், கடை, வழி, இடத்து ஆகியவை செய்த, செய்யா, செய்யும் கிளவிகளோடு ஈறாகவும் வந்து முற்றொடு முடியும் என்று குறிப்பிடுகிறது. (த.கா.இ.351) இவை தவிர எதிர்மறை வினை எச்சங்கள் (த. கா. இ. 352), குறிப்பு

வினையெச்சம் (த. கா. இ. 353), குறிப்பெச்சம் ஏற்கும் ஈறுகள் (த. கா. இ. 354), குறிப்பு எதிர்மறை வினையெச்சம் (த. கா. இ. 356) ஆகியவை குறித்தும் தமிழ்க் காப்பு இயம் பேசுகிறது.

வினைமுதல் கொண்டு முடியும் எச்சங்கள்

தொல்காப்பியம் செய்து, செய்யூ, செய்பு ஆகியவை வினைமுதலைக் கொண்டு முடியும் என்று கூற, நன்னூல் செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்னும் நான்கும், இறுதியில் உள்ள வான், பான், பாக்கு என்னும் மூன்றும் வினைமுதல் வினையைக் கொண்டு முடியும் என்கிறது (நன். 344). இலக்கண விளக்கமும், தென்னூலும் செய்து, செய்பு, செய்யூ, செய்யா ஆகியவை வினைமுதல் கொண்டு முடியும் என்கின்றன (இ.வி.247,தென். சொற். 135). இனிய தமிழ் இலக்கணம் நன்னூலைப் பின்பற்றியுள்ளது (இ. த. இ. ப. 157). இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

வினையெச்சம் முதற்பெயர் கொடு முடியின்
வினையெச்சம் முதற்கொண்டு முடிதலாம் (இ.த.ஐந்.282:1-2)

என்கிறது.

தமிழ்நூல்,

செய்தென் எச்சம் தன்முதல் வினையுறும் (த.நூ.111:1)

என்கிறது.

மரபு வளர்ச்சி

பெயரியல்

குறிப்பும், வெளிப்படையும்

சொற்கள் பொருள் உணர்த்தும் பொழுது குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பொருள் உணர்த்தும் என்று தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல் குறிப்பால் பொருள் தருவன எவை எவை என்பதைச் சுட்டிக் காட்டி, அவை அல்லாதன வெளிப்படை என விளக்கம் தருகிறது. இது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே;
முதல்தொகை குறிப்போடு இன்னபிறவும்
குறிப்பின் தருமொழி; அல்லன வெளிப்படை (நன். 269)

என்னும் சூத்திரம் வழி நன்னூல் குறிப்பு, வெளிப்படையை விளக்குகிறது.

இலக்கண விளக்கம், நன்னூல் தரும் குறிப்புச் சொற்களுள் ஒன்றொழி பொதுச் சொல் தவிர்ந்த பிறவற்றைக் குறிப்பு மொழிகளாகக் குறிப்பிடுகிறது (இ. வி. 170).

முத்துவீரியம், நன்னூலைப் பின்பற்றி குறிப்பு, வெளிப்படையை விளக்கியுள்ளது (மு. வீ. பெயர். 19).

சுவாமிநாதம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி சொல் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பொருள் உணர்த்தும் என்று கூறுகிறது (சு.நா.34). மேலும், இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி குறிப்பு மொழிகளைக் கூறுவதோடு, பொருள்மாற்று என்பதனையும் குறிப்பு மொழியாகச் சேர்த்துள்ளது (சு. நா. 36).

தென்னூல், குறிப்பு மொழிகள் குறித்து மிக விரிவாகப் பேசுகிறது. முப்பது குறிப்புச் சொற்களைக் கூறியுள்ளது.

1. ஒருவரையும், ஒன்றனையும் உயர்த்திப் பன்மை வாய்ப்பாட்டால் கூறுவனவும்
2. கருத்துப் புலப்படக் கூறும் வினா விடையும்
3. ஒன்றொழி பொதுச்சொல்லும்
4. பல பொருள் ஒரு சொல்லாய் வருவனவும்
5. சுட்டுச் சொல்லாற் பொருள் உணரப்படுவனவும்
6. ஒன்றைக் கூற அதன் இனமும் தெரியுமாறு வருவனவும்
7. ஐந்திணை ஒழுகலாறு பற்றி வரும் சில பெயர்களும்
8. பால் பற்றி வரும் சில பெயர்களும்
9. ஒருவர் என்னும் பொதுப்பிரி பாற் சொல்லும்
10. விரவுப்பெயர்களும்
11. விரவு வினைகளும்
12. பிற சொல்லான் பிறிதொரு பெயர்நிலை உணர்த்தும் சொல்லும்
13. திசைச்சொற்களும்
14. சில காலக்கிளவிகளும்
15. தடுமாறு வினைகளும்
16. பய வினைகளும்
17. ஆகுபெயர்களும்
18. அன்மொழித்தொகையும்
19. வினைக் குறிப்புச் சொற்களும்
20. குறிப்பிசை இடைச்சொற்களும்
21. பல்வகை எச்சங்களும்
22. முன்னக்கிளவிகளும்

23. செய்யுள் விகாரங்களும்
24. தொன்னெறி மரபாக வரும் பழமொழி போல்வனவும்
25. மந்திரக் குறிப்புச் சொற்களும்
26. பெயர்நிலை வழக்காகிய புனை மொழிகளும்
27. ஐவகை உள்ளுறைகளும்
28. முதற்குறிப்பும், தொகைக் குறிப்பும் பற்றி வருவனவும்
29. தொனி பற்றி வருவனவும்
30. அங்கதம் முதலாய பிறவும்

தம்பொருளை நேர்பட உணர்த்தாமல் குறிப்பால் உணர்த்துவனவாகும். குறிப்புச் சொல் அல்லாத பிற யாவும் வெளிப்படைச் சொற்களாகும் என விளக்குகிறது (தென். சொற். 28). குறிப்பு மொழிகள் குறித்த தென்னூலின் விரிவான பார்வை மரபு வளர்ச்சியில் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றுள்ளது.

பெயர்ச்சொல் இலக்கணம்

தொல்காப்பியம் பெயர்ச்சொல்லுக்குத் தனியாக இலக்கணம் வகுக்கவில்லை. பெயர்ச்சொல் வேற்றுமையுருபு ஏற்கும் என்றும், வினையாலணையும் பெயர் தவிர்ந்த பிற பெயர்கள் காலம் காட்டாது எனவும் வேற்றுமையியலில் கூறி, பெயரியலில் பெயர்ச்சொல் உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை ஆகிய மூன்றனுக்கும் உரிமை உடையனவாய் வரும் எனச் சுட்டிச்செல்கிறது.

நன்னூலே, பெயர்ச்சொல்லுக்கு விரிவான விளக்கம் தருகிறது.

இடுகுறி காரண மரபோடு ஆக்கம்
தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து ஒன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே (நன். 275)

என்று விளக்குகிறது.

இலக்கணவிளக்கம் (இ.வி.176), நன்னூலைப் பின்பற்றி பெயர்ச்சொல்லை விளக்குவதோடு ‘பொருள் புலப்படுப்பன பெயர்’ என்னும் கருத்தையும் சேர்த்துள்ளது. தொன்னூல் விளக்கமும், சுவாமிநாதமும் நன்னூலை அடியொற்றி பெயர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூறுகின்றன (தொ. வி. 53), (சு. நா. 38).

தென்னூல், பெயர்ச்சொல்லின் இலக்கணத்தை விளக்குவதில் நன்னூலில் இருந்து சற்றே மாறுபடுகிறது. காரணம் வெளிப்படையாகவும் அன்றி மறைந்தும், வினையான் தம்நிலை வேறுபடும் தன்மையினவாகவும், காலம் இன்மையுமாகி

உள்பொருள், இல்பொருள், காட்சிப் பொருள், கருத்துப்பொருள் ஆகியவை பற்றிய குறியீடாக அமைந்து திணை, பால் இடங்களுள் ஒன்றற்குரியவாயும், பொதுவாயும் உரிச்சொற்களான் ஆக்கமுற்று இலங்குவன பெயர்ச்சொற்களாகும் என்று கூறுகிறது (தென். சொற். 36).

தமிழ்க் காப்பு இயம், தொல்காப்பியரின் திணை அடிப்படையிலான பெயர்ப் பாகுபாட்டை ஏற்கிறது (த. கா. இ.193). மேலும், நன்னூல் முதலான இலக்கணிகளின் கருத்துகளின் அடிப்படையில் பெயர்ச்சொல்லின் இயல்பு குறித்து,

அவைதாம்
பொருளிடம் காலம் சினைகுணம் தொழிலென
அறுவகைப் பெயராய் வருத லோடு.
வேற்றுமைக் கிடனாய்ப் பாலீறு ஏற்றும்
வினையா லணையும் பெயரோன் றொழிய
காலந் தோன்றா இயல்பினை உடைத்தாய்ப்
பயனிலை ஏற்கும் நெறியொடு வருமே (த. கா. இ. 194)

என்று விளக்கம் தருகிறது.

கள் ஈறு வழக்கியல்

கள் என்னும் இடைச்சொல் உயர்திணைப் பன்மைப்பெயர் பன்மை வினைகளில் இணைந்துவரின் உயர்த்தற்பொருளையும், ஒருமையின் பின்வரின் தாழ்த்தற் பொருளையும் உணர்த்தும். அஃறிணைப் பன்மைப்பெயர் பன்மை வினைகளின் பின்வரின் விகுதிப்பொருள்மேல் விகுதியாய் மீமிசைப் பொருளையும் உணர்த்தும். (பற்பல என்பது போல) இவை செய்யுட்கண் வரினும் உலகியல் வழக்கின்றி இலக்கண வழக்கல்ல. வழுவமைதியேயாகும். (தென். சொற்.91) என்னும் கருத்தைத் தென்னூல் பதிவு செய்துள்ளது. இதன்வழி ‘கள்’ ஈறு உயர்திணைப் பன்மைக்கு வரும் தற்கால வழக்கினையும் தென்னூல் சுட்டிக் காட்டியுள்ளமை புலனாகும்.

விரவுப்பெயர்

தென்னூல், தொல்காப்பியத்தின் விரவுப்பெயர் பாகுபாட்டை ஏற்கிறது. மேலும் அவற்றோடு,

பொருளிடம் காலம் சினை குணந்தொழிலின்
அமைந்துவரும் ஆண்பெண் ஒருமையீற்றுப் பெயர்
விரவுப் பெயராய் விரவுதற் குரியவே (தென். சொற். 93)

என்ற கருத்தையும் பதிவு செய்துள்ளமை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

வினையியல் - மரபு வளர்ச்சி

வினைச்சொல்லின் பொது இலக்கணம்

வினைச்சொல்லின் பொது இலக்கணமாக வேற்றுமை கொள்ளாது, காலம் காட்டும் என்னும் அவற்றின் இயல்புகளைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

அவிநயம்,

காலம் அறிதொழில் கருத்தனோ டியையப்
பால்வகை தோறும் படுமொழி வேறே (அவி. 31)

என்கிறது.

நேமிநாதம், தொல்காப்பியக் கருத்தின் அடிப்படையிலும், மூவிடங்களின் அடிப்படையிலும் வினைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறுகிறது (நேமி. 63).

நன்னூல், வினை, வினைக்குறிப்பு என இருவகையாகப் பிரித்து இரண்டனுக்கும் தனித்தனியே இலக்கணம் கூறுகிறது.

தெரிநிலை வினை குறித்து,

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே (நன். 320)

என்று குறிப்பிடுகிறது.

இவ்வாறு நன்னூலார் குறிப்பிடுவதற்கு, வேற்றுமை மயங்கியலில் தொல்காப்பியர் தொழில் முதனிலைகளாக,

வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்றா
இன்னதற் கிதுபய னாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே (தொல்.சொல்.112)

என்னும் நூற்பா அடித்தளமாக விளங்குகின்றமை புலப்படும். குறிப்பு வினைச்சொல்லின் இலக்கணமாக,

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்

வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பே (நன்.321)

என்று விளக்குகிறது.

தொன்னூல் விளக்கம் (104), இனிய தமிழ் இலக்கணம் (இ.த.இ.122,123,125) ஆகியன நன்னூலைப் பின்பற்றி வினைச் சொல்லின் இலக்கணம் பேசுகின்றன.

இலக்கண விளக்கம், தொல்காப்பியத்தைப் பின்பற்றுவதோடு 'பொருட்புடைப் பெயர்ச்சி புலப்படுப்பதுவே' என்பதையும் சேர்க்கிறது (இ.வி.227). இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடாதது குறித்து சுப்பிரமணிய சாத்திரியார், "வினை என்ற குறியானே பொருளின் புடை பெயர்ச்சியாகிய அதன் இலக்கணம் பெறப்படுதலின் அதனை இங்குக் கூறாது வினை என்பது வேற்றுமையுருபை ஏற்காது காலத்தை வெளிப்படையானும், குறிப்பானும் காட்டும் என்று அதன் தன்மையைக் கூறினார் ஆசிரியர் என்க"[28] என்று விளக்கம் தருகிறார்.

வினையின் முதனிலைகளால் (இ. வி. 43) வினைச்சொல் இயலுதல் உடைத்து என்பதையும் இலக்கணவிளக்கம் பதிவு செய்துள்ளது (இ. வி. 228).

இலக்கணக்கொத்து வினை பிறப்பதற்கு முதனிலைகளாக அமைபவை குறித்துப் பேசுகிறது.

பெயர்வினை இடைஉரி நான்கடி யானும்

பிறக்கும் வினை எனப் பேசுவோர் புலவர்

பண்படி முதலாப் பலவும் பகர்வர்

அவையவை உள்ளே அடங்கு மென்க (இ. கொ. 68)

என்று குறிப்பிடுகிறது. சுவாமிநாதம் இக்கருத்தைப் பின்பற்றியுள்ளது (சு. நா. 47).

தென்னூல், வினைச் சொல்லின் பொது இலக்கணமாக, வினைச்சொற்கள் வேற்றுமை ஏலாது, காலத்தோடு கூடி வரும் எனும் தொல்காப்பியக் கருத்தோடு, திணை, பால் இடங்களுள் ஒன்றற்குரியவாயும், அவற்றிற்குப் பொதுவாயும் பாலிடங்களான் முற்றியும், பாலிடங்கள் குறைந்து எச்சமாயும் நிகழும் என்று தன் கருத்தையும் இணைக்கிறது (தென். சொற். 102).

தமிழ்நூல், முன்னைய இலக்கணிகளின் கருத்துகளின் அடிப்படையில்,

வினையே

பொருளொன்றினது புடைபெயர்ச்சியினை

முற்றாய் எச்சமாய்க் காலத்தோடு

தெற்றெனக் காட்டும் செயலினது என்பர் (து. நூ. 86)

என்று விளக்குகிறது.

கால இடைநிலைகள்

தொல்காப்பியர் 'காலந் தாமே மூன்றென மொழிப' என்று குறிப்பிட்டாலும் கால இடைநிலைகள் குறித்துப் பேசவில்லை. சூ.இன்னாசி, ''டாக்டர் வ. சுப. மாணிக்கனார் குறிப்பிடுவது போன்று 'வினைச்சொல் மருங்கின் காலமொடு வருநவும்' (தொல். 735) என்னுங் குறிப்பு அவருக்குக் கால இடைநிலை பற்றிய கருத்துண்டு என்பதனைத் தெரிவிக்கிறது. அவற்றை விளக்காததற்கு அவர் காலத்தில் சூழ்நிலையைக் கொண்டே காலத்தை உறுதி செய்யும் வகையில் அவை வழங்கியிருத்தலே காரணமாதல் கூடும்''[29] என்று கூறும் கருத்து கருதத்தக்கது. நன்னூலே கால இடைநிலைகளைக் குறிப்பிடுகிறது. த், ட், ற், இன் என்பன இறந்த கால இடைநிலைகளாகவும், கிறு, கின்று, ஆநின்று என்பவற்றை நிகழ்கால இடைநிலைகளாகவும், ப், வ் ஆகியவற்றை எதிர்கால இடைநிலைகளாகவும் சுட்டியுள்ளது (நன். 143-144). பிற்றை இலக்கணிகள் இவ்விடைநிலைகளையே பின்பற்றியுள்ளனர்.

வினை வகைகள் - வளர்ச்சி நிலை

நன்னூல் வினைவகைகளைத் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு பிரிவாகப் பிரித்து விளக்குகிறது. ''குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றி'' என்ற தொல்காப்பியரின் கருத்தே இவ்வாறு வகைப்படுத்த அடிப்படையாகிறது.

தெரிநிலை வினைச்சொல் குறித்து,

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்

செய்பொருள் ஆறும் தருவது வினையே (நன். 320)

என்றும், குறிப்பு வினைச்சொல் குறித்து,

பொருள் முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்

வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே (நன். 321)

என்றும் குறிப்பிடுகிறது. மேலும்,தெரிநிலை வினையும், குறிப்பு வினையும் முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்ற வகைப்பாட்டில் அமையும் என்பதையும் நன்னூல் விளக்குகிறது (நன்.322). இலக்கண விளக்கம் நன்னூல் (நன்.322) நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.229).

இலகு தமிழ் ஐந்திலக்கணமும் நன்னூலைப் பின்பற்றி வினைச்சொல்லின் வகைகளை விளக்குவதுடன் தெரிநிலை வினையில் செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை ஆகியவற்றையும் விளக்கியுள்ளது (இ. த. ஐந். 249 – 251).

இனிய தமிழ் இலக்கணம் நன்னூலை அடியொற்றி வினைச்சொல்லை தெரிநிலை, குறிப்பு எனும் இரு பெரும் பிரிவாகப் பகுக்கிறது. மேலும் வினைச் சொற்களின் வகைகளாக ஆறு வகைகளைக் குறிப்பிடுகிறது.

1. தன்வினை (Direct action)
2. பிறவினை (Causative verbs)
3. செய்வினை (Active verb)
4. செயப்பாட்டு வினை (Passive verb)
5. செயப்படுபொருள் உள்ள வினை (Transitive verb)
6. செயப்படு பொருள் இல்ல வினை (Intransitive verb)

என வகைப்படுத்துகிறது (இ.த.இ.126).

தென்னூல், நன்னூலைப் பின்பற்றி வினைச்சொல்லை தெரிநிலை, குறிப்பு எனப் பாகுபடுத்துகிறது (தென். சொற். 104). எனினும் தெரிநிலை வினைச்சொல்லை விளக்குமிடத்து, தொல்காப்பியர் தொழில் முதல்நிலைகளாகக் குறிப்பிடும் (தொல்.சொல்.112) எண்வகைப் பொருளின் அடிப்படையாக பொருளின் இயக்கத்தையும், காலத்தையும் தெற்றென விளங்கத் திகழ்வன தெரிநிலை வினைச்சொற்களாம் என்கிறது (தென். சொற். 105).

குறிப்பு வினை குறித்து, தொல்காப்பியக் கருத்தையும், நன்னூல் கருத்தையும் இணைத்து,

குறிப்பு வினையே கூறிய முறையான்
பொருளது பண்பும் உருவும் ஒப்பும்
உடைமைத் தன்மையும் நிலத்தது தொடர்பும்
அன்னவும் மனனொடு பொறிப் புலனாக
அறுவகைப் பெயரடிப் படையில்முக் காலமும்
குறிப்பொடு விளங்க நெறிப்பட வருமவை
காலம் விரிவுழி ஆக்கமொடு சிவணும் (தென்.சொற்.106)

என்கிறது.

தமிழ் நூல், வினை வகைகளைக் குறிப்பிடவில்லை. எனினும் குறிப்பு வினைக்கு ஒழிபியலில் இலக்கணம் கூறியுள்ளது. பெயரினியல்பே போல் ஆறு கூறான பெயர்களின் பின் மூவிடத்திற்கும் உரிய இறுதி நிலைகள் ஏறி வரும் ஒருவகைச் சொற்களைக் குறிப்பாகக் காலம் காட்டுவதாகக் கொண்டு குறிப்பு வினை என்று தொன்மைச் சான்றோர் வகுத்துரைப்பர் என்கிறது (த. நூ. 351).

தமிழ்க்காப்பு இயம் நன்னூலைப் பின்பற்றி தெரிநிலை, குறிப்பு என வகைப்படுத்துகிறது (த.கா.இ.294). தெரிநிலை வினைமுற்றை நன்னூல் குறிப்பிடும் ஆறனோடு, தொல்காப்பியம் தொழில் முதனிலைகளாகக் குறிப்பிடுவனவற்றுள் இன்னதற்கிது பயன் என்பதையும் சேர்த்து அவற்றின் அடிப்படையில் விளக்குகிறது (த.கா.இ.296). குறிப்பு வினைமுற்றை நன்னூல் கருத்தின் அடிப்படையில் விளக்குகிறது (த.கா.இ.300).

வினை நிலைகள்

தென்னூல் வினை நிலைகளாக தன்வினை, பிறவினை, விதிவினை, மறை வினை, செய்வினை, செயப்பாட்டு வினை, செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை, அகவினை, புறவினை என வினை பலதிறப்படும் என்று கூறி அவற்றைத் தனித்தனியே விளக்கியுள்ளது. (தென். சொற். 280-288)

மோ. இசரயேல் மேலும் பல வினைகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

செயல் வினை (Indicate verb), எதிர்மறை வினை (Negative verb), ஏவல் வினை (Imperative verb), விலக்கு (தடை) வினை (Prohibitive verb), வியங்கோள் வினை (Optative verb), கட்டாய வினை (Obligatory verb), அனுமதி வினை (permission verb), ஆற்றல் வினை (Patential verb) என எண்வகை வினைகளைக் குறிப்பிடுகிறார்[30].

வினைமுற்று - இலக்கணம்

தொல்காப்பியம் வினைமுற்றுக்கு இலக்கணம் கூறவில்லை. நன்னூலே வினைமுற்றுக்கு இலக்கணம் கூறுகிறது.

> **பொதுஇயல்பு ஆறையும் தோற்றிப் பொருட்பெயர்**
> **முதல் அறுபெயர் அலது ஏற்பில முற்றே (நன். 323)**

என்றும், தெரிநிலை வினை முற்றின் பாகுபாடுகளாக,

> **ஒருவன் முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்**
> **ஒருமை பன்மையைத் தன்மை முன்னிலையிலும்**

முக்கா லத்தினும் முரண முறையே
மூவைந்து இருமூன்று ஆறாய் முற்று
வினைப்பதம் ஒன்றே மூஒன் பானாம். **(நன். 324)**

எனக் குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கமும் (இ.வி.231), சுவாமிநாதமும் (சு.நா.49) இக்கருத்துகளைப் பின்பற்றியுள்ளன. இலகு தமிழ் ஐந்திலக்கணமும் முற்றுப் பெற்ற வினை வினைமுற்றாம் என விளக்கம் தருகிறது (இ.த.ஐந்.259).

முன்னிலை ஒருமை வினைமுற்று – வளர்ச்சி நிலை

தொல்காப்பியம் இ, ஐ, ஆய் என்பனவற்றை முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளாகக் குறிப்பிட (தொல்.சொல்.223) நேமிநாதம் அவற்றோடு உண், சேர், பொரு என்பவற்றையும் சேர்க்கிறது (நேமி. 67).

நன்னூல் அம்மூன்று ஈறுகளுடன் ஏவலில் வரும் இருபத்து மூன்று ஈறுகளையும் முப்பாலுக்குரிய முன்னிலை ஒருமை வினை முற்றுகளாகக் குறிப்பிடுகிறது (நன்.335).

இலக்கண விளக்கம், நன்னூல் கூறுவனவற்றோடு அல், ஆல், ஏல், காண் என்னும் ஈறுகளும் முப்பால் ஒருமை முன்னிலை வினையாக வரும் என்கிறது (இ.வி.238).

சுவாமிநாதம் ஐ, ஆய், இ ஆகிய மூன்றும் ஏவலில் வரும் என்றும், பின், ஏல், அல், ஆல், காண் ஆகியன முன்னிலை ஒருமை என்றும் குறிப்பிடுகிறது (சு.நா.50).

தென்னூல் முன்னிலையை விரிவாக விளக்கியுள்ளது. முன்னிலை முற்றும், ஏவலும் என இருதிறப்படும் என்றும் (தென்.சொற்.119), முன்னிலை வினை, முன்னிலைப் பொருளின் தொழில் நிலையை உணர்த்திக் காலம் மூன்றினும் வரும். ஏவல்வினை எதிர்காலம் ஒன்றுடன் முன்னிலைப் பொருளைத் தொழிற்படுக்கும் என்றும் (தென்.சொற்.120) விளக்குகிறது. மேலும், இ, ஆய், ஐ ஈறுகள் இரு திணையினும் ஒருமையை உணர்த்தி வரும் என்றும், இ, ஆய் இரண்டும் ஏவல் வினைக்கும் ஏற்கும் என்றும் குறிப்பிடுகிறது (தென்.சொற்.121).

தமிழ்நூல் முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளாக ஐ, ஆய் என்னும் இறுதியும், செய் என்னும் வாய்பாட்டு ஏவலும், பிறவும் முன்னிலை ஒருமை. ‘இ’ என்பது பழைய வழக்கு என்கிறது (த. நூ. 97).

முன்னிலைப் பன்மை வினைமுற்று – வளர்ச்சி நிலைகள்

தொல்காப்பியம் இர், ஈர், மின் ஆகிய மூன்று விகுதிகளை உயர்திணைக்கும், அஃறிணைக்கும் பொதுவான முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகளாகக் குறிப்பிடுகிறது.

நன்னூல் இம்மூன்று ஈறுகளையும் சுட்டினாலும் மின் ஈற்றை முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றுக் குரியது என்கிறது (நன். 337) மேலும்,

முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை (நன். 334)

என்பதையும் பதிவு செய்துள்ளது.

தென்னூல் (தென்.சொற்.122), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 334) ஆகியனவும் இக்கருத்தைப் பின்பற்றியுள்ளன.

இலக்கண விளக்கம் 'உம்' விகுதியையும் சேர்க்கிறது. மேலும் மின், உம் ஆகிய இரண்டும் முன்னிலைப் பன்மை ஏவலுக்குரியதாகக் கொள்கிறது (இ. வி. 238). சுவாமிநாதமும் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றியுள்ளது (சு. நா. 50).

இலகு தமிழ் ஐந்திலக்கணம் இர், ஈர், உம், மின், கண் என்பவற்றைப் பன்மை விகுதிகளாகக் குறிப்பிடுகிறது (இ. த. ஐந். 260).

தென்னூல் நன்னூலைப் பின்பற்றி 'மின்' ஈறு ஏவலின்பாற்படும் (தென் சொற். 122) என்றும், முன்னிலையாரொடு பிறரையும் உளப்படுத்தி உரைக்குமிடத்து படர்க்கையும் முன்னிலையாய் முடியும் (தென். சொற். 123) என்பதை ஏற்கிறது.

மேலும் 'செய்யாய்' எனும் வாய்பாடு பற்றி வரும் முன்னிலை வினைச்சொற்கள் விதிவினை, மறைவினை இரண்டிலும் விரவும் என்கிறது (தென். சொற். 124).

மேலும்,

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மருங்கின் மெய்யூர்ந்து வருமே (நன்.336)

என்னும் நன்னூல் சூத்திரத்தையும் எடுத்தாண்டுள்ளது (தென். சொற். 125).

மேலும் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி உம் ஈற்றையும் குறிப்பிடுகிறது. உம் எனும் இறுதி உயர்த்தற் குறிப்போடு முன்னிலைக்கண் ஒருமையிலும், பன்மையிலும் வியங்கோள் பொருள்பட விளம்புதல் உலகியல் வழக்காகும் (தென். சொற். 127) என்று குறிப்பிடுகிறது.

தமிழ்நூலும் இர், ஈர், மின் ஆகியவற்றை முன்னிலைப் பன்மைகளாகச் சுட்டி அவற்றுள் மின் ஏவல் பொருளிலும் (த. நூ. 99), உம் எனும் இறுதி உயர்வொருமை முன்னிலையாம்; அதன்பின் கள் இணைந்து முன்னிலைப் பன்மையாய் வரும் என்றும் பதிவு செய்துள்ளது (த. நூ. 98).

தமிழ்க் காப்பு இயம் இர், ஈர் ஆகியவற்றை முன்னிலைப் பன்மை ஈறாகக் குறிக்கிறது. (த. கா. இ. 169) மேலும்,

நீங்களென் முன்னிலைப் பெயர்ச்சொல் ஏற்குமே
கள்ளொடு சிவணிய முன்னிலை முற்றை (த. கா. இ. 170)

என்று கூறுவது மரபு வளர்ச்சியாகும்.

வியங்கோள் வினை – வளர்ச்சி நிலைகள்

தொல்காப்பியர் வியங்கோள் வினையின் விகுதிகளைக் குறிப்பிடவில்லை. வியங்கோள் வினை படர்க்கைக்கு உரியது என்றுரைப்பர் (தொல்.சொல்.226). எழுத்ததிகாரத்தில் “ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவி” (எழுத்து. 211) என ஏவல் பொருளை மட்டுமே சுட்டுவர்.

உரையாசிரியர்களே வியங்கோள் விகுதிகளையும், பொருண்மையையும் குறிப்பிடுகின்றனர்.

இளம்பூரணர் ‘க’ என்னும் ஒரு வியங்கோள் விகுதியை மட்டும் குறிப்பிடுகிறார்[31].

சேனாவரையர் க, அல், ஆல் ஆகிய விகுதிகளையும் வாழ்த்தல், வேண்டிக்கோடற் பொருளையும் கூறுகிறார்[32].

நச்சினார்க்கினியர் க, ய, அல், ஆல், அர், மார், உம், ஐ விகுதிகளையும் விதித்தல், வேண்டிக்கோடல் பொருண்மையையும் சுட்டுகிறார்[33].

கல்லாடர், நச்சினார்க்கினியர் கூறும் விகுதிகளையே குறிக்கிறார்[34].

தெய்வச் சிலையார், ‘க’ என்னும் ஓரீறே கொண்டு அது இ, ய, அர், அல், எனத் திரிந்து வரும் என்கிறார். மேலும் தெய்வச்சிலையார் வியங்கோள் வினை தன்மை, முன்னிலையில் வராது எனும் தொல்காப்பியர் கருத்தை ஏற்கிறார்[35].

நன்னூல், தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்துகளின் அடிப்படையில் வியங்கோள் வினைமுற்றுக்குரிய ஈறுகளைக் குறிப்பிடுகிறது. க, ய, ர ஆகியனவற்றை வியங்கோள் ஈறுகளாக நன்னூல் குறிப்பிடுகின்றது (நன். 335).

இலக்கண விளக்கம் அவற்றோடு அல், ஆல். உம், மார், ஐ ஆகிய ஈறுகளை இணைக்கிறது (இ. வி. 239)

தொன்னூல் விளக்கமும் (தொ. வி. 116), இனிய தமிழ் இலக்கணமும் (இ. த. இ. ப. 157-158) நன்னூல் கூறும் வியங்கோள் விகுதிகளையே குறிப்பிடுகின்றன.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் வியங்கோள் வினைமுற்று குறித்து, விரிவான விளக்கமளிக்கிறது.

வியமெனல் ஏவல் கோளெனல் கோடல்
வியங்கோள் வினைமுற் றென்னல் ஒருவகை
மதிப்பளி ஏவல் வினைமுற் றாகும்.
க இயர் இ அ என இதன் விகுதிகள் ஆம்.
ஐம்பால் மூவிடம் வாழ்த்தல் வைதல்
வேண்டுதல் விதித்தல் பொருள்தனில் வருமே.
வாழ்க வாழியர் வாழி வாழிய
வாழ் ஆயனவெலாம் மூவிடம் வந்திடும்.
வாழ்க அழிக தருக வருக
வாழ்த்தல் வைதல் வேண்டுதல் விதித்தல்
பொருள் தனில் முறையே வருதலைக் காண்க. (இ.த.ஐந்.260)

என்று விளக்குகிறது.

தென்னூல் க, இய, இயர், அல் ஆகிய வியங்கோள் விகுதிகளைக் கூறுவதுடன் இலகு தமிழ் ஐந்திலக்கணம் சுட்டும் பொருண்மைகளைப் பின்பற்றியுள்ளது (தென். சொற். 128). மேலும், மூவிடத்து வினைமுற்றுகளும் ஏவலும், வியங்கோளும் பெயரொடு முடியும் என்கிறது (தென். சொற். 129).

தமிழ்நூல் க, அல் ஆகியவற்றை வியங்கோள் விகுதிகளாகச் சுட்டுவதுடன் ய என்பது சில சொல் வழக்கு என்றும் குறிப்பிடுகிறது (த.நூ.100). மேலும் ஏவலுக்கும், வியங்கோளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையை விளக்குகிறது. வசைதல், வாழ்த்தல், வேண்டல், விதித்தல் பொருள்களில் வருவதையும் பதிவு செய்துள்ளது (த. நூ. 101). தமிழ்க்காப்பு இயம் க, இ, இய, அல், இயர் ஆகிய ஈறுகளை வியங்கோள் ஈறாகக் குறிப்பிடுகிறது (த.கா.இ.317). இவை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத் தக்கன. வியங்கோள் வினையின் வளர்ச்சி குறித்து சு. அழகேசன், “வியங்கோள் வினை தொடக்க நிலையில் ‘செய’ என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தினின்றே வளர்ச்சி

பெற்ற வடிவமாக அமைந்திருக்கலாம். செய்யிய, செய்யியர் முதலிய வியங்கோள் வினைகள் நோக்கத்தைக் குறிக்கும் எதிர்கால வினையெச்சங்களாக வளர்ச்சியுற்றன. இவற்றுள் 'செய்யிய' என்னும் வாய்பாடே பிற்காலத்தது என்ற முறையில் வழக்கு மிகுதியுடைதாகும்.

கல்வெட்டுகளில் கடவேன் ஆக, கடவீர் ஆகவும் போன்ற வினை வழக்குகள் காணப்படுகின்றன.

காலப்போக்கில் நாம் செய்வோமாக. நாம் செய்யக் கடவேம் போன்றவை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை அன்பேவலாக; வியங்கோளாக வழங்கத் தலைப்பட்டு விட்டன. மேலும், இக்காலத் தமிழில் வாழட்டும், சிறக்கட்டும், ஒழியட்டும், பெருகட்டும் போன்ற வியங்கோள் வினைகள் வழக்கில் அமைந்து புது விகுதிகளைப் பெற்றுள்ளன"[36] என்று கூறும் கருத்து இங்குக் கருதற்பாலது.

வினையெச்சங்களில் மரபு வளர்ச்சி

காலம் சுட்டல்

தொல்காப்பியம் வினையெச்ச வாய்பாடுகளை மட்டும் கூற நன்னூல் அவை எக்காலத்திற்கு உரியன எனச் சுட்டுவது (நன்.343) மரபு வளர்ச்சியாகும். இலக்கண விளக்கம் (246), தொன்னூல் விளக்கம் (தொ.வி.119), சுவாமிநாதம் (சு.நா.53), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ.த.ஐந்.281) ஆகியன இவ்வாறு காலத்தையும் குறிப்பிடுகின்றன. வினையெச்சம் முடியும் முறை குறித்து,

செய்த செய்யூ முதலவாய்ப் பாட்டிற்
தன்வினை பிறவினை ஆயிரு வினையொடு
முடியும் முறையது வினையெச் சம்மே (இ.வி.245)

என்று இலக்கண விளக்கம் குறிப்பிடுகிறது.

பிற வினையெச்ச வளர்ச்சி நிலைகள்

ஆமல் (செய்யாமல்), ஆது (செய்யாது), ஆமை (செய்யாமை), ஆ (செய்யா) ஆகிய நான்கனையும் எதிர்மறை வினையெச்சங்களாகத் தொன்னூல் விளக்கம் (தொ.வி. 121) குறிப்பிடுகிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் தெரிநிலை வினை முற்றெச்சம், குறிப்பு முற்றெச்சம் ஆகியவற்றிற்கு இலக்கணம் கூறுகிறது (இ. த. ஐந். 285).

தென்னூல், செய்து என்பது முதலாய வினை எச்சங்களை விரிக்குமிடத்துக் காரண காரியம் விளக்கும் ஆக, ஆன், பொருட்டு என்னும் சொற்கள் இடையே விரிதல் முறையாம் என்கிறது (தென். சொற். 137). மேலும், பின், முன், கால், கடை என்னும் ஈறுகளையுடைய வினை எச்சங்கள் ஒரு சொல் நீர்மையினவாய்க் காலக் குறிப்பினை உணர்த்தும் அவை காலக் குறிப்பினைத் தரவில்லை எனின் இடமும், காலமும் உணர்த்தும் பெயர்களாகும். அவ்வழி முதனிலை பெயரெச்சமாக நிற்கும் என்கிறது. (தென்.சொற்.138). மேலும், வினை எச்சங்கள் தம்மை முடிக்கும் வினைமுற்றின் பொருளுக்கேற்பக் காலமும், பொருளும் தருதலும், செய்து என்னும் எச்சம் முதனிலைக்கேற்ப ஈறு திரிதலும் மரபாகும் என்கிறது (தென்.சொற்.134).

தமிழ்க்காப்பு இயம் எதிர்மறை வினையெச்சங்கள் (த.கா.இ.352), குறிப்பு வினையெச்சம் (த.கா.இ.353), குறிப்பெச்சம் ஏற்கும் ஈறுகள் (த.கா.இ.354), குறிப்பு எதிர்மறை வினையெச்சம் (த.கா.இ.356) ஆகியன பற்றியும் கூறுவது வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது.

பெயரெச்ச வாய்பாடுகள் - மரபு வளர்ச்சி

தொல்காப்பியம், பெயரெச்ச வாய்பாடுகள் குறித்து,

நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்(கு) ஓர் அன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல்லே. (தொல். சொல். 234)

என்று விளக்குகிறது. பெயரெச்ச வாய்பாடுகளாக செய்யும், செய்த ஆகிய இரண்டனைக் குறிக்கிறது.

நேமிநாதம், ‘‘ஆறன் மேல் செல்லும் பெயரெச்சம்’’ என்கிறது (நேமி. 69). பெயரெச்ச வாய்பாடுகளைக் கூறவில்லை.

நன்னூல், தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யும், செய்த என்பவற்றோடு செய்கின்ற என்னும் வாய்பாட்டையும் சேர்க்கிறது (நன். 340). இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றி பெயரெச்சத்தை விளக்குகிறது (இ. வி. 243).

தொன்னூல் விளக்கம், தொழிலும் காலமும் காட்டி, இடமும், பாலும் காட்டாது வருவன எச்சமாம். இவ் எச்சத்துள் பெயரைச் சார்ந்து இயல்வன பெயரெச்சம் (தொ.வி.117) என விளக்குகிறது. பெயரெச்ச வாய்பாடுகளைச் சுட்டவில்லை.

முத்துவீரியம் நன்னூல் நூற்பாவை எடுத்து விளக்குகிறது (மு.வீ.வினை.31). மேலும் பெயரெச்சத்திற்குரிய பொருணிலைகளாக காலமும், பொருளும், நிலமும், கருவியும், வினைமுதலும், வினையும் ஆகிய ஆறு பொருட்கு மொத்த உரிமையாம் என்கிறது (மு.வீ.வினை.32).

சுவாமிநாதம் பெயரெச்சம் குறித்து, செய் என்னும் வாய்பாட்டின் இறுதியில் சேய்மைச் சுட்டைக் குறிக்கும் அகரமும், நடுவில் கால இடைநிலையும், எதிர்காலத்திற்கு உம் ஈறும் பெற்று வருவது பெயரெச்சமாகும். அது செய்த, செய்கின்ற, செய்யும் என மூவகை வாய்பாட்டில் வரும். வினைசெய் பொருள், வினைமுதல், நிலம், கருவி, காலம் ஆகியவற்றைக் குறிக்கும் பெயரைக் கொண்டு முடியும் (சு. நா. 52) என்று விளக்குகிறது.

இனிய தமிழ் இலக்கணம் நன்னூல் கூறும் பெயரெச்ச வாய்பாடுகளைக் கூறுவதுடன் பெயரெச்ச எதிர்மறை வாய்பாடுகளாக செய்யா, செய்யாத என்பவற்றைச் சுட்டுகிறது (இ. த. இ. ப. 156).

இலகு தமிழ் ஐந்திலக்கணம் பெயரெச்சம் குறித்து,

பெயரினில் முடியும் குறை வினைச்சொல் லெலாம்
பெயரெச்சமெனப் பெயர் பெற்றிலங்கிடும்
பெயரெச்சத்தின் விகுதி அ, உம், ஆம்
பெயரெச்ச வினை காலம் காட்டும்.
முதலிரு காலம் ‘அ’ யெனும் விகுதியும்
எதிர் காலத்தை ‘உம்’ மும் காட்டிடும்.
வருகிற, வந்த, வாரும் விளக்கமாம். (இ. த. ஐந். 287)

என்று குறிப்பிடுகிறது.

தென்னூல், பெயரெச்சம் குறித்து, தெரிநிலையும் குறிப்புமாகிய வினையாலணையும் பெயரீறுகள் குன்றிய குறைச்சொற்கள் பெயரெஞ்சு கிளவிகளாகும் என்கிறது (தென். சொற். 139). நன்னூல் கூறும் பெயரெச்ச வாய்பாடுகளையே பின்பற்றியுள்ளது.

மேலும் தென்னூல், முன்னையோர் கூறும் செய்வது ஆதி அறுவகைப் பொருள்களோடு ஏற்பது, நீக்கம் ஆகிய இரு பொருள்களையும் இணைத்து எண்வகைப் பொருளுக்குரியனவாக வரும் என்றும் அவை பொருள் முதலாய அறுவகைப் பெயரையும் ஒரோவழி குறிப்பு வினைப்பெயரையும் கொண்டு முடியும் என்று விளக்குகிறது (தென். சொற். 140).

தமிழ்நூல் பெயரெச்சம் குறித்து, முற்றுவினை போல ஐந்தொகை காட்டாது, வினை முதனிலையோடு காலம் காட்டிப் பிற நான்கையும் உணர்த்த மற்றொரு பெயரைப் பொருந்தி நிற்பது பெயரெச்சமே (த. நூ. 112) என்று குறிப்பிடுகிறது.

மேலும், பெயரெச்ச வாய்பாடுகளில் நன்னூலைப் பின்பற்றியுள்ளது (த.நூ.113).

தமிழ்க்காப்பு இயம், பெயரெச்சம் குறித்து இடமும், பாலும் காட்டும் விகுதிகளை ஏற்காது வினையுங் காலமும் தோன்றுமாறு முற்றுப் பெறாத வினையாக வருஞ்சொல் பெயர்ச்சொல்லைச் சார்ந்து அதன் இயல்பை உணர்த்தின் பெயரெச்சமாகும் என்கிறது (த.கா.இ.343).

தெரிநிலைப் பெயரெச்சத்தின் வாய்பாடுகளாக செய்த, செய்கின்ற, செய்யும் என்பவற்றைக் குறிக்கிறது (த.கா.இ.344). மேலும் செய்யாத, செய்யா என்பனவற்றை எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சமாகக் குறிக்கிறது.

மேலும் குறிப்புப்பெயரெச்சம் குறித்து, குறிப்பு வினைமுற்றின் இறுதியில் வரும் பாலீற்றை நீக்கி அகரத்தை இறுதியில் பெற்றுப் பெயரின் பண்பை விளக்கி வருகின்ற பண்படையான சொற்களெல்லாம் குறிப்புப்பெயரெச்சம் என்கிறது (த.கா.இ.346).

செய்யும் என்னும் சொல் திரிதல்

செய்யும் என்னும் பெயரெச்சத்தில் உள்ள உகரம் சில இடங்களில் தான் ஏறி நிற்கின்ற மெய்யெழுத்தோடும் கெடும் (தொல்.சொல்.238) என்று தொல்காப்பியம் குறிப்பிட, நேமிநாதம் உகரம் கெடுதலும், உகரமும் மெய்யும் கெடுதலும், இரண்டினோடுங் கூடி இறுதியில் நின்ற மெய்யும் கெடுதலும் உண்டு என்கிறது (நேமி.87). நன்னூல்,

செய்யும்என் எச்சவீற்று உயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்உந்து ஆகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே. (நன். 341)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கணவிளக்கமும், முத்துவீரியமும் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளன (இ. வி. 244), (மு. வீ. வினை. 39). தொன்னூல் விளக்கம்,

செய்யும் ....மற்றதன் ஈற்றயல்
உயிரும் உயிர்மெயும் ஒழிந்தே அகலும் (தொ. வி. 107)

என்கிறது. மேலும், உம் ஈற்றுப் பெயரெச்சத்தின் ஈற்று மகரமும், ஈற்றயல் உகரமும், யுகரமும் ஒவ்வொரிடத்துக் கெடுதல் உண்டு. செய்யுளில் உம் ஈறு உந்து எனத் திரிதல் உண்டு என்று குறிப்பிடுகிறது (தொ. வி. 118).

தென்னூலும், தமிழ்க்காப்பு இயமும் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளன (தென். சொற். 141) (த. கா. இ. 430).

மரபு வீழ்ச்சி

பெயர் மரபு

பொருள் தருவதே சொல்லாகும் எனும் கருத்து நேமிநாதம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தென்னூல் ஆகிய நூல்களில் பேசப்படவில்லை. பொருண்மை தெரிதலும், சொன்மை தெரிதலும் சொல்லினாகும் என்பதை நேமிநாதம், தொன்னூல் விளக்கம், சுவாமி நாதம், இனிய தமிழ் இலக்கணம், அறுவகை இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் ஆகியன குறிப்பிடவில்லை. சொற்கள், குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பொருள் உணர்த்தும் என்பதை தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் ஆகியவை குறிப்பிடவில்லை. இலக்கணக்கொத்தில் பெயர்ச்சொல் இலக்கணம் பேசப்படவில்லை. அறுவகை இலக்கணத்தில் சொல் வகைப்பாடு இடம்பெறவில்லை.

பெயரீறுகளும் திணை, பால் காட்டுவதுண்டு என்பதை நேமிநாதம், முத்துவீரியம், இனிய தமிழ் இலக்கணம், அறுவகை இலக்கணம், தமிழ்நூல் ஆகியவை பதிவு செய்தில. உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் என்னும் பாகுபாட்டை ஏற்றுக்கொள்ளும் முத்துவீரியம், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியன விரவுப்பெயருக்குரிய இலக்கணம் கூறவில்லை.

விரவுப்பெயர் நிகழ்காலத்து வினையால் சொன்னால் பொதுப்பட்டு நில்லாது உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்து என்பதை நேமிநாதம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. தமிழ்க்காப்பு இயத்தில் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர் என்ற விரவுப்பெயர் பாகுபாடுகள் சுட்டப்பட்டில. 'எல்லாம் என்னும் பெயர் விரவுப் பெயராக நேமிநாதத்தில் குறிப்பிடப்படவில்லை. 'எல்லாம்' என்னும் சொல் உயர்திணையில் தன்மைப் பன்மைக்கு மட்டுமே வரும். முன்னிலைப் பன்மை, படர்க்கைப் பன்மை ஆகியவற்றிற்கு வருவதில்லை (தொல். சொல். 187) என்னும் கருத்து பிற்றை நூல்களில் இடம் பெறவில்லை.

'ஒருவர்' என்னும் பெயர் ஆண், பெண் பால்களுக்குப் பொதுவாக வரும் என்பதை நேமிநாதம், தமிழ்க் காப்பு இயம் குறிப்பிடவில்லை. ஒருவர் என்னும் சொல்

பலர்பாலுக்கு வரும் எனும் தொல்காப்பியக் கருத்து (தொல். சொல். 192) பிற்றை நூல்களில் இடம்பெறவில்லை.

விரவுப்பெயர்களைக் கூறுவோன் குறிப்பினாலேயே இன்ன திணை, இன்ன பால் என அறிய முடியும் என்பதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக்காட்டில.

மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி பெண்பால் முடிபையே பெறும் என்பதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக் காட்டில.

சில பெயர்களின் ஈற்றயலில் நிற்கும் ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் என்பதை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியன தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

இறைச்சிப் பொருளில் வரும் உயர்திணை ஈறுகளைக் கொண்டு முடியும் அஃறிணைப் பெயர்கள் உயர்திணையைச் சுட்டாது என்பதையும், கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் அவ்வத்திணைக்கு உரிமை கொண்டு பழகிய பெயராய் நிற்குமிடத்து உயர்திணையைக் குறிக்கும் என்பதையும் தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

வினை மரபு

இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியவற்றில் காலம் பற்றிக் குறிப்பிடவில்லை.

அவிநயத்தில் வினைவகைகள் குறித்த செய்தி கிடைக்கப் பெற்றில.

இலக்கணக்கொத்து, அறுவகை இலக்கணத்தில் வினைமுற்று விகுதிகள் பேசப்படவில்லை. செய்கு, செய்கும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று குறித்து நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. நேமிநாதம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியவற்றில் உயர்திணைப் படர்க்கை பன்மை விகுதிகளுள் ஒன்றான மார் விகுதி இடம்பெறவில்லை. தொன்னூல் விளக்கத்தில் ப, மார் விகுதிகள் இடம்பெறவில்லை. உயர்திணைக்குரிய தெரிநிலை வினைமுற்றுகளின் தொகையாக இருபத்து மூன்றனைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 208) பிற நூல்கள் இவ்வாறு தொகையைக் குறிப்பிடவில்லை.

தன்மைப் பன்மை வினைச்சொல்லானது அஃறிணைப் பொருளோடு சேர்த்து வைத்து எண்ணப் பெறும் போது உயர்திணைத் தன்மையிலிருந்து திரியவும் பெறும் (யானும் என் எஃகமும் சாறும்) என்னும் தொல்காப்பியக் கருத்து (தொல். சொல். 209) யாதொரு நூலிலும் இடம்பெறவில்லை. யார் என்னும் குறிப்பு வினைமுற்றுச் சொல்

உயர்திணை முப்பாலுக்கும் உரியது என்பதை தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் ஆகியவை குறிப்பிடவில்லை.

செய்யுளில் ஈற்றயல் ஆ, ஓ வாகும். ஆய், ஓயாகும் என்பதை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை

அஃறிணைக்குரிய தெரிநிலை வினைமுற்றுக்களின் தொகையாக ஆறனைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. (தொல் சொல். 218) பிற நூல்கள் இவ்வாறு தொகையைக் குறிப்பிடவில்லை. அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்றான ‘வ’ விகுதி நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியவற்றில் இடம்பெறவில்லை. தமிழ்நூலில் ஆ, வ ஆகிய இரு ஈறுகள் இடம் பெறவில்லை. அஃறிணை ஒருமை வினைமுற்று ஈறுகளுள் ஒன்றான ‘டு’ தமிழ்நூலில் இடம்பெறவில்லை. உயர்திணை ஈறுகளைப் போலவே அஃறிணை வினைமுற்றுகளின் தொகையையும் தொல்காப்பியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. ‘எவன்’ என்னும் குறிப்பு வினைமுற்று அஃறிணை இருபால்களிலும் வரும் என்பதை தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியவை சுட்டிக் காட்டவில்லை. அஃறிணைக் குறிப்பு வினைமுற்றுகள் குறித்து வரும் இன்று, இல, உடைய என்பன போன்றவற்றை முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

விரவு வினைகள் குறித்து இனிய தமிழ் இலக்கணமும் இலகு தமிழ் ஐந்திலக்கணமும் குறிப்பிடவில்லை.

இலக்கணக்கொத்து வினைமுற்று விகுதிகளைக் கூறவில்லை.

முன்னிலை தவிர்ந்த பிற இருதிணைப் பொதுவினைகள் மூவிடம், ஐம்பாலையும் உணர்த்தி வரும் என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக்காட்டில.

வியங்கோள் வினைமுற்று குறித்து இலக்கணக்கொத்து, சுவாமிநாதம் ஆகியன குறிப்பிடவில்லை.

செய்யும் என்னும் வினை பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மையில் வருவதில்லை என்பதை நேமிநாதம், இலக்கணக்கொத்து, சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், தமிழ்க்காப்பு இயம் போன்றவை குறிப்பிடவில்லை.

வினையெச்சம் குறித்து இலக்கணக் கொத்து குறிப்பிடவில்லை. வினைமுதலைக் கொண்டு முடியும் வினையெச்சங்கள் குறித்து நேமிநாதம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், தமிழ்க் காப்பு இயம் ஆகியவை சுட்டவில்லை.

சினைவினை சினையோடு முடிவது மட்டுமன்றி முதலோடும் முடியும் என்பதை இனிய தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் போன்றவை கூறவில்லை.

தன்வினை, பிறவினை கொண்டு முடியும் எச்சங்கள் குறித்து நேமிநாதம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், தமிழ்க்காப்பு இயம் போன்றவை கூறவில்லை. வினையெச்சம் பல அடுக்கி வந்து ஒரு வினைச்சொல்லைக் கொண்டு முடியும் என்பதை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டவில்லை. பெயரெச்சம் குறித்து இலக்கணக் கொத்து, அறுவகைஇலக்கணம் ஆகியவை விளக்கவில்லை. செய்யும் என்னும் சொல் நிலம் முதலிய ஆறனோடும் பொருந்திப் பெயரெச்சமாய் வரும்போது முன்பு நீக்கப்பட்ட பல்லோர் படர்க்கை, தன்மை, முன்னிலை ஆகிய மூவிடங்களிலும் வரும் என்னும் (தொல். சொல். 235) தொல்காப்பியக் கருத்து யாதொரு நூலிலும் இடம்பெறவில்லை.

பெயரெச்ச, வினையெச்சச் சொற்கள் எதிர்மறையில் வரினும் பொருள் நிலையிலிருந்து திரியாது என்பதை நேமிநாதம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக் காட்டவில்லை. எச்சச் சொற்களுக்கும் முடிக்கும் பயனிலைகளுக்கும் இடையே பிறசொற்கள் வரினும் நீக்கப்படாது என்பதை நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

செய்யும் என்னும் சொல் திரிந்து வரும் முறையை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. ‘செய்து’ எனும் இறந்த கால வாய்பாடு எதிர்காலத்தோடு மயங்கும் என்பதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

முக்காலத்திற்கும் ஒத்தியங்கும் பொருளை நிகழ்காலத்தில் கூறுவர் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல், தமிழ்நூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

விரைவுப்பொருளில் காலம் மயங்கும் என்பதை நேமிநாதம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்க் காப்பு இயம் ஆகியன சுட்டிக் காட்டில. சிறப்புப்பொருளிலும், இது செயல் வேண்டும் எனும் வாய்பாட்டிலும், வற்புறுத்தலில் வரும் வினாவுடை

வினைச்சொல்லிலும் காலம் மயங்குவதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக் காட்டில. இயல்பையும், தெளிவையும் சுட்டக் காலம் மயங்கிவரும் என்பதை நேமிநாதம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், இலகுதமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியன கூறவில்லை.

செயப்படுபொருளை வினைமுதல் போலக் கூறுதலை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் பின்பற்றவில்லை.

இறந்தகாலமும், எதிர்காலமும் மயங்கி வரும் என்பதை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக் காட்டவில்லை.

புதுமரபு

பெயர்ச்சொல்

இலக்கணிகள் அனைவரும் பெயரினது இயல்புகளையே இலக்கணமாக சுட்டிச் செல்ல, இனிய தமிழ் இலக்கணம் எது பெயர் என்பதற்கு விடை பகரும் விதமாக,

பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல்லாகும். (இ.த.இ.82)

என்றும்,

அவரவர் மொழியில் அகிலப் பொருள்களை
எளிதாய் அறிவதற் கிட்டதே பெயராம் (இ.த.இ.88)

என்றும் கூறுவது புதுமரபாகும்.

தமிழ்நூலும் இக்கருத்தின் அடிப்படையில், உலகத்திலுள்ள பொருள்களைப் பிரித்தறியும் வகையில் பெயர்த்து அதனை ஒரு குறியீடு இட்டு வழங்குவது பெயர்ச்சொல்லாம் என்று குறிப்பிடுகிறது (த. நூ. 58).

பெயர்கள் திரிந்து வருதல்

நேமிநாதம், சில பெயர்கள் திரிந்து வருவதைச் சுட்டிக் காட்டியுள்ளது. பெயர் என்னும் சொல் பேர் என்றும், பெயர்த்து என்னும் சொல் பேர்த்து என்றும், ஒடு என்னும் சொல் ஓடு என்றும், நீயிர் என்னும் சொல் நீர் என்றும், எவன் என்னும் சொல் என் என்றும் என்னை என்றும், பொழுது என்னும் சொல் போது என்றும் திரிந்தன. யா முதற்பெயர் ஆ முதலாயும் வரும் (நேமி. 60) என்பதை நேமிநாதம் பதிவு செய்துள்ளமை புதுமரபாகும்.

புதுமரபு – வினையியல்

விதங்கள்

காலங்கள் மூன்று என்னும் தமிழ் மரபை ஏற்கும் இனிய தமிழ் இலக்கணம் அவற்றோடு விதம் என்பதனைப் புதிதாகக் குறிப்பிட்டுள்ளது. ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் முதலிய ஐரோப்பிய மொழிகளில் இன்னும் சில காலங்கள் உண்டு. தமிழிலும் அவை அவசியம் வர வேண்டும் என்று கூறி அதற்கு விதங்கள் (Moods) என்று பெயரிடுகிறார் சுத்தானந்த பாரதியார். விதங்களின் வகைகளாக,

குறி, ஆல், வியங்கோள், ஏவல், எச்சமெனும்
விதங்கள் பத்தொன்பது காலம் பெறுமே. (இ. த. இ. 135)

என்று குறிப்பிடுகிறார்.

வினை வகைகள்

இலக்கணக்கொத்து வினை வகைகளை இலக்கண அடிப்படையில் கூறுவதோடு மட்டுமல்லாமல் தத்துவ அடிப்படையிலும் கூறுவது புதுமரபாகும். தத்துவ அடிப்படையில் வினை வகைகளை எண்வகைப்படுத்துகிறது.

தனக்குப் பயனே, பிறர்க்குப் பயனே
தனக்கும் பிறர்க்கும் சார்இரு பயனே
தனக்கும் பிறர்க்கும் பயன்சார்பு இலவே
எனநால் வகையாய் இயன்றே, இவைதாம்
சிற்றறி வோர்வினை, பேரறிவோர் வினை
எனஇரு கூறாய் எட்டாம் என்பர். (இ. கொ. 80)

எனக் குறிப்பிடுகிறது.

மேலும், வினைவகையின் விளக்கமாக,

மனம்மொழி மெய்அறிவு ஆகிய நான்கன்
அசைவே ஆகியும் அவ்வசைவு இன்றியும்
நல்வினை தீவினை வெறுவினை எனநடந்து
அறிந்து செய்வினை அறியாது செய்வினை
அசேதனம் செய்வினை எனவே அமர்ந்து
தீவினை நல்வினை சிலமுறை திறம்பிச்

செய்யா வினையே செய்வினை ஆகிச்

செய்இரு வினையே செய்யா வினையாய்

இன்னும் பலவாம் இலக்கணம் பெறுமே. (இ. கொ. 81)

என்று விளக்குகிறது.

அறுவகை இலக்கணமும் தத்துவ அடிப்படையிலேயே வினையை வகைப்படுத்துகிறது.

ஈகை ஆதிய நல்வினை; ஏற்கை

ஆதிய தீவினை அறிஞராம் அவற்கே (அ. இ. 214)

என்கிறது. எனினும் இவை பொருள் அடிப்படையில் அமைந்த பாகுபாடு. சொல் இலக்கணத்தில் வினைக்கு இப்பாகுபாடு பொருந்துமாறில்லை. எனினும் இலக்கணத்தோடு நீதியும் புகட்டுவான் வேண்டி இந்நூற்பாச் செய்தார் என இந்நூலின் உரையாசிரியர் (ப. வெ. நாகராசன்) சமாதானம் கொள்கிறார்.

வினையெச்சம் - இலக்கணம்

தொல்காப்பியம் வினையெச்சத்திற்கு விளக்கம் தரவில்லை. நன்னூலே வினை எச்சத்தை விளக்குகிறது.

தொழிலும் காலமும் தோன்றிப் பால் வினை

ஒழிய நிற்பது வினையெச் சம்மே. (நன். 342)

என்று விளக்குகிறது. இலக்கண விளக்கம்,

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்

தேருங்கால் ஐம்பால்மூ விடத்தன அவைதாம்

பிறிதொடு இயைந்து அல்லது நிற்றல் ஆற்றாது

குறைபட நிலையும் கொள்கைய என்ப. (இ. வி. 242)

என்று விளக்குகிறது.

தொன்னூல் விளக்கம் (தொ. வி. 117), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. ப. 155) தென்னூல் (தென். சொற். 132), தமிழ்நூல் (த. நூ. 108), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 343) ஆகியனவும் நன்னூல், இலக்கண விளக்கக் கருத்தை அடிப்படையாக வைத்தே வினையெச்சத்தை விளக்குகின்றன. அறுவகை இலக்கணம்,

சொல்லி நின்று வந்துஎனல் ஆதிய

மற்றும்ஓர் வினையை வருவிக்கும் ஆதலின்

வினையெச்சம் ஆம்என விளம்பிடல் இயல்பே (அ. இ. 213)

என விளக்குகிறது.

இலக்கணக்கொத்து எச்சம் பற்றி நிலவிய பல்வேறு கருத்துகளைப் பதிவு செய்துள்ளது.

எச்சம் என்று ஒன்று இல்லை இவை அடை என்றும்

வேறு எச்சம் என்று இலை விகாரமுற்று என்றும்

எச்சம் ஒன்று என்றும் இரண்டே என்றும்

தன்வினை பிறவினை இவ்விரண்டு என்றும்

முப்பொழுது அறிதலான் மூன்றே என்றும்

தலைமைஇல் தலைமை எனஇரண்டு என்றும்

காரணம் காரியம் என இரண்டு என்றும்

முதல்வினை சினைவினை என இரண்டு என்றும்

இயல்பு திரிபு இரண்டே என்றும்

விரியே தொகையே எனஇரண்டு என்றும்

வினையெச்சம் ஒன்றையே வெவ்வேறு என்றும்

ஈறுசொல் பற்றி இரண்டே என்றும்

இன்னும் பலபல இலக்கண மாகச்

சொன்னார் சிலரே துணியார் பலரே (இ. கொ. 84)

என்பதன் வழி எச்சம் என்ற ஒன்றையே ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலக்கணமாகக் கருதியமையைப் புலப்படுத்துகிறார் சாமிநாத தேசிகர்.

தொகுப்புரை

- எல்லாச்சொல்லும் பொருள் குறித்தன என்பதை ஓரிரு இலக்கணிகள் தவிரப் பலரும் பதிவு செய்துள்ளனர்.
- சொற்கள் பொருள் உணர்த்தும் தன்மையைப் பொருண்மை தெரிதல், சொன்மை தெரிதல் என இரண்டாகப் பாகுபடுத்தியதில் நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தென்னூல், தமிழ்நூல் ஆகியன ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- சொற்பகுப்பை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்காகப் பாகுபடுத்தியதில் தமிழ்நூல் தவிர்ந்த இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.
- உயர்திணைப்பெயர்களை விளக்குவதில் தென்னூல் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது.
- விரவுப்பெயரின் இலக்கணத்தைக் கூறுவதில் நேமிநாதம் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது.
- விரவுப்பெயரின் வகை, விரிகளைக் குறிப்பிடுவதில் தென்னூல் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது.
- இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர், முறைப்பெயர் ஆகியவற்றின் வகைகளைச் சுட்டுவதில் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- விரவுப்பெயர்களில் தான், நீ என்பன ஒருமைக்கும், தாம், நீயிர், எல்லாம் என்பன பன்மைக்கும் உரியன என்பதில் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியன உடன்படுகின்றன.
- 'ஒருவர்' என்னும் உயர்திணைப் பெயர்ச்சொல் ஆண், பெண் ஆகிய இரு பால்களுக்கும் பொதுவாக வரும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியன ஏற்றுக் கொண்டுள்ளன.
- இறைச்சிப்பொருளில் வரும் விரவுப் பெயர் உயர்திணை ஈறு கொண்டு முடிந்தாலும் அஃறிணையேயாகும் என்பதையும் கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் அவ்வத்திணைக்கு உரிமை கொண்டு பழகிய இடத்து அஃறிணைப் பெயராய்த் தோன்றினும் அவை உயர்திணையைக் குறிக்கும் என்பதையும் தென்னூல் ஏற்றுக்கொண்டுள்ளது.
- மகடூஉ மருங்கின் பால் திரி கிளவி (பெண்மகன்) பெண்பாலுக்குரிய வினை கொண்டு முடியும் என்பதை முத்துவீரியம் பின்பற்றியுள்ளது.

- செய்யுளில் சில பெயர்களின் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாகத் திரியும் என்பதில் நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- வினைச்சொல்லின் பொது இலக்கணமாக வேற்றுமை கொள்ளாது, காலம் காட்டும் என்பதில் முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியவை ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- காலங்கள் மூன்று என்பதிலும், அவை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பதிலும் இலக்கணிகள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர்.
- வினைச்சொல்லின் வகைகளை உயர்திணை வினை, அஃறிணை வினை, விரவு வினை எனப் பாகுபடுத்துவதில் நேமிநாதமும், முத்துவீரியமும் ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- தன்மைப் பன்மை, தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகளைக் குறிப்பிடுவதில் நேமிநாதம், முத்துவீரியம், தென்னூல் ஆகியன தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளன.
- உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்றுகளில் இலக்கணிகள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர்.
- உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதிகளில் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம் ஆகியவை ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதிகளைக் குறிப்பிடுவதில் நேமிநாதம், முத்துவீரியம், தென்னூல் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- அஃறிணை ஒருமை வினைக்குரிய ஈறுகளில் தொல்காப்பியத்தோடு நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தென்னூல் ஆகியன ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- விரவு வினைகளைக் குறிப்பிடுவதில் முத்துவீரியம் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது.
- முன்னிலை ஒருமை வினைமுற்றுகளில் தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியன ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- முன்னிலைப் பன்மை வினைமுற்றுகளில் நேமிநாதம், நன்னூல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், இனிய தமிழ் இலக்கணம் ஆகியவை ஒத்துள்ளன.
- முக்காலத்திலும் ஒத்தியல் பொருளை நிகழ்காலத்தில் கூற வேண்டும் என்பதை நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தமிழ்நூல், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல் ஆகியன பின்பற்றியுள்ளன.

- செயப்படுபொருளை வினைமுதல் போலக் கூறவேண்டும் என்பதை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியன ஏற்கின்றன.
- தொல்காப்பியம் தொடங்கி எல்லா இலக்கண நூல்களும் சொல்லின் வகைகளை பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பாகுபடுத்த தமிழ்நூல் பெயர், வினை ஆகிய இரண்டை மட்டும் சுட்டுவது மரபு மாற்றமாகும்.
- பெயர்ச்சொல்லின் வகைகளைத் தொல்காப்பியர் திணை அடிப்படையில் பாகுபடுத்த, நன்னூல் பால் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளது. பிற்றை இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றியுள்ளனர்.
- 'கள்' விகுதி அஃறிணைப் பன்மைக்கு மட்டுமே வரும் என்பது தொல்காப்பியர்தம் கருத்து. நேமிநாதம் உயர்திணை ஒருமைப் பால் கள்ளோடு வரும்போது பன்மைப்பால் தோன்றுவனவும் உள என்று கூற, நன்னூல் உயர்திணைக்கும் வரும் என உறுதிப்படுத்துகிறது. பிற்றை இலக்கணிகள் நன்னூல் கருத்தை ஏற்கின்றனர்.
- நன்னூல் விரவுப் பெயரைப் பொதுப் பெயர் என்ற சொல்லால் குறிக்கிறது. மேலும் இயற்பெயரை முதற்பெயர் என்ற சொல்லால் குறிப்பிடுகிறது.
- தொல்காப்பியம் தான், தாம், எல்லாம், நீயிர், நீ என்ற பெயர்களைக் கூறுகிறது. நன்னூல் யான், நான், யாம், நாம் ஆகிய தன்மைப் பெயர்களையும், எல்லீர் நீயிர், நீவிர், நீர், நீ எனும் முன்னிலைப் பெயர்களையும், மற்றவை படர்க்கைப் பெயர்கள் எனவும், எல்லாம் என்பதைப் பொதுப்பெயராகவும் கூறுகிறது.
- தன்மைப் பெயரைத் தொல்காப்பியம் உயர்திணையில் கூற, நன்னூல் விரவுப் பெயரில் கூறியுள்ளமை குறிப்பிடத்தகுந்த மரபு மாற்றமாகும்.
- சில இலக்கணிகள் பெயர் வகைகளைத் திணை, பால் அடிப்படையில் குறிப்பிடாமல் மற்றொரு விதமாக வகைப்படுத்தியுள்ளனர். அந்த வகையில் தொன்னூல் விளக்கமும், இனிய தமிழ் இலக்கணமும் பெயர்ச் சொல்லின் வகைகளை மரபு, காரணம், ஆக்கம், இடுகுறி என நால்வகைப்படுத்துகின்றன. அறுவகை இலக்கணம், தென்னூல், தமிழ்நூல் ஆகியன இடுகுறி, காரணம் என இருவகைப்படுத்துகின்றன. இலகு தமிழ் ஐந்திலக்கணம் பெயர்ச் சொல்லின் வகைகளைப் பதினைந்து வகைகளாகப் பாகுபடுத்தியுள்ளது. இவை மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கன.
- அறுவகை இலக்கணம் தொழிற்பெயர்களை பொதுவினை என்று குறிப்பிடுவது மரபு மாற்றமாகும்.
- இலக்கணக்கொத்தும், சுவாமிநாதமும் வினை வகைகளைத் தனிவினை, தொடர் வினை எனப் பகுப்பது மரபு மாற்றமாகக் கொள்ளத் தக்கது.
- தொல்காப்பியம் தன்மைப் பெயரைப் போலவே தன்மை வினையையும் உயர்திணையாகக் குறிப்பிட, நன்னூல் விரவுத்திணையாகக் குறிப்பது மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது.

- நன்னூல் தொல்காப்பியம் குறிப்பிடும் தன்மைப் பன்மை வினைமுற்றுகளோடு 'ஓம்' என்பதையும், தன்மை, ஒருமை வினைமுற்றுகளோடு அன் என்பதையும் சேர்க்கிறது.
- அ∴றிணைத் தெரிநிலை வினைமுற்றுக்குக் கூறப்பட்ட ஈறுகளே அ∴றிணைக் குறிப்பு வினைமுற்றிற்கும் வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல், 'டு' விகுதி மட்டும் குறிப்பு வினைமுற்றில் வருமாறு கூறுவது மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது.
- விரவு வினைகளைச் சுட்டுவதிலும் சிற்சில மாற்றங்கள் இலக்கணிகளிடையே காணப்படுகின்றன. நேமிநாதம் அன்று, அல்ல, உண்டு என்பவற்றையும் நன்னூல் உண்டு என்பதையும் புதிதாகச் சேர்க்கின்றன.
- வியங்கோள் வினை படர்க்கையில் மட்டுமே வரும் எனத் தொல்காப்பியம் கூற, நேமிநாதம், நன்னூல் தொடங்கி பிற்றை இலக்கணிகள் அனைவரும் மூவிடங்களிலும் வரும் எனக் கூறுவது மரபு மாற்றமாகும்.
- தொல்காப்பியம் குறிப்பிடும் வினையெச்ச வாய்பாடுகளில் சிலவற்றை நேமிநாதம் நீக்கியுள்ளது. பான், பாக்கு என்பவற்றைச் சேர்க்கிறது. நன்னூல் செயற்கு என்பதை நீக்கி வான், பான், பாக்கு ஆகியவற்றை இணைத்துள்ளது.
- சொற்கள் பொருள் உணர்த்தும் பொழுது குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பொருள் உணர்த்தும் என்று தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல் குறிப்பால் பொருள் தருவன எவை எவை என்பதைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளமை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது. தென்னூல் முப்பது வகையான குறிப்பு மொழிகளைக் கூறுகின்றது.
- தொல்காப்பியம் பெயர்ச்சொல்லுக்குத் தனியாக இலக்கணம் கூறவில்லை. வேற்றுமையியலில் ஆங்காங்கே கூறியுள்ளது. நன்னூலே பெயர்ச்சொல்லுக்கு விரிவான இலக்கணம் தருகிறது.
- நன்னூல் வினைச்சொல்லின் பொது இலக்கணத்தை வினை, வினைக்குறிப்பு என இரண்டாகப் பகுத்து, இரண்டனுக்கும் தனித்தனியே இலக்கணம் கூறுவது மரபு வளர்ச்சியாகும்.
- தொல்காப்பியம் மூவகைக் காலங்களை மட்டும் குறிப்பிட, நன்னூல் தொடங்கிப் பிற்றை இலக்கணிகள் கால இடைநிலைகளையும் கூறியுள்ளமை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.
- முன்னிலை ஒருமை வினைமுற்றுகளாக இ, ஐ, ஆய் என்பவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிட, நேமிநாதம் உண், சேர், பொரு என்பவற்றைச் சேர்க்கிறது. நன்னூல் ஏவலில் வரும் இருபத்து மூன்று ஈறுகளையும் சேர்க்கிறது.
- முன்னிலைப் பன்மை வினைமுற்றுகளாக உம், கள் ஈறுகளைப் பிற்கால இலக்கணிகள் குறிப்பிட்டுள்ளமை மரபு வளர்ச்சி கருதி ஏற்றுக் கொள்ளத்தக்கது.

- தொல்காப்பியர் வியங்கோள் விகுதிகளையும், பொருண்மைகளையும் சுட்டவில்லை. உரையாசிரியர்களே அவற்றை விளக்கியுள்ளனர். பிற்றை இலக்கணிகள் அவற்றை நூற்பாவாக்கித் தந்துள்ளனர்.
- தொல்காப்பியர் வினையெச்ச வாய்பாடுகளைக் குறிப்பிட, நன்னூல் அவற்றை எக்காலத்திற்கு உரியன என்றும் கூறுவது மரபு வளர்ச்சியாகும்.
- பெயரெச்ச வாய்பாடுகளாக செய்யும், செய்த என்பவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல் 'செய்கின்ற' எனும் வாய்பாட்டையும் இணைக்கிறது.
- விரவுப்பெயர் நிகழ்காலத்து வினையால் சொல்லும் போது உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்து என்பதை நேமிநாதம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடாமை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.
- தமிழ்க்காப்பு இயத்தில் இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற் பெயர் என்ற விரவுப்பெயர் பாகுபாடுகள் சுட்டப்பட்டில.
- 'ஒருவர்' என்னும் பெயர் ஆண், பெண் பால்களுக்குப் பொதுவாக வரும் என்பதை நேமிநாதம், தமிழ்க்காப்பு இயம் ஆகியன குறிப்பிடாமை மற்றும் ஒருவர் என்னும் சொல் பலர்பாலுக்கும் வரும் என்ற தொல்காப்பியக் கருத்து பிற்றை நூல்களில் இடம்பெறாமை மரபு வீழ்ச்சியாகும்.
- மகடூஉ மருங்கின் பால் திரி கிளவி பெண்பால் வினை முடிபையே பெறும் என்பதை முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை.
- இறைச்சிப் பொருளில் வரும் உயர்திணை ஈறு கொண்டு முடியும் பெயர்கள் அஃறிணையையே சுட்டும் என்பதையும், கருவிப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர்கள் அவ்வத்திணைக்கு உரிமை கொண்டு பழகிய பெயராய் நிற்குமிடத்து உயர்திணையைக் குறிக்கும் என்பதையும் தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடாமை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.
- நேமிநாதம், இலகு தமிழ் ஐந்திலக்கணத்தில் மார் விகுதி இடம்பெறாமை, அஃறிணைப் படர்க்கைப் பன்மை விகுதிகளுள் ஒன்றான 'வ' விகுதி நன்னூல் முதலான நூல்களில் இடம் பெறாமை மரபு வீழ்ச்சியாகும்.
- இலக்கணிகள் அனைவரும் பெயரினது இயல்புகளையே பெயர்ச்சொல்லின் இலக்கணமாகச் சுட்டிச் செல்ல, இனிய தமிழ் இலக்கணம் அவரவர் மொழியில் அகிலப் பொருள்களை எளிதாய் அறிவதற்கு இட்டதே பெயராகும் என விளக்கம் தருவது புதுமரபாகும்.
- நேமிநாதம் சில பெயர்கள் திரிந்து வருவதைச் சுட்டிக் காட்டியுள்ளமை புதுமரபாகக் கொள்ளத்தக்கது,
- இனிய தமிழ் இலக்கணம் 'விதங்கள்' என்னும் காலப்பகுப்பைக் கூறுவது புதுமரபாகும்.

- இலக்கணக்கொத்தும், அறுவகை இலக்கணமும் தத்துவ அடிப்படையில் வினை வகைகளை விளக்குவது புது மரபாகும்.
- தொல்காப்பியம் வினையெச்சத்திற்கு இலக்கணம் கூறவில்லை. நன்னூலே இலக்கணம் கூறுகிறது. இது புதுமரபாகக் கொள்ளத் தக்கது.

சான்றெண் விளக்கம்

1. சூ. இன்னாசி, சொல்லியல், ப. 64
2. ச.வே.சுப்பிரமணியன்,(கட்.,) தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள், பக். 129-130.
3. தி.வே.கோபாலய்யர் (ப. ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, (பெயரியல், வினையியல்), பக்.66-67.
4. செ.வை. சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு 2, பக். 22-23.
5. கா.கோ.வேங்கடராமன், தொல்காப்பியத்தமிழ், ப. 152.
6. தே.ஆண்டியப்பன், காப்பியர் நெறி - சொல்லியல், ப. 71
7. செ.வை.சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு 2, ப.40.
8. மேலது., பக்., 46-47.
9. தி.வே.கோபாலய்யர் (ப. ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, (பெயரியல், வினையியல்), ப. 331.
10. செ.வை.சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு 2, பக். 48
11. தே.ஆண்டியப்பன், காப்பியர் நெறி - சொல்லியல், ப. 80.
12. சூ.இன்னாசி, சொல்லியல், ப. 87
13. மோ.இசரயேல், இலக்கண ஆய்வு – வினைச்சொல், பக். 24-25.
14. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, (பெயரியல், வினையியல்), ப. 108.
15. தே.ஆண்டியப்பன், காப்பியர் நெறி, ப. 82.
16. சு.அழகேசன், தொல்காப்பியப் புலப்பாட்டு நெறி, ப. 70.
17. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, (பெயரியல், வினையியல்), ப.358.
18. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், தமிழ் மொழி வரலாறு, ப. 129.
19. ரா.சீனிவாசன், மொழியியல், ப. 132.
20. சி.இலக்குவனார், பழந்தமிழ், ப. 114.
21. தே.ஆண்டியப்பன், காப்பியர் நெறி - சொல்லியல், ப. 74.
22. செ.வை.சண்முகம், தொல்காப்பிய ஆய்வு, ப. 245.
23. சூ.இன்னாசி, சொல்லியல், ப. 63
24. சாமிநாத தேசிகர், இலக்கணக்கொத்து, ப.237.
25. ச.அகத்தியலிங்கம், சங்கத்தமிழ் 4, ப.30.
26. மேலது., பக். 43-44
27. ச.அகத்தியலிங்கம், சங்கத்தமிழ் 5, பக். 8-9.
28. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, (பெயரியல், வினையியல்), ப. 527.

29. சூ.இன்னாசி, சொல்லியல், ப. 94.
30. மோ.இசரயேல், வினைச்சொல். பக். 16-19
31. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கொத்து, (பெயரியல், வினையியல்), ப.39.
32. மேலது., ப.135.
33. மேலது., பக்.272-273.
34. மேலது., ப.476.
35. மேலது., ப.375.
36. சு. அழகேசன், இலக்கணத்தேடல்கள், பக். 44-45.

இடைஉரி மரபுகள்

நால்வகைச் சொற்களுள் தனித்தியங்கும் ஆற்றலற்றன இடை, உரிச்சொற்கள். இவற்றுள் இலக்கணப் பொருளைத் தரும் சொல் வடிவங்கள் இடைச்சொல் எனவும் அகராதிப் பொருள் தருவன உரிச்சொல் என்றும் வழங்கப்பெறும். தொல்காப்பியம் மற்றும் பிற்கால இலக்கணிகள் குறிப்பிடும் இடை, உரிச்சொற்களின் பயில்முறை குறித்து ஆராய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

ஒத்த மரபு

இடைச்சொல்லின் இயல்பு

இடைச்சொல் பெயரையும், வினையையும் சார்ந்து வரும். தாமாக நடக்கும் இயல்பிலது என்னும் கருத்தை,

இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற்று இயலும் தமக்குஇயல் பிலவே. (தொல். சொல். 249).

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

இடைச்சொல்லுக்குரிய வரையறையாக அறிஞர் பலரும் பல்வேறு கருத்துகளைக் கொண்டுள்ளனர்.

பெயரும், வினையும் ஆகிய சொற்களின் முன்னும், பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடையே நிற்றலின் இடைச்சொல் எனப் பெயர் பெற்றது என்று சேனாவரையர் குறிப்பிடுகின்றார்[1].

‘‘பெயரையும், வினையையும் இடமாகக் கொண்டு வருதலின் இடைச்சொல்லாயிற்று’’[2] என்பர் தெய்வச்சிலையார்.

கல்லாடனார், ‘‘பெயர், வினைகள் உணர்த்தும் பொருட்குத் தான் இடமாக நிற்றலான் இடைச்சொல் ஆயிற்று’’[3] என்பர்.

‘‘இடைச்சொற்கள் யாவும் பெரும்பான்மையும் மொழிக்கு இடையில் வாரா. அங்ஙனமாயின் இடைச்சொல் என்பதன் பொருள் என்னையெனின் இடச்சொல் என்பதேயாம். அஃதாவது, பெயரிடத்தும், வினையினிடத்தும், அகத்தேனும், புறத்தேனும் தோன்றுவது’’[4] என சுப்பிரமணிய சாத்திரியார் விளக்கம் அளிக்கிறார்.

இடைச்சொல் குறித்து பெ.சுயம்பு, ‘‘இடைச்சொற்களை விரிவாக ஆராய்ந்த மோ. இசரயேல் (இடையும், உரியும் ப. 3) பெயர், வினைகளைச் சார்ந்து அவற்றினிடமாக

நின்று பொருள் உணர்த்தலால் இடச்சொல் என்று பெயர் பெற்று, அது போலியால் இடைச்சொல் என்றாயிற்று எனக் கருதுதல் பொருத்தம் உடைத்து எனக் கூறுகிறார். மேலும் இவர் இணைப்புச்சொற்கள் (Connectives), ஒட்டிகள் (Clitics), துணை வினைகள் (Anxiliary verbs), அன்பேவற் சொற்கள் (Mild imperatives), வினைப் பொருள் இழந்த வினை வடிவங்கள், பகுத்தற்கரியனவாகிய ஒருநிலைச் சொற்களையும் (Particles), ஒட்டுகளையும் தொகுத்துத் தொல்காப்பியம் இடைச்சொல் என விவரிக்கிறது என்கிறார்.''[5]

உரிச்சொற்கள் மட்டுமன்றி இடைச் சொற்களில் சிலவும் வேர்ச்சொல்லாக அமைவது உண்டு. இது குறித்து சூ. இன்னாசி, ''தனித்தியங்கும் ஆற்றலற்றனவாகி, கட்டு நிலை உருபன்களெனக் கருதத்தகும் இடைச்சொற்களுள் சில வேர்ச்சொல்லாந் தன்மை பெறுகின்றன எனக் கூறுவர். மற்றையான் என்னும் பெயரின் வேர் 'மற்று' என்றும், பிறன், பிறர்க்கு என்னும் பெயர்களின் வேர் 'பிற' என்றும், 'என்றான்' என்னும் வினையின் வேர் 'என்று' என்றும் கருதுவர்''[6]

தொல்காப்பியம் குறிப்பிடும் சொல் வகைகளை மீளாய்வுக்கு உட்படுத்துகிறார் ஏ. ஆதித்தன். அவர், ''தொல்காப்பியர் நெறிப்படி ஒட்டுக்களும், ஒருநிலைச்சொற்களும், இணைந்த சொல்வகையே இடைச்சொல் எனப்படும். தொல்காப்பியர் கால மொழியமைப்பினை அடிப்படையாகக் கொண்டு சொற்களைப் பெயர், வினை, பெயரடை, வினையடை, இடைச் சொற்கள் எனப் பகுப்பதே ஏற்புடையதாகும். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப் பெற்ற தொல்காப்பியம் பொருண்மை அடிப்படையில் ஒட்டுக்களையும், ஒருநிலைச் சொற்களையும் உள்ளடக்கி இடைச்சொற்கள் எனக் குறிப்பிட்டுள்ளமை முறையானதாகும்.

இக்கால மொழியியல் கொள்கைப்படி சொல்வகைப்பாகுபாடு என்பது அடிச்சொல் பாகுபாடு என்ற முறைமையில் பெயர், வினை, பெயரடை, வினையடை, ஒருநிலைச்சொல் எனப் பகுப்பதே முறையானதாக அமையும்''[7] எனக் குறிப்பிடுகிறார்.

'தமக்கு எனப் பொருள் இன்மை இடைச்சொற்குச் சிறப்பு இலக்கணமாக' சேனாவரையர் கூறுகிறார்[8]. இக்கூற்று, உரிச்சொல் போல இடைச்சொற்களுக்குத் தனிப்பொருள் இல்லை என்பதையும் அவை பெயர், வினைச் சொற்களைச் சார்ந்து பொருளை விளக்குவன என்பதையும் புலப்படுத்தும்.

''பெயரும், வினையும் உருவாகிக் கருத்தை வெளிப்படுத்துதற்குத் துணையாய் இருப்பன இடைச்சொற்கள் எனப்பட்டன. தாமாக நின்று பொருள் உணர்த்திய

சொற்களே காலப்போக்கில் தம் தனித்தன்மையை இழந்துவிட்டன.''[9] என்பர் சி. இலக்குவனார்.

மேற்கண்ட கருத்துகள் வழி, பெயர் வினைகள் பொருள் உணர்த்துவதற்கு உறுதுணையாக விளங்கும் சொற்கள் அல்லது சொல் வடிவங்களே இடைச்சொல் என்பதை அறிய இயலும்.

தொல்காப்பியம் மற்றும் உரையாசிரியர்களின் கருத்துகளின் அடிப்படையில் பின் வந்த இலக்கணிகள் பலரும் இடைச்சொல்லின் இயல்பை விளக்கியுள்ளனர்.

இடைச்சொல் பெயரையும், வினையையும் சார்ந்து வரும் அல்லது இடமாகக் கொண்டு வரும்; தனித்தியங்காது என்னும் கருத்தைப் பின்வந்த இலக்கணிகள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். (நன். 420, இ. வி. 251, மு. வீ. ஒழி.1, சு. நா. 54, இ. த. இ. 136, தென். சொற். 148, த. நூ. 128, த. கா. இ. 215)

வினா, சுட்டு, வேற்றுமை போன்றவை முந்தைய இயல்களில் விளக்கப்பட்டதால் அவை தவிர்ந்த இடைச்சொற்கள் இவ்வியலில் கூறப்படும் (த. நூ. 130) என்று கூறும் தமிழ்நூல் இடைச்சொல்லின் இயல்பை அழகியதொரு உவமையால் விளக்கியுள்ளது. 'மொழியாகிய பெருமனையிற் தொடர் என்னும் பக்கச்சுவர்களைப் பெயர்ச் சொற்கள், வினைச்சொற்கள் என்னும் சொற்களாகிய கற்களால் எழுப்பும் போது, இடைப்பூசி இறுகச் செய்யத்தகுந்த சாந்தாக, தனிநோக்கின் பொருளின்றியும், பெயர்க்கும், வினைக்கும் முன்னும், பின்னும் வந்து பொருள் தருவது இடைச்சொல்லாகும்' எனத் தமிழ்நூல் விளக்குகிறது (த. நூ. 128).

தமிழ்க்காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த.கா. இ. 215).

இடைச்சொல்லின் பாகுபாடுகள்

இடைச்சொற்களைத் தொல்காப்பியம் எழுவகையாகப் பாகுபடுத்துகிறது. அவையாவன,

1. நிலைமொழியும், வருமொழியும் புணருகின்ற போது அவற்றின் பொருள்நிலைக்குத் துணை நிற்பன (சாரியைகள்)
2. வினைச் சொற்களில் காலம் காட்டும் உறுப்பாய் வருவன. (இடைநிலைகள், காலம் காட்டும் விகுதிகள்).
3. வேற்றுமைத் தொகைகளைத் தொடர்களாக்கி நிற்பன. (வேற்றுமை உருபுகள்)

4. தமக்கெனப் பொருளின்றித் தாம் சார்ந்த பொருளை வேறுபடுத்தி வருவன. (அசைநிலை)

5. செய்யுளில் பொருள் உணர்த்தாமல் இசை நிறைத்தல் பொருளில் வருவன (இசைநிறை).

6. கூறுவோரின் குறிப்பினால் தத்தம் பொருள் உணர்த்தும் சொற்கள்

7. ஒக்கும் என்னும் சொல் நீங்கலாக இரண்டு பொருள்களை ஒப்புமைப்படுத்த வரும் சொற்கள் (உவமஉருபுகள்) ஆகியன (தொல். சொல். 250).

இப்பாகுபாடுகள் வழி இடைச்சொற்கள் இலக்கணப் பொருளை மட்டுமே உணர்த்த வல்லன என்பதை அறிய இயலும். தொல்காப்பியர் ஏழு வகையான இடைச்சொற்களைக் குறிப்பிட்டுள்ளார் (தொல். சொல். 250). இவற்றுள் சாரியைகள், வேற்றுமை உருபுகள், கால உருபுகள் என்னும் மூன்றும் ஒட்டுக்களாகச் (affixes) செயல்படுவன. ஏனைய அசைநிலை, இசைநிறை, குறிப்பால் பொருள் தருவன, உவம உருபுகள் என்னும் நான்கும் ஒரு நிலைச் சொற்களாகச் செயல்படுவன.

‘‘ஒட்டுகளையும், ஒருநிலைச் சொற்களையும் இணைத்துத் தொல்காப்பியர் இடைச்சொற்கள் என்ற குறியீட்டினைக் கொடுத்துள்ளார். அகராதிப் பொருள் தரும் சொல் வடிவங்களைப் பெயர், வினை, உரி எனப் பகுத்த இவர் இலக்கணப் பொருளைத் தரும் (Grammatical meaning) வடிவங்களை இடைச்சொற்களெனக் குறிப்பிட்டுள்ளார்.’’[10] என்று ஏ.ஆதித்தன் விளக்குவர்.

இவ்வெழுவகை இடைச்சொற்களில் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுவனவாகிய சாரியைகள் குறித்துத் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் விளக்கியுள்ளார்.

வினைச்செயல் மருங்கின் காலமொடு வருந என்றது வினைச்சொல்லில் காலம் காட்டியும் பால் காட்டியும் வருவன. இவற்றை வினையியலில் விளக்கியுள்ளார்.

வேற்றுமை உருபுகள் குறித்து வேற்றுமை இயலில் விளக்கியுள்ளார்.

ஒப்புமையுணர்த்தும் இடைச்சொற்களாகிய உவம உருபுகளை உவமயியலில் விளக்கியுள்ளார்.

தத்தம் குறிப்பால் பொருள் செய்வன, அசைநிலை, இசைநிறை ஆகிய மூவகை இடைச்சொற்கள் இடையியலில் விளக்கப்பட்டுள்ளன.

இடைச்சொல் வகைகள் - ஒத்த மரபு

இலக்கண விளக்கம் மட்டுமே தொல்காப்பியத்தை அடியொற்றி வேற்றுமை, வினை, சாரியை, உவம உருபுகள், தத்தம் பொருள் உணர்த்துவன, இசைநிறை, அசைநிலை ஆகியன இடைச் சொற்கள் ஆகும் எனப் பகர்கிறது (இ. வி. 251).

இடைச்சொல் நிற்கும் இடம்

இடைச்சொற்கள் தாம் சார்ந்து வரும் உரிமையுடைய சொல்லுக்கு 1. முன்னரும் வரும். 2. பின்னரும் வரும். 3. தத்தம் ஈறுகள் திரியாது வருவதுடன் திரிந்தும் வரும். 4. ஓர் இடைச்சொல் பிறிதோர் இடைச்சொல்லுடன் சேர்ந்தும் வரும். (தொல். சொல். 251) என்று இடைச் சொற்கள் நிற்கும் இடம் குறித்துத் தொல்காப்பியம் விளக்குகிறது.

இது குறித்து சூ. இன்னாசி, "சொல்லெனச் சிறப்பித்துக் கூறப்படுகின்ற பெயர், வினை இரண்டனையும் சாரும் பொதுமைக் கூறுடையவாய் இடைச்சொற்கள் உள. சாருங்கால் அச்சொற்களில் உறுப்பாகவோ, வேறாகவோ வரும் இயல்பின. 'அது கொல்' என்பதில் கொல் என்னும் இடைச்சொல் பெயரையடுத்து வேறாய் வந்தது. 'வருகதில்' என்பதில் 'தில்' என்னும் இடைச்சொல் வினையடுத்து வேறாய் வந்தது. 'என்மனார்' என்பதில் 'மன்' என்னும் இடைச்சொல் உறுப்பாய் வந்தது. 'அது மன்' என்னுங்கால் சாரப்படும் வினைக்குப் பின்னும், 'கேண்மியா' என்னுங்கால் சாரப்படும் பெயருக்கு முன்னும் 'ஓஒவினிதே' என்னுங்கால் சாரப்படும் வினைக்கு முன்னும் வந்தன. ஈறு திரியும் தன்மை கொண்டனவாய் உள. எடுத்துக்காட்டாக, வினைச்சொல்லில் வரும் 'உம்' ஈறு 'உந்து' ஆகத் திரியும் என்பது தொல்காப்பிய இடையியலிலும், நன்னூல் வினையியலிலும் கூறப்படுகிறது. பிறிதவண் நிலையலாகப் பிறிதோரிடைச் சொல் ஓரிடைச் சொல்முன், "வருகதில் லம்ம வெஞ்சேரி சேர" என்றாற் போன்று வருதலுமுண்டு."[11] என்று விளக்குவார்.

இடைச்சொல் நிற்கும் இடம் - ஒத்த மரபு

இடைச்சொல்லானது பெயருக்கும், வினைக்கும் முன்னும் பின்னும் வரும் என்னும் கருத்தை நன்னூல் (நன். 420), இலக்கண விளக்கம் (இ. வி. 251), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 130), சுவாமிநாதம் (சு. நா. 54), தென்னூல் (தென். சொற். 149), தமிழ்நூல் (த. நூ. 128), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 359) போன்ற நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

ஈறுகள் திரிந்தும், திரியாதும் வரும் என்னும் கருத்தை சுவாமிநாதம் (சு. நா. 54), தென்னூல் (தென். சொற். 149), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 359) போன்ற நூல்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஓர் இடைச்சொல் பிறிதொரு இடைச் சொல்லுடன் சேர்ந்து வரும் என்னும் கருத்தைத் தென்னூலும் (தென். சொற். 149), தமிழ்க் காப்பு இயமும் (த. கா. இ. 359) மட்டுமே கூறியுள்ளன.

இடைச்சொற்களும், அவை உணர்த்தும் பொருள்களும் - ஒத்த மரபு

தொல்காப்பியர் இடையியலில் தத்தம் குறிப்பால் பொருள் செய்யும் இடைச்சொற்களையும், அசைநிலை, இசைநிறைப் பொருள் தரும் இடைச்சொற்களையும் விளக்கியுள்ளார். இடையியலில் 4 முதல் 21 ஆம் நூற்பா வரையில் தத்தம் குறிப்பால் பொருள் செய்யும் இடைச்சொற்களையும் 22 முதல் 32 ஆம் நூற்பா வரையில் அசைநிலை, இசைநிறைப் பொருள் தரும் இடைச்சொற்களையும் விளக்கியுள்ளார்.

தத்தம் குறிப்பால் பொருள் செய்யும் இடைச்சொற்கள்

தொல்காப்பியர் தத்தம் குறிப்பால் பொருள் செய்யும் இடைச்சொற்களாக பதினேழு இடைச் சொற்களைக் குறிப்பிட்டுள்ளார்.

மன் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

தொல்காப்பியம் ‘மன்’ இடைச்சொல் கழிவு, ஆக்கம், ஒழியிசை ஆகிய முப்பொருள்களைத் தரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 247).

இக்கருத்தை நேமிநாதம் (நேமி. 77), முத்துவீரியம் (மு. வீ. ஒழி. 3) ஆகியவை பின்பற்றியுள்ளன.

‘தில்’ இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

‘தில்’ என்னும் இடைச்சொல் விழைவு, காலம், ஒழியிசை என்னும் முப்பொருள்களைத் தரும் என்பதை,

விழைவே காலம் ஒழியிசைக் கிளவிஎன்(று)
அம்மூன்று என்ப தில்லைச் சொல்லே. (தொல். சொல். 253).

என்னும் நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது.

மேலும், விழைவுப் பொருளில் வரும் ‘தில்’ இடைச்சொல் தன்மை இடத்தில் மட்டுமே வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 260).

தில் இடைச்சொல் முப்பொருள்களில் வரும் என்னும் தொல்காப்பியக் கருத்தை பின்வந்த இலக்கணிகள் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். (நேமி. 77), (நன். 431), (இ.வி. 264), (மு. வீ. ஒழி. 467), (சு. நா. 55), (தென். சொற். 154) (த. கா. இ. 361)

இவற்றுள் இலக்கண விளக்கம், முத்துவீரியம் போன்றவை நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

‘கொன்’ இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

‘கொன்’ என்னும் இடைச்சொல் அச்சம், பயமிலி, காலம், பெருமை என்னும் நான்கு பொருள்களை உணர்த்தி வரும் என்கிறது தொல்காப்பியம் (தொல்.சொல்.249).

இவற்றுள் ‘பயமிலி’ என்பதற்கு இளம்பூரணரும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் ‘பயமின்றி’ என்று பொருள் கொள்ள, தெய்வச்சிலையாரும், கல்லாடனாரும் ‘பயனின்றி’ என்று பொருள் கொண்டுள்ளனர்.

“கொன்னே கழிந்தன்று இளமை”(நாலடி.55)

என்னும் அடியைச் சான்று காட்டி, ‘இளமை பயமின்றிக் கழிந்தது’ என்று முன்னையோரும், ‘பயனின்றிக் கழிந்தது’ என்று பின்னையோரும் பொருள் கொண்டுள்ளனர்.

இப்பாடல் கருத்தை நோக்க, இளமை பயமின்றிக் கழிந்தது, இளமை பயனின்றிக் கழிந்தது என்று இரு வகையினும் பொருள் கொள்ள இயலும். ஆழ்ந்து நோக்கினால் ‘இளமை பயனின்றிக் கழிந்தது. முதுமையும் வந்து சேரும். அதற்குள் நமக்கு நல்நெறி சேர நெஞ்சே எழுவாயாக’ என்று வற்புறுத்திக் கூறுவதாக அமைந்துள்ளது. எனவே, ‘பயமின்றிக் கழிந்தது’ என்று கொள்வதைக் காட்டிலும் இளமை வீணாகக் (பயனின்றி) கழிந்தது என்பதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

அதோடு மட்டுமல்லாது கொன்னைச் சொல் உணர்த்தும் பொருள்களுள் ஒன்றாக அச்சம் என்பதும் இடம் பெற்றுள்ளமையால் அதன் எதிர்ச்சொல்லாகிய பயமின்மை என்பதும் வருவது பொருந்துவதாக இல்லை. ஆகவே பயனிலி என்பதே பயமிலியாகப் பாடம் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

கொன்னைச் சொல் உணர்த்தும் பொருள் குறித்த தொல்காப்பியக் கருத்தோடு நேமிநாதம் (நேமி. 77), இலக்கண விளக்கம் (இ. வி. 265), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.5), தென்னூல் (தென். சொற். 153), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ. 365) ஆகியவை ஒத்தமரபைக் கொண்டுள்ளன.

இலக்கண விளக்கம், முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் போன்றவை 'கொன்' இடைச்சொல் குறித்து தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன. முத்துவீரியம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டாலும் இறுதியில் இடம்பெறும் 'சொல்லே' என்பதை 'கிளவி' என மாற்றியுள்ளது (மு. வீ. ஒழி. 5).

'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

'உம்' என்னும் இடைச்சொல் எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எண்வகைப் பொருள்களையும் உணர்த்தி வரும் என்று தொல்காப்பியம் விளக்குகிறது (தொல். சொல். 250).

இக்கருத்தை நேமிநாதம் (நேமி. 76), நன்னூல் (நன். 425), இலக்கண விளக்கம் (இ. வி. 256), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 134), முத்துவீரியம் (மு. வீ. ஒழி. 6), சுவாமிநாதம் (சு. நா. 54), தென்னூல் (தென். சொற். 162), தமிழ்க்காப்பு இயம் (த. கா. இ. 366) போன்ற நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. தமிழ்க்காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

நன்னூல் 'எண்' என்பதை 'அளவை' என்ற சொல்லால் குறிக்கிறது (நன். 425).

தொன்னூல் விளக்கமும் நன்னூலைப் பின்பற்றி எண்ணை 'அளவை' என்று குறிப்பதுடன் தெரிநிலையைத் 'தெளிவு' எனக் குறிப்பிடுகிறது (தொ.வி.134). தெரிநிலை என்பதற்கு தெய்வச்சிலையார், "தெரிநிலை என்பது ஒரு பொருளை ஐயப்படுதலும், துணிதலும் இன்றி ஆராயும் நிலைமைக்கண் வருவது"[12] என விளக்கம் அளித்துள்ளார். தெரிநிலை என்பது ஆராய்தற்குரியது ஆயின் தெளிவாவது ஆராய்ந்து தெளிந்த பின் ஏற்படுவது. தெளிவிற்கு உதாரணம் காட்டும் வீரமாமுனிவர் 'ஆணுமன்று, பெண்ணுமன்று' என்பதைக் காட்டுகிறார். இது ஆராயும் பொருளில் வந்துள்ளமையால் தெரிநிலையைக் குறிக்கவே 'தெளிவு' என்னும் சொல்லாட்சியை வீரமாமுனிவர் பயன்படுத்தியிருத்தல் புலப்படும்.

ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

ஓகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு ஆகிய ஆறு பொருண்மைகளை உடையது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது

(தொல். சொல். 256). மேலும், சிறப்புப் பொருளில் வரும் ஓகாரம் அளபெடுத்து வரும் என்றும் தொல்காப்பியம் நவில்கிறது (தொல். சொல். 261).

ஓகாரம் உணர்த்தும் பொருண்மைகள் குறித்து முத்துவீரியம் மட்டுமே தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது (மு. வீ. ஒழி. 7).

இலக்கண விளக்கம், ஓகாரம் சிறப்புப்பொருளில் வரும்பொழுது அளபெடுக்கும் (தொல். சொல். 261) என்பதை மட்டும் சுட்டுகின்றது (இ.வி. 254).

ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் - ஒத்த மரபு

ஏகார இடைச்சொல் தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை ஆகிய ஐவகைப் பொருண்மைகளை உணர்த்தி வரும் என்னும் கருத்தை,

தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே (தொல். சொல். 257)

என்னும் நூற்பாவில் தொல்காப்பியம் விளக்கியுள்ளது.

முத்துவீரியம் தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளது (மு. வீ. ஒழி. 8). மேலும் ஏகாரம் தெளிவுப்பொருண்மையை உணர்த்தும் போது அளபெடுத்து வரும் என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 261). இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ. வி. 254).

என, என்ற என்னும் இடைச் சொற்கள் - ஒத்தமரபு

என, என்ற ஆகிய இரு இடைச் சொற்களும் வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் ஆகிய ஆறு பொருண்மைகளை உணர்த்தி வரும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 258-259).

இக்கருத்தைப் பிற்றை இலக்கணிகள் பலரும் ஏற்கின்றனர். (நேமி. 78), (நன். 424), (இ. வி. 255), (மு.வீ.ஒழி.9), (சு. நா. 55), (தென். சொற். 170), (த. கா. இ. 374).

'மற்று' என்னும் இடைச்சொல் - ஒத்த மரபு

'மற்று' என்னும் இடைச்சொல் வினை மாற்றும், அசைநிலையுமாய் வரும் (தொல். சொல். 260) என்று தொல்காப்பியம் கூறுவதை இலக்கண விளக்கம் (இ. வி. 266), முத்துவீரியம் (மு. வீ. ஒழி. 11), தென்னூல் (தென். சொற். 156), தமிழ்நூல் (த.நூ. 135), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 371) ஆகிய இலக்கண நூல்கள் ஏற்கின்றன. இவற்றுள் முத்துவீரியமும், தமிழ்க் காப்பு இயமும் இலக்கண விளக்க நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

‘எற்று’ என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் - ஒத்த மரபு

எற்று என்னும் இடைச்சொல் இறந்த (கழிந்த) பொருளை விளக்கி நிற்கும் என்பதைத் தொல்காப்பியம்,

எற்றென் கிளவி யிறந்த பொருட்டே (தொல். சொல். 263)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது. மேலும், ‘எற்று’ இடைச்சொல் இரக்கப் பொருளையும் தருவதை உரையாசிரியர்கள் ‘எற்று என் உடம்பின் எழில் நலம்’, ‘எற்றேற்றம் இல்லாருள் யான் ஏற்றம் இல்லாதேன்’ என்னும் எடுத்துக்காட்டுகள் வழி விளக்குகின்றனர்.

“என் உடம்பின் எழில்நலம் எத்தகைய இழிநிலையது என்று ஒருவன் இரக்கமாகக் கூறிய இக்கூற்றில் எற்று என்பது இரக்கப் பொருளில் வந்தது. ஏற்றம் (உயர்வு) இல்லாத பலருள்ளும் யான் ஏற்றம் இல்லாதேன் ஆவேன், இ∴து எவ்வளவு தாழ்ந்தது என்னும் பொருளில் எற்று என்பது இரக்கம் காட்டியது. ஏற்றம் என்பதற்குத் துணிவு எனப் பொருள் கண்டனர் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் பிறரும்.”[13] என்று ஆ. சிவலிங்கனார் விளக்குகிறார். எனினும் ‘எற்று’ இரக்கப்பொருளில் வரும் என எந்த இலக்கணிகளும் குறிப்பிடவில்லை.

இலக்கண விளக்கம் (267), முத்துவீரியம் (மு. வீ. ஒழி.12), தமிழ்க்காப்பு இயம் (த. கா. இ. 362) போன்றவை தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

சுவாமிநாதம் ‘எற்று’ என்னும் இடைச்சொல் ‘போகல்’ என்னும் பொருண்மையுடைத்து என்கிறது (சு. நா. 55). போகல் என்பது கழிந்ததைக் குறிக்கும் சொல்லாகவே உள்ளதால் இது தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது எனக் கருதலாம்.

தென்னூல் முன்னைய இலக்கணிகளைப் பின்பற்றி,

எற்றென் கிளவி கடந்தமை உணர்த்தும் (தென்.சொற். 157)

எனச் சுட்டுகிறது.

‘மற்றையது’ என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் - ஒத்த மரபு

மற்றையது என்னும் இடைச்சொல் மற்றொன்றைச் சுட்டுவதோடு அன்றி அதற்கு இனமாகிய பொருளைக் குறித்து வரும் எனத் தொல்காப்பியம் விளம்புகிறது. (தொல். சொல். 264). இக்கருத்தைப் பின்பற்றி நன்னூல்,

மற்றையது என்பது சுட்டிய தற்கு இனம் (நன். 434)

என்று குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கமும் (இ. வி. 268), முத்து வீரியமும் (மு. வீ. ஒழி. 10) நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன. தென்னூலும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளது (தென். சொற். 158).

மற்றையது என்னும் இடைச்சொல்லில் மற்றை என்பதே இடைச்சொல் எனக் கூறுவோரும் உள். இது குறித்து திருஞானசம்பந்தம் அவர்கள், ''மற்றை என்னும் ஐகார ஈற்றுச் சொல்லே இடைச் சொல்லாகும். அச்சொல் மற்றையது, மற்றையவை, மற்றையவன் என விகுதியோடு நின்றே பொருள் விளக்கும். சிறுபான்மை மற்றையாடை என விகுதியின்றித் தனித்தும் வரும்''[14] என்று கூறுகிறார்.

ஆழ்ந்து நோக்குங்கால் இக்கூற்று பொருத்தமுடையதாகவே தோன்றுகிறது. ஏனெனில் 'மற்றையது' என்னும் சொல் 'பிறிதொன்று' எனப் பொருள்படும். ''மாடல்ல மற்றை யவை'' என்னும் குறள் கருத்தும் இதனை உணர்த்தும். மேலும் இடைச் சொற்கள் இலக்கணப் பொருளை மட்டுமே உணர்த்தி வரும் இயல்பின ஆதலால் மற்றையது என்பதை விட மற்றை என்பதே இடைச்சொல்லாகக் கருத இடமுண்டு.

'மன்ற' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் - ஒத்த மரபு

'மன்ற' என்னும் இடைச்சொல் தெளிவுப் பொருண்மையில் வரும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 265).

இக்கருத்தை நேமிநாதம் (நேமி. 78), இலக்கண விளக்கம் (இ. வி. 270), முத்துவீரியம் (மு. வீ. ஒழி. 12), சுவாமிநாதம் (சு. நா. 55), தென்னூல் (தென். சொற். 174), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 363)ஆகியவை ஏற்றுக்கொண்டுள்ளன. இவற்றுள் இலக்கணவிளக்கம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியவை தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

'தஞ்சம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

'தஞ்சம்' என்னும் இடைச்சொல் எளிமைப் பொருளைத் தரும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 266). நேமிநாதமும் (நேமி. 78), சுவாமிநாதமும் (சு. நா. 55) இக்கருத்தைப் பின்பற்றியுள்ளன. இலக்கண விளக்கம் (இ. வி. 271), முத்துவீரியம் (மு. வீ. ஒழி. 14), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 364) ஆகியன தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

தஞ்சம் என்னும் சொல் பெயர்ச்சொல்லாக அடைக்கலப் பொருளிலும் வந்துள்ளமையை இசரயேல் சுட்டிக்காட்டியுள்ளார்.

தஞ்சம் அருளாய் நீயே (ஐங். 50) – அடைக்கலம். ஆனால் ‘‘அடைக்கலம் என்னும் பொருள் தரும் ‘தஞ்சம்’ என்னும் பெயர்ச்சொல் வேறு, இவ்விடைச்சொல் வேறு’’[15] என்பது ச. பாலசுந்தரம் அவர்களின் கருத்து.

‘அந்தில்’ இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் - ஒத்த மரபு

அந்தில் என்னும் இடைச்சொல் ‘ஆங்கு’ என்னும் இடப்பொருளை உணர்த்தியும், அசைநிலையாகவும் வரும் இவ்விரண்டு இயல்பினையும் உடையது என்பதைத் தொல்காப்பியம்,

அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவிஎன்(று)
ஆயிரண்டு ஆகும் இயற்கைத்து என்ப (தொல். சொல். 267)

என்று விளக்குகிறது.

இக்கருத்தை நன்னூல் (437), இலக்கண விளக்கம் (273), முத்துவீரியம் (ஒழி. 15), சுவாமிநாதம் (சு. நா. 56), தமிழ்க் காப்பு இயம் (372) ஆகிய நூல்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

‘கொல்’ இடைச்சொல் - ஒத்த மரபு

‘கொல்’ என்னும் இடைச்சொல் ஐயப் பொருளைத் தரும் எனத் தொல்காப்பியம் (தொல். சொல். 268) கூறுவதை முத்துவீரியம், அறுவகை இலக்கணம் ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன (மு. வீ. ஒழி. 16, அ. இ. 275).

‘எல்’ இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள்

‘எல்’ இடைச்சொல் விளங்குதற் பொருண்மையை உணர்த்தி வரும் என்பதை,

எல்லே இலக்கம் (தொல். சொல். 269).

என்று தொல்காப்பியம் கூறுகிறது. முத்துவீரியம் மட்டுமே ‘எல்’ இடைச்சொல் குறித்துப் பேசுகிறது. ‘எல்லே விளக்கம்’ (மு.வீ.ஒழி.16) என இளம்பூரணர் பாடத்தைக் கொண்டுள்ளது.

அசைநிலை, இசைநிறைப் பொருள் தரும் இடைச்சொற்கள் - ஒத்த மரபு

'ஆர்' இடைச்சொல்

இயற்பெயரின் முன்னர் ஆர் என்னும் இடைச்சொல் சேர்ந்து வரும். அவ்ஆர் சேர்ந்த இயற்பெயர் ஒருமைக்குரிய சொல்லைக் கொண்டு முடியாமல், பன்மைக்குரிய ஈற்றெழுத்தாகிய வினையைக் கொண்டு முடியும். இக்கருத்தைத் தொல்காப்பியம்,

> **இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி**
> **பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே (தொல். சொல். 270)**

என்னும் நூற்பாவழி விளக்குகிறது.

முத்துவீரியம் இந்நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (மு. வீ. ஒழி. 17). தொன்னூல் விளக்கமும் (137), தென்னூலும் (177) ஆர் இடைச்சொல்லை முன்னிலை அசைச்சொற்களில் அடக்குகின்றன.

ஏ, குரை என்னும் இடைச்சொற்கள்

ஏ, குரை ஆகிய இரு இடைச்சொற்களும் இசைநிறைத்தல், அசைநிலை ஆகிய இரு பொருண்மைகளில் வரும் இயல்பின என்பதை,

> **ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை**
> **ஆயிரண்டு ஆகும் இயற்கைய என்ப (தொல். சொல். 272)**

என்னும் நூற்பா விளக்குகிறது.

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், நிரல் நிரையாகக் கொண்டு 'ஏ' இசைநிறையாகவும், குரை அசைநிலையாகவும் வரும் எனப் பொருள் கூறுவார். சேனாவரையர் முதலான பிற உரையாசிரியர்கள் ஏ, குரை இரண்டுமே இசைநிறை, அசைநிலை என்னும் இரு பொருள்களிலும் வரும் என விளக்குவர்.

மேலும் இங்குக் கூறப்பட்ட ஏகாரம் முன்பு தேற்றம் வினாவே என்று கூறப்பட்ட ஏகாரம் அன்று. இவ்வேகாரம் தொடர்மொழியின் முதற்கண் தனித்து வருவதால் இதனை வேறு கூறினார் என உரையாசிரியர்கள் விளக்குவர்.

இவ் ஏ என்னும் இடைச்சொல்லும், குரை என்னும் இடைச்சொல்லும் இசைநிறை மற்றும் அசைநிலையில் வரும் என்பதை முத்துவீரியம் ஏற்றுக்கொண்டுள்ளது (மு. வீ. ஒழி. 19).

பிற்றை இலக்கண நூல்கள் ஏ என்பதை விடுத்து, குரை இடைச்சொல்லை மூவிடங்களுக்கும் பொதுவான அசைச்சொற்களில் ஒன்றாக அடக்கிக் கூறுகின்றன. (நன். 441, இ. வி. 277, தொ. வி. 137, சு. நா. 56, தென்.சொற். 177) இவற்றுள் சுவாமிநாதமும், தென்னூலும் குரை இடைச்சொல் அசைநிலையில் வருவதோடு இசைநிறைப் பொருளிலும் வரும் என்பதைச் சுட்டுகின்றன (சு. நா. 56, தென்.சொற். 177).

'மா' - இடைச்சொல்

'மா' என்னும் இடைச்சொல் வியங்கோளைச் சார்ந்து அசைநிலையாய் வரும் (தொல். சொல். 273) என்பதை பிற்றை இலக்கண நூல்களில் பெரும்பாலானவை ஏற்றுக் கொண்டுள்ளன. (நன். 439, இ. வி. 275, மு. வீ. ஒழி. 20, சு. நா. 55, இ. த. இ. ப. 187, தென். சொற். 178, த. கா. இ. 378) இவற்றுள் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் ஆகியன தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

முன்னிலை அசைச்சொற்கள்

முன்னிலை அசைச் சொற்களாக மியா, இக, மோ, மதி, இகும், சின் என்னும் ஆறனைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (தொல். சொல். 274) இவற்றுள் இகும், சின் ஆகிய இரு சொற்களும் தன்மை, படர்க்கை இடத்திலும் வரும் என்பதை,

அவற்றுள்
இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும்
தகுநிலை உடைய என்மனார் புலவர். (தொல். சொல். 275).

என்னும் நூற்பா வழித் தொல்காப்பியம் புலப்படுத்துகிறது.

முத்துவீரியம், தொல்காப்பியம் குறிப்பிடும் அறுவகை முன்னிலை அசைச்சொற்களையும், இகும், சின் ஆகியவை தன்மை, படர்க்கையிலும் வரும் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளது (மு. வீ. ஒழி. 21, 23).

'அம்ம' இடைச்சொல் உணர்த்தும் பொருள்

அம்ம என்னும் இடைச்சொல் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து நான் கூறுவதைக் கேள் என்று சொல்லும் பொருண்மையில் வரும் என்பதைத் தொல்காப்பியம்,

அம்ம கேட்பிக்கும் (தொல். சொல். 276)

என்று உரைக்கிறது.

இக்கருத்தை முத்துவீரியம், தென்னூல் ஆகியன பின்பற்றியுள்ளன. (மு. வீ. ஒழி. 22, தென். சொற். 178)

'ஆங்க' இடைச்சொல்

'ஆங்க' என்னும் இடைச்சொல் உரையசைப் பொருளில் வரும் (தொல். சொல். 277) என்னும் கருத்தைத் தமிழ்க் காப்பு இயம் பின்பற்றியுள்ளது (த. கா. இ. 379).

இலக்கணவிளக்கம் அசைநிலைப் பொருளில் வரும் என்கிறது (இ. வி. 273).

ஒப்பில் போலி

ஒப்புமையை உணர்த்தாமல் வரும் 'போலும்' என்ற சொல்லும் 'ஆங்க' என்பதைப் போல உரையசையாக வரும் (தொல். சொல். 278) என்னும் கருத்தை முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் ஆகிய நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன (மு. வீ. ஒழி. 24, த. கா. இ. 379).

மூவிட அசைச்சொற்கள்

மூவிடத்திற்கும் உரிய அசைச்சொற்களாகத் தொல்காப்பியம் யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது ஆகிய ஏழனையும் குறிப்பிடுகிறது (தொல். சொல். 279).

முத்துவீரியம் இக்கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளது (மு. வீ. ஒழி. 25).

பிரிவில் அசைச்சொற்கள்

ஆக, ஆகல், என்பது என்னும் மூன்று இடைச்சொற்களும் அசைநிலையாய் வருகின்ற போது இரட்டித்தே நிற்கும். தனித்து நின்று அசைநிலை ஆவதில்லை என்பது தொல்காப்பியம் (தொல். சொல். 280) கூறும் கருத்தாகும். முத்துவீரியம் இக்கருத்தைப் பின்பற்றியுள்ளது (மு. வீ. ஒழி. 26).

எச்ச உம்மையும், எதிர்மறை உம்மையும்

எஞ்சி நிற்கும் பிறிதொன்றை உணர்த்தும் எச்ச உம்மையும், எதிர்மறைப் பொருளைத் தரும் எதிர்மறை உம்மையும் ஒரு தொடரில் பொருந்தி வருதல் இல்லை (தொல். சொல். 283) என்னும் தொல்காப்பியக் கருத்தை ஏற்று தென்னூல்,

எச்சமும் மறையும் ஒருவழி நில்லா (தென். சொற். 164)

என்கிறது.

எச்ச உம்மையைப் பிற்படக் கூறல்

எஞ்சி நின்ற பொருளை உம்மையால் தழுவி நிற்பது எச்ச உம்மையாகும். அச்சொல் உம்மையின்றி வந்தால் அது செஞ்சொல் என்று கூறப்படும். அவ்வும்மை இல்லாத செஞ்சொல் தொடரை உம்மைத் தொடருக்குப் பின்னால் கூறாமல் முன்னர்க் கூறுதல் வேண்டும் என்று தொல்காப்பியம் விளக்குகிறது (தொல். சொல். 284).

இக்கருத்தை நன்னூல் (நன். 427), இலக்கண விளக்கம் (இ. வி. 258), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 135), இனிய தமிழ் இலக்கணம் (இ. த. இ. ப. 185), தென்னூல் (தென். சொற். 165) ஆகிய நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

முற்றும்மை எச்சவும்மையாதல்

முற்றும்மையினை அடுத்து நின்ற தொகைச் சொல்லிடத்து சிறுபான்மை எச்சச்சொல் உரித்துமாகும் (தொல். சொல். 285) என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதனை அடியொற்றி நன்னூல்,

முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும் (நன். 426)

என்று கூறுகிறது.

இலக்கணவிளக்கமும் (257), தென்னூலும் (தென். சொற். 163), தமிழ்க் காப்பு இயமும் (367) நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

தொகை பெற்றே வரும் எண்ணிடைச் சொற்கள்

எனா, என்றா என்பவற்றால் வரும் எண்ணின் இறுதியும், இடைச்சொல்லால் அன்றிப் பெயரால் எண்ணப்படும் செவ்வெண் இறுதியும், ஏகாரத்தைப் பெற்று வரும் எண்ணின் இறுதியும் ஆகிய மூன்றும் ஏதேனும் ஓரிடத்தில் வந்தாலும் தொகை பெறாமல் வருவதில்லை, தொகை பெற்றே வரும் (தொல். சொல். 290). என்னும் தொல்காப்பியக் கருத்தை நன்னூல் (428), இலக்கண விளக்கம் (260), தொன்னூல் விளக்கம் (136), தென்னூல் (சொற். 168), தமிழ்க் காப்பு இயம் (381) ஆகிய நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. இவற்றுள் இலக்கண விளக்கமும், தமிழ்க் காப்பு இயமும் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

வினையிலும் எண்ணிடைச்சொற்கள் வருதல்

எண்ணிடைச்சொற்கள் பெயர்ச் சொல்லோடு வருதலேயன்றி வினைச்சொல்லோடு நிற்பினும் தத்தம் நிலையினின்றும் திரியா (தொல். சொல். 293) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இக்கருத்தை நன்னூலும் (நன். 430), இலக்கண விளக்கமும் (இ. வி. 262) பின்பற்றியுள்ளன. இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

பிரிந்து நின்று பொருந்தும் எண்ணிடைச் சொற்கள்

என்று, என, ஒடு ஆகிய எண்ணிடைச் சொற்கள் மூன்றும் தொடரில் ஓரிடத்துத் தோன்றி எண்ணும் பொழுது பிரிந்து சென்று பிறவிடத்துப் பொருந்துதலையும் உடையனவாகும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 294). இக்கருத்தை நன்னூல் (நன். 261), இலக்கண விளக்கம் (இ.வி.261), தொன்னூல் விளக்கம் (தொ.வி.136), தமிழ்க்காப்பு இயம் (த.கா.இ.382) ஆகியன பின்பற்றியுள்ளன. இவற்றுள் இலக்கண விளக்கமும், தமிழ்க்காப்பு இயமும் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளன.

இடைச்சொற்களின் பொருள் அறியும் முறை.

இடைச்சொற்கள் ஒவ்வொன்றும் இன்னின்ன பொருளில் வரும் என வரையறுத்துக் கூறப்படினும் அச்சொற்களின் முன்னும் பின்னும் நின்ற பெயரோடும், வினையோடும் தொடர்புபடுத்தி ஆராய்ந்து உணர அவை வேறு பொருள்களையும் தரும். அசைநிலையாகவும், திரிந்தும் வரும். அவற்றையும் ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 295).

இலக்கண விளக்கம், தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது. (இ. வி. 287) தென்னூலும் இக்கருத்தை ஏற்று,

தத்தமக் குரியவென் றுரைத்தபொரு ளன்றியும்
ஒத்தன பிறவரின் ஓர்ந்தனர் கொளலே (தென். சொற். 176)

என இயம்புகிறது.

இடைச்சொற்களுக்குப் புறனடை

இலக்கண, இலக்கிய வளம் சான்ற பரந்துபட்ட மொழியாகிய தமிழ்மொழியில் காணப்படும் அனைத்து இடைச்சொற்களையும் தொகுத்துக் கூறி விட முடியாது. ஆதலால்,

கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்

கிளந்தவற்(று) இயலான் உணர்ந்தனர் கொளலே (தொல்.சொல்.296)

என்னும் நூற்பா வழி, இவ்வியலில் கூறப்பட்ட இடைச்சொற்களேயன்றி அவை போல்வன பிறவும் இடைச்சொற்களாகக் கொள்ளப்படும் என்று தொல்காப்பியர் உணர்த்துகிறார். மற்றை இலக்கணிகளும் தொல்காப்பியர் கருத்தோடு உடன்படுகின்றனர் (இ.வி.279, தென்.சொற்.184, த.கா.இ.386, த.நூ.145).

உரிச்சொல் மரபுகள்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் எட்டாவது இயலாக அமைவது உரியியல் ஆகும். தொல்காப்பியர் சொல் வகைகளைக் கூறும் பொழுது பெயர் வினைகளுக்கு முதலிடம் தந்து இரண்டாம் நிலையில் இடை உரிகளைக் கூறுகிறார். உரியியலைத் தனியொரு இயலாக அமைத்தமை குறித்து ஏ. ஆதித்தன், ‘‘தொல்காப்பிய முறைமைப்படி உரிச்சொற்கள் உருபுகளை ஏற்காமை மட்டுமன்றிப் பொருள் எளிதில் விளங்காமையும் அவற்றைத் தனியொரு சொல்வகையாக அமைப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது’’[16] என்று குறிப்பிடுகிறார்.

உரிச்சொற்கள் என்பவை சொல்லின் அடிச்சொற்களே எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். ‘‘பி. சுப்பிரமணிய சாத்திரி, தெ. பொ. மீ, இலக்குவனார் போன்றோர் அடிச்சொற்களே உரிச்சொல் என்னும் கொள்கையினர். பெயரிலோ, வினையிலோ அடங்காத பல்வகையானும் உரிமை பெற்றுச் செயல்படும் சொல்லாதலின் உரிச்சொல்லாயிற்று என்பர். (Free form). வினையடியும், பெயரடியுமாய் அமைவன உரிச்சொல் என்றார் பி. சுப்பிரமணிய சாத்திரி’’[17] என்னும் கா.கோ.வேங்கடராமனின் கருத்து சொல்லின் அடிச்சொற்களாக உரிச்சொற்கள் விளங்கியமையைப் புலப்படுத்தும்.

உரிச்சொற்களைத் தொல்காப்பியர் குறைச்சொற்கிளவி எனச் சுட்டுவதை,

உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்

குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி

நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும் (தொல். எழுத்து. 482)

என்னும் நூற்பா வழி அறிய இயலும்.

இடைச்சொற்கள் இலக்கணப் பொருளன்றி வேறு பொருள் தரும் இயல்பின அல்ல. உரிச்சொற்கள் பெயர், வினைகளைப் போன்று அகராதிப் பொருளைத் தரும் இயல்பின ஆதலால் இவை நிகண்டுகளுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. இது

குறித்து, “சொற்களுக்குப் பொருள் கூறும் நிலை, உரியியலில் காணப்படுவதால் இவ்வுரியியலைத் ‘தமிழ் நிகண்டு’ எனலாம். தொல்காப்பியத்துள் வரும் உரியியல் காலப்பழமை சான்றமையால் இதனை முதல் தமிழ் நிகண்டு எனலாம். இதன்கண் அமைந்த சொற்கள் அகர வரிசையில் அமைந்திருக்குமாயின் இதனையே முதற்றமிழ் அகராதி என்றும் கூறலாம். பிற்காலத்தில் நிகண்டுகள் தோன்றுவதற்கு இவ்வுரியியலே அடிப்படையாயிற்று. நிகண்டுகளுக்கு உரிச்சொல் என்ற பெயரே வழங்கப்பட்டதுண்டு. நிகண்டு நூல்களை ‘உரிச்சொல் பனுவல்’ என்றழைத்தனர். பின்னர் நிகண்டு நூல்களைத் துணையாகக் கொண்டு, அகர வரிசையில் பொருள் கூறும் அகராதிகள் தோன்றலாயின”[18] என்று ச.சாம்பசிவன் குறிப்பிட்டுள்ளமையை ஆ.தசரதன் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே தொல்காப்பிய உரியியலை நிகண்டு மரபின் தோற்றுவாய் என்று கூறுவது சாலப் பொருந்தும்.

மேற்கண்ட அறிஞர் தம் கூற்றுகள், உரிச்சொற்கள் நிகண்டுகளுக்கும், அகராதிகளுக்கும் முன்னோடியாய் விளங்கியமையை உணர்த்தி நிற்கின்றன.

உரிச்சொல்லின் பொது இலக்கணம் - ஒத்த மரபு

உரிச்சொல்லின் பொது இலக்கணமாகத் தொல்காப்பியம்,இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு வரும். பெயர் போலவும், வினை போலவும் அமைந்து அவ்விரு சொல்லாதற்கும் உரியதாய்த் தம் பகுதிகள் திரிந்து தோன்றும். ஒரு சொல் பல பொருளை உணர்த்தும். பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்தும். பயின்று வராத சொற்களைத் தெரிந்த சொற்களால் விளக்குதல். நெறிப்பட வராது அவ்வவற்றின் மரபிற்கேற்ப வேறு சொற்களுடன் சேர்ந்து பொருள் உணர்த்துதல் (தொல்.சொல்.297) ஆகிய கருத்துகளை முன்வைக்கிறது.

தொல்காப்பியத்தைப் பின்பற்றி உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு வரும் என்னும் கருத்தை நேமிநாதம் (80), இலக்கண விளக்கம் (280), முத்து வீரியம் (ஒழி. 27), தென்னூல் (சொற். 185), தமிழ்க் காப்பு இயம் (387) போன்ற நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

உரிச்சொற்கள் பெயர், வினைகளைச் சார்ந்து வரும் என்னும் கருத்தைப் பிற்றை இலக்கணிகள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். (நேமி. 80) (நன். 442) (இ. வி. 280) (மு. வீ. ஒழி. 27), (சு. நா. 57) (தென். சொற். 185) (த. நூ. 345) (த.கா. இ. 387).

ஒரு குணம், பல குணம் தழுவி வரும் என்பதை நேமிநாதம் (80), நன்னூல் (442), இலக்கண விளக்கம் (280), முத்து வீரியம் (ஒழி. 27), சுவாமிநாதம் (57),

அறுவகை இலக்கணம் (54), தமிழ்நூல் (345) தென்னூல்(சொற்.185), தமிழ்க் காப்பு இயம் (387) ஆகிய நூல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பயிலாத சொல்லின் பொருளை அறிய பயின்ற சொல்லோடு சார்த்திப் பொருள் அறிய வேண்டும் என்பதையும், உரிச்சொற்கள் அவ்வவ்வற்றின் மரபு வழிச் சென்று பொருள் உணர்த்தும் என்பதையும் இலக்கண விளக்கம் (280), முத்துவீரியம்(ஒழி. 27), சுவாமிநாதம் (57), த. கா. இ. (388) போன்ற நூல்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

வெளிப்பட வாரா உரிச்சொல் மேன (தொல். சொல். 298)

என்ற கருத்தின் அடிப்படையில் உரிச்சொற்கள் வெளிப்படை, வெளிப்படையல்லாதன என இரு நிலைப்படும் எனத் தென்னூல் நவில்கிறது (தென். சொற். 187).

பெயர்ச்சொல், வினைச்சொற்களுக்கு முதனிலையாக நிற்குமிடத்து ஒரு பொருளும், பெயர் வினைகட்கு அடையாக வருமிடத்து ஒரு பொருளும் தருவன வெளிப்பட வாரா உரிச்சொற்களாகும். பெயர் வினைகட்கு வரினும், அடையாக நிற்பினும் ஒரே பொருள் தருவன வெளிப்பட வருவனவாகும் (தென். சொற். 188) என்று விளக்கம் அளிக்கும் தென்னூல் ஓய், கவர்பு, உறு, கழி போல்வன வெளிப்பட வாரா உரிச்சொல் என்றும், நல், வெல், கெழு, கொழு போல்வன வெளிப்படை உரிச்சொல் எனவும் சான்று பகர்கிறது (தென். சொற். 189).

ஒரு சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்கள்

தொல்காப்பியம் ஒரு சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களாக 49 உரிச்சொற்களைத் தந்துள்ளது.

1. **உரு உட்கு ஆகும் (தொல். சொல். 300)**
2. **புரை உயர்(பு) ஆகும் (தொல். சொல். 300)**
3. **மல்லல் வளனே. (தொல். சொல். 303)**
4. **ஏ பெற்று ஆகும் (தொல். சொல். 304)**
5. **உகப்பே உயர்தல் (தொல். சொல். 305)**
6. **உவப்பே உவகை (தொல். சொல். 305)**
7. **பயப்பே பயனாம் (தொல். சொல். 306)**
8. **பசப்பு நிறன் ஆகும் (தொல். சொல். 307)**
9. **இயைபே புணர்ச்சி (தொல். சொல். 308)**
10. **இசைப்பு இசை ஆகும் (தொல். சொல். 309)**
11. **சீர்த்தி மிகு புகழ் (தொல். சொல். 312)**

12. மாலை இயல்பே (தொல். சொல். 313)

13. பழுது பயம் இன்றே (தொல். சொல். 324)

14. சாயல் மென்மை (தொல். சொல். 325)

15. முழுது என் கிளவி எஞ்சாப் பொருட்டே (தொல். சொல். 326)

16. வம்பு நிலையின்மை (தொல். சொல். 327)

17. மாதர் காதல் (தொல். சொல். 328)

18. புலம்பே தனிமை (தொல். சொல். 331)

19. துவன்று நிறைவு ஆகும் (தொல். சொல். 332)

20. முரஞ்சல் முதிர்வே (தொல். சொல். 333)

21. வெம்மை வேண்டல் (தொல். சொல். 334)

22. பொற்பே பொலிவு (தொல். சொல். 335)

23. வறிது சிறிது ஆகும் (தொல். சொல். 336)

24. எய்யாமையே அறியாமையே (தொல். சொல். 342)

25. நன்று பெரிது ஆகும் (தொல். சொல். 343)

26. தெவுக் கொளல் பொருட்டே (தொல். சொல். 345)

27. தெவ்வுப் பகை ஆகும் (தொல். சொல். 346)

28. கழும் என் கிளவி மயக்கம் செய்யும் (தொல். சொல். 351)

29. கருவி தொகுதி (தொல். சொல். 354)

30. கமம் நிறைந்து இயலும் (தொல். சொல். 355)

31. அரியே ஐம்மை (தொல். சொல். 356)

32. கவவு அகத்திடுமே (தொல். சொல். 357)

33. கவர்பு விருப்பு ஆகும் (தொல். சொல். 362)

34. சேரே திரட்சி (தொல். சொல். 363)

35. வியல் என் கிளவி அகலப்பொருட்டே (தொல். சொல். 364)

36. வய வலி ஆகும் (தொல். சொல். 366)

37. வாள் ஒளி ஆகும் (தொல். சொல். 367)

38. துயவு என் கிளவி அறிவின் திரிபே. (தொல். சொல். 368)

39. உயாவே உயங்கல் (தொல். சொல். 369)

40. உசாவே சூழ்ச்சி (தொல். சொல். 370)

41. வயா என் கிளவி வேட்கைப் பெருக்கம். (தொல். சொல். 371)

42. **புனிறு என் கிளவி ஈன்று அணிமைப் பொருட்டே (தொல். சொல். 375)**

43. **புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி (தொல். சொல். 379)**

44. **அமர்தல் மேவல் (தொல். சொல். 380)**

45. **யாணுக் கவினாம் (தொல். சொல். 381)**

46. **ஐ வியப்பு ஆகும் (தொல். சொல். 385)**

47. **முனைவு முனிவு ஆகும் (தொல். சொல். 386)**

48. **வையே கூர்மை (தொல். சொல். 387)**

49. **எறுழ் வலி ஆகும். (தொல். சொல். 388)**

இவ்வாறு தொல்காப்பியம் ஒரு சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களை வகைப்படுத்தியுள்ளது. இவற்றுள் வம்பு (நேமி. 81), வாள் (நேமி. 81), வெம்மை (நேமி. 83), வியல் (நேமி. 83), அரி (நேமி. 83), எய்யாமை (நேமி. 83), ஏ (நேமி. 83), மல்லல் (நேமி. 83), வயம் (நேமி. 83), புரை (நேமி. 83), புனிறு (நேமி. 84) ஆகிய உரிச்சொற்களை நேமிநாதம் தொல்காப்பியர் கூறியுள்ள பொருள்களிலேயே கூறியுள்ளது.

முத்துவீரியம் புரை (மு. வீ. ஒழி. 29), உரு (மு. வீ. ஒழி. 29), மல்லல் (மு. வீ. ஒழி. 31)¸ ஏ (மு. வீ. ஒழி. 31), பசப்பு (மு. வீ. ஒழி. 33), பயப்பு (மு. வீ. ஒழி. 33), இசைப்பு (மு. வீ. ஒழி. 24), இயைபு (மு. வீ. ஒழி. 24), சீர்த்தி (மு. வீ. ஒழி. 27), மாலை (மு. வீ. ஒழி. 27), ஆகிய உரிச்சொற்கள் உணர்த்தும் பொருள்களில் தொல்காப்பியத்தை ஒத்துள்ளது.

தென்னூல் ஒரு பொருள் தரும் ஓருரிச் சொற்களாக பழுது, நன்று, வயா, உரு, வறிது, பயப்பு, சாயல், மாதர், மல்லல், வம்பு, துவன்று, உகப்பு, உயர்வு, வியல், வய ஆகிய உரிச்சொற்களைக் குறிப்பிட்டுள்ளது. அவற்றுக்குத் தொல்காப்பியம் சுட்டும் பொருள்களையே ஏற்றுக் கொண்டுள்ளது (தென். சொற். 191-193, 197).

தமிழ்க் காப்பு இயம் புனிறு, யாணர் ஆகிய உரிச்சொல் குறித்த தொல்காப்பிய நூற்பாக்களை அப்படியே எடுத்தாண்டுள்ளது. (த. கா. இ. 397, 398)

மேலும், அரி, சீர்த்தி, புலம்பு, பொற்பு, வம்பு, தெவ்வு, வாள், சாயல் ஆகிய தொல்காப்பிய உரிச்சொல் மரபுகளைத் தமிழ்க் காப்பு இயம் ஏற்றுக்கொண்டுள்ளது. (த. கா. இ. 399)

ஒரு சொல் பல பொருள் தரும் உரிச்சொற்கள்

தொல்காப்பியம் பல பொருள் தரும் ஓர் உரிச்சொற்களாக 14 உரிச்சொற்களைக் குறிப்பிடுகிறது. அவை,

1. **ஏற்றம் - நினைவு, துணிவு (தொல். சொல். 337)**
2. **பணை – பிழைத்தல், பெருப்பு (தொல். சொல். 339)**
3. **படர் - உள்ளல், செலவு (தொல். சொல். 340)**
4. **தா – வலிமை, வருத்தம் (தொல். சொல். 344)**
5. **செழுமை – வளன், கொழுமை (தொல். சொல். 352)**
6. **விழுமம் - சீர்மை, சிறப்பு (தொல். சொல். 353)**
7. **நனவு – களன், அகலம் (தொல். சொல். 376)**
8. **மத – மடன், வலி, மிகுதி, வனப்பு (தொல். சொல். 377, 378)**
9. **கடி – வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம் (ஒளி), மிகுதி, சிறப்பு, அச்சம், முன் தேற்றம், ஐயம், கரிப்பு (தொல். சொல். 383, 384)**
10. **தட – பெருமை, கோட்டம் (தொல். சொல். 320, 321)**
11. **கய – பெருமை, மென்மை (தொல். சொல். 320, 322)**
12. **நளி – பெருமை, செறிவு (தொல். சொல். 326, 323)**
13. **விறப்பு – செறிவு, வெருவுதல் (தொல். சொல். 347, 348).**
14. **அழுங்கல் - அரவம், இரக்கம், கேடு (தொல். சொல். 349, 350)**

இவற்றுள் இலக்கண விளக்கம் தொல்காப்பியம் சுட்டும் பல பொருள் தரும் ஓருரிச்சொற்களில் கடி என்னும் உரிச்சொல் தவிர மற்றவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளது (இ. வி. 282).

முத்துவீரியம் ‘தா’ எனும் ஓர் உரிச்சொல்லில் மட்டுமே ஒரு சொல் பல பொருள் தரும் சொல்லில் தொல்காப்பியத்தை ஒத்துள்ளது (மு. வீ. ஒழி. 43).

தென்னூல் ஏற்றம், படர், தட, கய, நளி, மத, கடி ஆகிய உரிச்சொற்களைக் குறிப்பிட்டு அவற்றிற்குத் தொல்காப்பியம் குறிப்பிடும் பொருள்களையே சுட்டுகிறது (தென். 193, 194, 198).

தமிழ்க் காப்பு இயம் தட, கய, நளி (த. கா. இ. 393), அழுங்கல் (த. கா. இ. 395), மத (த. கா. இ. 396) ஆகிய ஒரு சொல் பல பொருள் தரும் உரிச்சொற்களில் தொல்காப்பியத்தை ஒத்துள்ளது.

பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்கள்

தொல்காப்பியர் ஒரு பொருள் தரும் பல உரிச்சொற்களாக 24 உரிச்சொற்களைக் குறிப்பிட்டுள்ளார்.

1. உறு, தவ, நனி – மிகுதி (தொல். சொல். 299)

2. குரு, கெழு – நிறன் (தொல். சொல். 301)

3. செல்லல், இன்னல் - இன்னாமை (தொல். சொல். 302)

4. அலமரல், தெருமரல் - சுழற்சி (தொல். சொல். 310)

5. மழ, குழ - இளமை (தொல். சொல். 311)

6. கூர்ப்பு, கழிவு – உள்ளது சிறத்தல் (தொல். சொல். 314)

7. கதழ்வு, துனைவு – விரைவு (தொல். சொல். 315)

8. அதிர்வு, விதிர்ப்பு – நடுக்கம் (தொல். சொல். 316)

9. தீர்தல், தீர்த்தல் - விடுதல் (தொல். சொல். 318)

10. கெடவரல், பண்ணை – விளையாட்டு (தொல். சொல். 319)

11. தட, கய, நளி – பெருமை (தொல். சொல். 320)

12. நம்பு, மே – நசை (தொல். சொல். 329)

13. ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் - உள்ளதன் நுணுக்கம் (தொல்.சொல்.330)

14. பிணை, பேண் - பெட்பு (தொல். சொல். 338)

15. பையுள், சிறுமை – நோய் (தொல். சொல். 341)

16. விறப்பு, உறப்பு, வெறுப்பு – செறிவு (தொல். சொல். 347)

17. கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் - அரவம் (தொல். சொல். 349)

18. துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் - இசைத்தல் (தொல்.சொல்.358)

19. இலம்பாடு, ஒற்கம் - வறுமை (தொல். சொல். 360)

20. ஞெமிர்தல், பாய்தல் - பரத்தல் (தொல். சொல். 361)

21. பே, நாம், உரும் - அச்சம் (தொல். சொல். 365)

22. கறுப்பு, சிவப்பு – வெகுளி (தொல். சொல். 372)

23. நொசிவு, நுழைவு, நுணங்கு – நுண்மை (தொல். சொல். 374)

24. பரவு, பழிச்சு – வழுத்துதல் (தொல். சொல். 382)

இவற்றுள் நம்பும், மேவும் - நசை (நேமி. 81). கதழ்வும், துனைவும் - விரைவு (நேமி. 84), கமம், துவன்று – நிறைவு (நேமி. 84) ஆகிய கருத்துகளில் நேமிநாதம் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது.

தொல்காப்பியம் குறிப்பிடும் பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களில் தீர்தல், தீர்த்தல் (விடுதல்) என்பதைத் தவிர பிற உரிச்சொற்கள் அனைத்தும் அதே

பொருளோடு இலக்கண விளக்கத்தில் இடம் பெற்றுள்ளன (இ. வி. 281, 283, 285, 286).

முத்துவீரியத்தில் பலசொல் ஒரு பொருள் தருவனவாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றுள் உறு, தவ, நனி (மு. வீ. ஒழி. 28) செல்லல், இன்னல் (மு. வீ. ஒழி. 30) அலமரல், தெருமரல் (மு. வீ. ஒழி. 35), மழ, குழ (மு. வீ. ஒழி. 36), அதிர்வு, விதிர்ப்பு (மு. வீ. ஒழி. 39), தீர்தல், தீர்த்தல் (மு. வீ. ஒழி. 40), தட, கய நளி (மு. வீ. ஒழி. 41), பிணை, பேண் (மு. வீ. ஒழி. 42) பரவு, பழிச்சு (மு. வீ. ஒழி. 46) ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன. மேலும், கூர்ப்பும், கழிவும் (மு. வீ. ஒழி. 38), கம்பலை... (மு. வீ. ஒழி. 44), கறுப்பும், சிவப்பும் (மு. வீ. ஒழி. 45) ஆகிய தொல்காப்பிய நூற்பாக்களை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

தென்னூல், மழ, குழ - இளமை (தென். சொற். 190), நொசிவு, நுழைவு, நுணங்கு – நுண்மை (தென். சொற். 190), குரு, கேழ் - நிறம் (தென். சொற். 194), தட, கய, நளி – பெருமை (தென். சொற். 194), உறு, தவ, நனி – மிகுதி (தென். சொற். 195), ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் - உள்ளதன் நுணுக்கம் (தென். சொற். 195), பையுள், சிறுமை – நோய் (தென். சொற். 195) ஆகிய பலசொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களில் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது.

மழவும், குழவும் (தொல். சொல். 331), ஒய்தல், ஆய்தல் (தொல். சொல். 330) என்னும் நூற்பாக்களைத் தமிழ்க் காப்பு இயம் அப்படியே எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.390, 392).

பல சொல் பல பொருள் - ஒத்த மரபு

வார்தல், போகல், ஒழுகல் ஆகிய மூன்று சொற்களும் நேர்பு (வரிசை முறை), நெடுமை (நீட்சி) ஆகிய இரு பொருள்களைத் தரும் எனத் தொல்காப்பியம் நவில்கிறது. (தொல். சொல். 317) இக்கருத்தை இலக்கண விளக்கம் பின்பற்றியுள்ளது (இ. வி. 284).

பிற உரிச்சொல் மரபுகள் - ஒத்த மரபு

உரிச்சொல் பொருள் உணர்த்தும் முறை

உரிச்சொற்களுக்கு முன்னும், பின்னும் வருகின்ற பெயர், வினைகளை ஆராய்ந்து பார்த்து அவ்வவ் இடத்திற்கேற்பப் பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ளவே அவை தத்தம் வரலாற்று முறைமையில் பொருள் விளங்கத் தோன்றும் (தொல். சொல். 389). இது குறித்து ச.திருஞானசம்பந்தம், "உறு, தவ, நனி என்பன மிகுதிப்பொருளை உணர்த்தும். செல்லல், இன்னல் என்பன இன்னாமையை

எடுத்துரைக்கும். இவ்வாறு கூறப்பட்ட சொற்கள் வழக்கில் இடம்பெற்ற சொற்கள் அல்ல. ஆயினும் அவை அவ்வப் பொருள்களை உணர்த்தும் என்பது ஆசிரியரின் ஆணையால் கொள்ளப்பட்டது. அதனால் மேற் கூறியவற்றைப் போன்ற சொற்கள் வரலாற்று முறைமையால் பொருள் உணர்த்துவதில்லையோ என்னும் ஐயம் தோன்றுகிறது. உறுகால், அணங்கிய செல்லல் போன்ற சொற்களுக்கு முன்னும் பின்னும் வரும் சொற்களைக் கொண்டு பொருள் விளங்கலாம். எனவே உரிச்சொல்லும் தொன்று தொட்டு வரும் வரலாற்று முறைமையில் பொருள் உணர்த்தும் என்கிறார் சேனாவரையர். அவ்வாறு கொள்ளா விட்டால் உரிச்சொற்கள் எல்லாம் குழுவின் வந்த குறிநிலை வழக்குப் போலச் செயற்கைச் சொற்களாகி விடும். எனவே உரிச்சொற்களை இயற்கைச் சொற்களாகவே கொள்ள வேண்டும்.''[19] என்று குறிப்பிடுகிறார். மேலும் ''''முழுமை வடிவம் பெற்ற நிலையில் கூறப்பட்டவாயினும் இயல்பில் குறைச்சொல்லாய் நிற்கும் உரிச்சொல்லோடு முன்னும் பின்னுமாக ஆக்க நிலை உருபுகளாகிய இடைச் சொற்களைப் பொருந்துமாறு புணர்த்தி உணர்த்துங்கால் வழங்கியல் மரபின்படி பொருள் தோன்றும்'' என்பது இதன் பொருள். ஆக்கநிலை உருபுகளின் புணர்ச்சியானன்றிப் பொருள் புலப்படாது என்பதனை இந்நூற்பா உணர்த்திற்று''[20] என்று கா.கோ.வேங்கடராமன் கூறும் கருத்து இங்கு சுட்டத்தக்கது.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது. (இ. வி. 287) தென்னூல் இக்கருத்தைப் பின்பற்றி,

உரிச்சொற் பொருளை முன்பின் சொற்களின்
தொடர்பறிந் துணர்தல் கடவ தென்ப (தென். சொற். 206)

என்று குறிப்பிடுகிறது. தமிழ்க் காப்பு இயம் தொல்காப்பியக் கருத்தைப் பின்பற்றி,

மெய்பெறக் கிளந்த உரிச்சொல் ஆயினும்
இவ்வியல் கிளவா உரிச்சொல் ஆயினும்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே (த. கா. இ. 400)

என்று உரைக்கிறது.

உரிச்சொற்கள் பிற பொருள்களையும் உணர்த்தல்

உரிச்சொற்களுக்கு இவ்வியலில் கூறப்பட்ட பொருட்களே அன்றி வேறு பிற பொருள்களும் தோன்றும். அதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் (தொல்.சொல்.390).

இலக்கண விளக்கமும் தமிழ்க் காப்பு இயமும் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன (இ. வி. 288), (த.கா.இ.401).

சுவாமிநாதம் ‘செய்யுளின் இருபாலும் பொருந்தவும், குறைச் சொல்லாகவும் ஆகி பொருள் அமைந்து இருக்கும். எல்லாச் சொல்லும் பொருள் வேறு உடையதாகவும் ஆகும்’ என்று விளக்குகிறது (சு. நா. 57).

தென்னூல், உரை வழக்கின் கண்ணும், செய்யுள் வழக்கின் கண்ணும் பயின்று வரும் எல்லா உரிச்சொற்களையும் அவற்றின் பொருளையும் விரித்துணர்த்தல் அருமைப்பாடுடையதாகலின் மேற்கூறிய இலக்கண முறைமையான் யாவற்றையும் உணர்ந்து பயிற்றுதல் வேண்டும் (தென். சொற். 207) என்று குறிப்பிடுகிறது.

சொல்லுக்குப் பொருள் காண்பதற்கு வரையறை

உரிச்சொல் ஒன்றற்குப் பொருள் இதுவென கூறிய பிறகு அந்த பொருளுக்குப் பொருள் யாது? என ஆராயப் புகுந்தால் அவ்வாராய்ச்சிக்கு எல்லை என்பது இல்லை. இக்கருத்தை,

பொருட்குப்பொருள் தெரியின் அதுவரம்பு இன்றே.

(தொல்.சொல்.391)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ. வி. 291). சுவாமிநாதம் இக்கருத்தை,

பொருட்குப் பொருள் தெரியின் மிகவா(ம்) (சு. நா. 57:7)

என்கிறது. தென்னூலும் முன்னையோர் கருத்தைப் பின்பற்றி,

பொருட்குப் பொருள் தெரியின் வரம்பில வாகும் (தென். சொற். 205)

என்று உரைக்கிறது.

தமிழ்க் காப்பு இயமும் முன்னையோர் கருத்தைப் பின்பற்றி, பல வழிகளிலும் வரும் உரிச்சொல் எல்லாவற்றினுக்கும் உரிய பொருளைப் புலப்படுத்த வரம்பு தமக்கு இல்லாமையால் காப்பு ஆணையின் வழி நின்று தெளிவு பட உணர்க’ என்கிறது (த.கா.இ. 403).

உரிச்சொல்லை உணர்த்தும் முறை

ஓர் உரிச்சொல்லுக்குப் பொருள் கூற முற்படுவோர் கேட்பவனின் உணரும் தன்மையினை அறிந்து அதற்கு ஏற்ற முறைப்படி பொருள் கூறினால் மட்டுமே கேட்பவன் சொல்லுக்குரிய பொருளை மாறுபடாமல் அறிந்து கொள்வான். இதனை,

பொருட்குத் திரிபு இல்லை உணர்த்த வல்லின். (தொல். சொல். 392)

என்றுரைக்கும் தொல்காப்பியம்.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது. (இ. வி. 292). அதே போன்று அறிவுடையோர்க்கே உணரும் ஆற்றல் உண்டு (தொல்.சொல்.393) என்னும் தொல்காப்பிய நூற்பாவையும் இலக்கண விளக்கம் அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ.வி.293).

சொல் பொருள் உணர்த்துதற்குக் காரணம்

உரிச்சொற்கள் அனைத்திற்கும் கூறப்பட்ட பொருள்கள் வரலாற்று முறைமையால் கொள்ளப்பட்டவை ஆகும். மேற்கூறப்பட்ட உரிச்சொற்கள் அப்பொருளுக்கு உரிமையாவதற்குரிய காரணம் விளங்கத் தோன்றாது. இதனை,

மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா (தொல். சொல். 394)

என்று குறிப்பிடுகிறது தொல்காப்பியம். இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ. வி. 294).

உரிச்சொற்களில் எழுத்துப் பிரிந்து இசைத்தல் இல்லை என்பதைத் தொல்காப்பியம்,

எழுத்துப் பிரிந்து இசைத்தல் இவண் இயல்(பு) இன்றே

(தொல். சொல். 395)

என்று குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கமும் (இ.வி.289) தமிழ்க்காப்பு இயமும் (த.கா.இ.402) தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

புறனடை நூற்பா

உரியியலில் கூறப்பட்ட உரிச்சொற்களே அன்றி பிற உரிச்சொற்களும் இவ்வுலகத்து மிகுதியாகப் பரந்து காணப்படுகின்றன. அவற்றை இசை, குறிப்பு, பண்பு என்னும் மூவகையாகப் பகுத்துப் பார்க்க அவை இத்துணை என்று கூற இயலாது. அவற்றையும் ஆராய்ந்து பார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தொல்காப்பியம் உரைக்கிறது (தொல். சொல். 396).

பவணந்தியாரும் உரிச்சொற்களைத் தான் விரித்துச் சொல்லவில்லை என்றும் மற்றைப் புலவரால் கூறப்பட்ட பிங்கலந்தை, திவாகரம் முதலிய நூல்களில் உரிச்சொல் தொகுதிகளில் கண்டறிந்து கொள்ளலாம் என்கிறார் (நன். 460).

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ. வி. 290).

மரபு மாற்றம்

இடைச்சொல் பாகுபாடுகள்

இடைச்சொல்லின் பாகுபாடுகளைத் தொல்காப்பியம் ஏழாகப் பாகுபடுத்த, நேமிநாதமோ அறுவகையாகப் பாகுபடுத்துகிறது. அவை சாரியை, உருபு, தத்தம் குறிப்பிற் பொருள் செய்வன, அசைச்சொல், வினைச்சொற்கு ஈறாவன, இசைநிறையாவன என்பன (நேமி. 75). தொல்காப்பியர் குறிப்பிடும் உவம உருபுகளை நேமிநாதம் நீக்கியுள்ளது. அஃது அசைநிலையுள்ளே அடங்கும் என்பதால் இங்குக் கூறவில்லை என்று நேமிநாத உரையாசிரியர் சுட்டுகிறார்.

ஒப்பில் போலியும் அப்பொருட்டு ஆகும் (தொல். சொல். 278)

என்னும் நூற்பாவை மேற்கோள் காட்டி உவம உருபுகள் அசைநிலையாக வரும் என்று கூறுகிறார். இளம்பூரணரும் ஒப்பில் வழியான் பொருள் செய்குந என்பதற்கு ஒப்புமைப் பொருளை உணர்த்தாது உரையசையாக வரும் போலும் என்னும் சொல் (ஒப்பில் போலி) என்று பொருள் உரைக்கிறார்[21].

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் ஒப்பில் வழியான் பொருள் செய்குந என்பதற்கு ஒக்கும் என்னும் சொல் நீங்கலாக வரும் பிற உவம உருபுகள் எனப் பொருள் கூறியுள்ளனர்.

நேமிநாதமும் இளம்பூரணரும் ஒப்பில் போலி என்று கருதி அசைச்சொல்லாகக் கூறியமை பொருத்தப்பாடுடையதாக இல்லை. தொல்காப்பியர் ஒப்பில் வழியான் பொருள் செய்குநவற்றை அசைச்சொற்களாகக் கருதியிருந்தால் அவற்றைத் தனியொரு இடைச்சொல் வகையாகக் கூறியிருக்கத் தேவையில்லை.

‘ஒப்பில் வழியான் பொருள் செய்குந’ என்பதையும் ஒப்பில் போலியையும் ஒன்றெனக் கொள்கிறது நேமிநாதம். அவை இரண்டும் ஒன்றெனில் தொல்காப்பியர் அவற்றை அசைநிலை என்பதனுள்ளே அடக்கியிருப்பாரே அன்றி அசைநிலையையும், ஒப்பின் வழியான் பொருள் செய்குந என்பவற்றையும் தனித்தனி இடைச்சொல் வகைகளாகக் குறித்திருக்க மாட்டார். எனவே சேனாவரையர் கூறுவது போன்று ஒப்பின் வழியான் பொருள் செய்குந என்பவை ஒக்கும் எனும் சொல் தவிர்ந்த பிற உவம

உருபுகள் என்பதும், ஒப்பில் போலி என்பது ஒப்புமைப்படுத்தாமல் வரக்கூடிய போலும் எனும் சொல் என்பதும் புலப்படும்.

முத்துவீரியம் இடைச்சொல்லின் வகைகளை அறுவகையாகப் பாகுபடுத்துகிறது. தொல்காப்பியர் குறிப்பிடுவனவற்றுள் தத்தம் குறிப்பால் பொருள் உணர்த்துவனவற்றை நீக்கி மற்ற அறுவகைகளையும் கூறியுள்ளது (மு. வீ. ஒழி. 2). ஆனால் குறிப்புப் பொருட்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளமையைப் பெ. சுயம்பு சுட்டிக்காட்டியுள்ளார்.

“முத்துவீரியம், வேற்றுமை உருபுகள், வினை விகுதிகள், சாரியைகள், உவம உருபுகள், இசைநிறைச் சொற்கள், அசைநிலைச்சொற்கள் என்னும் ஆறும் இடைச்சொல்லின் வகைகள் எனக் கூறுகிறது. ஆனால் இதற்கு மாறாக இடைச்சொற்கள் பொருளை உணர்த்துதல் காணப்படுகிறது. மன், கொன், உம், ஓ, ஏ போன்ற இடைச்சொற்கள் பலவற்றுக்கு அச்சம், பயமிலி, காலம், பெருமை, எதிர்மறை, சிறப்புப் போன்ற குறிப்புப் பொருட்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.”[22] என்று குறிப்பிடுகிறார்.

இனிய தமிழ் இலக்கணம் இடைச்சொல்லின் பாகுபாடுகளாக, பகுதி தவிர்ந்த வினை உறுப்புகள் (சாரியை, இடைநிலைகள், சந்திகள், விகாரங்கள்), எச்சங்கள், குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள், எதிர்மறை, முற்று, உவம உருபுகள், சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள், காலம் காட்டும் இடைநிலைகள் போன்ற பொருள்களை இடைச்சொல் எனப் பகிர்கிறது (இ. த. இ. 137).

முன்னையோர் கூறும் வேற்றுமை உருபுகள், இசைநிறை, அசைநிலை என்பவற்றை விடுத்து எச்சங்கள், எதிர்மறை, முற்று, சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள் ஆகியவற்றைப் புதிதாகச் சேர்க்கிறது இனிய தமிழ் இலக்கணம். இவை அனைத்தும் பெயரையும், வினையையும் சார்ந்து வருவன ஆதலால் வளர்ச்சி நிலை கருதி இவையும் இடைச்சொற்களாக ஏற்றுக்கொள்ளத்தக்கன. எனினும் வேற்றுமை உருபுகள், இசைநிறை, அசைநிலை போன்றவற்றைக் கூறாது விடுத்தது ஏற்புடையதன்று.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் முன்னைய இலக்கணிகளின் கருத்துகளின் அடிப்படையில் வேற்றுமை உருபு, சாரியை, சுட்டு, வினா, உவம உருபு, குறிப்பு, அசைநிலை ஆகியவற்றை இடைச்சொற் பாகுபாடுகளாகக் குறிக்கிறது (இ. த. ஐந். 293).

தென்னூல் இடைச்சொல்லின் பாகுபாடுகளாக பெயர்ச்சொல், வினைச்சொற்களில் பால், இடம், காலம் காட்டும் உறுப்பாக வருவன, சாரியைகள், வேற்றுமை உருபுகள்,

பெயரடை வினையடையாக வருவன, பெயர்ப்போலி, வினைப்போலியாக வருவன, உவம உருபுகள் ஆகியவற்றைக் குறிக்கிறது (தென். சொற். 148).

இவற்றுள் முன்னைய இலக்கணிகள் கூறாது விடுத்த பெயரடை, வினையடை, பெயர்ப்போலி, வினைப்போலி போன்றவற்றைப் புதிதாகச் சேர்த்துள்ளது தென்னூல்.

தமிணூல் வினா, சுட்டெழுத்துகள், வேற்றுமை உருபுகள், பகுபத உறுப்புகளில் பகுதி தவிர்ந்த பிற உறுப்புகள், ஏ, ஓ, உம்மை, மற்று, அசைநிலை போன்றவையும் பிறவும் இடைச்சொற்கள் என நவில்கிறது (த. நூ. 129).

இடைச்சொற்களும், அவை உணர்த்தும் பொருள்களும் மரபு மாற்றம்

சுவாமிநாதம் 'கொன்' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாக பயமின்மை, காலம், பெருமை, பயன் ஆகிய நான்கனைக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் அச்சம் என்னும் பொருளை நீக்கி பயன் என்பதைச் சேர்த்துள்ளது (சு. நா. 55). ஆனால், சுவாமிநாதத்திற்குப் பின்வந்த இலக்கணிகள் எவரும் இக்கருத்தைப் பின்பற்றவில்லை.

'உம்' இடைச்சொல் - மரபு மாற்றம்

இலகு தமிழ் ஐந்திலக்கணம் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாக சிறப்பு, எச்சம், ஐயம், எண், ஏற்றம் ஆகிய ஐவகைப் பொருள்களை மட்டுமே குறிப்பிடுகிறது. முன்னையோர் குறிப்பிடும் 'ஆக்கம்' என்பது 'ஏற்றம்' என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. தெரிநிலை, முற்று, எதிர்மறை ஆகிய மூன்றும் இலகு தமிழ் ஐந்திலக்கணத்தில் இடம்பெறவில்லை (இ. த. ஐந். 296). மேலும், சிறப்பும்மை, இழிவும்மை குறித்தும் (இ. த. ஐந். 297), இறந்தது, எதிரது தழீஇய எச்சவும்மை குறித்தும் (இ. த. ஐந். 298) தனித்தனி நூற்பாக்களில் விளக்கியுள்ளது.

தமிழ்நூல் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை விளக்க,

இருவகைப்பட்ட எச்சமும் சிறப்பும்
எதிர்மறை அளவும் முற்றும் உம்மை. (த. நூ. 134)

என்கிறது. இதன்மூலம் இறந்தது தழீஇய எச்சம், எதிரது தழீஇய எச்சம், சிறப்பும்மை, இழிவும்மை, எதிர்மறை, அளவு, முற்று ஆகிய பொருள்களில் உம்மை இடைச்சொல் வரும் எனத் தமிழ்நூல் சுட்டுகிறது. முன்னையோர் சுட்டும் தெரிநிலை, ஆக்கம், ஐயம் போன்றவற்றைத் தமிழ்நூல் நீக்கியுள்ளது.

ஓகார இடைச்சொல் - மரபு மாற்றம்

இலகு தமிழ் ஐந்திலக்கணம், தொல்காப்பியம் குறிப்பிடும் ஓகாரப் பொருண்மைகளில் சிறப்பு என்பதை நீக்கி ஐயம் என்பதைச் சேர்த்துள்ளது (இ. த. ஐந். 295).

தமிழ்நூல் எதிர்மறை, ஐயம் அசைநிலை ஆகிய மூன்றை மட்டும் ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாகக் குறிப்பிடுகிறது (த. நூ. 133).

ஏகார இடைச்சொல் - மரபு மாற்றம்

நேமிநாதம் ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாக தேற்றம், வினா, எண், எதிர்மறை, ஈற்றசை ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (நேமி. 76). தொல்காப்பியம் குறிப்பிடும் பிரிநிலையை நீக்கி எதிர்மறையைச் சேர்த்துள்ளது நேமிநாதம்.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் முன்னையோர் கருத்தைப் பின்பற்றி பிரிநிலை, எதிர்மறை, ஈற்றசை, தேற்றம், வினாப்பொருள் ஆகிய ஐந்திலும் ஏகார இடைச்சொல் வரும் என நவில்கிறது (இ. த. ஐந். 294).

தமிழ்நூல் ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாக,

ஏவே தெளிவு பிரிநிலை அசையே (த. நூ. 132)

என்று குறிப்பிடுவதன் மூலம் முப்பொருள்களை மட்டும் சுட்டுகிறது.

என, என்ற இடைச்சொற்கள் - மரபு மாற்றம்

தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் பலவும் என, என்ற ஆகிய இரு இடைச்சொற்களும் அறுவகைப் பொருள்களை உணர்த்தும் என்று குறிப்பிட, தமிழ்நூல், ‘என்று சொல்’ என்னும் முதனிலைப் பொருள் உடைய முதனிலை வடிவாய ‘என்’ என்பதன் அடியாய்ப் பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய இரண்டும் முக்கால முறையே அறு சொல்லாய்த் தோன்றும் (என்ற, என்கின்ற, என்னும்) எனக் கூறுகிறது (த. நூ. 136). முன்னையோர் போல பொருண்மை அடிப்படையிலான பொருள்களைத் தமிழ்நூல் சுட்டவில்லை.

எல் இடைச்சொல் - மரபு மாற்றம்

தொல்காப்பியம் எல் என்பதை இடைச்சொல்லாகக் குறிப்பிட, நேமிநாதம் ‘எல்’ என்பதை உரிச் சொல்லில் குறிப்பிடுகிறது (நேமி.84). ‘எல்’ என்பதை இடைச்சொல்லாகவும், உரிச் சொல்லாகவும் கொண்டு பலரும் பல்வேறு கருத்துகளைக் கூறியுள்ளனர்.

சேனாவரையர் இதனை ‘உரிச்சொல் நீர்மைத்து’ என்கிறார்[23].

தெய்வச்சிலையார், உரிச்சொல் அன்றோ எனின் அது குறைச்சொல்லாகி நிற்கும். இது குறைவின்றி நிற்றலின் இடைச்சொல்லாயிற்று என விளக்குகிறார்[24].

எல்லே என்பதை ‘எல்’ எனப் பிரிக்காமல் ‘எல்லே’ என ஒரு சொல்லாகக் கொள்கிறார் வெள்ளைவாரணர். மேலும், அவர், “இடைச்சொல் உரிச்சொல் என்னும் பகுப்பினை நுனித்துணர்ந்து இலக்கண நூல் செய்த தொல்காப்பியர், இலக்கம் எனப் பொருள்படும் ‘எல்’ என்னும் லகர வீற்று உரிச்சொல்லை இடையியலிற் கூறியிருத்தல் இயலாது என்பதும், இரங்குதற் பொருட்டாகிய எல்லே என்னும் ஏகாரவீற்று இடைச்சொல்லையே ஆசிரியர் இவ்வியலிற் கூறியிருத்தல் வேண்டும் என்பதும், ‘எல்லே யிரக்கம்’ எனத் தொல்காப்பியர் கூறிய சூத்திரத்தில் ரகரத்தை லகரமாகக் கொண்ட பிறழ்ச்சியே இம்மாற்றத்திற்குக் காரணம் என்பதும் காலஞ்சென்ற இலக்கணக் கடலனாராகிய அரசஞ் சண்முகனார் ஆராய்ந்து கண்ட உண்மையாகும்”[25] எனக் குறிப்பிட்டு ‘எல்லே இரக்கம்’ என்பதையே ஏற்கிறார் வெள்ளைவாரணர்.

“எல் தனிப்பொருள் உடையது ஆதலின் அஃது உரிச்சொல் ஆகும்”[26] என்பது ஆதித்தர் கருத்து.

ஆ. சிவலிங்கனார் அவர்கள் ‘எல்’ என்று கூறினும், ‘எல்லே’ என்று கூறினும் இடைச் சொல்லே எனக் கூறுகிறார். அதற்குக் காரணமாக அவர் கூறுவது, “தவறிக் கீழே விழும் ஒருவனை ‘எல்லே’ என்று தாங்குவான் கூறுதல் உண்டு. அங்கு அது அவன் கொண்ட இரக்கத்தையுணர்த்தும். இவ்வழக்குத் திருநெல்வேலி மாவட்டப்பகுதியில் இன்றும் உண்டு. அதனால் ‘எல்லே இரக்கம்’ என்னும் பாடமும் கொள்ளலாம். ‘கொல்லே ஐயம்’ என்றது போல ‘எல்லே இலக்கம்’ என்றார் ஆசிரியர் எனக் கொண்டு உரையாளர் யாவரும் ‘எல்’ என்பது கொண்டனர். இரண்டுமே பொருந்தும். இனி எல்லே என்பது விளிப்பொருளிலும் வருதல் உண்டு. ‘எல்லே! இளங்கிளியே’ என ஆண்டாள் பாடலும் கூறும். இதனை எல்லா என்பதன் திரிபாகக் கொள்வதும் உண்டு. இங்குக் கூறப்பட்ட ‘எல்லே’ என்பது ‘எல்’ என்பதாயினும், எல்லே என்னும் ஒரு சொல்லாயினும் இடைச்சொல் என்பதில் தவறில்லை. ஏன் எனில் இரண்டுமே உருபேற்றல் இல்லை: வினைச்சொற்குரிய காலம் காட்டுதலும் இல்லை”[27] என்று கூறுவதன் மூலம் எல் எனினும் எல்லே எனினும் அது இடைச்சொல்லே என விளக்குகிறார்.

பண்பு குறியாது வருவதால் உரிச்சொல் அன்று. இடைச்சொல்லே என்பது பாலசுந்தரனாரின் கருத்து[28].

இது குறித்து பெ. சுயம்பு அவர்கள், "தொல்காப்பிய இடைச்சொற்களுள் எல்லே என்பதை விளக்குவதில் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றனர். இளம்பூரணர் நூற்பாவை 'எல்லே விளக்கம்' என்று குறிப்பிடுகிறார். ஆனால் சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் மூவரும் 'எல்லே இலக்கம்' என்று கூறுகின்றனர். அடிகளாசிரியர் (இளம்பூரணர் உரை. 263) விளக்கம் என்பதும், இலக்கம் என்பதும் உரிச்சொல் பொருளாயிருத்தலின் 'எல்லே விளிக்கும்' என்று பாடம் இருக்கலாமோ என்று அறிஞர் கருதுகின்றனர் எனக் கூறுகிறார்.

எல் என்பதன் அடியாகப் பிறந்த எல்லா (கலித்தொகை. 64), எல்லே (திருப்பாவை 15), ஏல, ஏலே (தென் தமிழகப் பேச்சு மொழி) என்னும் சொற்கள் விளியாக இலக்கியங்களிலும், பேச்சு வழக்கிலும் வருகின்றன. எனவே, 'எல்லே விளிக்கும்' என்பதே இந்நூற்பாவின் முந்தை வடிவமாக இருத்தல் வேண்டும். 'விளிக்கும்' என்பது நாளடையில் ஏடு பெயர்த்து எழுதுவோரால் 'விளக்கம்' என்று மாற்றி எழுதப்பட்டுவிட்டது"[29] என்று குறிப்பிடுகிறார்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலரும் 'எல்' என்பதை இடைச்சொல்லாகவும், உரிச்சொல்லாகவும் கருத நேமிநாதமே அடிப்படையாகும். குரை என்பதையும் நேமிநாதம் உரிச்சொல்லாகக் கூறியுள்ளது (நேமி.84). இது குறிப்பிடத்தகுந்த மரபு மாற்றமாகும்.

உரிச்சொல் மரபுகள் -மரபு மாற்றம்

தொல்காப்பியம் இசை, குறிப்பு, பண்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் உரிச்சொற்கள் தோன்றும் எனக் கூற, நன்னூல் பண்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வரும் என்று கூறுகிறது (நன். 442). தொன்னூல் விளக்கமும் நன்னூலைப் பின்பற்றி பல குணங்கட்கு உரிய சொல் என்கிறது (தொ. வி. 138). சுவாமிநாதம் வடிவு, அளவு, நிறம், காட்சி, கருத்து முதலிய பண்பு அடிப்படையிலான சொல் என்று கூறுகிறது (சு. நா. 57). இனிய தமிழ் இலக்கணம் (143), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (299), தமிழ்நூல் (344) ஆகியவையும் நன்னூல் கருத்தைப் பின்பற்றியுள்ளன.

ஒரு சொல் ஒரு பொருள் மரபு மாற்றம்

கால மாற்றம் ஏற்படுத்திய பொருள் மாற்றம்

தொல்காப்பியம் குறிப்பிடும் ஒரு பொருள் தரும் ஓருரிச்சொற்கள் பலவற்றின் பொருள் இன்று மாறியுள்ளது. அதுபோலவே மாலை என்னும் சொல் இயல்பு என்ற பொருளில் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. இன்று மாலை என்பது மாலைக்காலம் எனப் பொழுதைக் குறித்து நின்றது.

பழுது என்பது பயமின்மை எனத் தொல்காப்பியம் சுட்ட, இன்று பழுது என்பது ஒரு பொருள் சேதமடைவதைக் குறித்து நிற்கிறது.

வம்பு என்னும் சொல் நிலையின்மை என்ற பொருளில் தொல்காப்பியத்தில் ஆளப்பட்டுள்ளது. இன்று வம்பு என்பது பிரச்சனை செய்தல் என்று பொருள்படுகிறது.

மாதர் என்னும் சொல் தொல்காப்பியத்தில் காதல் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இன்று மாதர் என்பது பெண்களைக் குறித்து நின்றது.

வெம்மை என்னும் சொல் தொல்காப்பியத்தில் 'வேண்டல்' என்னும் பொருளில் வந்துள்ளது. இன்று வெம்மை என்பது மிகுந்த வெப்பத்தைக் குறித்து வந்தது.

நன்று என்னும் சொல் தொல்காப்பியத்தில் பெரிது எனப்படுகிறது. இன்று நன்று நல்லது எனப் பொருள்படுகிறது.

அமர்தல் என்னும் சொல் மேவல் (விரும்புதல்) எனத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகிறது. இன்று அமர்தல் என்பது உட்கார்தலைக் குறிக்கிறது. இவை வழக்கில் வழங்கி வரும் பொருள் மாற்றமாகும். கால மாற்றம், சமூக மாற்றம் காரணமாக மொழிப் பொருள் மாற்றம் நிகழ்கிறது.

ஒரு சொல் பல பொருள் - மரபு மாற்றம்

கடி என்னும் உரிச்சொல்லுக்குத் தொல்காப்பியம் குறிப்பிடும் பன்னிரு பொருள்களில் முன்தேற்றம் என்பதை விடுத்து, தோற்றம் என்னும் பொருளை நேமிநாதம் கூறியுள்ளது (நேமி. 82).

நளி என்பதற்குப் பெருமை, செறிவு என்னும் இரு பொருள்களைத் தொல்காப்பியம் தருகிறது. நேமிநாதம் நளி என்பதற்குச் செறிவு என்னும் ஒரு பொருளை மட்டுமே சுட்டுகிறது (நேமி 83).

நன்னூல் கடி என்னும் உரிச்சொல்லுக்குப் பதின்மூன்று பொருள்களைக் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடும் பொருள்களுள் முன்தேற்றம், ஐயம்

என்பவற்றை நீக்கிப் பதிலாக விரை (மணம்), மன்றல் (திருமணம்), ஆர்த்தல் ஆகிய மூன்றையும் இணைக்கிறது (நன். 457).

முத்துவீரியம் 'கடி' என்னும் உரிச்சொல்லுக்குக் காப்பு, கூர்மை, விரைவு, விளக்கம், மிகுதி என்னும் ஐவகைப் பொருளை மட்டுமே கூறியுள்ளது (மு.வீ.ஒழி.47).

இலகு தமிழ் ஐந்திலக்கணம் கடி என்னும் உரிச்சொல்லுக்குக் காவல், கூர்மை, மணம், ஒளி, அச்சம், விரைவு, மிகுதி, ஒலி ஆகிய எண்வகைப் பொருள்களைத் தருகிறது (இ. த. ஐந். 300).

தமிழ்நூல் கடி என்னும் உரிச்சொல்லுக்கு இக்காலத்தில் வழங்கும் பொருள்களாக விரைவு, மணம் ஆகிய இரண்டனை மட்டுமே குறிப்பிடுகிறது. இதனை,

கடியென் சொற்கு விரைவும் மணமும்

நடைமுறைப் பொருளே; பழம்பொருள் பலவே. (த. நூ. 350)

என்னும் நூற்பா உணர்த்துகிறது.

பல சொல் ஒரு பொருள் - மரபு மாற்றம்

தென்னூல் அரவம் எனும் பொருள் தரும் கம்பலை, சும்மை ஆகியவற்றையும் சிலைத்தல், துவைத்தல், இரங்கல் ஆகிய இசைப்பொருண்மை தரும் உரிச்சொற்களையும் சேர்த்து இசையுரிச் சொற்களாகக் குறிப்பிடுகிறது (தென். சொற். 196).

தொல்காப்பியம் பே, நாம், உரும் ஆகிய மூன்றும் அச்சப்பொருள் தரும் என உரைக்கிறது. தமிழ்நூல் இவற்றுள் நாம் என்பதை விடுத்து பே, உரும் ஆகிய இரண்டை மட்டும் குறிப்பிட்டுள்ளது. நாம் என்பது அச்சப்பொருள் தரும் தொன்மையினும் சின்மையே என அந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார் (த. நூ. 346).

மரபு வளர்ச்சி

இடைச்சொல் பாகுபாடுகள் - வளர்ச்சி நிலை

நன்னூல் இடைச்சொல்லின் வகைகளை எண்வகைப்படுத்துகிறது. தொல்காப்பியம் குறிப்பிடும் எழுவகை இடைச்சொற்களுடன் குறிப்புச் சொற்களையும் இடைச்சொல்லில் சேர்க்கிறது நன்னூல் (நன். 420). தொல்காப்பியம் தத்தம் குறிப்பின் பொருள் செய்வன என்று குறிப்பிடுவதனுள்ளேயே குறிப்புச் சொற்களும் அடங்கி விடுவதால் நன்னூலார் குறிப்புச்சொற்களைத் தனியொரு இடைச்சொல் வகையாக வகைப்படுத்தியிருப்பது பொருத்தப்பாடுடையதாக இல்லை.

இலக்கண விளக்கம் நன்னூலை மறுத்துள்ளமையை பெ. சுயம்பு சுட்டிக்காட்டியுள்ளார். அவர், “நன்னூல் (419) வேற்றுமை உருபுகள், வினை விகுதிகள், சாரியைகள், உவம உருபுகள், தத்தம் பொருட் சொற்கள், இசை நிறைச்சொற்கள், அசைநிலைச்சொற்கள், குறிப்புப் பொருட் சொற்கள் என்னும் எட்டு வகையாக இடைச்சொற்களைப் பகுத்துக் கூறுகிறது. ஆனால் இலக்கண விளக்கமோ தொல்காப்பியத்தைப் போன்று ஏழு வகைகளையே குறிப்பிடுகிறது. இதன் ஆசிரியர் நன்னூல் எட்டு வகைப்படும் என்பதை மறுத்துரைக்கிறார்.

குறிப்பென ஒன்று கூட்டித் திறம் எட்டென்பாரும் உளராலோவெனின் அது. ‘தத்தம் பொருள’ என்பதனுள் அடக்குதல், ‘வினைபெயர் குறிப்பிசை’ என்பதனாற் பெறப்படுதலின் மிகைபடக் கூறலென மறுக்க’ என்று சுட்டிக் காட்டியுள்ளார்.”[30] என்கிறார்.

மேலும், இது குறித்து சூ.இன்னாசி, “நன்னூலார் இவற்றோடு தத்தம் பொருள என்பதையும் சேர்த்து எட்டு வகைப்படுத்துவர். “தத்தம் பொருள என்பதாவது, தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருவன எனப் பொருள்படும். இசைநிறை, அசைநிலை என்பவை செய்யுளில் இசைநிறைத்தற்கும், அசைத்தற்கும் வருவனவேயன்றி அவற்றிற்கென வேறு பொருள் இன்மையால் அவற்றினின்றும் பொருள் உணர்த்தும் ஏனையவற்றைப் பிரித்தற்குத் ‘தத்தம் பொருள’ என்று நன்னூலார் இடைச்சொல்லைத் தனியாகக் கூறியிருக்கிறார். அதனைத் தொல்காப்பியர் குறிப்பு என்பதனுள்ளே அடக்கியுள்ளமையால் ‘தத்தம் பொருள’ எனத் தனி வகைப்படுத்தியிருப்பது பொருத்தமன்று” என்பர் டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி”[31] என்று கூறும் கருத்து இங்குக் கருதத்தக்கது.

தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றி இடைச்சொற்களை எண்வகைப்படுத்தியுள்ளது (தொ. வி.130).

சுவாமிநாதம் இடைச்சொல்லை ஒன்பது வகையாகப் பாகுபடுத்துகிறது. 1. வேற்றுமை உருபுகள் 2. சாரியைகள் 3. வினையில் வரும் விகுதிகள் 4. காலத்தைக் காட்டும் இடைநிலைகள் 5. இசை நிறைத்தற்கு வருவன 6. உவம உருபுகள் 7. அசைச்சொற்கள் 8. தத்தமக்குரிய பொருளை உணர்த்தி வருவன 9. எழுத்தணவல் ஆகியன.

இவற்றுள் தொல்காப்பியம் குறிப்பிடும் வினைச்செயல் மருங்கின் காலமொடு வருவனவற்றை வினையில் வரும் விகுதிகள் மற்றும் காலத்தைக் காட்டும் இடைநிலைகள் என இரண்டாகப் பாகுபடுத்தியுள்ளது சுவாமிநாதம். மேலும் எழுத்தணவல் என்பது கரம் காரம் முதலிய சாரியைகளைக் குறிக்கும்.

தொல்காப்பியர் இவற்றைச் சாரியைகள் என்ற பொதுவான ஒன்றனுள் அடக்க, சுவாமிநாதமோ சாரியைகள், எழுத்தணவல் என்று இரு இடைநிலைகளாகப் பகுக்கிறது. நன்னூல் குறிப்பிடும் குறிப்பு என்பது சுவாமிநாதத்தில் இடம்பெறவில்லை.

தமிழ்க்காப்பு இயம் முன்னையோர் கருத்தைப் பின்பற்றி இடைச்சொல்லை ஒன்பது வகையாகப் பாகுபடுத்துகிறது. 1.காலம் காட்டும் இடைநிலைகள், 2.சாரியைகள், 3. திணை, பால், தொழில், பண்பு இவற்றை உணர்த்தும் ஈறாக வருவன, 4. எதிர்மறை, 5. வேற்றுமை உருபுகள், 6. தத்தம் குறிப்பால் பொருள் உணர்த்துவன, 7. அசைநிலை, 8. இசைநிறை, 9. உவம உருபுகள் ஆகியன (த. கா. இ. 358).

இடைச்சொல் நிற்கும் இடம் - வளர்ச்சி நிலை

இடைச்சொற்கள் பெயர், வினையின் முன்னும், பின்னும் வருவதோடு நடுவிலும் வரும் என சுவாமிநாதம் இயம்புகிறது (சு. நா. 54). உடன் வருதலும் உண்டு எனத் தென்னூல் சுட்டுகிறது (தென். சொற். 149).

இடைச்சொற்களும், அவை உணர்த்தும் பொருள்களும் - மரபு வளர்ச்சி

மன் இடைச்சொல் - மரபு வளர்ச்சி

நன்னூல், மன் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாகத் தொல்காப்பியம் கூறும் கழிவு, ஆக்கம், ஒழியிசை என்பவற்றோடு அசைநிலை, மிகுதி, நிலைபேறு ஆகிய மூன்றையும் இணைத்து ஆறு பொருள்களை 'மன்' இடைச்சொல் உணர்த்தி வரும் என்கிறது (நன். 432).

இனிய தமிழ் இலக்கணம் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்களை நூற்பாவில் கூறவில்லை. உரைநடையில் கூறியுள்ளது. அந்த வகையில் 'மன்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாக நன்னூல் குறிப்பிடுவனவற்றையே இனிய தமிழ் இலக்கணம் பின்பற்றியுள்ளது (இ. த. இ. ப. 186).

தென்னூல் (தென். சொற். 152), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 369) ஆகியவை நன்னூலைப் பின்பற்றி அறுவகைப் பொருள்களை 'மன்' இடைச்சொல் உணர்த்தும் எனக் குறிப்பிடுகின்றன. தமிழ்க் காப்பு இயம் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது.

இலக்கண விளக்கமும் (இ. வி. 263), சுவாமிநாதமும் (சு. நா. 55) தொல்காப்பியர் கூறும் கழிவு, ஆக்கம், ஒழியிசை என்பவற்றோடு நன்னூல் குறிப்பிடும்

பொருள்களில் அசைநிலை என்ற ஒன்றையும் சேர்த்து 'மன்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாக நான்கனைக் குறிப்பிடுகின்றன.

தமிழ்நூல் 'மன்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்களாக அசைநிலை, உறுதி, கழிவு, நிலைபெறல் ஆகிய நான்கனைக் குறிப்பிடுகிறது. முன்னையோர் குறிப்பிடாத 'உறுதி' என்னும் பொருளைத் தமிழ்நூல் புதிதாகச் சேர்த்துள்ளது. 'மன்' இடைச்சொல் 'உறுதி' என்னும் பொருளைத் தருவதை, 'மண்புக்கு மாய்வது மன்' என்னும் சான்றின் வழி இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார் (த. நூ. 138).

'உம்' இடைச்சொல் - மரபு வளர்ச்சி

இனிய தமிழ் இலக்கணம் முன்னையோர் கூறும் எண் வகைப் பொருள்களோடு விரைவு, முற்றும்மை ஆகிய இரண்டையும் சேர்த்து பத்து வகைகளாக உம்மை இடைச்சொல் உணர்த்தும் பொருள்களைக் குறிப்பிடுகிறது (இ. த. இ. ப. 184 – 185). மேலும், 'உம்' இடைச்சொல் வினாக்குறை என்னும் பொருளைத் தருவதாக ஆ. சிவலிங்கனார் கருதுகிறார்.

"எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்" (நால்வர் நான்மணிமாலை – காப்பு)

இப்பாடலில் 'எப்போதும்' என்பது 'எப்போது' என வந்துள்ளது. அதில் 'உம்' இடைச்சொல் தொக்கது. 'எப்போது' என்பது வினா. 'எப்போதும்' என்பது எக்காலமும் எனக் கால முழுமையைக் காட்டும்; வினாப் பொருளைக் காட்டாது. 'எப்போது' என்னும் வினாப்பொருள் தரும் சொல்லை 'உம்' இடைச்சொல் சேர்ந்து வினாப்பொருளைக் குறைத்துவிட்டது.

எனவே 'உம்' இடைச்சொல் எதிர்மறை முதலிய எட்டுப்பொருள்களோடு வினாக்குறை என்னும் பொருளையும் சேர்த்து ஒன்பது பொருள் தரும் என்ற முடிவுக்கு வரலாம் என அறிஞர் ஆ சிவலிங்கனார் (1998 : 34) குறிப்பிடுவதும் வளர்ச்சி நிலை கருதி ஏற்றுக்கொள்ளத் தக்கது"[32] என்னும் கூற்று ஈண்டு குறிக்கத்தக்கது.

ஓகார இடைச்சொல் - மரபு வளர்ச்சி

நேமிநாதம் ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருண்மைகளாக சிறப்பு, வினா, தெரிநிலை, எண், எதிர்மறை, ஒழியிசை, ஈற்றசை ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (நேமி. 79).

தொல்காப்பியம் குறிப்பிடும் பிரிநிலையை நீக்கி எண், ஈற்றசை ஆகிய இரு பொருள்களைச் சேர்த்துள்ளது நேமிநாதம்.

நன்னூல் தொல்காப்பியம் குறிப்பிடும் அறுவகைப் பொருள்களோடு கழிவு, அசைநிலை ஆகிய பொருண்மைகளையும் ஓகார இடைச்சொல் உணர்த்தி வரும் என நவில்கிறது (நன். 423).

இலக்கண விளக்கம் (இ. வி. 253), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 132), சுவாமிநாதம் (சு. நா. 55), தென்னூல் (தென். சொற். 160), தமிழ்க் காப்பு இயம் (த.கா. இ. 368) ஆகியவை நன்னூலைப் பின்பற்றியுள்ளன. இவற்றுள் இலக்கண விளக்கமும், தமிழ்க்காப்பு இயமும் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன.

தென்னூல் மற்றுமொரு கருத்தாக வன்புறை குறித்த வினையொடு கூடிய ஓகார இடைச்சொல் எதிர்மறைப்பொருளை உணர்த்தி வரினும் ஏற்றுக் கொள்ளற்குரியது என உரைக்கிறது (தென்.சொற். 161).

இனிய தமிழ் இலக்கணம் நன்னூல் கூறும் எண்வகைப் பொருண்மைகளுடன் ஐயம், ஓசை ஆகிய இரண்டையும் சேர்க்கிறது. மேலும் சிறப்பை இழிவு சிறப்பு, உயர்வு சிறப்பு என இரண்டாகப் பகுக்கிறது (இ. த. இ. ப. 183).

ஏகார இடைச்சொல் மரபு வளர்ச்சி

நன்னூல் தொல்காப்பியம் குறிப்பிடும் ஐவகைப்பொருண்மைகளோடு இசைநிறை என்பதனையும் சேர்த்து அறுவகைப் பொருள்களை ஏகாரம் உணர்த்தும் என நவில்கிறது. (நன். 422). தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றியுள்ளது (தொ. வி. 131).

இலக்கண விளக்கமும், சுவாமிநாதமும் தொல்காப்பியம் குறிப்பிடும் தேற்றம், வினா, எண், பிரிநிலை, ஈற்றசை என்பவற்றோடு நேமிநாதம் சுட்டும் எதிர்மறை என்பதையும் சேர்த்து அறுவகைப் பொருண்மைகளை ஏகாரம் உணர்த்தி வரும் என நவில்கின்றன (இ. வி. 252), (சு. நா. 54).

இனிய தமிழ் இலக்கணம் முன்னையோர் குறிப்பிடும் பிரிநிலை, வினா, எண், தேற்றம், இசைநிறை ஆகியவற்றோடு அசைநிலை, விளி, உயர்வு, வியப்பு, இழிவு ஆகிய பொருண்மைகளிலும் ஏகாரம் வரும் என நவில்கிறது (இ. த. இ. ப. 182).

தென்னூல், நன்னூல் குறிப்பிடும் தேற்றம், வினா, எண், பிரிநிலை, இசைநிறை, ஈற்றசை என்பவற்றோடு இரக்கம் என்பதனையும் சேர்த்து எழுவகைப் பொருளில் ஏ என்னும் இடைச்சொல் வரும் என நவில்கிறது (தென். சொற். 159).

தமிழ்க் காப்பு இயம் முன்னையோர் கருத்தை அடியொற்றி தேற்றம், பிரிநிலை, வினா, எண், எதிர்மறை, ஈற்றசை, இசைநிறை ஆகிய எழுவகைப் பொருள்களிலும் ஏகார இடைச்சொல் வரும் என இயம்புகிறது (த. கா. இ. 373).

டாக்டர். பொன். கோதண்டராமன் அவர்கள் ஏகார இடைச்சொல்லுக்கு இருபத்தொரு பொருள்களைக் குறிப்பிடுகிறார். ‘‘இக்காலத்தில் ஏகார இடைச்சொல் பலவகைப் பொருண்மையில் இயங்குகிறது. தொல்காப்பியரும், நன்னூலாரும் கூறிய பிரிவுகளுக்குள் இக்கால ஏகாரத்தை அடக்கி விட முடியாது. வளர்ந்து வரும் மொழியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. அத்தகைய மாற்றங்களில் இதுவும் ஒன்று.

1. எதிர்மறை 2. கருதல் 3. தேற்றம் 4. விலக்கு 5. மிகை 6. முற்று 7.புறக்கணிப்பு 8. முடிப்பு 9. யாப்புறவு (கண்டிப்பு) 10. தொடர்ச்சி 11. கவர்ச்சி 12. விருப்பு 13. துணிவு 14. கையறவு 15. எதிர்ப்பு 16. ஒப்புதற்குறிப்பு 17. ஒப்புமை நோக்கு 18. ஒருமை நாட்டம் 19. கழிந்ததற்கிரங்கல் 20. எய்துவதஞ்சல் 21. எடுத்து மொழிதல்’’[33] என்று குறிப்பிடுகிறார். இவை ஏகார இடைச்சொல்லின் வளர்ச்சி நிலையாகக் கொள்ளத் தக்கன.

என, என்ற இடைச்சொற்கள் - மரபு வளர்ச்சி

தொன்னூல் விளக்கம் முன்னைய இலக்கணிகள் சுட்டும் அறுவகைப் பொருண்மைகளுடன் உவமை என்பதையும் சேர்த்து எழுவகைப் பொருள்களை என, என்ற ஆகிய இடைச்சொற்கள் உணர்த்தி வரும் என நவில்கிறது (தொ. வி. 133). இனிய தமிழ் இலக்கணம் தொன்னூல் விளக்கத்தைப் பின்பற்றியுள்ளது (இ. த. இ. ப. 184).

மற்று இடைச்சொல் - வளர்ச்சி நிலை

நன்னூல், தொல்காப்பியம் குறிப்பிடும் வினைமாற்று, அசைநிலை ஆகியவற்றோடு ‘பிறிது’ என்னும் பொருண்மையிலும் ‘மற்று’ என்னும் இடைச்சொல் வரும் என நவில்கிறது (நன்.433).

நன்னூல் கருத்தையே தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ‘‘மற்று என்னும் இவ்விடைச்சொல் வினைமாற்றாகவும், அசைநிலையாகவும் வருதலேயன்றிச் சொல்கின்றது ஒழிய இனி வேறொன்று எனப் ‘பிறிது’ என்னும் பொருளிலும் இலக்கியங்களிற் பயில்கின்றது. ‘மற்று’ என்பது ‘பிறிது’ எனும் பொருளில் வழங்குதற்கு ‘இனி மற்றொன்றுரை’ என உதாரணங் காட்டினார் நச்சினார்க்கினியர்’’[34] என்று வெள்ளைவாரணர் விளக்குவார்.

மேலும், ‘‘மற்று என்பது உயர்திணை அஃறிணையைத் தழுவிய நிலையில் பொதுவாகப் ‘பிறர்’, ‘பிறிது’ என்னும் பொருள்களிலும் வரும் என்னலாம்’’[35] என்று

‘பிறர்’ என்னும் பொருளிலும் ‘மற்று’ இடைச்சொல் வருவதை ஆ. சிவலிங்கனார் சுட்டிக்காட்டுகிறார்.

சுவாமிநாதம் ‘மற்று’ என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருண்மைகளாக ‘வேறு’, ‘அசைநிலை’ ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (சு. நா. 54). நன்னூல் குறிப்பிடும் ‘பிறிது’ என்பதையே சுவாமிநாதம் ‘வேறு’ எனச் சுட்டுகிறது. தொல்காப்பியம் குறிப்பிடும் ‘வினைமாற்று’ என்னும் பொருண்மை சுவாமிநாதத்தில் இடம்பெறவில்லை.

இலகு தமிழ் ஐந்திலக்கணமும் சுவாமிநாதத்தைப் பின்பற்றி ‘மற்று’ இடைச்சொல் அசைநிலை, வேறு எனும் இரு பொருள்களைத் தருவதாகக் கூறுகிறது. மேலும்,

மற்றெனல் வேறெனும் பொருள்தனில் தனிச்சொல் (இ.த.ஐந்.293:6)

என்பதன் மூலம் மற்று என்பது ‘வேறு’ என்னும் பொருளைத் தரும்போது தனிச்சொல்லாக வரும் என்று இலகு தமிழ் ஐந்திலக்கணம் சுட்டுகிறது.

இனிய தமிழ் இலக்கணம் ‘மற்று’ இடைச் சொல் உணர்த்தும் பொருண்மைகளாக வினைமாற்று, அசைநிலை, பிறிது, பின் ஆகிய நால்வகைப் பொருள்களைச் சுட்டுகிறது (இ.த.இ.ப.186). நன்னூல் குறிப்பிடும் பொருள்களோடு ‘பின்’ என்னும் பொருளையும் புதிதாகச் சேர்க்கிறது இனிய தமிழ் இலக்கணம்.

‘கொல்’ இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் - மரபு வளர்ச்சி

நன்னூல் ‘கொல்’ என்னும் இடைச்சொல் ஐயப்பொருளையும், அசைநிலைப் பொருளையும் தரும் என நவில்கிறது (நன். 435). தொல்காப்பியம் கூறும் ஐயப்பொருளோடு அசைநிலைப்பொருளையும் நன்னூல் கூறுகிறது. இதற்குக் காரணமாக வெள்ளைவாரணர் கூறும் கருத்து இங்குக் கருதத் தக்கது. “குற்றி கொல்லோ மகன் கொல்லோ என உரையாசிரியர் (இளம்பூரணர்) காட்டிய எடுத்துக்காட்டுள் ஓகாரம் வினாப்பொருள் உணர்த்தக் ‘கொல்’ என்பது அசைநிலையாய் அமைதலைக் கண்ட பவணந்தியார், கொல் என்பது ஐயப் பொருளில் வருதலேயன்றி அசைநிலையாயும் வரும் என்பதனை, “கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே என்னும் நன்னூல் சூத்திரத்தால் உணர்த்தினார்”[36] என்பர்.

நன்னூல் கருத்தையே பின்வந்த இலக்கண நூல்களில் பலவும் ஏற்றுக்கொண்டுள்ளன. இலக்கண விளக்கம் (இ. வி. 269), சுவாமிநாதம் (சு. நா. 55:

2), தென்னூல் (தென். சொற். 155), தமிழ்நூல் (த. நூ. 138), தமிழ்க் காப்பு இயம் (370) ஆகியன நன்னூலை அடியொற்றி கொல் இடைச்சொல் ஐயம், அசைநிலை ஆகிய இரு பொருள்களை உணர்த்தும் என்கின்றன.

இனிய தமிழ் இலக்கணம், முன்னையோா் குறிப்பிடும் ஐயம், அசைநிலை என்பவற்றோடு வினா என்பதையும் சேர்க்கிறது (இ. த. இ. ப .187).

இலகு தமிழ் ஐந்திலக்கணம் 'கொல்' எனும் இடைச்சொல் அசைச்சொல்லாக வரும் என்கிறது (இ. த. ஐந். 293). ஐயப் பொருண்மை பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும் 'கொல்' என்னும் சொல் வினைச்சொல்லாக வரும் பொழுது ஏவல் பொருளைத் தரும் என்கிறது (இ. த. ஐந். 293:8).

முன்னிலை அசைச்சொற்கள்

நன்னூல் தொல்காப்பியம் குறிப்பிடும் மியா, இக, மோ, மதி என்பவற்றோடு அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ ஆகியவற்றையும் சேர்த்து பத்து முன்னிலை அசைச்சொற்களைக் கூறுகிறது (நன். 440). தொல்காப்பியம் குறிப்பிடும் இகும், சின் போன்றவை நன்னூலில் இடம்பெறவில்லை.

இலக்கணவிளக்கமும், தமிழ்க் காப்பு இயமும் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன (இ.வி.276, த.கா.இ.377).

தொன்னூல் விளக்கம், நன்னூல் கூறும் முன்னிலை அசைச்சொற்களுள் இத்தை, அத்தை, யாழ், இக, மதி, மோ, மியா, வாழிய என்பவற்றோடு மான், ஆர் ஆகியவற்றைச் சேர்த்து பத்துவகை முன்னிலை அசைச் சொற்களைச் சுட்டுகிறது. நன்னூல் குறிப்பிடும் மாள, ஈ என்பவை இதில் இடம்பெறவில்லை (தொ. வி. 137).

தென்னூல் தொல்காப்பியம் குறிப்பிடும் மியா, இக, மோ, மதி, இகும் என்பவற்றோடு சின் என்பதை இசின் எனக் குறிக்கிறது. இவற்றோடு நன்னூல் குறிப்பிடும் மாள, வாழிய, யாழ, வீ என்பவற்றையும் சேர்த்துப் பத்துவகை முன்னிலை அசைச்சொற்களைத் தென்னூல் சுட்டுகிறது (தென். சொற். 179).

சின் என்பதை இசின் எனக் குறிப்பது குறித்து இசரயேல் அவர்கள், "முன்னிலையில் 'சின்' அசைநிலை பெற்ற பதினான்கு சொற்கள் ஏறத்தாழ நாற்பத்தைந்திடங்களில் (சங்க இலக்கியத்தில்) வழக்கில் காணப்படுகின்றன. இவையாவும் முன்னிலையொருமை ஏவலாகவே ஆட்சி பெற்றுள்ளன.

கண்டிசின் (அகம். 94) கண்டு + இசின்

பூண்டிசின் (அகம். 7) பூண்டு + இசின்

என்றிசின் (அகம். 375) என்று + இசின்

கேட்டிசின் (நற். 78) கேட்டு + இசின்

நோற்றிசின் (புறம். 202) நோற்று + இசின்

வந்திசின் (ஐங். 175) வந்து + இசின்

உரைத்திசின் (கலி. 63) உரைத்து + இசின்

இந்த இடங்களில் எல்லாம் அசைநிலையின் வடிவம் 'சின்' எனக் கொள்ளுவதை விட 'இசின்' என்று பகுப்பதே பொருத்தமாய்த் தோன்றுகிறது. இறந்தகால வினையெச்சங்களுடன் 'இசின்' இணைந்துள்ளது என்னலாம். இதனை இசு+ இன் எனப் பிரிக்கலாம். 'இசு' 'இகு' என்பதன் அண்ணவினமான (Palatalized) வடிவம் ஆகும்.

இகு என்பது ஈ(கு) என்ற துணை வினையின் உயிர் குறுகிய வடிவம் ஆகும். எனவே ஈ(கு) - இன் > இ(கு) + இன் > இசு+ இன் ஆக மாறி இருக்கலாம்"[37] என்று தனது இடையும் உரியும் நூலில் சுட்டுவதை ஆ.சிவலிங்கனார் எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

'அம்ம' இடைச்சொல்

நன்னூல், அம்ம எனும் இடைச்சொல் கேள் எனும் பொருளைத் தருவதோடு உரையசைப்பொருளிலும் வரும் என நவில்கிறது (நன். 438). தமிழ்க் காப்பு இயம் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (த. கா. இ. 380). இலக்கண விளக்கம், அம்ம என்பது கேட்பித்தல், அசைநிலை ஆகிய பொருள்களில் வரும் என்கிறது (இ. வி. 274). சுவாமிநாதம் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றியுள்ளது (சு.நா. 56). இனிய தமிழ் இலக்கணம் அம்ம இடைச்சொல் அசைநிலைப் பொருளில் வரும் என்கிறது. மேலும், அம்மா என்னும் இடைச்சொல்லையும் வியப்புப் பொருளில் வரும் எனச் சுட்டுகிறது (இ. த. இ. ப. 187). இது மரபு வளர்ச்சியாகும்.

'ஆங்க' - இடைச்சொல்

'ஆங்க' என்னும் இடைச்சொல் உரையசையாக வரும் என்று தொல்காப்பியம் கூற, நன்னூல் அசைநிலைப்பொருளிலும், இடப்பொருளிலும் வரும் என்கிறது (நன். 437). 'ஆங்க' என்பது விகாரம் ஆதலால் 'ஆங்கு' என நன்னூல் குறிக்கிறது.

ஆங்க என்பதையும் ஆங்கு என்பதையும் வெவ்வேறு இடைச்சொற்களாகக் கொள்கிறது முத்துவீரியம். ஆங்க உரையசை என்னும் தொல்காப்பியக் கருத்தையும்,

ஆங்கு அசைநிலை இடப்பொருளில் வரும் என்னும் நன்னூல் கருத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளது (மு.வீ.ஒழி.15,22). சுவாமிநாதம் நன்னூலைப் பின்பற்றியுள்ளது (சு. நா. 56).

மூவிட அசைச்சொற்கள்

தொல்காப்பியம் சுட்டும் ஏழு அசைச் சொற்களொடு இகும், சின், குரை, ஓரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று ஆகிய பதின்மூன்றையும் சேர்த்து இருபது அசைச்சொற்களை மூவிடத்திற்கும் பொதுவானவையாக நன்னூல் குறிப்பிடுகிறது (நன். 441).

இவற்றுள் இகும், சின் ஆகியவற்றை முன்னிலை அசைச் சொற்களுள் அடக்கிக் கூறும் தொல்காப்பியம் அவை தன்மை, படர்க்கையிலும் வரும் என்கிறது. பெரும்பான்மை கருதி தொல்காப்பியர் முன்னிலையை முதன்மைப்படுத்தியிருக்கலாம். அவை தன்மை, படர்க்கையிலும் வரும் என்பதால் நன்னூல் அவற்றை மூவிட அசைச் சொற்களில் அடக்கிக் கூறியுள்ளது.

இலக்கண விளக்கம் நன்னூல் குறிப்பிடுவனவற்றுள் கின்று, நின்று ஆகியவற்றைத் தவிர்த்து, பிறவற்றை மூவிட அசைச் சொற்களாகக் கூறியுள்ளது. அவற்றோடு என், ஆல், என்ப ஆகிய மூன்றையும் புதிதாக இணைத்துள்ளது (இ.வி.277).

தொன்னூல் விளக்கம் முன்னையோர் கூறும் அசைச்சொற்களோடு மேலும் பலவற்றைச் சேர்த்து முப்பது பொது அசைகளைக் கூறியுள்ளது (தொ. வி. 137).

சுவாமிநாதம் முன்னையோர் கூறிய முன்னிலை அசைச்சொற்களையும், மூவிடத்திற்கும் பொதுவான அசைச்சொற்களையும் இணைத்து அசைச்சொற்களாகக் குறிப்பிடுகிறது. அவற்றுள் கோள் எனும் அசைச்சொல்லைச் சுவாமிநாதம் புதிதாகச் சேர்த்துள்ளது (சு. நா. 56: 3-7).

அறுவகை இலக்கணம் முன்னையோர் சுட்டிய அசைச்சொற்களில் சிலவற்றைச் சேர்த்தும் சிலவற்றைப் புதிதாக இணைத்தும் குறிப்பிடுவதனை,

அம்மா அந்தோ மாதோ கொல் ஆல்
ஐ இல் இன்ஏ ஓ அன்று அரோ எனப்
பன்மொழி ஈற்றினும் இடையினும் வரும்இவை
அசைகள் ஆம்என்று அறைந்திடல் முறையே (அ.இ.சொல்.62)

என்னும் நூற்பா உணர்த்துகிறது.

இனிய தமிழ் இலக்கணம் அசைநிலை இடைச்சொற்களாக யா, க, மாதோ, ஏ, ஓ, தாம், தான், ஆம், பிற, பிறக்கு, அரோ, இட்டு, இருந்து ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (இ. த. இ. 141).

தென்னூல், முன்னைய இலக்கணிகளின் கருத்துகளின் அடிப்படையில் மியா, இக, மோ, மதி, இகும், இசின், யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இருந்து, இட்டு, ஏ, அந்தில், ஆங்க, அத்தை, இத்தை, கொல், வாழிய, தெய்ய, மாள, வீ, யாழ, ஆர், ஆல், குரை, ஒடு, ஓரும், தாம், தான், அன்று, ஆம், போலும், அம்ம, அ ஆகியவற்றை அசைச்சொற்களாகக் குறிப்பிடுகிறது (தென். சொற். 177). அவற்றுள் மியா, இக, மோ, மதி, இகும், இசின், மாள, வாழிய, யாழ, வீ என்பன முன்னிலைக்கண்ணும் மற்றவை மூவிடங்களுக்கும் பொதுவாக வரும் என நவில்கிறது. (தென். சொற். 179)

தமிழ்க் காப்பு இயமும் முன்னைய இலக்கணிகளின் கருத்துகளின் அடிப்படையில்,

யாகா பிறபிறக்கு அரோபோ மாது இகும்
ஓரும் தெய்ய சின் குரை அந்தில்
ஓமன் இருந்து இட்டு அன்று ஆம் தாம்தான்
என்பவும் பிறவும் அசைமொழி யாகும். (த. கா. இ. 376)

என்று விளக்குகிறது.

பிரிவில் அசைநிலைகள்

தென்னூல், பிரிவில் அசைநிலைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் ஆக, ஆகல் என்பவற்றோடு நன்றே, அன்றே ஆகியவையும் இரட்டி வரும் எனக் குறிப்பிடுகிறது (தென். சொற். 180).

குறிப்பில் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்

நன்றே, அன்றே, அந்தோ, அன்னோ போன்றவற்றைக் குறிப்பினால் பொருள் உணர்த்தும் இடைச்சொற்களாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல். 282). தென்னூல் இவற்றோடு பிரிவில் அசைச்சொற்களாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் ஆக, ஆகல் என்பவற்றையும் இணைத்து குறிப்புப்பொருள் தரும் இடைச்சொற்களாகக் குறிப்பிடுகிறது (தென். சொற். 180).

முற்றும்மை சிறுபான்மை எச்சப்பொருளில் வரும் என்று தொல்காப்பியம் கூற, இனிய தமிழ் இலக்கணம் எச்சப்பொருளிலும், எதிர்மறைப் பொருளிலும் வரும் என்கிறது (இ. த. இ. ப. 185).

எண்ணிடைச் சொற்கள்

தொகை பெற்றும், பெறாதும் வரும் எண்ணிடைச் சொற்களாகத் தொல்காப்பியம் (தொல். சொல். 287) குறிப்பிடும் 'உம்', 'என' என்பவற்றோடு 'என்று', 'ஒடு' என்பதையும் சேர்த்து இந்நான்கு எண்ணிடைச்சொற்களும் தொகை பெற்றும், பெறாதும் வரும் என நன்னூல் இயம்புகிறது (நன். 438).

இலக்கண விளக்கமும் (இ. வி. 260), தமிழ்க்காப்பு இயமும் (த. கா. இ. 381) நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளன. தொன்னூல் விளக்கமும், தென்னூலும் நன்னூலைப் பின்பற்றியுள்ளன (தொ. வி. 136), (தென். சொற். 169).

எனா, என்றா என்பன எண்ணுதற் பொருளில் வருதல்

எனாவும் என்பதில் உள்ள உம்மை மறைந்து எனா என நிற்கும் இடைச்சொல்லும், என்று என்னும் சொல் ஆகாரம் பெற்று என்றா என வரும் இடைச்சொல்லும் சொல்தோறும் நின்று எண்ணுப்பொருளில் வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல். சொல்.289).

இலக்கண விளக்கம் எனா, என்றா என்பவற்றோடு ஒடு என்பதையும் இணைத்து,

என்றா எனா ஒடு எண்ணுக் குறித்து இயலும் (இ.வி.259)

என்கிறது. தென்னூல் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றியுள்ளது (தென். சொற். 171).

பிரிந்து நின்று பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்

பிரிந்து நின்று பொருள் உணர்த்தும் இடைச்சொற்களாக என்று, ஒடு, என என்பவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிட, தென்னூல் அவற்றோடு 'ஏ' என்னும் இடைச்சொல்லையும் சேர்த்து, இந்நான்கு எண்ணிடைச் சொற்களும் தொடரில் ஓரிடத்தில் அமைந்து ஆங்கு அமைந்த செவ்வெண்தொறும் வருதல் முறையாகும் என விளக்குகிறது (தென்.சொற்.172).

உரிச்சொல் இலக்கணம் - வளர்ச்சி நிலை

தொல்காப்பியம் உரிச்சொல்லானது பெயரினும், வினையினும் திரிந்து தோன்றும் என்று கூறுகிறது. இக்கருத்தின் அடிப்படையில் இனிய தமிழ் இலக்கணம் உரிச்சொற்களைப் பெயருரிச்சொல், வினையுரிச்சொல் எனத் தனித்து

வகைப்படுத்தியுள்ளது. மேலும் எண்ணுரிச் சொற்களையும் விளக்கியுள்ளது. இவ்வெண்ணுரிச் சொற்கள் முன்னைய இலக்கண நூல்களில் கூறப்படவில்லை. (இ.த.இ. 144 – 146)

தென்னூல் முன்னையோர் கருத்தின் அடிப்படையில் உரிச்சொல்லுக்கு விரிவான இலக்கணம் கூறியுள்ளது. 'பெயர்ச்சொல் முதலாய நால்வகைச் சொற்கும் அடிப்படையாகும் உரிச்சொல்லின் இயல்பினை உரைக்குமிடத்து அவை பண்பு, இசை, குறிப்பு என்னும் மன உணர்வானே, தோன்றிப் புள்ளி எழுத்தும், உயிரெழுத்துமாகிய ஓரெழுத்தசையும், புள்ளியும் உயிரும் கூடி நேர்நிரை என்னும் அசையளவானும் தோன்றிப் பொருள் முற்றுப் பெறாத குறை வடிவாயும், பொருள் முற்றிய வடிவாயும் முதல்நிலை (பகுதி) அளவாக நிற்கும் சொல்லாய் பல பொருள் ஒரு சொல்லாயும், ஒரு பொருள் குறித்து வரும் பல சொல்லாயும் பெயர், வினை, இடை, உரி நால்வகைக்கும், மூவகைக்கும், இரு வகைக்கும் பொதுவாக ஆக்கமுற்று வருவன உரிச்சொல்லாகும் என்று கூறுவர் புலவர் (தென். சொற். 185) என்று குறிப்பிடுகிறது.

மேலும் பெயரடையாகவும், வினையடையாகவும், பெயர்ப் போலியாகவும், வினைப் போலியாகவும், ஒரு பொருள் குறித்தும், பல பொருள் குறித்தும் வருவன வகைப்பாட்டு உரிச்சொற்களாகும் (தென். சொற். 186) என விளக்குகிறது.

தமிழ்க் காப்பு இயம் உரையாசிரியர்களின் கருத்துகள் அடிப்படையில் உரிச்சொல்லை வேர்ச்சொல் எனச் சுட்டுகிறது (த. கா. இ. 387).

ஒரு சொல் ஒரு பொருள் மரபு வளர்ச்சி

எறுழ், வய என்பவை வலிமைப் பொருள் உணர்த்தும். தொல்காப்பியர் இவற்றை ஒரு பொருள் தரும் ஓருரிச் சொற்களாக அமைத்து, தனித்தனி நூற்பாக்களில் கூறியுள்ளார். தமிழ்க் காப்பு இயம் எறுழ், வய என்பவற்றோடு நோன் என்னும் சொல்லும் வலிமைப்பொருள் தரும் என்பதோடு அவற்றைப் பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களாகக் கூறியுள்ளது (த.கா.இ.391).

ஒரு சொல் பல பொருள் - மரபு வளர்ச்சி

இலக்கண விளக்கம் கடி என்னும் உரிச்சொல்லுக்கு தொல்காப்பியம் குறிப்பிடும் பன்னிரு பொருள்களோடு மணம் என்பதையும் சேர்த்து பதின்மூன்று பொருள்களைக் குறிப்பிடுகிறது (இ. வி. 282).

தமிழ்க் காப்பு இயம் கடி என்னும் உரிச்சொல்லுக்கு நன்னூல் குறிப்பிடும் பதின்மூன்று பொருள்களோடு தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றுள் ஐயம் என்பதையும் சேர்த்துப் பதினான்கு பொருள்களைக் கூறுகிறது (த. கா. இ. 394).

பல சொல் ஒரு பொருள் - மரபு வளர்ச்சி

அரவம் என்னும் பொருள் தரும் உரிச்சொற்களாகக் கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் என்ற உரிச்சொற்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நேமிநாதம் அவற்றோடு ஆர்ப்பு என்னும் உரிச் சொல்லையும் அரவம் என்னும் பொருள் தரும் சொல்லாகக் குறிக்கிறது (நேமி. 81).

நன்னூல் முன்னையோர் குறிப்பிடும் அவ்வைந்தோடு மேலும் பல உரிச்சொற்களை ஓசை என்னும் பொருள் தருவனவாகக் குறிப்பிடுவதனை,

முழக்கு இரட்டு ஒலி கலி இசை துவை பிளிறு இரை
இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ் குளிறு அதிர் குரை
கனை சிலை சும்மை கௌவை கம்பலை
அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை. (நன். 459)

என்னும் சூத்திர வழி அறியலாம். மேலும், மிகுதிப்பொருள் உணர்த்தும் உரிச்சொற்களாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் உறு, தவ, நனி என்பவற்றோடு சால, கூர், கழி ஆகியவற்றையும் நன்னூல் இணைக்கிறது (நன். 456).

இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ. த. ஐந். 299), தமிணூல் (த. நூ. 345), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 389) ஆகியவை நன்னூலைப் பின்பற்றி மிகுதிப்பொருள் தரும் உரிச்சொற்களைத் தந்துள்ளன.

தொல்காப்பியம் நம்பு, மே ஆகிய இரண்டும் நசைப் பொருளில் வரும் என உரைக்கிறது. தமிணூல் இவற்றோடு அமர்வு என்பதனையும் சேர்க்கிறது (த.நூ.347).

தொல்காப்பியம் 'ஐ' என்னும் உரிச்சொல்லுக்கு வியப்பு என்னும் ஒரு பொருளை மட்டுமே சுட்ட, தமிணூல் ஐ என்னும் உரிச்சொல் முப்பொருள்களைத் தரும் என உரைக்கிறது. இதனை,

ஐயே தலைமை வியப்பு தண்மை (த. நூ. 348)

என்னும் நூற்பா வழி அறியலாம்.

மரபு வீழ்ச்சி

அவிநயம், இலக்கணக் கொத்து ஆகிய நூல்களில் இடைச்சொல் மரபுகள் பேசப்படவில்லை. நேமிநாதத்தில் இடைச்சொல்லின் இயல்பு பேசப்படவில்லை. இடைச்சொல் நிற்கும் இடம் குறித்து நேமிநாதம், முத்துவீரியம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியவை குறிப்பிடவில்லை.

இடைச்சொல்லானது ஈறு திரிந்தும், திரியாதும் வரும் என்னும் கருத்தும், ஓர் இடைச்சொல் பிறிதோர் இடைச்சொல்லுடன் சேர்ந்தும் வரும் என்னும் கருத்தும் நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், தமிழ்நூல் ஆகியவற்றில் இடம்பெறவில்லை.

'மன்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் குறித்து தொன்னூல் விளக்கம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியவை குறிப்பிடவில்லை.

தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் போன்றவை 'தில்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்களைக் குறிப்பிடவில்லை. 'தில்' இடைச்சொல் விழைவுப் பொருளில் வரும் பொழுது தன்மை இடத்தில் மட்டுமே வரும் என்ற தொல்காப்பியரின் கருத்து பிற்றை இலக்கண நூல்களில் இடம்பெறவில்லை.

'கொன்' இடைச்சொல் உணர்த்தும் பொருள் குறித்து நன்னூல், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் போன்ற இலக்கண நூல்கள் யாதும் கூறவில்லை.

அறுவகை இலக்கணத்தில் 'உம்' இடைச்சொல் விளக்கப்படவில்லை.

ஓகாரம் சிறப்புப் பொருண்மையில் வரும் பொழுது அளபெடுத்து வரும் என்னும் குறிப்பு இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற நூல்களில் காணப்படவில்லை.

அறுவகை இலக்கணத்தில் ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருண்மைகள் சுட்டப்படவில்லை.

அறுவகை இலக்கணம் மற்றும் இலகு தமிழ் ஐந்திலக்கணத்தில் என, என்று ஆகிய இடைச்சொற்கள் உணர்த்தும் பொருண்மைகள் பேசப்படவில்லை.

நேமிநாதம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம் ஆகிய நூல்களில் 'மற்று' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருண்மைகள் குறிப்பிடப்படவில்லை.

நேமிநாதம், நன்னூல், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் போன்றவற்றில் 'எற்று' என்னும் இடைச்சொல் குறித்துக் கூறப்படவில்லை.

நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் 'மற்றையது' என்னும் இடைச்சொல் இடம்பெறவில்லை.

நன்னூல், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், தமிழ்நூல் போன்றவை 'மன்ற' இடைச்சொல் குறித்துக் கூறவில்லை.

நேமிநாதம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் 'தஞ்சம்' இடைச்சொல் குறித்துக் கூறப்படவில்லை.

நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்களில் 'அந்தில்' இடைச்சொல் இடம்பெறவில்லை.

நேமிநாதம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம் போன்றவற்றில் 'கொல்' இடைச்சொல் உணர்த்தும் பொருண்மைகள் குறிப்பிடப்படவில்லை.

எல் இடைச்சொல் குறித்து முத்துவீரியம் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் பேசப்படவில்லை. எல்லே என்பதனை இடைச்சொல்லில் அடக்குவதா, உரிச்சொல்லில் அடக்குவதா என்ற குழப்பமே அதனைத் தவிர்த்திருக்கக் காரணமாய் இருக்கலாம்.

ஆர் இடைச்சொல் முத்துவீரியம், தொன்னூல் விளக்கம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

அசைநிலை, இசைநிறைப் பொருளில் வரும் ஏகாரம் குறித்து. முத்துவீரியம் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் கூறப்படவில்லை. குரை இடைச்சொல் அசைநிலைப் பொருளில் வரும் என்று மட்டுமே நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகியவை சுட்டுகின்றன. இசைநிறைப் பொருளில் வரும் எனக் கூறவில்லை.

நேமிநாதம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் போன்றவற்றில் 'மா' இடைச்சொல் குறித்துக் கூறப்படவில்லை.

முன்னிலை அசைச்சொற்கள் குறித்து சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் போன்றவற்றில் கூறப்படவில்லை.

தொல்காப்பியம் குறிப்பிடும் இகும், சின் என்பவை முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் சுட்டப்பெறவில்லை. அதிலும் இகும், சின் முன்னிலையில் மட்டுமல்லாது தன்மை, படர்க்கையிலும் வரும் என்னும் கருத்து தென்னூலில் இடம்பெறவில்லை.

அம்ம இடைச்சொல் நேமிநாதம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் ஆகியவற்றில் இடம்பெறவில்லை.

இனிய தமிழ் இலக்கணம் 'ஆங்கு' என்னும் இடைச்சொல்லைக் குறிப்பிடினும் அது எப்பொருளில் வரும் என்பதைச் சுட்டவில்லை. நேமிநாதம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், தென்னூல், தமிழ்நூல் போன்றவற்றில் இவ்விடைச்சொல் இடம்பெறவில்லை.

ஒப்பில் போலி குறித்து முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்களில் கூறப்படவில்லை.

மூவிடத்திற்கும் பொதுவான அசைச்சொற்கள் குறித்து நேமிநாதம், தமிழ்நூல் ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை.

இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஏ, ஓ, மாது ஆகிய மூன்றனை மட்டுமே அசைச்சொற்களாகச் சுட்டுகிறது. முன்னைய இலக்கணிகள் கூறும் பிற அசைச்சொற்கள் இதில் இடம்பெறவில்லை (இ.த.ஐந்.293).

பிரிவில் அசைச்சொற்கள் குறித்து முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் இல்லை. முத்துவீரியமும், தென்னூலும் தொல்காப்பியம் குறிப்பிடும் 'என்பது' என்னும் இடைச்சொல்லைப் பிரிவில் அசைநிலையாகச் சுட்டவில்லை.

ஔ இடைச்சொல் (தொல்.சொல்.281) யாதொரு இலக்கண நூலிலும் இடம்பெறவில்லை.

குறிப்புப்பொருள் தரும் இடைச்சொற்கள் குறித்து, தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் குறிப்பிடப்படவில்லை.

எச்சவும்மையும், எதிர்மறை உம்மையும் ஒரு தொடரில் பொருந்தி வருதல் இல்லை என்ற கருத்து தென்னூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் பேசப்படவில்லை.

எச்சவும்மையைப் பிற்படக் கூற வேண்டும் என்னும் கருத்து நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

முற்றும்மை சிறுபான்மை எச்சமாக வரும் என்னும் கருத்து நன்னூல், இலக்கணம் விளக்கம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

செய்யுளின் இறுதியில் ஈற்றசையாக வரும் ஏகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து ஒரு மாத்திரை அளவாய்க் குறைந்து ஒலித்தலும் உண்டு (தொல். சொல்.286) என்னும் தொல்காப்பியக் கருத்து பிற்றை இலக்கண நூல்களில் இல்லை.

எண்ணிக்கைப் பொருளில் வரும் ஏகார இடைச்சொல் எண்ணேகாரமாகும். அது சொல்தோறும் வருவதோடு அல்லாமல் இடைவிட்டும் வரும். அவ்வாறு வந்தாலும் அவ்வெண்ணினைக் குறித்தே வந்தது (தொல்.சொல்.288) என்ற கருத்து தொல்காப்பியம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

என்றா, எனா என்பவை எண்ணுதற் பொருளில் வரும் என்னும் கருத்து இலக்கண விளக்கம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

தொகை பெற்றே வரும் எண்ணிடைச் சொற்கள் குறித்து நேமிநாதம், முத்துவீரியம், சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் போன்றவை குறிப்பிடவில்லை.

எண்ணும்மையில் வேற்றுமை உருபுகள் மறைந்து வரும். அதனை நீக்காமல் ஏற்றுக் கொள்வர் (தொல். சொல். 291) என்பதும், உம் என்னும் சொல்லை ஈறாக உடைய வினைச்சொல் செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சமாகும். அச்சொல்லில் உள்ள உம் என்பது உந்து எனத் திரிதலும் உண்டு (தொல். சொல். 292) என்பதும் தொல்காப்பியம் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் கூறப்படவில்லை.

வினையிலும் எண்ணிடைச் சொற்கள் வரும் என்னும் தொல்காப்பியக் கருத்து நன்னூல், இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

பிரிந்து நின்று பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் குறித்து நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

இடைச்சொற்களுக்குப் பொருள் அறியும் முறை குறித்த தொல்காப்பியக் கருத்து (தொல்.சொல்.295) இலக்கண விளக்கம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை.

இடைச்சொற்களுக்குப் புறனடை கூறும் மரபு இலக்கண விளக்கம், தென்னூல், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்களில் இடம்பெறவில்லை.

உரிச்சொல் மரபுகள் - வீழ்ச்சி

அவிநயம், இலக்கணக்கொத்து, அறுவகை இலக்கணம் ஆகிய நூல்களில் உரிச்சொல் குறித்துப் பேசப்படவில்லை. தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றி உரிச்சொல் இலக்கணம் பேசுகிறது. எனினும், ஒரு குணம், பல குணம் தழுவிய உரிச்சொல் பகுப்புமுறை தொன்னூல் விளக்கத்தில் காணப்படவில்லை. சுவாமிநாதத்தில் உரிச்சொல் பொது இலக்கணம் தவிர உரிச்சொற்கள், அவை உணர்த்தும் பொருண்மைகள் பேசப்படவில்லை. இனிய தமிழ் இலக்கணத்தில் ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல், பல குணம் தழுவிய ஓருரிச்சொல் என்ற பகுப்பு காணப்படவில்லை.

பயிலாத சொல்லின் பொருளை அறிய பயின்ற சொல்லோடு சார்த்திப் பொருள் அறிய வேண்டும் என்பதையும், உரிச்சொற்கள் அவ்வவ்வற்றின் மரபு வழிச் சென்று பொருள் உணர்த்தும் என்பதையும் இலக்கணவிளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் சுட்டிக்காட்டில. வெளிப்படை, வெளிப்படையல்லாதன என உரிச்சொற்கள் இரு நிலைமைப்படும் என்னும் கருத்தைத் தென்னூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் குறிப்பிடவில்லை.

ஒரு பொருள் தரும் ஓருரிச்சொற்களின் வீழ்ச்சி

தொல்காப்பியம் குறிப்பிடும் 49 ஒரு பொருள் தரும் ஓருரிச்சொற்களில் நேமிநாதம் 11 உரிச்சொற்களையும், முத்துவீரியம் 10 உரிச்சொற்களையும், தென்னூல் 15 உரிச்சொற்களையும், தமிழ்க் காப்பு இயம் 10 உரிச்சொற்களையும் மட்டுமே கூறியுள்ளன. பிறவற்றைக் கூறவில்லை. இந்நான்கு நூல்கள் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் ஒரு பொருள் தரும் ஓருரிச்சொற்கள் இடம்பெறவில்லை.

ஒரு சொல் பல பொருள் தரும் உரிச்சொற்களின் வீழ்ச்சி

பல பொருள் தரும் ஓருரிச்சொற்களாக தொல்காப்பியம் குறிப்பிடும் 14 உரிச்சொற்களுள் ‘கடி’ என்னும் ஒரு உரிச்சொல்லைத் தவிரப் பிறவற்றை நேமிநாதம், நன்னூல், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ் நூல் ஆகியவை குறிப்பிடவில்லை. முத்துவீரியம் இரு உரிச்சொற்களையும், தென்னூல் ஏழு உரிச்சொற்களையும், தமிழ்க்காப்பு இயம் ஆறு உரிச்சொற்களையும் (தட, கய, நளி, கடி, அழுங்கல், மத)தவிரப் பிற ஒரு சொல் பல பொருள் தரும் உரிச்சொற்கள் குறித்துப் பேசவில்லை. சொல் வழக்குப் பயன்பாடு இல்லாததால் இதுபோன்ற வீழ்ச்சி ஏற்படுகிறது.

பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களின் வீழ்ச்சி

பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களில் நம்பு, மேவு, கதழ்வு, துனைவு,கமம், துவன்று, கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் ஆகியவை தவிர தொல்காப்பியத்தில் இடம்பெறும் பிற உரிச்சொற்கள் நேமிநாதத்தில் காணப்படவில்லை.

மிகுதிப்பொருள் தரும் உரிச்சொற்கள், ஓசை என்னும் பொருள் தரும் உரிச்சொற்கள், தவிர்ந்த பிற பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்கள் நன்னூலில் இடம்பெற்றில.

தட, கய, நளி ஆகியவை பெருமை என்னும் பொருள் தரும் என்னும் தொல்காப்பியக் கருத்தைக் குறிப்பிடும் முத்துவீரியம் அவை முறையே கோட்டம், மென்மை, செறிவு ஆகிய பொருள்களையும் தரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதைச் சுட்டவில்லை.

இலகு தமிழ் ஐந்திலக்கணத்தில் மிகுதிப்பொருள் உணர்த்தும் உரிச்சொற்கள் தவிர, பிற பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்கள் பேசப்படவில்லை.

தென்னூல் குரு, கேழ், தட, கய, நளி, உறு, தவ, ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய், பையுள், சிறுமை, கம்பலை, சும்மை, சிலைத்தல், துவைத்தல், இரங்கல் ஆகிய பல சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களைத் தவிர தொல்காப்பியம் குறிப்பிடும் பிறவற்றைக் கூறவில்லை.

மிகுதிப்பொருள் தரும் உரிச்சொற்களையும், நசைப்பொருள் தரும் உரிச்சொற்களையும் தவிரப் பிற பலசொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்கள் தமிழ்நூலில் இடம்பெறவில்லை.

இளமை, வலிமை, உள்ளதன் நுணுக்கம் மற்றும் மிகுதிப்பொருள் தரும் உரிச்சொற்களை மட்டுமே தமிழ்க் காப்பு இயம் சுட்டுகிறது. பிற பலசொல் ஒரு பொருள் தரும் உரிச் சொற்கள் அதில் இடம்பெற்றில.

பலசொல் பலபொருள் தரும் உரிச்சொற்களின் வீழ்ச்சி

கறுப்பும், சிவப்பும் வெகுளிப் பொருளில் வரும் எனவும் நிறப்பொருளை உணர்த்தும் எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.374). கறுப்பும், சிவப்பும் வெகுளிப் பொருளைத் தரும் என்பதை ஏற்றுக் கொள்ளும் முத்துவீரியம் அவை நிறப் பண்பையும் உணர்த்தி வரும் என்பதைக் குறிப்பிடவில்லை.

கறுப்பு என்னும் சொல் கருமை என்ற சொல்லாலும் ஆளப்படுகிறது. இதனைத் தமிணூல்,

கல்வேர் கருமையும் கறுப்பும் வண்ணம் (த. நூ. 349)

என்னும் நூற்பா வழி விளக்குகிறது.

கல் என்னும் வேரடியாகத் தோன்றிய கருமை, கறுப்பு ஆகிய இரு சொற்களும் வண்ணத்தை உணர்த்தி நிற்கும் என்பது இதன் பொருள்.

" 'கறுத்தின்னாச் செய்தவக் கண்ணும்' (குறள்) எனத் தொல்காப்பியம் கூறியாங்கே சினப் பொருள்படல் கருமுகம் மேலும் சினத்தில் கறுத்தலான் போலும்"[38] என்று சரவணத்தமிழனார் நிறப்பொருண்மையிலேயே கறுப்பு என்பதைக் குறிப்பிடுதல் பொருந்துமாறு இல்லை. ஏனெனில், 'கறுத்த தெவ்வர் கடிமுனை அலற' எனச் சங்க இலக்கியம் 'கறுப்பு' என்பதை வெகுளிப் பொருளிலேயே சுட்டுகிறது.

"கறுத்தின்னாச் செய்தவக் கண்ணும்" என்பதிலும் 'கருமை நிறமுடைய முகத்தோடு இன்னா செய்த போதும்' என்று பொருள் கொள்ளுவதை விட, 'வெகுளியோடு இன்னா செய்த போதும்' என்று பொருள் கொள்வதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. மேலும், கறுப்பு என்பது நிறப்பொருண்மையில் மட்டுமே வருமெனில் தொல்காப்பியர் அதனை வெகுளிப்பொருளில் வருமெனத் தனியொரு நூற்பாவை அமைத்திருக்கத் தேவையில்லை. எனவே கறுப்பு என்பது வெகுளிப் பொருளிலும் நிறப்பொருளிலும் வரும் என்பதே ஏற்புடையது.

தொல்காப்பியம் குறிப்பிட்ட 'சிவப்பு' உரிச்சொல் குறித்துத் தமிழ்நூல் சுட்டவில்லை.

முத்துவீரியம், தமிழ்நூல் தவிர்ந்த பிற இலக்கண நூல்களில் கறுப்பு, சிவப்பு உரிச்சொற்கள் இடம்பெறவில்லை.

வார்தல், போகல், ஒழுகல் எனும் உரிச்சொற்கள் குறித்து இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற நூல்களில் காணப்படவில்லை.

பிற உரிச்சொல் மரபுகள் - வீழ்ச்சி நிலை

உரிச்சொல் பொருள் உணர்த்தும் முறை குறித்த தொல்காப்பியக் கருத்தை (தொல். சொல். 389) இலக்கண விளக்கம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் கூறவில்லை.

உரிச்சொற்கள் பிற பொருள்களையும் உணர்த்தி வரும் (தொல். சொல். 390) என்பதை இலக்கண விளக்கம், சுவாமி நாதம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்களில் கூறப்படவில்லை.

பொருட்குப் பொருள் தெரியின் வரம்பில (தொல். சொல். 391) என்னும் கருத்து இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்களில் பேசப்படவில்லை.

கேட்பவனின் உணரும் தன்மையின் அடிப்படையில் பொருள் கூற வேண்டும். ஒருவரின் உணரும் திறன் அவரது அறிவாற்றலைப் பொறுத்தே அமையும். உரிச்சொற்கள் கூறப்பட்ட அப்பொருளுக்கு உரிமையாவதற்குரிய காரணம் விளங்கத் தோன்றாது. உரிச்சொற்களில் எழுத்துப் பிரிந்திசைத்தல் இல்லை. இந்நான்கு தொல்காப்பியக் கருத்துகளும் இலக்கணவிளக்கம் தவிர்ந்த பிற நூல்களில் கூறப்படவில்லை.

புறனடைச் செய்தியாகத் தொல்காப்பியம் கூறும் கருத்துகள் நன்னூல், இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற நூல்களில் பேசப்படவில்லை.

புதுமரபு

நன்னூலில் இடைச்சொல் புது மரபுகள்

ஒடு, தெய்ய ஆகிய இரு இடைச்சொற்களும் இசைநிறைப்பொருளைத் தரும் என்று நன்னூல் குறிப்பிடுகிறது (நன். 436). இக்கருத்து தொல்காப்பியத்தில் இல்லை.

இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டுள்ளது (இ.வி.272). சுவாமிநாதமும் இக்கருத்தைப் பின்பற்றியுள்ளது (சு.நா.56).

சுவாமிநாதத்தில் இடைச்சொல் புதுமரபுகள்

சுவாமிநாதம் ‘கோள்’ எனும் இடைச்சொல்லைப் புதிதாகப் பதிவு செய்துள்ளது (சு.நா.56).

இனிய தமிழ் இலக்கணத்தில் புது மரபுகள்

இனிய தமிழ் இலக்கணம் இடைச்சொற்களைப் பொருளை உணர்த்தும் இடைச்சொற்கள், சாரியை இடைச்சொற்கள், உவமையுணர்த்தி வரும் இடைச்சொற்கள், குறிப்பால் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் என அவற்றைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளது. பொருளை உணர்த்தும் இடைச் சொற்களாக அம்மா, ஏ, ஓ, உம், கொல், மற்று, சும்மா, வாளா, சீசீ, சிச்சீ, ஐயோ, அந்தோ, தான், முன், பின் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது (இ. த. இ. 138). சாரியை இடைச்சொற்களாக அம்,

ஆம், அன், இன், ஆல், அற்று, இற்று, ஏ, ஐ, கு, ன் என்பவற்றைக் குறிப்பிடுகிறது (இ. த. இ. 139). உவமை உணர்த்தி வரும் இடைச் சொற்களாக போல, நிகர, புரைய, ஒப்ப, மான, கடுப்ப, உறழ, இயைய, இன்ன, அன்ன, ஏய்ப்ப, போன்ற உவம உருபுகளைக் குறிப்பிடுகிறது (இ. த. இ. 140).

இலகு தமிழ் ஐந்திலக்கணமும் போல, புரைய, ஒப்ப, அன்ன, இன்ன போன்றவற்றை உவமை இடைச்சொற்களாக எடுத்துக்காட்டியுள்ளது (இ.த.ஐந்.293).

தமிழ்க்காப்பு இயமும் ஒப்பின் உருபாய் வரும் இடைச்சொற்களாக அன்ன, ஆங்க, என்ன, ஏய்ப்ப, இன்ன, இயைய, மான, மருள, போல, புரைய, ஒப்ப, உறழ, நேர, நிகர, தகைய, கடுப்ப, பொறப, ஒன்ற, அற்று என்னும் பத்தொன்பது இடைச்சொற்களைக் குறிப்பிடுகிறது (த. கா. இ. 383).

குறிப்பால் பொருள் உணர்த்தும் இடைச்சொற்களாக சடசட, படபட, கடகட, திடுதிடு, களகள, சளசள, கல், ஒல், கொல், கோ, கரகர, நெறுநெறு, கஃறு எனும் ஒலிக் குறிப்புச் சொற்களும், துண், துணுக்கு, திடுக் எனும் அச்சக் குறிகளும், அம்மா, ஆ, ஓ, ஆகா என்னும் வியப்புக்குறிகளும், வெளேர், கரேர் எனும் பண்புக்குறிகளும், வாளா, சும்மா, கொன்னே என்னும் சோம்பற் குறிகளும், சீசீ, தூதூ என்னும் இழிவும், அச்சோ, ஐயோ, ஆ, உம், அந்தோ என்னும் இரங்கற் குறிகளும், முன், பின், இனி, தொறும், தோறும், மேலும், ஆதல், ஆயினும், தான் என வரும் இது போன்ற பிற சொற்களும் இடைச் சொற்களே என இனிய தமிழ் இலக்கணம் இயம்புகிறது (இ.த.இ.142).

இனிய தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றி இலகு தமிழ் ஐந்திலக்கணம், விரைவு ஒலி, அச்சப் பொருளில் வரும் சரேலென, பளாரென, திடுக்கென போன்றவை குறிப்பசைச் சொற்கள் எனக் குறிப்பிடுகிறது (இ. த. ஐந். 293). தென்னூலும் இக்கருத்தின் அடிப்படையில் வியப்பு, உவப்பு, ஆக்கம், வெகுளி முதலாகிய உணர்ச்சியை வெளிப்படுத்தும் ஒலிக் குறிப்பெல்லாம் இடைச் சொல்லின் பாற்படும் என்கிறது (தென். சொற். 182). மேலும், தொறும் என இனிய தமிழ் இலக்கணம் சுட்டுவதை ‘தொறு’ எனக் குறிக்கிறது தென்னூல். மேலும், அது ‘ஒவ்வொன்றும்’ என்னும் பொருளைத் தரும் எனத் தென்னூல் குறிப்பிடுகிறது (தென். சொற். 173). இதனையே தமிழ்நூல் ‘தோறும்’ என்று குறிப்பிடுகிறது. தொறு என்பதன் ஆதி நீண்டு தோறு என வருதல் காணலாம் (த. நூ. 140) என்கிறது.

அறுவகை இலக்கணத்தில் இடைச்சொல் புது மரபுகள்

அறுவகை இலக்கணம் ‘இல்’ என்னும் வேற்றுமை உருபை இடைச்சொல்லாகக் குறிப்பிடுகிறது. இல் என்னும் இடைச்சொல் உடைமை, உவமை, உயர்வு, தாழ்வு,

வினை ஆகியவற்றைக் காட்டும் என்கிறது (அ. இ. 267). மேலும் ‘இல்’ இடைச்சொல் ‘இன்’ எனவும் வருவது உண்டு என்கிறது (அ. இ. 268). தொல்காப்பியர் இடைச்சொல்லின் பாகுபாடுகளாக வேற்றுமை உருபுகளைகளையும் குறிப்பிடுவதன் அடிப்படையில் இவ்வாறு தண்டபாணி சுவாமிகள் இடைச்சொல்லாகக் குறிப்பிடுகிறார்.

அசைச்சொற்களில் சில மொழிகளின் இறுதியில் வந்து சில பொருள்களை உணர்த்துவதும் உண்டு. அவற்றை வேற்றுமை இனம் எனக் கூறுவார்கள் என்று அறுவகை இலக்கணம் இயம்புகிறது (அ. இ. 228). இக்கருத்து யாதொரு இலக்கண நூலிலும் கூறப்படவில்லை.

தென்னூல் சுட்டும் இடைச்சொல் புது மரபுகள்

இரண்டு வினைமுதலின் கண் எச்சவும்மை வரின் வினைமுடிபு ஒரே காலத்திற்குரியதாக வரும் (தென். சொற். 166) என்பதையும், இறந்தது தழுவும் எச்சவும்மை ஒரோவிடத்து நிகழ்காலத்தையம் தழுவி வரும் (தென். சொற். 167) என்பதையும் தென்னூல் பதிவு செய்துள்ளது.

‘கில்’ என்னும் இடைச்சொல்லையும் ‘அ’ என்னும் இடைச்சொல்லையும் தென்னூல் புதிதாகக் குறிப்பிடுகிறது. கில் குறித்து,

செய்தலும் ஆற்றலும் கில்லினது பொருளாம் (தென். சொற். 175)

என்று குறிப்பிடுகிறது. இது குறித்து, “கில் எனும் இடைச்சொல் கிறு, கின்று என்பவற்றோடு தொடர்புடையது. கரக்கிற்பென, காண்கிற்பார் இவை போன்ற வடிவங்களில் இச்சொல்லைக் காணலாம். இவ்வழக்கு கலித்தொகைக்குப் பின்னே தோன்றிற்று”[39] என்று பி. எஸ். சுப்பிரமணியன் Dravidian verb Morphology (1971) என்ற நூலில் குறிப்பிடுவதை ரா. சீனிவாசன் எடுத்துக் காட்டுவார்.

‘அ’ இடைச்சொல்லை அசைச் சொற்களுள் ஒன்றாகத் தென்னூல் குறிக்கிறது (தென். சொற். 177). தஞ்சம், அம்ம, எல் போன்ற பிற இடைச்சொற்கள் பெயர்ப் பொருட்டாயும், வினைப் பொருட்டாயும் வருவதைத் தென்னூல் பதிவு செய்துள்ளது (தென். சொற். 181). மேலும், அது, இது, எது என்பன போன்ற சுட்டுவினாக்களும், பிறன், பிறள், பிறகு மற்று, மன்னன், மன்னினான் எனச் சுட்டுவினா எழுத்து அடிப்படையிலும், பிற, மற்று, மன் என்னும் கிளவிகள் அடிப்படையிலும் பெயர், வினைகள் தோன்றுதல் மொழி இயற்கை எனக் கருதிக் கொள்ளல் வேண்டும் (தென். சொற். 183) என்னும் கருத்தையும் தென்னூல் பதிவு செய்துள்ளது.

தமிழ்நூல் சுட்டும் இடைச்சொற் புதுமரபுகள்

போல என்னும் உவம உருபும், போலும் என்னும் ஒப்பில் போலியும் முன்னைய இலக்கண நூல்களில் கூறப்பட்டிருந்தாலும், ‘போல்’ எனும் இடைச்சொல் பெயரெச்சம், வினையெச்சம் இரண்டுமாக வரும் எனத் தமிழ்நூல் பதிவு செய்துள்ளது.

தான்

தான் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களைத் தமிழ்நூலே குறிப்பிடுகிறது. தான் எனும் இடைச்சொல் ‘ஏ’ என்னும் இடைச்சொல்லைப் போன்று பிரிநிலை, தெளிவு, அசைநிலை ஆகிய முப்பொருள்களில் வரும் என்பதை,

தானென் பொதுப்பெயர் ஏவின் திறம் பெறும் (த. நூ. 139)

என்று தமிழ்நூல் குறிப்பிடுகிறது.

ஊம், ஆம், சரி

தமிழ்நூல் இக்காலத்தில் வழக்கில் உள்ள இடைச்சொற்களாகிய ஊம், ஆம், சரி என்பவற்றைப் புதிதாகப் பதிவு செய்துள்ளது. ‘ஊம்’ என்பது அசைப்பொருளையும், மேற்கொண்டதைக் காட்டும் பொருளையும் உணர்த்தும் (த. நூ. 141) என்றும் ‘ஆம்’ என்பது இக்காலத்தே உடன்பாடாகவும், பேச்சிடை அசைச் சொல்லாகவும் வரும் (த. நூ. 142) என்றும், ‘சரி’ என்பது ஒப்புக் கொள்வது, இது சரிசரி என அடுக்கி வரும்போது வலியுறுத்தல், உரை முடித்தல் போன்றவற்றை உணர்த்தி வரும் (த. நூ. 143) என்றும் தமிழ்நூல் பதிவு செய்துள்ளது.

பிற

‘பிற’ என்னும் இடைச்சொல் முன்னைய இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ளது எனினும் பிற என்னும் சொல்லடியாக ஐம்பால் உருபும் ஏறி பிறன், பிறள், பிறர், பிறிது, பிற என்னும் ஐம்பாற் சொற்களும் தோன்றும் (த. நூ. 144) என்னும் கருத்தைத் தமிழ்நூல் பதிவு செய்துள்ளது.

தமிழ்க் காப்பு இயத்தில் இடைச்சொல் புது மரபுகள்

பண்பை உணர்த்தும் இடைச் சொற்களாக ஆகிய, ஆன என்பவை வரும் என்று தமிழ்க் காப்பு இயம் குறிப்பிடுகிறது (த. கா. இ. 384). மேலும், ஆகிய, ஆக என்பவை உருவக உருபாக வரும் என்று தமிழ்க்காப்பு இயம் சுட்டுகிறது (த. கா. இ. 385).

உரிச்சொல் மரபுகள் - புதுமரபு

உரிச்சொற்கள் பண்பை அடிப்படையாகக் கொண்டு வரும் என்று கூறும் நன்னூல் அப்பண்பு என்பதற்கு, உயிராகிய பொருளும், உயிர் அல்லாத பொருளும் என இரு வகையுள் அடங்குகின்ற உலகத்துப் பொருள்களின் குணங்கள் எல்லாம் பண்புகள் எனப்படும் என்று விளக்கமளிக்கிறது. (நன். 443). அந்த அடிப்படையில் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிடும் ஓரறிவு முதலாகிய உயிர்கள் குறித்து நன்னூல் உரியியலில் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியத்தில் உள்ளது போல் ஆறறிவு உயிர் குறித்து நன்னூலில் கூறப்படவில்லை. ஐயறிவு உயிர்கள் வரை மட்டுமே நன்னூலில் விளக்கப்பட்டுள்ளது (நன். 444- 449).

மேலும், உயிர்ப்பொருள், உயிரல் பொருள் ஆகியவற்றின் குணப்பண்பு, தொழிற்பண்பு போன்றவற்றையும் நன்னூல் உரியியலில் விளக்கியுள்ளது (நன். 450 - 455).

தொன்னூல் விளக்கமும் நன்னூலைப் பின்பற்றி குண அடிப்படையில் உரிச்சொல் தோன்றும் என்று கூறி உயிர்ப்பொருள், உயிரல் பொருளின் பொருட்குணங்களையும், தொழில் குணங்களையும் விளக்கியுள்ளது (தொ. வி. 138 – 141).

இனிய தமிழ் இலக்கணம் நன்னூல் மற்றும் தொன்னூல் விளக்கத்தைப் பின்பற்றியுள்ளது. உயிர்ப்பொருள்களின் பல்வேறு குணநலன்கள் குறித்து,

சகத்தில் உள்ள சராசர மெல்லாம்
உரு நிறம் சுவை மணம் பரிசமுடையன.
உடலுயி ரெல்லாம் ஊணு றக்கமுடன்
இன்ப துன்பமாம் இருவிகற் பெய்தி
வளர்ந்து முதிர்ந்து மறையுந் தன்மைய.
அறறி வுடைய மானிடன் மனத்தால்
எய்துமுக் குணவகை எண்ணில வாமே.
அறிவு, அருள் இரக்கம், அன்புளத் தெளிவு
சாந்த மளிப்பது சாத்விக குணமாம்.
ஆசை, வீரம், ஆணவம், அதிர்ச்சி
எழுச்சி தருவது இராஜஸ குணமாம்.
மந்த வுறக்கம், மடமை, சோம்பல்
ஆளை அயர்த்துவது தாமத குணமாம்.

இன்பம், துன்பம், எளிமை, செழுமை
கிளர்ச்சி, தளர்ச்சி, கீழ்மை, மேன்மை
அச்சம், தைரியம், விருப்புடன் வெறுப்பு
மானம், வெட்கம், மறப்பு, நினைப்பு
என்னும் தன்மைகள் எண்ணில வாமே (இ.த.இ.143)

என்னும் நூற்பா வழி இனிய தமிழ் இலக்கணம் எடுத்தியம்புகிறது.

உரிச்சொல் செய்யுட்குரியன

நன்னூல் உரிச்சொற்களைச் செய்யுட்குரியனவாகக் கூறுகிறது (நன். 442). ஆனால் தொல்காப்பியம், நேமிநாதம் போன்றவை உரிச்சொற்களைச் செய்யுட்குரியனவாகக் குறிப்பிடவில்லை.

சேனாவரையர் பெரும்பான்மையும் செய்யுட்கு உரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்று என்றும், நன்னூலார் 'செய்யுட்குரியன வுரிச்சொல்' என்றும் கூறுவது பொருந்தாது. ''வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொல் மேன'' என்று தொல்காப்பியர் கூறுவதால் வழக்கிலிருக்கின்ற பல சொற்களும் உரிச்சொற்கள் என்பது பெறப்படும்.

நன்னூலின் இக்கருத்தைத் தமிழ்நூல் ஏற்றுக்கொண்டுள்ளது (த. நூ. 344). பிற இலக்கண நூல்கள் இக்கருத்தை ஏற்கவில்லை.

சுவாமிநாதம், உரிச்சொற்கள் செய்யுளில் இருபாலும் பொருந்தவும், குறைச் சொல்லாகவும் ஆகி பொருள் அமைந்து இருக்கும்.' என்று கூறுகிறது. செய்யுட்கு மட்டுமே உரிமையுடையனவாகச் சுட்டவில்லை (சு. நா. 57).

ஒரு சொல் ஒரு பொருள் - புது மரபுகள்

தொல்காப்பியர் குறிப்பிடாத கொம்மை (இளமை), நொடை (விலை) ஆகிய ஒரு பொருள் தரும் ஓருரிச்சொற்கள் இரண்டனை நேமிநாதம் பதிவு செய்துள்ளது (நேமி. 81). வால் என்னும் உரிச்சொல் வெண்மை என்னும் பொருள் தருவதைத் தமிழ்க் காப்பு இயம் பதிவு செய்துள்ளது (த. கா. இ. 399).

ஒரு சொல் பல பொருள் - புதுமரபு

பொன்மை எனும் உரிச்சொல் நிறம், பசலை ஆகிய பொருள்களை உணர்த்தும் என நேமிநாதம் பகர்கிறது (நேமி.81). தொல்காப்பியத்தில் இவ்வுரிச்சொல் இடம்பெறவில்லை.

பல சொல் ஒரு பொருள் - புது மரபு

சொல் எனும் பொருளை உணர்த்தும் உரிச்சொற்களாக நன்னூல்,

> **மாற்றம் நுவற்சி செப்பு உரை கரை நொடி இசை**
> **கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை**
> **பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே. (நன். 458)**

என்று குறிப்பிடுகிறது. தொல்காப்பியம், நேமிநாதத்தில் இவ்வுரிச் சொற்கள் கூறப்படவில்லை.

முத்துவீரியம் நன்னூலை அடியொற்றி சொல் எனும் பொருளை உணர்த்தும் பல உரிச்சொற்களைக் குறிப்பிட்டுள்ளது. இயம்பல், நுவற்சி, இசை, கூற்று, விளம்பு, அறை, பாட்டு, கரை, நொடி, பகர்ச்சி ஆகிய உரிச்சொற்கள் சொல் எனும் பொருளை உணர்த்தும் (மு. வீ. ஒழி. 48) என்கிறது.

தொகுப்புரை

- பெயரும் வினையும் பொருள் உணர்த்துவதற்கு உறுதுணையாக விளங்குவது இடைச்சொல் ஆகும்.

- இடைச்சொல் பெயரையும், வினையையும் சார்ந்து வரும்; தனித்தியங்காது என்னும் கருத்தில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.

- அகராதிப் பொருள் தரும் உரிச்சொற்களை விளக்கும் முகத்தான் தொல்காப்பிய உரியியல் நிகண்டுகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

- தொல்காப்பியத்தில் கூறப்படும் அனைத்து உரிச்சொற்களும் பிற்றை இலக்கண நூல்களில் இடம் பெறாவிடினும், கூறப்பட்ட உரிச்சொற்கள் அவை உணர்த்தும் பொருண்மையில் பெரும்பாலும் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

- இடைச்சொல்லின் வகைப்பாடுகளாகத் தொல்காப்பியம் ஏழனைக் குறிப்பிடுகிறது. இடைச்சொற்களை வகைப்படுத்துவதில் இலக்கணிகளிடையே வேறுபாடு காணப்படுகிறது.

- நேமிநாதம் ‘எல்’ என்பதை உரிச்சொல்லாகக் கூறுவது மரபு மாற்றமாகும்.

- உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் அடிப்படையில் தோன்றும் எனத் தொல்காப்பியம் கூற நன்னூல் பண்பு அடிப்படையில் மட்டுமே தோன்றும் எனக் கூறுவது குறிப்பிடத்தக்க மரபு மாற்றமாகும். ஒரு சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களில் சிலவற்றின் பொருள் இன்று மாறியுள்ளமை இலக்கணங்களில் பதிவு செய்யப்படாவிடினும் வழக்கில் அவை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

- நன்னூல் இடைச்சொல்லின் பாகுபாடுகளை எண்வகைப்படுத்துவதும், சுவாமிநாதமும், தமிழ்க் காப்பு இயமும் ஒன்பது வகைப்படுத்துவதும் மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கன.

- இடைச்சொற்கள் உணர்த்தும் பொருண்மைகளில் தொல்காப்பியம் சுட்டும் பொருண்மைகளோடு மேலும் சில பொருண்மைகள் பிற்றை இலக்கணிகளால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை மரபு வளர்ச்சியாகும்.

- தென்னூல் உரிச்சொல் வகைகளாகப் பெயரடை, வினையடை, பெயர்ப்போலி, வினைப்போலி ஆகியவற்றையும் இணைப்பது மரபு வளர்ச்சியாகும். சில

உரிச்சொற்கள் உணர்த்தும் பொருண்மைகளோடு மேலும் சில பொருண்மைகள் தோன்றியிருப்பதும், சில உரிச்சொற்கள் உணர்த்தும் பொருண்மைக்கு புதிய உரிச்சொல் தோற்றம் பெற்றிருப்பதும் மரபு வளர்ச்சியாகக் கருதி ஏற்றுக்கொள்ளத் தக்கது.

- தொல்காப்பியம் சுட்டும் இடைச் சொற்களில் சில பிற்றை இலக்கண நூல்களில் இடம் பெறவில்லை. 'எல்' இடைச்சொல் முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை. மேலும், தில் இடைச்சொல் விழைவுப் பொருளில் வரும்பொழுது தன்மை இடத்தில் மட்டுமே வரும்; ஈற்றசை ஏகாரம் தன் மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும்; எண்ணேகாரம் இடைவிட்டும் வரும் என்பன போன்ற தொல்காப்பியக் கருத்துகள் பிற்றை இலக்கண நூல்களில் இடம் பெறாமை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத் தக்கது.

- தொல்காப்பியம் கூறும் உரிச்சொற்களில் பெரும்பாலானவை இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற நூல்களில் இடம் பெறாமை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளப்படும். மேலும், கறுப்பு என்னும் உரிச்சொல்லுக்குத் தமிழ்நூல் நிறப்பொருண்மையை மட்டும் சுட்டி வெகுளிப் பொருளை நீக்கியுள்ளமை மரபு வீழ்ச்சியாகக் கருதத்தக்கது.

- ஒடு, தெய்ய என்பன நன்னூல் கூறும் புதிய இடைச்சொற்களாகும். கோள் என்பது சுவாமிநாதம் குறிப்பிடும் இடைச்சொல். கில், அ என்பன தென்னூல் குறிப்பிடும் இடைச்சொற்கள். ஊம், ஆம், சரி என்பன தமிழ்நூல் சுட்டும் இடைச்சொற்கள். ஆகிய, ஆன, ஆக என்பவை தமிழ்க் காப்பு இயம் சுட்டும் இடைச் சொற்கள். இவை புதுமரபாகக் கொள்ளத் தக்கன.

- நன்னூல் உயிருள்ள மற்றும் உயிரல் பொருள்களின் குணப்பண்பு, தொழிற்பண்பு ஆகியவற்றை உரியியலில் விளக்குவதும், உரிச்சொற்களைச் செய்யுட்குரியனவாகக் குறிப்பதும் புது மரபாகும்.

- நேமிநாதம் குறிப்பிடும் புதிய உரிச்சொற்கள் கொம்மை, நொடை, பொன்மை என்பன. நன்னூல் 'சொல்' என்னும் பொருள் தரும் பலவுரிச்சொற்களைக் கூறியுள்ளது. தமிழ்க்காப்பு இயம் வால் (வெண்மை) என்னும் உரிச் சொல்லை புதிதாகக் குறிப்பிட்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், இடையியல், ப.1.
2. மேலது., ப.10.
3. மேலது., ப.2.
4. மேலது., ப.4.
5. பெ.சுயம்பு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, ப.111
6. சூ.இன்னாசி, சொல்லியல், ப.133
7. ஏ.ஆதித்தன், தமிழ் இலக்கணவியல், ப.35
8. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், இடையியல், ப.8.
9. சி.இலக்குவனார், பழந்தமிழ், ப.109.
10. ஏ.ஆதித்தன், தமிழ் இலக்கணவியல், ப.34.
11. சூ.இன்னாசி, சொல்லியல், ப.133
12. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், இடையியல், ப.57.
13. மேலது., ப.88.
14. ச.திருஞானசம்பந்தம் (உ.ஆ.,), தொல்காப்பியம், சொல்லதிகாரம் மூலமும் உரையும், ப. 135.
15. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், இடையியல், ப.96.
16. ஏ.ஆதித்தன், தமிழ் இலக்கணவியல், ப.25.
17. கா.கோ.வேங்கடராமன், தொல்காப்பியத்தமிழ் ப.143.
18. ஆ.தசரதன், உரிச்சொல்லியல் (கட்.,), தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள், ப.170.
19. ச.திருஞானசம்பந்தம் (உ.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம் மூலமும் உரையும், ப.166
20. கா.கோ.வேங்கடராமன், தொல்காப்பியத்தமிழ் ப.147.

21. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், இடையியல், ப. 129.

22. பெ.சுயம்பு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, ப.114.

23. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், இடையியல், ப.101.

24. மேலது., ப.101.

25. மேலது., பக்.101 - 102.

26. மேலது., ப. 102.

27. மேலது., பக்.102 - 103.

28. மேலது., ப. 103.

29. பெ.சுயம்பு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, பக்.112 - 113.

30. மேலது., பக்.113 - 114.

31. சூ.இன்னாசி, சொல்லியல், ப.130.

32. சு.அழகேசன் & த.வேல்மயில், இலக்கணத் தேடல்கள், பக்.25 - 26.

33. பொன்.கோதண்டராமன், இலக்கண உலகில் புதிய பார்வை, தொகுதி – 1, ப.110.

34. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், இடையியல், பக்.86 - 87.

35. மேலது., ப.87.

36. மேலது., ப.100.

37. மேலது., ப.121

38. சரவணத்தமிழன், தமிழ்நூல், ப.136.

39. ரா.சீனிவாசன், மொழி ஒப்பியலும், வரலாறும், ப.176.

பிற மரபுகள்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் ஒன்பதாவது இயல் எச்சவியல். முன் எட்டு இயல்களுள் கூறப்படாத செய்திகளையும், அவற்றுக்குப் பொதுவான செய்திகளையும், கூறுவதால் இவ்வியல் எச்சவியல் எனப்பெற்றது. தொல்காப்பிய எச்சவியலில் கூறிய செய்திகள் பிற்றை இலக்கண நூல்களில் இடம்பெறும் தன்மையை ஒத்தமரபு, மரபு மாற்றம், மரபு வளர்ச்சி, மரபு வீழ்ச்சி, புதுமரபு என்ற அடிப்படையில் ஆராயுமுகமாக இவ்வியல் அமைகிறது.

ஒத்த மரபுகள்

செய்யுளுக்குரிய சொற்கள்

இலக்கணவியலார் சொற்களை இலக்கண அடிப்படையில் பெயர், வினை, இடை, உரி என நால்வகைப்படுத்தியது போலவே இலக்கிய அடிப்படையிலும் சொற்களை வகைப்படுத்தியுள்ளனர். தொல்காப்பியர் இவற்றைச் செய்யுள் ஈட்டச் சொற்கள் என்கிறார்.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (தொல். சொல். 397)

என்று செய்யுளுக்குரிய சொற்களை நான்கு வகைப்படுத்துகிறது தொல்காப்பியம்.

இலக்கண, இலக்கியவகைச் சொற்களுக்கான வேறுபாட்டைத் தமிழண்ணல், "'செய்யுள்' ஈண்டு இலக்கியத்தைக் குறிக்கும். முன்பு இலக்கியமெல்லாம் யாப்புச் செய்யுளாகவே படைக்கப்பட்டதால் படைப்பிலக்கியம் அனைத்தும் 'செய்யுள்' எனப்பட்டன. ஒரு படைப்பிலக்கியத்துள் எடுத்தாளத்தகும் சொற்களை இந்நூற்பா வகைப்படுத்துகிறது. பெயர், வினை, இடை உரிச் சொற்கள் மொழியின் அடிப்படை வகைகள்"[1] என்று விளக்குகிறார்.

நேமிநாதம்,

இயற்சொல் முதல் நான்கும் எய்தும் (நேமி.54:2)

என்று கூறுகிறது.

நன்னூல், சொல்லின் வகைகளைக் கூறுமிடத்து இயற்சொல் முதலான நான்கனையும் இணைத்துக் கூறுவதை,

அதுவே,

இயற்சொல், திரிசொல் இயற்பிற் பெயர் வினை

என இரண்டு ஆகும் இடைஉரி அடுத்து

நான்கும் ஆம் திசைவட சொல்அணு காவழி (நன். 270)

என்னும் சூத்திரம் புலப்படுத்தும்.

இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவையும் (இ. வி. 171), முத்துவீரியம் தொல்காப்பிய நூற்பாவையும் (மு.வீ.ஒழி.49) எடுத்தாண்டுள்ளன. சுவாமிநாதம் நன்னூல் வழியில் இலக்கண வகைச் சொற்களோடு இணைத்து செய்யுளுக்குரிய சொற்களையும் பேசுகிறது (சு.நா.37). இனிய தமிழ் இலக்கணம், எட்டு வகையான சொற்களைக் குறிப்பிடுமிடத்து இந்நால்வகைச் சொற்களையும் இணைத்துக் கூறுகிறது.

இயல் திரி திசை கலை தனி தொடர் பொதுச்சொல்

வட சொல்லுடனே சொல்எண் வகையாம் (இ.த.இ.66)

என்று குறிப்பிடுகிறது. தென்னூல் தொல்காப்பியத்தைப் பின்பற்றி இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியன இலக்கியச் சொற்கள் எனக் குறிக்கிறது (தென். சொற். 31).

இயற்சொல்

இயற்சொல் என்பது ஒரு மொழி பேசும் மக்களிடையே இயல்பாக வழங்கி வரும் சொல்லாகும். அது பாமரர்க்கும் எளிதில் புரியும் வண்ணம் இருக்கும். தொல்காப்பியம் இயற்சொல் குறித்து,

அவற்றுள்

இயற்சொல் தாமே

செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்

தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே (தொல். சொல். 398)

என்று குறிப்பிடுகிறது.

நன்னூல், தொல்காப்பியத்தைப் பின்பற்றி,

செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்

தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல் (நன். 271)

என்று கூறுகிறது.

இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.172). தொன்னூல் விளக்கம், சொல்லாலும், பொருளாலும் மயக்கத்தைத் தராது, எளிமையாக அச்சொல்லே எவர்க்கும் பொருளை விளக்கி நிற்பது இயற்சொல் என்கிறது (தொ.வி.43). முத்துவீரியம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி இயற்சொல்லை விளக்குகிறது (மு.வீ.ஒழி.50). சுவாமிநாதம், செந்தமிழ் நிலத்து மொழியாகி யாவர்க்கும் உணர்பொருளை விளக்குவது இயற்சொல் என்கிறது (சு.நா.37). இனிய தமிழ் இலக்கணம்,

எளிய தமிழ்ச்சொல் இயற்சொல் லாகும் (இ.த.இ.67)

என உரைக்கிறது.

தென்னூல், செந்தமிழ் கூறும் நல்லுலகத்து உரையும், செய்யுளுமாகிய இருவகை வழக்கினும் யாவர்க்கும் வெளிப்படத் தம் பொருள் விளக்கி நிற்கும் தகவுடையன இயற்சொல் என்கிறது (தென். சொற். 32).

திரிசொல்

திரிசொல் குறித்துத் தொல்காப்பியம்,

ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற்று என்ப திரிசொற் கிளவி (தொல். சொல். 399)

என்று குறிப்பிடுகிறது.

உரிச்சொல்லின் இலக்கணம் கூறுமிடத்துத் தொல்காப்பியம்,

ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும் பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும் (தொல். சொல். 292) என்று கூறுகிறது. உரிச் சொல்லுக்கும் திரிசொல்லுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெய்வச்சிலையார், ‘‘உரிச்சொல் குறைச் சொல்லாகி வரும் திரிசொல் முழுச்சொல்லாகி வரும் என்க’’[2] என்று விளக்குகிறார்.

‘‘திரிசொல் என்ற சொல்லே திரிந்து வரும் சொல் என்ற பொருள் தருதலின் அச்சொல்லிலேயே பொருள் வெளிப்படையாகப் பொருந்தியுள்ளது. இப்படிச் சொற்பொருள் இலக்கணத்தினைச் சொல்லிலேயே தெரியும்படியாக அமைப்பது, ‘சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்’ என்னும் உத்தியினாலாகும்’’[3] என்று சிவலிங்கனார் விளக்கம் தருகிறார்.

சேனாவரையர், ‘‘திரிசொல்லாவது உறுப்புத் திரிதலும் முழுவதும் திரிதலும் என இரு வகைத்து, கிள்ளை, மஞ்ஞை என்பன உறுப்புத் திரிந்தன. விலங்கல், விண்டு என்பன முழுவதும் திரிந்தன’’[4] என்று குறிப்பிடுவார். எனினும், இக்கருத்தை மறுத்து சுபாஷ் சந்திரபோஸ், ‘‘ஒரு சொல் திரிய வேண்டும் என்றால் ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும். விலங்கல், விண்டு போன்றவை மலையைக் குறிக்க வரும் தனித்தனிச் சொற்கள். அவ்வளவே. அவற்றை முழுவதுமாகத் திரிந்த சொல் என்று ஏன் குறிப்பிட வேண்டும் என்பது விளங்கவில்லை. வேண்டுமானால் விலங்கல், விண்டு என்பவை மலையைக் குறிக்க வரும் தனித்தனிச் சொற்கள் எனத் திரிதல் என்பதற்குப் பொருள் கொள்ளலாம். அதாவது ஒன்றிலிருந்து ஒன்று திரிந்தது எனக் கொள்ளாமல் வேறு வேறு சொல் என்றால் பொருத்தமாக இருக்கும்.

உறுப்புத் திரிந்த ஒரு பொருள் குறித்த வேறு சொற்களுக்குக் கிளி என்பதற்குக் கிள்ளை என்பதும் மயில் என்பதற்கு மஞ்ஞை என்பதும் கொடுக்கப்பட்டுள்ளன. கிள்ளை, மஞ்ஞை என்பவை திரிசொற்கள் எனக் கூறுவதிலும் ஐயம் எழுகின்றது.

திராவிட மொழிகள் பின்னொட்டு மொழிகள் (Suffixing languages). வேர்ச் சொல்லோடு ஆக்க விகுதிகள் சேர்ந்து (வாழ்: வாழ்க்கை, வாழ்வு, வாழல்) சொற்கள் உருவாகும். அதே அடிப்படையிலேயே கிள் என்னும் வேர்ச்சொல்லோடு பெயராக்க விகுதிகள் இ, ஐ சேர்ந்து கிளி, கிள்ளை என்னும் ஒரு பொருள் குறித்த வேறு சொற்கள் தோற்றம் பெற்றுள்ளன.

இ } கிளி
கிள் - { ஐ } ⟶ கிள்ளை

கிள் என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தான் இவை ஆக்கம் பெற்றுள்ளன. எனவே, கிளியிலிருந்து திரிந்தது கிள்ளை என்றோ, கிள்ளையிலிருந்து திரிந்தது கிளி என்றோ கூற மொழி அமைப்பு இடந்தராது. இதே போன்றுதான் மயில், மஞ்ஞை என்பவையும் ஒரே பொருளை உணர்த்துவதைத் தவிர வேறு எந்த நிலையிலும் ஒலி மாற்ற அடிப்படையிலோ அல்லது ஆக்கச்சொல் அடிப்படையிலோ தொடர்பில்லாதவையாக இருக்கின்றன. அதாவது மலையைக் குறிக்கும் விலங்கல், விண்டு போலவே தனித்தனிச் சொற்களாகவே கொள்ள வேண்டும். கிளி, கிள்ளை, மயில், மஞ்ஞை பழந்தமிழில் நிறையவே பயின்று வந்துள்ளன’’[5] என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தை நோக்க, திரிந்து வருவன திரிசொல் என்பதை விட, அரிதாகப் பொருள் உணர்த்துவன திரிசொல் என்பது புலப்படும்.

இதுகுறித்து கா. மீனாட்சிசுந்தரம், ‘‘கற்ற அறிஞர்களால் ஆக்கிக் கொள்ளப்பட்ட சொற்களே திரிசொற்கள் என்ற கருத்து உரையாசிரியர்கள் சிலரிடம் இருந்திருக்க வேண்டும் என்பது சேனாவரையர் உரையிலிருந்து தெரிகிறது. முழுவதும் திரிந்தவற்றைக் கட்டிய வழக்கு என்பாரும் உளர் எனச் சேனாவரையர் குறிக்கின்றார். கட்டிய வழக்கு என்பது ஆக்கிக் கொள்ளப்பட்ட வழக்கு என்ற பொருளைத் தரும். ஆதலால் இந்நூற்பாவிற்கு அறிஞர்கள் அமைத்துக் கொண்ட சிறப்புச் சொற்களே திரிசொல் ஆகும் எனக் கூறும் உரையாசிரியர்களும் இக்கருத்தினர் என்பதும் தெளிவு. எனவே சிறப்புமொழி என்பதும் திரிசொல் என்பதும் ஒருங்கு வைத்து எண்ணத்தகுந்தவை’’[6] என்று குறிப்பிடுகிறார்.

செ. வை. சண்முகம், ‘‘பெயர் என்பது உலக வழக்கில் ஆள் பெயரையும் இலக்கணத்தில் பெயர்ச்சொல்லையும் குறிக்கும். முன்னது இயற்சொல் பின்னது திரிசொல். இயற்சொல்லாய் ஒரு பொருள் குறித்த ஒரு சொல்லாய் இருந்தது, திரிசொல்லாகிப் பல பொருள் குறித்த ஒரு சொல்லாக மாறிவிட்டது. அப்படியே முல்லை என்பது செடி, பூ என்ற தொடர்புடைய பொருளை (ஆகுபெயராக) இயற்சொல்லைக் குறித்தது. அகப்பொருளில் இருத்தல் என்ற பொருளைக் குறிக்கப் பயன்படுத்தியதும் திரிசொல்லாகிவிட்டது. குறிஞ்சி, நெய்தல், பாலை போன்ற பூப்பெயர்களும் ஐந்திணைப் பெயர்களாகப் பயன்படும்போது திரி சொல்லாகவும் பலபொருள் ஒரு சொல்லாகவும் ஆகிவிட்டன. திரிசொல்லாக மாறியதும் அந்தச் சொல்லுக்கு இன்னொரு புதிய பொருள் சேர்ந்துவிடுகிறது’’[7] என்று விளக்குகிறார்.

நன்னூல்,

> **ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்**
> **பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்**
> **அரிதுணர் பொருளன திரிசொல் ஆகும் (நன்.272)**

என்று குறிப்பிடுகிறது. நன்னூலைப் பின்பற்றி சுவாமிநாதம் (சு. நா. 37), இனிய தமிழ் இலக்கணம் (இ.த. இ. 68) ஆகியன அரிதாகப் பொருள் உணர்த்துவன திரிசொல் என்னும் கருத்தைப் பதிவு செய்துள்ளன.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ. வி. 173), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 44), முத்துவீரியம் (மு. வீ. ஒழி. 51), தென்னூல் (தென். சொற். 33) ஆகியன தொல்காப்பியத்தைப் பின்பற்றி திரிசொல் ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகவும், வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் வரும் என்கின்றன.

திசைச்சொல்

திசைச்சொல் குறித்துத் தொல்காப்பியம்,

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி (தொல். சொல் 400)

என்று குறிப்பிடுகிறது.

'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' என்பதில் தமிழறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

இளம்பூரணர், பொதுங்கர் நாடு, தென்பாண்டி நாடு, ஒளிநாடு, குட்ட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீதநாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு, குடநாடு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்[8].

சேனாவரையர் பொதுங்கர் நாட்டை பொங்கர் நாடு என்கிறார் மற்றபடி இளம்பூரணரை ஒத்துள்ளார்[9].

க. வெள்ளை வாரணன், "செந்தமிழ் நாடாவது: வையையாற்றின் வடக்கும், மருத யாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் என்பர் இளம்பூரணர் முதலியோர். இவ்வாறு உரைத்தற்குத் தக்க ஆதாரங் காணாமையானும், வையையாற்றின் தெற்காகிய கொற்கையும், கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூரும் மருதயாற்றின் வடக்காகிய காஞ்சியும் அன்னோர் கருத்துப்படி தமிழ்திரி நிலமாதல் வேண்டுமாதலானும் அவர் கூற்றுப் பொருந்தாது.

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளுமா யிருமுதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி"

எனவரும் சிறப்புப் பாயிரத்துள் வடவேங்கடத்திற்கும் தென்குமரிக்கும் இடைப்பட்ட நிலப் பகுதி முழுவதையும் 'தமிழ் கூறும் நல்லுலகம்' எனப் பனம்பாரனார் சிறப்பித்தமையானும், கிழக்கும் மேற்கும் எல்லை கூறாது தென்குமரியெனத் தெற்கெல்லை கூறியவதனாற் குமரியின் தெற்கேயுள்ள நாடுகளையொழித்து வேங்கடமலையின் தெற்கும், குமரியின் வடக்கும் குணகடலின் மேற்கும் குடகடலின் கிழக்குமாகிய தமிழகம் முழுவதையுமே செந்தமிழ் நிலமெனத் தொல்காப்பியர் காலத் தமிழ் மக்கள் வழங்கினர் எனக் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும். வடவேங்கடந் தென்குமரியிடைப்பட்ட தமிழகம் ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்துப்

பன்னிரு நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்ததென்பது ‘‘செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்’’ (எச்ச – 4) என அவ்வாசிரியர் கூறுதலால் இனிது விளங்கும். இப்பன்னிரு நிலங்களாவன: பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா வடதலை என்பன என்றும் இவற்றைத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பாலிறுதியாக எண்ணிக் கொள்கவென்றும் கூறுவர் சேனாவரையர்.

‘செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்’ என்ற தொடர்க்குச் ‘செந்தமிழ் வழங்கும் தமிழ்நாட்டின் பகுதியவாகிய பன்னிரு நிலங்களினும்’ எனப் பொருள் கொள்ளுதலே ஆசிரியர் கருத்துக்கு ஏற்புடையதாகும். இவ்வாறு கொள்ளாது ‘செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும்’ எனப் பழையவுரையாசிரியர்கள் பொருள் கொண்டு, செந்தமிழ் நிலம் வேறாகவும் அதனைச் சூழ்ந்த பன்னிரு நிலங்களும் வேறாகவும் கூறுப. ‘தென்பாண்டி குட்டம்’ எனத் தொடங்கும் பழைய வெண்பாவிலும் ‘செந்தமிழ்சேர் ஏதமில் பன்னிரு நாடு’ எனக் கூறப்படுவதால் இப்பன்னிரு நாடுகளும் செந்தமிழ் வழக்கினை மேற்கொண்டவையென்பது நன்கு விளங்கும். எனவே இப்பன்னிரண்டின் வேறாகச் செந்தமிழ் நிலமெனத் தனியே ஒரு நாடிருந்ததென்றும் அஃதொழிந்த பன்னிரு நாடுகளும் கொடுந்தமிழ் நாடுகளாமென்றும் கூறுதல் ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு முரணாதல் தெளிக.’’[10] என்று விளக்குகிறார்.

மேலும், இது குறித்து சாமி. சிதம்பரனார், ‘‘செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த, பன்னிரு நாடுகள் பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குடநாடு, பன்றிநாடு, கற்கா நாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவா நாடு, அருவா வடதலைநாடு என்று கூறுவர். இது சில உரையாசிரியர்களின் கூற்று. பாண்டி நாட்டைச் செந்தமிழ் நாடாகக் கொண்டு அதைச் சூழ்ந்துள்ள இந்தப் பன்னிரண்டு நாடுகளையும் கொடுந்தமிழ் நாடென்று எண்ணியவர்கள் கூறும் உரையிது. இது பொருந்தா உரையென்று மறுப்போரும் உண்டு.

இந்த பன்னிரண்டு நாடுகளும் தமிழ் நாட்டிலேயே இருப்பன. இவை தமிழ் வழங்கும் நாடுகள். தமிழர் வாழும் நாடுகள். இந்த நாட்டுச்சொற்கள் திசைச்சொற்கள் அல்ல. செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்துள்ள வேற்று மொழிகள் வழங்கும் போதுதான் அவைகளுக்குத் திசைச்சொற்கள் என்று பெயர்.

இவ்வாறு உரை கூறியிருக்கின்றனர் சில உரையாசிரியர்கள். இதுதான் பொருத்தமான உரை.

இவர்கள் காட்டும் செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நாடுகளாவன குமரியாற்றின் தென்கரையிலே உள்ள பழந்தீபம், கொல்லம், கூபகம், சிங்களம், சைய

மலைக்கு மேற்கேயுள்ள கொங்கணம், துளுவம், குடகம், குன்றகம், சைய மலைக்கும் கிழக்கேயுள்ள கருநடம், வடுகம், தெலிங்கம், கலிங்கம் ஆகிய பன்னிரண்டு நாடுகள்.

பழந்தீபம், கூபகம் இரண்டு நாடுகளும் கடலிலே மறைந்து விட்டதாகக் கருதுகின்றனர். கொல்லம் - மலையாள நாடு. சிங்களம் - இலங்கைத்தீவு, கருநடம் - கன்னடதேசம், வடுகம் - தெலுங்குநாடு, தெலிங்கம் - தெலிங்கானா, கலிங்கம் - கோதாவரியின் வடக்கில் உள்ள நாடு.

கலிங்கத்தைத் தமிழ்நாட்டை அடுத்துள்ள நாடாகக் குறிப்பிட்டிருப்பதனால் கோதாவரி நதி வரையிலும் உள்ள கீழ்க்கடற்கரைப் பகுதி ஒரு காலத்தில் தமிழ்நாடாக இருந்தது என்று ஊகிக்க இடம் உண்டு.

“வடவேங்கடம் தென்குமரி” என்று தொடங்கும் பனம்பாரனார் பாட்டு தொல்காப்பியர் காலத்திலேயே தோன்றியதானால், அதில் கூறப்படும் எல்லை சரியாக இருக்கலாம் அப்பாடல் தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நாட்டின் எல்லை எது என்று வரையறுத்துச் சொல்ல வழியில்லை. அதற்கான ஆதரவு ஒன்றும் கிடைக்கவில்லை”[11] என்று குறிப்பிடுகிறார்.

வ. ஞானசுந்தரம் என்பார், “தொல்காப்பியர் திசைச்சொல் என்று குறிப்பிடுவது கிளைமொழியியல் நோக்கில் வட்டாரக் கிளைமொழியையேயாகும்”[12] என்றும் “தொல்காப்பியர் திசைச் சொற்களும் செய்யுளில் பயன்பாட்டில் உள்ளவை என்று குறிப்பிடுவது தொல்காப்பியரது காலத்துக் கிளைமொழிச் சொற்கள் பெற்றுள்ள உயரிய மதிப்பீட்டை உணர்த்துகிறது.”[13] என்றும் குறிப்பிடுகிறார்.

முத்துவீரியம் தொல்காப்பியத்தைப் பின்பற்றி திசைச்சொல்லை விளக்கியுள்ளது. (மு. வீ. ஒழி. 53)

“போக்குவரத்து வசதிகள் குறைந்திருந்த பண்டைக்காலத்தில் தமிழர்கள் பக்கத்து நாடுகளுக்குத்தான் அடிக்கடி போய்வர முடியும். அந்த நாட்டு மக்களுடன்தான் அடிக்கடி பழகவும் முடியும். ஆகையால் பக்கத்து நாட்டு மொழிகளின் சொற்களையே திசைச்சொல் என்று குறித்தார். இக்காலத்தைப் போலத் தொல்காப்பியர் காலத்தில் உலகம் முழுவதும் சுற்றி வரக்கூடிய சாதனங்கள் இருந்திருந்தால் வேற்று நாட்டுச் சொற்களையெல்லாம் திசைச் சொற்கள் என்று தீர்மானமாகக் கூறியிருப்பார் அவர்”[14] என்று சாமி. சிதம்பரனார் கூறுவது கருதத்தக்கது.

எனவே தமிழ்மொழி தவிர்ந்து தமிழ்நாட்டில் வழங்கப்படும் பிற மொழிகளை திசைமொழிகளாகக் கொள்ள இயலும்.

வடசொல்

தமிழ்மொழி வழங்கும் தமிழ்நாட்டிற்கு வடக்கே வழங்கும் மொழி வடமொழி ஆகும். அம்மொழிக்குரிய சிறப்பு எழுத்துக்களால் ஆனவை வடசொல் ஆகும். தொல்காப்பியர் காலத்திலேயே வடமொழித் தொடர்பு இருந்தமை குறித்து கி. வா. ஜகந்தாநன், “சரித்திர காலத்துக்கு முந்தியே தமிழ் இலக்கிய காலம் தொடங்கிவிட்டது. சரித்திரத்துக்கு எட்டாத காலத்திலே இயற்றப்பெற்றது தொல்காப்பியம்.

அதாவது, அதன் காலத்தை ஆராய்வதற்குரிய சாதனங்கள் சரித்திர ஆராய்ச்சிகாரர்களுக்கு இன்னும் கிட்டவில்லை. அத்தகைய தொல்காப்பியத்திலே வடமொழித் தொடர்பு தமிழ் நாட்டில் எவ்வளவு வேரூன்றி இருக்கிறதென்பது புலப்படுகிறது.

வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கும் தென்னாட்டில் இருந்து வடநாட்டுக்கும் மக்கள் சென்று தங்கி வாழ்ந்தார்கள். இந்த வாழ்க்கைக்கு இயற்கையிலும், செயற்கையிலும் தடையொன்றும் இருக்கவில்லை. மக்கள் தம்முள்ளே கலந்து வாழ்ந்தால் கருத்துக் கலப்பும், மொழிக் கலப்பும் அமைவது இயற்கையே.

ஆனால் தமிழ்மொழி தன் மரபை மாற்றிக் கொள்ளவில்லை.”[15] என்று கூறுவது பிறமொழிக் கலப்பு தவிர்க்க முடியாதது என்பதையும், தமிழ்மொழியின் தனிச் சிறப்பையும் உணர்த்தும்.

வடசொல்லில் உள்ள சிறப்பெழுத்துகளை நீக்கி, வடமொழி, தமிழ்மொழி என்னும் இரண்டற்கும் பொதுவான எழுத்துகளால் சொற்கள் அமைக்கப்படும் என்பதை,

வடசொற் கிளவி வடவெழுத்(து) ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்ஆ கும்மே. (தொல். சொல். 401)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அவ்வட சொல்லும் செய்யுளுக்கு உரியதாகும்.

மேலும், பொது எழுத்தால் அன்றிச் சிறப்பெழுத்தால் அமைந்த வடசொற்கள் முழுமையாக வராமல் சிதைந்தும் வரும். அவற்றுள் பொருத்தமுடையவற்றைச் சான்றோர் நீக்காமல் ஏற்றுக்கொள்வர் என்பதை,

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் (தொல். சொல். 402)

என்கிறது தொல்காப்பியம்.

தமிழில் வடமொழிக் கலப்பு குறித்து ரா. சீனிவாசன், ‘‘வடமொழி தமிழகத்தில் கால் ஊன்றிய போதினும் தமிழோடு முற்றிலும் கலந்து அதனை மாற்றும் ஆற்றலை அது பெறவில்லை. புலவர்கள் வடசொற்களைப் புகுத்த முயன்ற போதெல்லாம் அதற்கு எதிர்ப்புத் தோன்றிக் கொண்டே இருந்தது.

பிறமொழிச் சொற்களைத் தமிழ் ஏற்கும்பொழுது அவற்றின் ஒலியியல்பைத் தம் இயல்புக்கு ஏற்றவாறு மாற்றியே ஏற்றுக் கொண்டது.

‘வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே’

என்பது தொல்காப்பியம். வட சொற்கள் புகுந்தனவாயினும் வடமொழியின் ஒலிகள் தமிழில் இடம்பெறவில்லை. சில ஒலிகளை எழுதிக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டதால் ஹ, ஷ, ஸ, ஜ முதலாய ஒலிகளையும் அவற்றுக்குரிய எழுத்துகளையும் தமிழ் ஏற்றுள்ளது.’’[16] என்று குறிப்பிடுவது தமிழின் சிறப்பைப் புலப்படுத்தும்.

நன்னூல் வடசொல் குறித்து,

பொதுஎழுத் தானும் சிறப்புஎழுத் தானும்

ஈர்எழுத் தானும் இயைவன வடசொல் (நன். 274)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கமும் (இ. வி. 175), முத்துவீரியமும் (மு. வீ. ஒழி. 52) நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளன.

சுவாமிநாதம் பொது எழுத்தானும், சிறப்பு எழுத்தானும் வழங்குவது வட சொல் என்கிறது (சு. நா. 38)

இனிய தமிழ் இலக்கணம் வடசொல் குறித்து,

தமிழிற் கலந்த ஆரியம் வடசொல்

வழங்கிவந்த சொல் வழங்கலினிதே (இ.த.இ.74)

என்று விளக்குகிறது. மேலும், தற்சமம், தற்பவம் என்பனவற்றிற்கு விளக்கம் தருகிறது.

இயல்பாய் வழங்கும் வடமொழி தற்சமம்

தமிழுக் கேற்பத் திரிந்தது தற்பவம் (இ.த.இ.77)

என்று நவில்கிறது.

தென்னூல், பழந்தமிழினின்றும் (பிராகிருதம்) சென்று ஆரியமொழி ஒலிப்பிற்கேற்பச் செப்பமுற்றவை மீண்டு வந்து இரு மொழிக்கும் பொதுவான எழுத்துக்களால் வழங்குவனவும், ஆரியத்திற்குரியவையாய் அவ்வெழுத்தினின்று நீங்கித் தமிழ் எழுத்தான் வழங்குவனவும், ஆரியச்சொல் தமிழ்ஒலி மரபிற்கேற்பத் திரிந்து வழங்குவனவும் வடசொல் எனக் கூறுவர் (தென். சொற். 35) என்று குறிப்பிடுகிறது.

தமிழிலிருந்து சென்றதே வடமொழி என்று இந்நூலாசிரியர் கூறுவது இவரது தமிழுணர்வையும் தமிழின் தொன்மைச் சிறப்பையும் பறைசாற்றுகிறது.

வாணிபம், படையெடுப்பு ஆகியவை மொழிக்கலப்பு ஏற்பட முக்கியக் காரணமாயின. திசைச்சொற்களும், வட சொற்களும் தமிழில் கலந்தன. சாமி.சிதம்பரனார், ‘‘மொழி வளர்ந்து செழிப்படைவதற்கு பொருட்செல்வத்தைக் குவிப்பதற்கான சொற் செல்வம் பெருகுவதற்கு – வடமொழிச் சொற்களும், பிற நாட்டுச் சொற்களும் தமிழிலே கலப்பது தவறல்ல என்று கொண்டனர். அக்காலத்தில் மொழி வெறுப்போ, சாதி வெறுப்போ, இன வெறுப்போ தமிழரிடம் சிறிதும் தலைகாட்டியதே இல்லை. இதனால் தமிழும் வளர்ந்தது; தமிழரும் இன்பமும், புகழும் பெற்று வாழ்ந்தனர்’’[17] என்று குறிப்பிடுகிறார்.

செய்யுளில் சொற்கள் அடையும் மாற்றத்தின் வகைகள்

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நால்வகைச் சொற்களும் செய்யுளில் வரும்பொழுது வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என்னும் ஆறுவகை விகாரங்களைப் பெற்று வருதல் உண்டு என்பதைத் தொல்காப்பியம்,

அந்நாற் சொல்லும் தொடுக்கும் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும் வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும் வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர் (தொல். சொல். 403)

என்று கூறுகிறது.

இக்கருத்தை நேமிநாதம் (நேமி. 91), நன்னூல் (நன். 155), இலக்கண விளக்கம் (இ. வி. 57), முத்துவீரியம் (மு. வீ. ஒழி. 54) ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன.

ஒரு சொல் அடுக்குகள்

அடுக்குத்தொடர்களை இசைநிறை, அசைநிலை, பொருளொடு புணர்தல் என மூவகைப்படுத்துகிறது தொல்காப்பியம் (தொல். சொல். 411).

நன்னூல் (நன். 395), இலக்கண விளக்கம் (இ. வி. 346), சுவாமிநாதம் (சு.நா.67), தமிழ்நூல் (த. நூ. 301), தமிழ்க் காப்பு இயம் (த. கா. இ. 301) ஆகியவை தொல்காப்பியக் கருத்தை ஏற்கின்றன.

அடுக்கிற்கு வரையறை

தொல்காப்பியம்,

இசைப்படு பொருளே நான்கு வரம்பு ஆகும் (தொல். சொல். 423)
விரைசொல் அடுக்கே மூன்றுவரம்பு ஆகும் (தொல். சொல். 424)

என்று குறிப்பிடுகிறது. நேமிநாதம் (நேமி. 74), நன்னூல் (395), முத்துவீரியம் (மு. வீ. ஒழி. 107), சுவாமிநாதம் (சு. நா. 67), ஆகியவை இதனை ஏற்கின்றன.

தொகைச்சொற்களின் வகைகள்

தொகைச்சொற்களை வகைப்படுத்துவதில் இலக்கணிகள் அனைவரும் (இலக்கணக் கொத்து நீங்கலாக) ஒன்றுபடுகின்றனர். தொகைச் சொற்களின் வகைகளைத் தொல்காப்பியம்,

வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையே என்(று)
அவ்ஆறு என்ப தொகைமொழி நிலையே (தொல். சொல். 412)

என ஆறு வகைப்படுத்துகிறது. இதனைப் பிற்றை இலக்கணிகள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். (நேமி.85, நன்.362, அவி.35, தொ.வி.89, இ.வி.335, மு.வீ.ஒழி. 95, சு.நா.66, இ.த.இ.156, இ.த.ஐந்.303, தென்.சொற்.208, த.நூ.116, த.கா.இ.431).

வேற்றுமைத்தொகை

தொல்காப்பியம் வேற்றுமைத்தொகையின் பண்பினைக் கூறுகிறது.

அவற்றுள்
வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல
(தொல். சொல். 413)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கமும் (இ.வி.336), தமிழ்க்காப்பு இயமும் (த.கா.இ.433) தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளன. சுவாமிநாதம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி வேற்றுமைத்தொகை அதற்குரிய வேற்றுமை உருபின் பொருளில் வரும் என்கிறது (சு.நா.66). மேலும் வேற்றுமை உருபு மட்டுமன்றி, உருபோடு பயனும் மறைந்து வரும். அது உருபும், பயனும் உடன் தொக்க தொகை என்றழைக்கப்படும்.

உவமைத் தொகையின் இலக்கணம்

தொல்காப்பியம் உவமைத்தொகையின் இயல்பை உணர்த்தும் வகையில்,

உவமத் தொகையே உவம இயல (தொல். சொல். 414)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.337).

வினைத்தொகை

தொல்காப்பியம் வினைத்தொகை குறித்து,

வினையின் தொகுதி காலத்து இயலும் (தொல். சொல். 415)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.338). சுவாமிநாதம் வினைத்தொகை மூன்று காலத்தின் கண் நிகழும் (சு.நா.66) என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு வினைத்தொகை மூன்று காலத்திற்கும் வரும் என்பதை மறுத்து ஏ. ஆதித்தன், “வினைத்தொகை முக்காலத்திற்கும் உறழ்ந்து வரும் என்ற கருத்து உரையாசிரியர்களால் வினைத்தொகை மேல் ஏற்றிக் கூறப்பட்ட கருத்தாகும். வினைத்தொகை மொழியில் செயல்படும்போது ஒரு குறிப்பிட்ட காலப் பொருண்மையினதாகத்தான் வருமே அன்றி, முக்காலத்திற்கும் உரியதாகக் கூறவியலாது.

‘ஊறுகாய்’ என்பதனை ஊறிய, ஊறுகின்ற, ஊறும், காய் எனக் குறிப்பிடலாமே அன்றி தொடரில் ‘ஊறிய காய்’ என்னும் பொருளில் மட்டுமே ஊறுகாய் என்பது செயலாற்ற முடியும்”[18] என்று கூறுகிறார்.

பண்புத்தொகையின் இலக்கணம்

தொல்காப்பியம், பண்புத்தொகையின் நிலைக்களன்களாக வண்ணம், வடிவம், அளவு, சுவை ஆகியவற்றைக் குறிப்பிட்டு ‘இன்னது இது’ என்னும் வாய்ப்பாட்டால்

கூறும் இயல்புடன் வரும் என்று குறிப்பிடுகிறது (தொல். சொல். 416).

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.339). முத்துவீரியமும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி பண்புத்தொகையை விளக்குகிறது (மு.வீ.ஒழி.98).

சுவாமிநாதம், நிலைக்களன்களைச் சுட்டவில்லை. இன்னது இது என ஒன்றனை ஒன்று விசேடித்து இரண்டு சொல்லும் ஒரு பொருள் மேல் வரும் இயல்பினை உடையது என்று விளக்குகிறது (சு.நா.66).

தென்னூல், தொல்காப்பியத்தைப் பின்பற்றி பண்புத்தொகையை விளக்குகிறது (தென்.சொற்.212).

உம்மைத் தொகையின் இலக்கணம்

உம்மைத்தொகை ஆறு நிலைகளில் வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதை,

> **இருபெயர் பலபெயர் அளவின் பெயரே**
> **எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி**
> **எண்ணின் பெயரோ(டு) அவ்அறு கிளவியும்**
> **கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே (தொல். சொல். 417)**

என்னும் நூற்பா விளக்கும்.

எண்ணிடைச் சொல்லாகிய ‘உம்’ சொற்களின் இடையிலும், ஈற்றிலும் மறைந்து நிற்பது உம்மைத்தொகையாகும். வேற்றுமை முதலா அமைந்த தொகைகள் இரு சொற்களால் அமையும். ஆனால் உம்மைத்தொகை இரு சொல்லாலும் இரண்டுக்கு மேற்பட்ட பல சொல்லானும் அமையும்.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.340).

தொகைகளில் பொருள் சிறக்கும் இடம்

தொகைச் சொற்களில் முன்மொழி, பின்மொழி, இருமொழி, அன்மொழி(பிறமொழி) ஆகிய நான்கு இடங்களிலும் பொருள் சிறந்து விளங்கும் (தொல்.சொல்.419)என்னும் கருத்தைப் பெரும்பாலான இலக்கணிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். (நேமி.88, நன்.370, இ.வி.342, மு.வீ.ஒழி.102, சு.நா.67, த.கா.இ.440).

தொகை மொழியின் இயல்பு

அறுவகைத் தொகைச் சொற்களும் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களால் ஆனவை. அவை பிளவுபடாமல் இணைந்து நின்று ஒரு சொல்லாய் நடக்கும் தன்மையன என்பதைத் தொல்காப்பியம்,

எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய (தொல்.சொல்.420)

என்று குறிப்பிடுகிறது. இக்கருத்தை இலக்கணிகள் பலரும் பின்பற்றியுள்ளனர்.

(நேமி.85, நன்.361:3-4, இ.வி.334:6-7, தொ.வி.88:3, மு.வீ.ஒழி.103, சு.நா.65, த.நூ.114 தென்.சொற்.218, த.கா.இ.432).

உயர்திணை உம்மைத்தொகை முடியும் முறை

உயர்திணையிடத்து உம்மைத்தொகைச் சொல் வரின் அது பலர்பால் ஈற்றைக் கொண்டு முடியும் (தொல்.சொல்.421) என்பதில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர் (நேமி.89, நன்.372, இ.வி.343, மு.வீ.ஒழி.105, தென்.சொற்.215, த.நூ.120, த.கா.இ.438).

வழக்கால் பொருள் தரும் குறிப்பு மொழிகள்

வழக்கால் பொருள் தரும் குறிப்பு மொழிகள் குறித்துத் தொல்காப்பியம்,

வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னா மரபின எனக்கூ றுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற்று இயல்பான்
இன்ன என்னும் குறிப்புரை ஆகும் (தொல். சொல். 422)

என்று தொல்காப்பியம் கூறுகிறது.

நேமிநாதம், இக்கருத்தின் அடிப்படையில்,

இன்னரென முன்னத்தாற் சொல்லுதல் என்ற சென்ற
என்னும் அவையன்றி யிட்டுரைத்தல் - தன்வினையாற்
செய்யப் படும்பொருளைச் செய்ததெனச் சொல்லுதலும்
எய்தப் படும்வழக்கிற் கீங்கு (நேமி. 90)

என்று குறிப்பிடுகிறது. நன்னூல்,

கேட்குந போலவும் கிளக்குந போலவும்

இயங்குந போலவும் இயற்றுந போலவும்

அ.்.றிணை மருங்கினும் அறையப் படுமே (நன். 409)

என்கிறது.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.347). முத்துவீரியம் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் அடியொற்றி குறிப்புரையை விளக்குகிறது (மு.வீ.ஒழி.106,107). தென்னூல், நன்னூலைப் பின்பற்றி குறிப்புரையை விளக்குகிறது (தென்.சொற்.267).

முற்றுச் சொற்களும், அவற்றின் பாகுபாடும்

முற்றுச்சொற்களின் இலக்கணம் மற்றும் அவற்றின் பாகுபாடுகள் குறித்துத் தொல்காப்பியம்,

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்

சிறப்புடை மரபின் அம்முக் காலமும்

தன்மை முன்னிலை படர்க்கை என்னும்

அம்மூ இடத்தான் வினையினும் குறிப்பினும்

மெய்ம்மை யானும் இவ்விரண்டு ஆகும்

அவ்ஆறு என்ப முற்றியல் மொழியே (தொல்.சொல்.427)

என்று குறிப்பிடுகிறது.

நேமிநாதம், வினை மரபின் தொடக்கத்தில் வினைச்சொல்லின் இலக்கணம் பேசுமிடத்து இக்கருத்தைப் பதிவு செய்துள்ளது (நேமி. 63).

பொருள் முற்றி வருவன யாவும் வினைச் சொற்களே

எவ்வகையானும் பொருள் முற்றி வருகின்ற வினைச்சொற்கள் எல்லாம் முற்றுச்சொல் வகைக்குள் அடங்கும் என்பதை,

எவ்வயின் வினையும் அவ்வயின் நிலையும் (தொல்.சொல்.428)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இலக்கணக்கொத்து இக்கருத்தை,

------------------அன்றியும்

இன்னும் பலவகை எனவிளம் புவரே (இ.கொ.83:8-9)

என்று குறிப்பிடுகிறது.

வினைமுற்றுகளனைத்தும் பெயர் கொண்டு முடிதல்

தெரிநிலை, குறிப்பு என்னும் வினைமுற்றுச் சொற்கள் பல அடுக்கி வரினும் அவை இறுதியில் பெயரைக் கொண்டே முடியும் (தொல்.சொல்.429) என்பதை இலக்கண விளக்கம் (இ.வி.230), தொன்னூல் விளக்கம் (தொ.வி.104), சுவாமிநாதம் (சு.நா.49), தென்னூல் (தென்.சொற்.130) ஆகிய நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

எச்சச் சொற்களின் வகைகள்

எஞ்சி நிற்பது எச்சம் அல்லது எஞ்சு பொருட் கிளவி எனப்படும். தொல்காப்பியர் எச்சத்தை வரையறை செய்யவில்லை. உரையாசிரியர்களே விளக்கம் தருகின்றனர். சேனாவரையர், ''எஞ்சுபொருட்கிளவி கொண்டல்லது அமையாமையின் எச்சமாயினவும், ஒரு தொடர்க்கொழிபாய் எச்சமாயினவும் என அவை இருவகைப்படும்.''[19] என்று விளக்குகிறார். எச்சச் சொற்களின் வகைகளைத் தொல்காப்பியம்,

பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீர் ஐந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி (தொல்.சொல்.430)

என்று குறிப்பிடுகிறது.

தெய்வச்சிலையார், ''எஞ்சு பொருட் கிளவியாவது சொல்லாது ஒழிந்த பொருளை இனிது விளக்குஞ் சொல். நெறிப்படத் தோன்றுதலாவது வாக்கியமாகிய தொடர்மொழிக்கண் முன்னும் பின்னும் நின்ற சொல்லை நெறிப்படுத்தற்கு ஆண்டுத் தோன்றுதல். அது புலப்பட நில்லாமையின் எச்சம் ஆயிற்று''[20] என்று விளக்குகிறார்.

சேனாவரையர் இவ்வெச்சங்களை இருவகையாகப் பிரிக்கிறார்.

''கடைநிலை மூன்றும் ஒரு தொடர்க்கு ஒழிபாய் எச்சமாயின. அல்லன எஞ்சு பொருட்கிளவியான் முடிவன''[21] என்று வகைப்படுத்துகிறார்.

இவற்றுள் முன்னவை ஏழும் முடிக்கும் சொல்லைப் பெற்று முடியும் இயல்பின் இறுதி மூன்றும் செய்யுளுக்குரியவாய், பொருள் மட்டும் எஞ்சி நிற்பன. முன்னவை ஏழனுள் வினையெச்சம், பெயரெச்சம் தவிர்ந்தவை இடைச்சொல் அடிப்படை எச்சங்களாகும். எஞ்சி நிற்கும் இயல்பு கருதி இவை அனைத்தையும் தொகுத்து எச்சவியலில் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

அவிநயம், “இப்பத்தெச்சமும் புவிபுகழ் புலமை அவினயன் நூலுள் தண்டலம் கிழவன் தகைவரு நேமி எண் திசை நிறைபெயர் இராச பவுத்திரப் பல்லவதரையன் பகர்ச்சி என்றறிக. (நன்.மயிலை.359)” – (அவி.34) என்பதன் வழி அவிநயமும் பத்துவகை எச்சங்களைக் குறிப்பிடுவது புலப்படும்.

நன்னூல், தொல்காப்பியத்தைப் பின்பற்றி பத்துவகை எச்சங்களைக் கூறினாலும் குறிப்பெச்சத்தை தனியாகவும், அது ஒழிந்த பிற ஒன்பது எச்சங்களையும் சொல்லெச்சம் எனவும் வகைப்படுத்துவதை,

பெயர்வினை உம்மை சொல் பிரிப்பு என ஒழியிசை
எதிர்மறை இசையெனும் சொல்ஒழிபு ஒன்பதும்
குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும். (நன். 360)

என்னும் சூத்திரம் விளக்கும்.

இலக்கண விளக்கம் பெயர், வினை, எதிர்மறை, பிரிப்பு, ஒழிபு, உம்மை, என ஆகிய ஏழு எச்சங்களையும் சொல்லெச்சம் எனவும், சொல், இசை, குறிப்பு ஆகிய மூன்றையும் குறிப்பெச்சமாகவும் வகைப்படுத்தியுள்ளது (இ.வி.348).

முத்துவீரியம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது. (மு.வீ.ஒழி.108). மேலும், அவை தத்தம் எச்சங்களோடு கூடி நடக்கும் (மு.வீ.ஒழி.109) என உரைக்கிறது.

சுவாமிநாதம், இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி எச்சங்களை வகைப்படுத்தியுள்ளது. மேலும், பெயர், வினை தவிர்ந்த பிற எட்டு எச்சங்களும் பெயரெச்சம், வினையெச்சம் போல குறிப்பு மொழியும் எச்சச் சொற்களாக அமையும். அவற்றைக் குறிப்பு அறியும் அறிவால் அறிந்து கொள்ள வேண்டும் (சு.நா.68) என்று குறிப்பிடுகிறது. தென்னூலும் இப்பத்து வகை எச்சங்களையே கூறுகிறது (தென்.சொற்.221). தமிழ்க்காப்பு இயம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.444). தொல்காப்பியம், இலக்கண விளக்கம், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியவையே ஒவ்வொரு எச்சத்தையும் தனித்தனியே விளக்கியுள்ளன.

1. பிரிநிலை எச்சம்

பிரிநிலை எச்சம் என்பது பிரிக்கப்பட்ட பொருளையே முடிக்கும் சொல்லாக உடையது (தொல்.சொல்.431). பிரிநிலைப் பொருளை உணர்த்தும் ஏகார, ஓகார இடைச்சொற்கள் பெற்ற வாக்கியங்கள் பொருள் நிலையில் எஞ்சுபொருள்களை உடையவை.

இலக்கண விளக்கம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி பிரிநிலை எச்சத்தை விளக்குகிறது (இ.வி.350).

தென்னூல் முதல் ஏழு எச்சங்களும் மேலை இயல்களுள் கூறப்பட்டவாறு வரும் என்று கூறுகிறது (தென்.சொற்.222).

தமிழ்க்காப்புஇயம் பிரிநிலை எச்சம் தத்தம் மரபில் எச்சப்பொருளினைத் தரும் என்கிறது (த.கா.இ.446).

2. வினையெச்சம்

வினையெச்சம் குறித்துத் தொல்காப்பியம்,

வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபுஆ கும்மே.
ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே (தொல்.சொல்.432)

என்று கூறுகிறது.

இலக்கண விளக்கம், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியன இவை வினையியலில் விளக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக் காட்டுகின்றன (இ.வி.349, தென்.சொற்.222, த.கா.இ.445).

3. பெயரெச்சம்

பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே (தொல்.சொல்.433)

என்று தொல்காப்பியம் குறிப்பிட, இலக்கண விளக்கம் (இ.வி.349), தென்னூல் (சொற்.222), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.445) ஆகியன வினையியலில் கூறப்பட்ட முறையில் பெயரெச்சம் வரும் என நவில்கின்றன.

4. ஒழியிசை எச்சம்

சொல்லாது ஒழிந்ததைச் (விட்டதைச்) சொல்வது ஒழியிசை. தொல்காப்பியம் ஒழியிசை எச்சம் ஒழியிசையாகவே நிற்கும் பொருளோடு முடியும் இயல்பினதாகும். (தொல்.சொல்.434)என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கமும் (இ.வி.350), தமிழ்க்காப்பு இயமும் (த.கா.இ.446) இக்கருத்தைப் பின்பற்றியுள்ளன.

5. எதிர்மறை எச்சம்

எதிர்மறை எச்சம் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் சொல்லைக் கொண்டு முடியும் (தொல்.சொல்.435)என்ற தொல்காப்பியக் கருத்தை இலக்கண விளக்கமும் (இ.வி.350), தமிழ்க் காப்பு இயமும் (த.கா.இ.446) பின்பற்றியுள்ளன.

6. உம்மை எச்சம்

ஒன்றற்கு ஒன்று தொடர்புள்ள இரண்டு தொடர்களால் அமைவது உம்மை எச்சமாகும். அவ்விரு தொடர்களிலும் ஒன்றற்குரிய வினையே மற்றொன்றிற்கும் முடிக்கும் சொல்லாய்ப் பொருந்தி வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.236). மேலும், உம்மை எச்சம் வந்து அதற்கு முன்னதாக உம்மையில்லாத செஞ்சொல் வரின் அவை முறைமாறாமல் நிகழ்காலத்தோடு எதிர்காலமும், இறந்த காலத்தோடு எதிர்காலமும் கலந்து வரும் என்று குறிப்பிடுகிறது (தொல்.சொல்.350).

இலக்கண விளக்கமும், தமிழ்க் காப்பு இயமும் உம்மை எச்சத்திற்கான தொல்காப்பியக் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளன (இ.வி.350, த.கா.இ.446).

உம்மையெச்சத்தில் கால மயக்கம் குறித்த தொல்காப்பிய நூற்பாவை இலக்கண விளக்கம் எடுத்தாண்டுள்ளது (இ.வி.352).

எனவென் எச்சம்

எனவென் எச்சம் வினையொடு முடிமே (தொல்.சொல்.438)

என்பதை இலக்கண விளக்கமும் (இ.வி.350), தமிழ்க்காப்பு இயமும் (த.கா.இ.447) பின்பற்றியுள்ளன.

சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம்

இவை மூன்றும் தம்மால் பெறப்படும் எஞ்சு பொருளை உடையன. அதனால் அவை தமக்கு வேறாய் நின்று மேல்வந்து முடிக்கும் படியான பிற சொற்களை வேண்டி நிற்பதில்லை என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.439). மேலும், அவை தத்தம் குறிப்பால் எஞ்சி நின்ற பொருளை உணர்த்தும் (தொல்.சொல்.440) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கமும், தமிழ்க் காப்பு இயமும் தொல்காப்பியக் கருத்தைப் பின்பற்றி உள்ளன (இ.வி.350, த.கா.இ.448).

தென்னூல், குறிப்பு, இசை ஆகியவற்றைத் தனியே விளக்கியுள்ளது.

குறிப்பும் இசையும் கூறுவோன் கருத்தின்
எல்லையின் முடிபாய் இயலும் அவற்றுள்
உன்னுமொரு கருத்தினை ஓரிரு சொற்களான்
உணர்த்தும் நிலையது குறிப்பெச்ச மாகும் (தென்.சொற்.224)

இன்றி யமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உணர்த்துவது இசையெச்ச மாகும் (தென்.சொற்.225)

என்று குறிப்பிடுகிறது.

சொல்லெச்சத்தின் இயல்பு

சொல்லெச்சம் என்பது ஒரு தொடருக்கு முன்னரோ, பின்னரோ ஒரு சொல் மட்டும் எஞ்சி நிற்பது சொல்லெச்சம் ஆகும். அது எவ்விடத்தும் தொடராய் நின்று எச்சப்பொருள் தருவதில்லை (தொல்.சொல்.441) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம், தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாள்கிறது (இ.வி.351). தென்னூல்,

சொல் என்எச்சமொரு சொல்லொடு நிறையும் (தென்.சொற்.223)

என்று குறிப்பிடுகிறது.

இடக்கர்ச் சொல்லை மறைத்துக் கூறுதல்

நல்லோர் அவைக்கண் கூறத் தகாத சொற்கள் உள்ளன. அவ் இடக்கர்ச் சொற்களை மறைத்துத் தகுதியுடைய வேறு சொற்களால் கூற வேண்டும் (தொல்.சொல்.442) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

நன்னூல் (நன்.267), இலக்கண விளக்கம் (இ.வி. 168), இனிய தமிழ் இலக்கணம் (117), தமிழ்நூல் (த.நூ.262), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.450). ஆகியன தகுதி வழக்கில் ஒன்றாக இடக்கர்ச் சொல்லைக் குறிப்பிடுகின்றன.

இரப்போர் கூற்று

ஒருவன் மற்றொருவனிடம் ஒன்றைக் கேட்டுப் பெறுவதற்கு உரிய சொற்களைத் தொல்காப்பியம்,

ஈ தா கொடு எனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைத்தே (தொல்.சொல்.444)

என்று குறிப்பிடுகிறது.

அவற்றுள் 'ஈ' என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடம் கேட்டுப் பெறுவதற்குரிய சொல் (தொல்.சொல்.445) என்றும், 'தா' என்பது தமக்குச் சமமானவரிடம் கேட்டுப் பெறுவதற்குரிய சொல்லாகும் என்றும் (தொல்.சொல்.446), 'கொடு' என்னும் சொல் உயர்ந்தோன் இழிந்தோனிடம் கேட்டுப் பெறுவதற்குரிய சொல்லாகும் (தொல்.சொல்.447) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இக்கருத்தை நன்னூல் (நன்.407), தொன்னூல் விளக்கம் (தொ.வி.115), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.110-112), தென்னூல் (தென்.சொற்.261) ஆகியவை பின்பற்றியுள்ளன.

சாமி. சிதம்பரனார், "தமிழ்நாட்டில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஈவோரும் இருந்தனர். இரப்போரும் இருந்தனர். ஈவோருள்ளும் உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஒப்போர் இருந்தனர்.

இக்காலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு பிரிவுகளும் நன்றாக வேரூன்றியிருந்திருக்க வேண்டும். இந்த நால்வகை வகுப்பினருள்ளும் உள்ளவர்களும், இல்லாதவர்களும் இருந்திருக்க வேண்டும்.

இவர்கள் தத்தம் வகுப்பினரிடம் பொருள் கேட்கும்போது தா என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். தமக்கு மேற்பட்ட வகுப்பினரிடம் யாசிக்கும் போது ஈயென்று பல்லைக் காட்டியிருக்க வேண்டும். தமக்குக் கீழ்ப்பட்ட வகுப்பினரிடம் இரக்கும்போது கொடு என்ற சொல்லைக் கூறியிருக்க வேண்டும்.

ஆகவே, மக்களுக்குள் ஆளுவோர், அடிமைகள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற நிலைமை ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணம் செல்வம் என்பதைக் காணலாம். இவ்வுண்மைக்குத் தொல்காப்பியம் ஆதரவளிக்கின்றது"[22] என்று கூறுகிறார்.

இலக்கண வரையறைக்கு உட்படாத வழக்குகள்

இலக்கண வரையறைக்கு உட்படாத வழக்குகளாகத் தொல்காப்பியம்,

பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்
அன்றி அனைத்தும் கடப்பா டிலவே (தொல்.சொல்.449)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.370). முத்துவீரியம்,

ஒருதிணைப் பெயரொடு திணைக்காய் வருநவும்
திசைச்சொல் வாய்பாடு திரிந்து வருநவும்
இயைபில் லனஇயைந் தனவாய் வருநவும்
திணைமுத லாயின திரிந்து வருநவும்
அன்றி அனைத்தும் கடப்பா டிலவே (மு.வீ.ஒழி.116)

என்கிறது. தென்னூல்,

மங்கல மரபின் பெயர்நிலைக் கிளவியும்
திசைநிலை வழக்கின் குழூஉக் குறிமொழியும்
பழமொழிப் பாங்குறும் உருவகக் கிளவியும்
சொற்பொருள் இணைப்பான் உரைபடு கிளவியும்
மந்திரப் பொருள்வயின் மயக்குறு கிளவியும்
அணிநிலை வகையான் துணிபொருள் தருமே (தென்.சொற்.265)

என்று குறிப்பிடுகிறது.

'செய்யாய்' எனும் சொல்மரபு

செய்யாய் என்னும் வாய்பாட்டு முன்னிலை வினைச்சொற்கள் 'செய்' என நிற்றலும் உண்டு (தொல்.சொல்.450) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம் (இ.வி.353), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.117), தமிழ்க்காப்பு இயம் (த.கா.இ.412) ஆகியன தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளன.

முன்னிலை வினைச்சொற்களுக்கு உரியதோர் மரபு

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே (தொல்.சொல்.451)

என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதம் (நேமி.73), நன்னூல் (நன்.336), இலக்கண விளக்கம் (இ.வி.358), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.118), தென்னூல் (தென்.சொற்.124), தமிழ்க்காப்பு இயம் (த.கா.இ.429) ஆகியன பின்பற்றியுள்ளன.

புதிய சொற்களை ஏற்றல்

காலத்திற்கு ஏற்பச் சொற்கள் புதிதாகத் தோன்றுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை,

கடிசொல் இல்லைக் காலத்துப் படினே (தொல்.சொல்.452)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நன்னூல் இக்கருத்தையே,

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே (நன்.462)

என்று கூறுகிறது. இலக்கண விளக்கம்,

பழையன கடிதலும் புதியன புணர்த்தலும்
வழுவல கால வகையி னானே (இ.வி.371)

என்கிறது. சுவாமிநாதமும் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி பழைய கழிதலும், புதிய புணர்பும் எனக் குறிக்கிறது (சு.நா.70). தென்னூல் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (தென்.சொற்.199).

சொற்களைக் குறைத்துக் கூறும் முறை

குறைத்துச் சொல்ல வேண்டிய இடத்தில் குறைப்பதற்குரிய சொற்கள் உள்ளன. அவற்றை இடமறிந்து குறைத்துக் கூற வேண்டும் (தொல்.சொல்.453) என்றும், அவ்வாறு குறைத்தாலும் அப்பெயர்கள் முழுப்பெயரின் இயல்பிலிருந்து மாறுவதில்லை (தொல்.சொல்.454) என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

நேமிநாதம், குறைச்சொல் வந்திடினும் அதன் முழுப்பொருளை ஆராய்ந்து தெளிவது கற்றோர் செயல் என்று கூறுகிறது (நேமி.91). நன்னூல் எழுத்ததிகாரத்தில்,

ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே (நன்.156)

என்று குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது. (இ.வி.58) முத்துவீரியமும் இக்கருத்தைப் பின்பற்றியுள்ளது (மு.வீ.ஒழி.120).

இடைச்சொற்கள் - வேற்றுமைச் சொற்களே.

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே (தொல்.சொல்.455)

என்னும் தொல்காப்பிய நூற்பாவை இலக்கண விளக்கமும் (இ.வி.359), முத்துவீரியமும் (மு.வீ.ஒழி.121) எடுத்தாண்டுள்ளன.

உரிச்சொல்லும் வேறுபடுத்தும்

இடைச்சொற்களைப் போலவே உரிச்சொற்களுள் வேறுபடுத்துவதற்கு உரியவும் உண்டு என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.456). இலக்கண விளக்கமும் (இ.வி.360), முத்துவீரியமும் (மு.வீ.ஒழி.122) தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளன.

வினையெச்சத்திற்குரிய இயல்பு வேறுபடுதல்

வினையெச்சத்திற்குரிய இலக்கணம் முன் வினையியலில் கூறப்பட்டது. அவ்விலக்கணமே அன்றி வினையெச்சம் வேறு பல இலக்கணத்தையும் கொண்டு முடியும் என்று தொல்காப்பியம் கூறுகிறது (தொல்.சொல்.457).

முத்துவீரியம் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (மு.வீ.ஒழி.123)

நன்னூல்,

சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை (நன்.346)

என்று குறிப்பிடுகிறது.

குறிப்பால் இயல்புரைக்கும் சொற்கள்

சொல்லினாலன்றி, சொல்வானது குறிப்பால் இத்தன்மைய என்று பொருள் உணர்த்தும் சொற்களும் உள்ளன என்பதை

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன என்னும் சொல்முறை யான (தொல்.சொல்.459)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இக்கருத்தை நேமிநாதம் (நேமி.90), நன்னூல் (நன்.308), இலக்கண விளக்கம் (இ.வி.354), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.124), தென்னூல் (தென்.சொற்.264) ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன.

ஒரு பொருள் உணர்த்தும் இரு சொற்கள்

ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார் (தொல்.சொல்.460)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நன்னூல் இதனை,

ஒருபொருட் பல்பெயர் பிரிவில் வரையார் (நன்.397)

என்று கூறுகிறது. இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவையும், முத்து வீரியம் தொல்காப்பிய நூற்பாவையும் எடுத்தாண்டுள்ளன. (இ.வி.355) (மு.வீ.ஒழி.125). இனிய தமிழ் இலக்கணம்,

மிகைப் படுத்திச் சொல்வது மீமிசை (இ.த.இ.166)

எனச் செப்புகிறது. இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

ஒருபொருட் பன்மொழி உறுசிறப்புணர்த்திடும்
உறுபொருள் சிறத்தலால் வழுவமைதியாம் உணர்
உயர்ந்தோங்குமலை விளக்கம் இதற்கே (இ.த.ஐந்.402)

என்று குறிப்பிடுகிறது. தென்னூல்,

தெளிவு குறித்திருசொல் ஒருபொருட் கண்வரல்
மீமிசைக் கிளவியென விளம்புவர் புலவர். (தென்.சொற்.259)

என்று விளக்குகிறது. தமிழ்நூல்,

ஒருபொருள் இருசொல் சிறப்பினால் இணைந்துறும் (த.நூ.299)

என்று கூறுகிறது. தமிழ்க்காப்பு இயம் நன்னூல் நூற்பாவை (நன்.300) எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.442).

ஒருமைப்பெயர் பன்மைக்கு ஆதல்

ஒருமையை உணர்த்தும் பெயர்ச்சொல் பன்மையைச் சுட்டி வரும் இடமும் உண்டு என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.461). இக்கருத்தோடு நேமிநாதம் (94), நன்னூல் (நன்.380), இலக்கண விளக்கம் (இ.வி.300), தொன்னூல் விளக்கம் (தொ.வி.81), முத்துவீரியம் (மு.வீ.ஒழி.126) ஆகியன ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

சொல்லதிகாரத்திற்குப் புறனடை

சொல்லதிகாரத்திற்குப் புறனடையாகத் தொல்காப்பியர்,

செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல் (தொல்.சொல்.463)

என்று உரைக்கிறார். இதுபோலவே நேமிநாதம் (நேமி.95), நன்னூல் (நன்.461), இலக்கண விளக்கம் (இ.வி.372), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.311) ஆகியவையும் புறனடை நூற்பாக்களை அமைத்துள்ளன.

மரபு மாற்றம்

திசைச்சொல்

தொல்காப்பியம் திசைச்சொல் குறித்து, 'செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தினும் தங்குறிப்பின' என்று கூற, நன்னூல் அதனோடு பதினெட்டு மொழிகளுள் தமிழ்மொழி பேசும் நிலம் தவிர்ந்த பதினேழு நிலங்களிலும் உள்ளோர் தம் குறிப்பினவாய் அத்திசைகளினின்றும் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன திசைச்சொல் என்று சொல்லுவர் புலவர் என்று குறிப்பிடுகிறது (நன். 273).

இலக்கண விளக்கம், நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.174).

சுவாமிநாதம், செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டும் ஒழிந்த பதினேழு பகுதியைச் சார்ந்த நிலத்திலிருந்தும் அவர்கள் தம் குறிப்பினவாய் வழங்கும் சொல் திசைச்சொல்லாகும் என்று குறிப்பிடுகிறது (சு.நா.38). இனிய தமிழ் இலக்கணம்,

வந்து கலந்த பிறமொழி திசைச்சொல் (இ.த.இ.69)

என்று தெளிவுபடுத்துகிறது. மேலும்,

செவிக்கினிதாகத் திசைமொழி வழங்குக! (இ.த.இ.75)

தீஞ்சுவைத் தமிழை ஆய்ந்து காப்பாற்றுக! (இ.த.இ.76)

என்றும் வலியுறுத்துகிறது. அறுவகை இலக்கணம் திசைச்சொல் குறித்து,

தாயைத் தல்லிஎன்று உரைப்பது போலும்
திசைச்சொலும் சிற்சில சேர்ந்தமை பற்றித்
தன்சொலைப் பிறஎனச் சாற்றிடல் மயலே (அ.இ.180)

என்று திசைச்சொல் குறித்துக் கூறுகிறது.

தென்னூல், தமிழகத்துப் பன்னிரு பகுதியாக விளங்கிய நாடுகளுள் அவ்வந் நிலங்களில் மிகுதியாகவும், பிற பகுதிகளில் அருகியும் வழங்குவனவும், அயல்மொழி வழங்கும் நாட்டிலிருந்து வந்து வழக்கில் இணைந்து கலந்து நிகழ்வனவும் திசைச் சொற்களாகும் (தென்.சொற்.34) என்று குறிப்பிடுகிறது.

அடுக்கு

பொருள் நிலை அடுக்கு என இலக்கணிகள் சுட்டுவதைத் தென்னூல் அச்சம், வெகுளி, உவகை, அவலம், விரைவு என பொருள் நிலைகள் சிலவற்றைக் கூறியுள்ளது. மேலும் இசைநிறைக்கு நான்கும், விரைசொல்லுக்கு மூன்றும் அடுக்கின் வரையறையாகக் கூறப்பெற, தென்னூல் பொதுவாக அனைத்து வகை அடுக்குகளும் மூன்று, நான்கு எல்லை வரை அடுக்கி வரும் எனக் கூறுகிறது (தென்.சொற்.262).

தமிழ்நூல்,

பொருள்முறை இசைநிறை அசைநிலைக் கொருசொல்
இரண்டு மூன்றுநால் முறைமை அடுக்கும் (த.நூ.301)

என்று கூறுவதும் மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது.

முத்துவீரியம் அடுக்கை, அசைநிலை, இசைநிறை என இருவகைப்படுத்துகிறது. (மு.வீ.ஒழி.94) பொருள்நிலை அடுக்கைச் சுட்டவில்லை.

தொகைச் சொற்களின் வகைகள்

தொல்காப்பியம் தொகைச்சொற்களின் பண்பினைக் (இயல்பினைக்) கூற, பிற்றை இலக்கணிகள் உருபுகள் தொக்கி வரும் புறத்தோற்றத்தை முதன்மைப்படுத்துகின்றனர்.

வேற்றுமைத்தொகை

தொல்காப்பியர் வேற்றுமைத் தொகையின் இயல்பினைக் கூற, நேமிநாதம், உருபு விரியின் உருபுத் தொகையாம் என்கிறது (நேமி.86).

நன்னூல்,

இரண்டு முதலாம் இடைஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே (நன்.363)

என்று குறிப்பிடுகிறது. முத்துவீரியம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (மு.வீ.ஒழி.96). தொன்னூல் விளக்கம், வேற்றுமைத் தொகைகளுள் இயல்பு, திரிபு, அழிவு, ஆக்கம் இவை இயைந்து வரும் என்று குறிப்பிடுகிறது (தொ.வி.91). இனிய தமிழ் இலக்கணம்,

இரண்டு முதலேழ் வேற்றுமை மட்டும்
தொக்கு வருவது வேற்றுமைத் தொகையாம் (இ.த.இ.157)

என்கிறது. பிற இலக்கண நூல்கள் ஆறு வேற்றுமை உருபுகளை மட்டுமே குறிக்கின்றன. இலகு தமிழ் ஐந்திலக்கணம்,

வேற்றுமை உருபு தொக்கின் தொகையாம் (இ.த.ஐந்.214:1)

என்கிறது. தென்னூல், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் அறுவகை உருபுகள் தம் வடிவு மறைந்திருக்க, அவ்வவ் உருபுகளின் பொருள் விளங்க இரண்டு சொற்கள் இணைந்து ஒருங்கு வருவன வேற்றுமைத்தொகை மொழியாகும் என விளக்குகிறது (தென்.சொற்.209). தமிழ்நூல்,

வேற்றுமை உருபுகள் ஆறின் பொருளுறக்
கூட்டிடும் சொற்கூடுதல் வேற்றுமைத் தொகை. (த.நூ.117)

என்று விளக்குகிறது.

உவமைத்தொகை

தொல்காப்பியம் உவமைத்தொகையின் பண்பினைக் கூற, பிற இலக்கணிகள் உவம உருபு தொக்கி வருவதே உவமத் தொகை என்றுரைக்கின்றனர். நேமிநாதம் உவமை விரியின் உவமைத் தொகையாம் என்கிறது (நேமி.86). நன்னூல்,

உவம உருபு இலது உவமத் தொகையே (நன்.366)

என்றுரைக்கிறது. மேலும் உவமைத் தொகையில் வரும் உவம உருபுகளையும் சுட்டிக் காட்டியுள்ளது (நன். 367). முத்துவீரியமும், தமிழ்க்காப்பு இயமும் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளன (மு.வீ.ஒழி.99) (த.கா.இ.436). சுவாமிநாதம், உவமைத்தொகையில் உருவம், பண்பு முதலிய விளக்கும் சொல் மறைந்து நின்று அப்பொருளை உணர்த்தும் (சு.நா.66) என்று விளக்குகிறது. இனிய தமிழ் இலக்கணம்,

உவமை யுருக்கரந் துறுவதத் தொகையே (இ.த.இ.160)

என்கிறது. தென்னூல், ஒப்புமையை உணர்த்தும் உருபிடைச் சொற்கள் மறைந்து நிற்க வினை, பயன், மெய், உரு வென்னும் பொருள்கட்குரிய உவமமும், பொருளும் (உவமேயம்) ஒருங்கிணைந்திசைத்தல் உவமத்தொகை மொழியாகும். (தென்.சொற்.213) என்று குறிப்பிடுகிறது. தமிழ்நூல், உவமானமாகவும், உவமேயமாகவும் வந்து உவமைப்பட வேண்டிய இரு பொருளின் சொற்கள் தங்கட்கு இடையே போல் என்னும் இடைச்சொல்லைப் பெயரெச்ச உருவத்தில் போல என்று விரித்துப் பொருந்துமாறு இணைந்து நிற்பது உவமைத் தொகையாம் (த.நூ.121) என்று விளக்குகிறது.

வினைத்தொகை

'வினையின் தொகுதி காலத்து இயலும்'என்று தொல்காப்பியம் வினைத் தொகையின் பண்பினைக் கூற, நேமிநாதம், காலம் தோன்ற வினை விரியின் வினைத்தொகை என்று குறிப்பிடுகிறது (நேமி.86). நன்னூல்,

காலம் கரந்த பெயரெச்சம் வினைத் தொகை (நன். 364)

என்று கால இடைநிலை மறைந்து வருதலை முதன்மைப்படுத்துகிறது. முத்துவீரியம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (மு.வீ.ஒழி.97). இனிய தமிழ் இலக்கணம், ஏவல் பகுதியுடன் வரும் காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை என்கிறது (இ.த.இ.158).

தென்னூல்,

காலம் மூன்றும் விரிவதற் கேற்ப
முதனிலைத் தொழிற்சொலும் அறுவகைப் பெயரும்
இணைந்தொருங் கியல்வன வினைத்தொகை யாகும் (தென்.சொற்.210)

என்று விளக்குகிறது. தமிழ்நூல்,

வினை முதனிலையொ(டு) இயைபெயர் வினைத்தொகை (த.நூ.124)

என்று குறிப்பிடுகிறது. தமிழ்க்காப்பு இயம், பெயரெச்சத்தின் விகுதியும், கால இடைநிலையும் மறைந்து நிற்க அதன் முதனிலையான வினையடி பெயரோடு இணையுமானால் வினைத்தொகையாகும் என்கிறது (த.கா.இ.435).

வினைத்தொகையின் முதனிலை பெயரெச்சம் என்றும், பெயர் என்றும் ஏவல் பகுதி, வினையடி என்றும் பல்வேறு கருத்துகள் இலக்கணிகளிடையே காணப்படுகின்றன. சேனாவரையர் வினையின் முதலுறுப்பு ஒரு வகை வினைப்பெயர் என்கிறார்[23]. அறிஞர் பொற்கோ சேனாவரையர் கருத்தே பொருத்தமுடையது என்கிறார்.[24]

பண்புத்தொகையின் இலக்கணம்

தொல்காப்பியம், பண்புத்தொகையின் நிலைக்களன்களையும், 'இன்னது இது' என வரும் இயல்பினையும் குறிப்பிட, நேமிநாதம் பண்பு விரியின் பண்புத்தொகை என்று குறிப்பிடுகிறது. மேலும், இரு பெயரொட்டும் பண்புத்தொகை என்கிறது (நேமி. 86). நன்னூல்,

பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்

ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை (நன். 365)

என விளக்குகிறது. இரு பெயரொட்டும் பண்புத்தொகை எனக் குறிப்பிடுகிறது.

இலக்கணக்கொத்து, பண்புத் தொகைக்குப் பல்வேறு நிலைக்களன்களைக் குறிப்பிடுகிறது (இ.கொ.98). மேலும், சில பெயரெச்சமும், வினைத்தொகையும், இருவகை உவமையும், வண்ணச்சினைச்சொல்லும் பண்புத் தொகையாக வரும் என வடநூல் மரபைக் கூறியுள்ளது (இ.கொ.99). தொன்னூல் விளக்கம் புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் தொகைகளை விளக்குகிறது. பண்புத்தொகை குறித்து,

ஐ இறும் குணப்பெயர் அ.்.கி ஈறு ஒழிதல்

ஈறுபோய் உகரம் இடையில் இ ஆதல்

ஆதிநீடல் அடி அகரம் ஐ ஆதல்

தன்ஒற்று இரட்டல் முன்னின்ற மெய் திரிதல்

இனம்மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே (தொ.வி.92)

என்றுரைக்கிறது. இனிய தமிழ் இலக்கணம், 'ஆகிய' என்னும் பண்புரு தொக்கி, நிறம், சுவை, அளவு, உரு ஆகியவற்றை விளக்கும் எனவும், ஒரு பெயருக்கே இரு பெயர் வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம் என்று கூறுகிறது (இ.த.இ.159). தென்னூல், தொல்காப்பியத்தைப் பின்பற்றி பண்புத்தொகையை விளக்குவதுடன் இருபெயரொட்டுக்கு இலக்கணம் கூறுகிறது.

இருபெயர் ஒருபொருள் சுட்டலும் அதுஅதை

இருபெய ரொட்டென இயம்புவர் புலவர் (தென்.சொற்.212)

என்று குறிப்பிடுகிறது. தமிழ்நூல், பண்புத்தொகையின் நிலைக்களன்களாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவனவற்றுள் சுவையை நீக்கிப் பதிலாக தன்மை என்னும் நிலைக்களனைக் குறிப்பிடுகிறது (த.நூ.122).

மேலும், ''ஆகிய என்னும் சொல்லையே அனைத்திற்கும் இட்டு விரித்தல் உரையாசிரியர்களின் பொருந்தா முடிபு. நன்னூலாரும் 'பண்பை விளக்கும் மொழி தொக்கன' என இக்கருத்தைப் பற்றியே கூறியுள்ளார்''[25] என்று சரவணத் தமிழனார் தம் உரையில் குறிப்பிடுகிறார்.

மேலும், இருபெயரொட்டுப் பண்புத் தொகை குறித்து,

பொதுப்பெயர் தனிப்பெயர் இரண்டும் பொருந்தின்

இருபெயரொட்டுப் பண்புத் தொகையெனல் (த.நூ.123)

என்று தமிழ்நூல் குறிப்பிடுகிறது. தமிழ்க் காப்பு இயம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.435).

உம்மைத்தொகையின் இலக்கணம்

உம்மைத்தொகை ஆறு நிலைகளில் வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிட, நேமிநாதம் உம்மை விரியின் உம்மைத் தொகை என்கிறது (நேமி. 86). நன்னூல் நான்கு நிலைக்களன்களைக் குறிப்பிடுவதை,

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்

எனும்நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை (நன்.368)

எனும் நூற்பா விளக்கும்.

முத்துவீரியம் (மு.வீ.ஒழி.100), சுவாமிநாதம் (சு.நா.66), இலகுதமிழ் ஐந்திலக்கணம் (இ.த.ஐந்.304), ஆகியன நன்னூலைப் பின்பற்றி உம்மைத் தொகையை விளக்குகின்றன.

தொன்னூல் விளக்கம் புணர்ச்சி விதி அடிப்படையில், எண்ணுப்பெயர்கள் தொகையாக வரும்போது, வருமொழி உயிர் எழுத்து வரின் ஒரு அமைப்பையும் (ஓராயிரம்) மெய்வரின் பிறிதொரு அமைப்பையும் பெறும் என்கிறது (ஒரு பொருள்) (தொ.வி.94). இனிய தமிழ் இலக்கணம்,

உம்மையற் றளவை யுரைக்குமத் தொகையே (இ.த.இ.161)

என்று குறிப்பிடுகிறது. தென்னூல், பலவகைப் பொருட்பெயர், எண்ணுப்பெயர், அளவைப்பெயர்கள் இரண்டும் பலவும் செவ்வெண் போலத் தொடர்ந்து வருவன உம்மைத் தொகையாகும் என விளக்குகிறது (தென்.சொற்.214). தமிழ்நூல், உம்மைச்சொல் அடுக்கி வருவது உம்மைத்தொகை என்கிறது (த.நூ.119). தமிழ்க்காப்பு இயம்,

அளவைப் பெயரும் பல்வகைப் பெயரும்

உம்தொகத் தொகைபெறின் உம்மைத் தொகையே (த.கா.இ.437)

என்று குறிப்பிடுகிறது.

அன்மொழித் தொகையின் இலக்கணம்

பண்புத்தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத்தொகை ஆகிய மூன்று தொகைகளையும் நிலைக்களமாகக் கொண்டு அவற்றின் ஈற்றில் அமைந்து தன் பொருளை உணர்த்துவது அன்மொழித் தொகையாகும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.416).

பின்வந்த இலக்கணிகள் அனைவரும் ஐந்தொகை மொழி மேல் பிற தொகல் அன்மொழி எனக் குறிப்பிடுகின்றனர் (நேமி.87, நன். 369, இ.வி.341, மு.வீ.ஒழி.101, சு.நா.66, இ.த.இ.162, இ.த.ஐந்.305, தென்.சொற்.216, த.நூ.125, த.கா.இ.439). தொல்காப்பியம் மூன்று நிலைக் களன்களை மட்டுமே சுட்டியமை குறித்து சூ.இன்னாசி, "தமிழ்ப் பெரும்புலவர் ஆபிரகாம் அருளப்பன், 'உவமத் தொகையை 5-ஆம் வேற்றுமைப் பொரூஉப் பொருளாய்க் கொள்ளலாம் என்பதாலும் வினைத்தொகைக்கு இருபெயரொட்டாகும் இயல்பு இன்மையானும் இவ்விரு தொகைகளையும் தொல்காப்பியர் வேற்றுமை, பண்பு, உம்மைத்தொகைகளோடு சேர்த்துக் கூறாது போயினர் போலும்' என்பர்"[26] என்று எடுத்துக்காட்டுகிறார்.

அறுவகை இலக்கணம் அன்மொழித் தொகை குறித்து,

> **ஆல் உடைக் கடவுளை ஆல் என்று அறைதலும்**
> **முருகு நீங்கா முழுதுணர் புலவனை**
> **முருகுஎனப் பகர்தலும், மொய்குழல் வனிதையை**
> **மொய்குழல் என்றலும், அன்னவை பிறவும்**
> **அன்மொழி என்பார் அளவிலார். (அ. இ. 253: 1-5)**

என்று குறிப்பிடுகிறது.

அன்மொழித்தொகையை ஒரு தொகையாகக் கொள்ள இயலாது என்ற கருத்தை முன் வைக்கிறார் ஏ.ஆதித்தன். அவர், "தொல்காப்பியம் தொகைக்குரிய இலக்கணத்தினைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்த போதிலும் அது அன்மொழித் தொகையினை ஒருவகைத் தொகையாகக் கருதுவது ஏற்புடையதாக அமையவில்லை. பிற தொகைச்சொற்கள் பொருண்மை நிலையில் மாற்றம் பெற்று அன்மொழியாகச் செயல்படுமே அன்றித் தனியொரு வேறுபட்ட தொகையாக அமையப் பெறுதலில்லை"[27] என விளக்குகிறார். எனினும் இலக்கணிகள் அனைவருமே அன்மொழித் தொகையை தொகைவகையுள் ஒன்றாகவே குறிப்பிட்டுள்ளனர்.

தொகைக்கு விளக்கம் தருவதில் தொல்காப்பியம் பொருளுக்குச் சிறப்பளிக்க, நன்னூல் முதலான பிற இலக்கண நூல்கள் உருபுகள் தொக்கு வருதலாகிய புறநிலை வடிவத்திற்குச் சிறப்பளித்துள்ளமை மரபு மாற்றமாகும்.

தொகைகளில் பொருள் சிறக்கும் இடம்

தொகைகளில் பொருள் சிறக்கும் இடங்களாக நான்கனைத் தொல்காப்பியம் குறிப்பிட அவிநயம் முன்மொழி, பன்மொழி ஆகிய இரு இடங்களை மட்டுமே சுட்டுவதை, “கால்வாய், அடைகடல் என்பன வாயை உடைய கால், கடலினது அடையென முன்மொழிப் பொருள் குறித்தன. வேங்கைப்பூ, கருங்குதிரை என்பன பன்மொழிப் பொருள் கருதின. இவை ஈரிடத்திற்கும் அவினயத்திற் காட்டியவை” (அவி.36) என்னும் உரைப்பகுதி விளக்கும்.

முற்றுச்சொற்களும், அவற்றின் பாகுபாடுகளும்

முற்றுச்சொற்கள் குறித்துத் தொல்காப்பியம் மூன்று கருத்துகளை முன் வைக்கிறது.

1. வினைமுற்றாவது தனக்கே சிறப்புரிமை பூண்ட இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலத்தையும் காட்டும்.
2. தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்று இடங்களுக்கும் உரிமை பூண்டு வரும்.
3. உயர்திணை, அஃறிணை, விரவுத் திணை ஆகிய மூவகைப் பொருள்கள் தோறும் தெரிநிலை வினை, குறிப்புவினை என்னும் இவ்விரண்டாய் வரும். இவ்வறு வகைச் சொற்களையும் வினைமுற்றுச் சொல் என்பர் என்று குறிப்பிடுகிறது (தொல்.சொல். 427).

நன்னூல் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப்பெயர் அடிப்படையில் வினைமுற்றை விளக்குகிறது.

பொது இயல்பு ஆறையும் தோற்றிப் பொருட்பெயர்
முதல்அறு பெயர்அலது ஏற்பில முற்றே. (நன். 323)

என விளக்குகிறது. மேலும், முற்றின் பாகுபாடுகளாக,

ஒருவன்முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்
ஒருமை பன்மையைத் தன்மை முன்னிலையிலும்
முக்கா லத்தினும் முரண முறையே

மூவைந்து இருமூன்று ஆறாய் முற்று

வினைப்பதம் ஒன்றே மூஒன் பானாம் (நன். 324)

என்று குறிப்பிடுகிறது.

தமிழ்க் காப்பு இயம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (த.கா.இ.299,300). இலக்கண விளக்கம்,

மற்றுச்சொன் னோக்கா மரபின வனைத்து

முற்றி நிற்பன முற்றியன் மொழி (இ.வி.230)

என்று குறிப்பிடுகிறது. இலக்கணக்கொத்து வினைமுற்றுப் பெயர் குறித்து பின்வரும் செய்திகளைக் கூறுகிறது.

1. வினைமுற்றுப் பெயர் எழுவாய், செயப்படுபொருள், கருவி, இடம், தொழில் பெயர் என உருபு ஏலாமலேயே அப்பொருட்கண் வரும்.
2. மேலும் எட்டு வேற்றுமை உருபுகளை ஏற்று அவ்வெண் வேற்றுமைப்பொருளாக வரும்
3. ஈற்றயல் திரிதலும்,
4. பெயரெச்ச மாதலும், வினையெச்சமாதலும் உண்டு.
5. வினையாலணையும் பெயர் ஈறு இகரமாதலும் உண்டு.
6. அங்ஙனம் ஈறு இகரமாகிய வினை முற்றுப் பெயர்கள் வினைமுதல், செயப்படுபொருள், கருவி, இடம், வினையெச்சம் என்பனவாக வருதலும் உண்டு. வினைமுற்றுப்பெயர் இன்னும் பலவகைப்படுதலும் உண்டு (இ.கொ.83) என்று விளக்குகிறது.

சுவாமிநாதம் இலக்கணக்கொத்தையும், நன்னூலையும் பின்பற்றி முற்றுச்சொல்லை விளக்குகிறது (சு.நா.49). இலகு தமிழ் ஐந்திலக்கணம் தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுகளைத் தனித்தனியே விளக்கியுள்ளது (இ.த.ஐந்.249,250). தமிழ்நூல்,

முற்றெனப் படுவது ஒருவினை தன்பொருள்

முற்றி ஐந்தொகை கொண்டு முடிவதே (த.நூ.87)

என்று விளக்குகிறது.

மரபு வளர்ச்சி

மொழிபுணர் இயல்பு (பொருள்கோள்)

செய்யுளிடத்துச் சொற்கள் இயல்பாக அல்லாமல் மாறியும் நிற்கும். அம்மொழிகள் தம்முள் புணர்ந்து நிற்கும் முறை மொழிபுணர் இயல்பு என்று கூறப்படும். இம்மொழிபுணர் இயல்பின் வகைகளைத் தொல்காப்பியம்,

நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான்கு என்ப மொழிபுணர் இயல்பே (தொல்.சொல்.404)

என்று கூறுகிறது.

அவிநயம், செய்யுளிடத்து பொருள் அறியும் முறையைக் கூறுவதால் பொருள்கோளை யாப்பதிகாரத்தில் உரைக்கிறது. ‘‘நிரனிறை, சுண்ணம், அடிமறிமொழிமாற்று, அடிமொழி மாற்று என்னும் இந்நான்கினோடும் பூட்டுவில், புனல்யாறு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டு கூட்டு என்னும் இவ்வைந்து செய்யுட் பொருள்கோளும் உறழ இருபதாம்’’ என்று யாப்பருங்கல விருத்தியுரையில் (யா.வி.95) கூறப்படுவதை ச.வே.சு. எடுத்துக்காட்டியுள்ளார் (அவி.106). நேமிநாதம் ஒன்பது வகைப் பொருள்கோள்களைச் சுட்டுவதை,

அடிமொழி சுண்ணம் நிரனிறை விற்பூட்டு
அடிமறி யாற்று வரவும் - துடியிடையாய்
தாப்பிசை தாவின் மொழிமாற்று அளைமறி
பாப்புப் பொருளோடுஒன் பான் (நேமி.92)

என்னும் நூற்பா விளக்கும். நன்னூல் பொருள்கோளை எண்வகைப்படுத்துகிறது.

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டு கூட்டு
அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே (நன். 411)

என்று குறிப்பிடுகிறது. இலக்கணவிளக்கம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி. 361). இலக்கணக்கொத்து நேமிநாதத்தைப் பின்பற்றி பொருள்கோளை ஒன்பது வகைப்படுத்துகிறது. பொருத்தமில் புணர்ச்சியை விளக்குமிடத்து,

ஆற்றொழுக்கு அடிமறி மாற்று இரண்டு அல்லா
எழுவகைப் பொருள்கோள் (இ.கொ.108:1-2)

என்பதிலிருந்து இது நேமிநாதத்தோடு உடன்பட்டுள்ளமை புலனாகும். தொன்னூல் விளக்கம் பொருள்கோளை மறிநிலை அணி போல்வன என்று கூறி அணியதிகாரத்தில் விளக்கியுள்ளது. நன்னூலைப் பின்பற்றி எண்வகைப் பொருள்கோள்களை விளக்கியுள்ளது (தொ.வி.305-313). சுவாமிநாதமும், இனிய தமிழ் இலக்கணமும் நன்னூலைப் பின்பற்றி எண்வகைப் பொருள்கோள்களைக் குறிப்பிடுகின்றன (சு.நா.69, இ.த.இ.178). இலகு தமிழ் ஐந்திலக்கணம், நேமிநாதத்தைப் பின்பற்றி ஒன்பதுவகைப் பொருள்கோள்களைக் குறிப்பிடுகிறது (இ.த.ஐந்.637). இவ்வாறு ஒன்பது வகையாகக் கூறிவிட்டு பின்னர் இலக்கிய இன்பம் நுகர எண்வகைப் பொருள்கோள்கள் உதவும் என்று கூறுவது முரண்பாடாக உள்ளது (இ.த.ஐந். 650). தென்னூல், அடிமறி மாற்று, மொழிமாற்று ஆகிய இரண்டையும் நீக்கி தொல்காப்பியம் குறிப்பிடும் சுண்ணம் என்பதைச் சேர்த்து எழுவகைப் பொருள்கோள்களைக் குறிப்பிடுவதை,

ஆற்றொழுக்கு அளைமறிப் பாப்பு நிரல்நிறை
பூட்டுவில் தாப்பிசை சுண்ணம் அவையலாக்
கொட்டுகூட் டென்பவை பொருள்கோள் வகையாம். (தென்.சொற்.277)

என்று குறிப்பிடுகிறது. தமிழ்நூல்,

அ.்.து
ஆற்றின் ஓட்டம், கொண்டுகூட் டிரண்டே (த.நூ.431)

என்று இரு வகைக்குள் அடக்குகிறது.

பொருள்கோள் வகைகள்

நிரல்நிறைப் பொருள்கோள்

நிரல்நிறைப் பொருள்கோளாவது, வினையாகவும், பெயராகவும் அமைந்த சொல்லை (எழுவாயை) ஓரிடத்திலும் அது கொண்டு முடியும் பொருளை (பயனிலையை) மற்றோரிடத்திலும் வரிசைப்பட நிறுத்துவதாகும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (தொல்.சொல்.405). நன்னூல், இக்கருத்தை ஏற்று,

பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ முறையினும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே. (நன். 414)

என்று குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.364). தொன்னூல் விளக்கம் (தொ.வி.308), சுவாமிநாதம் (சு.நா.69), (இ.த.ஐந்.638), நன்னூலைப் பின்பற்றி நிரனிறைப் பொருள்கோளை விளக்கியுள்ளன.

சுண்ணப் பொருள்கோள்

இயல்பாக அமைந்த இரண்டடிக்குள் இடம்பெற்ற எட்டுச் சீர்களும் ஒரு முறையில் நிற்காமல் பொடி போலச் சிதறிக் கிடக்கும். அவற்றை ஆராய்ந்து பொருள் பொருந்துமாறு கூட்டிக் கொள்வதே சுண்ணப் பொருள்கோளாகும் (தொல்.சொல்.406) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"சுண்ணம் போலச் சிதராய்ப் பரந்து கிடத்தலிற் சுண்ணம் என்றார்"[28] என்று சேனாவரையர் குறிப்பிடுகிறார்.

சுண்ணப்பொருள்கோள் ஈரடி எண் சீருக்குள் வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட, செ.வை.சண்முகம், "சுண்ணம் என்பது பொடி என்பதால் பல அடிகளைத் தாண்டி சொற்கள் குறிப்பாக விளிச்சொற்கள் வருவதைக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது நற்றிணை 81 வது பாடலில் 5 வது அடியான 'பூண்கதில் பாக நின்தேரே பூண் தாழ்' என்பது 'பாக நின்தேரே பூண்கதில்' என்று முதல் அடியாகக் கொண்டே பொழிப்புரைக்கப்படுகிறது. அகநானூறு 16 வது பாடலில் 'மகிழ்ந' என்ற விளிச் சொல் 17 வது அடியில் வந்துள்ளது. அதுவே பொழிப்புரையில் முதல் சொல்லாக அமைகிறது. பொடி காற்றில் பரந்து இடம் மாறுதல் போலப் பல அடி தாண்டி, ஒரு சொல்லின் முன்னிறுத்தம் செய்வதே சுண்ணம் என்று கருதத் தகுந்தது"[29] என்று குறிப்பிடுகிறார்.

அடிமறிப் பொருள்கோள்

அடிமறிப் பொருள்கோள் என்பது ஒரு பாடலில் சீர்கள் உள்ளவாறு இருப்ப, அடிகள் தம்முள் மாற்றி அமைப்பினும் ஓசையும், பொருளும் மாறாது வருவதாகும் என்பதை,

> **அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து**
> **சீர்நிலை திரியாது தடுமா றும்மே (தொல்.சொல்.407)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இதற்கு உரையாசிரியர்கள் 'மாறாக் காதலர் மலைமறந் தனரே' என்ற பாடலை உதாரணம் காட்டுவர். இப்பாடலில் எல்லா அடிகளும் முறை மாற்றிக் கொள்வது போல் அமைந்துள்ளமையால் இப்பாடலை அடிமறிப் பொருள்கோளுக்கு உவமை கூறியமையை மறுத்து, செ.வை.சண்முகம், "உரையாசிரியர்கள் காட்டிய உதாரணம் போல ஒரு பாட்டுக்குள் எல்லா அடிகளும் முறை மாற்றிக் கொள்வது இலக்கியத்தில் காணப்படாத ஒன்று. எனவே பாட்டின் ஒரு அடி முழுவதும் மொழி மாற்றிக்

கொள்வதே இலக்கியத்தில் காணப்படுவதால் அடி முழுவதும் அதுவும் ஒரு அடியோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளோ முழுமையும் மொழி மாற்றிப் பொருள் கொள்வதே அடிமறிமாற்று என்று கருதலாம்''[30] என்று குறிப்பிடுகிறார்.

நன்னூல் அடிமறிப் பொருள் கோள் குறித்து,

ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்
யாப்பீறு இடைமுத லாக்கினும் பொருள்இசை
மாட்சியும் மாறா அடியவும் அடிமறி (நன்.419)

என்று விளக்குகிறது.

இலக்கண விளக்கம், தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.369).

தொன்னூல் விளக்கம் (தொ.வி.313), சுவாமிநாதம் (சு.நா.69), (இ.த.ஐந்.647), நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

மேலும், இலகு தமிழ் ஐந்திலக்கணம் அடிமறிப் பொருள்கோளை ஏற்புழிக் கூட்டும் அடிமறி, பொருளிசை மாறா அடிமறி என வகைப்படுத்துகிறது (இ.த.ஐந்.648,649).

மேலும்,

பொருள்தெரி மருங்கின்
ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியும்
தோற்றமும் வரையார் அடிமறி யான. (தொல்.சொல்.408)

என்பதன் மூலம் ஈற்றடியின் இறுதிச்சீர், ஈற்றயல்கண் திரிந்து பொருள் தருதலையும் நீக்க மாட்டார்கள் என்று குறிப்பிடுகிறது தொல்காப்பியம். சேனாவரையர் ஈற்றடி திரிந்து பொருள் தருவதாகக் கொள்வர். " 'அஞ்சுவல் யான்' என இறுதிச்சீர் ஈற்றயற் சீர்வயின் சென்று திரிந்ததென்று உதாரணம் காட்டினாரால் உரையாசிரியர் எனின், 'யானஞ்சுவல்' என நின்றாங்கு நிற்பவும் பொருள் செல்லும் ஆதலின், இவ்வாறு திரிதல் பொருந்தாமையின் அவர்க்கு அது கருத்தன்றென்க''[31] என்று கூறி மறுக்கிறார்.

மொழி மாற்றுப் பொருள்கோள்

மொழி மாற்றுப் பொருள்கோள் குறித்துத் தொல்காப்பியம்,

மொழிமாற்று இயற்கை
சொல்நிலை மாற்றிப் பொருள்எதிர் இயைய

முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல் (தொ.சொல்.409)

என்று கூறுகிறது. அதாவது சுண்ணம் இரண்டடிக்குள் வரும் இதற்கு வரையறை இல்லை. எனவே ஒரு செய்யுளில் ஒரு இடத்தில் உள்ள சொல்லை வேறொரு இடத்தில் உள்ள சொல்லுடன் கூட்டிப் பொருள் கொள்வது மொழிமாற்றாகும்.

சேனாவரையர், "நிரனிறையும், சுண்ணமும் மொழிமாற்றாதல் ஒக்குமாயினும், நிரனிற்றலும், அளவடியெண்சீரைச் சுண்ணமாகத் துணித்தலுமாகிய வேறுபாடுடைமையான் அவற்றைப் பிரித்து அவ்வேறுபாட்டாற் பெயர் கொடுத்து வேறிலக்கணமில்லாத மொழி மாற்றை மொழிமாற்றென்றார்"[32] என்று விளக்குகிறார்.

தொல்காப்பியக் கருத்துப்படி ஒரு செய்யுளில் ஒரு சொல் எந்த இடத்தில் வேண்டுமானாலும் சென்று பொருள் கொள்ளும் என்று கூற, நன்னூல் ஓரடிக்குள் வழங்குவது மொழி மாற்று என்று கூறுகிறது.

ஏற்ற பொருளுக்கு இயையு மொழிகளை
மாற்றி ஓரடியுள் வழங்கல் மொழி மாற்றே (நன்.413)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் இந்நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.363).

தொன்னூல் விளக்கம் (தொ.வி.307), சுவாமிநாதம் (சு.நா.69), (இ.த.ஐந்.641) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

நன்னூல் கூறும் பொருள்கோள் வகைகள்

நன்னூல், தொல்காப்பியம் கூறுவனவற்றுள் நிரனிறை, அடிமறிமாற்று, மொழிமாற்று ஆகியவற்றைக் கூறுகிறது. சுண்ணப் பொருள்கோளை மொழிமாற்றினுள் அடக்கிக் கூறுகிறது. இவை தவிர ஆற்றொழுக்கு, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறி பாப்பு, கொண்டு கூட்டு ஆகியவற்றைப் புதிதாகச் சேர்த்துள்ளது. பிற்றை இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றியுள்ளனர்.

ஆற்றுநீர்ப் பொருள்கோள்

நன்னூல் ஆற்றுநீர்ப் பொருள்கோள் குறித்து,

மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்றற்று ஒழுகும.்.து யாற்றுப் புனலே (நன். 412)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் (இ.வி.362), தொன்னூல் விளக்கம் (தொ. வி. 306), சுவாமிநாதம் (சு.நா.69), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ.த.ஐந்.642), தமிழ்நூல் (த.நூ.432) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

பூட்டுவில் பொருள்கோள்

பூட்டுவில் பொருள்கோள் குறித்து நன்னூல்,

எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்
பொருள் நோக்குடையது பூட்டுவில் ஆகும். (நன்.415)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் இந்நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.365).

தொன்னூல் விளக்கம் (தொ.வி.309), சுவாமிநாதம் (சு.நா.69), (இ.த.ஐந்.643) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

தாப்பிசைப் பொருள்கோள்

தாப்பிசை குறித்து நன்னூல்,

இடைநிலை மொழியே ஏனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை (நன்.416)

என்று விளக்குகிறது.

இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.366) தொன்னூல் விளக்கம் (தொ.வி.310), சுவாமிநாதம் (சு.நா.69), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ.த.ஐந்.644) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

அளைமறி பாப்புப் பொருள்கோள்

ஒரு செய்யுளின் இறுதியில் நின்ற சொல், அதன் இடையிலும், பின்னர் முதலிலும் சென்று இயைந்து பொருள் தருவது அளைமறிப்பாப்புப் பொருள்கோள் என்பதை,

செய்யுள் இறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே (நன்.417)

என்று கூறுகிறது நன்னூல்.

இலக்கணவிளக்கம் இந்நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.367). தொன்னூல் விளக்கம் (தொ.வி.311), சுவாமிநாதம் (சு.நா.69), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ.த.ஐந்.645) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

கொண்டு கூட்டுப் பொருள்கோள்

கொண்டு கூட்டுப் பொருள்கோள் குறித்து நன்னூல்,

யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே. (நன்.418)

என்று குறிப்பிடுகிறது.

இலக்கண விளக்கம் இந்நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.368). தொன்னூல் விளக்கம் (தொ.வி.312), சுவாமிநாதம் (சு.நா.69), இலகு தமிழ் ஐந்திலக்கணம் (இ.த.ஐந்.646) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

தமிழ்நூல் ஆற்றுநீர்ப் பொருள்கோளைத் தவிர மற்றைய பொருள்கோள்கள் அனைத்தையும் கொண்டு கூட்டில் அடக்குகிறது.

சொல்லும் தொடரும் எழுத்தும் கருத்துச்
செல்லும் வகையான் ஓரடி பலவடி
முன்பின் கொண்டு கூட்டல் பலவே (த.நூ.433)

என்கிறது.

தெய்வச்சிலையார், “ஆற்றொழுக்கும், அளைமறிபாப்பும் திரிவின்றி பொருள்படுதலின் இயல்பாம், கொண்டு கூட்டு சுண்ணமொழி மாற்றுள் அடங்கும். பூட்டுவில் பொருள்கோள் மொழிமாற்றுள் அடங்கும். தாப்பிசைப் பொருள்கோள்கண் முன் ஒருசொல் வருவிக்க வேண்டுதலின், இது, ‘பிரிநிலை வினை’ (எச்ச. 20) என்னுஞ் சூத்திரத்துள் அடங்கும்”[33] என்று கூறுகிறார்.

எனினும், அளைமறிபாப்பு ஈற்றில் நின்ற சொல் இடையிலும், முதலிலும் சென்று பொருள்கொள்வதால் அதை இயல்பானதாகக் கொள்ளுதல் பொருந்தாது.

மேலும், சுண்ண மொழி மாற்று என்பது ஈரடிக்குள் பொருள் கொள்வதாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

அடுக்கின் வகைகள்

அடுக்கின் வகைகளைத் தொல்காப்பியம் மூவகைப்படுத்த (தொல்.சொல்.411)

இலக்கணக்கொத்து அடுக்கின் வகைகளை,

பெயர்முற்று எச்சமொடு உருபுஐந்து அடுக்கே
இரட்டைக் கிளவியோடு இருமூன்று அவைதாம்
ஒன்றுபல அடுக்கல், வேறு பலஅ டுக்கல்
விதியாய் அடுக்கல் மறையாய் அடுக்கல்
விதிமறை கூடி விரவி அடுக்கல்
பலசொல் கூடிஓர் பொருளாய் அடுக்கல்
பலபொருட் கேஒரு சொல்லாய் அடுக்கல்
இருவகை தமக்கும் பொதுவாய் அடுக்கல்
இயல்பாய் அடுக்கல் விகாரமாய் அடுக்கல்
ஆதியாப் பலவும் அறைகுவர் புலவர் (இ.கொ.120)

என வகைப்படுத்துகிறது.

அசைநிலை அடுக்கிற்கு வரையறை

தொல்காப்பியம் அசைநிலை அடுக்கு எத்தனை முறை அடுக்கி வரும் என்பதைக் குறிப்பிடவில்லை. நேமிநாதம் அசைநிலை அடுக்குகள் இரண்டிற் குறைந்து அடுக்கி வருதல் இல்லை என்கிறது (நேமி.74).

நன்னூல் (நன்.395), இலக்கண விளக்கம் (இ.வி.346), சுவாமிநாதம் (சு.நா.67), ஆகியனவும் அசைநிலை அடுக்கு இருமுறை அடுக்கி வரும் என்கின்றன. குறைந்தபட்சம் இரு முறையேனும் அடுக்கி வருவதுதான் அடுக்குச்சொல்லின் இயல்பு ஆதலால் தொல்காப்பியர் அதனைக் கூறாது விடுத்தனர் எனக் கருத இயலும்.

தொகைமொழி – வகைகள்

தொல்காப்பியம் முதலான நூல்கள் பலவும் தொகை மொழிகளை ஆறாகப் பாகுபடுத்த, இலக்கணக் கொத்து அவற்றுடன் ‘படுதொகை’ என்னும் புதுவகை தொகையைக் கூறுவது மரபு வளர்ச்சியாகும் (இ.கொ.79).

படுசொல் தொக்கு வருவதைக் கொண்டு படுதொகை என்பதைக் கூறினாலும், “அறுதொகைக்கு இப்படுதொகை இணையின்று”[34] என்றும் சாமிநாததேசிகர் தம் உரையில் சுட்டுகிறார்.

முன்மொழி வகைகள்

நேமிநாதம் முன்மொழியைக் கால முன்மொழி, இட முன்மொழி என இருவகைப்படுத்துகின்றமை மரபு வளர்ச்சியாகும் (நேமி.88).

மரபு வீழ்ச்சி

இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியவை செய்யுள் ஈட்டச் சொற்கள் குறித்துப் பேசவில்லை. இயற்சொல்லும், திரிசொல்லும் இயல்பாக வழக்கிலும், செய்யுளிலும் வழங்கும் சொற்கள் ஆதலால் அவற்றைத் தனித்துக் கூற வேண்டியதில்லை என்பதாலும் பிற மொழிகளை ஏற்கா தமிழுணர்வு காரணமாக திசைச் சொல்லையும், வட சொல்லையும் கூறாது விடுத்தனர் எனக் கருத இடமுண்டு.

நேமிநாதம், செய்யுளுக்குரிய சொற்களை விரித்துரைக்கவில்லை. தொல்காப்பியம் முதலான நூல்கள் செய்யுளுக்குரிய சொற்களாக நான்கனைக் குறிப்பிட, தொன்னூல் விளக்கம் இயற்சொல்லையும், திரிசொல்லையும் மட்டுமே கூறியுள்ளது (தொ.வி.42). திசைச்சொல், வடசொல்லைக் கூறவில்லை. சிறப்பின்மை கருதி அவற்றைக் கூறாது விடுத்தார் எனக் கருத இயலும். சு.அழகேசன் மற்றும் த. வேல்மயில் ஆகியோர் இது குறித்து, “ ‘கொடுந்தமிழ்’ முதலிய சொல் செந்தமிழோடு விராய வழி அவற்றைத் திசைச்சொல் என்றும் ஆரியச்சொல் தமிழ்நடை பெற்றுச் செந்தமிழோடு தழுவப்படுமாயினும் செந்தமிழ்ச் சொல்லோடு தொகைகோடல் ஒருதலையன்று என்பது தோன்ற அணுகாவழி என்று முறை தெரிவித்து ஓதினார் என்க” (நன்.270.சங்.உரை) என்ற அவரது கூற்றின்படி இயற்சொல், திரிசொல் ஆகிய இரண்டுமே சிறப்பு உடையது என்றும் மற்றது அவ்வளவு சிறப்பு உடையதல்ல என்ற கருத்தும் வெளிப்படுகிறது. இந்த உணர்வின் பிரதிபலிப்பாக வீரமாமுனிவர் இயற்சொல், திரிசொல் என்ற இரண்டை மட்டும் சேர்த்து இருக்கலாம் என்ற கருத்தும் வெளிப்படுகிறது”[35] என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது.

தொன்னூல் விளக்கம் திசைச் சொல்லையும், வட சொல்லையும் நீக்கியுள்ளது. அறுவகை இலக்கணம் திசைச்சொல் தவிர்ந்த பிறவற்றைக் குறிப்பிடவில்லை.

முத்துவீரியம், அறுவகை இலக்கணம், தமிழ்க் காப்பு இயத்தில் பொருள்கோள் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை.

த, ந, நு, எ என்பவற்றை முதலெழுத்தாக உடைய உறவுப்பெயர்கள் பகுதி, விகுதி எனப் பிரித்துப் பொருள் கொள்வதற்கு உரியவை அல்ல (தொல்.சொல்.410) என்பதைப் பிற்றை இலக்கணிகள் குறிப்பிடவில்லை.

அசைநிலை அடுக்குகளாகிய கண்டீர், கொண்டீர், சென்றது, போயிற்று ஆகிய நான்கு வினைச் சொற்களும் ஈற்றில் வினா எழுத்தோடு பொருந்தி நிற்கும்போது வினைச்சொல் பொருண்மையும், வினாச்சொல் பொருண்மையும் இன்றி அசைநிலையாய் வரும் (தொல்.சொல்.425) என்பதைப் பிற்றை இலக்கணிகள் குறிப்பிடவில்லை.

கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என வரும் முன்னிலைச்சொற்கள் முன்னிலைப்பொருளை உணர்த்தாதவிடத்து அசைச்சொற்களாய் வரும் என்னும் தொல்காப்பியக்கருத்தை (தொல்.சொல்.425) பிற்றை இலக்கணிகள் குறிப்பிடவில்லை.

தொகைகளில் பொருள் சிறக்கும் இடங்களை இலக்கணக் கொத்து, இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தென்னூல், தமிழ்நூல் ஆகியன சுட்டிக்காட்டவில்லை. அறுவகை இலக்கணத்தில் அன்மொழித்தொகை தவிர்ந்த பிற தொகை மொழிகள் குறித்துப் பேசப்படவில்லை. தொகை மொழிகள் பிளவுபடாமல் ஒரு சொல்லாய் நடக்கும் தன்மையுடையன என்பதை இலக்கணக்கொத்து, இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியன சுட்டிக்காட்டவில்லை. உயர்திணையிடத்து உம்மைத்தொகை பலர்பால் ஈறு கொண்டு முடியும் என்பதை இலக்கணக்கொத்து, சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியன சுட்டிக்காட்டவில்லை.

வழக்கால் பொருள் தரும் குறிப்பு மொழிகளை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் பதிவு செய்யவில்லை.

முற்றுச்சொல்லின் இலக்கணம் குறித்து தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல் ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை. எவ்வகையானும் பொருள் முற்றி வருகின்ற வினைச்சொற்கள் எல்லாம் முற்றுச்சொல் வகைக்குள் அடங்கும் என்னும் கருத்தை இலக்கணக் கொத்து தவிர்ந்த பிற நூல்கள் பின்பற்றவில்லை. வினைமுற்றுக்கள் பல அடுக்கி வரினும் பெயர் கொண்டே முடியும் என்பதை இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

நேமிநாதம், இலக்கணக்கொத்து, அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் தமிழ்நூல் ஆகியவற்றில் எச்சச்சொற்கள் பற்றிக் கூறப்படவில்லை. இலக்கணவிளக்கம், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் எச்சங்களைத் தனித்தனியே விளக்கவில்லை.

இலக்கண வரையறைக்கு உட்படாத வழக்குகள் குறித்து இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

செய்யாய் என்னும் வாய்ப்பாட்டுச் சொல் ‘செய்’ என நிற்றலும் உண்டு என்பதை இலக்கண விளக்கம், முத்துவீரியம், தமிழ்க்காப்பு இயம் தவிர்ந்த பிற நூல்கள் கூறவில்லை.

இடக்கர்ச் சொல்லை தகுதி வழக்கில் ஒன்றாக இலக்கணிகள் குறிப்பிடுகின்றனர். இடக்கர்ச் சொல்லுக்குப் பதிலாகப் பிறிதொரு சொல்லைக் கூற வேண்டும் என்பதையும், மருவி வரும் இடக்கர்ச் சொற்களை நீக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் (தொல்.சொல்.443) என்பதையும் பிற இலக்கணிகள் சுட்டிக் காட்டவில்லை.

இரப்போருக்குரிய சொற்கள் குறித்து நன்னூல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை. மேலும், ‘கொடு’ என்னும் சொல் படர்க்கை இடத்திற்குரிய சொல் ஆயினும் கூறுவோன் தன்னை மற்றவர் போலக் கூறும் குறிப்பால் தன்மை இடத்திற்கும் வரும் (தொல்.சொல்.448) என்பதை யாதொரு நூலும் குறிப்பிடவில்லை.

முன்னிலை முன்னர் ஈயும், ஏயும் அம்முன்னிலையின் இயல்பிற்கேற்ற மெய்யெழுத்தில் ஏறி வரும் என்பதை இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், தமிழ்நூல் ஆகியவை குறிப்பிடவில்லை.

காலத்திற்கேற்ப புதிய சொற்கள் உருவாவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் கருத்தை நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக்காட்டவில்லை.

குறைச்சொல் கிளவி குறித்து நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

இடைச்சொற்கள் எல்லாம் வேற்றுமைச் சொற்களே என்பதையும் உரிச்சொல்லிலும் வேறுபடுத்துவன உண்டு என்பதையும் இலக்கண விளக்கம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக் காட்டவில்லை.

வினையெச்சம் கூறப்பட்ட இலக்கணம் தவிர வேறு பல இலக்கணங்களையும் கொண்டு முடியும் என்பதை நன்னூல், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் கூறவில்லை.

பேச்சுவழக்கில் உள்ள உடன் நிற்கக் கூடாத மாறுபட்ட சொற்கள் சேர்ந்து நிற்கின்ற இடங்களும் உண்டு அவற்றை நீக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை (தொல். சொல். 258) யாதொரு இலக்கண நூலும் பின்பற்றவில்லை.

முன்னத்தின் உணரும் கிளவி குறித்து, நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியவை தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

ஒரு பொருள் இரு சொற்கள் குறித்து நேமிநாதம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், சுவாமிநாதம் ஆகியன கூறவில்லை.

ஒருமைப்பெயரும், பன்மைப் பெயரும் மயங்கி வரும் என்பதை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகியன தவிர்ந்த பிறநூல்கள் குறிப்பிடவில்லை.

ஆற்றுப்படை இலக்கியங்களில் முன்னிலை ஒருமையை உணர்த்தும் பெயர்ச்சொல் பன்மைப் பெயர் கொண்டு முடிதலும் உண்டு (தொல்.சொல்.462) என்னும் தொல்காப்பியக் கருத்தை யாதொரு இலக்கண நூலும் பின்பற்றவில்லை.

புதுமரபு

பொருள்கோள் - விளக்கம்

தொல்காப்பியம் முதலான நூல்கள் பொருள்கோளுக்கு இலக்கணம் கூறவில்லை. இனிய தமிழ் இலக்கணமே முதன்முதலில் பொருள்கோளுக்கு இலக்கணம் கூறுகிறது.

> **வரிசையாய்ச் சொற்களை வைத்துச் செய்யுளின்**
> **பொருளைக் கொள்வது பொருள் கோளாகும் (இ.த.இ.178:1-2)**

என்று விளக்குகிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணம், பொருள்கோளை யாப்பியலில் விளக்கியுள்ளது.

> **செயுளின் பொருளினை உரைநடை தன்னில்**
> **எளிதாய்ப் பொருள்கொளல் பொருள் கோளாமே (இ.த.ஐந்.636)**

என்று குறிப்பிடுகிறது. தமிழ்நூல்,

> **பாட்டினும் உரையினும் பொருள்தெளி வுறுகண்**
> **ணோட்டமும், நோட்டமும் கொள்ளுதல் பொருள்கோள் (த.நூ.430)**

என்று விளக்குகிறது.

அடுக்கு

இனிய தமிழ் இலக்கணம்,

கிளர்சொல் லடுக்கே அடுக்குத் தொடராம் (இ.த.இ.170)

என்று அடுக்குத் தொடருக்கு இலக்கணம் கூறுகிறது.

தொகைமொழி

'தொகை' என்னும் சொல் 'தொகுத்தல்' மற்றும் மறைந்து நிற்றல் ஆகிய இரு பொருண்மைகளில் ஆளப்படுகிறது. தொகைச் சொற்கள் என்பன மறைந்து வருதல் என்ற பொருளிலேயே கூறப்பட்டுள்ளன.

''தொகை என்னும் சொல் 'தொகு' என்பதன் அடியாகப் பிறந்தது. இது கூடுதல், ஒன்றாதல், மொத்தமாதல், நெருங்குதல், மறைதல், சுருங்குதல், ஒடுங்குதல் ஆகிய பொருள்களில் வரும்''[36] என்பர் பா.சங்கரேஸ்வரி.

''தொகை என்பது பல பொருள் ஒரு சொல் என்றும், அதன் இயல்புகளைச் சுருக்கிக் காணின்

1. பிளவு படாது ஒட்டி நிற்றல்
2. தொக்கு (சுருங்கி) ஒன்றாய் நிற்றல்
3. கட்புலனாகாது அறிவிற்குப் புலனாகி எஞ்சி நிற்றல் என்பனவாகக் கொள்ளலாம் என்பர் டாக்டர் ஆறுமுகனார்''[37]

பொற்கோ, 1. ''ஒரு தொடரில் உருபோ அல்லது உருபோடு ஒப்ப வைத்து எண்ணத்தக்க கிளவியோ மறைந்து நின்றால் அந்தத் தொடர் ஒரு தொகை. அதாவது உருபோ பிற கிளவியோ ஒரு தொடரில் தொக்கு நின்றால் அது தொகை. இங்கே தொகு என்ற சொல் ''மறைந்து நிற்றல்'' என்ற பொருளில் நிற்கிறது. 2. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பெயர்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கண உறவில் ஒன்றி நிற்கும்போது அந்தப் பெயர்த் தொடர் ஒருசொல் நீர்மை பெற்று ஒரே பெயர் போல நிற்கிறது. இத்தகைய பெயர்த்தொடர்கள் தொகை என்று குறிக்கப்படுகின்றன. இங்கே தொகு என்ற சொல் ''ஒருங்கு சேர்த்தல்'' என்ற பொருளில் நிற்கிறது. நச்சினார்க்கினியரும் வேறு சில உரையாசிரியர்களும் முதற் கொள்கையினர். சேனாவரையர், தெய்வச்சிலையார் போன்றோர் இரண்டாவது கொள்கையினர்''[38] என்று விளக்குகிறார்.

தொல்காப்பியர் தொகைக்கு இலக்கணம் கூறவில்லை. நன்னூலே இலக்கணம் கூறியுள்ளது.

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல் (நன். 361)

என்று விளக்குகிறது.

இலக்கண விளக்கம் (இ.வி.334), தொன்னூல் விளக்கம் (தொ.வி.88), சுவாமிநாதம் (சு.நா.65), தமிழ்நூல் (த.நூ.114), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.432) ஆகியன நன்னூலைப் பின்பற்றி தொகைமொழிக்கு இலக்கணம் கூறுகின்றன. இலக்கணக்கொத்து, தொகைநிலைத் தொடர் குறித்து,

தொகைநிலைக் குணத்தைச் சொல்லுங் காலை
வேற்றுமை உருபு முதலிய இடைநிலை
தொகுதலின் தொகைநிலை எனப்படும் என்றும்
நிலைமொழி வருமொழி நீக்கம் இன்றி
ஈறும் முதலும் இசைந்து நின்று
விட்டிசைப்பு இன்றி ஓர் நிலைமொழி விதிபெறத்
தொகுதலின் தொகைநிலை எனப்படும் என்றும்
பலசொல் கூடி ஓர் சொல்லே யாகிப்
பிளவுபட்டு இசைக்கவும் பிரிக்கவும் படாமல்
ஈறும் முதலும் இவை எனப் படாமல்
தொகுதலின் தொகைநிலை எனப்படும் என்றும்
கூறுவர் (இ.கொ.96:1-11)

என்று மூவகையாக விளக்குகிறது.

தொன்னூல் விளக்கம் தொகைகளைப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அடிப்படையிலும் பேசுகிறது (தொ.வி.88).

இனிய தமிழ் இலக்கணம்,

தொகை நிலை தொகாநிலை எனநிலை யிரண்டாம் (இ.த.இ.154)

என்றும்,

உருபு தொக்கி வருவது தொகையாம் (இ.த.இ.155)

என்றும் குறிப்பிடுகிறது.

இலகு தமிழ் ஐந்திலக்கணமும் சொற்றொடர் தொகை நிலை, தொகாநிலை என இருவகைப்படும் என்றும், வேற்றுமை, வினைச்சொல், பண்பு, உவமை, உம்மை, அன்மொழி ஆகிய அறுவகைச் சொல்லும் தொக்கின் தொகைநிலை என்று குறிப்பிடுகிறது (இ.த.ஐந்.303). மேலும் வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி ஆகிய ஐந்தும் அல்வழித் தொகைநிலை (இ.த.ஐந்.310) என்று குறிப்பிடுகிறது.

தென்னூல், தொகை மொழிகள் குறித்து, குறித்ததொரு பொருளின் பெயரொடு பொருளின் தன்மை, குணம் முதலாய சிறப்பினை விளக்கும் சொல் முன் இணைந்தும் சிலவும் பலவுமாகி பெயர்கள் தொடர்ந்தும் அயலதொரு பொருளை மரபுவழி உணர்த்தும் இரு சொற்கள் இணைந்தும் ஒரு சொல் நீர்மையவாய் நடைபெறுவன தொகை மொழிகளாம் என்று விளக்குகிறது (தென்.சொற்.208).

தமிழ்நூல் நன்னூலைப் பின்பற்றி தொகைச்சொல்லுக்கு இலக்கணம் கூறுவதுடன்,

தொக்கு நிற்பது தொகையெனும் வழக்கினும்
தொகுவது தொகையெனக் கொள்ளல் நன்றே. (த.நூ.115)

என்றும் குறிப்பிடுகிறது.

இடத்தொகை, பெயர்த்தொகை

தொகை நிலைத் தொடர்களின் இடையே வல்லொற்று வந்தால் அது இடத்தின் கண் தொக்க தொகையாம். மெல்லொற்று வந்தால் அது பெயரின் கண் தொக்க தொகையாம் என்று நன்னூல் குறிப்பிடுகிறது (நன்.371). முத்துவீரியம் நன்னூல் நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (மு.வீ.ஒழி.104).

தொகைநிலைத் தொடர்மொழிகள் பல பொருள்படுதல்

வேற்றுமை உருபு போன்றவை தொக்கு நிற்குமிடங்களில் பொருளால் மயங்கி நிற்கும் இயல்பையுடைய தொடர்மொழிகள் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈறான பொருள்களில் மயங்கி வரும் என்பதை நன்னூல்,

தொக்குழி மயங்குந இரண்டு முதல்ஏழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப (நன். 373)

என்று கூறுகிறது. இலக்கண விளக்கம் இந்நூற்பாவை எடுத்தாண்டுள்ளது (இ.வி.344). இலக்கணக்கொத்து (இ.கொ.93), தொன்னூல் விளக்கம் (தொ.வி.90), சுவாமிநாதம் (சு.நா.67) ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன.

இலக்கணக்கொத்து – தொகை – புதுமரபு

சில தொகைகள் பொருள் தடுமாறுதலும் உண்டு என்பதை இலக்கணக் கொத்து,

தடுமா றுந்தொழில் தரும்தொகை சிலவே (இ.கொ.94)

என்று குறிப்பிடுகிறது.

தொகையுள் தொகுக்கப்படும் நிலை

தொகையுள் தொகுக்கப்படும் நிலைகளைப் பலவாறாகக் கூறுகிறது இலக்கணக்கொத்து.

அறுவகைத் தொகையும் அறையுங் காலை
ஒன்றே தொகுதலும் பலவே தொகுதலும்
ஆறு வகையும் அடங்கத் தொகுதலும்
உருபே தொகுதலும் பொருளே தொகுதலும்
உருபும் பொருளும் ஒருங்குபல தொகுதலும்
பொருளும் உருபும் பொருளும் தொகுதலும்
முதல் இடை கடைஎன மூன்றினுந் தொகுதலும்
கடைஇடை இரண்டினும் காணத் தொகுதலும்
ஆதியாப் பலவும் அறைந்தனர் புலவர் (இ.கொ.97)

என்று உரைக்கிறது.

தென்னூல் - தொகை - புதுமரபு

தொகைச்சொற்களை விரிக்கும் முறையைத் தென்னூல் குறிப்பிடுகிறது.

அறுவகைத் தொகையையும் விரிப்புழி முறையே
உருபோ டியைபுறு சொல்லையும், செய்த
செய்கின்ற செய்யுமென் பாட்டமை பொருளையும்
ஐம்பா லீறொடு ஆகிய எனுஞ்சொல்
உருபையும் போன்ற போலுமென் உவமச்

சொல்லையும் உம்மை எண்ணையும் ஈற்றுநின்று
இயைபுறு மொழியையும் துலக்குதல் நெறியே (தென்.சொற்.217)

என்றுரைக்கிறது.

தமிழ்நூல் - தொகை – புதுமரபு

ஆகுபெயருக்கும், அன்மொழித்தொகைக்கும் உள்ள வேறுபாடு

ஆகுபெயருக்கும், அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாட்டைத் தமிழ்நூல்,

தன்பொருள் அன்றிச் சொற்பொருள் பிறபொருள்
நன்குணர்த்துதலான் அன்மொழித் தொகையும்
ஆகுபெயரே ஆகும் எனினும்
தனிச்சொல் அன்றித்தொகைச் சொல்லின் பின்
புறத்துப் பிறவாது நிலைக்களப் பிறப்பால்
பிரித்திங் குரைக்கப் பெற்றதென்க (த.நூ.126)

என்று விளக்குகிறது.

தொகைச் சொல்லை உற்றறிந்துணர்தல்

தொகைச்சொல்லின் வகையை உற்றறிந்து உணர வேண்டும் என்பதை,

ஒரு தொகைச் சொல்லே பலதொகைச் சொல்லின்
உருவொடு நிற்கும் உற்றறிந் துணர்க (த.நூ.127)

என்று தமிழ்நூல் குறிப்பிடுகிறது.

தொகா நிலைத் தொடர்மொழி

நன்னூல் தொகா நிலைத் தொடர் மொழிகளை விளக்குகிறது. உருபுகள் வெளிப்பட நிற்பது தொகா நிலைத் தொடராகும். தொகா நிலைத் தொடர் மொழியின் வகைகளை நன்னூல்,

முற்றுஈ ரெச்சம் எழுவாய் விளிப் பொருள்
ஆறுருபு இடை உரி அடுக்கிவை தொகாநிலை (நன். 274)

என்று ஒன்பது வகைப்படுத்துகிறது,

இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றி தொகாநிலைத் தொடர்களை விளக்குகிறது (இ.வி.345).

இலக்கணக் கொத்து தொகா நிலைத் தொடருக்கு இலக்கணம் கூறுகிறது.

-------- தொகாநிலை கூறுங் காலை
உருபு முதலிய இடையே உரைத்தல்
விட்டிசைத்து உரைத்தல், வெவ்வேறு உரைத்தல்
என்றே கூறுவர் (இ.கொ.96:12-15)

என்று குறிப்பிடுகிறது.

சுவாமிநாதம் நன்னூலைப் பின்பற்றி தொகா நிலைத் தொடர்களின் வகைகளை விளக்கினாலும், எழுவாய், விளி, ஆறுருபு ஆகிய மூன்றையும் இணைத்து பெயரில் வேற்றுமை உருபேற்ற சொற்கள் என்று குறிப்பிடுகிறது (சு.நா.67).

இனிய தமிழ் இலக்கணம், தொகா நிலைத் தொடர் குறித்து,

உருபுகள் வெளிப்பட வருவது தொகாநிலை
வினைமுற் றுடனே, பெயர்வினை யெச்சம்
எழுவாய் விளியே யிடைஉரி அடுக்குடன்
தொகாநிலைத் தொடர்கள் ஒன்பதா கும்மே. (இ.த.இ.163)

என்று குறிப்பிடுகிறது.

இலகுதமிழ் ஐந்திலக்கணம், சொற்கள் தொக்காது தொடர்ந்து நிற்பது தொகா நிலைத் தொடராகும் என்கிறது. மேலும், அவற்றின் வகைகளாக நன்னூல் குறிப்பிடுவனவற்றுள் உரியை நீக்கி பண்பு, உவமை ஆகியவற்றை இணைத்துப் பத்து வகையாகக் கூறுகிறது (இ.த.ஐந்.306). மேலும் ஒவ்வொரு வகைத் தொடரையும் தனித் தனியே விளக்கிக் கூறுகிறது (இ.த.ஐந்.308, 312).

தொகா நிலையின் இன்றியமையாமை

இலக்கணக் கொத்து தொகா நிலையின் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறியுள்ளது. தொகை நிலையில் பொருள் மயக்கம் ஏற்படும் என்றும் தொகா நிலையில் உருபு முதலியன விரிந்து வருவதால் கருதிய பொருளை அறியக் கருவியாக விளங்குகின்றது என்றும் தொகா நிலையின் சிறப்பைக் கூறுகிறது (இ.கொ.92).

பிற புதுமரபுகள்

அறுவகை இலக்கணத்தில் புது மரபுகள்

சொல்

அறுவகை இலக்கணம் சொல்லை நிற அடிப்படையில் பாகுபடுத்துவது புது மரபாகும்.

இயல் இசை நாடகம் என்னும்முத் தமிழ்ச்சொல்
பொதிய மால்வரைப் பொழில்என இருண்டும்
உலவா முனிவோர் உடைஎனச் சிவந்தும்
வீழ்புனல் அருவியில் வெளுத்தும் தோன்றும் என்று
அறிவார் மலர்த்தாள் அணிதலை எமதே (அ.இ.171)

என்னும் நூற்பா வழி இயல், இசை, நாடகம் என்ற தமிழின் முப்பிரிவுகளின் கீழ் ஆளப்பட வேண்டிய சொற்கள் முறையே பொதிய மலைச் சோலையைப் போல இருண்டும் (கரிய நிறமாகவும்), தவசிகளின் உடையைப் போலச் செந்நிறமாகவும், மலையருவியைப் போல வெண்மையாகவும் இருக்க வேண்டும் என விளக்குகிறது. இந்நிறப் பகுப்பு சொற்களின் எளிமை, அருமை நோக்கி அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது.

மேலும், எழுத்தறிவற்ற பாமரர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் சொற்கள் அனைத்தும் வெண்ணிறம் உடையன என்று (அ.இ.172) கூறுவதன் வழி இயற் சொல்லை வெண்ணிறச் சொற்கள் எனச் சுட்டுகின்றமை புலனாகும்.

கற்பவர்கள் தம் அறிவாற்றலுக்கு ஏற்ற அளவு பொருள்கொள்ளும் வகையில் அமைந்த சொற்கள் பளிங்கு நிறம் உடையன (அ.இ.173) என்றும், திருமுருகாற்றுப்படை போன்ற நூல்கள் கருமை நிறம் வாய்ந்தன(புரிந்து கொள்வதற்கு அரியன) என்றும் (அ.இ.174) அருணகிரிநாதரின் திருப்புகழ், கவிராச பண்டிதரின் சௌந்தரியலகரி மொழிபெயர்ப்பு, ஔவையாரின் விநாயகர் அகவல் போன்ற பனுவல்கள் யாவும் செம்மையான நிறமுடைய செஞ்சொற்கள் ஆகும் (அ.இ.175) என்றும் சைவ சமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர் முதலிய நால்வரின் திருப்பாடல்களும், வைணவ ஆழ்வார்களாகிய பெரியாழ்வார் முதலிய பதின்மரின் அருளிச் செயல்களும் பொன்னிறம் வாய்ந்தவை (அ.இ.176) என்றும் அறுவகை இலக்கணம் சுட்டுகிறது. இவ்வாறாக ஐவகை நிறப்பகுப்பின் அடிப்படையில் சொற்களை விளக்குவது வேறெந்த இலக்கண நூல்களிலும் இல்லாத புது மரபாகும்.

பல்வகைச் சொற்கள்

பல வகையான சொற்கள் தமிழில் வழங்குகின்றமையை அறுவகை இலக்கணம் பதிவுசெய்துள்ளது. அவ்வகையில், செய்,போ, நில் என்பன போன்ற சொற்கள் ஏவல் சொற்கள் எனவும் (அ.இ.216) வளர்ச்சி, தளர்ச்சி, அகலம் போன்ற பொருளின் அமைப்பைக் குறிப்பிடும் சொற்கள் அமைதிச் சொற்கள் எனவும் (அ.இ.217) இனிப்பு, புளிப்பு, கசப்பு ,கோபம், சாந்தம் போன்ற ஒன்றன் குணத்தைக் குறித்து வரும் சொற்கள் தன்மைச் சொற்கள் (அ.இ.218) எனவும், உறு என்பதைப் போன்ற சொற்கள் உரிச்சொற்கள் எனவும் எனவும் (அ.இ.219) எனவும், ஓம், ஆம் போன்ற சொற்கள் பிறர் கூறுவனவற்றிற்கு உடன்படுவோர் பயன்படுத்தும் ஒப்புச்சொற்கள் எனவும் (அ.இ.220), ஓ என்பதைப் போன்ற சொற்கள் பிறரை அழைக்கும் விளிச்சொற்கள் என்றும் (அ.இ.221), ஐயோ என்பதைப் போன்ற சொற்கள் இரக்கத்தைக் குறிக்கும் சொற்கள் (அ.இ.221),கூகூ என்பது ஓரிடத்தில் பலரைக் கூட்டுவிப்பதற்குரிய சொல்லாகும் (அ.இ.223) என்றும், ஆ, ஓ என்பன வியப்பைக் காட்டுவன என்றும் (அ.இ.224) விளக்குகிறது. இவை போன்ற சொற்கள் கணக்கில் அடங்காதவை (அ.இ.225) என்றும் சுட்டுகிறது.

சார்பியல்பு

சார்பியல்பு எனும் பகுதியில் விகுதிகள், அசை, சாரியை, போலி, உவமை, மங்கலம், யாப்பிலக்கண வாய்ப்பாடு, புதுமொழியாக்கம் பற்றிய செய்திகளை விளக்குகிறது.

ஐ,ஒள

ஐ,ஒள எழுத்துகளை அய்,அவ் என எழுதுதல் போலி என்று பல்வேறு அறிஞர்கள் சுட்டுகின்றனர். இவைகளுக்கு இவ்வாறன்றி வேறு வகையாகப் பெயர் இட்டுரைப்பினும் தவறு என்ன எனக் கேட்கும் நெஞ்சுரம் உடையவர்கள் எனக்கு இனிய துணையாவர் (அ.இ.229) என்று கூறுவதன் அய், அவ் என்று எழுதுதல் தவறு என்னும் கொள்கையுடையவர் தண்டபாணி சுவாமிகள் என்பது புலப்படும்.

மங்கலச்சொல்

உயர்ந்தவர்களால் போற்றப்படுகின்ற சொற்கள் யாவுமே மங்கலத்தன்மை வாய்ந்தவை. எனவே அவை ஒரு நூலின் முதற்சொல்லாக இருக்கும் தகுதியுடையவை என்றும் (அ.இ.231), அந்த மங்கலச்சொல் மூன்று, ஐந்து, ஏழு என ஒற்றைப்படை எழுத்துக்களாலும், புணர்ச்சியால் ஈறு திரியாததாகவும் இருத்தல் சிறப்புடையது (அ.இ.232) என்றும் அறுவகை இலக்கணம் குறிப்பிடுகிறது.

புது மொழிகளை ஏற்றுக்கொள்ளல்

கின்னம் என்று ஒரு புதிய சொல்லை அருணகிரிநாதரும்,திமுதம் என்ற புதுமொழியைக் கம்பனும் படைத்துக் கொண்டதைப் போல புதுமையான வார்த்தைகளை தகுதியுடைய புலவர்கள் உருவாக்கினால் அவற்றையும் சான்றோர் ஏற்றுக்கொள்ளுதல் இயல்பாகும் (அ.இ.249) என்று அறுவகை இலக்கணம் செப்புகிறது.

மயக்கமின்றிப் பேசுதல்

சொல்லுகிறவன் எதை வெளிப்படுத்த எண்ணுகிறானோ அக்கருத்தைத் தெளிவாக உணர்த்தாமல் மாறுபட்ட பொருளைத் தருகின்ற சொற்களைப் பயன்படுத்துதல் நல்லது ஆகாது (அ.இ.257) என அறுவகை இலக்கணம் குறிப்பிடுகிறது.

கருத்துத் திருட்டு

பிறர் படைப்பைத் திருடுதல் தவறு என்பதை அறுவகை இலக்கணம் பதிவு செய்துள்ளது,

> **ஒருவன் சொல்லொடு கருத்துமற் றொருவனது**
> **ஆதலும் திருடலும் ஆம்ளூ இவை இரண்டும்**
> **அவர் திறம் கருதி அறிதல்மிக்கு எளிதே (அ.இ.260)**

என்று அறுவகை இலக்கணம் பதிவு செய்துள்ளமை குறிக்கத்தக்கது.

தென்னூலில் புதுமரபுகள்

தென்னூல் சொற்படலத்தில் தொடரியல் குறித்துப் பேசுகிறது. மாற்றிலக்கணக் கோட்பாடு குறித்தும் கூறியுள்ளது புது மரபாகும்.

தமிழ்நூலில் புது மரபுச் செய்திகள்

'ஒருவள்' என்னும் சொல்லாட்சி

ஒருவன் என்னும் ஆண்பாலுக்குரிய பெண்பாற் சொல் ஒருத்தி என்பதாகும். ஒருவள் என்னும் சொல் இலக்கிய வழக்கில் இல்லை. ஆனால் தமிழ்நூல்,

> **ஒருவள் என்பது ஒருத்திக் கீடே (த.நூ.309)**

என்றுரைக்கிறது. ஒருவள் என்னும் வழக்கை மறுப்பது பழங்குருட்டுத்தனம் என்கிறார் இந்நூலாசிரியர் ந. சரவணத்தமிழன்.

திருமணச் செய்தியை அறிவிக்கும் முறை

தமிழ்நூல்,

திருமணச் செய்தியில் நங்கையை நம்பிக்குத்
தருவதாய்க் கூறலே தமிழ்மர பாகும். (த.நூ.337)

என்று தமிழ்ப் பண்பாட்டைப் பதிவு செய்துள்ளது.

பச்சை எனும் சொல்

பச்சை என்னும் சொல்லின் இயல்பு குறித்துத் தமிழ் நூல்,

பச்சை எனுஞ்சொல் பசுமை அன்றியும்
தற்கொள் சொல்லின் மிகுபண் புணர்த்தும் (த.நூ.332)

என்று சுட்டுகிறது.

எலே, அடா,அடி போன்ற சொற்கள்

எல் அடியாகப் பிறந்த எலே என்பதும், அவ்வடித் தோன்றிய ஏடன்,ஏடியின் திரிபாகிய அடா, அடி என்பனவும் இவற்றின் இறுதி மட்டாய டா,டி என்பன இழியுரிமை வழக்கு இறுதிநிலை போலவும் இயங்கும் என்று தமிழ்நூல் சுட்டுகிறது (த.நூ.333).

அன்மை, இன்மை வேறுபாடு

அன்மை, இன்மை ஆகிய இரு சொற்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு குறித்து தமிழ் நூல்,

இரண்டிலொன் றன்மையைக் குறிப்பது அன்மை
ஒன்றுமில் லாமையை உணர்த்தும் இன்மை. (த.நூ.334)

என்று குறிப்பிடுகிறது.

சும்மா என்னும் சொல்லின் பொருள்

இன்று பலரும் அடிக்கடி பயன்படுத்தும் சொல்லாகிய ‘‘சும்மா’’ என்னும் சொல்லைத் தமிழ் நூல் பதிவு செய்துள்ளது.

சும்மா எனுந்திரிபு இலவயம் வெறுமை
காலத் தடிக்கடி முதலிய பொருள்படும். (த.நூ.335)

என்று விளக்குகிறது.

குழந்தைப் பிறப்பைத் தெரிவிக்கும் முறை

குழந்தை பிறந்த செய்தியைப் பிறருக்குத் தெரிவிக்கும் முறை குறித்துத் தமிழ் நூல்,

> **குழந்தைப் பிறப்பைக் குறிக்க, அம்மைபால்**
> **தந்தைக்குத் தோன்றிய தென்பதே தக்கது (த.நூ.338)**

என்கிறது.

முகவரி எழுதும் முறை

முகவரி எழுதும் முறை குறித்துத் தமிழ் நூல்,

> **முகவரி முறைமையில் தமிழுக் கியைய**
> **ஊர் தெரு பெயரெனும் ஒழுங்கே நன்றாம் (த.நூ.339)**

என்று கூறுகிறது. ஆனால் நாம் பெயர், தெரு, ஊர் என்ற முறையிலேயே முகவரி எழுதுகிறோம். அது ஆங்கில முறை என்றும், தமிழ்த் தொடர் மரபுப்படி ஊர்,தெரு, பெயர் என எழுதுதலே முறை என்றும் இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

அதேபோல் நாள் குறிக்கும் பொழுது ஆண்டை முதலில் எழுதி, பின்னர் திங்களும் நாளும் குறிப்பிட வேண்டும் என்கிறார் (த.நூ.340).

முன்னெழுத்து

நாம் நம் தந்தை பெயரை முன்பெயராக இடுவது வழக்கம். இவ்வாறு முன்னெழுத்தாக இடும் பெயர், பெயருக்கு முன்னிடுதல் தகும் எனத் தமிழ்நூல் சுட்டுகிறது (த.நூ.341).

எண்கள்

எண்களைக் கண்டறிந்தவர் அரேபியர் என்றே வரலாறு பேசுகிறது. ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழில் தோன்றிய எண்களின் திரிபே அரேபிய எண்கள் என்னும் கருத்தை வலியுறுத்தும் விதமாக,

> **வழக்கில் உள்ள அனைத்துல கெண்கள்**
> **அரபியக் கொடையலளு அருந்தமிழ் இருப்பே (த.நூ.342)**

என்று தமிழ் நூல் பதிவு செய்துள்ளது.

தொகுப்புரை

- செய்யுளுக்குரிய சொற்களாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவற்றைக் குறிப்பிடுவதில் நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- அடுக்குத் தொடர்களை இசைநிறை, அசைநிலை, பொருளோடு புணர்தல் என மூவகைப்படுத்துவதில் நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- தொகைச்சொற்களை அறுவகைப்படுத்துவதில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.
- எச்சச் சொற்களின் வகைகளை விளக்குவதில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.
- அவைக்கண் கூற இயலாத இடக்கர்ச் சொற்களைக் கூற வேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல் முதலான நூல்கள் அவற்றைத் தகுதி வழக்கில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றன.
- இரப்போர் கூற்று குறித்துக் கூறுவதில் நன்னூல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- செய்யாய் என்னும் வாய்பாட்டு முன்னிலை வினைச்சொற்கள் ‘செய்’ என நிற்றலும் உண்டு என்பதில் இலக்கண விளக்கம், முத்துவீரியம், தமிழ்க் காப்பு இயம் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.
- காலத்திற்கேற்ப புதிய சொற்கள் தோன்றுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனும் தொல்காப்பியக் கருத்தில் நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல் ஆகியன உடன்படுகின்றன.
- தொல்காப்பியம், திசைச்சொல் குறித்து ‘செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினும் வழங்குவது’ என்று கூற நன்னூல் அதனோடு தமிழ்மொழி பேசும் நிலம் தவிர்ந்த பதினேழு நிலங்களிலும் உள்ளோர் தம் குறிப்பினவாய் வந்து வழங்குவது என்கிறது.

- தொல்காப்பியம் தொகைச்சொற்களின் பண்பினைக் கூற, பிற இலக்கணிகள் உருபு தொக்கி வரும் புறத்தோற்றத்தை முதன்மைப்படுத்துகின்றனர். இது குறிக்கத் தகுந்த மரபு மாற்றமாகும்.
- தொகைளில் பொருள் சிறக்கும் இடங்களாகத் தொல்காப்பியம் நான்கனைக் குறிப்பிட, அவிநயம் முன்மொழி, பன்மொழி ஆகிய இரண்டை மட்டும் கூறுகிறது,
- பொருள்கோளின் வகைகளைத் தொல்காப்பியம் நான்கு வகைகளாகக் குறிபப்பிட, நேமிநாதம் ஒன்பது வகையாகவும், நன்னூல் எட்டு வகையாகவும் கூறுவது மரபு வளர்ச்சியாகும்.
- தொகைச்சொற்களை இலக்கணிகள் ஆறாகப் பாகுபடுத்த, இலக்கணக்கொத்து ஏழாவதாகப் 'படுதொகை' என்ற ஒன்றை இணைக்கிறது.
- இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ் நூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியவை செய்யுள் ஈட்டச் சொற்கள் குறித்துக் கூறாதது மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.
- **தொ**ன்னூல் விளக்கம் திசைச் சொல்லையும், வட சொல்லையும் நீக்கியுள்ளது.
- முத்துவீரியம், அறுவகை இலக்கணம், தமிழ்க் காப்பு இயத்தில் பொருள்கோள் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை.
- நேமிநாதம், இலக்கணக்கொத்து, அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் ஆகியவற்றில் எச்சச்சொற்கள் பற்றிக் கூறப்படவில்லை.
- இரப்போருக்குரிய சொற்கள் குறித்து நன்னூல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்களில் குறிப்புகள் இல்லை.
- காலத்திற்கேற்ப புதிய சொற்கள் உருவாவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் சுட்டிக்காட்டவில்லை.
- முன்னத்தின் உணரும் கிளவி குறித்து, நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியவை தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடவில்லை.
- ஆற்றுப்படை இலக்கியங்களில் முன்னிலை ஒருமையை உணர்த்தும் பெயர்ச் சொல் பன்மைப்பெயர் கொண்டு முடிதலும் உண்டு என்பதை யாதொரு இலக்கண நூலும் பின்பற்றாமை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

- தொல்காப்பியம் முதலான நூல்கள் பொருள்கோளுக்கு இலக்கணம் கூறவில்லை. நன்னூல், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் ஆகியன பொருள்கோளுக்கு இலக்கணம் கூறுவது புதுமரபாகும்.
- இலக்கணக்கொத்து தொகை நிலைத் தொடருக்கு இலக்கணம் கூறியுள்ளமை புது மரபாகக் கொள்ளத்தக்கது.
- இடத்தொகை, பெயர்த்தொகை குறித்து நன்னூல் கூறுவது புதுமரபாகும்.
- தமிழ்நூல் ஆகுபெயருக்கும், அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுவது புதுமரபாகும்.
- தென்னூல், தொகைச் சொற்களை விரிக்கும் முறையைக் கூறுவது புது மரபாகும்.
- தொல்காப்பியம் தொகா நிலைத்தொடருக்கு இலக்கணம் கூறவில்லை. நன்னூல் அதற்கு இலக்கணம் கூறியுள்ளமை புதுமரபாகக் கொள்ளத்தக்கது. தொகா நிலையின் இன்றியமையாமையை இலக்கணக்கொத்து புலப்படுத்துகிறது.

சான்றெண் விளக்கம்

1. தமிழண்ணல் (உ.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம், ப. 219.
2. தி.வே.கோபாலய்யர் (ப.ஆ.,), தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரைக்கொத்து (இடையியல், உரியியல், எச்சவியல்), ப.455.
3. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், எச்சவியல், ப.21.
4. மேலது, ப.15.
5. சுபாஷ் சந்திரபோஸ், பழந்தமிழில் சொல்லியல் சிந்தனைகள், பக்.181-182.
6. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், எச்சவியல், ப.22.
7. மேலது., ப. 23
8. மேலது., ப.25.
9. மேலது., ப. 25.
10. க. வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், பக். 242-244.
11. சாமி. சிதம்பரனார், தொல்காப்பியத் தமிழர், பக். 132-133.
12. வ. ஞானசுந்தரம் (கட்.,) தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள், ப.132.
13. மேலது., ப.132.
14. சாமி. சிதம்பரனார், தொல்காப்பியத் தமிழர், ப. 129.
15. கி.வா.ஜகந்நாதன், வாழும் தமிழ் தொல்காப்பியம், ப.146.
16. ரா. சீனிவாசன், மொழி ஒப்பியலும், வரலாறும், ப. 147.
17. சாமி. சிதம்பரனார், தொல்காப்பியத் தமிழர், ப.130.
18. ஏ. ஆதித்தன், தமிழ் இலக்கணவியல், ப.90
19. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், எச்சவியல், ப.250.
20. மேலது., ப.252.
21. மேலது., ப.251.
22. சாமி. சிதம்பரனார், தொல்காப்பியத் தமிழர், ப.73.

23. மேலது., ப.129.

24. பொற்கோ, இலக்கண உலகில் புதிய பார்வை, தொகுதி 2, ப.7.

25. சரவணத்தமிழன், தமிழ்நூல், ப.41.

26. சூ. இன்னாசி, சொல்லியல், ப. 80.

27. ஏ. ஆதித்தன், தமிழ் இலக்கணவியல், ப. 90.

28. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், எச்சவியல், ப.60.

29. செ.வை சண்முகம், தொல்காப்பிய ஆய்வு, ப. 140.

30. மேலது., ப.145.

31. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ.,) தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைவளம், எச்சவியல், ப.69.

32. மேலது., பக்., 50-51.

33. மேலது., ப. 78

34. சாமிநாததேசிகர், இலக்கணக்கொத்து, ப.215.

35. சு. அழகேசன் & த. வேல்மயில், இலக்கணத் தேடல்கள், ப.37.

36. பா. சங்கரேஸ்வரி, தமிழ் சமஸ்கிருத இலக்கண மரபுகள், ப. 165.

37. சூ. இன்னாசி, சொல்லியல், ப.78.

38. பொற்கோ, இலக்கண உலகில் புதிய பார்வை தொகுதி -2, ப.1.

துணைநூற்பட்டியல்

முதன்மைச் சான்றுகள்

1. இளவரசு. சோம (உ.ஆ.,) **நன்னூல் - சொல்லதிகாரம்,** மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-08, 2004.

2. காசுமான்.மி **தமிழ்க் காப்பு இயம்,** காசுமான் பதிப்பகம், 4-226, நந்தன் காடு, மார்த்தாண்டம்-65, 2005.

3. கோபாலய்யர்.தி.வே (ப.ஆ.,) **தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரைக்கொத்து, (கிளவியாக்கம்)** சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர், 2007.

4. மேலது., **தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரைக்கொத்து, (வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு)** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10, 2013.

5. மேலது., **தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரைக்கொத்து (பெயரியல், வினையியல்)** தமிழ்ப் பல்கலைக்கழகம்,

தஞ்சாவூர்-10,
2013.

6. மேலது., **தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரைக்கொத்து, (இடையியல், உரியியல், எச்சவியல்)**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-10.
2013.

7. கோவிந்தராசனார்.கா.ர. (உ.ஆ.,) **நேமிநாதம்,**
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்,
522, டி.டி.கே. சாலை, ஆள்வார்பேட்டை,
சென்னை – 600 018,
2012.

8. சண்முகம்.செ.வை (ப.ஆ., & உ.ஆ.,) **சுவாமிநாதம்,**
அண்ணாமலை பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்,
1975.

9. சரவணத்தமிழன்.த **தமிழ்நூல்,**
தமிழன் பதிப்பகம்,
இயற்றமிழ்ப் பயிற்றகம்,
திருவாரூர்,
2003.

10. சிவலிங்கனார் (ப.ஆ.,) **தொல்காப்பியம் உரைவளம், சொல்லதிகாரம், வேற்றுமையியல்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-13,
2015.

11. மேலது., **தொல்காப்பியம் உரைவளம்,**
சொல்லதிகாரம்,
வேற்றுமை மயங்கியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-13,
2015.

12. மேலது., **தொல்காப்பியம் உரைவளம்,**
சொல்லதிகாரம், விளிமரபு,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-13,
2015.

13. மேலது., **தொல்காப்பியம் உரைவளம்,**
சொல்லதிகாரம், இடையியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-13,
1986.

14. மேலது., **தொல்காப்பியம் உரைவளம்,**
சொல்லதிகாரம், உரியியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-13,
2015.

15. மேலது., **தொல்காப்பியம் உரைவளம், சொல்லதிகாரம், எச்சவியல்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-13,
1988.

16. சுத்தானந்த பாரதியார் **இனிய தமிழ் இலக்கணம்,**
கவிதா பப்ளிகேஷன்,
8, மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார்,
சென்னை – 600017
2008.

17. சுந்தரமூர்த்தி (உ.ஆ.,) **முத்துவீரியம்,**
கழக வெளியீடு,
சென்னை,
1972.

18. சுப்பிரமணியன்.ச.வே (ப.ஆ.,) **தமிழ் இலக்கண நூல்கள்,**
மெய்யப்பன் பதிப்பகம்,
53, புதுத்தெரு,
சிதம்பரம் - 608 001,
2007.

19. சுவாமி நாத தேசிகர் **இலக்கணக் கொத்து,**
சரஸ்வதி மஹால் நூல் நிலையம்,
தஞ்சாவூர்,
1973.

20. தண்டபாணி சுவாமிகள் **அறுவகை இலக்கணம்,**
தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு,
தஞ்சாவூர்,
1991.

21. பாலசுந்தரம்.ச **தென்னூல்,**
தாமரை வெளியீட்டகம்,
தஞ்சாவூர்,
1991.

22. வீரமா முனிவர் **தொன்னூல் விளக்கம்,**
தமிழ்ப் பதிப்பகம்,
2, கால்வாய்க் கரைச் சாலை,
கஸ்தூரிபாய் நகர், அடையாறு,
சென்னை-20,
2008.

23. வேங்கடராமன்.மு **இலகு தமிழ் ஐந்திலக்கணம்,**
புதுப்பட்டி, பல்லவராயன் பத்தை,
(கி.அ) (வழி – கரம்பக்குடி),
புதுகை-02,
1990.

துணைமைச் சான்றுகள்

1	அகத்தியலிங்கம்.ச	**தொல்காப்பிய உருவாக்கம்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2001.
2	மேலது.,	**சங்கத்தமிழ் 4,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப்பயிலக வளாகம், தரமணி, சென்னை-13. 2010.
3	மேலது.,	**சங்கத்தமிழ் 5,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப்பயிலக வளாகம், தரமணி, சென்னை-13. 2010.
4	அழகேசன்.சு	**தொல்காப்பியப் புலப்பாட்டு நெறி,** காவ்யா வெளியீடு, 16, இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-24, 2018.
5	அழகேசன்.சு & வேல்மயில்.த	**இலக்கணத் தேடல்கள்,** காவ்யா பதிப்பகம், 16, இரண்டாம் குறுக்குவீதி, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 24, 2009.

6	ஆண்டியப்பன்.தே	**காப்பியர் நெறி, சொல்லியல்,** முத்து பதிப்பகம், ஆழ்வார் நகர் குடியிருப்பு, மதுரை-19, 1977.
7	ஆதித்தன்.ஏ	**தமிழ் இலக்கணவியல்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98, 2013.
8	இசரயேல்.மோ	**இலக்கண ஆய்வு – வினைச்சொல்,** மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், 69, பாண்டிய வேளாளர் தெரு, மதுரை-01, 1976.
9	இலக்குவனார்.சி	**பழந்தமிழ்,** ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 32-பி, கிருஷ்ணாதெரு, பாண்டி பஜார், தியாகராய நகர், சென்னை-17, 2015.
10	இன்னாசி.சூ	**சொல்லியல்,** பாரி புத்தகப் பண்ணை, 90, பிராட்வே, சென்னை-08, 2009.

11 கோதண்டராமன்.பொன் **இலக்கண உலகில் புதிய பார்வை (தொகுதி-1),**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2011.

12. மேலது., **இலக்கண உலகில் புதிய பார்வை (தொகுதி-2),**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2011.

13. மேலது., **இலக்கண உலகில் புதிய பார்வை (தொகுதி-3),**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2011.

14. சங்கரேஸ்வரி.பா **தமிழ் சமஸ்கிருத இலக்கண மரபுகள்,**
பாவை பப்ளிகேஷன்ஸ்,
16, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14,
2015.

15 சண்முகம்.செ.வை **தொல்காப்பிய ஆய்வு,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2014.

16 மேலது., **சொல்லிலக்கணக் கோட்பாடு, முதல்பகுதி,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-13,
1984.

17 மேலது., **சொல்லிலக்கணக் கோட்பாடு,**
இரண்டாம் பகுதி,
அனைத்திந்திய தமிழ்மொழியியற் கழகம்,
அண்ணாமலை நகர்,
1986.

18 சிதம்பரனார்.சாமி **தொல்காப்பியத் தமிழர்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2008.

19 சீனிவாசன்.ரா **மொழியியல்,**
முல்லை நிலையம்,
9, பாரதி நகர் முதல்தெரு,
தி.நகர், சென்னை-17,
2005.

20 மேலது., **மொழி ஒப்பியலும், வரலாறும்,**
சாரதா பதிப்பகம்,
ஜி-4, சாந்தி அடுக்ககம்,
3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை,
சென்னை-14, 2012.

21 சுபாஷ்சந்திரபோஸ் **பழந்தமிழில் சொல்லியல் சிந்தனைகள்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2018.

22 சுயம்பு.பெ **இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-13,
2004.

23 தட்சிணாமூர்த்தி, அருச்சுன. **சொல்லியல் கட்டுரைகள்,**
பாரதி புத்தகாலயம்,
7-40, கிழக்குச் செட்டித்தெரு,
பரங்கி மலை,
சென்னை-16,
2006.

24 தமிழண்ணல் **தொல்காப்பியர்,**
சாகித்திய அகாதெமி,
இரவீந்திர பவன்,
35, பெரோஸ்ஷா சாலை,
புதுதில்லி-01,
2012.

25 தமிழண்ணல் (உ.ஆ.,) **தொல்காப்பியம், சொல்லதிகாரம்,**
மீனாட்சி புத்தக நிலையம்,
மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு,
மதுரை-01,
2010.

26 திருஞானசம்பந்தம்.ச (உ.ஆ.,) **தொல்காப்பியம், சொல்லதிகாரம்,**
கதிர் பதிப்பகம்,
தெற்கு வீதி,
திருவையாறு-04,
2013.

27 மாணிக்கம்.வ.சுப **தொல்காப்பியப் புதுமை,**
ராமையா பதிப்பகம்,
சென்னை-14,
2010.

28 மீனாட்சி சுந்தரனார்.தெ.பொ **தமிழ் மொழி வரலாறு,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2014.

29. முத்துச்சண்முகம் **இக்காலத்தமிழ்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2014.

30. முத்துச்சண்முகன் **இக்காலத் தமிழ் வேற்றுமைகள்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-98,
2014.

31. வெள்ளை வாரணன்.க **தமிழ் இலக்கிய வரலாறு – தொல்காப்பியம்,**
பூம்புகார் பதிப்பகம்,

127, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை-08,
2017.

32. வேங்கடராமன்.கா.கோ **தொல்காப்பியத்தமிழ்,**
கனிமொழி பதிப்பகம்,
193 எச், கண்டர் பள்ளிக் குடியிருப்பு,
வேலூர்-82,
2000.

33. ஜகந்நாதன்.கி.வா **வாழும் தமிழ் தொல்காப்பியம்,**
சுபா பதிப்பகம், பிளாக்-11, எ.்.ப் ஒ ஏ,
ஜெயின் சுதர்சனா அபார்ட்மெண்ட்,
174, மாடம்பாக்கம் மெயின்ரோடு,
ராஜகீழ்ப்பாக்கம்,
சேலையூர், சென்னை-73,
2013.

ஆய்வுக் கட்டுரை

1 ஜீன் லாறன்ஸ்.செ. (ப.ஆ.,) **தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-13, 2001.

வரலாற்று நோக்கில்
சொல்லிலக்கண மரபுகள்

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்குப்
பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

கா.சுபா

(பதிவு எண் : 0653)

நெறியாளர்

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை

தமிழ்ப் பண்பாட்டு மையம்

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் 'A+' (CGPA.3.64) தகுதி மற்றும் மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல்தர பல்கலைக்கழகத் தகுதி மற்றும் தன்னாட்சித் தகுதி பெற்றது)

காரைக்குடி.

தமிழ்நாடு - இந்தியா

மார்ச்சு - 2022

முடிவுரை

“வரலாற்று நோக்கில் சொல்லிலக்கண மரபுகள்” என்னும் இவ்வாய்வு தொல்காப்பியம் தொடங்கி 21ஆம் நூற்றாண்டு வரையுள்ள பதினைந்து சொல்லிலக்கண நூல்களை ஒத்த மரபு, மரபு மாற்றம், மரபு வளர்ச்சி, மரபு வீழ்ச்சி, புது மரபு என்னும் பகுப்பின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளது.

தொல்காப்பியம் சொல்லுக்கான வரையறையை நேரடியாகக் கூறவில்லை. திணையை முதன்மைப்படுத்தியே சொற்களை விளக்குகிறது. இம்முறையைப் பிற்றை இலக்கணிகள் பின்பற்றவில்லை. அவர்கள் சொல் என்பது இரு திணை, ஐம்பால், ஏழ் வழு, எண் வேற்றுமை, மூவிடம், முக்காலம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பெறும் தன்மையது என்று குறிப்பிடுகின்றனர்.

மக்கள் சுட்டு உயர்திணை, மக்களல்லாத சுட்டு அஃறிணை என்னும் தொல்காப்பியக் கருத்தை இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் ஆகிய நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. மேலும், தொல்காப்பியரின் ஐம்பால் மரபை அறுவகை இலக்கணம் தவிர்ந்த பிற இலக்கண நூல்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

பேடும், தெய்வமும் உயர்திணைப் பாலாய் இசைக்கும் என்னும் தொல்காப்பியக் கருத்தோடு அவிநயம், இலக்கண விளக்கம், தென்னூல் ஆகியவை ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

வண்ணச் சினைச்சொல் அடை, சினை, முதல் மூன்றும் மயங்காமல் வரும் என்னும் தொல்காப்பியக் கருத்தை நேமிநாதமும், முத்துவீரியமும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இல்லை என்னும் சொல் அமையும் முறை குறித்த தொல்காப்பியக் கருத்தோடு பிற்றை இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளமை தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கையையும், வழக்கத்தையும் பதிவு செய்வதாக அமைந்துள்ளது.

தொல்காப்பியம் மக்களை மட்டும் உயர்திணையாகக் கூற, நேமிநாதமும் நன்னூலும் மக்கள், தேவர், நரகர் ஆகியோரை உயர்திணை என்கின்றன. இலகு தமிழ் ஐந்திலக்கணம் நரகரை அஃறிணையில் அடக்குகிறது. மேலும், கயவரை அஃறிணை எனச் சுட்டுகிறது. இவை மரபு மாற்றமாகும். சமூகத்தில் சமயக் கருத்தாக்கம் மேலோங்கிய நிலையை இதற்குரிய காரணமாகக் கருத இடமுண்டு.

அனைத்து இலக்கணங்களும் ஐவகைப் பால்களைக் குறிப்பிட, அறுவகை இலக்கணம் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்ற மூன்றனை மட்டும் குறிப்பிடுவது மரபு மாற்றமாக விளங்குகிறது.

ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி உயர்திணை முப்பால் ஈறு பெறும் என்று தொல்காப்பியம் கூற, நன்னூல் அ∴றிணையிலும் வரும் என்று கூறுவது புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் அவல நிலையைப் பதிவு செய்வதாக உள்ளது.

சிறப்புப்பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வரும் என்னும் தொல்காப்பியக் கருத்திற்கு மாற்றாகத் தமிழ்நூல், கல்வி முதலியவற்றினாகிய சிறப்புப்பெயர் வருங்கால் இயற்பெயருக்கு முன்னோ, பின்னோ வரும் என்கிறது. இது காலமாற்றம் ஏற்படுத்திய மரபு மாற்றமாகும்.

அவிநயம் முதலோடு குணம் இரண்டு அடுக்கி வருதல் வழக்கியல், சினையோடு குணம் இரண்டு அடுக்குதல் செய்யுளில் வரும் என்று கூறுகிறது. நன்னூல் தொல்காப்பியக் கருத்தையும், அவிநயக் கருத்தையும் ஏற்றுக்கொண்டு சூத்திரத்தை அமைத்துள்ளமை மரபு வளர்ச்சியாகும்.

செப்பு, வினா குறித்துக் கூறும் தொல்காப்பியம் அவற்றின் வகைகளைக் கூறவில்லை. உரையாசிரியர்களைப் பின்பற்றி பின்னைய இலக்கணிகளே செப்பையும், வினாவையும் வகைப்படுத்தியுள்ளனர். இது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

இயல்பு வழக்கு, தகுதி வழக்கின் வகைகளை நன்னூலே முதலில் விளக்குகிறது. இருவகை வழக்குகளையும் மும்மூன்றாகப் பாகுபடுத்துகிறது. தென்னூல் இயல்பு, தகுதி எனப் பிரிக்காமல் ஐவகைக் குறிப்பு மொழிகளைக் குறிப்பிடுகிறது.

திணை, பால் வழுவமைதி குறித்துக் கூறியுள்ள தொல்காப்பியம் எண், இட, கால வழுவமைதிகளை விளக்கவில்லை. நன்னூலே அவற்றை விளக்கியுள்ளது. பிற இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றியுள்ளனர். தென்னூல் மரபு வழுவமைதி குறித்துக் கூறியுள்ளது. இவை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கன.

தொல்காப்பிய கிளவியாக்கக் கருத்துகளுள் பிற்றை இலக்கண நூல்களில் இடம்பெறாதவை மரபு வீழ்ச்சியாகக் கூறப்பட்டுள்ளன.

சொல்லிலக்கணத்தின் பயனாக ஒரு நூற்பாவைத் தென்னூல் அமைத்துள்ளமை புது மரபாகக் கொள்ளத்தக்கது.

மாந்தர் போன்று அறிவுடைப் பொருளாக நூல்களில் உயர்த்திக் கூறப்படுவோர் பெயராலும், வினையாலும் உயர்திணையாவர் எனத் தமிழ்நூல் சுட்டுவது புதுமரபாகக் கொள்ளத்தக்கது.

சுவாமிநாதம், உயர்திணையை ‘உயர்பால்’ என்ற சொல்லாலும், அஃறிணையை ‘இழிபால்’ என்ற சொல்லாலும் சுட்டுவது புது மரபாகக் கொள்ளத்தக்கது.

அறுவகை இலக்கணம், அஃறிணை ஒன்றன்பாலை ‘அலிப்பால்’ என்ற சொல்லாட்சியால் சுட்டுவது புது மரபாகக் கொள்ளத்தக்கது.

இலகு தமிழ் ஐந்திலக்கணம், அடைமொழியை ஏற்று வரும் பெயர், வினைகளை ‘அடைகொளி’ என்ற சொல்லாட்சியால் சுட்டுவது புது மரபாகும். அடையைக் கொள்ளும் பெயர், வினை என்ற அடிப்படையில் ‘அடைகொளி’ எனப் பெயரிடுகிறது.

ஒரு வாக்கியத்தின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை, அவ்வேற்றுமைக்குத் துணை புரிவன வேற்றுமை உருபுகள்.வேற்றுமைகள் எட்டு என்பதில் தமிழ்க் காப்பு இயம் தவிர்ந்த பிற இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.

பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்று உருபு அடிப்படையில் வேற்றுமைகளுக்குப் பெயரிடும் தொல்காப்பிய மரபை நேமிநாதமும், முத்துவீரியமும் ஏற்றுக்கொண்டுள்ளன. முதலாகுவதே, இரண்டாகுவதே என எண் அடிப்படையில் தொல்காப்பியர் சுட்டுவதால் இனிய தமிழ் இலக்கணமும் இலகு தமிழ் ஐந்திலக்கணமும் முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என எண் அடிப்படையில் பெயர் கூறுவதும் ஒத்த மரபாகக் கொள்ளத்தக்கதாகும்.

வேற்றுமை மயங்கியலில் ஓர் உருபு பிறிதொரு உருபுடனும், ஓர் உருபிற்குரிய பொருள் பிறிதோர் உருபிற்குரிய பொருளுடனும் மயங்கி வரும் தன்மையைத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். தொல்காப்பியரின் இவ்வேற்றுமை மயக்கம் குறித்த இலக்கணங்களில் பெரும்பான்மையும் முத்துவீரியமும் தென்னூலும் ஒத்த மரபைக் கொண்டுள்ளன. வேற்றுமை மயக்கம் குறித்த சில மரபுகளை பிற இலக்கணிகளும் பதிவு செய்துள்ளனர்.

விளி வேற்றுமை எனப்படுபவை அவ்விளியை ஏற்கும் பெயர்களோடு தெளிவுறத் தோன்றும் இயல்பை உடையன என்னும் தொல்காப்பியக் கருத்தை முத்துவீரியமும், தமிழ்க்காப்பு இயமும் பின்பற்றியுள்ளன.

நன்னூல் மூன்றாம் வேற்றுமைப் பெயராக ‘ஆல்’ உருபை முதன்மைப்படுத்துவது மரபு மாற்றமாகும். இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம் ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன. தமிழ்நூல் ‘ஆன்’ உருபை முதன்மைப்படுத்துகிறது. இலக்கணக்கொத்து வேற்றுமைகள் உணர்த்தும் பொருள்

அடிப்படையில் பெயர் கூற, தென்னூல் உருபாலும் எண்ணாலும் பொருளாலும் பெயரிடுகிறது.

தொல்காப்பியம் எழுவாயை 'உருபு' எனச் சுட்டவில்லை. நன்னூல் எழுவாயுருபு எனக் கூறுகிறது. நன்னூலைப் பின்பற்றி பிற்றை இலக்கணிகள் பலரும் (சுவாமிநாதம் தவிர) பெயரை முதல் வேற்றுமையின் உருபாகக் கொள்கின்றனர்.

தொல்காப்பியர் ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒரு உருபைக் கூறி அதன் முதன்மைப் பொருளைக் கூறுகிறார். பின் அடுத்த நூற்பாவில் அவ்வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளைத் தந்துள்ளார். பிற்றை இலக்கண நூல்களில் தமிழ்க் காப்பு இயம் மட்டுமே இம்முறையைப் பின்பற்றியுள்ளது. பிற இலக்கணிகள் பொருட்பாகுபாடுகளைத் தனியே தரவில்லை. தொல்காப்பியரைப் போல் விரிவாகவும் தரவில்லை. வேற்றுமையின் இலக்கணம் கூறி அவ்வேற்றுமையின் பொருள்களைக் கூறும் முறையே காணப்பெறுகிறது. இப்பொருண்மைகளிலும் இலக்கணிகளிடையே கருத்து மாறுபாடுகள் காணப்பெறுகின்றன.

தமிழ்க் காப்பு இயம் 'இல்' உருபை ஏழாம் வேற்றுமையின் முதன்மை உருபாக அமைத்ததும்,'ஆல்' உருபை எட்டாம் வேற்றுமை உருபாக அமைத்ததும் குறிப்பிடத் தகுந்த மரபு மாற்றமாகும்.

அறுவகை இலக்கணம் ஆகுபெயரை விளக்குவதில் பிற இலக்கணிகளின் கருத்துகளிலிருந்து மாறுபடுகிறது. பொருள் திரிந்து வருவன ஆகுபெயர் என்கிறது.

விளிமரபைப் பொறுத்தவரை தொல்காப்பியம் உயர்திணை, அஃறிணை விரவுத்திணைக்குரிய ஈறுகளைச் சுட்டி அவை விளியேற்கும்போது அடையும் மாற்றங்களை விளக்குகிறது. உயர்திணைப் பெயரில் விளியேற்கும் ஈறுகள் அடையும் மாற்றங்களைத் தனித்தனி நூற்பாவில் தொல்காப்பியம் விளக்க, நன்னூல் பொதுவாக விளியேற்கும் ஈறுகள் அடையும் மாற்றங்களை மட்டுமே கூறியுள்ளது. இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், இனிய தமிழ் இலக்கணம் ஆகியன நன்னூலைப் பின்பற்றி விளி மரபை விளக்கியுள்ளன.

சொல்லப்பட்ட ஈறுகள் தவிரப் பிற விளியேலாது என்று தொல்காப்பியர் குறிப்பிட, தென்னூலும் தமிழ்க்காப்பு இயமும் பிற ஈறுகளையுடைய பெயர்களும் விளி கொள்ளும் என்று கூறுவது காலச் சூழலுக்கு ஏற்ற மரபு மாற்றமாகும்.

தமிழ்க்காப்பு இயம் வேற்றுமையின் வகைகளை ஒன்பதாகப் பாகுபடுத்தியது மரபு வளர்ச்சியாகும். ஆல் உருபை எட்டாம் வேற்றுமையாகத் தனியே அமைத்தும், விளி வேற்றுமையை ஒன்பதாம் வேற்றுமையாகவும் தமிழ்க்காப்பு இயம் குறிப்பிடுகிறது. மூன்றாம் வேற்றுமை உருபுகளான ஒடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளையும், ஆல்

உருபு ஏதுப் பொருளையும் தருவதை நோக்கி எட்டாம் வேற்றுமையாக ஆல் உருபைத் தனியாக அமைத்துள்ளார்.

மூன்றாம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியர் ‘ஒடு’ உருபைக் குறிப்பிட, அவிநயம் ஆல், ஆன் என்பவற்றையும் சேர்க்கிறது. நன்னூல் அவற்றோடு ‘ஓடு’ உருபையும் அதன் பொருண்மைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் கருவி, கருத்தா என்பவற்றுடன் உடனிகழ்வு என்பதையும் சேர்ப்பது மரபு வளர்ச்சியாகும். பிற்றை இலக்கணிகள் பலரும் நன்னூலைப் பின்பற்றியுள்ளனர். சுவாமிநாதம் ‘கொண்டு’ எனும் சொல்லுருபையும் மூன்றாம் உருபாகச் சேர்க்கிறது. இனிய தமிழ் இலக்கணம் ‘உடன்’ என்னும் சொல்லுருபைச் சேர்க்கிறது.

ஐந்தாம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் ‘இன்’ உருபோடு ‘இல்’ உருபையும் புதிதாகச் சேர்த்துள்ளது நன்னூல். நன்னூலைப் பின்பற்றி பின்வந்த இலக்கணிகள் பலரும் (தமிழ்க்காப்பு இயம் தவிர) இல், இன் இரண்டையும் ஐந்தாம் வேற்றுமை உருபாகக் குறிக்கின்றனர்.

தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமைக்கு ‘அது’ உருபை மட்டும் குறிப்பிட, நன்னூல் ஆறாம் வேற்றுமையின் ஒருமைக்கு அது, ஆது என்பனவற்றையும் பன்மைக்கு ‘அ’வும் உருபுகளாகக் குறிப்பது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது. நன்னூலைப் பின்பற்றி பிற்றை இலக்கணிகள் அது, ஆது, அ ஆகிய மூன்றனையும் ஆறன் உருபாகக் குறிப்பிட, தமிழ்க்காப்பு இயம் ‘ஆது’வை நீக்கி அது, அ ஆகியவற்றை மட்டும் சுட்டியுள்ளது. மேலும், ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக ‘உடைய’ என்பதைச் சுவாமிநாதமும் பின்வந்த நூல்களும் சுட்டுகின்றன.

ஏழாம் வேற்றுமைப் பொருட் பாகுபாடுகளாகத் தொல்காப்பியம் பத்தொன்பதைக் குறிப்பிட, நன்னூல் அவற்றை உருபுகள் எனக் குறித்து இருபத்தெட்டாகக் கூறுகிறது. இனிய தமிழ் இலக்கணம் இவற்றைச் சொல்லுருபுகள் எனக் குறித்து 36 வகை உருபுகளைக் குறிப்பிடுகிறது. பிற இலக்கணிகளும் சிற்சில மாறுபாடுகளுடன் இவ்வுருபுகளைக் கூறியுள்ளனர்.

ஆகுபெயரின் வகைகளைத் தொல்காப்பியர் ஒன்பதாகப் பாகுபடுத்துகிறார். நன்னூல் பன்னிரு ஆகுபெயர்களைத் தருகிறது. இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்ற, சுவாமிநாதம் பதினைந்து வகை ஆகுபெயர்களையும், இனிய தமிழ் இலக்கணமும், இலகு தமிழ் ஐந்திலக்கணமும் பதினாறு வகைகளையும், தென்னூல் பதினான்கு வகைகளையும், தமிழ்நூல் எண்வகைகளையும், தமிழ்க்காப்பு இயம் பத்து

வகைகளையும் குறிப்பிடுகின்றன. இது ஆகுபெயரின் வளர்ச்சி நிலையைக் குறித்து நின்றது.

தொல்காப்பியம், விளி வேற்றுமை குறித்து, அவ்விளியை ஏற்கும் பெயர்களோடு தெளிவுறத் தோன்றும் இயல்புடையவை என்று கூற, நேமிநாதம், நன்னூல் முதலானவை விளி ஏற்கும் பெயர் அடையும் மாற்றங்களையும் விளக்குகின்றன. மேலும், நன்னூல் விளி வேற்றுமையின் பொருளாகப் படர்க்கையோரைத் தன்முகமாக அழைப்பது எனவும் விளக்கம் தருகிறது. பிற்றை இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றி விளிவேற்றுமையை விளக்கியுள்ளனர்.

விளியேற்கும் உயிரீறுகளாகத் தொல்காப்பியம் இ, உ, ஐ, ஓ ஆகியவற்றைக் குறிப்பிட, நன்னூல் அவற்றோடு 'ஊ' என்பதையும் இணைக்கிறது.

விளியேற்கும் புள்ளி ஈறுகளாகத் தொல்காப்பியர் ன, ர, ல, ள ஆகிய நான்கனைச் சுட்ட, நன்னூல் அவற்றோடு 'ய' வையும், தமிழ்க்காப்பு இயம் ய, ம ஆகியவற்றையும் சேர்த்து உரைக்கின்றன.

அறுவகை இலக்கணத்தில் வேற்றுமை மரபுகள் பேசப்படவில்லை. அவிநயத்திலும் மூன்றாம், ஐந்தாம் வேற்றுமை உருபுகள் தவிரப் பிற வேற்றுமைகள் பற்றிய செய்திகள் கிடைத்தில. மேலும், தொல்காப்பியத்தில் கூறப்பட்ட வேற்றுமை மரபுகளில் சில பின்னைய இலக்கணங்களில் கூறப்படாது விடப்பட்டுள்ளன. குறிப்பாக வேற்றுமை மயக்கம் குறித்து நேமிநாதம், முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் விரிவாகப் பேசவில்லை. இது மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

தொல்காப்பியம் வேற்றுமைக்கு இலக்கணம் கூறவில்லை. நன்னூலே வேற்றுமைக்கு இலக்கணம் கூறுகிறது. இது புதுமரபாகும். பிற்றை இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றி இலக்கணம் கூறுகின்றன.

இலக்கணக்கொத்து வேற்றுமை மரபை விரிவாக விளக்கியுள்ளது. காரகம், உருபின் வகைகள், உருபுகள் நிற்கும் மூவகை நிலைகள், வேற்றுமை உருபுகள் போல் வெளிப்படுதல், உருபுகள் தோன்றும் இடம், வினைமுதலின் வகைகள் எனப் பல புதிய செய்திகளை இலக்கணக்கொத்து பதிவு செய்துள்ளது.

தொல்காப்பியம் முதலான நூல்கள் வேற்றுமை மயக்கத்திற்கு விளக்கம் கூறவில்லை. இலக்கண விளக்கம் வேற்றுமை மயக்கத்திற்கு இலக்கணம் கூறுவது புதுமரபாகக் கொள்ளத்தக்கது.

ஆகுபெயருக்குத் தொல்காப்பியம் இலக்கணம் கூறவில்லை. வகைகளை மட்டுமே கூறியுள்ளது. நேமிநாதம் ஒன்றன் பெயர் மற்றொன்றிற்கு ஆகி வருவது

ஆகுபெயர் என்று கூறினாலும் நன்னூல் ஒன்றன் பெயரான் அதற்கு இயை பிறிதைத் தொன்முறை உரைப்பன ஆகுபெயர் என்று அளிக்கும் விளக்கமே சிறப்புடையதாகத் திகழ்கிறது.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன என்பதை ஓரிரு இலக்கணிகள் தவிரப் பலரும் பதிவு செய்துள்ளனர்.

சொற்கள் பொருள் உணர்த்தும் தன்மையைப் பொருண்மை தெரிதல், சொன்மை தெரிதல் என இரண்டாகப் பாகுபடுத்தியதில் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல், தமிழ்நூல் ஆகியன ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

சொற்பகுப்பை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்காகப் பாகுபடுத்தியதில் தமிழ்நூல் தவிர்ந்த இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.

உயர்திணைப் பெயர்களை விளக்குவதில் தென்னூல் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளது.

இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் ஆகியவற்றின் வகைகளைச் சுட்டுவதில் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

விரவுப் பெயர்களில் தான், நீ என்பன ஒருமைக்கும் தாம், நீயிர், எல்லாம் என்பன பன்மைக்கும் உரியன என்பதில் நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியன உடன்படுகின்றன.

‘ஒருவர்’ என்னும் உயர்திணைப் பெயர்ச்சொல் ஆண், பெண் ஆகிய இருபால்களுக்கும் பொதுவாக வரும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தென்னூல் ஆகியன ஏற்றுக்கொண்டுள்ளன.

இறைச்சிப் பொருளில் வரும் விரவுப் பெயர் உயர்திணை ஈறு கொண்டு முடிந்தாலும் அ∴றிணையேயாகும் என்பதையும் கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் அவ்வத்திணைக்கு உரிமை கொண்டு பழகிய இடத்து அ∴றிணைப் பெயராய்த் தோன்றினும் அவை உயர்திணையைக் குறிக்கும் என்பதையும் தென்னூல் ஏற்றுக் கொண்டுள்ளது.

செய்யுளில் சில பெயர்களின் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாகத் திரியும் என்பதில் நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

வினைச்சொல்லின் பொது இலக்கணமாக வேற்றுமை கொள்ளாது, காலம் காட்டும் என்னும் தொல்காப்பியக் கருத்தோடு முத்துவீரியம், தமிழ்க்காப்புஇயம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியவை ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

காலங்கள் மூன்று என்பதிலும் அவை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பதிலும் இலக்கணிகள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர். வினைச்சொல்லின் வகைகளை உயர்திணை வினை, அஃறிணை வினை, விரவு வினை எனப் பாகுபடுத்துவதில் நேமிநாதமும், முத்துவீரியமும் ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

முக்காலத்திலும் ஒத்தியல் பொருளை நிகழ்காலத்தில் கூற வேண்டும் என்பதை நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், இனிய தமிழ் இலக்கணம், தென்னூல், தமிழ்நூல் ஆகியன பின்பற்றியுள்ளன.

தொல்காப்பியம் தொடங்கி எல்லா இலக்கண நூல்களும் சொல்லின் வகைகளை பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பாகுபடுத்த தமிழ்நூல் பெயர், வினை ஆகிய இரண்டை மட்டும் சுட்டுவது மரபு மாற்றமாகும்.

பெயர்ச்சொல்லின் வகைகளைத் தொல்காப்பியர் திணை அடிப்படையில் பாகுபடுத்த, நன்னூல் பால் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளது. பிற்றை இலக்கணிகள் நன்னூலைப் பின்பற்றியுள்ளனர்.

'கள்' விகுதி அஃறிணைப் பன்மைக்கு மட்டுமே வரும் என்பது தொல்காப்பியர்தம் கருத்து. நேமிநாதம் உயர்திணை ஒருமைப்பால் கள்ளோடு வரும்போது பன்மைப்பால் தோன்றுவனவும் உள என்று கூற, நன்னூல் உயர்திணைக்கும் வரும் என உறுதிப்படுத்துகிறது. பிற்றை இலக்கணிகள் நன்னூல் கருத்தை ஏற்கின்றனர்.

நன்னூல் விரவுப்பெயரைப் பொதுப்பெயர் என்ற சொல்லாலும் இயற்பெயரை முதற்பெயர் என்ற சொல்லாலும் குறிப்பிடுகிறது.

தொல்காப்பியம் தான், தாம், எல்லாம் நீயிர், நீ என்ற பதிலிடு பெயர்களைக் கூறுகிறது. நன்னூல் யான், நான், யாம், நாம் ஆகிய தன்மைப் பெயர்களையும் எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ எனும் முன்னிலைப் பெயர்களையும் மற்றவை படர்க்கைப் பெயர்கள் எனவும், எல்லாம் என்பதைப் பொதுப்பெயராகவும் கூறுகிறது.

தன்மைப் பெயரைத் தொல்காப்பியம் உயர்திணையில் கூற, நன்னூல் விரவுப் பெயரில் கூறியுள்ளமை குறிப்பிடத்தகுந்த மரபு மாற்றமாகும்.

சில இலக்கணிகள் பெயர் வகைகளைத் திணை, பால் அடிப்படையில் குறிப்பிடாமல் மற்றொரு விதமாக வகைப்படுத்தியுள்ளனர். அந்த வகையில்

தொன்னூல் விளக்கமும், இனிய தமிழ் இலக்கணமும் பெயர்ச்சொல்லின் வகைகளை மரபு, காரணம், ஆக்கம், இடுகுறி என நால்வகைப்படுத்துகின்றன. அறுவகை இலக்கணம், தென்னூல், தமிழ்நூல் ஆகியன இடுகுறி, காரணம் என இருவகைப்படுத்துகின்றன. இலகு தமிழ் ஐந்திலக்கணம் பெயர்ச்சொல்லின் வகைகளைப் பதினைந்து வகைகளாகப் பாகுபடுத்தியுள்ளது. இவை மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கன.

அறுவகை இலக்கணம் தொழிற்பெயர்களை பொதுவினை என்று குறிப்பிடுவது மரபு மாற்றமாகும்.

தொல்காப்பியம் தன்மைப்பெயரைப் போலவே தன்மை வினையையும் உயர்திணையாகக் குறிப்பிட, நன்னூல் விரவுத்திணையாகக் குறிப்பது மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது.

அஃறிணைத் தெரிநிலை வினைமுற்றுக்குக் கூறப்பட்ட ஈறுகளே அஃறிணைக் குறிப்பு வினைமுற்றிற்கும் வரும் என்று தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல் 'டு' விகுதி மட்டும் குறிப்பு வினைமுற்றில் வருமாறு கூறுவது மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கது.

வியங்கோள் வினை படர்க்கையில் மட்டுமே வரும் எனத் தொல்காப்பியம் கூற, நேமிநாதம், நன்னூல் தொடங்கி பிற்றை இலக்கணிகள் மூவிடங்களிலும் வரும் எனக் கூறுவது மரபு மாற்றமாகும்.

தொல்காப்பியம் குறிப்பிடும் வினையெச்ச வாய்பாடுகளில் சிலவற்றை நேமிநாதம் நீக்கியுள்ளது. பான், பாக்கு என்பவற்றைச் சேர்க்கிறது. நன்னூல் செயற்கு என்பதை நீக்கி வான், பான், பாக்கு ஆகியவற்றை இணைத்துள்ளது.

சொற்கள் பொருள் உணர்த்தும் பொழுது குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பொருள் உணர்த்தும் என்று தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல் குறிப்பால் பொருள் தருவன எவை எவை என்பதைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளமை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது. தென்னூல் முப்பது வகையான குறிப்பு மொழிகளைக் கூறுகின்றது.

தொல்காப்பியம் பெயர்ச்சொல்லுக்குத் தனியாக இலக்கணம் கூறவில்லை. வேற்றுமையியலில் ஆங்காங்கே கூறியுள்ளது. நன்னூலே பெயர்ச்சொல்லுக்கு விரிவான இலக்கணம் தருகிறது.

நன்னூல் வினைச்சொல்லின் பொது இலக்கணத்தை வினை, வினைக்குறிப்பு என இரண்டாகப் பகுத்து, இரண்டனுக்கும் தனித்தனியே இலக்கணம் கூறுவது மரபு வளர்ச்சியாகும்.

தொல்காப்பியம் மூவகைக் காலங்களை மட்டும் குறிப்பிட, நன்னூல் தொடங்கிப் பிற்றை இலக்கணிகள் கால இடைநிலைகளையும் கூறியுள்ளமை மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

தொல்காப்பியம் வியங்கோள் விகுதிகளையும், பொருண்மைகளையும் சுட்டவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களே அவற்றைக் குறிப்பிட்டுள்ளனர். பிற்றை இலக்கணிகள் அவற்றை இலக்கணமாக்கித் தந்துள்ளனர்.

தொல்காப்பியம் வினையெச்ச வாய்பாடுகளை மட்டும் குறிப்பிட, நன்னூல் அவற்றை எக்காலத்திற்கு உரியன என்றும் குறிப்பிடுவது மரபு வளர்ச்சியாகும்.

பெயரெச்ச வாய்பாடுகளாகச் செய்யும், செய்த என்பவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிட, நன்னூல் ‘செய்கின்ற’ எனும் வாய்பாட்டையும் சேர்த்து உரைக்கின்றது.

தமிழ்க் காப்பு இயத்தில் இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர் என்ற விரவுப்பெயர் பாகுபாடுகள் சுட்டப்பட்டில.

இறைச்சிப் பொருளில் வரும் உயர்திணை ஈறு கொண்டு முடியும் பெயர்கள் அ.்.றிணையையே சுட்டும் என்பதையும், கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர்கள் அவ்வத்திணைக்கு உரிமை கொண்டு பழகிய பெயராய் நிற்குமிடத்து உயர்திணையைக் குறிக்கும் என்பதையும் தென்னூல் தவிர்ந்த பிற நூல்கள் குறிப்பிடாமை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

நேமிநாதம் மற்றும் இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகிய நூல்களில் மார் விகுதி இடம் பெறாமை மற்றும் அ.்.றிணைப் படர்க்கைப் பன்மை விகுதிகளுள் ஒன்றான ‘வ’ விகுதி நன்னூலில் இடம்பெறாமை மரபு வீழ்ச்சியாகும்.

இலக்கணிகள் அனைவரும் பெயரினது இயல்புகளையே பெயர்ச்சொல்லின் இலக்கணமாகச் சுட்டிச்செல்ல, இனிய தமிழ் இலக்கணம், அவரவர் மொழியில் அகிலப் பொருள்களை எளிதாய் அறிவதற்கு இட்டதே பெயராகும் என விளக்கம் தருவது புதுமரபாகும்.

இனிய தமிழ் இலக்கணம் ‘விதங்கள்’ என்னும் காலப்பகுப்பைக் கூறுவது புதுமரபாகும். இலக்கணக்கொத்தும், அறுவகை இலக்கணமும் தத்துவ அடிப்படையில் வினை வகைகளை விளக்குவது புது மரபாகும்.

பெயர், வினைகள் பொருள் உணர்த்துவதற்கு உறுதுணையாக விளங்கும் சொற்கள் இடைச்சொல் ஆகும். இடைச்சொல் பெயரையும், வினையையும் சார்ந்து வரும்ளூ தனித்தியங்காது என்னும் கருத்தில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர்.

இடைச்சொற்கள் உணர்த்தும் பொருண்மைகளில் சில தொல்காப்பியத்தோடு ஒத்தும், சில பொருண்மைகள் நீக்கப்பட்டும், வேறு பொருண்மைகள் தோற்றம் பெற்றும் வந்துள்ளன. இவை மரபு மாற்றமாகக் கொள்ளத்தக்கன. சான்றாக, இடைச்சொல்லின் பாகுபாடுகளைத் தொல்காப்பியம் ஏழாகப் பாகுபடுத்த நேமிநாதமோ அறுவகையாகப் பாகுபடுத்துகிறது. ''ஒப்பில் வழியான் பொருள் செய்குந'' என்பதையும் ஒப்பில் போலியையும் ஒன்றெனக் கொள்கிறது நேமிநாதம். அவை இரண்டும் ஒன்றெனில் தொல்காப்பியர் அவற்றை அசைநிலை என்பதனுள்ளே அடக்கியிருப்பாரே அன்றி அசைநிலையையும் ஒப்பின் வழியான் பொருள் செய்குந என்பவற்றையும் தனித்தனி இடைச்சொல் வகைகளாகக் குறித்திருக்க மாட்டார். எனவே சேனாவரையர் கூறுவது போன்று ஒப்பின் வழியான் பொருள் செய்குந என்பவை ஒக்கும் எனும் சொல் தவிர்ந்த பிற உவம உருபுகள் என்பதும், ஒப்பில் போலி என்பது ஒப்புமைப்படுத்தாமல் வரக்கூடிய போலும் எனும் சொல் என்பதும் புலப்படும்.

நன்னூல் இடைச்சொல்லின் பாகுபாடுகளை எண்வகையாகவும் சுவாமிநாதமும் தமிழ்க்காப்பு இயமும் ஒன்பது வகையாகவும் பாகுபடுத்துவது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

இடைச்சொற்கள் உணர்த்தும் பொருண்மைகளில் தொல்காப்பியம் சுட்டும் பொருண்மைகளோடு மேலும் சில பொருண்மைகள் பிற்றைய இலக்கணிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை மரபு வளர்ச்சியாகும்.

தொல்காப்பியம் சுட்டும் இடைச்சொற்களில் சில பிற்றைய இலக்கண நூல்களில் இடம்பெறவில்லை. 'எல்' இடைச்சொல் முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்களில் இல்லை. நேமிநாதம் 'எல்' என்பதை உரிச்சொல்லாகக் கூறுகிறது. மேலும், தில் இடைச்சொல் விழைவுப் பொருளில் வரும்பொழுது தன்மை இடத்தில் மட்டுமே வரும்ஐ ஈற்றசை ஏகாரம் தன் மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும்ஐ எண்ணேகாரம் இடைவிட்டும் வரும் என்பன போன்ற தொல்காப்பியக் கருத்துகள் பிற்றைய இலக்கண நூல்களில் இடம்பெறாமை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

ஒடு, தெய்ய என்பன நன்னூல் கூறும் புதிய இடைச்சொற்களாகும். கோள் என்பது சுவாமிநாதம் குறிப்பிடும் இடைச்சொல். கில், அ என்பன தென்னூல் குறிப்பிடும் இடைச்சொற்கள். ஊம், ஆம், சரி என்பன தமிழ்நூல் சுட்டும் இடைச்சொற்கள். ஆகிய, ஆன, ஆக என்பன தமிழ்க்காப்பு இயம் சுட்டும் இடைச்சொற்கள். இவை புதுமரபாகக் கொள்ளத்தக்கன.

அகராதிப் பொருள் தரும் உரிச் சொற்களை விளக்கும் முகத்தான் தொல்காப்பிய உரியியல் நிகண்டுகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. தொல்காப்பியத்தில் கூறப்படும் அனைத்து உரிச்சொற்களும் பின்னைய இலக்கண

நூல்களில் இடம்பெறாவிடினும் கூறப்பட்ட உரிச்சொற்கள் அவை உணர்த்தும் பொருண்மையில் பெரும்பாலும் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் அடிப்படையில் தோன்றும் எனத் தொல்காப்பியம் கூற, நன்னூல் பண்பு அடிப்படையில் மட்டுமே தோன்றும் எனக் கூறுவது குறிப்பிடத்தக்க மரபு மாற்றமாகும்.

ஒரு சொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்களில் சிலவற்றின் பொருள் இன்று மாறியுள்ளமை இலக்கணங்களில் பதிவு செய்யப்படாவிடினும் வழக்கில் அவை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தொல்காப்பியம் கூறும் உரிச் சொற்களில் பெரும்பாலானவை இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற நூல்களில் இடம்பெறாமை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளப்படும். மேலும், கறுப்பு என்னும் உரிச்சொல்லிற்குத் தமிழ்நூல் நிறப்பொருண்மையை மட்டும் சுட்டி வெகுளிப் பொருளை நீக்கியுள்ளமை மரபு வீழ்ச்சியாகக் கருதத்தக்கது.

தென்னூல் உரிச்சொல் வகைகளாகப் பெயரடை, வினையடை, பெயர்ப்போலி, வினைப்போலி ஆகியவற்றையும் இணைப்பது மரபு வளர்ச்சியாகும்.

சில உரிச்சொற்கள் உணர்த்தும் பொருண்மைகளோடு மேலும் சில பொருண்மைகள் தோன்றியிருப்பதும், சில உரிச்சொற்கள் உணர்த்தும் பொருண்மைக்கு புதிய உரிச்சொல் தோற்றம் பெற்றிருப்பதும் மரபு வளர்ச்சியாகக் கருதி ஏற்றுக்கொள்ளத்தக்கது.

நன்னூல் உயிருள்ள மற்றும் உயிரல் பொருள்களின் குணப்பண்பு, தொழிற்பண்பு ஆகியவற்றை உரியியலில் விளக்குவதும், உரிச்சொற்களைச் செய்யுட்குரியனவாகக் குறிப்பதும் புது மரபாகும்.

நேமிநாதம் குறிப்பிடும் புதிய உரிச்சொற்கள் கொம்மை, நொடை, பொன்மை என்பன. நன்னூல் ‘சொல்’ என்னும் பொருள் தரும் பலவுரிச் சொற்களைக் கூறியுள்ளது. தமிழ்க்காப்பு இயம் வால் என்னும் உரிச்சொல்லையும் புதிதாகக் குறிப்பிட்டுள்ளது.

செய்யுளுக்குரிய சொற்களாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவற்றைக் குறிப்பிடுவதில் நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், தென்னூல் ஆகியன தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன.

தொகைச்சொற்களை அறுவகைப்படுத்துவதில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர். தொல்காப்பியம் தொகைச் சொற்களைப் பொருண்மை

நிலையில் விளக்க முற்படுகிறது. இலக்கண விளக்கம் தவிர்ந்த பிற இலக்கணிகள் உருபு தொக்கு வருவதற்கே முதலிடம் கொடுத்துள்ளனர்.

எச்சச்சொற்களின் வகைகளை விளக்குவதில் இலக்கணிகள் அனைவரும் ஒத்த மரபைக் கொண்டுள்ளனர். காலத்திற்கேற்ப புதிய சொற்கள் தோன்றுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனும் தொல்காப்பியக் கருத்தில் நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தென்னூல் ஆகியன உடன்படுகின்றன.

தொல்காப்பியம் தொகைச்சொற்களின் பண்பினைக் கூற, பிற இலக்கணிகள் உருபு தொக்கு வரும் புறத்தோற்றத்தை முதன்மைப்படுத்துகின்றனர். இது குறிக்கத் தகுந்த மரபு மாற்றமாகும். தொகைச்சொற்களை இலக்கணிகள் ஆறாகப் பாகுபடுத்த, இலக்கணக்கொத்து ஏழாவதாகப் 'படுதொகை' என்ற ஒன்றை இணைக்கிறது.

பொருள்கோளின் வகைகளைத் தொல்காப்பியம் நான்கு வகைகளாகக் குறிப்பிட, நேமிநாதம் ஒன்பது வகையாகவும், நன்னூல் எட்டுவகையாகவும் கூறுவது மரபு வளர்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

தமிழ்நூல் ஆகுபெயருக்கும், அன்மொழித்தொகைக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுவது புதுமரபாகும்.

இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியவை செய்யுள் ஈட்டச்சொற்கள் குறித்துக் கூறாதது மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கது.

தொன்னூல் விளக்கம் திசைச்சொல்லையும் வடசொல்லையும் நீக்கியுள்ளமை மரபு வீழ்ச்சியாகும்.

முத்துவீரியம், அறுவகை இலக்கணம், தமிழ்க்காப்பு இயத்தில் பொருள்கோள் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை. அறுவகை இலக்கணத்தில் தொகை மொழிகள் பேசப்படவில்லை.

நேமிநாதம், இலக்கணக்கொத்து, அறுவகை இலக்கணம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம், தமிழ்நூல் ஆகியவற்றில் எச்சச்சொற்கள் பற்றிக் கூறப்படவில்லை. இவை மரபு வீழ்ச்சியாகக் கொள்ளத்தக்கன.

அறுவகை இலக்கணம் சொற்களை அவற்றின் நிற அடிப்படையில் பாகுபடுத்துகிறது. எழுத்தறிவற்ற பாமரர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் சொற்கள் அனைத்தும் வெண்ணிறம் உடையன என்றும், கற்பவர்கள் தம் அறிவாற்றலுக்கு ஏற்ற அளவு பொருள் கொள்ளும் வகையில் அமைந்த சொற்கள் பளிங்கு நிறம் உடையன என்றும், திருமுருகாற்றுப்படை போன்ற நூல்கள் கருமை நிறம் வாய்ந்தன என்றும் அருணகிரிநாதரின் திருப்புகழ் போன்றவை செம்மை நிறமுடைய செஞ்சொற்கள் ஆகும்

என்றும் சைவ சமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர் முதலிய நால்வரின் திருப்பாடல்களும், வைணவ ஆழ்வார்களாகிய பெரியாழ்வார் முதலிய பதின்மரின் அருளிச் செயல்களும் பொன்னிறம் வாய்ந்தவை எனவும் குறிப்பிடுகிறது. இவ்வாறாக ஐவகை நிறப்பகுப்பின் அடிப்படையில் சொற்களை விளக்குவது வேறெந்த இலக்கண நூல்களிலும் இல்லாத புது மரபாகும்.

தமிழ்நூல், திருமணச் செய்தியை அறிவிக்கும் முறை, குழந்தைப் பிறப்பை அறிவிக்கும் முறை, முகவரி எழுதும் முறை, எண்கள் அரபியக் கொடையல் அருந்தமிழ் இருப்பே என்பன போன்ற பல புதிய செய்திகளைக் கூறுவது வேறெந்த சொல்லிலக்கண நூல்களிலும் இல்லாத புது மரபாகும்.

இவ்வாய்வின் வழி, தொல்காப்பியம் முதல் இற்றை இலக்கண நூல்கள் சுட்டும் சொல்லிலக்கண மரபுகளை ஆராயுமிடத்து ஆதிநூலாம் தொல்காப்பிய மரபே இன்றும் நிலைத்து நிற்பது புலனாகிறது. சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் அடிப்படை இலக்கணம் எவ்வித மாறுதலும் இன்றி நிலைத்து நிற்கிறது. தொல்காப்பியச் சொல்லிலக்கண மரபுகளோடு பிற்றைய இலக்கணங்களை ஒப்பிடும் போது அவிநயம், நேமிநாதம், முத்துவீரியம் ஆகியன பெரும்பான்மையும் தொல்காப்பியத்தோடு ஒத்த மரபைக் கொண்டுள்ளன. நன்னூல் தன் காலத்திற்கு ஏற்றவாறு சிற்சில மாற்றங்களைக் கொண்டுள்ளது. இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், இனிய தமிழ் இலக்கணம், இலகு தமிழ் ஐந்திலக்கணம் ஆகியன நன்னூலைப் பின்பற்றியுள்ளன. தொல்காப்பிய உரையாசிரிகளின் கருத்துகளையும் பிற்கால இலக்கணிகள் நூற்பாவாக்கித் தந்துள்ளமை அவ்வக்காலச் சூழலுக்கு ஏற்ற மரபு வளர்ச்சியாகும். தென்னூல், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் ஆகியன நன்னூலையும் தொல்காப்பியத்தையும் பின்பற்றி இலக்கணம் படைத்துள்ளதோடு காலமாற்றத்திற்கேற்ப பல மரபு மாற்றங்களையும் புதிய மரபுகளையும் பதிவு செய்துள்ளன. சில தொல்காப்பிய மரபுகள் பிற்றை இலக்கணங்களில் வீழ்ச்சி அடைந்துள்ளன.

சமூகம், மக்களின் வாழ்வியல் சூழல், இடப்பெயர்ச்சி, வழக்குப்பயிற்சி, இலக்கண படைப்பாளியின் தன் முனைப்பு ஆகியவை சொல்லிலக்கண மரபுகளின் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் புது மரபுகள் தோற்றம் பெறுவதற்கும் உரிய காரணிகளாக விளங்குகின்றன.

மேலாய்வுக் களங்கள்

1. **வரலாற்று நோக்கில் எழுத்திலக்கண மரபுகள்.**
2. **இருபதாம் நூற்றாண்டு இலக்கண நூல்கள் - ஓர் ஆய்வு.**